ஜூன் மாதம்
ஜூலை மாதம் } 1983

# தமிழரசு

3:
V2llm N83
85342

# தமிழரசு

1-6-1983 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2014

ருத்ரோத்காரி — வைகாசி 18

COMMISSIONER OF TAMILNADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
7 JUN 1983
EGMORE. MADRAS-8





டில்லியில் 19.5.83 அன்று பொது விநியோகத் திட்டம் பற்றிய ஆலோசனைக் குழுக் ட்டத்தில் கலந்து கொண்ட மாண்புமிகு நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் வர்கள் மாண்புமிகு மைய அரசு உணவு அமைச்சர் பகவத்ஜா ஆசாத்தை சந்தித்தார்.



மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு ராணுவ வீரர்கள் கப்பற்படை வீரர்கள், விமானப்படை. வீரர்கள் வாரியத்தின் 50-வது கூட்டம் நடைபெற்றது.




# கனவு நனவாகியது!

இந்திய நாட்டு நதிகள் ஒவ்வொன்றும் இணைந்து, இந்திய மக்களுக்கு உதவ வேண்டும் என்பது எனது நீண்ட நாள் கனவு ஆகும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் அறிவிக்கப் பெற்ற கிருஷ்ணா ஆற்று நீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தமிழக அரசு ஆர்வம் காட்டுவது பாராட்டுக்குரியது. கிருஷ்ணா நீர்த் திட்டத்தின் மீது ஒப்பந்தம் செய்து கொண்ட தமிழக - ஆந்திர முதல்வர்களைப் பாராட்டுகிறேன்.

இந்த இரு மாநில முதல்வர்கள் காட்டும் முனைப்பை மற்ற மாநிலங்களின் முதல்வர்களும் கடைப்பிடித்தால் ஓரளவு வளர்ச்சி உருவாக வழிவகுக்கும்.

சமுதாயத்தில் உணவைவிட நீர் முக்கியமானது. கிராமமக்கள் அனைவருக்கும் குடிநீர் விநியோகம் செய்யவேண்டும் என்பதுதான் நமது குறிக்கோள். ஆனால் இது இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இந்த ஆண்டு, ஓரளவு மழை பெய்யும் மாநிலங்களில் கூட, மழை பெய்யாது போய் விட்டது. குஜராத், மராட்டியம், ராஜஸ்தான் தமிழ்நாடு போன்ற பல மாநிலங்கள் மழையின்மையால் பாதிக்கப்பட்டன. இந்தியாவில் முக்கால் பங்கு வறட்சிக்கு ஆட்பட்டுவிட்டது. வறட்சிச் சூழ்நிலையில், மக்களுக்குமட்டுமல்ல, வீட்டில் உள்ள கால்நடைகளுக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டும். தன்னிறைவு பெறுவது என்பது நமது குறிக்கோளாகும். பெரும்பான்மையான மாநிலங்கள் விவசாயத்திலும் நீர்ப்பாசனத்திலும் பல முன்னேற்றமான திட்டங்களை நிறைவேற்றி இருந்தாலும் அவை பருவ மழையை நம்பி இருக்கின்றன.

விஞ்ஞானத்துறையின் மூலம் நாம் அனுப்புகின்ற ரோகிணி கலம் போன்ற ராக்கெட்டுகளால் - பருவமழை பற்றியும், அது எப்போது வரும் என்னும் தகவல் பற்றியும் ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது என்று நான் நம்புகிறேன். அந்தத் தகவல்கள்; திட்டமிடுவோர்க்கும் உழவர்களுக்கும் மிகவும் உதவும்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர்

## திருமதி இந்திராகாந்தி




தமிழரசு

மலர்: 13 இதழ்: 23

1-6-1983

திருவள்ளுவர் ஆண்டு 2014

ருத்ரோத்காரி — வைகாசி 18



நமது திட்டங்கள் பல பொதுமக்களுக்காகத் தீட்டப்படுகின்றன. ஆந்திர முதல்வர் அவர்களும், தமிழக முதல்வர் அவர்களும், 'நாம் மக்களுடன் இருக்க வேண்டும்' என்று சொல்லிய கருத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். மக்களுக்குச் சேவை செய்து, அவர்களின் தேவையை நிறைவேற்றாவிட்டால் நாம் அரசாங்கத்தில் இருப்பதில் பயன் இல்லை.

இந்தியா போன்ற பெரிய நாட்டில் - ஒவ்வொரு மாநிலமும் ஒற்றுமையுடன் - உடன்பாடாக இருப்பதன் வாயிலாகத்தான் நாம் ஒவ்வொரு பிரச்சினையை ம் தீர்க்க முடியும். மைய அரசு என்று தனி ஒரு பகுதி கிடையாது; மாநிலப் பகுதிகள் சேர்ந்ததுதான் அது. மாநில அரசுகள் உடலின் உறுப்புகள் போன்றவை. அதனால்தான் ஒவ்வொரு மாநிலமும் வலிமை பெற்று, தன்னிறைவு பெற்று விளங்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ளோம்.

எந்த மாநிலமும் முழுக்க முழுக்கத் தனித்து நின்றுவிட முடியாது. இன்னொரு மாநிலத்தைச் சார்ந்துதான் வாழவேண்டும். மாநிலங்களுக்கிடையே நல்லெண்ணம் - ஒற்றுமை உணர்வு - நன்மதிப்பு - உடன்பாடு ஆகியவை தேவையாக இருக்கின்றன. எங்கள் அணுகுமுறை - ஏற்றுப்போவதுதான் - ஒத்துப் போவதுதான்! மொழி, மதம், உணவு, உடை, பழக்க வழக்கம் ஆகியவற்றில் வேறுபாடு உள்ள இந்தியநாட்டில் அப்படிப்பட்ட சகிப்புத் தன்மை தேவைப்படுகிறது. பன்மையில் ஒருமை என்ற முறையில் எல்லோரும் ஒருமைப்பாட்டுடன் இருக்கவேண்டும் என்று கருத வேண்டும். அதனால் ஒவ்வொரு மாநிலமும் தனது செயலில் ஏற்றம் பெற்று முன்னேற வேண்டும் என்று விரும்புகிறோம். அந்தந்த மாநிலத்தின் வளர்ச்சிக்குரிய முயற்சியில் ஈடுபடவேண்டும். அதேநேரத்தில் நாம் எல்லோரும் இந்தியர்கள் என்ற உணர்வு வேண்டும்.

நாம் யார் மேலும் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று கருதவில்லை. நமது தேவை பூர்த்தி செய்யப்படவேண்டும் என்பதுதான் நமது நோக்கம். இந்தியா வலுவாக இருந்தால் தான் மற்ற எல்லா மாநிலங்களும் வலுவாக இருக்க முடியும். இந்தியாவின் வலிமை, குன்றுமானால் மாநிலங்கள் அரும்பாடு பட்டாலும் பயன் கிடையாது.

வறட்சியின் காரணமாக பொருளாதாரப் பாதிப்பு, சென்ற வருடத்திலும் இந்த வருடத்திலும் ஏற்பட்டு, நெருக்கடியான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது. இருந்தாலும் எல்லா மாநிலங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நாம் முழு ஒத்துழைப்புத் தந்திருக்கிறோம். சமுதாயத்தில் நலிவுற்ற மக்களின் தொல்லையை மதித்து. அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடமையில் உள்ளோம். .ஒருமைப்பாட்டு உணர்வும், பிறருக்கு உதவும் மனப்பான்மையும் இருந்தால் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்து முன்னேற்றம் பெறமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்தத் திட்டம் விரைவில் நிறைவேறி முடியும் என்றும், இங்கு வருகை புரிந்திருக்கும் மக்களின் தேவையும் வராத மக்களின் தேவையும் விரைவில் நிறைவேறும் என்றும் நம்புகிறேன். ரொம்ப சந்தோஷம். வணக்கம்.







# வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சி!

## – மாண்புமிகு முதல்வர்

இந்த நிகழ்ச்சி என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

ஒரு வரலாற்றுச் சிறப்பான காரியத்தை எதிர்கொண்டு நிற்கிறேன் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1976-ஆம் ஆண்டு, சென்னையில் இது போன்ற கூட்டத்தில் பிரதமர் அவர்களின் அறிவிப்புகள்தான் இந்தக் கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் என்பதை நினைத்துப் பார்க்கிறேன். அவர் கூறும் நல்ல கருத்துகள் நிறைவேறுவதைச் சிலர் தாமதப்படுத்தினாலும், அந்த நல்ல திட்டங்கள் நிறைவேறியே தீரும் என்பது புரிகிறது.

இந்த மாநிலத்தின் ஒரு மாவட்டம் என்கிற அளவுக்குச் சென்னையில் மக்கள் தொகை 35 இலட்சத்திலிருந்து 40 இலட்சம் வரை இருக்கிறது. இங்கு குடிநீர்ப் பிரச்சினை எவ்வளவு பெரிது என்பது நமக்குத் தெரியும். நான் எப்போதும் ஒருமைப்பாடு பற்றிப் பேசுபவன் என்பதையும், ஒருமைப்பாடு நாட்டில் இருக்க வேண்டும் என்றால் உள்ளத்தில் இருக்க வேண்டும் என்றும் சொல்வேன் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

இந்த மேடையில் வீற்றிருக்கும் மாநில முதல்வர்கள் எந்தக்கட்சியைச் சேர்ந்தவர்கள், நான் எந்தக் கட்சியைச் சேர்ந்தவன்? கர்நாடக முதல்வர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்? இங்கு நான்கு கட்சிகளைச்





சேர்ந்தவர்கள் இருக்கிறோம் - இதைப்பார்க்கும்போது ஒருமைப்பாடு மகத்தானது என்பதும், அதை நிறைவேற்ற உள்ளம்தான் வேண்டும் என்பது நன்குபுரியும். இந்தியாவில் ஒருமைப்பாடு என்பது பிரிக்க முடியாததாகும். இங்கு ஒருமைப்பாடு சிக்கல் இல்லாத ஒன்றாகிவிட்டது.

இந்தத்திட்டம் நிறைவேற எவ்வளவு கஷ்டப்படவேண்டும் என்று உணராமல் இல்லை. கர்நாடக மாநில முதல்வர் இங்கே பேசும்போது, காவிரிப் பிரச்சினை குறித்து மனம் விட்டுப் பேச வேண்டும். அப்படிப் பேசினால் இந்தப் பிரச்சினை தீர்ந்து விடக்கூடியதுதான் என்று குறிப்பிட்டார். அதற்காக கர்நாடக முதல்வருக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்கள் எவ்வளவு காரியமாற்றினாலும் மத்திய அரசின் ஆதரவும் ஊக்கமும் இருந்தால்தான் இந்தத்திட்டம் வெற்றி பெற முடியும். இந்தத் திட்டம் தனிப்பட்டவர்களுக்காக அல்ல - ஆனால் பணம் வீணடிக்கப்பட்டதாகச் சிலர் கூறுகிறார்கள். வாழமுடியாதவர்கள்-வாழ்க்கையில் ஏமாற்றமடைந்தவர்களின் வயிற்று எரிச்சல் அது. இந்தத் திட்டம் காலத்தையும் மீறி நிலைத்து நிற்கும்.

மராட்டிய முதல்வர் கூறும்போது,'நான் கஷ்டப்படுகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள் - பிறர் கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கமுடியாது. முதலில் பிறருக்கு உதவி செய்ய வேண்டும்'என்று கூறினார்கள். இதைத்தான் நாமும் சொல்கிறோம். அண்ணாவும் - காந்தியடிகளும் கூறியுள்ளார்கள்.

''பிறரை நேசி, அவர்கள் உங்களை நேசிப்பார்கள் என்றார்'' விவேகானந்தர்.

மாண்புமிகு முதல்வர் தம்பி எம்.டி.ஆர் அவர்கள் நீண்ட உரையாற்றினார். அதற்கு இப்போது பதில் சொல்ல வேண்டுமா என்று எண்ணுகிறேன். நாட்டு நலனுக்காக அவருக் குச் சில ஆசை-ஆதங்கம் இருக்கிறது. அதை பிரதமர் உணர்வார். அதன் அடையாளப் தான் 20 அம்சத் திட்டம்.

20 அம்சத்திட்டம், அதைத்தான் சொல் கிறது - 1976 - ஆம் ஆண்டு நாங்கள் எதிர் கட்சியாக இருந்தபோது 20 அம்சத் திட்டத் தைத் தெருத்தெருவாகச் சென்று சொல்லிய போது, சிலர், கேலி பேசினார்கள். அவர் களைப் பார்த்து இந்தக் கூட்டம் கேலி செய் கிறது. இந்த விழா தனிப்பட்ட மனிதருக்கோ- தனிப்பட்ட கட்சிக்கோ - சாதிக்கோ நடக்கும் விழா அல்ல - இது மக்களுக்காக நடத்தும் மக்கள் விழா.

முன்பு விளக்கு இருந்தது. திரியும் இருந் தது. எண்ணெய்யும் இருந்தது. ஆனால் அதை ஏற்றிவைக்க ஆளில்லாமல் இருந்தது. இன்று அந்த விளக்கை ஏற்றி வைக்கிறார் பிரதமர். இந்த நாடு முழுவதும் இதுபோல் பல விளக்குகள் பிரதமரால் ஏற்றிவைக்கப்பட வேண்டும்.

தமிழக மக்கள் மீது பிரதமருக்கு நல் லெண்ணமும் அனுதாபமும் எவ்வளவு இருக் கிறது என்று புரிகிறது.

நீங்கள் பல்லாண்டு வாழ்க! நாட்டிற்கு நல்லது செய்யுங்கள்.



# நாட்டுக்குப் பொதுவாகட்டும் நதி நீர்!

இயற்கை வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவது மனித குலத்தின் தனிப்பெரும் சாதனையாகும். இதன் அடிப்படையிலேயே நாட்டு முன்னேற்றம் கணக்கிடப்படும். நல்ல எண்ணங்கள், உணர்வுகள் செயல்கள் இவை முன்னேற்றத்துடன் இணைந்து பண்பாட்டை உருவாக்குகின்றன.

கலாச்சாரத்தில் முன்னணித் தலைமை நாடாக இந்தியா ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தியாவின் வாழ்வு அதன் நதிகளில் உருவாகி அதன் நாகரிகம், நதிநீர்ப் பெருக்கைப்போல பிரவகித்து வருகிறது.

கங்கை என்றதும் நம் கண் முன்னே நெடிய வரலாறும் நீண்ட பாரம்பரியமும் படமாக விரியும். அதன் புனித நீர் நமது நாடி நாளங்களில் ஓடுகிறது. ''கங்கா தீர்த்தம் ஜன்ம பாவனம்'' (கங்கை நீர் - பிறவி விமோசனம்) என்ற சொல் தோன்றியதும் இதன் அடிப்படையில்தான்! ஆகவே, கங்கையைத் தென்னகத்திற்குக் கொண்டுவருகின்ற கனவும் விரைவில் நனவாகட்டும்.

கிருஷ்ணாநதி சென்னை மாநகரின் தலைவாயிலில் விரைந்து அடியெடுத்து வைக்கப் போகிறது.

நாம் அனைவரும் இங்கே ஒருங்கு கூடியிருப்பது, நாம் அதைச் சாதித்து விட்டோம் என்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

இத்தகைய சிறப்புமிகு விழாவில் பெருமையோடும் பூரிப்போடும் என் மாநில மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

மற்ற மாநிலங்களிலிருந்து இங்கே அருமைச் சகோதரர்கள் வந்திருப்பதும் பிரதமர் பங்கேற்றிருப்பதும் மக்கள் நமக்குத் தந்திருக்கும் பொறுப்பை நாம் முறையாக நிறைவேற்றுகிறோம் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

சரித்திரப் புகழ்மிக்க இந்த நகரின் பரிவும் என் இனிய தமிழ்ச் சகோதரர்களின் பாசமும் பெற்று இருந்தது நான் செய்த பெரும் பேறு! அந்த இனிய நினைவுகளை என்றென்றும் மகிழ்ச்சியுடன் எண்ணிப் பார்ப்பேன்!

## மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு.என். டி. ராமராவ்



எல்லாப் பெருநகரங்களையும் போலவே, இந்தச் சென்னை மாநகரமும் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக சகோதரப் பாசத்துடன் வாழ்ந்த பெருமக்களின் கூட்டு முயற்சியால் இன்றைய நிலையை அடைந்திருக்கிறது.

சென்னை தனக்கே உரித்தான தனித்தன்மையும் அழகும் கொண்டு இந்தியா முழுவதையும் தன்பால் வசீகரித்துள்ளது. குறிப்பாக இது தெலுங்கு பேசும் மக்களுக்கு - சிறப்பான அன்புகாட்டும் இடமாகும். எங்களுடன் வரலாற்றுப் பூர்வமான தொடர்பு கொண்டதாகும் - சென்னை நகரம்.

சென்னை நகரம் பாசமும் பரிவும் காட்டி அன்பு காட்டி வளர்த்து கஜுலுலெட்சுமி நரசிம்ம செட்டி, கண்டுகுரி வீரேசலிங்கம், தங்குடூரி பிரகாசம், காசிநாதுனி, நாகேஸ்வரராவ், சர்வபள்ளி ராதாகிருஷ்ணன், அல்லாடி கிருஷ்ணசாமி போன்ற பற்பல தெலுங்குப் பெரியவர்களை முன்னேற்றி இருக்கிறது.

ஸ்ரீசைலத்திலிருந்து சென்னைப் பட்டினம் உண்மையிலேயே ''கிருஷ்ணா'' நீருக்கு ஒரு நீண்ட தூரம்தான்.

தூய குளிர்ந்த கிருஷ்ணா தண்ணீர் விரைந்து ''தட்சிண திருவேணி'' யாக மராட்டியம் - கர்நாடகம் - ஆந்திரம் ஆகிய மூன்று மாநிலங்களின் சமபங்கு நீரைப் பெற்றதாக சென்னைக்குப் பாயும்.

வரும் வழியில் காய்ந்து கிடக்கும் இராயலசீமைப் பகுதியைப் பசுமையாக்கிப் பொறுமை

யோடு காத்துக்கிடந்த அந்தப்பகுதி மக்களுக்குப் பலனைத் தந்து விரைந்து வரும். இத்திட்டத்தை முடிக்க ஆறாண்டுக் காலம ஆகும் என்று நாம் காலக்கணக்கு வைத்திருந்தாலும் நமது மக்கள் எவ்வளவு விரைந்து முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாகச் சாதிப்பர் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது.

அவ்வாறு விரைவுபடுத்த - இனியும் காத்திருக்க முடியாது என்ற ஒரு சிறு காரணமே போதுமானது.

எவ்வளவு தண்ணீர் யாருக்கு? எவ்வளவு செலவிடுவது, யார்? என்று நாம் கணக்கெடுப்பதிலும் அளவிடுவதிலும் நமது நேரத்தைச் செலவு செய்து கொண்டிருக்கிறோம்.

ஆனால் கிருஷ்ணா நதி நீரோ உண்மையிலேயே பேரளவு கடலில் பாய்ந்து வீணாகிறது.

காலம் பறந்து கொண்டிருக்கிறது. மக்களின் பசிப்பிணியையும் தாகத்தையும் தீர்த்துக்கட்ட முழு முயற்சியுடன் நாம் போடுகின்ற திட்டங்களையும் செய்கின்ற முயற்சிகளையும் அதைக் கணக்கிட்டுத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும். இயற்கை நமக்கு அளவற்ற செல்வங்களை வழங்கி இருக்கிறது.

இந்த வளத்தை நாம் பயன்படுத்திக் கொள்ளத் தவறினால் அது நமது தவறுதான். இந்தத் தவறுக்கு ஏழ்மையும், தாகமும்தான் நாம் கட்டும் அபராதம்.

பொது நன்மைக்காக நதிகளைப் பயன்படுத்துவதில் நியாயமாக, முழு முயற்சியுடன் ஈடுபடவேண்டும்.

மனித சகோதரத்துவம், ஒருவரையொருவர் சரியாகப் புரிந்து கொண்ட பரஸ்பர உதவி ஆகியவற்றின் அடிப்படையில் செய்து கொள்ளப்பட்டுள்ள கிருஷ்ணா ஒப்பந்தம் இந்த வகையிலே ஒரு சிறப்பான எடுத்துக்காட்டாக இருக்கும் என்று நம்புகிறேன்.



ஒப்பந்த விதிகளை உருவாக்குவதில் பெரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தமிழகத்தையும், ஆந்திராவையும் சேர்ந்த பொறியாளர்கள், நிர்வாகிகள், அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோர் - கடுமையான உழைப்பாலும், தீவிரமான செயல் திறனாலும் இதனைச் சாதித்துள்ளனர். மக்கள் பிரதிநிதிகள் மதிப்புமிக்க ஆலோசனைகளை வழங்கி, மக்களின் எண்ணங்களைப் பிரதிபலித்தனர். சமூக நியாயத்துடன் தண்ணீரை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் ஒப்பந்தம் தீட்டப்பட்டுள்ளது.

என் அண்ணன் எம்.ஜி.ஆரும், நானும் தாமதம் ஏற்படும் வழியிலோ பலனற்ற விவாதங்களிலோ இறங்கவில்லை. இரு மாநிலங்களின் சார்பாக எங்களால் கையெழுத்திடப்பட்டுள்ள இந்த ஒப்பந்தம், அடுத்தவர் தேவைக்கும் மதிப்புக்கும், எண்ணங்களுக்கும் உரிய மதிப்பளித்து, நேர் வழியில் நடைமுறை சாத்தியமாக உருவாக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் ஆலோசனைப்படி வளர்ந்து உருப்பெற்றிருக்கிறது என்பதை அவருக்குக் குறிப்பிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன்.

இத்திட்டத்தில் நீங்கள் சிறப்பான கவனம் செலுத்துவீர்கள் என்பதில் முழு நம்பிக்கையுடன் நாங்கள் இருக்கிறோம்.

எங்கள் சக்திக்கு மீறி நாங்கள் செயல்படுவதாகச் சிலர் வியப்படையலாம். ஆனால் இது மனித முயற்சி; இதைச் செய்து முடிக்க பிரதமரின் ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது.

**மாநிலம் எதுவாக இருந்தாலும், சராசரி மனிதனுக்கு அடிப்படைத் தேவைகளை-குடிநீர்த் தேவைகளை நிறைவேற்ற முடியவில்லை என்றால் அதிகார மெத்தை மீது அமர்ந்து குளு, குளு வசதியை அனுபவித்து நாம் செய்கின்ற ஆட்சியை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்?**

பசித்த மனிதன் காரணம் நோக்கமாட்டான்; நீதியைப்பற்றிக் கவலைப்படமாட்டான்; பிரார்த்தனை அவனைச் சமாதானப் படுத்திவிடாது என்று கூறப்பட்டிருக்கிறது. பசிக்கு மட்டுமில்லை; தாகத்திற்கும் இது பொருந்தும்.

அநேக ஆண்டுகளாகத் தமிழகம் தண்ணீர்ப் பற்றாக்குறையை அனுபவித்து வருகிறது.

தமிழ்ச் சகோதரர்களுக்குத் தண்ணீர்த் தேவையைச் சரிக்கட்ட இயற்கை வளத்தைப் பகிர்ந்தளிக்க நாங்கள் உடனே ஒப்புக்கொண்டோம்.

நமது கிராம மக்கள் நதிகளைப் புனிதமாகக் கருதுகின்றனர். இந்தியர்கள் அனைவருக்கும் உரிமையானது என்றும் அவர்கள் எண்ணுகின்றனர்.

கங்கை நமக்கெல்லாம் புனிதமான கடவுள்; கோதாவரி, கிருஷ்ணா, காவிரியும் அவ்வாறே.

**இந்த நதிகள் நமது வீர காவியங்களின் களனாகி, புனித இடங்களுக்குப் பாய்ந்து, தர்ம சிந்தனையை வளர்த்து வருகிறது.**

**தெலுங்கில் கீர்த்தனைகள் எழுதிய தியாகய்யரும், தமிழ்க்கவி சுப்பிரமணிய பாரதியும் இந்த நாடு முழுமைக்கும் சொந்தமாக இருப்பது போல —**

**கங்கையையும் காவிரியையும் கோதாவரியையும், கிருஷ்ணாவையும், இந்த நாட்டு மக்கள், அனைவருக்கும் உரிமை ஆக்குவோம்!**





# நல்லுறவைக் காட்டும் நல்விழா!

## மேதகு தமிழக ஆளுநர் எஸ். எல். குரானா

கவிஞர் பாரதியார் அவர்களின் கொள்கைப்படி, இந்தியாவின் மாநிலங்களுக்கிடையே உள்ள நல்லுறவைத் தெரிவிக்கும் சிறப்பம்சமாக இந்த விழா நிகழ்கிறது.

கிருஷ்ணா ஆற்று நீர்த்திட்டம் குறித்து எத்தனையோ குழுக்கள் நியமிக்கப்பட்டன. அவை எல்லாம் ஏட்டளவில்தான் இருந்தன. ஆனால் உண்மையான முயற்சி 1977-ஆம் ஆண்டில்தான் உருவாகியது. நமது இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள்தான் 1976ல் சென்னைக்குக் கிருஷ்ணா ஆற்று நீர் விரைவில் கொண்டுவரப்படும் என்று குறிப்பிட்டார்கள்.

கிருஷ்ணா ஆற்றுத் நீர்த் திட்டத்தால் தமிழகமும் ஆந்திரமும் பெரும் பயன் அடையப்போகின்றன. ஆறு ஆண்டுகளில் இத்திட்டம் நிறைவேற்றப்பெறும் என்று கூறப்படுகிறது. பொதுவாக திட்டங்களை நிறைவேற்றும்போது பல பிரச்சினைகள் குறுக்கிடுவதுண்டு. நில ஆர்ஜிதம் செயல்முறை போன்றவற்றால் திட்ட நிறைவேற்றலில் - தாமதங்கள் ஏற்படுவதுண்டு. அத்தகைய பிரச்சினைகள் இந்தத் திட்டத்தில் குறுக்கிடாத வகையில், இது விதிவிலக்காக அமையும் என நம்புகிறேன்.

இந்த இரு மாநிலங்களின் உறவு முறை ஏனைய மாநிலங்களால் பின்பற்றப்படத்தக்கது.

இதுபோன்றே காவிரி நீர்ப் பிரச்சினையிலும் ஒரு நல்ல முடிவு விரைவில் ஏற்படும் என மனப்பூர்வமாக நம்புகிறேன்.

# நல்லெண்ணத்தால் விளைந்த திட்டம்

## மாண்புமிகு இந்திய அரசு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. ராம் நிவாஸ் மிர்தா

நூறாண்டுகளுக்கு மேலாக இருந்துவரும் இந்தக் கோரிக்கையை இன்று நாம் நிறைவேற்றும் கட்டத்திற்கு வந்திருக்கிறோம்.

கிருஷ்ணா ஆற்று நீர்த்திட்டம் குறித்து ஆய்வு செய்ய 1969ல் குழு ஒன்று அமைக்கப் பெற்றது. அது, தனது பணியைத் தொடங்கி 1973 வாக்கில் அறிக்கையை வழங்கியது.

தமிழ்நாடு அரசு, சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டத்திற்காக வேறு நதிகளை நாடியதுண்டு. அந்தத் திட்டங்கள் எல்லாம் பயனளிக்காமல் போய்விட்டன. இறுதியாக தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்களும், ஆந்திர முதல்வர் திரு என்.டி.ஆர். அவர்களும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டு ஒரு நல்ல முடிவை உருவாக்கியுள்ளனர். இந்த நல்ல முடிவு இரண்டுஅண்டை மாநிலங்களின் கூட்டுறவாலும் நல்லெண்ணத்தாலும் விளைந்தது ஆகும்.



இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு நமது இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி அவர்களும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது நல்லாதரவு இல்லாவிட்டால் தடைக்கல்லை உடைத்திருக்க முடியாது.

# காவிரி நீர்ப்பிரச்சினையிலும் தீர்வு காண முடியும்!



## மாண்புமிகு கருநாடக மாநில முதல்வர்
## திரு. இராமகிருஷ்ண ஹெக்டே

கிருஷ்ணா ஆற்று நீரைச் சென்னைக்குக் கொண்டு வரும் வரலாற்றுப் புகழ் மிக்க ஒப்பந்தத்தில், இரு மாநில முதல்வர்களாகிய எனது சகோதரர்கள் கையெழுத்திட்டிருப்பதை நான் மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன். இந்த ஒப்பந்தம் இரு மாநிலங்களுக்கு இடையே உள்ள பரஸ்பரக் கூட்டுறவைத் தெரிவிக்கிறது.

தமிழக ஆளுநர் அவர்கள் -'காவிரி நீர்ப் பிரச்சினையிலும் விரைவில் தீர்வு காணப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். தமிழக மக்களின் நல்லெண்ணமும் கருநாடக மக்களின் நல்லெண்ணமும் இணைந்து செயல்படுமானால் விரைவில் காவிரி நீர்ப் பிரச்சினையிலும் ஒரு சுமுகமான முடிவு ஏற்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

பரஸ்பர நல்லுணர்வு தேவை என்ற ஓர் எண்ணம் நம்மிடையே உருவாகியிருக்கிறது. நாம் பல்வேறு பிரச்சினைகளுக்காக மைய அரசின் உதவியை நாடி வருகிறோம். இந்தியப் பிரதமர் அவர்களுக்கு எண்ணற்ற பிரச்சினைகள் உள்ளன. நாம் எப்போதும் நமது பிரச்சினைகளில் தீர்வு காண, பிரதமர் அவர்களை நாடுகிறோம். பல பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொண்டு, பிரதமரின் சிரமத்தைக் குறைக்கவேண்டும்.

குடிநீர்ப் பிரச்சினையைக்கூட நாம் சமாளிக்காவிட்டால், நாம் சுதந்திரம் பெற்றிருக்கிறோம் என்னும் செய்தி சரியானதல்ல.

கருநாடகத்திலும் கூட 14 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரம் கிராமங்கள் வரை தண்ணீர் பஞ்சத்திற்கு உட்பட்டிருக்கின்றன.

குடிநீர்ப் பிரச்சினை குறித்து ஆய்வு செய்யும்படி பிரதமர் அவர்கள், திட்டக் குழுவிற்கு வேண்டுகோள் விடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நகரங்களுக்குத் தண்ணீர் கிடைப்பதைப் போல - கிராமங்களுக்கும் குடிநீர் கிடைப்பதற்கு வழி வகை செய்ய வேண்டும்.

# ஒருமைப்பாடு வெற்றி நல்கும்!

## மாண்புமிகு மராட்டிய முதல்வர்
## திரு. வஸந்த் தாதா படேல்

நாம் அனைவரும் பாரதத் தாயின் புதல்வர்கள். ஒருவருக்கு ஏற்படும் துன்பத்தை ஏனைய அனைவரும் தமக்கு ஏற்பட்ட துன்பமாக மதிக்க வேண்டும். இந்த உணர்வில்தான் சென்னை மக்களின் குடிநீர்க் கஷ்டத்தைப் போக்க நாம் நேசக்கரம் நீட்டி வருகிறோம். அதன் அடிப்படைதான் இந்த விழா.



மனித வாழ்க்கையில் தண்ணீர்ச் செல்வத்திற்கு அதிக முக்கியத்துவம் உண்டு. சமய நம்பிக்கைகள் இதை வழங்கியுள்ளன. நீரின்றி நாம் உயிர்வாழ முடியாது. அது அமிழ்தம் போன்றது எனப் புகழ்ந்து எழுதிச் சென்றுள்ளனர் நமது சான்றோர்கள்.

அந்தத் தண்ணீர் பெரிதும் பருவ மழையை நம்பியே இருக்கிறது. ஆனால் பருவ மழை மக்களை ஏமாற்றிவிடுகிறது. அதனால் வறட்சி நிலை தோன்றி, நம்மை வருத்துகிறது. இவ்வாண்டு மராட்டியத்திலும் தண்ணீர்க் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. என்றாலும் நமது சகோதரர்களுக்கு உதவ முன் வருகிறோம். தண்ணீர் நெருக்கடியைப் போக்குவதில் அனைத்து மாநிலங்களும் ஒத்துணர்வோடு ஒன்றுகூடி, புதிய மரபை உருவாக்கி உள்ளது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

இனிமேல், எதிர்காலத்தில், பல்வேறு பிரச்சினைகளிலும் இதுபோல் ஒருமைப்பாட்டுடன் நடந்து வெற்றி பெறுவோமாக!



# சொன்னதைச் செய்வோம்!

## மாண்புமிகு முதல்வர்

இது தமிழக அரசால் நடத்தப்படுகின்ற விழாவாகும். இது ஒரு அரசியல்கட்சி நடத்துகின்ற விழா அல்ல. இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற நான், பள்ளிக் கட்டடங்களையும் திறந்து வைத்திருக்கிறேன்.

சுதந்திரம் கிடைத்து ஏறத்தாழ 35 ஆண்டுகள் ஆகிவிட்டன என்று சொன்னாலும் இதுவரையில் இந்த 4 கோடியே 3 லட்சத்துக்கு உரித்தான குடிநீர்த்திட்டத்தை யாரும் செய்ய முன்வரவில்லை என்பதும் ஜக்கையன் எம்.பி. யாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவருடைய வற்புறுத்தல், அவர் எடுத்துக்காட்டிய அதைப்பற்றி விளக்கமாகச் சொன்ன நிலைமைகள், அதற்கு ஏற்றாற்போல் உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் கோபால் அவர்கள் முழு முயற்சி எடுத்துத் தமிழக சட்டமன்றத்தில் பேசி, தமிழக அமைச்சர்களை வற்புறுத்தி இதை நிறைவேற்றியே தீரவேண்டும் என்கிற ஒரே பிடிவாதத்தில் பல மாதங்களாக —பலமாதக் கணக்காக அவர்கள் முயற்சியெடுத்து இந்த நிலைமையை முடிவாக்கியிருக்கிறார்கள் என்பதை விவரம் தெரிந்த பெரியவர்களுக்கும், தாய் மார்களுக்கும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏறத்தாழ எத்தனை லட்சம் மக்கள் பயன்பெற இருக்கின்றார்கள் என்பதை மட்டும் இங்கே நான் எடுத்துக்கூற வேண்டியது என்னுடைய மாபெரும் கடமை என்று நான் கருதுகின்றேன். 2 லட்சத்து 45 பேர்களுக்கு இந்தத் திட்டத்தின் வாயிலாகக் குடிநீர் - பாதுகாக்கப்பட்ட குடி

நீர் கிடைக்கவிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடும், மன நிறைவோடும், பெரியவர்களுக்கும், தாய்மார்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இந்தத் திட்டம் ஒரு கட்சிக்காகக் கொண்டு வரப்பட்ட திட்டமல்ல.

இந்த ஏழு மாதங்களில் வறட்சி எவ்வளவு தொல்லைகளை நமக்குத் தந்திருக்கிறது. எத்தனை கோடி ரூபாய் அளவில் தமிழ்நாடு முழுவதற்கும் இந்த வறட்சிப் பணிக்காக, வறட்சியைப் போக்குவதற்காக, குறைந்தது குடிக்கத் தண்ணீர் எல்லோருக்கும் கிடைப்பதற்கு ஆழ்கிணறு, குழாய்கள் இவைகளெல்லாம் அமைப்பதற்காக என்னென்ன செய்ய முயன்றோம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்தால் அதற்கு இடையிலேயே 4 கோடி ரூபாய்த் திட்டத்தையும் இணைத்து, நாங்கள் மனதிலே வைத்து, அதற்காகப் பணம் ஒதுக்கி அதைச் சட்டசபையிலே சொல்லி இன்று இங்கே தொடங்குகின்றோம் என்றால் நீங்கள் ஒன்று மனதில் வைத்துக் கொள்ள வேண்டும், இன்று நாளை என்பதல்ல, சொன்னவார்த்தைகளை-தன்னுடைய பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்காமல் தன் பொறுப்பினுடைய நாட்கள் தீர்வதற்குமுன் அந்தப் பணியை நிறைவேற்றிக் கொடுக்க யார் முன் வருகிறார்களோ அவர்கள்தான் உண்மையான மக்கள் தொண்டர்கள் என்பதை இங்கே நான் வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன்.

2 லட்சத்து 45 ஆயிரம் பேருக்கு மேல் நல்ல குடிநீர் பெறுவதற்கு இந்தத் திட்டம் வகை செய்கிறது என்பதை எண்ணிப் பார்ப்போமானால் எத்தனையோ ஆண்டுகளாக ஏங்கிக்கிடந்த இந்தத் திட்டத்தை எதிர்பார்த்திருந்த மக்களுக்கு இன்றைய தினம் இத்திட்டத்தைத் தொடங்கியிருக்கிறோம் என்பதை மட்டும் நான் மகிழ்ச்சியோடு சொல்லுவேன்.

அதிகாரிகள், பொறியியல்நிபுணர்களெல்லாம் எவ்வளவு விரைவில் இதைச் சரியா[illegible] முடித்துக் கொடுக்கின்றார்களோ பிற[illegible] குறைகூற இடமின்றி முடித்துக் தருகிறார்களோ - அவர்களுக்கெல்லாம் இந்த அரசு வாழ்த்துமட்டுமல்ல அவர்களுக்குத் தேவையான வகையில் அவர்களுக்கு அவர்களுடைய பதவியிலே பெருமை சேர்ப்பதற்கும் இந்த தமிழக அரசு தயங்காது - மறக்காது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்மிடம் இருக்கின்ற அதிகாரிகள் விவரம் தெரியாதவர்கள் அல்ல, செயல்படுத்த அவர்களுக்குத் திறமையில்லாமலுமில்லை. அவர்கள் நினைப்பால்தான் இன்று பல இடங்கள் ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு என்று திட்டம்போட்டு இதற்குள் முடிக்க வேண்டும் என்று சொன்னபோது, மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே அந்தத் திட்டத்தை முடித்துக் காட்டி விட்டோம் என்று சொல்லுகின்ற திறமைபடைத்த நிபுணர்கள், அதிகாரிகள் தமிழகத்திலே இருக்கின்றார்கள். அந்தக் கடமையை அவர்கள் செய்ய வேண்டுமென்று விரும்பிவிட்டார்களானால் இதை உடனே செய்ய வேண்டுமென்று எண்ணுவார்களானால் அது உடனடியாக நிறைவேறும் என்பதை நான் உணர்ந்திருக்கின்றேன். அந்த வகையிலே திட்டமிட்டபடி வெகுவிரைவில் இந்த நல்ல குடிநீர்த்திட்டம் சரிவரச் செயல்பட்டு, எந்தக் குறையும் குற்றமும் இல்லாத அளவுக்கு அதை வெற்றிகரமாக முடித்துத் தருவார்கள் என்ற நம்பிக்கையை நான்இங்கே சொல்லிக் கொள்கின்றேன்.

கிருஷ்ணாநீர்த் திட்டத்தை 1881-ஆம் ஆண்டில்தான் தொடங்கினார்கள். 102 ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போதுதான் இந்த ராமச்சந்திரனும் அந்த என்.டி.ராமாராவும் சேர்ந்து கையெழுத்துப் போட்டிருக்கிறோம். அந்தத் திட்டத்தினுடைய அளவு கோல், எல்லைக்கோடு என்ன தெரியுமா? எத்தனை ஆண்டுகளுக்கு இந்த ஒப்பந்தம் என்று கேட்டால் அது நிரந்தரம். எத்தனை எம்.ஜி.ஆர் தோன்றினாலும் சரி, எத்தனை என்.டி.ஆர். தோன்றினாலும் சரி, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் அதற்கு எல்லையில்லாமல் அவர்கள் கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். 12000 கன அடி தண்ணீர் சென்னை நகருக்கு மட்டும் குடிப்பதற்கு அவர்கள் தர வேண்டும் என்பது ஒப்பந்தமாகும். அந்த 12000கன அடி தண்ணீர் சென்னைக்குக் கிடைக்கிறது என்றால் நான் உங்களுக்குச் சொல்லுவேன் குறிப்பாக ஆங்கிலத்தில் சொல்லும்போது 12டி.எம்.சி.என்று சொல்லுவார்கள். ஒரு டி.எம்.சி. என்றால் 1000 கன அடி தண்ணீர்.

இங்கே சத்துணவுத் திட்டத்தின் செலவு இன்றைய தினம் 145, 155 கோடிக்குப் போகிறது. முதியவர்களுக்கும் உணவளிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றோம். அதற்குப் பணம் வேண்டாமா? நாம் 210 கோடி கேட்டோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

கிணறு தோண்டுவதற்கு, குளம் வெட்டுவதற்கு, பாதை போடுவதற்கு, வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு, விதவைத்தாய்மார்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு, படித்தவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு இதுபோல் பல திட்டங்களை உழைக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க இதற்கெல்லாம் வேண்டும். உடனடியாக குடிதண்ணீர் கிடைப்பதற்கு ஆங்காங்கே பல வழிமுறைகளைச் செய்ய வேண்டுமென்று பணம் கேட்டால் 63 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது. நாங்கள் இதுவரை செலவு செய்ததே ரூ.100 கோடிக்குமேல். எங்கிருந்து பணம் வரும்? மற்றவர்கள் பங்குபெற வேண்டாமா? விற்பனை வரியில் 5 சதவிகிதம் அதிகப்படுத்திக்கொடு என்கிறார்கள். ஆனால் இந்த நுழைவு வரியில்2சதவிகிதம் போடாதே என்கிறார்கள். என்ன பொருள்?. விற்பனை வரியில் 5 சதவிகிதம் போடு நாங்கள் கோபித்துக் கொள்ளவில்லை. ஆனால் நுழைவு வரியில் 2 சதவிகிதம் போடாதே! உங்களுக்குப் புரிய வேண்டும். ஏன் தெரியுமா? அந்த 2 சத விகிதம் போடும்போது 2 சதவிகிதம் பணம் பெரிதல்ல.கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். அந்தக் கணக்கு இன்கம்டாக்ஸ் வரைக்கும் போகும். அந்தக் கணக்கில் தவறிருந்தால் ஆபத்துவரும். அந்தக் கணக்கு ஒழுங்காக இருந்தால் அரசுக்கு இன்னமும் அதிக வரிப்பணம் கிடைக்கும். இதைத்தான் இங்கு சொல்லுகின்றேன்.

இந்தத் திட்டங்களை நாம் செய்து தீர வேண்டும். நிறைவேற்றியாக வேண்டும். இதற்குப் பணம் வேண்டும். ஆகவே இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஏழைகளின் மீது வரி வசூலிக்காமல், பாவப்பட்ட மக்கள் மீது வரிவிதிக்காமல், வசதி படைத்தவர்கள் மீது 2 சதவிகித வரி அதற்குக் குறைவாக குறைத்துக் கொள்வதற்கு சதவிகிதம் குறைவு என்று கூட வைத்துக் கொள்ளலாம்.

இந்த அரசுக்கு இங்கு ஒத்துழைக்கின்ற அத்தனை பேருக்கும்நன்றி கூறி இதை வெற்றிகரமாக முடிக்க ஒத்துழையுங்கள் என்று கேட்டுக்கொண்டு அண்ணா நாமம் வாழ்க என்று சொல்லி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்!.

**(மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 11.5.83 அன்று இரவு 8 மணியளவில் கம்பம் கூட்டுக்குடிநீர் மேம்பாட்டுத் திட்டக் கால்கோள் விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)**







தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியின் புதிய கட்டடத்தை 14.5.83 அன்று மாண்புமிகு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சென்னையில் திறந்து வைத்தார். மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்களும் விழாவில் பங்கேற்றார்.

தமிழ்நாடு வனத்துறைப் பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கத்தினை 13.5.1983 அன்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் சென்னையில் துவக்கி வைத்தார்.



படமும்



சென்னைக்கு வந்திருந்த அரியானா மாநில மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு ஜெகதீஷ் மெஹ்ரா அவர்கட்கு 13.5.83 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. சி. அரங்கநாயகம் அவர்கள் நினைவுப் பரிசாக தஞ்சாவூர்த் தட்டினை வழங்கினார்.

சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் குடிநீர் விநியோக நடைமுறைகளை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள் 21.5.83 அன்று பார்வையிட்டு மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

செய்தியும்





# வரலாற்றுப் புகழ் மிக்க ஒப்பந்தம்

க. மாதவசர்மா இ.ஆ.ப.
ஆணையர் மற்றும் செயலர்,
பொதுப்பணித் துறை

சென்னை மாநகரம் இந்தியாவின் பெரிய நகரங்களில் நான்காவதாக இடம் பெறுகிறது. 1798-ம் ஆண்டில் சென்னப் பட்டணத்தைச் சார்ந்த சில கிராமங்களைச் சேர்த்து உருவாக்கப்பட்ட இந்நகரம் இன்று பெரு நகரமாக வளர்ந்துள்ளது.

2. 1866-ம் ஆண்டில் திரு. பிரேசர் என்பவரால் முதலில் உருவாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தில் 4.70 லட்ச மக்கள் தொகைக்குக் குடிநீர் வழங்கத் தக்க முறையில், கொரட்டலையாற்றின் குறுக்கே தாமரப்பாக்கத்துக்கருகில் ஒரு அணையும் சோழவரம் ஏரிக்கும் புழலேரிக்கும் கால்வாயும் அமைக்கப் பட்டது. புழலேரியிலிருந்து ஒரு கால்வாய் மூலம் கீழ்ப்பாக்கத்திற்கு நீர் கொண்டு வரப்பட்டு விநியோகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 1944-ல் கட்டப்பட்ட பூண்டி நீர்த்தேக்கம் 9.75 லட்ச மக்கள் தொகைக்குத் தேவையான நீர் வழங்க வழி செய்தது. 1960 முதல் 1970-க்குள் சோழவரம் ஏரிக்கரையை 4 அடியும், புழலேரிக் கரையை 2 அடியும் உயர்த்தியும், இவ்வேரிகளின் கீழ் பாசனம் பெற்று வந்த நிலங்களின் பாசன உரிமையை அரசு வாங்கியும் சென்னைக்குக் கிடைக்கும் நீர் ஆண்டுக்கு 2.5 டி.எம்.சி யாக உயர்த்த வழி செய்யப்பட்டது. சென்னையைச் சுற்றி கிடைக்கக்கூடிய நிலத்தடி நீர்வளம் ஆய்வு செய்யப்பட்டு தொழில் வளர்ச்சித் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாளொன்றுக்கு சுமார் 117 மில்லியன் லிட்டர் நீர் எடுக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. சென்னை நகருக்கு இப்போதுள்ள நீர் நிலைகளிலிருக்கும், நிலத்தடி நீரிலிருந்தும் மொத்தமாகக் கிடைக்கக்கூடிய நீர் நாளொன்றுக்கு 299 மில்லியன் லிட்டர்தான். இதைக் கொண்டு

இன்றைய 41 லட்ச மக்கள் தொகைக்கு நபர் ஒன்றுக்கு தினசரி 67 லிட்டர்தான் வழங்க முடியும். இது சென்னை போன்ற நகரங்களில் வழங்கப்படவேண்டிய குடிநீர் அளவுக்கு மிகக் குறைவு.

3. 1901-ல் 5.4 லட்சமாக இருந்த மக்கள் தொகை 1981-ல் 41 லட்சமாக உயர்ந்துள்ளது. சென்னைப் பெருநகர் எல்லை 1167 சதுர கிலோமீட்டர் பரப்புக்கு விரிவடைந்துள்ளதால் கி.பி. 2002-ல் ஜனத்தொகை 70 லட்சமாக உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. நபரொன்றுக்குக் கிடைக்கும் நீர் கூடிய சீக்கிரத்தில் 125 லிட்டர் அளவுக்காவது உயர்த்தப்பட வேண்டும். கி.பி. 2000 ஆம் ஆண்டு வாக்கில் 145 லிட்டர் அளவுக்கு உயர்த்தப்பட வேண்டும். அப்போது எதிர்பார்க்கக்கூடிய 69.72 லட்சமக்கள் தொகைக்கு மொத்த நீர்த்தேவை நாள் ஒன்றுக்கு 1294 மில்லியன் லிட்டராகும்.

இப்போது கிடைக்கக் கூடிய நீர் நாளொன்றுக்கு 299மில்லியன் லிட்டர் தான். ஆகையால் நாளொன்றுக்கு 995மில்லியன் லிட்டர் அதாவது ஆண்டொன்றுக்கு சுமார் 12.80 டி.எம்.சி. துண்டுவிழும்.

4. கிருஷ்ணா நதியைப் பெண்ணாற்றுடன் இணைப்பது பற்றிய சாத்தியக்கூறு ஒரு நூற்றாண்டு காலமாகக் கூறப்பட்டு வந்த போதிலும் கிருஷ்ணா நதியிலிருந்து நீர் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சிகள் தொடக்கத்தில் பயன்தரவில்லை. மொழிவாரி மாநிலப் பிரிவினைக்கு முந்திய சென்னை மாநிலத்தில் சுமார் 36லட்ச ஏக்கர் பாசனத்திற்கும், சென்னை குடிநீருக்கும்நீர்வழங்கும் வகையில் 1947முதல் 1951க்குள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு கிருஷ்ணா பெண்ணாறு திட்டம் தீட்டப்பட்டது. மத்தியத் திட்டக்குழு சென்னைக் குடிநீர்த் தேவைக்கு கிருஷ்ணா நதிநீர் வழங்கலாம் என்று தெரிவித்த கருத்து 1951ல் ஒப்புக் கொள்ளப்படவில்லை. 1953ல் நியமிக்கப்பட்ட கோஸ்லா கமிட்டி, நகரக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டிருந்தது. 1956ல் நியமிக்கப்பட்ட குல்ஹாத்தி கமிஷனும் நர்கார் ஜுன சாகர் திட்டத்திலிருந்து சென்னைக்கு 15 டி.எம்.சி. தண்ணீர் கொடுப்பது பற்றி குறிப்பிட்டிருந்தது. அன்றைய மத்தியப் பாசன அமைச்சர் 23-3-63 தேதியன்று மக்கள் சபையில் வெளியிட்ட அறிக்கை யொன்றில் சென்னைக் குடிநீர்த் தேவைக்கு 15 டி.எம்.சி. நீர்தருவது பற்றி மஹாராஷ்டிரா, கர்நாடக, ஆந்திர மாநிலங்கள் பரிவுடன் கவனிக்கும் என்ற கருத்து தெரிவித்தார். பிறகு 10-4-69ல் கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்னை தீர்க்க நடுவர்மன்றம் நியமிக்கப்பட்ட போது தமிழ் நாடு இப்பிரச்னையில் ஒருவாதியாகக் கருதப்படவில்லை. மேலும் கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்திற்காக நாம் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் பயனளிக்கவில்லை.

5. காவிரி நதியைச் சார்ந்த வீராணம் ஏரியிலிருந்துநீரேற்றி சென்னை நகருக்கு நாளொன்றுக்கு 180மில்லியன்லிட்டர் நீர் கொண்டு வர வீராண திட்டம் 1967ல் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்ட வேலைகள் 1975ல் நிறுத்தப்பட்டு பிறகு பல்வேறு காரணங்களால் தொடரப்படவில்லை. ஒருகட்டத்தில் காவிரியில் இருந்து சென்னைக்கு 15 டி.எம்.சி. நீர் கொண்டு வரக் கூடிய கால்வாய் அமைப்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. ஆனால் விவசாயத்திற்கு அதனால் ஏற்படக் கூடிய பாதிப்பைக் கருதி இத்திட்டம் மேற் கொள்ளப்படவில்லை.

6. கிருஷ்ணா படுகை மாநிலங்களிடம் கலந்து பேசிய பிறகு பாரத பிரதமர் அவர்கள் சென்னையில் 15.2.76ல் அன்று மஹாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திர மாநிலங்கள் கிருஷ்ணா நதி நீரில் தம் பங்கிலிருந்து தலா 5டி.எம்.சி. நீர் சென்னைக் குடிநீர்த் தேவைக்காகத் தருவதற்கு ஒப்புக் கொண்டதாக விடுத்த அறிவிப்புக்குப் பின்னர் தான் இதுபற்றி மாநிலங்களுக் கிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கான உறுதியான நடவடிக்கை எடுக்க முடிந்தது.

7. இந்த அறிவிப்பினை யொட்டி 14-4-76 அன்றுபடுகை மாநிலங்கள் மற்றும்தமிழ்நாட்டிற்கிடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டது. 27.10.77ல் நடந்த மாநில அமைச்சர்களது கூட்டத்தில் கிருஷ்ணா நீரில் தமிழ் நாட்டுக்குத் தரப்பட்ட 15 டி.எம்.சி.யை ஸ்ரீசைலம் நீர்த் தேக்கத்திலிருந்து ஆண்டு தோறும் ஜூலை முதல் அக்டோபருக்குள் ஒரு கால்வாய் மூலம் பெண்ணாற்றுக்குக் கொண்டு வர அனுமதி அளிக்கப்பட்டது. இதை அடுத்து ஹைதராபாத்தில் 15.6.78ல் நடந்த கூட்டத்தில் ஆந்திர தமிழக முதலமைச்சர்கள் இந்தத் திட்டத்திற்கான ஆய்வு வேலைகளை மேற் கொள்வது பற்றி பேசி முடிவு செய்தார்கள். இருமாநில அரசுகளின் செயலாளர்களும் பொறியாளர்களும் சேர்ந்த ஒரு தொடர்புக்குழு அமைக்கப் பட்டு அக்குழு இத்திட்ட ஆய்வு பணிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆந்திர அரசு ஆய்வுவேலைகளை 1978 ஜூலையில் ஆரம்பித்தது. இந்தத் திட்ட அறிக்கை 1982 செப்டம்பர் மாதத்தில் ஆந்திர அரசால் அனுப்பப் பட்டது. ஆய்வு வேலைகள் நடந்து கொண்டிருக்கும் போதே தொடர்புக்குழு அடிக்கடி கூடி திட்டத்தை பற்றிய பல்வேறு அம்சங்களையும் அவற்றை ஒருங்கிணைந்து அமைக்கும் முறையையும் முதலமைச்சர்களது கவனத்திற்குக் கொண்டு வந்தது. முதலமைச்சர்கள் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களும் திரு என்.டி.இராமராவ் அவர்களும் 18.4.83 அன்று ஹைதராபாத்தில் சந்தித்தனர். தமிழகத்திலிருந்து மின்துறைஅமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்களும், தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்களும், ஆந்திரத்திலிருந்து நிதியமைச்சர் திரு. பாஸ்கர்ராவ் அவர்களும் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. சீனிவாசலு ரெட்டி அவர்களும் உடனிருந்தனர். அவர்கள் தாராள மனப்பான்மையுடனும், பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு காண வேண்டும் என்ற எண்ணத்துடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். இரு மாநிலங்களுக்கும் நலம் பயக்கும் வகையிலும் நாட்டின்இதர பகுதிகளுக்கு ஒரு எடுத்துக் காட்டாக அமையும் இதுவும் ஒரு வரலாற்றுச் சிறப்புக் குரிய ஒப்பந்தம் உருவாக்கப் பட்டு 18.4.83 அன்றே கையெழுத்திடப்பட்டது. இவ்வொப்பந்தம் அவர்களது பரந்த நோக்குக்கும் பொது நலத்தில் அவர்களுக்குள்ள ஆழ்ந்த அக்கறைக்கும் ஒரு புகழாரமாகத் திகழ்கிறது.

## முக்கியமான விவரங்கள்

1) சென்னைக்குக் குடிநீர் காரை பூசப்பட்ட கால்வாயின் மூலம் வரும். இக்கால்வாய் மூலம் ஆந்திர மாநிலத்தில் பாசனத்திற்காகவும் சென்னைக் குடிநீருக்காகவும் கிருஷ்ணா மற்றும் பெண்ணாறு நதிகளின் நீர் பயன்படுத்தப்படும்.

2) சென்னைக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக ஆந்திர மாநில எல்லைக்குள் நிறை வேற்றப்பட வேண்டிய வேலைகளை ஆந்திர அரசு செய்யும். ஒவ்வொரு வேலைக்கும் ஆகக்கூடிய செலவுத் தொகை, இம்மாநிலங்கள் உபயோகிக்கும். நீரின் அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப்படும். பராமரிப்புச் செலவும் இதேவிகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படும்.

3) ஆந்திர அரசு ஆண்டு தோறும் நவம்பர், டிசம்பர், மே,ஜூன் நீங்கலாகவுள்ள எட்டு மாதங்களில் தமிழகஅரசு கோரியுள்ள அட்டவணை பிரகாரம் குறிப்பிட்ட அளவுநீரை தமிழ்நாட்டு எல்லையில் வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

4. ஆண்டுதோறும் வழங்கப் பட வேண்டிய நீரின் அளவுவழியில் ஏற்படும் நீரிழப்பு உள்பட 15டி.எம்.சி. ஆகும். நீரிழப்பு ஆண்டொன்றுக்கு 3டி.எம்.சிக்கு மேற்பட கூடாது என ஆந்திர அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இவ்விழப்பு 3 டி.எம். சிக்கு மேற்பட்டால் அதனை 3டி.எம்.சிக்கு அளவுக்கு குறைக்கத் தேவைப்படும் வேலைகளுக்கான செலவு முன்னரே ஒப்புக் கொள்ளப் பெற்ற கோட்பாடுகளுக் கிணங்க தமிழக மற்றும்ஆந்திர மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படும்.

5. இரு மாநில அதிகாரிகளை கொண்ட தொடர்புக் குழு திட்ட வேலைகளின் முன்னேற்றத்தையும் திட்டம் செயல்படும் முறையினையும் கண்காணிக்கும்.

6. இத்திட்டத்தின்று கிடைக்கப் பெறும் நீரைத் தமிழ்நாடு அரசு சென்னைக் குடிநீருக்குத் தவிர வேறு எந்த தேவைக்கும் பயன்படுத்தாது.

7. இரு மாநிலங்களும் இத்திட்டத்தை மூன்று முதல் ஆறாண்டுகளுக்குள் முடிக்கக் கூடுமெனக் கருதுகின்றன.

8. திட்டத்தை துரிதமாக நிறை வேற்றும் பொருட்டு முதல் மூன்று ஆண்டுகளில் வேலையின் முன்னேற்றத்தை பொறுத்து தமிழ்நாடு அரசு, ஆந்திர மாநில அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 60 கோடி வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

9. இவ்வொப்பந்தம் கால வரம்பற்ற நிரந்தமான ஒப்பந்தமாகும்.

தமிழ் நாட்டில் எல்லைக்குள் நடைபெற வேண்டிய வேலைகளின் மதிப்பு 30 கோடி ஆந்திர மாநிலத்தில் நடைபெற வேண்டிய வேலைகளின் மதிப்பு ரூ760 கோடி. ஒப்புக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளின்படியும் இப்போது உள்ள விவரங்களின்படி ஆந்திர மாநிலம் உபயோகிக்க உத்தேசித்துள்ள நீரின் அடிப்படையிலும் தமிழ் நாட்டின் பங்கு ரூ200 கோடியாகும். திட்டம் முழுமையாக முடிவுற்ற பின்னர்தான் தமிழ்நாட்டின் பங்கு எவ்வளவு என்று சரியாக நிர்ணயிக்க இயலும். சென்னையில் தற்பொழுது இருந்து வரும் குடிநீர் வழங்கும் அமைப்பு இனி கிடைக்கப் போகும் கூடுதல் நீரை வழங்கும் வகையில் பெருமளவுக்கு விரிவாக்கப்பட வேண்டும். இத்துடன் இதனால் அதிகரிக்கும் கழிவு நீரும் அகற்றி சுத்திகரிக்கப்பட வேண்டும். இதுபடிப்படியாக செயலாக்கப்பட உள்ளது. இதன் முதல் கட்ட வேலைகளுக்கு ரூ206கோடி செலவாகுமென எதிர்பார்க்கப் படுகிறது. ஆக இத்திட்டத்திற்கு ரூ436கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் முடிவுற்ற பின்னர் சென்னை நகரின் நீண்ட காலத் தேவைகளைப் போதுமான அளவு பூர்த்தி செய்யும்.

மாநிலங்களுக்கிடையே ஒத்துழைப்புக்கு ஒளிமிகு எடுத்துக் காட்டாக விளங்கும் இத்திட்டத்தைச் சாத்தியமாக்கியமைக்கு தமிழ்நாடு அரசும் தமிழக மக்களும் ஆந்திர மாநில அரசுக்கும் ஆந்திர மாநில மக்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



## சாத்திரப் பேய்களும் சாதிக் கதைகளும்

ஆசிரியர்: எம். வி. சுந்தரம்,

வெளியீடு: நியூ செஞ்சுரி, புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-98.

விலை: ரூ. 5.00

ஆசிரியர், இந்நூலை (ஒரு மார்க்ஸியப் பார்வை) என்று கோடிட்டு காட்டியுள்ளார். உண்மையில், ஆசிரியர் மார்க்ஸியப் போர்வையில் ஒளிந்துகொண்டு, புராணக்குப்பைகளை கிளறி, ஆபாசப்பகுதிகளை ரசித்து மகிழ்வதை நாமும் பாராட்ட வேண்டும்என்று எதிர்பார்ப்பது, வர்க்க ரீதியான சிந்தனை சிற்பிகள் நடமாடும் மார்க்ஸிய உலகில் வேடிக்கையாக உள்ளது. ஆபாசப் பசிக்கு மார்க்ஸிஸ எழுத்தாளர்களும் பலியாகிவிட்டனர் என்பதற்கு இப்புத்தகம், நல்ல உருப்படியான ஆதாரமாகும்.

— அடியலூர் காளியப்பா

## வண்ண மருத்துவம்

ஆசிரியர் : டாக்டர் ப. சிற்சபை,

வெளியீடு: தங்கம் இயற்கை வைத்திய சாலை, 122-சி, இராஜ வீதி, காஞ்சீபுரம்-631 502.

விலை ரூ. 6 பக்கங்கள் 100

''மருத்துவத்தில் வண்ணமருத்துவமா?' என்ற வினா எல்லாருக்கும் எழக்கூடும். ஆம் ''வண்ண மருத்துவம்-குரோமோ திரபி ஹெலியோ திரபி-எனப்படுவது. பொதுவாக இது சூரிய குளியலாகும்.'' என்று குறிப்பைப் படித்ததும் நமக்குத் தெளிவு ஏற்படுகிறது.

சூரியனுடைய ஒளியில் அடங்கியிருக்கும் வண்ணங்களைப்பற்றியும், அந்த வண்ணங்களை மக்களின் நீண்ட நல்வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ளும் முறைகளைப் பற்றியும் இந்நூல் விளக்கமாகக் கூறுகின்றது.

நோய் உண்டாகக் காரணம், வண்ணச் சிகிச்சை பற்றிய விவரங்கள் எல்லாம் இந்நூலில் மிகத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

## எளிய யோகாசனங்கள்

ஆசிரியர் : டாக்டர் ப. சிற்சபை,

# நூல் நயம்

வெளியீடு: தங்கம் இயற்கை வைத்திய சாலை, 122-சி, இராஜ வீதி, காஞ்சீபுரம்-631502.

விலை ரூ. 1 பக்கங்கள் 16

நாள்தோறும் எளிதில் பயில்வதற்கு ஏற்ற, பத்து யோகாசனங்கள் பற்றிய விளக்கவுரைகள் இந்நூலில் உள்ளன. ஆசனம் பயிலும் முறைகள் பற்றிய விளக்கப் படங்களும் உள்ளன. எல்லாரும் படித்துப் பயன்பெற வேண்டிய புத்தகம் இது.

— மு. மு. கா.

## வடியாத வெள்ளங்கள்

ஆசிரியர்: கவிஞர் வல்லம் வேங்கடபதி,

வெளியிட்டோர்: வானதி பதிப்பகம், தியாகராயநகர், சென்னை-600017.

பக்கங்கள்: 216 விலை ரூ. 11.00

கவிதைக் கலையில் பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பட்ட கவிஞர் வல்லம் வேங்கடபதி அவர்கள் தொடுத்த கவிதைத் தொகுப்பு நூலிது.

ஓயாத உயிர்ப்பாடல், தணியாத தாகங்கள், குனியாத கோபுரங்கள், தீராத மயக்கங்கள், உறங்காத உண்மைகள், அணையாத நெருப்புகள், வாடாத வண்ணங்கள், விலக்க முடியாத விருந்துகள், மறையாத மின்னல்கள் என்ற வகையில் ஒன்பது பகுதிகளாகக் கவிதைகள் தரப்பட்டுள்ளன. பகுதிப் பெயர்கள் புதுக் கவிதைகளாகத் தென்பட்டாலும் இதில் நிறைந்துள்ளவையனைத்தும் மரபுக்கவிதைகளே-சந்தக் கவிதைகள் உட்பட.

ஆனால் ஒன்று - வெறும் எதுகை மோனைகளே குறிக்கோளாக எழுதப்படாமல், எளிய தமிழில் இனிய சொற்களால் கவிதைகள் ஆக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கவிதை ஆர்வலர்களுக்கு இது ஒரு கரும்புக் கட்டு!

— இந்திரன்

## நீ வந்த நேரம்

ஆசிரியர்: ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்

வெளியீடு: சுதா பதிப்பகம் 4, முத்து முதலித்தெரு, புரசைவாக்கம், சென்னை-600 007.

விலை ரூ. 10 பக்கம் 163

ஒன்றை மனத்தில் பதிய வைப்பதற்கு நாடகம் நல்ல சாதனமாகும். அந்த வகையில் இந்த நாடகத் தொகுப்பு நூலும் பல்வேறு கோணங்களில், பல வாழ்க்கைப் பிரச்சினைகளை அலசி ஆராய்கின்றது.

இந் நூலில் எட்டு நாடகங்கள் உள்ளன. இவையனைத்தும் வானொலியிலும், தொலைக் காட்சியிலும் வந்தவையாகும். இதிலுள்ள ஒரு நாடகத்தின் தலைப்புதான் நீ வந்த நேரம். இந்நூலைப் படிக்கும் போது பாத்திரங்களோடு ஒன்றி விடுகிறோம். சில பாத்திரங்கள், நாம் அன்றாடம் சந்திக்கக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள் கேட்டு மகிழ்ந்தவர்களுக்கு படிக்க ஒரு நல்ல வாய்ப்பாக இந்தப் புத்தகம் விளங்குகிறது.

## நெருப்புப் பார்வைகள்

ஆசிரியர்: பழநிபாரதி

வெளியீடு: பூங்கொடி பதிப்பகம் 14, சித்திரைக்குளம் மேற்கு வீதி, சென்னை-4

விலை: ரூ. 5 பக்கங்கள்: 104

இளங்கவிஞரின் இதயத்துடிப்புகள் — சிந்தனைச் சிதறல்கள் நூல் முழுவதும் விரவியிருக்கின்றன. காதல், சோகம், சமுதாயம், நாடு என்றெல்லாம் கவிஞர் நமக்கு அப்படியே படம் பிடித்துக்காட்டுகிறார்.

இந்நூலில் 33 கவிதைகள் உள்ளன. 'உன் ஓலைக்குடிசையின் கண்ணீர்த் திருவிழாவுக்கு, குடும்பக் கண்மணிகளின் கிழிந்த ஆடைகளே தோரணங்களாகின்றன...'' என்ற வரிகள் ஏழ்மையைச் சித்திரிக்கின்றன. ஆம். ஏழ்மைச் சித்திரவதையை எடுத்துக்காட்டுகின்றன. 'பரிணாமங்கள் எரிக்கப்படுகின்றன'; 'புதிய கண்ணகி', 'தாஜ் மகால் ஓர் எச்சரிக்கை!' முதலான கவிதைகள் இதயத்தில் தைக்கின்றன, நிற்கின்றன!

— பி. வி. கிரி



## சென்னைப் பல்கலைக் கழக 125-வது ஆண்டுவிழா

# புதிய துறைகள் நிறுவி புகழ் பெறுவோம் வாரீர்!




அழிவில்லாச்செல்வம் கல்வி. கற்றல், கேட்டல் மூலம் பெறப்படுவது கல்வி. பண்பை வளர்க்காத கல்வி, கல்வியின் பாற்பட்டதன்று. அக்கல்வி அறிவு பெறாத சமுதாயம் வாழ்வதும், வளர்வதும் இல்லை. அப்படியே வாழ்ந்தாலும், மிருகத்தினின்று வேறுபட்டதாக அதனைக் கருத முடியாது.

உள்ளத்தின் உயர்வையும், வாழ்க்கை நெறியினையும் வையத்தோர் புகழும் முறையினையும் தரவல்ல கல்வியினை வளர்க்கும் மிகப்பெரிய தொழிற்சாலை பல்கலைக்கழகம்.

நான் படித்தேன், நாம் படித்தோம், நானிலம் பயனுற்றது என்ற பெருமைக்கு உரியது சென்னைப் பல்கலைக்கழகம். நல்லோர்கள் பயின்ற பல்கலைக்கழகம், பல வல்லோர்கள் உருவான கலைக்கோயில் நம் சென்னைப் பல்கலைக்கழகம்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் அதன் நூற்றாண்டினை மாண்பமை தலைமை நீதிபதி இராசமன்னார் தலைமையில் கொண்டாடி மகிழ்ந்தோம். நூறாண்டுகள் வாழ்ந்து, அதற்கென விழா எடுத்து, ஆண்டுகள் இருபத்தைந்து பறந்தோடி விட்டன. இன்று நாம், சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டின் மேல் வெள்ளி விழாவினைக் கொண்டாட முனைந்துள்ளோம். வருகின்ற செப்டம்பர் திங்கள் 15-ஆம் தேதி அவ்விழாவின் துவக்க நாள்.



மாண்புமிகு நீதிபதி

**திரு பு.ரா.கோகுலகிருஷ்ணன்**

நான் பயின்ற பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டின் மேல் வெள்ளிவிழாக் குழுவின் தலைவனாக இருப்பதில் நான் பெருமைப்படுகின்றேன். என்னை ஆளாக்கிய கல்வி நிறுவனம் அதன் நூற்றாண்டு விழாவிற்குப் பிறகு எத்துணை விரிவடைந்துள்ளது என்பதைக்கண்டு வியக்கின்றேன்.

இந்நேரத்தில் இப்பல்கலைக் கழகத்தைத் திறம்பட நடத்திய, நடத்துகின்ற துணைவேந்தர்கள் சர்.ஏ.இலட்சுமணசாமி முதலியார், திரு. நெ.து.சுந்தரவடிவேலு, திரு.மால்கம் ஆதிசேஷய்யா, திரு.ஜி.ஆர். தாமோதரன், திரு.சாந்தப்பா போன்றோர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

விழாக்காணும் பல்கலைக்கழகம், இன்னும் விரிவடைய வேண்டும் என்பதிலே என் தலைமையில் இயங்கும் நூற்றாண்டின் மேல் வெள்ளிவிழாக்குழு, மலைக்கும் திட்டங்களை வகுத்துள்ளது.

முறையான கூட்டங்களும், முழுமையான விளையாட்டுப் போட்டிகளும், மனங்கவரும் கண்காட்சிகளும் நிச்சயம் அமையும். விழாவினைத் துவக்கி, தலைமை ஏற்க, இந்தியத் துணைக்கண்டத் தலைவர் மாண்புமிகு ஜியானி ஜெயில்சிங் அவர்கள் வருகைதர உள்ளார்கள்.

அத்தோடு அமையாமல் வளர் கலைகள் தன்மை நோக்கி, வளர்க்கத் தவறிய நம் கலைகள் நிலைமை கண்டு, பல துறைகள் நிறுவிட வேண்டும் என்று, விழாக் குழு திட்டம் தீட்டியுள்ளது. அவைகளிலே சில:—

1) வளரும் கலைகளுககான துறையும், கலைஅரங்கமும்.
2) Centre for Computer Science
3) காந்திய தத்துவமும் அமைதி நிலவ வழி முறையும் என்ற துறை.
4) அகில உலக நட்புறவுப் பிரிவுத் துறை.
5) இந்திய-ஜப்பானிய உறவுத் துறை.
6) ஜைன தத்துவததுறை.
7) நிர்வாகமுறைத் துறை.
8) சைவசித்தாந்தக் துறை.
9) வைணவ சித்தாந்தத்துறை.

ஒரு துறையென்றால், அதற்கென ஒரு பேராசிரியர், ஒரு துணைப் பேராசியர், இரண்டு விரிவுரையாளர்கள் இருப்பார்கள். இதற்காகத் தேவைப்படும் முதலீடு, பல்கலைக்கழகக் கணக்குப்படி, ஒவ்வொரு துறைக்கும் இருபது லட்சம் ரூபாய்கள். இத்தொகையினை எந்த ஒரு துறைக்காகத் திரட்டித் தந்தாலும் அந்தத் துறையினை ஏற்படுத்திட, பல்கலைக்கழகம் ஒப்புதல் வழங்கிட ஆவன செய்திடும்.

மேலே குறிப்பிட்ட துறைகள் தவிர, பல்கலைக்கழகம் ஒத்துக் கொள்ளக்கூடிய துறைகளை ஏற்படுத்த எவரேனும் முன் வந்து ஆக்கபூர்வச் செயலில் ஈடுபட்டு அதற்கான நிதியினை அளிப்பார்களேயானால், அவர்களையும் எங்கள் குழு வரவேற்கின்றது. அதற்கான விவரங்களைத் தர எங்கள் குழுவும், பல்கலைக்கழகமும் ஆவலோடு இருக்கின்றது. எங்களுடைய எண்ணமெல்லாம், வளர்ந்துள்ள நம் பல்கலைக்கழகம் உலக அரங்கில் பீடுநடை போட எண்ணிறைந்த துறைகளைத் தன்னகத்தே பெற்றுத் திகழ வேண்டுமென்பதே.

இத்தருணத்தில் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். ஜைன தத்துவத் துறையைப் பொருத்தவரை, நம் சென்னைப்பல்கலைக்கழகம் நூற்றாண்டின் மேல் வெள்ளி விழாவின் போது அத்துறை ஏற்படுத்த நிதி வசூலாகிவிட்டது. "மிகு சைவத்துறை விளங்க" என்று தேனொழுகத் தெய்வப்பால் ஒழுகிய வாயால் பாடி பல நூற்றாண்டுகள் ஆயினும், 'சைவசித்தாந்தத்திற்கென ஒரு துறை எங்குமே எழவில்லை. அத்துறையினை இவ்விழாவின்போது நிறுவிட எண்ணியுள்ளோம். அதைப் போல தெளியாத மறைநிலங்கள் தெளிய ஓதிய வைணவப் பிரபந்தங்கள் பிரமிக்கும் தத்துவங்கள் ஓதி நின்றாலும் அவைகளுக்கென ஒரு தனித்துறை எங்குமே எழவில்லை. அத்துறையினை இவ்விழாவின்போது நிறுவிட எண்ணியுள்ளோம். இவ்விரு துறைகளையும் ஆய்வு அடிப்படையில் பயில வழிவகுப்பதே, இத்திட்டங்களின் நோக்கம்.

எல்லாச் சமயங்களும் இறைவன் பேரருளால் அமைந்தவைகளே. மக்கள் அவரவர் படிமுறை வளர்ச்சிக்கேற்ப அவையவைகளைப் பின்பற்றி வருகின்றனர். சமய உண்மைகளும், தத்துவக் கொள்கைகளும் நம்மை நெறிப்படுத்துவதற்கு உரியவை. அவற்றை ஆய்ந்து ஏற்றுக் கொள்வதும், அடியொற்றிச் செயல்படுவதும் வேண்டும். இந்த அடிப்படை உண்மைகளை அறிந்து, நாங்கள் துவங்கிடும் ஜைனத் துறை, வைணவத்துறை, சைவசித்தாந்தத்துறை எந்தவிதமான சமய சர்ச்சைகளுக்கோ அல்லது பூசல்களுக்கோ சிறிதளவும் இடம் தராது. இவை சமயப் பிரசாரம் செய்யும் துறைகளாக நிச்சயமாக அமையாது. சமயங்கள் பற்றிய கல்வி, ஆய்வு, விரிவாக்கப்பணி ஆகியவை மட்டுமே இந்தத்துறைகளின் பணித்திட்டங்களாக அமையும். சமயங்களின் தத்துவங்களையும், கொள்கைகளையும் ஒப்புநோக்கி இணைக்கப்படுவதே இந்தத் துறைகளின் தலையாய நோக்கமாக இருக்கும்.

சமுதாய நலம் கருதி, சன்மார்க்கநெறி தழைக்க, விஞ்ஞான முறை வளர, விவேகம் வளர்ந்தோங்க, நம் பல்கலைக்கழகத்தில் பல துறைகள் நிறுவ முனைந்துள்ளோம். இது ஓர் அரிய வாய்ப்பு. வாய்ப்பேச்சோடு அமையாமல், வளரும் கலைகளுக்கான துறைகள் நிறுவ, பரப்பப்படவேண்டிய தத்துவங்களுக்காகத் துறைகள் அமைய, பண்பாடுகள் சிறக்க நிறுவப்படும் துறைகள் விளங்க, நல்ல மனம் படைத்தோரே, நிதிதர முன்வாருங்கள்! நீங்கள் தருகின்ற நன்கொடைகளுக்கு வருமானவரி விலக்கு உண்டு எனப் பல்கலைக்கழகம் கூறுகின்றது. உங்கள் சிறு உதவி ஒரு பெரும் கலைக்கோயிலை நிர்மாணிக்க, மனித சமுதாயத்திற்கு ஒளிதர, இம்மண்ணுலகம் எங்கணும் நல்எண்ணங்களின் உயர்வை ஒலித்திட பயன்படும் என்பதை உணர்வீர்! விழியிருந்தும் பார்வையற்றோராய் வாழும் கல்வியற்றோருக்குப் பல்கலைக் கல்வி என விழி ஒளியை நல்க சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டின் மேல் வெள்ளி விழாத் திட்டத்தினை அமல்படுத்தும் செயல்வீரர்களாக எடுக்கவிருக்கும் விழாவின் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் சிந்தனைச் சிற்பிகளாக, தம்மை தாமே தயாராக்கிக் கொண்டு திட்டங்கள் வெற்றிபெற, செயலாற்ற வாரீர், வாரீர் - என விரும்பிவேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.



## கிராமப் பகுதிகளில் விறகு மரம் வளர்க்கும் திட்டம்.

கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த சமூகக் காடு வளர்க்கும் திட்டம் ஒரு சிறந்த ஏற்பாடாக அமையும். கிராமப் பகுதிகளில் விறகு மரம் வளர்ப்பது உள்பட மத்திய அரசு பொறுப்பேற்கும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் 1980—81ஆம் ஆண்டில், இம்மாநிலத்தில் விறகுமரப் பற்றாக்குறை பெரிதும் நிலவும் செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, மதுரை, தர்மபுரி ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 1980—81 முதல் 1984—85 வரையிலுள்ள ஐந்து ஆண்டுகளில் மேற்கண்ட மாவட்டங்களுக்காக ரூ. 541.47 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# சாண எரிவாயுக் கலன்

எச். பி. என். ஷெட்டி,
இ.ஆ.ப.,
ஆணையாளர்-அரசுச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை.

நம் நாட்டில் கிடைக்கும் நிலக்கரி, நிலக்கரி வாயு, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், எரிபொருட்கள் மிகவும் விலை உயர்ந்தவை மட்டுமல்ல அவை மிகவும் குறைவான அளவில் அதிகச் சிரமங்களுடன் பெரிய முதலீடு செய்து கிடைப்பவையாகும். எனவே இவற்றை நாம் தொழில் வளம்பெருக்க மட்டுமே பயன்படுத்துவது மிக அவசியமாகும்.

மழை வளம் தரும் காடுகளையும், ஊர்ப்புறங்களிலுள்ள எண்ணற்ற மரங்களையும் கண்மூடித்தனமாக அழித்து. சமையல் செய்ய விறகாக எரித்துக் கொண்டேயிருந்தால், நாட்டில் மழை அளவு வெகுவாகக் குறைந்து விடுவதுடன், வறட்சியும் வேகமாக நம்மைப் பாதிக்கத் தொடங்கிவிடும். எரிபொருள் கிடைப்பதும் அரிதாகிவிடும்.

இவற்றிற்கெல்லாம் நாம் ஒரு மாற்று வழி கண்டேயாக வேண்டும். அதுதான் சாண எரிவாயுத் திட்டம்.

நம் நாட்டில் கால்நடைகளுக்குப் பஞ்சமில்லை. சாணஎரிவாயு அமைப்பதன் மூலம் கால்நடைகளின் சாணத்திலிருந்து சிறந்த எரிவாயு பெறவும் அதே நேரத்தில் உபயோகித்த சாணத்திலிருந்து சத்து மிகுந்த உரத்தினைப் பெறவும் நல்ல வாய்ப்பு உள்ளது.

ஒரு குடும்பத்தில் 4 முதல் 6 பேர்கள் இருப்பதாகவும் அங்கு 2-3 கால்நடைகள் இருப்பதாகவும் வைத்துக் கொண்டால் எரிவாயுக் கலன் ஒன்றை அமைத்துக் கொள்ள, சுமார் ரூ. 3,770வரை செலவாகும். குடும்பத் தலைவர் மலைவாழ் இனத்தைச் சார்ந்தவராய் இருந்தால் ரூ. 1,500-ஐ அரசு, மானியமாக அளிக்கும். மற்றவருக்கு ரூ. 1,000 மானியமாகக் கிடைக்கும். இதைப் பின்வரும் அட்டவணை நன்கு விளக்கும்.

சாண எரிவாயு அமைத்துக் கொள்வதனால் அடுப்பில் எரியும் தீயில் புகை இருப்பதில்லை என்பது மட்டுமல்ல சமையல் பாத்திரங்களிலும் கரி பிடிப்பதில்லை தீயினால் அதிகவெப்பம் கிடைப்பதால் குறுகிய நேரத்திலேயே சமையல் முடிந்து விடுகிறது. சமையலறைச் சுவர்களில் புகை பிடிப்பதில்லை. சமையல் செய்பவருக்குக் கண்நோயும் வருவதில்லை.

எரிவாயுக் கலன்களும் அடுப்பும் பழுதடைந்தால் செப்பனிடுவது எளிதானது. குறைந்த இட வசதி இருந்தாலே போதும்.



| சாதனத்தின் அளவு, க.மீ. | குடும்பத்திலுள்ளவர்களின் எண்ணிக்கை | தேவையான கால்நடை | நிறுவ உத்தேச செலவு | மானியம் ரூபாய்: மலைவாழ் மக்களுக்கு | மானியம் ரூபாய்: மற்றவர்களுக்கு |
|---|---|---|---|---|---|
| 2 | 4-6 | 2-3 | 3770 | 1500 | 1000 |
| 3 | 6-9 | 4-6 | 4790 | 1950 | 1300 |
| 4 | 8-12 | 5-7 | 5280 | 2320 | 1550 |
| 6 | 10-15 | 7-9 | 6620 | 2910 | 1940 |
| 8 | 14-20 | 10-13 | 8650 | 3900 | 2600 |
| 10 | 18-25 | 14-18 | 10680 | 4760 | 3170 |

அடுப்பு தவிர, விளக்கு எரிக்கலாம், டீசல் என்ஜின்களை ஓட்டலாம். வீணாகும் வாயும் மிகக் குறைவேயாகும்.

எரி வாயுக் கலத்திலிருந்து வெளியாகும் சாணத்தில் ஈ, கொசு போன்ற-வியாதிகளைப் பரப்பும் உயிரினங்கள் உற்பத்தி ஆவதில்லை. அச்சாணத்தை இடும் நிலங்களில் களைகள் முளைப்பதில்லை. சுற்றுப்புறச் சுகாதாரம் இதனால் பெரிதும் பாதுகாக்கப்படுகிறது.

பாரதப் பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தில் இது ஒரு முக்கிய அங்கமாகும். நமது நாட்டில் இலட்சக்கணக்கான குடும்பத் தலைவிகள் சாண எரிவாயுக் கலன்களை அமைத்துக்கொண்டு குறைந்த நேரத்தில், தூய்மையான சூழ்நிலையில், சுகாதாரமான முறையில், சுவையான உணவைத் தயாரித்து, குடும்பத்தின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதுடன், நாட்டிற்கும் நன்மை செய்து வருகின்றனர். தமிழ்நாட்டிலும் இத்திட்டம் மிக முனைப்புடன், வேகமாகச் செயல்படுத்தப்படுவதால் ஆயிரக்கணக்கான குடும்பங்களிலே சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டிருப்பதை நீங்களும் நேரில் கண்டிருப்பீர்கள். உங்கள் இல்லங்களிலும் அமைத்துக் கொள்ளத் தேவையான உதவிகளைச் செய்ய அரசு அலுவலர்கள் காத்திருக்கின்றனர்.

வீடுகளில் மட்டுமல்ல, மாணவர்களின் விடுதிகளில் கூட சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்படுகின்றன.

சான்றாக மதுரை மாவட்டத்திலுள்ள கருமத்தூரில் கிளாரெட் பவன் என்ற நிறுவனத்தில் 25 சதுர கன அடி சாண எரிவாயுக் கலன் உள்ளது. இதற்கென அரசு ரூ.6660 மானியம் கொடுத்தது. இங்கே ஒவ்வொரு வேளையிலும் 100 பேர்களுக்குரிய சமையல் இந்த வாயுவினால் மட்டுமே தயாராகிறது. மின் தட்டுப்பாட்டு நேரங்களிலே உதவுவதற்கென, ஒரு விளக்கும் பொருத்தப்பட்டு, ஒளி சிந்திக் கொண்டிருக்கிறது. அங்கு கால் நடைகள் 27 உள்ளன.

ஆண்டொன்றிற்கு ரூ. 15,000 செலவிட்டு விறகுகளை வாங்கிக் கொண்டிருந்த இந்நிறுவனத்திற்கு எரிவாயுக்கலன் அமைக்கப்பட்ட பின்னர், இந்தத் தொகை சேமிப்பாகி விட்டது. தவிர 18 மாதங்களில் கலன் அமைக்கச் செலவிட்ட தொகைசேமிப்பாய்க் கிடைத்துவிடுகிறது. சாணத்தில் 'நைட்ரஜன்' சத்து அதிகமாவதால் வயல்களில் களைகள் தலைகாட்டுவதில்லை என்பது இன்னொரு பெரிய நன்மையன்றோ!

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:



கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல் படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களின் முக்கிய சாராம்சங்களைக் கொண்டு, வகுக்கப்பட்ட ஓர் திட்டம். இந்தத் திட்டம் 2—10—1980 முதல் தமிழ் நாட்டிலுள்ள 378 ஊராட்சி ஒன்றியங் களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. வறுமைக் கோட் டிற்கு கீழ் உள்ளவர்களுக்கும், பல்வேறு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் உதவிசெய்து, அவர் களை வறுமைக் கோட்டிலிருந்து மீளச்செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். குடும்ப வருமானம் ஆண்டிற்கு 3500ரூபாய்க்குக் குறைவாக உள்ள குடும்பங்கள், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளதாகக் கருதப்படுகிறது.





1981-82-ஆம் ஆண்டில் பால்வளம், கால்நடை பராமரிப்பு, கைத்தறி மற்றும் துணிவகை தயாரிப்பு, தொழிற்சாலைகள், பட்டுப்புழு வளர்ப்பு, மீன்வளம், கோழி வளர்ப்பு, பூதானம் மற்றும் கதர் ஆகிய பல்வேறு துறைகளைச் சேர்ந்த 73 பணிகளுக்கு ஒருங்கிணைப்புக் குழுவினரால் ஒப்புதல் தரப்பட் டது. மேற்கண்ட பணிகளுக்கான ஒதுக்கீடு செய்யப் பட்ட தொகை ரூ. 2,02,69,025 ஆகும். 1982-83-ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், கைத்தறி மற்றும் துணி தயாரிப்பு, தொழிற் சாலைகள், பட்டுப்புழு வளர்ப்பு, தோட்டக்கலை மீன்வளம், பூதானம் மற்றும் கதர் ஆகிய துறை களுக்காக ரூ. 1,81,57,623 நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் துவக்கப்பட்ட புதிய 20 அம்ச திட்டத்தில் ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சி ஓர் முக்கியமான அம்சமா கும். ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சித்திட்டம் செயல் படுத்தப் படுவதனால் மாநிலத்தில் உள்ள ஊரகப் பகுதி மறுமலர்ச்சியில் மிகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

# தமிழ் முனிவர் கண்ட தொழிலாளர் இயக்கம்




எஸ். டி. காசிராஜன், ஐ.ஏ.எஸ்.
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை


தொல்காப்புகழ்' மண்டும் தமிழகமெனும் நறுமணம் கமழும் சோலையில் இலக்கியமணம் பரப்பிய செழுமலர், திரு வி.க. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியின் தமிழக வரலாறு செந்தமிழ் வளர்த்த பெருந்தகையாளர் திரு வி.க.வின் தொண்டைக் குறிக்காது நிறைவு பெறாது. தனி மனிதராக இயங்கிய திரு.வி.க. தாம் வாழ்ந்த காலத்தில் அனைத்துத் துறைகளிலும் பங்குகொண்டு, மங்காப்புகழை நிலை நிறுத்திச் சென்றுள்ளார்.

திரு.வி.க.வின் இலக்கியத்தொண்டு என்றென்றும் நின்றிலங்கும் பெற்றி பெற்றது போன்றே, அவரது பொதுவாழ்வும் புகழ் செறிந்த பகுதியாகத் திகழ்கின்றது. எத்திக்கும் பெருமைசேர்க்கும் தித்திக்கும் செந்தமிழின் சீரிளமைத் திறம் வியந்து பல்வேறு பனுவல்களை யாத்த பெருமகனார், அவர் காலத்தில் கேட்பாரற்றுக் கிடந்த தொழிலாளர்களின் நலனில் நீங்காப் பற்றுக்கொண்டு, வாழ்வின் பெரும்பகுதியை அவர்தம் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் செலவிட்டார். இந்தியாவிலேயே உரிமை வேட்கைத் தீ பரவிய காலத்தில், உரிமைப் போரில் ஈடுபடுத்திக் கொள்வதில் பலரும் முனைந்த காலத்தில்; உரிமை வேள்வியிலும் குதித்து, உழைக்கும் பெரு மக்களின் ஒருமித்த நலனையும் பேணும் உள்ளம் கொண்டிருந்தவர் திரு.வி.க; அக்காலத்தில் எவ்வகையில் தொழிலாளர் இயக்கத்தை நடத்திட வேண்டுமென்னும் செயல்திறனும் பெற்றிருந்தார்.

தொழிலாளர் யாவர் - என்பதற்குச் சீரிய விளக்கம் அளிக்கிறார் திரு.வி.க.

**"உலகிலுள்ள அனைவரும் தொழிலாளரே யாவர். அறிவால் தொழில் புரிவோர் சிலர்; கையால் தொழில் புரிவோர் பலர்".**

முதலாளி, தொழிலாளி என்னும் பிரிவு மேல்நாட்டினின்றும் உருக்கொண்டதென்று நம்புகிறார். உலகம் சில ஆண்டு முதலாளி, தொழிலாளி என்னும் பிணக்குக்கு இரையாகிப் பின்பு முதலாளி என்னும் இனம், தொழிலாளி என்னும் இனத்தோடு கலப்புற்று, உலகத்திலுள்ள இடர்போக்குமென்று திரு.வி.க. திண்ணமாக நம்புகிறார். "இப்போது நடைபெறும் வாணிபர் ஆட்சி இறந்துபட்டுத்தொழிலாளர் ஆட்சி முகிழ்க்கும்" என்று சுவாமி விவேகானந்தர் உரைத்தார். சுவாமி விவேகானந்தரின் நோக்கு உலகில் ஒருநாள் நிலைத்திடுமென்று உரைத்திட்டவர் திரு.வி.க.

திரு.வி.க. தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபடத் தொடங்கிய காலம், ஐரோப்பாவில் போர் நிகழ்ந்து ஓய்வடைந்த காலம். இப்

போரின் பலன், உலகெங்கிலும் தொழிலாளர்கள் விழிப்படைந்தனர். ''ஜெர்மனி பெயராலும் பிரான்சு பெயராலும் இங்கிலாந்து பெயராலும் மற்ற நாட்டுப் பெயராலும் ஏழை மக்களைத் தூண்டிப் போர் புரிவித்து, ஆங்காங்குள்ள முதலாளிகள் இன்பம் நுகர்கின்றார்கள் என்ற உணர்வு ஏறக்குறைய எல்லாத் தேசங்களிலும் அரும்பியிருக்கிறது. ஏழைத் தொழிலாளர் துணையின்றி எவரால் போர் நடத்தல் இயலும்?'' திரு.வி.க. எழுப்பிய வினா இது. உலகப் பெரும்போரில் ஏழைத் தொழிலாளர் பங்கு பெரிது என்பதை வலியுறுத்திய முதல் மனிதர், திரு.வி.க.

உலகில் முதலாளி, தொழிலாளி என்னும் வேற்றுமை யிருத்தலாகாது. செல்வப் பொருளும் பிறவும் எலலார்க்கும் பயன்படும் வகையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற கருத்துடையவர் திரு.வி.க. இத்தகைய நிலை இன்றில்லாவிடினும் நாளடைவில் அது வந்தே தீரும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார். இதனை எய்திடத் திரு.வி.க. வகுத்துக்கொண்ட பாதை, திரு.வி.க. தொழிலாளர் இயக்கத்தில் எத்தகைய தெளிவும், உறுதியும் கொண்டிருந்தார் என்பதனைக் காட்டுகிறது.

''முதலாளி - தொழிலாளி வாதம், என்று ஒழியுமோ அன்றுதான் உலகில் அமைதி நிலவும். தொழிலாளர் வழி அரசாட்சி நடைபெறுமளவும் உலகத்தில் அமைதி நிலவுதல் அருமை''. இத்தகைய உறுதியான தொழிலாளர் கொள்கை கொண்டிருந்த பெருமகனார் திரு.வி.க.

1908ம் ஆண்டில் சுதேசி இயக்கத்தால் நாட்டில் பெருங்கிளர்ச்சி எழுந்தது. அச்சமயம் பார்லிமெண்ட் உறுப்பினர் சிலர், இங்கிலாந்திலிருந்து இந்தியா வந்தனர். அவ்வாறு வந்தவர்களில் ஒருவரான கீர்ஹார்டி, தொழிற் கட்சித்தலைவர், சில பொருட்களை வாங்க 'ஸ்பென்ஸர் கம்பெனிக்கு' வந்தபோது அக்கம்பெனியில் அலுவலில் அமர்ந்திருந்த திரு.வி.க. அவரிடம் பழகும் வாய்ப்புப் பெற்றார். ''எனது நெஞ்சில் முதல்முதல் தொழிலாளர் இயக்க விதையை விதைத்தவை கீர்ஹார்டியின் காட்சியும் வரலாறுமாகும்'' என்றுரைக்கிறார் திரு.வி.க.

1917ம் ஆண்டு திரு.வி.க. 'தேசபக்தன்' ஆசிரியராகப் பொறுப்பேற்ற சமயம், ஐரோப்பியப்போர் நடைபெற்றது. அப்போது பத்திரிகையில் வெளிவரும் ருஷ்யச் செய்திகள் திரு.வி.கவின் உள்ளத்தைக் கவர்ந்தன. அப்போது திரு.வி.க.வுடன் பழகி வந்த திவான்பகதூர் கேசவ பிள்ளை, 'இந்தியன் பேட்ரியட்' என்ற இதழில் ஆலைத் தொழிலாளர்களின் குறைபாடுகளை எழுதிவந்தார். அத்தகைய செய்திகளைத் திரு.வி.க., தமிழில் மொழிபெயர்த்து 'தேசபக்தனில்' வெளியிட்டு வந்தார்.

1918ம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் நாள் குறிப்பிடத்தக்க நாளாக அமைந்துவிட்டது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் நிரம்பிய கூட்டத்தில், மேல்நாட்டில் தொழிலாளர் இயக்கம் தோன்றிய வரலாற்றையும் பொருளாதார விடுதலையின் மாண்பையும் தொழிலாளர் சங்கத்தின் அவசியத்தையும் விளக்கிப் பேசினார் திரு.வி.க; தொழிலாளரிடை புத்துணர்வும், எழுச்சியும் மலர்ந்தன. தொழிலாளர் சங்கத்தின் தோற்றம், இக்கூட்டத்தில உருக்கொண்டது. ஆசியாவிலேயே முதன் முதல் தொழிலாளர்களுக்கெனத் தனிச் சங்கம் கண்ட பெருமை தமிழ்முனிவருக்கே உரியதாகும். 1918ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ம் நாள் 'சென்னைத் தொழிலாளர் சங்கம்' அமைக்கப்பட்டது. திரு.வாடியாவின் தலைமையின் கீழ் திரு.வி.க. துணைத்தலைவராகப் பணியாற்றினார். காங்கிரஸ் பிரச்சாரத்திற்காக வெளியூர் சென்றுவந்த திரு.வி.க., தொழிற்சாலைகள் உள்ள இடங்களில் தொழிலாளர் இயக்கம் பற்றிப் பேசி ஆங்காங்கு தொழிற்சங்கங்கள் ஏற்படுத்துமாறு ஊக்குவித்துவந்தார். சென்னையிலும், வெளியூர்களிலும் பல சங்கங்கள் அமைக்கப்பட்டன. திரு.வி.கவுடன் அந்நாளில் தொழிற்சங்கப் பணிகளில் ஒத்துழைத்தவர்களில் சர்க்கரை செட்டியார், இராஜாஜி, வ.உ.சிதம்பரனார், டாக்டர் நடேசன் முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். தமிழகத்தில் உருப்பெற்ற தொழிற்கிளர்ச்சி, பம்பாய், கல்கத்தா, கான்பூர், நாகபுரி முதலிய இடங்களிலும் தொழிற் சங்கங்கள் அமையக் காரணமாயிருந்தது.

அவ்வப்போது வேலைநிறுத்தமும் நடைபெற்றது. "ஒவ்வொரு வேலை நிறுத்தமும் சமதர்ம வேதத்தின் ஒருபடலம் என்பது என் கருத்து. முதலாளியின் அடக்குமுறையும் தொழிலாளர் வேலைநிறுத்தமும் பெருகப் பெருகச் சமதர்ம உணர்வு தானே தொழிலாளரிடை தோன்றும் என்பது என் நம்பிக்கை".

இராயப்பேட்டை சாது என்றும் தமிழ் முனிவர் என்றும் போற்றப்படும் தமிழ்த்தென்றல், தொழிலாளர் இயக்கத்தில் புயலாகவும் செயல்பட்டார். ஆட்சியாளரின் அடக்குமுறைகளுக்கும் ஆளானார். பல்வேறு எதிர்ப்புகளைச் சமாளித்தார். அந்நாளில் சென்னை கவர்னராயிருந்த பெண்ட்லண்ட் பிரபு, திரு.வி.க.வை அழைத்துப் பலமுறை எச்சரிக்கை செய்தார். திரு.வி.க.வின் பொறுப்பில் இயங்கிய சென்னைத் தொழிலாளர் சங்கம், மண்ணெண்ணெய்த் தொழிலாளர் சங்கம், அச்சுத் தொழிலாளர் சங்கம், டிராம்வே தொழிலாளர் சங்கம் ஆகிய அமைப்புகள் சென்னையைக் கலக்கியதுடன் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வந்தன.

எல்லாச் சங்கங்களுக்கும் மையமாக ஒரு மத்திய சங்கம் இருக்க வேண்டுமென்று விரும்பிய அன்னிபெசண்ட் அம்மையாரின் முயற்சியால் மத்திய சங்கம் அமைக்கப்பட்டு, அதன் தலைவராகத் திரு.வி.க. தேர்ந்தெடுக்கப்பட்டார். கவிக்குயில் சரோஜினி தேவியாரின் தங்கை மிருநாளினி செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.







தொழிற்சங்கம் அமைக்கப்பட்டு, தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளை உணர்ந்து செயல்படத் தொடங்கிய சமயத்தில், 1921ம் ஆண்டு மே மாதம் கர்நாடிக் மில்லில் ஊதியம் பற்றிய தகராறு எழுந்தது. இரண்டு தொழிலாளர் வேலை நீக்கம் செய்யப்பட்டமையால் வேலை நிறுத்தம் தொடங்கினர், தொழிலாளர்கள்.

'பக்கிங்காம் மில்' தொழிலாளர்களும் 'கர்நாடிக் மில்' தொழிலாளர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர் தொகை பதின்மூவாயிரம்.

வேலை நிறுத்தத்தை நசுக்க அரசாங்கம் பெரிதும் முயன்றதுடன் திரு.வி.க., நாடு கடத்தப்படுவார் என்ற செய்தி காட்டுத்தீ போல் எங்கணும் பரவியது. வில்லிங்டன் பிரபு, சர்.பி.தியாகராச செட்டியாரையும் பனகல் அரசரையும் கூட்டித் திரு.வி.க.வை நாடு கடத்துவது பற்றிக் கலந்தாலோசித்தார். திரு.வி.க. வை நாடு கடத்தினால் நகரில் குழப்பம் நேருமென்று எச்சரிக்கை செய்யவே, அந்த எண்ணத்தைக் கைவிட்டனர். 1921ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் தொழிலாளர் கோரிக்கை வலுவடைந்த சமயம், அரசாங்கம் துப்பாக்கிக் குண்டு பொழிந்து அடக்குமுறையை அவிழ்த்து விட்டது. எழுவர் மாண்டனர். இக்காலப் பகுதியில் திரு.வி.க. வெண் குதிரை பூட்டிய வாடகை வண்டியில் நகரெங்கும் சுற்றிவந்தார்; தொழிலாளர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அயராது அளித்து வந்தார். ஓய்வு ஒழிவு இன்றித் தொழிலாளர் நலனே பெரிதென எண்ணி உழைத்தமையால், திரு.வி.க.வின் உடல் நலம் குன்றத்தலைப்பட்டது.

1937ம் ஆண்டு சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் ஆட்சி மலர்ந்த போது பக்கிங்காம் கர்நாடிக் மில்லில் கதவடைப்பு, வேலைநிறுத்தமாக மாறியது. சிந்தாதிரிப்பேட்டை நேப்பியர் பூங்காவில் தொழிலாளர் கூட்டத்தில் திரு வி.க. எழுச்சியுரை நிகழ்த்துகின்றார்:

> "1921ம் ஆண்டுக்குப் பின்னே தொழிலாளர் இயக்கம் சோர்ந்துவிட்டது என்று சிலவிடங்களில் பேசப்பட்டது. லார்ட் வில்லிங்டன் தொழிலாளர் இயக்கத்தை ஒடுக்க எவ்வெவ்வழியில் முயன்றார்? இப்போது அவர் எங்கே இருக்கிறார்? தொழிலாளர் சக்தியை ஒடுக்கவல்ல வேறொரு சக்தி இவ்வுலகில் இல்லை. உங்கள் சக்தியை நீங்கள் உணராமலிருக்கிறீர்கள். நீங்கள் அதை நன்கு உணர்ந்து நடக்கும் நாளே, உலக விடுதலை நாளாகும்."

இவ்வாறு முழங்கிய திரு.வி.க.வின் கருத்துரை, தொழிலாளர்களுக்கு ஏற்றமும் எழுச்சியும் அளித்ததுடன் அவர்கள் கோரிக்கை வெற்றியும் பெற்றது.

தொழிற்சங்கத்தில் ஈடுபட்டுப் பணியாற்றிய காலத்தில் தனது சொந்தப் பணத்தையே போக்குவரத்திற்கும் செலவு செய்து இரவில் வெகுநேரம் கழித்து வீடுதிரும்புவார், தமிழ்ப் பெரியார். தொழிலாளர்கள் திரு.வி.க.வின் சொல்லுக்குப் பெரிதும் பணிந்ததுடன் அவர்பால் பெரும் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். வேலைநிறுத்த வேலைகளில் தொழிலாளர் கூட்டத்தில் குழப்பமிருக்கும் சமயத்தில் திரு.வி.க.மேடை மீதேறினால் பாதி குழப்பம் குறையும். வாய்திறந்து பேசினால் குழப்பம் தீரும். ''வேலைக்குப் போங்கள்' என்ற திரு.வி.க. ஆணையிட்டால், தொழிலாளர் அனைவரும் வேலைக்குச் செல்வர்; அமைதி காப்பர்.

தொழிற்சங்கத்தின் தந்தையான தமிழ்த் தென்றல் திரு.வி.க. தேவைக்குமேல் பொருள் திரட்டாமையைப் பெரிதும் வலியுறுத்தியுள்ளார்.

> "தேவை அளவில் நிற்குமாறு மார்க்ஸியம் அறிவுறுத்துகின்றது. அதில் எனக்கு வெறுப்பில்லை. ஆனால் அதனுள் ஊடுருவிப் பாய்ந்திருக்கும் உலகாயதம் எனக்குப் பிடிப்பதில்லை. அதனால் மார்க்ஸிய உடலில் காந்திய உயிர் கலத்தல் வேண்டுமென்று யான் நீண்ட காலமாகச் சொல்லி வருகின்றேன். காந்தியம் கலந்த மார்க்ஸியத்தையே எதிர்கால உலகம் ஏற்க முனையும்''

திரு.வி.க.வின் தெளிந்த கருத்து இது. மார்க்ஸியத்தை நன்கு அறிந்திருந்த அவர், வன்முறை தவிர்த்த மாற்றத்தைக் காந்திய வழியில் அடைந்திட விரும்பினார். தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து, கோரிக்கைகளை எய்திடும் பணியில் அயராது உழைத்திட்ட தமிழ்ப்பெரியார் வன்முறையில் சிறிதும் முனைந்ததில்லை. துப்பாக்கிச் சூட்டிற்கும் கொடும் அடக்குமுறைக்கும் தயாராகத் தன்னை ஆட்படுத்திக்கொண்டு, காந்திய வழியில் போராடினார். தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளை உணர்ந்து விழித்தெழச் செய்த பெருந்தகை, தொழிலாளர் வாழ்வு செழித்தாலன்றி உலகில் அமைதியும் செழுமையும் நிலைத்திடாது என்று நம்பினார். தமிழ்ச் சான்றோர் திரு.வி.க. விதைத்த தொழிற்சங்கம் என்னும் மரம், இன்று தழைத்து வளர்ந்துள்ளது. எங்கணும் தொழிற்சங்கத்தின் உரிமைக்குரல் எழுப்பப்படுகின்றது. சந்தனத்தில் மணம் உள்ளதுபோல்-யாழில் இசை எழுவது போல்-தொழிற்சங்க அமைப்பின் வரலாறு பேசப்படும்போது, அதைத் தோற்றுவித்த தமிழ்ப் பெருமகனாரின் தொண்டும் என்றும் நிலைபெற்றிருக்கும். வாழ்க - திரு.வி.க.வின் புகழ்!



# மருத்துவப் பல்கலைக் கழகம்

தமிழ்நாட்டில் மருத்துவப் பல்கலைக் கழகத்தைத் தொடங்குவதற்குரிய வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வதற்கு நிபுணர் குழு டாக்டர் ஏ. வேணுகோபால் அவர்கள் தலைமையில் 30.7.1982 அன்று அமைக்கப்பட்டது.

இந்த நிபுணர் குழுவின் அறிக்கையை டாக்டர் எம். நடராசன் அவர்கள் 19.5.1983 அன்று மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர் அவர்களிடம் வழங்கினார். அப்போது நிபுணர் குழுவினரும். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எச். வி. ஹண்டே அவர்களும் உடன் இருந்தனர்.

இந்த மருத்துவப் பல்கலைக் கழகம் சென்னை தரமணி பகுதியில் ரூ. 6 கோடி செலவில் தொடங்கப்பட இருக்கிறது. வேலூர் மருத்துவக் கல்லூரி உள்பட எல்லா மருத்துவக் கல்லூரிகளும் இந்தப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்படும். இதற்கு ஒவ்வொரு ஆண்டும் ஏற்படக்கூடிய செலவு ஏறத்தாழ ஒரு கோடி ருபாயாக இருக்கும்.

தமிழ்நாட்டில் மருத்துவக் கல்லூரிகள் வெவ்வேறாகவும், ஆராய்ச்சி நிறுவனங்கள் தனித்தனியாகவும், சுற்றுப்புறச் சூழ்நிலை பற்றிய ஆய்வுக்கான வாரியம் தனியாகவும், சுகாதார ஆய்வாளர்கள், செவிலியர்கள் பயிற்சிக்கான நிறுவனம் தனியாகவும் இயங்கி வருகின்றன. இவைகளை ஒருங்கிணைத்து செயல் படுத்துவதற்கும்,, வளரும் விஞ்ஞான காலத்துக்குத் தகுந்தாற்போல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், செயற்கை இருதயம், நுரையீரல், ரத்தச்சுத்திகரிப்பு இயந்திரம் ஆகியவற்றை உருவாக்குவதற்கானப் பொறி இயல் வல்லுநர்களைக் கொண்ட தொழில் அமைப்பு ஒன்று இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்தோடு சேர்ந்து செயல்படும். மருத்துவமனை பற்றிய நிர்வாகம், குடும்பக்கட்டுப்பாடு பற்றிய நிர்வாகம் ஆகியவற்றிற்குத் தனிப் பயிற்சிகள் கொடுக்கப்படும்.

இந்த நிபுணர் குழுவின் அறிக்கையை அரசு ஏற்றுக் கொண்டதும் இந்த மருத்துவப் பல்கலைக் கழகம் தொடங்கப்படும்.

— அ. ம. விநாயகம்



# கம்பம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் - சில தகவல்கள்

கம்பம் மற்றும் சின்னமனூர் நகராட்சிகளையும் கூடலூர், காமயக்கவுண்டன் பட்டி, புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி, உத்தமபாளையம் மற்றும் மார்கயன் கோட்டை பேரூராட்சிகளையும் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் 1960 ஆம் ஆண்டு முதல் செயலில் உள்ளது.

## தற்போதைய குடிநீர்த்திட்டம்

தற்போதைய குடிநீர்த்திட்டம் பெரியார் நதியை நீர் ஆதாரமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இந்நதியிலிருந்து, நீர் உந்தப்பட்டு, மெது மணல் வடிகட்டி ( Slow Sand Filter ) மூலம் சுத்திகரிக்கப்பட்டு, புவிஈர்ப்பு மூலம் ( Gravity ) 34 கி.மீ. நீளத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. குழாய்கள், நீர்த்தேக்கத்தொட்டிகள் மற்றும் பகிர்மானமுறை ஆகியவை மேற்கூறிய எட்டு நகரங்களுக்கும் தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளன. தற்போதைய தலைமைப் பணியிலிருந்து நாளொன்றுக்குக்கிடைக்கும் நீரின் அளவு 6 மில்லியன் லிட்டர் ஆகும்.

சின்னமனூர் நகராட்சிக்கென்று, தனியாக குடிநீர் அபிவிருத்தித் திட்டம், ரூ.50.50 இலட்சம் நிர்மாணச் செலவில் 17-8-1982-ல் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, திட்டவேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே அபிவிருத்தித் திட்டத்தில் சின்னமனூர் இடம் பெறவில்லை. மார்க்கயன் கோட்டைக்குத் தற்போது வழங்கப்படும் குடிநீரும் தொடர்ந்து வழங்கப்படும்.

## அபிவிருத்தித் திட்டத்திற்கான காரணங்கள்

தற்போதைய கூட்டுக் குடிநீர்த்திட்டம், கம்பம் மற்றும் கூடலூர் நகரங்களுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 45லிட்டர் என்ற கணக்கிலும், இதர நகரங்களுக்கு 25 லிட்டர் என்ற கணக்கிலும், 1996-ல் எதிர்பார்க்கப்படும் உச்சக்கட்ட மக்கட் தொகையாக 1.5 இலட்சத்திற்கு வடிவமைக்கப்பட்டது. ஆனால் தற்போதைய மக்கட் தொகை 1.5 இலட்சத்தைத் தாண்டி விட்டதால், தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மிகவும் அவசியமாகிறது.

## மக்கட்தொகையும், குடிநீர்த் தேவைகளும்

மேற்கூறிய நகரங்களுக்கு இடைக்கட்ட (1996) மற்றும் உச்சக்கட்ட(2011)நிலைகளில் எதிர்பார்க்கப்படும் மக்கட்தொகை முறையே 1,83,500 மற்றும் 2,45,000 ஆகும். நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்குக் சராசரியாக 50 முதல் 60 லிட்டர்வரை நீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி இந்த நகரங்களுக்கு இடைக்கட்ட (1996) மற்றும் உச்சக்கட்ட (2011) காலத்திற்குத் தேவையான மொத்த நீரின் அளவு நாளொன்றுக்கு முறையே 11 மில்லியன் லிட்டர் எனவும், 14 மில்லியன் லிட்டர் எனவும், கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது மார்கயன் கோட்டைக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் 0.137 மில்லியன் லிட்டர் நீரின் அளவு தொடர்ந்து வழங்கப்படும். எனவே, உச்சக்கட்டத்திற்கான மொத்த நீரின் அளவு,நாளொன்றுக்கு 14.263 மில்லியன் லிட்டர் ஆகும். தற்போதைய நீர் ஆதாரத்திலிருந்து நாளொன்றுக்குக் கிடைக்கும் 6 மில்லியன் லிட்டர் குடிநீர் தொடர்ந்து கிடைக்கும். எனவே, இடைக்கட்ட மற்றும் உச்சக்கட்ட காலங்களுக்குக் கூடுதலாகத் தேவைப்படும் நீரின் அளவு, நாளொன்றுக்கு முறையே 5. மில்லியன் லிட்டர் மற்றும் 8 மில்லியன் லிட்டர் ஆகும்.

ஒவ்வொரு நகரத்துக்குமான மக்கள் தொகை, மற்றும், நீர்த்தேவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.(அ)

## அபிவிருத்தித் திட்டத்தின் விளக்கம்

அதிகப்படியாகத் தேவைப்படும் குடிநீர் பெரியாற்றில் ( Lower Camp ) அருகில் இருந்து எடுக்கப்படுகின்றது. இத்தண்ணீர் புதிதாக அமைக்கப்பட இருக்கும் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்தம் செய்யப்பட்டு, புதிதாகப்போடப்படும் குழாய் மூலம் (நீளம் 21 கி.மீ.) கொண்டு வரப்பட்டு கூடலூர், கம்பம், காமயக்கவுண்டன்பட்டி, புதுப்பட்டி, அனுமந்தம்பட்டி ஆகிய நகரங்களுக்கு அதிகப்படியான தேவையைப் பூர்த்தி செய்யும். உத்தமபாளையம் நகருக்குத் தற்போது இருக்கும் குழாய்மூலம் (சின்னமனூருக்கு தனித்திட்டம் நடைபெறுவதால்) தேவையான குடிநீர் வழங்க வகை செய்யப்படும். மார்கயன் கோட்டைக்குத் தற்போது கொடுக்கும் நீரின் அளவு தொடர்ந்து வழங்கப்படும். இந்த நகரங்களுக்குத் தற்போது இருக்கும் நீர்நிலைத் தொட்டிகளின் அளவும் புதிதாக அமைக்கப்பட இருக்கும் மேல்நிலைத் தொட்டிகளின் விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (ஆ)

## மதிப்பீடு

இந்தக் கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கான நிர்மாணச்செலவு ரூ.366 இலட்சம் எனவும், ஆண்டுப் பராமரிப்புச் செலவு ரூ.6.30 இலட்சம் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. நபர் ஒருவருக்கு ஆகும் செலவு ரூ 272 என மதிப்பிடப்பட்டுள்ளது.

# இசைக் கருவிகளை உருவாக்கும் இந்திய அரசு நிறுவனம்

தமிழ்மொழி இயல் இசை நாடகம் என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இசை, உள்ளத்தை இசைவிப்பதால், அப்பெயர் பெற்றது.

இசை சங்கீதம் என்றும் சொல்லப்படுகிறது. கீதம், வாத்தியம், நிருத்யம் என்னும் மூன்றும் சேர்ந்ததுதான் சங்கீதம்.

தமிழ்மக்கள், மிகப் பழங் காலத்திலேயே இசையின் பெருமையை உணர்ந்திருந்தனர் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

அக்காலத்து மன்னர்களின் அவையில் இசைக்கலைஞர்களும் நாட்டியக் கலைஞர்களும் இடம் பெற்றிருந்தனர்.

பாண்டிய மன்னனின் அவைக்கு வடபுலத்து இசைக் கலைஞர் ஒருவர் வந்து, 'எனக்கு நிகராகப் பாடவல்லார் இங்கு உள்ளாரோ' என்று கேட்டதாகவும், போட்டிக்கு ஆளின்றிப் பாண்டியநாடு தவித்ததாகவும், சிவபெருமானே விறகுவெட்டி வடிவில் வந்து, வடபுலத்து இசைக் கலைஞன் தங்கியிருந்த மாளிகையின் திண்ணையில் அமர்ந்து பாடியதாகவும், அந்தப் பாடலைக் கேட்டு வடபுலக் கலைஞன் அச்சம் கொண்டு - சொல்லாமல் கொள்ளாமல் பாண்டிய நாட்டைவிட்டு ஓடி விட்டதாகவும் கூறும் திருவிளையாடற்புராணச்செய்தி இசையின் பெருமையை எடுத்துரைக்கிறது.

**தமிழ்ப்பித்தன்**

வாயால் பாடுவதுடன் இசைக் கருவிகளின் துணைக்கொண்டு தமிழ்ப்பெருமக்கள் இசையை வளர்த்திருக்கிறார்கள்.

தோல்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, எனப் பல்வகைக் கருவிகளை உருவாக்கிப் பயன் படுத்தியிருக்கிறார்கள்.

மத்தளம், முரசு போன்றவை தோல் கருவிகள்; நாதஸ்வரம், புல்லாங்குழல் போன்றவை துளைக் கருவிகள்; யாழ், வீணை போன்றவை நரம்புக் கருவிகள்.

ஒரு காலத்தில் தமிழகத்தில் சிறப்புப் பெற்றிருந்த யாழ், மறைந்து போயிற்று. அதன் இடத்தை வீணை பிடித்துக் கொண்டது.

இசைக் களத்தில் பல்வேறு கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. பொதுவாக இசை உணர்வு பெற்ற தனியார் பலர், இசைக் கருவிகளை உருவாக்கி வருகின்றனர். இந்தப்பணியில் இந்திய அரசும் ஈடுபட்டிருக்கிறது என்னும் உண்மை பலருக்கும் தெரியாத செய்தியாகும்.

இசைக்கருவி மேம்பாட்டு மையம் (Development Centre for Musical Instruments) என்னும் ஓர் அமைப்பை நிறுவி, புதிய புதிய இசைக் கருவிகளை உருவாக்கி வருகிறது. இந்திய அரசின் வணிகத்துறை அமைச்சகத்தைச் சேர்ந்த கைவினைப் பொருள்கள் வளர்ச்சி ஆணையரின் நிருவாகத்தின் கீழ் இயங்கிவரும் இம்மையத்தின் அலுவலகம், சென்னை மயிலாப்பூரில் முண்டகக் கண்ணி அம்மன் கோவில் தெருவில் உள்ளது. 1956ல் சென்னையில் நிறுவப்பட்டது இது. இந்திய நாடு முழுவதற்கும் இந்த ஒரே ஒரு நிறுவனம்தான் உள்ளது. இதற்கு சங்கீத வித்யாலயா என்ற பெயரும் உண்டு.



செம்மங்குடி சீனுவாச அய்யர், மற்றும் இசைப் பேரறிஞர் சிலர் இம்மையத்திற்கு வருகை புரிந்தபோது.

துவக்கத்தில் இசைப் பேரறிஞர் சாம்ப மூர்த்தி அவர்கள் இந்த மையத்தின் கௌரவ இயக்குநராகப் பணியாற்றியிருக்கிறார்.

பொதுவாக வாத்தியக் கருவிகளின் விலை அதிகமாக இருக்கிறது. அத்தகைய கருவிகளைக் குறைந்த விலையில் கொடுக்க வேண்டும். மிக எளிய முறையில் கருவிகளை உருவாக்க வேண்டும். அவை வெளியில் எடுத்துச் செல்வதற்கு இலகுவாக இருக்க வேண்டும். அத்துடன் அவை, பயன்பாட்டிற்குக் கொண்டுவரப் பட வேண்டும். இவைதான் இந்த மையத்தின் குறிக்கோள்கள் ஆகும்.

ம்ஸி சுருதி



சுருதி தந்தி



இதுவரை பத்துக்கு மேற்பட்ட புதிய இசைக்கருவிகளை உருவாக்கியுள்ள இம்மையம், பழைய இசைக் கருவிகள் 45 வகைக்குப் புதிய வடிவங்களைத் தந்துள்ளது.

வீணை என்னும் இசைக் கருவியில் உள்ள 'குடம்' எப்போதும் பலா மரத்தில்தான் செய்யப்பட்டு வருகிறது. தொழிலே புரட்சி உருவானது போல- இசைக்கருவிகள் தயாரிப்பிலும் புரட்சி தோன்றியுள்ளது. அதனால் தற்போது சிட்டிகா என்னும் ஒருவகை மரத்தால் வீணையின் குடத்தைச் செய்வதில் இந்த மையம் வெற்றி பெற்றிருக்கிறது. இதனால் வீணையின் விலை சரிபாதியாகக் குறைகிறது. அது மட்டுமல்ல - சிட்டிகா மரத்தில் செய்வதால் நாதத்திற்கு எந்த விதமான பேதமும் ஏற்பட வில்லை என்றும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

பாடகர்கள் சுதி கூட்டுவதற்காகப் பயன்படுத்திவரும் 'தம்புரா' என்னும் கருவி எப்போதும் மரத்தால் செய்யப்பட்டு வருகிறது. அத்துடன் கீழ்ப்பகுதியில் குடம் போன்ற அமைப்பும் இருக்கும். இந்தக் கருவியைப் புதிய வகையில் உருவாக்கியிருக்கிறது இம்மையம். முழுக்க முழுக்க மூங்கிலைக் கொண்டு தம்புராவை உருவாக்கியுள்ளது. இதற்கு வம்ஸி சுருதி என்று பெயர். முழுதும் மரத்தால் செய்யப்படும் தம்புரா வம்ஸி சுருதி தந்தி எனப் படுகிறது.

மேல்பாகம் மரத்தாலும், கீழ் பாகம் மூங்கிலாலும் செய்யப்படும் தம்புரா, சுருதி தந்தி எனப் படுகிறது.

இந்த வகை தம்புரா - எடுத்துச் செல்வதற்கு இலகுவாகவும் குறைந்த விலையில் உருவாக்கப் படக் கூடியதாகவும் திகழ்கின்றது.

பழக்கத்தில் உள்ள தம்புராவில் காணப்படும் குடம் இதில்



மையத்தின் கைவினைக் கலைஞர் சரஸ்வதி வீணையை இயக்கிக் காட்டுகிறார்.





மையத்தில் சேகரித்து வைக்கப் பெற்றுள்ள இசைக் கருவிகள்

இல்லையே என்று சிலர் கருதுகின்றனர். இந்தக் குடம் தம்புராவின் தந்திகளை மீட்டுகின்ற கையை வைப்பதற்கு நிலைக்களனாகப் பயன்படுகிறதேயன்றி வேறு எந்தவிதப் பயனும் இல்லை. இந்தப் புதிய வகை தம்புராவிலிருந்து எழும் நாதம், சுத்தமாகவே இருக்கிறது.

நாராயண வீணை என்னும் புதிய வீணை ஒன்றினை இம்மையம் உருவாக்கியுள்ளது. ஜப்பான் நாட்டில் உள்ள கோட்டா என்னும் இசைக்கருவியின் அமைப்பை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது இது.

இந்த இசைக் கருவிகள் குறித்து இசைக் கலைஞர்களுக்கு அறிமுகம் செய்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவராத்திரித் திருநாளின் போது சங்கீத வாத்யபூஜை கொண்டாடப்படுகிறது. புகழ் பெற்ற இசைக்கலைஞர்கள் இந்த விழாவில் பங்கேற்று உரையாற்றுகிறார்கள். இசை விருந்து வழங்குகிறார்கள். பொதுமக்களும் இந்த விழாவில் கலந்து கொண்டு இசையின் பெருமையையும் புதிய இசைக்கருவிகளின் அருமையையும் அறிந்து கொள்கிறார்கள்.

வழக்கமான பாதையை விட்டுச் சற்று மாற்றமான வழியில் சென்றால் யாரும் அதனை உடனே ஏற்றுக் கொள்வதில்லை. கண்டனக் கணைகளை முதலில் வீசுவர். பிறகு நாளாவட்டத்தில் இணக்கம் காட்டுவர். அதைப் போலத்தான் இந்த மையம் உருவாக்கியுள்ள வம்சி சுருதி தம்புரா முதலில் கண்டனத்திற்கு உட்பட்டது. பின்னர் எடுத்துச் செல்வதற்கு எளிதாக உள்ளது என்பதையும், இதிலிருந்து வரும் நாதம் சுத்தமாக இருக்கிறது என்பதையும் உணர்ந்த இசைக் கலைஞர்கள் இதனை ஏற்றுக் கொள்ள முன் வந்திருக்கிறார்கள்.

இந்த மையத்தில் 200க்குமேற்பட்ட இசைக்கருவிகள் சேகரித்து வைக்கப்பெற்றுள்ளன. அவ்வப்போது, பற்பல பொருட் காட்சிகளில் இம்மையத்தின் இசைக் கருவிகள் காட்சிக்கு வைக்கப் பெறுகின்றன. அண்மையில், சென்னை தேனாம்பேட்டையில் நடைபெற்ற இந்திய சமய கலாச் சாரக் கலை விழாவில் இந்த மையத்தின் இசைக் கருவிகள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப் பெற்றிருந்தன. *1981*ல் மதுரை மாநகரில் நடைபெற்ற 5-வது உலகத் தமிழ் மாநாட்டின் போதும் இந்த இசைக்கருவிகள் கண்காட்சியில் வைக்கப்பெற்று, வெளிமாநில-வெளிநாட்டுப்பேராளர்களுக்கு வியப்பை வழங்கியிருக்கின்றன.



திருமதி டி. கே. பட்டம்மாள் அவர்கள் வருகை புரிந்தபோது. (மையத்தின் இயக்குநரும் உடன் உள்ளார்.)

வெளிமாநிலங்களைச் சார்ந்த பம்பாய், ஐதராபாத், பாலக்காடு, செகந்திராபாத் ஆகிய நகரங்களிலும், தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலும் நடைபெறும் கண்காட்சிகளில் இந்த இசைக்கருவிகள் அவ்வப்போது இடம் பெற்றிருக்கின்றன.

''இசைக்கலை குறித்தும் இசைக்கருவிகள் குறித்தும் வெளியிடப் பெறும் எல்லா மொழி நூல்களையும் கொண்ட நூலகம் இந்த மையத்தில் உருவாக்கப்பட வேண்டும்.

''இசைக்கருவிகளின் தயாரிப்புக்குப் பல்வேறு மரங்களையும் பயன்படுத்த ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

''மேல்நாட்டு சங்கீதம், இந்துஸ்தானி சங்கீதம், கருநாடக சங்கீதம் போன்ற பல்வேறு சங்கீதத்திலும் பயன்படுத்தப்பெறும் இசைக் கருவ்கள அனைத்தும் சேகரிக்கப்பட்டு உலக அரும் பொருட் காட்சியகம் ஒன்று இம் மையத்தில் அமைக்கப்படவேண்டும்.

''தற்போது மயிலாப்பூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் இந்த மையத்தின் அலுவலகம் நகரின் மையப் பகுதியில் சொந்தக் கட்டடத்தில் இயங்க வேண்டும். அப்போது தான் வெளிநாட்டவரும் இந்த மையத்தின் பெருமையை உணர முடியும்.

''வாத்ய கலா என்னும் இசைச் சிறப்பிதழ் ஒன்றை வெளியிட வேண்டும்''

—இவ்வாறு இந்த மையத்தின் இயக்குநர் திரு லோகநாதசர்மா குறிப்பிடுகிறார்.

இவர் சிறந்த வாய்ப்பாட்டுக் கலைஞர். சித்தூர் சுப்ரமணிய பிள்ளை அவர்களின் மாணவரான இவர், பல்வேறு பரிசுகள பெற்றுள்ளார். இவரது தலைமையில் இயங்கும் இந்த மையம் இசைத் துறையின் வளர்ச்சிக்கும் இசைக் கருவிகளின் மேம்பாட்டிற்கும் சீரிய பணியை ஆற்றி வருகிறது.

இந்த மையம் புதுவகைக் கருவிகளை உருவாக்கும் நிலையமே தவிர, விற்பனை செய்யும் நிலையமல்ல. அதனால் இசைக்கருவிகள் தயாரிக்கும் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களால் உருவாக்கப்பெறும் புதிய இசைக்கருவிகளை எளிய விலையில் பொது மக்களுக்கு வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் வெற்றி பெற்றால் இசைக்கருவிகள் புதிது புதிதாக உருவாக்கப்படுவதுடன் இன்னிசை வளர்ச்சி பெறும் என்பதும் உறுதி.



## இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய பாசனத் திட்டங்கள்

### கோல்வார்ப்பட்டி நீர்த்தேக்கத்திட்டம்

கோல்வார்ப்பட்டி நீர்த்தேக்கம் இராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தூர் வட்டத்திலுள்ள கோல்வார்ப்பட்டி கிராமத்தின் அருகே அர்சுனா நதியின் குறுக்கே கட்டப்படவுள்ளது. முதல் போகத்தில் 2,000 ஏக்கர் புன்செய் நிலங்களும் இரண்டாம் போகத்தில் 4,500 ஏக்கர் புன்செய் நிலங்களும் 87 ஏக்கர் பாசன பற்றாக்குறை நிலங்களும் இத்திட்டத்தால் பயனடையும். அரசால் அங்கீகரிக்கப்பட்ட இத்திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 597 லட்சங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட மேட்டுப்பட்டி, நாகலாபுரம், கோசுகுண்டு, கீழகரிசல்குளம் ஆகிய கிராமங்கள் இத்திட்டத்தால் பயனடையும்.

### ஆனைக்குட்டம் நீர்த்தேக்கத்திட்டம்

ஆனைக்குட்டம் நீர்த்தேக்கத் திட்டம், விருதுநகர் தாலுகாவிலுள்ள ஆனைக்குட்டம் கிராமத்தின் குறுக்கே கட்டப்படவுள்ளது. இதன் அமைப்பிடமானது அர்சுனா நதியில் தற்போதுள்ள வடுகப்பட்டி படுக்கை அணைக்கும் கோல்வார்ப்பட்டி அணைக்கட்டிற்கும் இடையிலுள்ளது. இத்திட்டத்தினால் 4,500 ஏக்கர் புதிய புன்செய் நிலங்கள் பயனடையும்.

அரசால் அங்கீகரிக்கப்பட்ட இத்திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 276 லட்சங்களாகும். வறட்சியால் பாதிக்கப்பட்ட கீழ்திருத்தங்கல், முத்துலிங்கபுரம் ஆகிய கிராமங்கள் இத்திட்டத்தால் பயனடையும்.



# பாம்பு விஷயம்!

**பா**ம்புகள் வாழ்வது ஒருவகையில் நன்மைதான். பாம்பு விஷத்திலிருந்து அதற்கேற்ற மாற்று மருந்தைத் தயாரிக்கிறார்கள். ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பேர் பாம்புகளுக்குப் பலியாகும் இந் நாட்டில், பாம்புகளைச் சாகடிக்காமல் பாம்பு விஷத்தைச் சேகரிப்பது சிறந்ததுதான்.

பாம்பு விஷம் உலகில் அதிக விலைக்கு விற்கப்படும் பொருள்களில் ஒன்று. ஒரு கிராம் விஷத்துக்கு 18,000 ரூபாய் கிடைக்கிறது. ஆனால் பெண்களின் அழகுப் பையாக உருமாறும் பாம்புத் தோலின் மூலம் கிடைக்கும் பணமோ இந்தத் தொகையில் ஒரு சதவீதம் கூட இராது! இந்த வகையில் உயிருள்ள ஒரு பாம்பு அதில் அதன் எடையுள்ள தங்கத்தின் மதிப்புக்குச் சமமானது. இப்படி, தங்கத்தை விஷமாகத் தரும் பாம்புகளை இருளர்கள் இப்பொழுது கொல்லுவதில்லை.

பாம்புத் தோல் விற்று இருளர்கள் பிழைப்பு நடத்தி வந்தனர். சென்னையின் புறநகர்ப் பகுதிகளில் தோலுரிக்கப்பட்ட பாம்புகளினால் முன்னர் பெரு நாற்றம் வீசியது. பாம்புத் தோலுக்காகப் பாம்பைக் கொல்லுவதால் பாம்பு இனமே அழிந்துவிடுமே என்ற அச்சம் ஏற்பட்டது.

1976ஆம் ஆண்டில் பாம்புத் தோல் வியாபாரத்தை அரசு தடை செய்தது. இதனால் பாம்புகள் பிழைக்க வழி ஏற்பட்டது. ஆனால், இருளர்களின் வாழ்வில் சிக்கல் ஏற்பட்டது.

நினைவுக்குத் தெரிந்த காலம் தொட்டு இருளர்கள் பாம்பு பிடிக்கும் தொழில் நடத்தி வருபவர்கள். திடீரென்று பாம்புத் தோல் விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டதால், அவர்கள் உயிர் வாழ ஒரு தொழில் இல்லாத நிலை ஏற்பட்டது.

இருளர்கள் வாழ்க்கைக்கு ஒரு வழிகாண வேண்டிய தேவை ஏற்பட்டது. பாம்பு பிடிக்கும் இருளர் கூட்டுறவுச் சங்கம் உதயமாயிற்று. இச்சங்கம் 1978ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

சென்னை - செங்கல்பட்டில் வசிக்கும் 52 இருளர்கள் குடும்பங்களுக்குப் பாம்பு பிடிக்க உரிமம் வழங்கப்பட்டது. எல்லா வகையான பாம்புகளையும் பிடித்து அவர்கள் சங்கத்தின் ஆய்வகத்திற்குக் கொண்டு வருகிறார்கள்.

ஒரு கண்ணாடி விரியன் பாம்புக்கு 20 ரூபாய், கட்டு விரியனுக்கு 15 ரூபாயும், நல்ல பாம்புக்கு 15 ரூபாயும் வழங்கப்படுகிறது.

சங்கத்திற்குப் பாம்புகளைப் பிடித்துக் கொண்டு வரும் இருளர்கள் அதிலிருந்து விஷத்தை எடுக்கிறார்கள். 10 நல்ல பாம்புகளிலிருந்து ஒரு கிராம் விஷம் கிடைக்கிறது.100 கட்டுவிரியனிலிருந்து விஷம் எடுத்தால்தான் ஒருகிராம் விஷப்பொடி கிடைக்கும்.



ஒரு கிராம் கட்டுவிரியன் பாம்பின் விஷப்பொடியின் விலை எவ்வளவு தெரியுமா? ரூ. 1,500. இதேபோல, கண்ணாடிவிரியனின் ஒரு கிராம் விஷப் பொடியின் விலை ரூ.500. நல்ல பாம்பின் ஒரு கிராம் விஷப் பொடியின் விலை ரூ. 400. கடலில் உள்ள பாம்புகளின் விஷத்திற்குத்தான் அதிக விலை,ஒரு கிராமின் விலை ரூ 18,000!

இருளர்கள் ஒரு மாதத்திற்கு மேல் பாம்பை அடைத்து வைத்திருப்பதில்லை. வாரத்திற்கு ஒரு முறை விஷம் எடுக்கிறார்கள். ஒவ்வொரு முறை விஷம் எடுத்த பிறகும், பாம்பிற்கு குளூகோஸ் கொடுக்கப்படுகிறது. ஒரு மாதத் திற்குப்பின், பாம்பு சாதாரணமாக வாழக்கூடிய இடங்களில் அதனைக் கொண்டுபோய் சுதந்திரமாக விட்டுவிடுகிறார்கள்.

## இனிக்குந் தேனாகும்!

—புலவர் வெற்றியழகன்

சிறுசிறு துளிகள் பலசேர்ந்தே
சிறந்த பெரிய ஆறாகும்!
சிறுசிறு குடிகள் பலசேர்ந்தே
சிறந்த பெரிய ஊராகும்!
சிறுசிறு துளிதாம் மகரந்தம்
சேர்ந்தால் இனிக்குந் தேனாகும்!
சிறுசிறு ஏடுகள் பலசேர்ந்தே
சிறந்த அரிய நூலாகும்!
சிறுசிறு இழைகள் பலசேர்ந்தே
சிறந்த ஆடை உருவாகும்!
சிறுசிறு மலர்கள் பலசேர்ந்தே
சிறந்த மாலை உருவாகும்!
சிறுசிறு கற்கள் பலசேர்ந்தே
சிறந்த மாளிகை உருவாகும்!
சிறுகச் சிறுகச் சேர்த்தாலே
சிறப்பாய் வாழ்வோம் உலகினிலே!



## விளையும் பயிர்

**ப**ள்ளிப் பருவத்திலேயே மாணவ மணிகள், பல துறைகளிலும் சிறந்து விளங்கிடப் பார்க்கிறோம். அந்த வகையில் தஞ்சாவூர் கல்யாணசுந்தரம் மேல்நிலைப் பள்ளியில், கணிதப் பிரிவில், பன்னிரண்டாம் வகுப்புப் பயிலும் ச. பிரபாகரன் கதை, கட்டுரை எழுதுவதில் ஆர்வம் காட்டுகிறார்.

பல இதழ்களில் கவிதை கட்டுரை எழுதியுள்ள இம் மாணவர், குடும்ப நலத்துறை நடத்திய கட்டுரைப் போட்டியில் முதல் பரிசும் பெற்றுள்ளார்.

கிரிக்கெட், கூடைப்பந்து, கால்பந்து விளையாட்டில் ஈடுபாடு கொண்டுள்ள இவர், 'எழுத்தாளன்' என்னும் கையெழுத்துப் பத்திரிகையையும் நடத்தி வருகிறார்.



## மின் தட்டச்சு

**இ**த்தாலியத் தொழில் நிறுவனமான ஒலிவெட்டியின் தொழில் நுட்ப ஒத்துழைப்போடு, கிண்டி ஹிந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் தயாரித்து வரும் மின்தட்டச்சு இப்போது விற்பனைக்குவந்துள்ளது. இந்தத் தட்டச்சில் பாலிதீன் ரிப்பன் இருப்பதால் எழுத்துக்கள் தெளிவாக இருக்கும்.

இந்தத் தட்டச்சு, பெரிய நிறுவனங்கள் தங்கள் மதிப்பு வாய்ந்த கடிதப் போக்குவரத்தை நடத்திடப் பயன்படுத்துகின்ற ஒன்றாக இருந்து வருகின்றது. இதில் ஒரே நேரத்தில் 12 தெளிவான பிரதிகள் எடுக்கலாம்.

இவை ஒவ்வொன்றின் விலை ரூ.17,500 இதில் இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் இத்தாலியிலிருந்து வரவழைத்த இதன் 70 சதவிகித பாகங்களுக்காகச் செலுத்திய சுங்கவரி மட்டும் 12 ஆயிரம் ரூபாயாகும். படிப்படியாக இந்த இறக்குமதி பாகங்களை கிண்டியிலே தயாரிப்பதன் மூலம் இன்னும் 3 ஆண்டுக் காலத்தில் இந்தச் சுங்கவரிச் சுமையை இல்லாமல் செய்து ரூ. 5,500 விலையில் இந்தத் தட்டச்சு கிடைக்கும்.

ஆண்டுக்கு 10,000 மின் தட்டச்சு தயாரிக்கவும் திட்டம் உள்ளது.

— அ. மருது

**ப**ணிவும், பண்பும்வாய்க்கப்பெற்ற அறிவியல் மேதை ஜான் பார்டீன், அமெரிக்காவிலுள்ள இல்லினாய்ஸ் பல்கலைக் கழகத்தில் பௌதிகப் பேராசிரியராய்ப் பொறுப்புடனும், சிறப்புடனும் பணியாற்றிய மேதை ஆவார். இவர் தாம் செய்த அரிய ஆராய்ச்சிகளில் பிழையே ஏற்பட்டது கிடையாது என்பது இவருக்குள்ள தனிச் சிறப்பாகும்.

டிரான்சிஸ்டர் என்னும் அற்புத மான கருவியைக் கண்டுபிடித்ததற்காக இவருக்கு பௌதிகத்திற்குரிய நோபல் பரிசு அளிக்கப்பட்டது. மீண்டும் பௌதிகத்திற்கான நோபல் பரிசை இவர் பெற்றார். ஒரே துறையில் இரண்டு பரிசுகளைப் பெற்ற ஒப்பற்ற விஞ்ஞானி இவர் ஒருவரே. 1972-ஆம் ஆண்டில் இந்த இரண்டாவது பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. இந்த இரண்டாவது பரிசு எதற்காக வழங்கப்பட்டது தெரியுமா? 'சூப்பர் கண்டக்டிவிட்டி' என்ற வியத்தகு மின்விசை அரும் நிகழ்ச்சியில் அவர் நடத்திய ஆய்வுக்காக இது வழங்கப்பட்டது.

ஆதாரம்: 'புதிய பூமி உருவாகிறது'
தகவல்: வ. இரவிச்சந்திரன்.

# பிணி தீர்க்கும் சுண்டைக்காய்

ஏ. ஆர். என். துரைராஜ்,
ஆர்.ஐ.எம்.பி.

இது பெரும்பாலும் மலைகளில் பயிராகும் செடி. பொதுவாகவே, சுண்டைக்காய் பற்றி நம் தமிழ்த் திருநாட்டில் தெரியாதவர்கள் இருக்க முடியாது. மூதாதையர்கள் தங்கள் இல்லங்களில் சுண்டைக்காயை மோரில் கலந்து உலர்த்திப் பதம் பண்ணிப் பானையில் சேகரித்து வைப்பதுண்டு. உடலுக்கு ஆரோக்கியம் தருவதுடன், அதே தருணத்தில் நல்ல மருந்தாகவும் செயல்படுகிறது. இந்த நவநாகரிகமான காலத்தில் சுண்டைக்காயை மக்கள் மறந்துவிட்டார்கள் போலும்! சுண்டைக்காய் என்றால் என்ன என்று கேள்வி கேட்கும் அளவுக்கு நாகரிகம் முற்றிவிட்டது. நோயும் முற்றிவிட்டது. எனவே, சுண்டைக்காயில் பிணி தீர்க்கும் சிறப்பம்சங்களே ஏராளமாக உள்ளன. இயற்கைநமக்குஅளித்த இந்தச் சுண்டைக்காய், பிணியிலிருந்து நம்மை விடுவிக்கும் சஞ்சீவி ஆகும்.

### தீரும் நோய்கள்

திக்குற்றத்தாலுண்டான ஏப்பம், வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், வயிற்றில் பூச்சிகள், மார்ச்சளி, ஆஸ்துமா, காசநோய், செரியாமை, செரியாக்கழிச்சல், பெருமூச்சு, தலைசுற்றல், பித்தம், வாந்தி.

### உபயோகமும் செய்முறையும்

சுண்டைக்காயைப் பாதியாக நறுக்கிப் பசுமோரில் ஊறப் போட்டு உலர்த்தி எடுத்துக் கொள்ளவேண்டும். பிறகு சிறிது நேரம் உலர்ந்த பின் மீண்டும் மோரில் ஊற வைத்து உலர்த்த இப்படியாக 5 அல்லது 6 தடவையாவது செய்யும் பட்சத்தில் நன்றாக இருக்கும். இச்சுண்டைக்காயை நல்லெண்ணெய்யில் வறுத்து இரவுச் சாப்பாட்டில் சாப்பிடலாம். தவிர, சுண்டைவற்றல்குழம்பு உடலுக்கு ஆரோக்கியம் தரவல்லது. மேலும் சுண்டைக்காயைத் தொடர்ந்து சமையலில் உபயோகித்துவரின் காசம், மார்புச் சளி, பெருமூச்சு, தலைசுற்றல், ஆஸ்துமா ஆகியவை நீங்கும்.

சுண்டைக்காயைச் சிற்றாமணக்கெண்ணெய் விட்டு வறுத்து பிறகு மிளகு, சீரகம், வெந்தயம், உப்பு, கறிவேப்பிலை ஆகியவற்றையும் சிறிது வறுத்துக் கூட்டிப் பொடித்துச் சாதத்துடன் கலந்து உண்ணின், மந்தம், மூலம், செரியாமை ஆகியவை நீங்கும்.

சுண்டைவேர், தும்பைவேர், இலுப்பைப் பிண்ணாக்கு இம்மூன்றையும் சம எடையாக எடுத்துப் பொடி செய்து வைத்துக்கொண்டு இப்பொடியை முகர, முப்பிணி தீரும்.

இதன் வேரைக் குடிநீர்செய்து வலி, ஜுரத்துக்கு மூதாதையர்கள் கொடுப்பதுண்டு.

சுண்டையின்காய மந் துறையிட னயின்றிட
மண்டிய பயித்திய வலியெலா மகலுமே!

பொருள்:

சுண்டைக்காய் வற்றலைப் புசித்துவரின் திக்குற்றத்தாலுண்டான ஏப்பம், வயிறூதல், வயிற்றுவலி முதலியன நீங்கும்.
(தே.கா.)

நெஞ்சின் கபம்போம் நிறை கிருமி நோயும்போம்
விஞ்சுவா தத்தின் விளைவும்போம் - வஞ்சியரே!
வாயைக் கசப்பிக்கும் மாமலையில் உள்ள சுண்டைக்
காயைச் சுவைப்பவர்க்குக் காண்
(அ.கு.)

பொருள்:

நெஞ்சிற்றங்கிய கபம், நுண்புழுவால் உண்டான நோய்கள், வலிநோய்கள், வளிப்பெருக்கு ஆகியவை போகும்.

பித்த அரோசகம்போம் பேராப் புழுச்சாகும்
உற்ற கிராணியறும் உட்பசியாம் - சத்தியமாய்ப்
பண்டைக்குத ஆமம் பற்றுமிங்கி யாரையுந்தான்
சுண்டைக்காய் வற்றலுண்ணச் சொல்
(அ.கு.)

பொருள்:

உலர்ந்த சுண்டைக்காயைப் போதுமான அளவு நன்றாய்ப் புளித்த மோரும், உப்புங் கலந்து காயவைத்து உலர்த்தி எடுத்துக்கொண்டு இதைப் பதார்த்தமாக வற்றல் செய்து சாப்பிடின் நலம் பயக்கும்.

குறிப்பு:

வாரத்திற்கு இரண்டு நாட்கள் சுண்டை வற்றல் குழம்பும், மற்ற நாட்களில் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப எண்ணெய்யில் பொரித்த சுண்டைக்காயும் சாப்பிட்டு வந்தால், உடல், நலமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.





# சென்னைக்கு கிருஷ்ணா வரும் வழி

ஆ. மோகனகிருஷ்ணன்
தலைமைப் பொறியாளர் (பாசனம்)

கிருஷ்ணா நதி தென் இந்தியாவின் இரண்டாவது மிகப் பெரிய நதியாகும். இந்நதி மஹாராஷ்டிர மாநிலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைகளைச் சேர்ந்த மகாதேவ் மலைத் தொடரில் உள்ள மகாபலேஷ்வரில் தோன்றி, மஹாராஷ்ட்ரம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களின் வழியாக சுமார் 1400 கி.மீ. தூரம் ஓடி, மசூலிப்பட்டினம் அருகே வங்காள விரிகுடாவில் கலக்கிறது. இதன் முக்கிய உபநதிகள் கடப்பிரபா, மலப்பிரபா, பீமா, துங்கபத்திரா, மூசி முதலியவையாகும்.
கிருஷ்ணா நதி தென்மேற்குப் பருவ மழையால் பயனடைகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைகளையொட்டியுள்ள பெருமழைப் பிரதேசம் இந்நதியின் வடி நிலப் பரப்பின் மேற்கு எல்லையாக அமைகிறது. இப்பகுதியில் மழை ஆண்டுக்கு 3046 மி.மீ. இல் இருந்து 1016 மி.மீ. வரை பெய்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து கிழக்கே செல்லச்செல்ல மழையின் அளவு 600 மி.மீக்கு குறைந்து மீண்டும் கடலோரப்பகுதியில் சுமார் 940 மி.மீக்கு உயர்கிறது.
கிருஷ்ணா வடி நிலப் பரப்பு மொத்தம் 258,948 சதுர கிலோமீட்டரில் ஆந்திரத்தில் 76,252 சதுர கிலோமீட்டரும், கர்நாடகத்தில் 113,271 சதுர கிலோமீட்டரும், மஹாராஷ்டிரத்தில் 69,425 சதுர கிலோமீட்டரும் அடங்கியுள்ளன. இந்நதியின் நீர்வளம். வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு நிபுணர்களால் கணக்கிடப்பட்டுள்ளது. கிருஷ்ணா நதிப்படுகை மாநிலங்களின் நதி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இந்திய அரசால் 1969-ல் நியமிக்கப்பட்ட நடுவர் மன்றம், இந்நதியில் 75 சதவிகித நம்பிக்கை அடிப்படையில் ஆண்டொன்றுக்குக் கிடைக்கும் நீரளவு சுமார் 2060 டி.எம்.சி. (ஆயிரம் மில்லியன் கன அடி) என் நிர்ணயித்துள்ளது. இது காவிரியில் கிடைக்கும் நீரளவைப் போல் சுமார் மூன்று மடங்காகும். இந் நடுவர் மன்றம் தன்னுடைய தீர்ப்பில், ஆந்திரத்துக்கு 800 டி.எம்.சி.யும் கர்நாடகத்திற்கு 700 டி.எம்.சி.யும் மகாராஷ்டிரத்திற்கு 560 டி.எம்.சி.யும் ஒதுக்கீடு செய்துள்ளது. இப்படுகையில் அப்பொழுது பயன்படுத்தப்பட்ட நீரளவு 1693 டி.எம்.சி. என்றும் குறிப்பிட்டுள்ளது. இம்மூன்று மாநிலங்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நீரை முழுவதும் பயன்படுத்துவதற்காக வேண்டிய திட்டங்களைத் தீட்டி அவற்றை நிறைவேற்ற தொடங்கி விட்டன.

கிருஷ்ணா படுகையில் மிகப் பழைய காலத்திலிருந்தே நீர்ப் பாசனம் நடந்து வருகிறது. இவ்வகையில் கிருஷ்ணா டெல்டா பாசனம் மிக முக்கியமானது 1855ம் ஆண்டில் கட்டப்பட்ட விஜயவாடா அணை பல கால்வாய்கள் மற்றும் கிளைக் கால்வாய்கள் மூலம் ஆற்றின் இரு பக்கங்களிலும் உள்ள 5,56,440 ஹெக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதுடன் படகுப் போக்கு வரத்துக்கும் வழி செய்தது. 1957ல் இந்த அணை தற்போதுள்ள பிரகாசம் கதவணையாக மாற்றி அமைக்கப்பட்டது.

கிருஷ்ணா படுகையில் இதை அடுத்து முக்கிய திட்டம்1866ல் கட்டி முடிக்கப்பட்ட கர்நூல்-கடப்பா கால்வாய் ஆகும். இக் கால்வாய் துங்கபத்திரா நதியில் உள்ள ஒரு அணைக்கட்டின் வலது பக்கத்தில் தொடங்கி. கர்நூல் கடப்பா மாவட்டங்களில் 39510 ஹெக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கிறது.

நம்நாடு சுதந்திரமடைந்த பின்னர் இந்நதியில் பல பெரிய நீர்த் தேக்கங்கள் கட்டப்பட்டன. துங்கபத்திரா நீர்த் தேக்கத்திட்டம் துங்கபத்திரா உப நதியில் 1956ல் பழைய ஹைதராபாத் மற்றும்சென்னை மாகாணங்களால் சேர்ந்து கட்டப்பட்டதாகும். இந்நீர்தேக்கத்தின் மொத்த கொள்ளளவு 133 டிஎம்சி இது 97,620 ஹெக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கிறது.

பிரகாசம் அணைக்கு மேல் சுமார் 80கி.மீ. தூரத்தில் நால்கொண்டா மாவட்டத்தில் 125 மீட்டர் (409அடி) உயரமுள்ள நாகார்ஜுனசாகர் எனப்படும் பிரம்மாண்டமான கல்லணை 1969ல் கட்டப்பட்டது.

இந்நீர் தேக்கத்தின் கொள்ளளவு 11558மில்லியன் கனமீட்டர் (408டிஎம்சி) இது மேட்டூர் நீர்த்தேக்கத்தை பேபல் சுமார் 4½மடங்காகும். இந்தியாவின் மிகப் பெரிய நீர்த்தேக்கமான இது உலகத்திலேயே 3வது மிகப்பெரிய நீர்தேக்கமாகும். இதன் இரு பக்கங்களிலும் உள்ள கால்வாய்கள் மூலம் திட்ட முடிவில் பாசன வசதி பெறக்கூடிய பரப்பு சுமார் 1.21 மில்லியன் ஹெக்டேர் ஆகும்.

நாகார்ஜுனசாகர் அணைக்கு மேல் சுமார் 100கி.மீ.தூரத்தில் இவ்வணையில் நீர்ப்பரப்பின் முடிவில் ஸ்ரீசைலம் அணை கட்டப்பட்டுள்ளது. இது

தொடககத்தில் முதற் கட்டத்தில் 110மெகாவாட் திறமுள்ள நான்கு அலகுகளும், இரண்டாம் கட்டத்தில் 110மெகாவாட் திறமுள்ள மூன்று அலகுகளும் கொண்ட ஒரு நீர்மின் திட்டமாக உருவாக்கப்பட்டது. இத்தேக்கத்தின் மொத்த கொள்ளளவு 308 டிஎம்சி இது மேட்டூர் நீர்தேக்கத்தின்கொள்ளளவை விட மூன்று மடங்கிற்கும் கூடுதலாகும். இவ்வணை மிக ஆழமான மலை இடுக்குப் பகுதியில் கட்டப்பட்டுள்ளதால் அணையின் மேல் மட்டநீளம் 512 மீட்டர் (1680அடி) தான். ஆழமான அடித்தளத்தில் இருந்து இதன் உயரம்143 மீட்டர் (470அடி). வழிதோந்டியின் 12 திறப்புகள் 18.3 மீட்டர் (60அடி)நீளமும் 16.76 மீட்டர் (55அடி) உயரமுள்ள சுழற் கதவுகள் கொண்டவை. இதன்மூலம் செலுத்தக் கூடிய அதிகபட்ச வெள்ள அளவு சுமார் 37400 கியூமெக். (13,20000 கியூசெக்) கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் நிறைவு பெறும் போது, இத்தேக்கத்திலிருந்து தான் கிருஷ்ணா நீர் சென்னைக்கு கொண்டு வரப்படும்.

பெண்ணாறு தமிழகத்தில் உள்ள தென்பெண்ணையாற்றை போல் வடகிழக்குப் பருவமழையினால் தான் பயன்பெறுகிறது. கர்நாடகத்தில் நந்திதுர்க்கத்திற்கு வடகிழக்கில் சென்னை கேசவமலையிலிருந்து தான் பெண்ணாறும், தென்பெண்ணையாறும் உற்பத்தியாகின்றன. ஜெயமங்கலி, குந்தேரு, சாகிலேரு, பாபக்னி, செய்யேறு ஆகியவை பெண்ணாற்றின் சில உபநதிகளாகும். இதன் வடிநிலப் பரப்பு 55213 சதுர கி.மீ.ஆகஇருந்தும்,இதில் கிடைக்கும் நீரளவு250டி.எம்.சி. தான். ஏனெனில் வடிநில பரப்பு முழுதுமே மிகக் குறைந்தமழை பெறும் வறண்ட பிரதேசம். வடிநிலப் பரப்பின் கிழக்குப் பகுதியில் உள்ள நெல்லூரில் ஆந்திர சாரசரி மழையளவு சுமார் 968 மி.மீட்டர். இது மேற்குப் பகுதியில் 508 மி.மீட்டர் அளவுக்கு குறைந்து விடுகிறது.

இந்நதியில் அமைக்கப்பட்டுள்ள நெல்லூர் மற்றும் சங்கம் அணைக்கட்டுகளும் அவற்றின் கீழ்உள்ள கால்வாய்கள் மற்றும் குளங்களுமேமிகத் தொன்மையான பாசன அமைப்பாகும். இவை இந்நதியின் கழிமுகப் பகுதியில் சுமார் 1 லட்சம் ஹெக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கின்றன.

நெல்லூரின் மேற்கே சுமார் 100கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சோமசீலாவில், பெண்ணாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டப்பட்டு வருகிறது. இவ்வணையின் முதற்கட்டப் பணிகள் 1984ல் முடிவுறத்திட்டமிடப்பட்டுள்ளது. முக்கியமாக, பாசனத்திற்காக அமைக்கப்படும் இந்நீர்த்தேக்கத்தில் இருந்து முதற் கட்டத்தில் ஆத்மகூர், ராப்பூர் கவாலி, நெல்லூர் வட்டங்களில் 32,700 ஹெக்டேர் (80800ஏக்கர்) நிலங்களுக்குப் பாசனம் அளிக்கப்படும்.

கிருஷ்ணா நதியைப் பெண்ணாற்றுடன் இணைத்து அந்நீரைத் தெற்கே கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டென ஒரு நூற்றாண்டிற்கு மேலாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது. தென்னிந்தியாவில் பாசனம் மற்றும் நீர்வழிப் போக்கு வரத்து திட்டங்களின் முன்னோடியான ஸர். ஆர்தர். காட்டன் அவர்களும், அவருக்குப் பின் வந்த கர்னல் எல்லிஸ் அவர்களும், இந்த சாத்தியக் கூறுகளை ஆராய்ந்துள்ளார்கள்.

பெண்ணாற்றுக்கும் கிருஷ்ணாவுக்கும் இடைப்பட்ட மேட்டுப்பகுதி மிட்டகண்டலா அருகே மிகக் குறுகலாக இருப்பதைக் கண்டு பல்வேறு பொறியாளர்கள் இந்த மேட்டினை வெட்டி கிருஷ்ணா நதிநீரை பெண்ணாற்றிற்குக் கொண்டு வருவது பற்றி ஆலோசித்து வந்தார்கள். 1951–ல் சென்னை மாகாண அரசால் ஆய்வு செய்து தயாரிக்கப்பட்ட கிருஷ்ணா– பெண்ணாறு திட்டத்தில், இம்மேட்டினை இவ்விடத்தில் வெட்டி, இருநதிகளையும் இணைத்து, பெண்ணாற்றில் ஒரு பெரிய நீர்த்தேக்கத்தை அமைத்து, தென் ஆற்காடு மாவட்டம் வரைகால்வாய்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. சுமார் 14-57இலட்சம் ஹெக்டேர் (36 லட்சம் ஏக்கர்) நிலங்களுக்குப் பாசனமும், 250 மெகாவாட் மின்உற்பத்தித் திறனும் அளிப்பதாய் இருந்த இத்திட்டம் மாநிலங்களின் சீரமைப்புக்கு பின் கைவிடப்பட்டது.

15.2.76 அன்று ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம், ஆகிய மூன்று மாநிலங்களும் கிருஷ்ணா நீரில் தமது பங்கில் இருந்து தலா 5டி.எம்.சி. நீரை சென்னைக்குடிநீர்த் தேவைக்காக வழங்க ஒப்புக் கொண்டதாக மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்கள் அளித்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அறிவிப்பும் இக்குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற 18.4.83ல் ஹைதராபாத்தில் தமிழ்க மற்றும் ஆந்திர முதல்வர்கள் கையொப்பமிட்ட சிறப்பு வாய்ந்த ஒப்பந்தமும் தான் உண்மையில் கிருஷ்ணா நீர் சென்னைக்கு வர வழி செய்து உள்ளன.

சென்னை நகருக்கு கிருஷ்ணா நீர் கொண்டு வரும் திட்டத்திற்காக ஆந்திர மாநில எல்லைக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகளின் விவரங்கள் கீழ் வருமாறு:–

1) ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்தின் நீர்ப்பிடிப்புகுதிர்வாயில் பொத்திரெட்டிப்பாடு என்னுமிடத்தில் ஒரு தலைமதகு கட்டப்பட்டுள்ளது. இத்தலைமதகு 315.75 கியூமெக் (11.150 கியூசெக்) நீரை செலுத்தத் தக்க வகையில் 10மீட்டர் × 8.57 மீட்டர் அளவுடைய நான்கு கண்களைக் கொண்டது. நீர்த்தேக்கத்திலிருந்து தலைமதகு வரை 3.4 கிலோ மீட்டர் நீளமும் 315.75 கியூமெக் (11.150 கியூசெக்) கொள்ளளவுமுள்ள ஒரு இணைப்புக் கால்வாய் வெட்டப்பட்டுள்ளது மிட்ட கொண்டலா மேட்டுப் பகுதியில் வெட்டப்பட வேண்டிய பிரதான கால்வாய் 16.338 கிலோமீட்டர் 315.75கியூமெக் (11150 கியூசெக்) கொள்ளளவு உடையதாக இருக்கும். இக்கால்வாயின் அதிகபட்ச ஆழம்சுமார் 30மீட்டர். இந்தக் கால்வாயின் தென் கோடியில் பனகசர்லா என்னுமிடத்தில் ஒரு ரெகுலேட்டர் கட்டப்படும். பனகசர்லா ரெகுலேட்டரில் ஸ்ரீசைலம் வலதுபுற கால்வாய்க்கு நீர் வழங்க ஒருதிறப்பும் ஸ்ரீசைலம் இடதுபுற கால்வாய்க்கு நீர்வழங்க மற்றொரு திறப்பும் உபரி வெள்ளப் போக்கினைத் தேவையான பொழுது பெண்ணாற்றின் உபநதியான குந்தேரு ஆற்றுக்குச் செலுத்த இடையில் ஒரு திறப்பும் ஆக மூன்று திறப்புகளும், இத்திறப்புகளைக் கட்டுப்படுத்தக் கதவுகளும் இருக்கும். ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்தில் முழு நீர் மட்டம் + 885.00 அடி குறைந்தபட்ச நீர்மட்டம்854.00அடி. பொத்திரெட்டுபாடுவில் உள்ள தலைமதகின் அடி மட்டம் 810அடி. பனகசர்லா ரெகுலேட்டரில் இடதுபுற கால்வாய்க்கான திறப்பின் அடி மட்டம் 833.00 அடி.

2) பனகசர்லா ரெகுலேட்டரிலிருந்து இடதுபுறக் கால்வாய் சுமார் 140 கிலோ மீட்டர் நீளத்திற்கு வெட்டப்படும். இந்தக் கால்வாயின் போக்கில் வெலுகோடு என்னுமிடத்தில் ஒரு நீர்தேக்கம் அமைக்கப்படும். இந்தக் கால்வாயில் 115வது கிலோ மீட்டரில் சாகிலேரு பள்ளத்தாக்கில் உள்ள நிலங்களில் பாசனத்திற்காக இடது புறத்தில் ஒருகிளை பிரியும் இப்பள்ளத்தாக்கில் பிரம்மம்காரி மடம் என்னுமிடத்தில் மற்றொரு நீர்த்தேக்கம் அமைக்கப்படும். ஸ்ரீசைலத்திற்கும் சோமசிலாவிற்குமிடையே பெண்ணாறு வடிநிலப்பரப்பில் கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு கர்நூல் கடப்பை மாவட்டங்களில் பாசன வசதியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு சுமார் 1.11 லட்சம் ஹெக்டேர் இப்பகுதியில் பாசனத்திற்கு உபயோகிக்கக்கூடிய நீரின் அளவு 29டி.எம்.சி. ஆகும். சென்னைக் குடிநீருக்குத்தேவையான 15 டி.எம்.சி நீரையும் இக்கால்வாய் கொண்டு வரும்.

3) சின்னமுக்கப்பள்ளி என்னுமிடத்திற்கு அருகே ஸ்ரீசைலம் இடது புறக்கால்வாயின் இறுதியில் சென்னைக் குடிநீர்க் கால்வாய் பிரியும். இப்பிரிவில் அமையும் ரெகுலேட்டர் 1500கியூசெக் நீரை செலுத்தும் திறனுடையதாக இருக்கும். இந்த ரெகுலேட்டரிலிருந்து பெண்ணாறு வரை சென்னைக் குடிநீருக்கான தனிக்கால்வாய் வெட்டப்படும். ஜூலை முதல் அக்டோபர் வரை இக்கால்வாயில் நீர் கொண்டு வரப்படும்.

4) சோமசிலாவில் பெண்ணாற்றின் குறுக்கே கட்டப்படும் சோமசிலா நீர்த்தேக்கத்தின் முழு நீர்மட்டம் முதல் கட்டத்தில் + 285.00 அடியாகும். இரண்டாம் கட்டத்தில் வழிந்தோடியின் மீது (SPILL-WAY) 45அடி உயர கதவுகள் அமைப்பதன்மூலம் முழுநீர் மட்டம் + 330.00அடியாக உயர்த்தப்படும். இரண்டாவது கட்டத்தில் இந்த நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 16.4டி.எம்.சியில் இருந்து 74. டி.எம்.சி.யாக உயரும். இரண்டாவது கட்டத்தில் கூடுதலாக புஞ்சைப் பாசனம் பெறக்கூடிய நிலங்களின் பரப்பு 0.47லட்சம் ஹெக்டேர் ஆகும். கிருஷ்ணா நதிநீரைப் பெண்ணாற்றிலிருந்து தெற்கே திருப்புவதற்கு இந்த முழுநீர் மட்ட உயர்வு அவசியமாகிறது.

5) சோமசிலா நீர்த்தேக்கத்திலிருந்து கண்டலேரு பள்ளத்தாக்கிற்கு 283 கியூமெக் (10000 கியூசெக்) கொள்ளளவுடைய கால்வாய் 38கிலோ மீட்டர் நீளத்திற்கு வெட்டப்படும். இக்கால்வாய் கிருஷ்ணா நதிநீரைச் சென்னைக்குக் கொண்டுவருவதற்கும் பெண்ணாற்றின் உபரி வெள்ளப் பெருக்கினைக் கண்டலேருக்குத் திருப்பி விடுவதற்கும் உதவும். சோமசீலா நீர்த்தேக்கத்தில் இருந்து பிரியும்இக்கால்வாயின் அடி மட்டம் ஆரம்பத்தில் + 79.25 மீட்டர் (260.00அடி)

6) கண்டலேரு பள்ளத்தாக்கில் பெண்ணாற்றின் உபரி வெள்ளப்பெருக்கினை சேமித்து வைக்க 54டி.எம்.சிகொள்ளளவு கொண்ட ஒரு நீர்த்தேக்கம் அமைக்கப்படும். இந்த நீர்த்தேக்கத்திலிருந்து தான் ஆந்திர மாநிலத்தில் சித்தூர், நெல்லூர் மாவட்டங்களில் 1.21 லட்சம் ஹெக்டேர் (3.00 லட்சம் ஏக்கர்) நிலங்களுக்கு பெண்ணாற்று நீரைக்கொண்டு பாசன வசதி செய்து தர திட்டமிடப்பட்டுள்ளது. கிருஷ்ணா நதியிலிருந்து ஜூலை முதல் அக்டோபர் வரை நான்கு மாதங்களில் கொண்டுவரப்படும் நீரை 1000 கியூசெக் விகிதத்தில் எட்டு மாத காலத்தில் சென்னைக்கு கொண்டுவர வேண்டியுள்ளதால் இந்நீர்த்தேக்கத்தில் தமிழ் நாட்டிற்காக 5டி.எம்.சி. கொள்ளளவு இடம் ஒதுக்கி வைக்கப்படும். கண்டலேரு நீர்த்தேக்கத்தின் முழுநீர் மட்டம் + 269.00 அடி. குறைந்த பட்ச நீர்மட்டம் + 201.00 அடி.

7) கண்டலேரு நீர்த்தேக்கத்திலிருந்து பூண்டி நீர்த்தேக்கம் வரை ஒரு வாய்க்கால் வெட்டப்படும். தமிழக எல்லை வரை இக்கால்வாயின் நீளம் 152 கிலோ மீட்டர் ஆகும்.இக்கால்வாய் தலைப்பில் 4000 கியூசெக் கொண்டு செல்லும் திறனுடையதாகவும் தமிழக எல்லைக்கு வரும் போது 1000 கியூசெக் திறனுடையதாக படிப்படியாக குறைந்து வரும். இக்கால்வாயின் முழு நீர்மட்டம் கண்டலேருவில் + 199.00அடி தமிழக எல்லையில் 149.11அடி.

இதைத் தொடர்ந்து தமிழக எல்லைக்குள் செய்யப்படவிருக்கும் வேலைகளின் விவரம் கீழ் வருமாறு:

1) கண்டலேரு–பூண்டி கால்வாய் தமிழக எல்லையிலிருந்து பூண்டி நீர்தேக்கம் வரை 1000 கியூசெக் கொள்ளளவுடன் தொடரப்படும். இக்கால்வாயின் நீளம் 25 கிலோ மீட்டர்.

2) பூண்டி நீர்த்தேக்கம், புழலேரி, செம்பரம்பாக்கம் ஏரி ஆகியவற்றின் முழுநீர் மட்டம் இரண்டு அடி உயர்த்தப்படும் இதனால் கிடைக்கும் கூடுதல் கொள்ளளவு 1.68 டி.எம்.சி.

3) பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்கு ஒரு இணைப்புக் கால்வாயும் இதிலிருந்துபுழலேரிக்கு ஒரு பிரிவுகால்வாயும் வெட்டப்படும். இதனால் கிருஷ்ணாநீரை இறுதியில் வட பகுதியில் ஒன்றும் தென் பகுதியில் ஒன்றுமாக அமைந்துள்ள புழலேரி செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கங்கள் மூலம் நகருக்கு வழங்க இயலும்.

4) கொரட்டலையாற்றில் பூண்டி நீர்த்தேக்கத்திற்கு மேற்புறத்தில் ராமஞ்சேரி அருகே ஒருபுதிய நீர்த்தேக்கமும்,பூண்டி நீர்த்தேக்கத்திற்குக் கீழ் திருக்கண்டலம் அருகே மற்றொரு புதிய நீர்த்தேக்கமும் பின்னர் அமைக்கப்படும். இதனால் தமிழக எல்லைக்குள் மேலும் 2.18 டி.எம்.சி. கூடுதல் கொள்ளவு கிடைக்கும்.

5) நகர்ப் பகுதியிலும் பெருநகர்ப் பகுதியிலும் குடிநீரைத் தூய்மைப் படுத்தி வழங்குவதற்கான அமைப்பை மேம்படுத்தல், விரிவாக்குதல் மற்றும் கழிவுநீரகற்றும் அமைப்பை விரிவாக்குதல் ஆகிய பணிகளும் இத்திட்டத்தில் அடங்கும்.

கிருஷ்ணா நதிநீர் மேற்கூறிய வண்ணம் சென்னை நகருக்கு வரும் போது சென்னைப் பெருநகர்ப் பகுதி முழுவதிலும் கிடைக்கக் கூடிய குடிநீர்அளவு கணிசமாக உயர்வதற்கான வாய்ப்பு நிச்சயமாக உள்ளது. கி.பி. 2002 ஆண்டுவாக்கில் எதிர்பார்க்கப் படும் மக்கள் தொகைக்கும் தினசரி நீரளவு நபரொன்றுக்கு தற்போதைய 67லிட்டரிலிருந்து 145லிட்டராக உயர்ந்திருக்கும். தேவைக்குப் போதுமான நீர் தவறாது நம் நீர்த்தேக்கங்களுக்குக் கிடைக்கப் போவதால் நாம் தற்போது அனுபவிக்கும் குடிநீர் பஞ்சம் இனி ஏற்படாது என உறுதியாக நம்பலாம்.



# வீரத்திருமகன் வாஞ்சிநாதன்




## ரகமி

ஆங்கிலேய ஆட்சியிலிருந்து நம் இந்தியத் திருநாட்டை விடுவிக்க நாடெங்கும் பலபோராட்ட வீரர்கள் தோன்றினர். இவர்கள் நிகழ்த்திய போராட்டங்கள் சாமான்யமன்று. ஆங்கிலேயரின் ஆட்சியையே கிடுகிடுக்கச் செய்துவிட்டன. வீரர்களின் பெயர்களும், அவர்களின் போராட்ட பங்குகளும் வரலாற்றில் இடம்பெற்றன. இப்படிப்பட்ட வீரர்களில் தமிழ்நாட்டின் வரலாற்றில் செங்கோட்டை வாஞ்சி ஒருவராவார்.

தமிழ் மண்ணிலே பிறந்து ஆங்கிலேயர்களை ஜென்ம விரோதியாக்கிக் கொண்டு இதன் முடிவாக 1911 ஜூன் 17ந் தேதி சனிக்கிழமை காலை 10-45 மணிக்கு, மணியாச்சி ரயில்வே ஜங்க்ஷனில் திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் துரையை செங்கோட்டை வாஞ்சி தன்னிடமிருந்த பிஸ்டலினால் சுட்டுக் கொன்று, அடுத்த சில விநாடிகளில் அதே பிஸ்டலினால் தன்னையும் சுட்டுக்கொண்டு வீர மரணம் அடைந்தான்! இந்தச் சம்பவம்73 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது..

திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டையின் ஒரு பகுதியான அம்பிகாபுரம் தெற்கு மாடத் தெருவில் சுமார் 1886ல் ரகுபதி ஐயர் குப்பச்சி என்ற ருக்மணி அம்மாள் தம்பதிக்ளுக்கு மகனாகப் பிறந்தவர்தான் வாஞ்சி. தந்தை ரகுபதி ஐயர் கேரள மாநிலம் ஆரியங்காவு கோவிலிலும், பின்னர் செங்கோட்டை கோவிலிலும் மணியம் வேலை பார்த்தவர். பெற்றோர்களால் இவருக்கு இடப்பெற்ற பெயர் சங்கரன் என்கிற சங்கர நாராயணன். ஆனால் குடும்பத்தில் எல்லோரும் செல்லமாக 'வாஞ்சி' என்றே அழைத்து வந்தனர். வாஞ்சியுடன் 4 சகோதரிகளும், ஒரு சகோதரனும் பிறந்தனர். அவர்கள்— மூத்தவள் கோமதியம்மாள், அடுத்தது வாஞ்சி,மூன்றாவதுசின்னப்பெண் பின்னர் கிருஷ்ணம்மாள், ராமலட்சுமி, கடைசியாக கோபால கிருஷ்ணன் என்ற தம்பியுமாவர்.

வாஞ்சி நடுத்தர உயரம், சாதாரண மாநிறம், தலையில் அடர்த்தியான கட்டுக் குடுமி, அது பார்வைக்குப் ''பெங்காலி குடுமி'' யைப் போல இருக்கும். வாஞ்சி, செங்கோட்டையில் இங்கிலீஸ் மிடில் பள்ளியில் படித்து வந்தார். அச்சமயம் வாஞ்சியின் அண்டை வீட்டுக்காரர்களான நண்பர்கள் ஜெகந்நாதன், பிச்சுமணி, மகாதேவன், ஹரிஹரன் இவர்களுடன் பள்ளிக்குச் செல்வது முதல், ஆற்றில் ஸ்நானம் செய்வதுவரையில்இணைபிரியாதவர்கள். பள்ளிப் படிப்பு முடிந்ததும் வாஞ்சி திருவனந்தபுரத்திலுள்ள ''மூலம் திருநாள் மகாராஜா கல்லூரியில்''பி.ஏ. வகுப்பு வரை படித்தவர். அப்போது வாஞ்சிக்கு வயது சுமார் 23. முன்னீர் பள்ளம் சீதாராமய்யரின் புதல்வியான பொன்னம்மாளுக்கும் வாஞ்சிக்கும் திருமணம் நடந்தது. கல்லூரிப் படிப்பை விட்டதும் வாஞ்சி புனலூர் காட்டிலாகாவில் கே. பத்மநாப பிள்ளையிடம் கார்டாக வேலை பார்த்து வந்தார்.வாஞ்சி தனதுவேலையை மிக்கத் திறமையுடன் செய்து வந்தார்.காட்டிலிருந்துவெட்டிவரும் மரங்களை கை நகத்தினால் கிள்ளி முகர்ந்து பார்த்து அவை என்னென்ன மரமென்று சொல்வதில் நிபுணர். பின்னர் மரங்களைப் பரிசோதனை செய்து வெளியூர்களுக்கு ரயில் மூலம் சரிபார்த்து அனுப்புவது, மற்றும் 'டிரிப்ஷீட் கணக்குகள் எழுதிவைப்பதுதான் இவரது வேலை. வாஞ்சிக்கு தமிழ், மலையாளம், ஆங்கிலம் இம்மூன்று பாஷைகளும் நன்றாக பேசவும் எழுதவும் தெரியும்.

உத்தியோகத்தில் இருந்த வாஞ்சி ரஜா எடுத்துக்கொண்டு அடிக்கடி புதுச்சேரிக்குச் சென்று அங்கு தங்கியிருந்த தீவிரவாதிகளுடன் தொடர்பு கொண்டிருந்தான். இதனால்வாஞ்சியின்மனம் பாரதநாடு விடுதலை அடையப் பாடுபடுவதில் முனைந்தது. இதற்காகத்தன்னுடையவேலையையும் ராஜீநாமா செய்து விட்டு, புரட்சிப்பாதையில் இறங்கினார். இது கண்ட இவருடைய தகப்பனார் ''வாஞ்சி! சர்க்கார் வேலையை விட்டுவிட்டால் எப்படிப் பிழைப்பாய்? உலகில் மற்ற பிள்ளைகளைப் போல பார்த்து நல்லதாக நடந்து கொள்ள வேண்டாமா?'' என்று கேட்டதற்கு வாஞ்சி, ''எனக்கெல்லாம் தெரியும். சர்க்கார் வேலையை விட்டு விட்டால் என்னால் வேறு வேலை செய்து பிழைக்கமுடியும். உமது வேலையைப்பார்த்துக்கொண்டுபோம்'' என்று கூறிவிட்டு தனது நண்பர்களுடன் அடிக்கடி வெளியே செல்வதுண்டு. பல வெளியூர் நண்பர்களிடமிருந்து வாஞ்சியின் பெயருக்குக் கடிதங்களும் ராஜத்துவேஷமான பத்திரிகைகளும் வருவதுண்டு.

> **ஜூன் 17-ஆம் நாள்**
>
> இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக பங்கேற்று தன்னுயிரை ஈந்த வீர இளைஞன் வாஞ்சிநாதனின் நினைவு நாள். அந்தத் தியாகத் திருமகனின் நினைவாக இக்கட்டுரையை வெளியிடுகின்றோம்



வாஞ்சியின் மனைவி பொன்னம்மாள் பிரசவத்திற்காகத் திருவனந்தபுரத்திலுள்ள தாயார் வீட்டிற்குச் சென்றவளுக்கு, 1911 ஏப்ரல் மாதம் கடைசியில் ஒரு பெண் குழந்தை பிறந்து இறந்துவிட்டது. இதுவிஷயம் வாஞ்சிக்குத் தகவல் நன்கு தெரிந்திருந்தும் அவர் தன் மனைவியைப் பார்க்க விரும்பாமல் ஏதோ எதிர்கால பெரிய திட்டத்தைப் பற்றிப் பெரும் சிந்தனையில் ஈடுபட்டிருந்தார்.

செங்கோட்டையில் கஸ்பா. எஸ்.வி.அழகப்பபிள்ளை (12வது குற்றவாளி) வீட்டிலிருந்த வாசகசாலைக்கு வாஞ்சி பாரதமாதா கைகளில் விலங்குகள் பூட்டியது போல வரையப்பட்ட ஒரு பெரிய படத்தை அளித்து, 'அன்னையின் கரங்களில் ஆங்கிலேயர்களால் பூட்டப்பட்ட அடிமையென்னும் விலங்கு என்றைக்குதான் அறுபடுமோ? நாம் அடிமையிலிருந்து விடுதலை பெற நாமெல்லோரும் நாட்டிற்காக உயிரையும் விடத் தயாராக இருக்க வேண்டும். வாசக சாலைக்கு வரும் நம்மவர்களின் கண்களிலும் மனதிலும் பாரதமாதாவுக்கு ஏற்பட்டுள்ள அவமானத்தைக் கண்டு ரத்தம் கொதிக்கட்டும்' என்று கூறினாராம்.

வாஞ்சியும், ஒட்டப்பிடாரம் மாடசாமியும் நெருங்கிய நண்பர்கள். வாஞ்சி ஒட்டப்பிடாரம் சென்றால் அங்கு மாடசாமியின் வீட்டில்தான் தங்குவது வழக்கம். ஒரு சமயம் சென்னையிலிருந்து அங்கு வந்திருந்த 'பாரத் சேண்டில்' வியாபாரி வீரபாகுவிடம் வாஞ்சி சுதேசித் தயாரிப்பான மெழுகுவத்தியைப் பற்றிப் பெருமையாகப் பாராட்டியதோடு,'எப்போதும் நாம் நமது சுதேசித்தயாரிப்பாலபொருள்களையே வாங்க வேண்டும், அப்போதுதான் மக்களும் சுதேசியைப் பற்றி நன்கு அறிய முடியும், அன்னிய நாட்டுப் பொருள்களை வாங்காமல் புறக்கணிக்க வேண்டும்' என்றார். அடுத்து திருநெல்வேலியில்வாஞ்சி ஜர்னலிஸ்ட் நண்பரான சச்சிதானந்தம் பிள்ளையைச் சந்தித்தார். பிள்ளையோ மேனாட்டுப் பாணியில் சூட்டும் கோட்டும் போட்டிருப்பதைக் கண்ட அவர், ''நாமெல்லாம் பிறந்த இந்த பாரத மண்ணில், எதற்காக மேநாட்டான் மாதிரி உடை உடுத்துகிறாய்? இனிமேல் நம் பாரதநாகரிகப் பண்பைக் கடைப் பிடியுங்கள்; அதன்படி இந்திய பாணியில் ஆடையை அணியுங்கள்!'' என்றார்.

புதுவையில் வாஞ்சி, வ.வே.சு. ஐயர் வீட்டில் தங்குவதுண்டு. அங்கு கவி பாரதியாரும் வந்து சந்திப்பதுண்டு. இம் மூவரும் கலந்து பேசுகையில் சுதேசியத்தில் பற்றுவளர நாட்டு மக்களுக்கு எந்தெந்த வழிகளில் சேவை செய்ய வேண்டும், ஆங்கிலேய ஆட்சியை அப்புறப்படுத்தி பாரததேசம் சுதந்திரம் அடைவதற்கான திட்டங்களைப் பற்றி விவாதிப்பதுண்டு. செங்கோட்டையில், சாவடி அருணாசலம் பிள்ளை வீடு, மற்றும் அழகப்பபிள்ளை வீட்டில் நடந்த பாரத மாதா சங்கத்தாரின் ரகசியப் பிரமாண மீட்டிங்குகளில் தமிழ்நாட்டுப் பெரும்:;ரட்சிவீரர் எருக்கூர் நீலகண்ட பிரமச்சாரி, தென்காசி 'மடத்துக்கடை, சிதம்பரம் பிள்ளை, மற்றும் பல தீவிரவாதிகளும் கலந்து கொண்டனர். அப்போது வாஞ்சி, ஐரோப்பியர்களைத் தடியால் அடித்துத் துரத்தியோ, அல்லது வங்காளிகள் செய்தது போல வெடி குண்டுகளை வீசியடித்தும்கான்றோ நாம் சுயராஜ்ஜியம் அடையவேண்டும். நம்மவர்கள் நடத்திவந்த 'சுதேசி ஸ்டீம்நாவிகேஷன் கம்பெனி' இந்தியர்கள் நடத்தக் கூடாதென்று தடுத்து, இதற்காக ஈடுபட்ட வ.உ. சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணியசிவா இருவரையும் சிறையிலடைத்தனர். இந்த இரண்டிற்கும் அப்போது தூத்துக்குடியில் சப் கலெக்டராக இருந்து, பின்னர் பிரமோஷனில் திருநெல்வேலிக்கு கலெக்டராக வந்திருக்கும் ஆஷ்துரைதான் காரணம்! இவனைக் கொன்று தீர்த்து விட வேண்டுமென்று முடிவு செய்தனர். பிறகு வாஞ்சி, மாடசாமி, சங்கரகிருஷ்ணன், ஆறுமுகம்பிள்ளை, மடத்துக்கடை சிதம்பரம்பிள்ளை, சோமசுந்தரம்பிள்ளை இவர்கள் ஒன்று கூடி ரகசியக்கூட்டத்தில் எடுத்த முடிவுப்படி கலெக்டர் ஆஷை வாஞ்சிதான் கொல்லவேண்டுமென்று ஏற்பாடுகள் செய்தனர்.



எருக்கூர்

எஸ். நீலகண்ட பிரம்மச்சாரி

திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் கொலை வழக்கில் முதற் குற்றவாளி

1911 ஜூன் 17ந்தேதி காலை 10-45 மணி;மணியாச்சி ரயில்வே ஸ்டேஷனில் திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் துரை தனது மனைவியுடன் முதல் வகுப்புப் பெட்டியில் உட்கார்ந்திருந்தார். வாஞ்சியும், கூட அவனுடைய நண்பன் சங்கர. கிருஷ்ணனும் பிளாட்பாரத்தில் பேசிக் கொண்டே வந்தனர். வாஞ்சி பஞ்ச கச்சம் கட்டியிருந்த வேஷ்டியைத் தூக்கி மடித்துத் தார்ப்பாச்சிக் கட்டிக் கொண்டிருந்தான். உள்ளே ஒரு ஷர்ட்டும், அதற்குமேல் பச்சை நிற கோட்டும் போட்டுக் கொண்டிருந்தான். கோட்டின் மேல் குறுக்காக அங்கவஸ்திரத்தைக் கட்டிக் கொண்டிருந்தான். தலையை நன்றாக வாரி முடித்துக் கொண்ட குடுமியுடன் முன் தலை, முகமெல்லாம் சவரம் செய்யாமல் முடி வளர்ந்திருந்தது. கூட வந்த சங்கர கிருஷ்ணன் மலையாளத்தார் கட்டும்பாணியில் வேஷ்டியை மடித்துத் தூக்கிக்கொண்டு உடம்பில் சட்டை போடாமல் பூணூல் தெரியும் படியாக தோளில் சரிகை அங்கவஸ்திரம் போட்டிருந்தான். இவனுக்கும் குடுமியும் முன்பக்கம் சவரம் செய்து கொள்ளாமல் முடிவளர்ந்திருந்தது.

முதல் வகுப்புப் பெட்டியில் கலெக்டர் ஆஷ் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான் வாஞ்சி. கூட வந்த நண்பன் முதல் வகுப்புப் பெட்டிக்கு அடுத்த 'செர்வண்ட்ஸ் கம்பார்ட்மெண்டிற்கு அருகில் நின்று கொண்டிருந்தான். வாஞ்சி மறைத்து வைத்திருந்த பிஸ்டலை எடுத்து ஆஷுக்கு நேராக நீட்டி 'டுமீல்', 'டுமீல்'



ஆர். கோபாலகிருஷ்ணய்யர்

வாஞ்சியின் சகோதரர்



## வாஞ்சிநாதனுக்குச் சிலை

வாஞ்சிநாதனுக்குச் சிலை வடிக்கப்பட்டு வருகிறது. அவரது சரியான உருவம் உள்ள போட்டோ படம் கிடைக்கவில்லை. அவரது நெருங்கிய உறவினர்களுடன் தொடர்பு கொண்டு, வாஞ்சிநாதன் இப்படித்தான் இருந்திருப்பார் என்று கருதி அதற்கேற்ப ஒரு சிலை அமைக்கப்பட்டு வருகிறது. விரைவில் அந்தச் சிலை செங்கோட்டையில் அமைக்கப்படும்.

*[மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் செங்கோட்டை விசுவநாதபுரம் பிரம்பு மூங்கில் தொழிலாளர் கூட்டுறவு சங்கப் புதிய கட்டட அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து]*

என்று சுட்டுவிட்டான். குண்டடி பட்ட கலெக்டர் ஆஷ் தன் தலையிலிருந்துதொப்பியைக் கழற்றி வாஞ்சியின் மீது வீசியடித்ததும் வண்டியிலேயே உயிர் பிரிந்து சாய்ந்துவிட்டார். துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டதும் சங்கரகிருஷ்ணன் வேறுபக்கமாக ஓடிவிட்டான்.

தன்னைப்பிடிக்க பிளாட்பாரத்திலிருந்த ஜனங்கள் கூச்சலோடு ஓடிவருவதைக் கண்ட வாஞ்சி, தன் கையிலிருந்த பிஸ்டலை ஜனங்கள் பக்கமாகத் திருப்பிக் காட்டிப் பயமுறுத்திவிட்டு, ஆகாயத்தை நோக்கி இரண்டு, மூன்று முறைகள் சுட்டுக் கொண்டே ஓடிச்சென்று, அங்கிருந்த கழிவறைக்குள் சென்று அதே பிஸ்டலினால் தன்னையும் சுட்டுக் கொண்டு வீர மரணம் அடைந்தான்.

வாஞ்சியின் பிரேத விசாரணைக்காக போலீஸ் இன்ஸ்பெக்டர் சுப்பிரமணியப்பிள்ளை வாஞ்சி உடலிலிருந்த கோட்டையும், ஷர்ட்டையும் கழற்றினார். ஷர்ட் ஜேபியில் ஒரு துண்டுக் காகிதத்தில், கலெக்டர் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்றதற்கான காரணமும், சென்னை ராஜதானியில் 3,000க்கு மேற்பட்ட தீவிரவாதிகள் தன்னுடன் இருப்பதாகக் குறிப்பிட்டு கடைசியில் ஆர். சங்கரய்யர்(எ) வாஞ்சி செங்கோட்டை என்று கையெழுத்துப் போட்டிருந்தாராம். அதோடு ஒரு ரயில் டிக்கட் திருநெல்வேலியிலிருந்து மணியாச்சிக்கு வாங்கப்பட்டிருந்ததும் கிடைத்தது. இது வாஞ்சியால் வாங்கப்பட்ட டிக்கட்டாகும்!

வாஞ்சியின் சட்டைப்பையில் கிடைத்த தகவலிருந்துவாஞ்சி செங்கோட்டையைச் சேர்ந்தவனென்று போலீசுக்கு ஊர்ஜிதமானதும் உடனே அவனது வீட்டையும் சோதனையிட்டனர். அச்சமயம் வாஞ்சியின் வீட்டில் அவனுடைய தகப்பனார் ரகுபதி ஐயரும், கூட சுமார் 12 வயதுள்ள ஒரு சிறுவனுமிருந்தனர் (அச்சிறுவன்தான் வாஞ்சியின் தம்பி கோபாலகிருஷ்ணய்யர். தற்சமயம் திருநெல்வேலியில் வாழ்ந்து வரும் அவருக்கு வயது 85 நடக்கிறது.) வாஞ்சியின் வீட்டுச்சோதனையில் அகப்பட்ட கடிதங்கள், ராஜத்துவேஷமான பத்திரிகைகள் மற்றும் இதர குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு பலரை கைது செய்தனர். திருநெல்வேலிக் கலெக்டர் ஆஷ் கொலை வழக்கில் 14 பேர்கள் மீது குற்றம் சாட்டப்பெற்று சென்னை ஹைகோர்ட்டில் ஸ்பெஷல் டிரைபுனல் கோர்ட்டில்மூன்று ஜட்ஜுகளால் விசாரிக்கப்பட்டு, தீர்ப்பில் 9 பேருக்குச் சிறை தண்டனையும், 5 பேர்களுக்கு விடுதலையும் அளித்தனர்.

நம்நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட செங்கோட்டை வாஞ்சி தன் உயிரை நாட்டுக்காக அர்ப்பணித்துவிட்டு, சரித்திரத்தில் இடம்பெற்றுவிட்டான். அவனது நினைவு நாளில் அஞ்சலி செலுத்துவோமாக!

### தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம்.



வனத்துறையிடமிருந்து 1976இல் சுமார் 945 எக்டேர் தேயிலைத் தோட்டத்தை எடுத்துக் கொண்ட தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், படிப்படியாக அமைந்த திட்டத்தின் கீழ், கூடுதல் பரப்பில், மேற்கொண்டும் தேயிலைப் பயிராக்கியுள்ளது. தற்போது, 2,394 எக்டேர் பரப்பில் தேயிலைபயிராகிறது. 1982—83இல் இக்கழகம், தேயிலைத் தூள் முதலிவற்றை விற்பனை செய்வதன் மூலம், ரூ. 495 லட்சம் வருமானம் ஈட்டும். வருவாய் தொடர்பான செலவுகள் சுமார் ரூ. 566 லட்சமாகும். 1983இல் சுமார் 100 எக்டேர் பரப்பில், தேயிலை பயிரிடப்படும் தேயிலைத் தோட்டங்களில் 1982-83 ஆம் ஆண்டிற்கான தேயிலைத் தளிர் உற்பத்தி 11,524 டன் ஆகும். "தற்போது ஆண்டொன்றிற்கு சராசரியாக 27 லட்சம் கிலோகிராம் தேயிலைத் தூள் தயார் செய்யப்படுகிறது.



# கூட்டுறவு கிராம அங்காடி விற்பனையாளர்


**எஸ். செய்யது கவுஸ்,**

தனி அலுவலர், திருச்சி மாவட்ட கூட்டுறவு ஒன்றியம்.


கூட்டுறவு இயக்கம் அது ஒரு மாபெரும் இயக்கம். மக்களின், மக்களுக்காக மக்களால் செயல்படும் இயக்கமாகும். ஆரம்பத்தில் இந்திய விவசாயிகள் பெரும் இன்னலுக்கு இலக்காயிருந்தனர். தங்களின் விவசாயத் தேவையை முன்னிட்டு அதிக வட்டிக்குப் பெரும் பணக்காரர்களிடம் கடனைப் பெற்றனர். ஆனால் திருப்பிச் செலுத்தும் போது தங்களின் விளை பொருட்களைக்குறைந்த விலையில் விற்கக் கூடிய நிலைமை. இதனால் விளைபொருட்களின் பெரும் பகுதியை இழக்க நேரிட்டது. இந்த நிலை நீடித்த காரணத்தினால் விவசாயிகளைப் பெரும் பணக்காரர்களின் பிடியிலிருந்து விடுவிக்கக் கூட்டுறவு இயக்கம் 1904ம் ஆண்டு இந்தியாவில் ஆரம்பமாகியது.

முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டதுதான் கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள். அனைத்துக் கிராமங்களுக்கும் கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளைப் பெற வாய்ப்புகள் கிட்டின. எனவே கூட்டுறவுச் சங்கங்கள்தான் அனைத்துக் கிராமங்களையும் ஏற்று விவசாயிகளுக்கு நிதி வசதி அளித்ததென்றால் அது மிகையாகாது. இந்த அடிப்படையில் தான் கிராமங்களில் உள்ள ஏழை, எளிய மக்கள் தங்களின் அன்றாடத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை நியாய விலையில் தரமான பொருட்கள்ள தங்களின் ஊரிலேயே பெற்றுக் கொள்ளும் வசதியை செய்துகொடுக்கும் முயற்சியால்தான் கிராம அங்காடித் திட்டம் இன்று ஒவ்வொரு கிராமத்திலும் தமிழக அரசு கூட்டுறவு கிராம அங்காடித் திட்டத்தை அமல்படுத்தியது.

நுகர்வோர் கூட்டுறவு அமலுக்கு வருவதற்கு முன்பு இந்தியாவில் உள்ள கிராமங்களில் நுகர்பொருட்களைத் தனியார் வியாபாரிகளே முழு அளவில் விநியோகம் செய்து வந்தனர். இதனால் தனியார் வியாபாரிகள் கொள்ளை லாபம் திரட்டி வந்தனர். கிராமங்களிலும் நகரங்களிலும் நுகர்வோர் திட்டத்தை கூட்டுறவுக் கடைகள் மூலம் விரிவுபடுத்தி நுகர்வுப்பொருட்களை நியாயமான விலையில் தரமானதாகவும், தூய்மையாகவும் வழங்குதலே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத் திட்டம் தற்சமயம் தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் தலைமைச் சங்கங்கள், இணைப்புச் சங்கங்கள், கிராம கூட்டுறவு விவசாய சேவைச் சங்கங்களின் மூலம் 12,000 கிராம அங்காடிகளில் செயல்பட்டு வருகின்றன. இந்தக்கடைகளின் மூலம் பொது மக்களுக்கு முழுநிறைவு தரும் வண்ணம் விற்பனை செய்வது சிறப்பாகும். நல்லவிதமாக விற்பனை செய்வது சாதாரணமானது அல்ல. விற்பனை செய்வது ஒரு கலையாகும். கிராம அங்காடிகளின்விற்பனையாளர் அனைவரும் விற்பனைக் கலையைத் தெரிந்து கொள்ளுவது சிறந்தது. விற்பனையாளர் தினமும் பல் வகைப்பட்ட வாடிக்கையாளர்களைச் சந்திக்கக்கூடிய நிலையில் உள்ளனர்; அதிகம் பேசக் கூடியவர், பேசாதவர், சந்தேகப்படுபவர், உணர்ச்சி வசப்படுபவர் இப்படிப் பல வகைப்பட்டவர்கள். இவர்களையெல்லாம் திருப்தி செய்வது என்றால் விற்பனையாளர்களுக்குப் பொறுமையும் அனுபவமும் தேவையாகும். செய்கின்ற தொழிலே தெய்வம், அதில் திறமைதான் நமது செல்வம் என்ற எண்ணம் வேண்டும். செய்கின்ற தொழிலை நல்ல முறையில் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் செய்ய வேண்டும். இதுதான் விற்பனையை அதிகரிக்க வழியாகும். வியாபார நுணுக்கங்களைப்புரிந்துகொள்ளுதல் அவசியமாகும். தனியார் கடைகளில் அதிக அளவில் எப்படி வியாபாரத்தைச் செய்கிறார்கள், எப்படி வாடிக்கையாளர்களைக் கவர்கின்றார்கள், ஆகியவற்றைத்தெரிந்துகொள்ளவேண்டும்.

விற்பனையாளர்களுக்குத் தன்னம்பிக்கை, மரியாதையுடன் நடத்தல், தைரியம், அன்பு, பணிவு, ஊக்கம், ஆர்வம் தேவையாகும். பொதுமக்களிடத்தில் நல்லமுறையில் தொடர்பு கொள்ளுதல் மிக அவசியமாகும். அலமாரி, தரைப்பகுதிப் பொருட்கள் ஆகியவற்றை தூசிபடியாமல் துப்புரவாக வைத்திருக்க வேண்டும். அழுக்கு அல்லது தூசி படிந்திருந்தால் வாங்குவோர்கள் வாங்க மறுக்கலாம். எனவே விற்பனை பாதிக்க வாய்ப்புகள் ஏற்படலாம். கடையிலுள்ள சாமான்கள் மக்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் அலங்காரமாக ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட வேண்டும். உதாரணமாக ஒரு மித்த பொருட்களை ஒரு சேர வைக்கலாம். பொருட்களின் முகப்பு தெளிவாகத் தெரிவதுடன் விலைகள் கண்ணுக்குத் தெரியும் படியாக எழுதி வைக்கப்பட வேண்டும். தரமான பொருட்கள் சரியான எடையில் நியாயமான விலையில் பெறலாம் என்ற எண்ணத்தை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும். உண்மையைக் கூறுவதும் விற்பனைக் கலையின் ஒரு அம்சமாகும். பொருட்களைப் பற்றிய தன்மையை உள்ளபடியே கூறினால் அதுவே வாங்குபவரிடத்தில் நம்பிக்கை ஏற்படுத்தி, வாங்கும் விருப்பத்தை அதிகரிக்கச் செய்யும்.

கூட்டுறவுகளால் நடத்தப்படும் கடையாதலால் பொருட்களின் உண்மை நிலையை அல்லது தன்மையைக் கூறுவது தவறில்லை. இதனால் மக்களிடத்தில் நம்பிக்கை ஏற்பட்டு விலையைப்பற்றிக் கூடக்கவலைப்படாமல், தரமான பொருட்களைப்



பெறுவதில் ஆர்வம் காட்டுவார்கள். இதனால் கூட்டுறவுக் கடையில் விற்பனை அதிகரிக்கவும் வாய்ப்புகள் உண்டு. அடுத்தபடியாகக் கடை அமையும் இடம் ஊரின் முக்கியமான இடத்தில் இருக்க வேண்டும். எந்த இடத்தில் கடையை அமைத்தால் விற்பனை நன்கு நடைபெறும் என்று ஆராய்ந்தும், எந்த நேரத்தை வியாபாரத்திற்கு ஒதுக்கினால் மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று அறிந்தும் செயல்படுவதால் விற்பனையை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன.

பொதுவாக விற்பனை செய்யப்படும் இடத்தைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். பொதுவாக வாங்குவோரிடத்தில் மரியாதையாக நடந்துகொள்ளுதலும், அன்பாகப் பழகுதலும் விற்பனையாளர்களின் கலைத்திறனின் சிறப்பம்சமாகும். வருபவர்களைப் புன்சிரிப்புடன் வரவேற்று நட்புடனும் பழகினால் மீண்டும் அவர்கள் வருவதற்கு ஊக்கம் ஏற்படும். நல்ல முறையில் எளிமையாக உடை அணிவது அவசியமாகும். பேசும் போது உரத்த குரலில் பேசுவதைத் தவிர்த்து இனிமையான குரலில் பேசவேண்டும். அணிந்துள்ள உடையைப் பார்த்ததும் வெறுப்பு மனப்பான்மை ஏற்படக்கூடாது. புகைபிடித்தல், வெற்றிலைபாக்குப் போடுதல், வணிக-அலுவலக நேரத்தில் உபயோகிப்பதைத் தவிர்க்கலாம். உணவுப்பண்டங்களை, குறிப்பாக தின்பண்டங்களைக் கைகளால் எடுப்பதைத் தவிர்த்து கரண்டி அல்லது கிடுக்கிகொண்டு எடுத்தல் நல்லது. வியாபாரம் அதிகமாக இல்லாதபோது பொருட்கள் ஒழுங்காகச் சுத்தப்படுத்தி அடுக்கி வைக்கப்படவேண்டும். ஒரே இடத்தில் வைப்பதால் அமுக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும். எனவே அதைத் தவிர்த்து குறிப்பிட்ட இடங்களிலேயே பொருட்களை அடுக்கி வைக்க வேண்டும்.

கடையை அலங்காரம் செய்வது என்பது விற்பனைக்காக வைத்துள்ள பொருட்களை வாங்க விரும்புவோர்களையும், வாடிக்கையாளர்களையும் கவரும் வண்ணம் அடுக்கி வைத்தல் ஆகும். அலங்கார அமைப்பு பலவகையாகும். ஒரே வகையில் பல பொருட்களை அலங்காரப்படுத்திக் காண்பித்தல், அதாவது இடத்திற்குத் தகுந்தாற்போல் பொருளின் ஒவ்வொரு அளவிலும் சில மாதிரிகள் வைக்கப்படுதல் வேண்டும். ஒன்றுக் கொன்று தொடர்பு இருக்கும் ஒரே மாதிரியான பொருட்களை ஒரே இடத்தில் வைத்திருத்தல் அவசியமாகும். கடையில் வாங்க வருபவர்களுக்கு அதிக இடம் ஒதுக்கப்படவேண்டும். அதிக இடவசதி இருந்தால் தான் தாங்கள் வாங்கும் பொருட்களை சௌகரியமாக வாங்குவார்கள். வாங்குபவர்களை எல்லோரையும்விட முக்கியமாகக் கருதவேண்டும். அவர்களை நம்மை சார்ந்திருப்பவராக நினைக்கக் கூடாது. கடுமையான முகத்துடன் இருப்பது தவிர்க்கப்பட வேண்டும். கடைக்கு வந்தவுடன் 'வாருங்கள் உங்களுக்கு என்ன வேண்டும்' என்று கேட்டு, தேவைகளை அறிய வேண்டும். விற்பனையாளர்கள் அவர்களைக் கவனிக்கவில்லை என்ற எண்ணத்திற்கு இடம் இல்லாமல் நடந்துகொள்ளவேண்டும்.

விற்பனை நேரத்தில் வேறு வேலை செய்தல், சக ஊழியர்களிடம் பேசிக்கொண்டிருத்தல் ஆகியவை வாடிக்கையாளர் முன் தவிர்க்கப்படவேண்டும். கேட்கும் பொருட்கள் இல்லையெனில் அதற்கான மாற்றுப் பொருட்களையும் அவற்றின் தன்மைகளையும் எடுத்துக்கூறுவது விற்பனைக்கு உதவியாகும். தரம் குறைந்த பொருட்கள் தருவது, குறைகள் கூறினால் அதை எதிர்த்து வாதாடுதல், கடையில் நுழைந்தவர்களை வாங்கித்தான் ஆகவேண்டும் என்று வற்புறுத்துதல், வாடிக்கையாளர்களைக் குறைகூறுதல் ஆகியவை தவிர்க்கபடவேண்டும். பொருளின் விலை மாற்றம் இருந்தால் அதை விளக்கிக் கூறவேண்டும். விலையில் கழிவு இருப்பின் அதைப்பற்றிக் கூற வேண்டும். சரியான அளவில் சரியான பொருட்களையே விற்பனை செய்ய வேண்டும். வாங்குபவர்களின் முன்னால் எடைபோடுவதும், அளப்பதும் நம்பிக்கையூட்டும் செய்கையாகும். மளிகைச் சாமான்கள் வகை வகைகளுக்குத் தனித்தனியே பிரிவுகள் ஒதுக்கப்படவேண்டும். மிளகாய், மல்லி, சீரகம், மிளகு, மஞ்சள் போன்றவை ஓரிடத்திலும் தனித்தனியாக வைக்கப்படவேண்டும். அந்தந்தப் பொருட்களின் மீது விலைகள் குறிப்பது அவசியமாகும். இதனால் வாங்குபவர்கள் மற்றக் கடைகளுடன் விலைப்பட்டியலை ஒப்பிட்டுப் பார்க்க வாய்ப்பு ஏற்படுகின்றது. விற்பனைப்பொருள் எப்படி செய்யப்படுகின்றது, எங்கே உற்பத்தி செய்யப்படுகின்றது, அதன் தரம், உபயோகம், எந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தலாம், எதற்குப் பயன்படுத்தக்கூடாது என்பதை அறிந்துவைத்திருக்க வேண்டும.

ஒரு பொருள் மற்றதிலிருந்து எவ்விதம் மாறுபடுகின்றது என்பதை விளக்கிக் கூறுதல் வாங்குபவர்களின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தும், விற்பனையாளர்கள் தங்கள் பிரிவில் விற்பனையாகும் பொருட்களை உடனுக்குடன் தேவைப்பட்டியலை அனுப்பிப்பெறுவது அவசியமாகும். வாடிக்கையாளர்களே கடையின் நீதிபதிகள். எனவே அவர்களைத் திருப்திசெய்யும் நோக்கத்துடன் செயல்படவேண்டும். அப்போதுதான் பொதுமக்களுடன் தொடர்பு ஏற்படும். இதனால் கடைக்கு நல்லபெயர் ஏற்படுகின்றது. வாடிக்கையாளர்களே விற்பனைக்கு உயிர்நாடி. எனவே அவர்கள் கூறும் புகார்களைக்கவனமாகக் கேட்டு நன்றி கூறவேண்டும். புகார்கள் கூறும்போது அவற்றை அலட்சியப்படுத்தக் கூடாது. கடுஞ்சொல், கடும் பேச்சுக்களைக் கண்டிப்பாகப் பேசக் கூடாது. கூட்டுறவுக் கடைகள் பொருட்களை நுகர்வோரின் பாதுகாப்புக் கேடயம்! கூட்டுறவுக் கடைகள், பொருள்களைப் கலப்படம் இல்லாமல் வழங்குகின்றன. கூட்டுறவுக் கடைகள் சரியான எடையில் வழங்குகின்றன. கூட்டுறவுக்கடைகள் நியாயமான விலையில் வழங்குகின்றன. தவறான விளம்பரங்களைச் செய்வது கிடையாது. எனவே பொதுமக்கள் கூட்டுறவுக் கடைகளில் கொள்முதல் செய்து ஆதரவு தர வேண்டும்.



## இந்தியாவின் முதல் மக்னீஷியத் தொழிற்சாலை தமிழகத்தில் அமைக்கப்படும்

இந்தியாவின் முதல் மக்னீஷிய உலோக உற்பத்தித் தொழிற்சாலை இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வாலிநோக்கத்தில் அமைக்கப்படும். தற்போது நம்நாடு இந்த உலோகத்திற்கு வெளிநாடுகளை நம்பி இருப்பது இதன் மூலம் அகன்று விடும். இந்தத் தொழிற்சாலையைத் தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் அமைக்கும்.

ரூ. 6 கோடி செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்தத் தொழிற்சாலை தனது உற்பத்தியை 1985ம் ஆண்டு மத்தியில் துவக்கும். இது, ஆண்டு ஒன்றுக்கு 600 டன் மக்னீஷியத்தை உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக இருக்கும்.

இந்தத் திட்டத்தால் சுமார் 150 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.



# பல்லவனின் புதுமைப் பேருந்து!

தமிழ்நாட்டிலுள்ள அரசு போக்குவரத்துக்கழகங்கள் இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டும் வகையில் சீரிய பணிகளை ஆற்றி வருகின்றன. நமது போக்குவரத்துக்கழகங்களின் ஒவ்வொரு பணியும் மற்ற மாநிலத்தவரால் மிகவும் பாராட்டப்படுகிறது.

சென்னை மாநகரத்தில் இயங்கிவரும் பல்லவன் போக்குவரத்துக்கழகத்தில் மொத்தம் 2100 பேருந்துகள் உள்ளன. நாள்தோறும் பல்லவன் பேருந்துகளில் 27 இலட்சம் பயணிகள் பயணம் செய்கின்றனர். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் 18,500 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர்.

சென்னை மாநகரத்தின் போக்குவரத்துப் பணிகளில் மிகுந்த பொறுப்பேற்று திறம்பட செயல்பட்டுவரும் பல்லவன் போக்குவரத்துக்கழகம், இப்பொழுது புதுமையான பேருந்து ஒன்றினை இயக்கியுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முதலாக இயக்கப்பட்டுள்ள புதுமைப் பேருந்து இது.

தொடர் பேருந்து (Articulated Bus) என்று அழைக்கப்படும் இப்பேருந்தில், 200 பயணிகள் பயணம் செய்யலாம். இப்பேருந்தின் நீளம் 50 அடி ஆகும். மூன்று கதவுகள் உள்ளன. இப்பேருந்தில் முன்னும் பின்னுமாக இரண்டு நடத்துநர்கள் உள்ளனர்.

சென்னை இந்திரா நகரிலிருந்து பாரிமுனைவரை செல்லும் தடம் எண் 21டி-இன் பாதையில் போகிறது இந்தத் தொடர் பேருந்து. சாதாரணச் சாலையிலும் இயக்க ஏதுவான இணைப்புடன் சுழல் அமைப்பைக் கொண்டுள்ளது தொடர் பேருந்து.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் இப் புதுமைப் பேருந்தை கடந்த 18.5.83 அன்று அடையாறு காந்திநகர் பேருந்து நிலையத்தில் இயக்கிவைத்து உரையாற்றுகையில் மாண்புமிகு, போக்குவரத்து அமைச்சர் திரு செ. முத்துசாமி அவர்கள் குறிப்பிட்டதாவது:

''மக்களுக்கு நன்மை பயக்கத்தக்க பல்வேறு பணியில் ஈடுபட்டு அரிய பணிகளை நிறைவேற்றிவருகின்றன, நமது போக்குவரத்துக் கழகங்கள். நமது போக்குவரத்துக் கழகங்களின் அரிய சாதனைகள் அனைத்துக்கும் காரணமானவர்கள் நமது தொழிலாள சகோதரர்கள்தான், அவர்களுடைய ஒத்துழைப்பினால்தான், மற்ற மாநிலத்தவர்கள் கண்டு பாராட்டும் வகையில் பணிகளைச் செய்து வருகின்றோம்.

''மாநிலத்திலுள்ள எல்லா இடங்களிலும் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுத்து வருகின்றோம். கிராமப்புற மக்கள் சந்தைக்குச் செல்லும் பொழுது எடுத்துச்செல்லும் சுமைகளைக் கொண்டுபோகவும் சந்தைகளிலிருந்து வாங்கிவரும் பொருள்களை எடுத்துச் செல்லவும் வசதியுள்ள பொருட்களை எடுத்துச்செல்லும் பேருந்துகளையும் விட்டிருக்கின்றோம்.

''திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தூங்கும் வசதி உடைய குளிர்சாதன வசதி உள்ள பேருந்தை விட்டிருக்கிறது. மக்களின் நன்மை கருதி செய்யப்படும் இதுபோன்ற திட்டங்கள் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக உள்ளன. இலாப நோக்கமின்றி மக்களின் நன்மையைக் கருதியே அரசு இந்தப் பணிகளைச் செய்து வருகிறது.

''இப்பொழுது இந்தியாவிலேயே முன்மாதிரியாக - எல்லாருக்கும் வழிகாட்டும் வகையில் தொடர் பேருந்தை இயக்கியுள்ளோம், இப்பணிகளை நல்ல முறையில் செய்துவரும் தொழிலாளர்கள் சகோதரர்கள், அனைவருடைய பாராட்டுக்கும் உரியவர்கள் ஆவார்கள். அவர்களுடைய தேவைகளை நிறைவேற்ற அரசு ஆவன செய்யும்''.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல மக்களின் நலனையே குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் நமது போக்குவரத்துக் கழகங்களின் பணிகள் நாளும்வளர நன்மைகள் பெருக நாமும் வாழ்த்துவோம்!

நமது போக்குவரத்துக் கழகங்களின் அரிய பணிகளைப் பாராட்டி மகிழ்வோம்!

—மாமுலன்

**கடைசி அட்டையில்**

உதகமண்டலத்தில் 21.5.83 அன்று மலர்க் காட்சியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்துப் பார்வையிடும் காட்சி.

## மத்திய பிரதேசத்தில்

# சமநீதி கண்ட சோழன்



மாநிலங்களிடையேயான பண்பாட்டுப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ், தமிழகக் கலைக்குழுவாக, கலைமாமணிகள் நடராஜ்-சகுந்தலா குழுவினர் மத்தியபிரதேச மாநிலம் சென்று ஏழு கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். 20.4.1983 அன்று சென்னையை விட்டுப் புறப்பட்டு மத்தியப்பிரதேசம் சென்ற இக்கலைக்குழுவினர் ஜக்தல்பூர், ராஜ்நந்த்கபா, பிலாய், கோர்பா, அல்பிகாபூர் மற்றும் ராய்கார் ஆகிய ஊர்களில் தெருக்கூத்து பாணியில் அமைந்த 'சமநீதி கண்ட சோழன்' என்ற நாட்டிய நாடகத்தை நடத்தினர். மே மாதம் 6 ஆம் நாள் சென்னை திரும்பினர்.

கலைமாமணிகள் நடராஜ்-சகுந்தலா பரதநாட்டியக் கலையை சுமார் 40-ஆண்டுகளுக்கு மேல் வளர்த்து வருபவர்களாவர். சென்னை மயிலாப்பூரில் 'நடனகலாநிலையம்' என்ற கலைநிறுவனத்தை நிறுவி, கலைக்காக அயராது உழைத்து வருகின்றனர். எண்ணற்ற மாணவ, மாணவிகட்குப் பரத நாட்டியக் கலையைக் கற்றுக் கொடுத்து, தமிழகமெங்கணும் பரதக்கலையைப் பரப்பிவருகின்றனர். தமிழகம் மட்டுமின்றி இந்தியா முழுவதும் தமது குழுக்களை அனுப்பிப் புகழுடன் தமிழகக் கலாச்சாரத்தைப் பரப்பும் பெருமையுடையவர்கள். உள்நாட்டுக் கலைஞர்களை உருவாக்கியது மட்டுமன்றி, பல வெளிநாட்டு மாணவ, மாணவிகட்கும் பரதக் கலையில் பயிற்சியளித்துள்ளனர்.

இத்தகு புகழ்வாய்ந்த கலைமாமணிகள் நடராஜ்-சகுந்தலா, 'சம நீதிகண்ட சோழன்' தெருக்கூத்து நாட்டிய நாடகத்தை உலகத் தமிழ் மாநாட்டிற்காகத் தயாரித்தனர். இதுமட்டுமன்றி ஆசிய விளையாட்டுப்போட்டியில் கலை நிகழ்ச்சிகள் நடத்திக் காட்டிய தமிழகக் கலைஞர்கட்குப் பயிற்சி அளிக்கும் இயக்குநர் பதவியையும் தமிழக அரசு, திரு நடராஜ் அவர்கட்கு அளித்தது. பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்து கலந்து கொண்ட கலைக்குழுக்களும் இவரிடம் ஆலோசனை கேட்டு அதன்படி கலைநிகழ்ச்சிகள் அளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.





கலைமாமணிகள் நடராஜ் - சகுந்தலா குழுவினர் எண்ணற்ற நாட்டிய நாடகங்களைத் தயாரித்து நடத்தி உள்ளனர். குறிப்பாக ஏசுநாதர், திருவள்ளுவர், பாஞ்சாலிசபதம், மச்சகந்தி, தமிழறியும் பெருமாள் ஆகியவற்றைச் சிறப்பாகத் தயாரித்துள்ளனர். பரதநாட்டியக் கலையல்லாமல், கதக்களி, கரகம், காவடி போன்ற கிராமியக் கலைகள் மற்றும் தெருக்கூத்து போன்றவற்றிலும் இக்கலைஞர்கள் வல்லுநர்களாவர்.



டில்லி சங்கீத நாடக அகாடெமி, தமிழக அரசு மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஆகியவை அவ்வப்போது தொடர்ந்து அளித்துவரும் மான்யங்களின் உதவியால், பல புதிய படைப்புக்களை உருவாக்கிய வண்ணம் மாநிலத்திற்கு அனுப்பி வைத்துப் பண்பாட்டுப் பரிமாற்றத் திட்டத்தினைச் செயல்படுத்தியதில் நாம் பெருமை கொள்ளலாம்.




# தொலைத் தொடர்பு நிகழ்ச்சி-ஓர் அற்புதச் சாதனை!

மாமுலன்

இவ்வாண்டு தொலைத் தொடர்பு ஆண்டு ஆகும்.

உலகத் தொலைத் தொடர்பு நாளை முன்னிட்டு கடந்த மே-17-ஆம் நாள், சென்னை வானொலி நிலையம் சிறப்பு மிகுந்த ஒரு நிகழ்ச்சியை அமைத்திருந்தது.

தமிழ்நாடு காவல்துறை வானொலி அலுவலகம்.

சென்னைத் தொலைபேசித் துறை.

இந்தியன் ஏர் லயன்ஸ்,

தென்னக இரயில்வே,

சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகம்,

பல்லவன் போக்குவரத்துக் கழகம்.

தொலைதொடர்புத்துறை.

ஆகியவைகளுடன் இணைந்து சென்னை வானொலி நிலையம் நடத்திய இந்த நிகழ்ச்சி ஒலிபரப்புத் துறை வரலாற்றில் முதன்மையானது, புதுமையானது.

"தொலைத் தொடர்பு மாநாடு 1983" என்று பெயர் கொண்ட இந்த நிகழ்ச்சி, அறிவியல் சாதனைகள் தொலைத் தொடர்புத் துறையில் எந்த அளவுக்கு வளர்ந்து இருக்கின்றன என்பதை நமக்குப் படம் பிடித்துக் காட்டியது.



வானொலி நிலையத்திலிருந்து பதிலுரைத்த வல்லுநர்கள்






கப்பலிலிருந்து திருமதி ரேகா ஷெட்டி

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்திலிருந்து மணிக்கு 75 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கும் கொல்லம் எக்ஸ்பிரஸ் ரயிலிலிருந்தும், சென்னைத் துறைமுகத்திலிருந்து கிழக்கே 10 கிலோமீட்டர் தொலைவில் சென்றுகொண்டிருந்த மணல் வாரிக் கப்பலான கொள்ளிடத்தில் இருந்தும், சென்னை அண்ணா சாலையில் ஓடிக்கொண்டிருந்த பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த (இந் நிகழ்ச்சிக்காக ஒலிபரப்புக் கருவிகள் பொருத்தப்பட்ட) பேருந்தில் இருந்தும், மதுரையிலிருந்து பெங்களூர் சென்று கொண்டிருந்த இந்தியன் ஏர்லயன்ஸைச் சேர்ந்த பிளைட் நெ. ஐசி 502 விமானத்திலிருந்தும், சென்னை வானொலி நிலையத்திலிருந்தும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு கேள்விகள் கேட்டு பதில்களைத் தெரிந்து கொண்டனர்.



கொல்லம் எக்ஸ்பிரஸிலிருந்து திருமதி ஜெனிஃபர் அருண்



சென்னை வானொலி நிலையத்திலிருந்து செல்வி ரேவதி சீனிவாசன்.

இவர்கள் பேசிக் கொள்வதும், கேள்வி கேட்பதும், பதில் கூறுவதும் அதேநேரத்தில் நேரடியாகச் சென்னை வானொலியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.

இந்நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்திய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தார் கணக்கியல் அறிவியல் நிறுவன இயக்குநரான டாக்டர் அல்லாடி ராமகிருஷ்ணன் அவர்கள். இந்நிகழ்ச்சியில் வல்லுநர்களாக தமிழ்நாடு காவல் துறைத் தலைவர் திரு. கே. ராதாகிருஷ்ணன், பல்லவன் போக்குவரத்துக் கழகத் தலைவர் திரு கே. ரவீந்திரன், இந்தியன் ஏர்லயன்ஸின் மண்டல இயக்குநர் காப்டன் ஆர். ஏ. வில்லியம்ஸ், சென்னைத் தொலைத் தொடர்பு



**சென்னை எழும்பூரிலிருந்து அண்ணாசாலை வழியாக அடையாறு நோக்கி சென்றுகொண்டிருந்த பல்லவன் போக்குவரத்துக்கழகப் பேருந்திலிருந்து திருமதி சாந்தா ராதா கிருஷ்ணன்.**

அலுவலகத்தின் துணைத் தலைமை இயக்குநர் திரு வி.என். பாட்சா, சென்னை வானொலி நிலைய தொலைக்காட்சி நிலைய தலைமைப் பொறியாளர் திரு ராம்லால், சென்னைத் தொலைபேசித்துறையின் துணைப் பொது மேலாளர் திரு சி.ரமேஷ், தென்னக ரயில்வே தலைமை வர்த்தகக் கண்காணிப்பாளர் திரு எஸ்.கே. நாயர், சென்னைத் துறைமுகப் பொறுப்புக்கழக மக்கள் தொடர்பு அலுவலர் திரு எம். கிருஷ்ணமூர்த்தி, சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு இ. கோவிந்தராஜுலு ஆகியோர் பங்கேற்றனர்.

ஓடும் இரயிலில் இருந்து திருமதி ஜெனிஃபர் அருள், கப்பலில் இருந்து திருமதி ரேகாஷெட்டி, விமானத்தில் இருந்து திருமதி மாலதி சேஷாத்திரி, பல்லவன் பேருந்தில் இருந்து திருமதி சாந்தா ராதாகிருஷ்ணா, சென்னை வானொலி நிலையத்தில் இருந்து செல்வி ரேவதி சீனிவாசன் ஆகியோர் இணைப்பாளராக இருந்து பணியாற்றினார்கள்.

விமானத்திலிருந்து கப்பலுக்கும், கப்பலில் இருந்து பேருந்துக்கும், பேருந்தில் இருந்து வானொலி நிலையத்துக்கும் ஒவ்வொரு இடத்திலிருந்தும் வானொலி நிலையத்துக்கும் பேசிக் கொண்டது-நேரடியாக ஒலிபரப்பானது-அற்புத நிகழ்ச்சியாக அமைந்திருந்தது.

இந்நிகழ்ச்சியிலிருந்து எத்தனை எத்தனையோ தகவல்களை நேயர்கள் அறிந்து கொண்டார்கள்.

கடந்த 2000 ஆண்டுகளில் மக்கள் தொடர்புச் சாதனங்கள் வளரத் தலைப்பட்டன. கடந்த 400 ஆண்டுகளில் அதிகம். அதிலும் கடந்த 40 ஆண்டுகளில் தொலைத் தொடர்பு மிக அதிகமான முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் ஈட்டியது. அதிலும் கடந்த 10 அண்டுகளில் இவ் வளர்ச்சி குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

விண்வெளியில் செலுத்தப் பட்டுள்ள கலன்கள்மூலம் மேலும் தொலைத் தொடர்பு வாய்ப்புகள் விரைவாக வளர்ந்துள்ளன.

சென்னை வானொலி நிலையம் அமைத்திருந்த இந் நிகழ்ச்சியின் மூலம் தொலைத் தொடர்பு வசதிகள் நம்நாட்டில் எப்படி வளர்ந்துள்ளன என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடிந்தது.

சென்னை வானொலி நிலையம் அறிவியல் துறை வளர்ச்சிக்குப் பெருந்துணையாக இருந்து வருகிறது. கிராம மக்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே அறிவியல் செய்திகளைப் பரப்புவதில் முன்னோடியாகச் சென்னை வானொலி நிலையம் செயல்பட்டு வருகிறது.

அவ்வகையில் இந்நிகழ்ச்சி அறிவியல் வளர்ச்சியை தொலைத் தொடர்புத் துறையில் நம்நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தை மக்களுக்கு எடுத்துக் காட்டியதாக அமைந்திருந்தது.

''இந்நிகழ்ச்சியை அமைக்கும் எண்ணம் எப்படி தோன்றியது?'' கடந்த ஆண்டில் சென்னைத் தொலைபேசி நிலையத்தின் நூற்றாண்டு விழா கொண்டாடிய போது அமைக்கப்பட்ட நிகழ்ச்சியைப் போன்று இயங்கும் நான்கு இடங்களைஇணைத்துதொலைத் தொடர்பு நிகழ்ச்சி அமைத்தால் என்ன என்ற எண்ணம் தோன்றியது. அதுதான் இந்நிகழ்ச்சி அமைப்புக்கு அடிப்படைக் காரணம்'' என்றார் வானொலி நிலைய அறிவியல் அலுவலர் டாக்டர் ஆர். ஸ்ரீதரன்.

''பாமர மக்களிடையேயும் அறிவியல் கருத்துக்களைப் பரப்பும் எங்கள் பணியில் இது ஒரு கட்டம்'' என்றார் சென்னை வானொலி நிலைய இயக்குநர் இ.கோவிந்தராஜுலு.

தமிழ்நாடு அரசின் காவல் துறை, பல்லவன் போக்குவரத்துக்கழகம் போன்றவை அளித்த ஒத்துழைப்பும் மற்ற தொலைத் தொடர்பு அமைப்புகளின் பெருதவியுமே இந்நிகழ்ச்சியின் வெற்றிக்கு அடிப்படையாகும்.

பூமியிலிருந்து 26,000 அடி உயரத்தில் மணிக்கு 540 மைல் வேகத்தில் பறந்து கொண்டிருக்கும் விமானத்தில் சென்று கொண்டு, ஓடிக்கொண்டிருக்கும் பஸ்ஸில் தொடர்பு கொண்டதும் கடலில் சென்று கொண்டிருக்கும் கப்பலில் உள்ளவரிடம் கேள்வி கேட்டு, அதனை அந்தச் சமயத்திலேயே ஒலிபரப்பியதும் சாதாரண நிகழ்ச்சி அல்ல.

இஃது அறிவியல் வளர்ச்சியின் அடையாளமாகும். அதனை வானொலி வாயிலாக எல்லா மக்களும் தெரிந்துகொள்ள ஒரு நிகழ்ச்சியை அமைத்து அருஞ் சாதனையை நிகழ்த்திய சென்னை வானொலி நிலைய இயக்குநர் இ.கோவிந்தராஜுலுவும், அறிவியல் அலுவலர் டாக்டர் ஆர். ஸ்ரீதரனும், தொழில் நுட்பப்பணிகளை மேற்கொண்ட வானொலி நிலைய துணைப் பொறியாளர் திரு எம். ராதாகிருஷ்ணனும் அனைவருடைய பாராட்டுகளுக்கும் உரியவர்கள் ஆவர்.





# திறமான புலமையின் அடையாளம்

''சென்றிடுவீர்
எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்கு சேர்ப்பீர்''

—என்ற மகாகவி பாரதியாரின் 'தேமதுரத் தமிழோசை உலகம் எலாம் பரவும் வகை செய்ய' அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பாரதி நூற்றாண்டு விழா வினையொட்டி அமைத்த மலர்க் குழு தயாரித்துள்ள, ஏறக்தாழ 500 பக்கங்களுடைய இம்மலரின் முதல் புதுமை—

கவியரசர் பாரதிக்கு அரேபிய மொழியில், பர்மிய மொழியில், ஃப்ரெஞ்சு மொழியில், ஜெர்மனிய மொழியில் ஜப்பானிய மொழியில், பாரசீக மொழியில், புஷ்டு மொழியில், ருஷிய மொழியில், செனகல் மொழியில், சிங்கள மொழியில், சமஸ்கிருதத்தில், அசாமியில், வங்காளியில், குஜராத்தியில், காஷ்மீரியில், தோகிரியில், கன்னடத்தில், மலையாளத்தில், ஓரியாவில், பஞ்சாபியில், சிந்திமொழியில், மைதிலி மொழியில், ராஜஸ்தானியில், மராத்தியில் இந்தியில், ஆங்கிலத்தில் என்று அஞ்சலி செலுத்தப்பட்ட வைகளை அந்தந்த மொழிகளிலே அப்படியே அச்சிடப்பட்டிருப்பது.

அந்த வாழ்த்துரைகளை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதும் அருமை மிகுந்ததாகும்.

பாரதியார் ஓர் உலக மகாகவி என்பதை மெய்ப்பித்துக் காட்டும் வகையில் அமைச்சர் பெருமக்களும் அன்று அவிந்து அடங்கிய சான்றோர்களும், மொழி நலங்காக்கும் பேராசிரியர்களும், பைந் பெருந்தகையாளர்களும், பாரதி அன் தமிழ் வாணர்களும், நூற்றாண்டு விழா பர்களும், நூற்றாண்டு விழா வோடு நெருக்கமிகுந்த வல்லுநர்களும் எழுதியுள்ள கட்டுரைகள் ஏராளம்! ஏராளம்! அடிக்கரும்பாக இனிக்கும் அத்தனையையும் விவரிக்கின் அஃதே ஒரு நூலாகும்.

கவிவாணர்களின் புகழ்மாலைகளும் இந்தச் செந்தமிழ் மலர்ச் சோலையில் ஒரு பகுதியாகும்.

பாரதியின் காவியச் சொல் எல்லாம் ஓவியமாகி - வண்ண வண்ணக் காட்சியாகி மலர்ச் சோலையின் எழிலைப்பேரழகாகக் காட்டியுள்ளது பெருமைக்குரிய செயலாகும்.

மலர் விளம்பரங்களும் பாரதியின் பாடல்வரிகளை எல்லாம் ஓவியங்களாக்கி கண்ணையும் கருத்தையும் ஈர்க்கின்றன.

—இப்படி இம்மலரின் பெருமைகளை அடுக்கிக் கொண்டே போவது முறையா? என்று யாரா வது முணுமுணுக்கலாம். வேறு வழியில்லையே! ஒரு பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள நூற்றாண்டுவிழா மலர் - 'மலர்' என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாகவே இருக்கும் பொழுது வேறு எப்படி எழுதமுடியும்?

இம்மலரிலிருந்து எத்தனையோ செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது. எடுத்துக்காட்டுக்கு ஒரு செய்தி உலகில் எந்தெந்த நாடுகளில் தமிழ்மொழி பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படுகிறது. இந்தியத் திருநாட்டில் எந்தெந்த மாநிலங்களில் பல்கலைக்கழக அளவில் தமிழ் கற்பிக்கப்படுகின்றது என்பதை அறிந்துகொள்கின்றோம்.

கனடாவில், செக்கஸ்லேவிகாவில், ஃபின்லாந்தில், ஃபிரான்சில், ஹாலந்தில், ஜப்பானில், மலேசியாவில், போலந்தில், செனகலில், சுவிடனில், இங்கிலாந்தில், அமெரிக்கநாட்டில், சோவியத் ரஷ்யாவில், மேற்கு ஜெர்மனியில், ஸ்ரீலங்காவில் என்று பல வெளிநாடுகளில் ஆராய்ச்சி நடைபெறும் பல்கலைக்கழகம் எல்லாம் பட்டியல் போட்டுக் காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவில், கலிபோர்னியா பல்கலைக் கழகம், சிகாகோ பல்கலைக்கழகம், கார்னல் பல்கலைக்கழகம், ஹவாய் பல்கலைக் கழகம், பென்சில்வானியா பல்கலைக்கழகம், டெக்ஸாஸ் பல்கலைக்கழகம், வாஷிங்டன் பல்கலைக்கழகம் என்று ஏழு பல்கலைக்கழகங்களில் தமிழ் கற்பிக்கப்படுவது குறிப்பிட்டுள்ளது. இப்படி ஒவ்வொரு நாட்டிலும் தேமதுரத் தமிழோசை கேட்குமிடங்களை எல்லாம் அறிகின்றோம்.

அயல் நாட்டாரும் திறமையான தமிழ்ப் புலமையை அறிந்து கொள்ள ஆங்கிலத்திலும் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

பாரதிக்குச் சூட்டப்பட்டுள்ள இந்த மலர், காலத்தால் பெருமை பெறும் தமிழ்க்கருவூலமாகும்.

எந்நாட்டவரும் கவியரசர் பாரதியை அறிந்திட - போற்றிட வழிவகுத்த இம்மலர், பாரதி நூற்றாண்டு கண்ட பயன் மிக்கத் தமிழ்த் தொண்டு.

—மாமுலன்



# சென்னை நகருக்கு கிருஷ்ணா குடிநீர் துவக்க விழா நிகழ்ச்சி

சென்னைக்குக் கிருஷ்ணா குடிநீர்த் திட்டப் பணிகள் துவக்க விழா, சென்னை நேரு விளையாட்டு அரங்கத்தில் 25.5.1983 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவினை ஒட்டி சென்னை மாநகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வருவதற்கு 102 ஆண்டுகளுக்கு முன்னரே திட்டமிட்டதன் நினைவாக, இவ்விழாவிற்கு வருகை தந்த இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்களையும், ஆந்திர, கர்நாடக, மகாராஷ்டிர மாநில முதலமைச்சர்களையும் வரவேற்கும் வகையில் 102 வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின் முந்தைய சரித்திரத்தை நினைவூட்டும் வகையிலும் பல வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்விழாவிற்குப் பங்கேற்க வந்திருந்த மாண்புமிகு இந்தியத் தலைமையமைச்சர், மாண்புமிகு மத்திய அமைச்சர், மாண்புமிகு மாநில முதலமைச்சர்கள் ஆகியோரை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வரவேற்றார்கள்.

இந்தியத் திருநாட்டின் மாநிலங்களின் ஒற்றுமையுணர்வை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்திருந்த இவ்விழா நடைபெற்ற நேரு விளையாட்டு அரங்கம் முழுதும் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது.

மிக பெரியமான இடத்தில் மேடை அமைக்கும் அளவுக்கு அமைந்திருந்த நேரு விளையாட்டு அரங்கத்தின் மேடை மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. எத்திக்கில் அமர்ந்திருந்தோரும் மேடையில் அமர்ந்திருந்த அனைவரையும் கண்டு களிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

விழா துவக்கத்தில் அரசுக் கலைஞர்கள் மதுரை திரு எம்.பி. என். சேதுராமன், மதுரை திரு எம். பி. என். பொன்னுசாமி சகோதரர்களின் நாயன இசை நடைபெற்றது.

தமிழ்த்தாய் வணக்கத்திற்குப்பின் மகாகவி பாரதியாரின் பேத்தியும், கொள்ளுப் பேரனும் பாரதியார் பாடலைப் பாடினார்கள்.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் மாண்புமிகு நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வரவேற்றார்.

மாண்புமிகு தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் மலர்மாலை அணிவித்தார். ஆந்திர, கர்நாடக, மகாராஷ்டிர முதலமைச்சர்களுக்கும், மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சருக்கும், ஆளுநருக்கும் மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் மாலைகளை அணிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கட்குத் தலைமைச் செயலாளர் (பொறுப்பு) திரு. கே. சொக்கலிங்கம் மாலை அணிவித்தார்.

விழாவுக்குத் தலைமையேற்ற ஆளுநர் உரை நிகழ்த்திய பின்னர், மாண்புமிகு மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு ராம் நிவாஸ் மிர்தா, மாண்புமிகு மகாராஷ்டிர முதலமைச்சர் திரு வஸந்த்தாதா பாடீல், மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு இராமகிருஷ்ண ஹெக்டே, மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் திரு என். டி. இராமராவ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

அடுத்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உரை நிகழ்த்திய பின்னர், சென்னைக்குக் கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டப்பணிகளை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் துவக்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ் ஆந்திரத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் வேலைகளுக்குத் தமிழகத்தின் முதல் அரையாண்டுப் பங்குத் தொகை ரூ.30 கோடிக்கான காசோலையைத் தமிழகத்தின் சார்பில் ஆந்திர முதல்வரிடம் பிரதமர் அவர்கள் வழங்கிச் சிறப்புரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும் ஏனைய மாண்புமிகு மாநில முதல்வர்களுக்கும், அம்மாநில முதல்வர்களுடன் வந்திருந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

விழா முடிவில், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் நன்றி கூறினார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.








16-6-1983 75 காசு



மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களை அவருடைய இல்லத்தில் மாண்புமிகு மத்திய செய்தி-ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எச். கே எல். பகத் அவர்கள் 1.6.83 அன்று சந்தித்தார்.



...தியன் ஆக்ஸிஜன் நிறுவனத்தின் சார்பில் அதன் இயக்குநர் திரு கே. பி
... 31.5.83 அன்று முதல்வர் வறட்சி நிவாரண நிதிக்கு இரண்டு லட்சம்
...ங் நிதியை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிடம்
...ங்கினார்.

...னை, செங்கற்பட்டு மாவட்ட தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தை
...புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 31.5.83
...று திறந்துவைத்தார். விழாவில் மாண்புமிகு ஊரகத் -தொழில்
...மைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும், மாண்புமிகு தொழில்
...மைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்களும் பங்கேற்றனர்.





# டாக்டர்களுக்கு இணையான துப்புரவுத் தொழிலாளர்கள்

## மாண்புமிகு முதல்வர்

பிறரை வாழ வைப்பதில் டாக்டர்களுக்கு எத்தகைய பொறுப்பு இருக்கிறதோ அதே போன்ற பொறுப்பு துப்புரவுத் தொழிலாளர்களுக்கும் உள்ளது.

துப்புரவுத் தொழிலாளர்களுக்கு ஓய்வு ஊதியம் வேண்டும் என்று கேட்டு மனு கொடுக்கப்பட்டிருக்கிறது.இதுபற்றி அடுத்த நிதிநிலை அறிக்கையில் தீர்மானம் செய்யப்படும்.

“எங்களைச் சுற்றி உள்ள இடங்கள் சுத்தமாக இல்லை. தங்குவதற்குப் போதுமான இடமும் இல்லை” என்று மனுக் கொடுத்துள்ளனர்.

சமுதாயத்திற்காகத் துப்புரவு செய்து மக்களை நோயின்றிச் சுகமாக வாழச் செய்பவர்களுக்கு, இருக்க இடம் இல்லை என்றால் இதை விடத் துன்பம் வேறில்லை. இதுவும் அடுத்த நிதிநிலை அறிக்கையில் செய்து முடிக்கப்படும்.

மாநகராட்சி, ஊராட்சிகளில் உள்ள துப்புரவுத் தொழிலாளர்களுக்கு பெங்களூர் போல சோப்பு, மழைக்கோட்டு வேண்டும் என்று மனுவில் கேட்டிருக்கிறீர்கள். 2, 3 கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டேன். மற்றவற்றையும் அடுத்த ஆண்டு செய்ய முயல்வேன்.

மழைக்கோட்டுக்கு இப்போது என்னால் யாருக்கும் வாக்குக் கொடுக்க முடியவில்லை. முன்பு சொந்தப் பணம் இருந்தது; அள்ளிக் கொடுத்தேன் இது மக்கள் பணம்; பார்த்துத் தான் செலவிட வேண்டும்.

[சென்னையில் ஒரு கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து…]

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — ஆனி 2

மலர் : 13 .16-6-1983 இதழ் : 24

முன்பக்க அட்டையில்

சென்னையில் நடைபெற்ற (25.5.83) கிருட்டிணா குடிநீர்த்திட்டத் துவக்க விழா நிகழ்ச்சி.

# உலகச் சுற்றுப்புறச் சூழல் நாள்

## ஜூன் 5

மனித சமுதாயம் வளமாக வாழ, சுற்றுப்புறச் சூழலை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியத்தை மக்களுக்கு உணர்த்த உலகமெங்கும் ஜூன் மாதம் 5ம் நாள் ''உலக சுற்றுப்புறச் சூழல் தினம் '' World Environment Day '' என்று கொண்டாடப்படுகிறது.

சுற்றுப்புறச் சூழல் பிரச்சினை, உலகம் முழுவதும், அன்றாடம் பேசப்படும் ஒரு பிரச்சினையாக உள்ளது. இயற்கை வளங்களை சுரண்டுவதன் மூலமாக, மனிதன் சுற்றுப்புறச் சூழலில் பாதிப்பு ஏற்படச் செய்கிறான். தொழில்நுட்ப முன்னேற்றத்தால், ஏராளமான கழிவுப் பொருள்கள், நீர், நிலம், காற்று ஆகிய இயற்கை வளங்களில் கலப்பதால், அவற்றின் இயற்கைத்தன்மை பாதிக்கப்படுகிறது. அதனால், மனித, தாவர, விலங்கினங்களின் வாழ்க்கையும் பாதிக்கப்படுகிறது. காட்டு வளம் குறைவதாலும், (Denudation of Forests) அளவுக்கு அதிகமான மேய்ச்சலாலும் (Over-Grazing Pastures) வனவிலங்குகள் மற்றும் தாவரங்களின் இருப்பிடம் பறிக்கப்பட்டு அவை குறைந்து வருகின்றன.

சுற்றுப்புறச் சூழல் கெடுவதற்குச் சில அடிப்படைக் காரணங்கள்:

மக்கள் தொகைப் பெருக்கம்;

வரம்பு இல்லாமல் நகர்ப்புறங்கள் அதிகரிப்பது;

தொழிற்சாலைகள் மூலம் வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்கள் சுத்தப்படுத்தப்படாமல் இருப்பது;

காட்டுவளத்தை அழித்தல் - ஆகியவையாகும்.

மக்கள் தொகைப் பெருக்கத்தைப் பற்றிச் சில புள்ளிவிவரங்களை இங்கே கூற விரும்புகிறேன்:—

1830 ல் உலக மக்கள் தொகை 100கோடி
1930 ல் இது 200கோடி
1975 ல் அதாவது 45 ஆண்டுகளில் 400கோடி

தற்போது அது 600 கோடியாக உயர்ந்துள்ளது.

இந்தியநாட்டின் மக்கள் தொகை:

1921 ல் 25.1 கோடியாக இருந்தது;
1981 ல் 68.3 கோடியாக உயர்ந்தது.

தமிழ்நாட்டின் மக்கள் தொகை:

1921ல் 2.16 கோடியாக இருந்தது.
1981ல் 4.83 கோடியாக, அதாவது ஆண்டிற்கு 1.73 சதவீதம் ஜனத்தொகை பெருகியுள்ளது.

மக்கள் தொகைப் பெருக்கத்தால் உணவு அடிப்படைத் தேவைகள் மற்றும் வேலை வாய்ப்பு ஆகியவையும் பெருகவேண்டியுள்ளது. உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய, அதிக சாகுபடி நிலங்களுக்காக, காடுகளை அழிக்க வேண்டியுள்ளது. இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் ஆகியவற்றை அளவுக்கு



அதிகமாக உபயோகிக்கும்பொழுது, அவை வயல்களிலிருந்து நீரோட்டம் மூலம் நீர் நிலைகளை ( Water Resources ) அடைகின்றன. அதனால், நீரின் தன்மை பாதிக்கப்படுகிறது.

மக்கள்தொகைப் பெருக்கத்தால் வேலை வாய்ப்பு மற்றும் தொழிற்சாலைகள் பெருக வேண்டியுள்ளது. தொழிற்சாலைகளின் பெருக்கத்தால், வேலைவாய்ப்பு, பொருள்களின் உற்பத்தி ஆகியவை பெருக வாய்ப்பு இருந்த போதிலும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுப்பொருள்களை அகற்றுவது ஒரு பெரும் பிரச்சினையாக உருவாகியுள்ளது. தக்கமுறையில் வெளியேற்றப்படாத கழிவுப் பொருள்களினால், சுற்றுப்புறச் சூழல் மாசுபட ஒரு காரணமாகிறது. இந்த சுத்தம் செய்யப்படாத கழிவுப் பொருள்கள், நீரில் கலக்கும் போது, நீரில் பிராணவாயு குறைந்து வருவதால், நீரில் வாழும் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன. நீர் அசுத்தமாகி, துர்நாற்றம் வீசுகிறது. பல சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன.



மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
டாக்டர் எச். வி. ஹண்டே

Atmospheric emmissions of a particulate matter சல்பர் டை-ஆக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடு ஹைட்ரஜன் சல்பைடு போன்ற வாயு கழிவுப் பொருள்களின் வெளியேற்றத்தால், மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும், தாவரங்களுக்கும், கட்டடங்களுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. அதேபோல் தொழிற்சாலைகளிலிருநது வெளியேறும் திட, திரவப்பொருள்களின் ( Solid and Liquid Wastes ) காரணமாக நிலத்தடி நீர் மாசு அடைகிறது.

நமது மாநிலத்தில் இம்மாதிரி சுற்றுப்புறச் சூழல் மாசு ஏற்படுவதைக் கட்டுப்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்து தகுந்த வழிவகைகளை வகுக்க, ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் குழு அளித்துள்ள ஓர் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. ''கழிவினைத் தவிர்த்து, மாசினைத் தவிர்க்க வேண்டும்'' ( Waste not, Pollute not ) என்பது தொழிற்சாலைகளின் நோக்கமாக இருக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நகர்ப்புறங்கள் விரிவாகிக்கொண்டே போவதால், சுற்றுப்புறச் சூழலில் பாதிப்பு ஏற்படுகிறது. வேலைவாய்ப்புத் தேடி, கிராமப்புறங்களிலிருந்து நகரங்களுக்கு வருபவர்களின் எண்ணிக்கை, நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே போவதால், குடிநீர், வடிகால், போக்குவரத்து போன்ற அடிப்படைத் தேவைகள் இல்லாத புறநகரங்கள் பெருகிவருகின்றன. வடிகால் வசதி இல்லாத காரணத்தினால் வீட்டுக் கழிவுப் பொருள், நீர்நிலைகளில் கலப்பதால் டைபாய்டு, வயிற்றுப்போக்கு, மஞ்சள்காமாலை போன்ற தண்ணீர் சம்பந்தமான நோய்கள் ஏற்படுகின்றன. எனவே, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், அனைவருக்கும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கும், வடிகால் வசதிகள் செய்யவும், முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள்.

''உலகக் குடிநீர் வழங்கல் துப்புரவு பத்தாண்டு (International water supply and sanitation decade) என்ற நோக்கத்தின்படி, பத்தாண்டு முடிவில் மாநிலத்திலுள்ள எல்லா நகர்ப்புற, கிராமப் புறமக்களுக்கும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியும், நகர்ப்புற மக்கள் தொகையில் 80 சதவீதமும், கிராமப்புற மக்கள் தொகையில் 25 சதவீதமும் வடிகால் வசதி செய்யப்பட உள்ளது.

காடுகள் மனிதனுக்கு இயற்கை தந்த ஒரு வரப்பிரசாதமாகும். தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் காடுகளில் கிடைக்கின்றன. தாவர, விலங்கினங்களுக்குப் புகலிடமாகவும், மழைவரக் காரணமாகவும் விளங்குகின்றன. ஒரு நாட்டில் மூன்றில் ஒரு பங்கு காடுகள் இருக்கவேண்டும். தமிழ்நாட்டில், 21.88 லட்சம் ஹெக்டேர் காடுகள் உள்ளன. இவை மாநிலத்தின் பரப்பளவில் ஆறில் ஒரு பங்காகும்.

பல்வேறு காரணங்களினால், வனவளம் அழிந்துபோகிறது. காற்று மற்றும் மண் அரிப்பு (Water Soil Erosion), நீர் நிலைகளில் வண்டல் படிதல் (Silting up Reservoirs), வளம்மிக்க மேல்மட்ட மண் அழிதல் (Loss of Fertile Soil) அரிய விலங்கினங்கள் மறைதல் (Loss of habitat for rare species) போன்றவை ஏற்படுகின்றன.

இதனைத் தடுக்க, நமது அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சமூக நலக் காடுகள் திட்டம் (Social Forest Scheme) என்ற ஒரு திட்டத்தின்கீழ், ஒரு மாபெரும் காடுவளர்ப்புத் திட்டம், அரசுக்குச் சொந்தமான காலியிடம், நீர்நிலைகளின் அருகில் மரம் நடுதல், சாலையோரக் காடு வளர்ப்பு ஆகியன செயல் படுத்தப்படுகின்றன.

சுற்றுப்புறச் சூழல் பிரச்சினைகளில் ''மாசு ஏற்படுவது'' (Pollution) என்பது ஒரு முக்கியமான பிரச்சினையாகும். சுற்றுப்புறச் சூழலின் தன்மையைப் பாதுகாப்பதன்

அவசியத்தை இந்த அரசு நன்கு உணர்ந்திருக்கிறது. நீர்மாசுப் பிரச்சினையைத் தீர்க்க, 1974ஆம் ஆண்டு நீர்மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் (Water Prevention Control of Pollution act 1974) தமிழ்நாடு நீர்மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு வாரியம் Tamil Nadu Prevention & Control of Water Pollution Board என்று ஒரு வாரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன்படி, தொழிற்சாலைக் கழிவுநீர், நகழிவு நீர், வாயுக் கழிவுப்பொருள்கள் ஆகியவற்றைச் சுகாதார முறையினைப் பின்பற்றி வெளியேற்ற வேண்டும் என்பதாக, இவ்வாரியத்தின் அனுமதி பெற வேண்டும்.



வளர்ச்சிப் பணிகளைப் பொறுத்த வரையில், திட்டமிடும்போதே சுற்றுப்புறச் சூழல் பற்றியும் கருதவேண்டும்.

Developmental Programme must take into account environmental Considerations in the Planning Stage itself என்ற எண்ணம் தற்போது முக்கியத்துவம் அடைந்துள்ளது. அதற்காக, ''தமிழ்நாடு சுற்றுப்புறச் சூழல் வாரியம்'' என்ற முதல் நிலை ஆலோசனை வழங்கும் அமைப்பினை Tamil Nadu environmental Board an apex advisory body அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்த வாரியம், மாநிலத்திலுள்ள வளர்ச்சிப் பணிகளை திட்ட அளவிலேயே ஏற்படும் பிரச்சினைகளைப் பற்றியும், அவற்றைத் தடுக்கும் முறைகளைப் பற்றியும் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் முறையைப்பற்றியும் ஆராய்கிறது.

நமது பிற்காலச் சந்ததிகளுக்கு, அமைதியான, வளமான, ஆரோக்கியமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதே நமது அரசின் லட்சியமாகும். அதுவே நம் எல்லோருடைய லட்சியமாகவும் இருக்கவேண்டும். உலகச் சுற்றுப்புறச் சூழல் நாளான இன்று சுற்றுப்புறச் சூழலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பையும் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**[சென்னை வானொலியில் 5.6.83-ல் ஆற்றிய உரை]**

---

## பாரதியார் பல்கலைக் கழகம்

கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக் கழக வளாகம் சோமயாம்பாளையம், வடவள்ளி கிராமங்களில் சுமார் 1,000 ஏக்கர் நிலப் பகுதியில் அமைந்துள்ளது.. திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகம் சூரியூர் கிராமத்தில் சுமார் 1,000 ஏக்கர் நிலப்பகுதியில் அமைந்துள்ளது. இவ்விரு பல்கலைக் கழகங்களுக்குமான கட்டங்களையும், தொழிற் கல்வி இயக்ககத்தின் கட்டுமானப் பிரிவே கட்டிவருகிறது. கல்வி நடைமுறைக்குகந்ததாகவும், வேலை வாய்ப்புக்கு வழி செய்வதாகவும், இருக்க வேண்டும் என்ற நோக்குடன் பாரதியார் பல்கலைக் கழகம் பட்ட வகுப்புகள், பட்டமேற்படிப்பு வகுப்புகள் ஆகிய வற்றின் பாடத் திட்டங்களை மாற்றியமைத்து நவீனப்படுத்தத் தொடங்கியுள்ளது. பாரதிதாசன் பல்கலைக்கழகம் பல்வேறு பாடங்களில் சிறப்புத்துறைகள் தொடங்கக் கருதியுள்ளது. அவை உயர் கல்வியின் சிறப்புக் கூறுகளாக அமைவதோடு நாட்டின் சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும். முதலில் இவ்வாண்டு பாரத் ஹெவி எலெக்டிரிக்கல்ஸ் முதலிய நிறுவனங்களின் உதவியுடன் நிருவாகப் பயிற்சி பற்றிய சிறப்புத் துறை அமைக்கப்பட்டுள்ளது.

## மகளிர் பல்கலைக்கழகம்

மகளிர் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று 1981 டிசம்பரில் பாரதியார் நூற்றாண்டு விழாத் தொடக்க நிகழ்ச்சியில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1982 ஏப்ரலில் வல்லுநர் குழு ஒன்று டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேசய்யா தலைமையில் அமைக்கப்பட்டது. குழுவின் அறிக்கை 1982 செப்டெம்பரில் அரசுக்குத் தரப்பட்டது. இப்பொழுது பல்கலைக் கழக மானியக்குழு, மைய அரசு ஆகியவற்றுடன் கலந்து அவ்வறிக்கை ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மகளிர் பல்கலைக்கழகம் வரும் ஆண்டில் கொடைக்கானலில் அமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

---

# குடித் தொழில் செய்வோம்

"தொழில் வளர்ச்சி ஆலோசனைக்குழு அமைக்கப்பட்ட பின்னர், கூட்டப்பட்ட முதற் கூட்டம் இது. 57 உறுப்பினர்களில் 26 பேர் வந்தனர்; அவர்களில் 17 பேர் தங்களது கருத்துகளை எடுத்துரைத்தனர்.

''தொழில் வளர்ச்சியில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் - மற்ற மாநிலங்களில் தொழில் வளர்ச்சிக்குக் கிடைத்துவரும் சலுகைகள் இங்கேயும் கிடைப்பதற்கு வழிவகை காணல், போன்ற பிரச்சினைகளை ஆய்வு செய்வது இந்த ஆலோசனைக் குழுவின் நோக்கம் ஆகும்.

''குழுவின் அடுத்த சந்திப்பு இன்னும் இரண்டு மாதங்களில் நடைபெறும். இந்தக் கூட்டத்தில் சொல்லப்பட்ட கருத்துக்கள் மீது அரசு எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து அடுத்த சந்திப்பில் அறிவிக்கப்படும். அதன் பின்னர் மேற்கொண்டு ஆற்றவேண்டிய பணிகள் குறித்து விவாதம் செய்யும்.

''தொழில் வளர்ச்சி கருதி-தொழில் பிரிவு ஒவ்வொன்றிற்கும் - நால்வர் அல்லது ஐவர் கொண்ட துணைக்குழு அமைக்கப்படும். குறிப்பாக, எலக்ட்ரானிக் - ஆட்டோமைபல்ஸ், இரசாயனம் போன்ற தொழில் வகைகளுக்கு வல்லுநர் கொண்ட குழுவை அமைக்க வேண்டும் என்ற கருத்து இங்கே தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் தொழில் அதிபர்களும், அலுவலர்களும் அங்கம் பெறுவர். விரைவில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்படும். பின்னர் துணைக் குழுக்கள் அமைக்கப்படும்.

தமிழகத்தில் புதிதாகத் தொழில்களைத் தொடங்க முன்வருபவர்களுக்கு மத்திய அரசு உரிமைகளை வழங்குவதில் தாமதம் செய்கிறது எனத் தமிழக அரசு அவ்வப்போது எடுத்துக் கூறுவது நியாயமானது என்பதைச் சில தொழிலதிபர்கள் ஏற்றுக் கொண்டனர்.

''தொழில் வளர்ச்சிக்குரிய நீண்டகால, குறுகிய காலத் திட்டங்கள் குறித்தும் சில தொழிலதிபர்கள் பேசினர். நீண்டகாலத் திட்டங்கள் மத்திய அரசுடன் பேசித் தீர்வு காணப்பட வேண்டியவை ஆகும். அண்டை மாநிலங்களில் வணிகவரி, சர்சார்ஜ் ஆகியவை எவ்வகையில் உள்ளன என்பதை அறிந்து, இங்கு என்னென்ன சலுகைகள் அளித்து, தொழில் வளர்ச்சிக்கு உதவலாம் என்பது ஆய்வு செய்யப்படவேண்டும்.

''புதிதாகத் தொழில் தொடங்குவதற்கு முன்வருபவர்கள் பெற வேண்டிய உரிமங்களுக்காகப் பல்வேறு துறைகளுக்குச் சென்று அலைந்து திரியவேண்டிய நிலை இல்லாமல், ஒரே இடத்தில் எல்லாத் துறையினரையும் சந்தித்துத் தமது உரிமங்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய வழிவகை காணப்பட வேண்டும் என்ற கருத்தைச் சில தொழிலதிபர்கள் வலியுறுத்தினர்.

''வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களில் 320க்கு மேற்பட்டவர்கள் தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கு விருப்பம் தெரிவித்துக் கடிதம் எழுதி உள்ளனர். இவர்களில் 100 பேர் குறிப்பிட்ட தொழிலைத் தொடங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். பலர், எந்த வகைத் தொழில் தொடங்கலாம் என்னென்ன சலுகைகளைத் தமிழக அரசு வழங்கும் என்றெல்லாம் விசாரித்துக் கடிதம் எழுதியுள்ளனர். பெரும்பாலும், அமெரிக்கா, சிங்கப்பூர், மலேயா ஆகிய நாடுகளிலிருந்து கடிதங்கள் வந்திருக்கின்றன. நான்கு அல்லது ஐந்து நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவை, எலக்ட்ரானிக், பொறியியல், இரும்பு வார்ப்பு ஆகிய தொழில்களைச் செய்யவிருக்கின்றன.



**மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்**
**திரு எஸ். திருநாவுக்கரசு**

''சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு உதவித் தொகையாக ரூ.1 கோடி சுழல்நிதியை மத்திய அரசு வழங்கவேண்டும் என்று கேட்டிருக்கிறோம்.

''சுங்கத் தீர்வை அற்ற விற்பனை மையம் ஒன்றை அமைக்க வேண்டும் என்றும், கும்மிடிப்பூண்டி அல்லது தூத்துக்குடியில் அதனை அமைக்கலாம் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. விமான நிலைய வசதி இருக்குமிடத்தில்தான் அதை அமைக்கவேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்திருப்பதால் மீனம்பாக்கம் அருகில் அந்த மையத்தை அமைக்கலாம் என்று வாய்மொழியளவில் குறிப்பிட்டிருக்கிறோம்.

''தமிழகத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் புகளூர் காகித ஆலை வெற்றிகரமாகச் செயல்பட்டால், இதுபோன்ற ஆலையை மராட்டியம், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலும் அமைக்கலாம் என்று மத்திய தொழில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.''

(5.6.83 அன்று நடைபெற்ற தொழில் வளர்ச்சி ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் கருத்துக்கள் குறித்து நிருபர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து)

# படமும் செய்தியும்



மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருந்தபோது சோவியத் நாட்டுத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் திரு எம். எஸ். மிர்னோவ் அவர்களை (8.6.83ல்) சந்தித்தார்.



திருச்சி மாவட்டம் துறையூர் பெருமான் மலையில் அருள்மிகு கோவிந்தராஜப் பெருமான் ஆலயத்தின் ராஜ கோபுரத் திருப் பணியை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் (5.6.83ல்) தொடங்கி வைத்தார்.

டெல்லியில் நடைபெற்ற மத்திய கல்வி ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள், மத்திய கல்வி அமைச்சர் திருமதி ஷீலா கௌல் அவர்களைச் சந்திக்குப் பேசினார்.





லண்டனில் உள்ள விம்பனாக் நிறுவனத்தைச் சேர்ந்த வணிக இயக்குநர் திரு ட்ரும் பீல்டு அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். ராகவானந்தம் அவர்களை,10.6.83-ல் சந்தித்து, குறைந்த விலையில் வீடுகள் அமைக்கும் திட்டம் குறித்துக் கலந்துரையாடினார்.

மாநில அளவிலான தொழில் வளர்ச்சி ஆலோசனைக்குழுவின் முதற்கூட்டம் மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ்.திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் 5.6.83-ல் சென்னையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது





# இராமநாதபுரம் மாவட்டத்தில் பால் வளம்



இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக உள்ளது. இந்நிலைமை மாற்றும் ஆம் மாவட்டத்திலுள்ள விவசாயக் கூலிகள், சிறு விவசாயிகள் மற்றும் குறு விவசாயிகள் ஆகியோரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதோடு வருமானத்தை பெருக்கிடவும் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பல திட்டங்கள் முன்னேற்றத் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டம் நேரிடையாகப் பயன் அளிக்கக் கூடிய திட்டமாக பால் பண்ணை பெருக்கத் திட்டம் விளங்குகின்றது. வறட்சிக்கு இலக்காகும் பகுதி விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இரண்டாவது பால் பெருக்கு திட்டம் வாழ்க்கை முன்னேற்றத் திட்டமாக அமைந்துள்ளது. இதனால் அவர்களது வருமானம் பெருகுவதோடு அவர்களுக்கு வேலை வாய்ப்பும் உறுதி அளிக்கப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகமாக பாதிக்கப்படும் கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் பால் வளத்தை பெருக்கிட காரைக்குடி பகுதியில் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 50 000 லிட்டர் கொள்ளளவு பால் பதனிடும் ஆலை நிறுவ 1982 — 83-ம் ஆண்டில் ரூ. 150 லட்சம் மானியமாக அரசு அளித்துள்ளது.

இவ்வாலை நிறுவ காரைக்குடி நகரத்திற்கு அருகிலுள்ள கழனிவாசல் கிராமத்தில் 50 ஏக்கர் அளவுள்ள புறம்போக்கு காலியிடத்தை தமிழ்நாடு அரசு தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கு வழங்கியுள்ளது. இக்காலியிடத்திற்குரிய மதிப்புத் தொகையாகிய ரூ 35,700—ஐ இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் செலுத்த வேண்டியுள்ளது.

இப்பதனிடும் ஆலை அமைப்புப்பணி தேசிய பால்பண்ணை வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாலையின் கட்டுமானப்பணி 1985-ம் ஆண்டு ஆரம்பத்தில் முடிவடைய திட்டமிடப்பட்டுள்ளது. இப்பதனிடும் ஆலைக்கு பால் விநியோகம் செய்ய கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் இரு பகுதியில் அதாவது கமுதியிலும் இளையான்குடியிலும் பால் குளிரூட்டும் நிலையங்கள் நிறுவ அரசு மான்யம் அனுமதித்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 366 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பால் விநியோக சங்கங்கள் பயன்பெறுகின்றன. இச்சங்கங்களில் 80996 எண்ணிக்கையுள்ள உற்பத்தியாளர்கள் பயன் அடைகிறார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது 366 செயல்படும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தினம் சராசரி 67,960 லிட்டர் பால் உற்பத்தி செய்து அதில் இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மதுரைக்கு தினம் சராசரி 33,240 லிட்டர் பால் விநியோகம் செய்து மீதியுள்ள 34,720 லிட்டர் பாலை உள்ளூரில் விற்பனைச் செய்து வருகின்றன. 1984-85-ம் ஆண்டில் பல்வேறு திட்ட உதவிகள் மூலம் தினசரி சராசரி மாவட்டத்தில் பால் உற்பத்தியை திட்டமிடப்பட்டுள்ளது. 80,000 லிட்டராக உயர்த்த ஆலையின் உதவியால் இப்பால் பதனிடும் ஆலையின் மேலும் அதிகரிக்க சங்கங்களில் பால் உற்பத்தி மேலும் நல்ல வாய்ப்புள்ளது.



அடுத்த இதழ்

# தமிழரசு

(1-7-83 இதழ்)



தமிழ்நாடு அரசின்

# மூன்றாண்டுப் பணிகள்

தொகுப்பு மலராக வெளிவருகிறது

- ஒவ்வொரு துறையின் ஒப்பிலாப்பணிகளை விளக்கிடும் நிகரில்லாக் கருவூலம்

**96 பக்கங்கள்** **விலை 75 காசு**

# சிறு துறைமுகங்களின் அரும்பணிகள்



தமிழ்நாடு, வங்காள விரிகுடா, பாக் இடுகடல், மன்னார் வளைகுடா, இந்துமாக் கடல், அரபிக் கடல், நெடுக கிழக்கு, தெற்கு மேற்காக 1000 கிலோ மீட்டர் நீளத்திற்கு இடையீடில்லாத கடற்கரையைப் பெற்றுள்ளது. இந்தியாவில் இதுபோன்று முப்புறமும் கடல் சூழ்ந்த மாநிலம் வேறெங்கும் இல்லை. இதுவே தமிழகத்தின் தனிச்சிறப்பு எனக் கூறலாம். சென்னையில் ஒன்றும் தூத்துக்குடியில் ஒன்றும் ஆக இரு பெரிய துறைமுகங்கள் உள்ளன. இவை மைய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குபவை.

கடலூர், நாகப்பட்டினம் ஆகிய நடுத்தரத் துறைமுகங்களும், இராமேசுவரம், பாம்பன், கீழ்க்கரை, வெப்பலோடை, கன்னியாகுமரி, குளச்சல் ஆகிய சிறு துறைமுகங்களும் உள்ளன. இவை அனைத்தும் மாநில அரசான தமிழக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறையின் ஆட்சிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருவது தமிழ்நாடு துறைமுகத்துறை. மேலே சொல்லப்பட்ட நடுத்தர, சிறு துறைமுகங்கள் இத்துறையால் கண்காணிக்கப்படுகின்றன. சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டுள்ள மாநிலத் துறைமுக அலுவலர் அலுவலகம் இயங்குகிறது.

கடலூர் துறைமுகத்தில் 1977-78ல் கப்பல் போக்குவரத்தில் எதிர்பாராத தொய்வு ஏற்பட்ட போது மாநில அரசு மூலம் இந்திய அரசை அணுகி இத்துறைமுகத்திற்கு நிறைய கப்பல்கள் வருவதற்கு வழிவகை செய்திடக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, அடுத்தடுத்த ஆண்டுகளில் கப்பல் போக்குவரத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டு ஆண்டொன்றுக்கு 44 ஆயிரம் டன் சரக்குகள் கையாளுகின்ற அளவுக்கு நிலைமை உயர்ந்தது.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் முக்கிய ஏற்றுமதிப் பொருள் வெங்காயம். இதனைச் சேமித்து வைப்பதற்கான வசதியான சரக்கு கொட்டகை ஒன்று 1.05 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கான பணி துவங்கப்பட்டு முடிவுற்றது.

இராமேசுவரம் துறைமுகத்தில் அலைவாய் எல்லைச் சுவர் ஒன்று 80 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. குளச்சல் துறைமுகத்தில் 800 மீட்டர் நீளத்திற்கு அலைவாய் எல்லைச் சுவர் ஒன்று95 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கான ஒப்புதலை அரசு அளித்தது. இந்த வேலைசெல்வனே செய்து முடிக்கப்பட்டது.

இனி இதனைத் தொடர்ந்து இந்தத்துறை கடந்த மூன்றாண்டுகளில் கண்ட சாதனைகளைப் பார்ப்போம்.

கடலூர் துறைமுகம் 44 ஆயிரம் டன் சரக்குகளைக் கையாளுகின்ற நிலைமை முற்றிலும் மாறி லட்சம் டன் சரக்குகளைக் கையாளுகின்ற நிலைக்கு உயர்ந்து இருப்பது ஒரு மகத்தான சாதனையாகும். இங்கு இறக்குமதியாகும் முக்கிய சரக்கு உரம். இதனைப் பாதுகாப்பாக வைப்பதற்கான சரக்குக் கொட்டகை ஒன்று 5.50 லட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு இந்தப் பணி முடிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 7.78 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இன்னும் ஒரு சரக்குக் கொட்டகை கட்டும் பணி துவக்கப்பட்டுள்ளது. இது தவிர மூன்றாவது சரக்குக் கொட்டகை ஒன்று கட்டுகின்ற பணி 83-84 மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 12 லட்சம் ரூபாய் செலவில் துறைமுகப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகள் துவக்கப்பட்டு இதுவரை ஆறு குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 10 டன் நடமாடும் பாரந்தூக்கி ஒன்று 10 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ளது.



* மனிதனின் நல்ல செய்கைகள் இயற்கையைக்கூட மாற்றி அமைத்துவிடும். நாலு நல்லவர்களின் சக்தியால் நாடு முழுவதற்கும் நல்ல பலன் கிடைக்கும். இது வரலாற்று உண்மை!
* எதையும் குறை கூறுவதும் குற்றம் காண்பதும் எளிதானது. ஆனால் அப்படிக் குறை கூறுபவர்கள் நாட்டுக்காக எதைச் செய்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்!



நாகப்பட்டினம் துறைமுகம் சரக்குப் போக்குவரவு மட்டும் அல்லாமல் சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்குச் சென்று வருகின்ற பயணிகளின் போக்குவரவையும் கவனித்துக்கொள்கிறது. இந்தத் துறைமுகத்தில் கையாளப்படும் சரக்கின் மொத்த எடை 22 ஆயிரத்திலிருந்து 48 ஆயிரம் டன் ஆக உயர்ந்துள்ளது. பயணிகளின் எண்ணிக்கை 1977-1978ல் 4804 ஆக இருந்தது. இப்போது 6508 ஆக உயர்ந்துள்ளது. துறைமுகப் பணியாளருக்காக 8 குடியிருப்புகள் 4.50 லட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்கான பணி துவக்கப்பட்டு 4 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இன்னும் 4 குடியிருப்புகள் கட்டுகின்ற பணி நடைபெற்றுக் கொண்டுஇருக்கின்றது. மேலும் இத்துறைமுகத்தில் அலைவாய் எல்லைச் சுவர் ஒன்று கட்டுவதற்கும் அரசு ஒப்புதலளித்துள்ளது. சரக்குப் போக்குவரத்தில் மேலும் முன்னேற்றம் காணும் வகையில் இரண்டு சரக்கு மிதவைப் படகுகளும் கப்பல்களுக்குத் தண்ணீர் கொண்டு செல்வதற்காக ஒரு தண்ணீர் மிதவைப் படகும் கட்டப்பட்டு வருகின்றன.

இராமேசுவரம் துறைமுகம் முக்கியமாக இந்தியாவிலிருந்து ஸ்ரீலங்காவிற்கும் (இலங்கை) அங்கிருந்து இந்தியாவிற்கும் சென்று வருகின்ற பயணிகளின் போக்குவரவுக்காக ஏற்பட்ட துறைமுகம் ஆகும். இந்தப் பயணிகள் போக்குவரவு முன்பு தனுஷ்கோடியில் இருந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. 1964ல் ஏற்பட்ட கடும் புயலின் காரணமாக தனுஷ்கோடி துறைமுகம் அழிந்து போயிற்று. எனவே, 1966ல் இதற்கு மாற்றாக இராமேசுவரம் ஒரு துறைமுகமாக ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

இங்கு ஆண்டுதோறும் 1 லட்சத்துக்கும் அதிகமாகப் பயணிகள் போக்குவரவு நடைபெறுகிறது. இதுமட்டுமின்றி சாஸ்திரி - பண்டார நாயகா உடன்படிக்கையின் அடிப்படையில் இலங்கையிலிருந்து இந்தியா திரும்பும் அகதிகளும் இந்தத் துறைமுகம் வழியாகவே வருகின்றனர். 1977-78ல் பயணிகளின் எண்ணிக்கை 99,911 ஆக இருந்தது. இந்த ஆண்டில் 1,83,261 ஆக உயர்ந்துள்ளது. பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரவு அதிகமாக இருப்பதால் இத்துறைமுகத்தை வளர்ச்சியடையச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.250 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குளச்சல் துறைமுகம் ஓர் இயற்கையான துறைமுகம் ஆகும். அத்துடன் இரு ஒரு பருவகாலத் துறைமுகமும் ஆகும். இங்கிருந்து இல்மைனைட் எனும் மணல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. இந்த ஏற்றுமதி இப்பொழுது கணிசமான அளவில் முன்னேறியுள்ளது. ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 15 ஆயிரம் டன் இல்மனைட் மணல் ஏற்றுமதியாகிறது. 1982-83ல் இந்தத் துறைமுகத்திலிருந்து 57,337 டன் இல்மைனைட் மணல் ஏற்றுமதியாகியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான பொறியியல் பொருளாதார ஆய்வு ஒன்று 90 ஆயிரம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டு அஃது அரசின் பரிசீலனையில் உள்ளது.

அனைத்துக்கும் சிகரமாக இந்தக் காலகட்டத்தில் ஒரு சிறப்பான நிகழ்ச்சி இத்துறையில் நடைபெற்றுள்ளதை சுண்டுப் பெருமையுடன் குறிப்பிடலாம். அதாவது, கன்னியாகுமரியில் கடல் நடுவே அமைக்கப்பட்டுள்ள விவேகானந்தர் நினைவுப் பாறைக்குப் படகுப் போக்குவரவினை நடத்திக் கொண்டிருந்த விவேகானந்த கேந்திரத்தினர் அங்கு ஏற்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக 1981 ஜுலை 20 ஆம் நாளன்று நிறுத்திவிட்டனர். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் மற்றும் மேல்நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் இந்தப் படகுப் போக்குவரவு நின்றுபோன காரணத்தால் விவேகானந்தர் நினைவுப் பாறைக்குச் சென்று வருகின்ற வாய்ப்பில்லாமல் ஏமாந்துபோயினர். அனைத்து இந்திய சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி இந்தப் படகுப் போக்குவரவைத் தொடர்ந்து நடத்திட அரசு விரும்பி, அவ்வாறே இந்தப் போக்குவரவு விவேகானந்த கேந்திராவிடமிருந்து தமிழக அரசின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, தமிழ்நாடு துறைமுகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தப் படகுப் போக்குவரவு 2.10.81 முதல் தமிழ்நாடு துறைமுகத் துறையால் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 15,17,639 பார்வையாளர்கள் இதன்மூலம் விவேகானந்தர் நினைவுப் பாறைக்குச் சென்று திரும்பியுள்ளனர். இதன் மூலம் ரூ26,60,735 படகுக் கட்டணமாக அரசுக்கு வருவாய் கிட்டியுள்ளது. நீண்டகாலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தபடி, கரைக்கும் விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும் இடையே ஒரு நடைப்பாலம் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு செய்துள்ளதால் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# ஊராட்சிகளுக்கு வருவாய்தரும் சமூகநலக் காடுகள்

கிராமப்புற மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, போக்குவரத்துச்சாலைகள், பள்ளிக்கூடங்கள் போன்ற அத்தியாவசியப் பணிகளைச் செய்துதரும் ஊராட்சிகளுக்கு வருவாய் தரும் வரப்பிரசாதமாகச் 'சமூக நலக்காடுகள்' திட்டம் செயல்படுகிறது.

ஒதுக்கப்பட்ட காடுகள் ( Reserve Forest ) அல்லாத இடங்களில் சமுதாயத்திற்குப் பயன்தரும் வகையில் அமைக்கப்படும் தோட்டங்கள் 'சமூகநலக் காடுகளாகும்'. மக்களின் தினசரித் தேவைகளான விறகு, சிறுமரம், தீவனப்புல், பசுந்தாழ் உரங்கள் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்யச் 'சமூகநலக் காடுகள்' பெரிதும் பயன்படுகின்றன.

கிராமங்களிலும், நகர்ப்புறங்களிலும் தரிசாகப் பயன்படாமல் உள்ள புறம்போக்கு நிலங்கள், கண்மாய்கள், சாலை ஓரங்கள், கால்வாய்க்கரைகள் மற்றும் இருப்புப்பாதை ஓரங்கள் ஆகிய இடங்களில் சமூகநலக்காடுகள் திட்டத்தின் மூலம் பயன்தரும் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் சுமார் 2 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் ஏரிகள், குளங்களில் கருவேல்மரங்கள் போடப்பட்டு தற்போது பலன் அளித்து வருகின்றன.

1981-82 ஆம் ஆண்டு முதல் சமூக நலக்காடுகள் திட்டம் சுவீடன் நாட்டு உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அகில இந்தியாவிலேயே சுவீடன் நாட்டு உதவிபெறும் முதல் மாநிலம் தமிழ்நாடுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

சுவீடன் நாட்டு உதவியுடன் ஐந்து ஆண்டுக் காலத்திற்கு ரூ45 கோடி முதலீட்டில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தினைச் சீரிய முறையில் செயல் படுத்துவதற்கெனச் சென்னையில் உள்ள கூடுதல் வனத் துறைத் தலைவர் தலைமையில் ஐந்து வனப் பாதுகாவலர்களுடன் 21 கோட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆண்டு தோறும் சுமார் 40 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் காடுகள் உருவாக்கப்படுகின்றன.

சமூகக் காடுகள் திட்டத்தில் விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் 500 கன்றுகள் இலவசமாக வழங்கப்படுவதுடன், சிறு ஊக்கத்தொகையும் (இரண்டாண்டுகளுக்கு ரூ 155) வழங்கப்படுகிறது. மேலும் அதிக கன்றுகள் தேவைப்படுவோருக்கு மலிவு விலையில் (10, 15, 25 காசு) கன்றுகள் வழங்கப்படுகின்றன. நுணுக்க உதவியும் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தினால் தமிழகத்தில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 75 லட்சம் மனித நாட்கள் வேலை அளிக்கப்படுகிறது.

**ப. சாமிநாதன்,**
**செய்தி மக்கள்-தொடர்பு அலுவலர், மதுரை.**

ஊராட்சிகளுக்குச் சொந்தமான குளங்களில் போடப்படும் கருவேல்மரங்கள் பயன்தரும் போது கிடைக்கும் மொத்த வருவாயில் 50 சதவிகிதம், ஊராட்சிகளுக்குக் கொடுக்கப்படுகிறது.

நன்கு பராமரிக்கப்படும் குளங்களிலிருந்து சில ஊராட்சிகளுக்குப் பல லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது

மதுரை மாவட்டம் மதுரைக் கோட்டத்தைச் சார்ந்த 4 ஊராட்சிகளுக்கு ரூ 3 லட்சத்து 83 ஆயிரம் வருவாய் கிடைத்துள்ளது

இது போல், ஆண்டுதோறும், பல ஊராட்சிகள், பல லட்சக் கணக்கான ரூபாய்களைச் 'சமூக நலக்காடு'களினால் பெறும்.

**சமூகநலக்காடுகள் வருவாயில் ஊராட்சிகளுக்கு 50 சதவீதம் பங்குதொகையை மதுரையில் 2-3-83 அன்று மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் வழங்கினார்.**





# கன்று பராமரிப்பில் கவனம் செலுத்துவோம்

இந்திய உபகண்டத்தில் ஏராளமான கால்நடைகள் உள்ளன. மாடுகள் மட்டும் 178 மில்லியன்களும், எருமைகள் 60 மில்லியன்களுமாக நம்நாட்டில் வாழ்கின்றன. ஏறத்தாழ உலகிலுள்ள மாடுகளில் 21 சதவிகிதம் நம் நாட்டில் இருக்கின்றன. உலகத்திலுள்ள பாதி எருமைகளின் எண்ணிக்கை நம்நாட்டில் அடங்கியுள்ளது.

நம்நாட்டில் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை 110 மில்லியன்களைக் கடந்து விட்டது. கோழிகள் 135 மில்லியன்கள் அளவில் நம்மிடம் இருக்கின்றன. மேற்கூறிய கால்நடைகளுடன், 700 மில்லியன் மனிதர்கள் நம் இந்தியாவில் இடத்துக்காகவும் உணவுக்காகவும் போட்டி போட்டு வாழ்ந்து வருகின்றனர்.

**டாக்டர்**
**ஏ. சி. கோபாலகிருஷ்ணன்,**
**பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண்மைக் கல்லூரி, தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம், மதுரை.**

**டாக்டர் ஆர். குமாரராஜ்,**
**இணைப் பேராசிரியர், வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மைக் கல்லூரி, மதுரை**

## கன்று பராமரிப்பின் அவசியம்

நம் இந்திய உபகண்டத்தில் ஏறத்தாழ 40 மில்லியன் பசுங்கன்றுகளும், 19 மில்லியன் எருமைக் கன்றுகளும் சலனமற்று நடமாடும் பிராணிகளாக உள்ளன. நம் நாட்டில் கன்றுகள் தாயின் கர்ப்பப்பையில் வளரும் பொழுதே நல்ல ஊட்டச் சத்துக்கள் கிடைக்காததால் வளர்ச்சிகுன்றி பலவீனமாகப் பிறந்தவுடன் எளிதில் நோய்வாய்ப்பட்டு இறந்து விடுகின்றன. மேலும் நல்ல பாரம்பரியமுள்ள கன்றுகள் பராமரிப்பு குறைவினாலும், கன்றுக்கு வேண்டிய பாலை அளிக்காமல் வேண்டுமென்றே பராமரித்து வளர்க்கக் கூடாதென்ற திட்டவட்டமான, தயைதாட்சண்யமற்ற செயலால், டெல்லி, பம்பாய், சென்னை, கான்பூர், கல்கத்தா, பெங்களூர், ஹைதராபாத் போன்ற ஒவ்வொரு நகரத்திலும் ஆண்டுதோறும் ஒரு இலட்சம் கன்றுகள் இறந்துவிடுகின்றன.

நல்ல பாரம்பரியமுள்ள கன்றுகள், பால் அளிக்கும் திறன் வாய்ந்த கன்றுகள், பிற்காலத்தில் எருதுகளாக உழைக்கப் போகும் கன்றுகள் பிறந்து சில மாதங்களில் இறந்து போனால் நாட்டில் பால் உற்பத்தியும், விவசாய உற்பத்தியும் பொருளாதாரமும் பாதிக்கப்படுவதுடன் நல்ல பாரம்பரியமுள்ள கன்றுகளையும் இழக்க நேரிடுகிறது.. நல்ல பாரம்பரியமுள்ள கன்றுகள் பிறந்து பால் அளிக்கும் திறனை பெற்றிருந்தும் நல்ல ஊட்டச்சத்துக்கள் கிடைக்காவிட்டால் வளர்ச்சி குன்றியும், திறனுக்கேற்ற பாலைப் பெறமுடியாத நிலை ஏற்படுகிறது.

தற்சமயம் நம்நாட்டில் 80 மில்லியன் எருதுகள் உள்ளன. சராசரியாக 4.16 எக்டேர் நிலத்திற்கு ஒரு ஜோடி எருதுகளிருக்கின்றன. நம்நாட்டு பசுக்களுக்கு அயல்நாட்டுக் காளைகள் மூலம் கலப்பினப் பசுக்களாக உருவாக்கும் வேளையில், கலப்பினக் காளைகன்றுகள் கவனிப்பாரின்றி பராமரிப்பு குறைவினால் ஏராளமான காளைக்கன்றுகளை இழப்பதால் பிற்காலத்தில் உழவுத் தொழிலுக்கு வேண்டிய எருதுகள் கிடைக்காமல் உழவுத்தொழில் பாதிக்கும்படியான நிலை ஏற்படக்கூடும்.

கன்று பராமரிப்பு நாட்டின் பால் உற்பத்தியைப் பெருக்கவும், நாட்டுக்குத் தேவையான கால்நடைகள் மூலம் கிடைக்கும் சக்தியை ( Animal energy ) பெறவும், விவசாயத் தொழில் மேம்படவும் அடிப்படைத்தளமாகயிருப்பதால் கன்றுகளைப் பேணிக்காத்து வருவது அத்தியாவசியமட்டுமின்றி தொடர்ந்து செயல்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறது.

## கன்று பராமரிப்பு

கன்று பராமரிப்பு தாயின் கருவறையில் வளர்ந்து வரும்பொழுதே தொடங்குகிறது. ஆகையால் பசு கருவுற்றிருக்கும் காலத்தில் சத்துணவு அளித்தால் தான் பிறக்கும் கன்றுகள் ஆரோக்கியமாகப் பிறந்து பாரம்பரியத்திற்கேற்றபடி வளர்ந்து வரக்கூடும். கன்று பிற்காலத்தில் அளிக்கக் கூடிய பாலின் அளவு, உழைக்கும் சக்தி, அனைத்தும் கன்று பருவத்தில் அளிக்கும் உணவு, பராமரிப்பை பொறுத்திருக்கின்றன.

கன்றுகள் பிறந்த இரண்டு மணி நேரத்திற்குள் தாயிடமி

ருந்து முதல் பாலான சீம்பால் ( Colostrum ) கிடைக்க வேண்டும். குறைந்தது கன்றின் எடையில் 10ல் ஒருபாகம் எடை அளவு பால் கிடைக்க வேண்டும். கலப்பினக் கன்றுகள் பிறந்த போது 25 முதல் 30 கிலோ எடையுடனிருக்கும், பிறந்த கன்றுகளுக்கு நாளொன்றுக்கு 2.5முதல் 3 லிட்டர் வரையில் சீம்பால் கிடைக்க வேண்டும். 5 நாள்வயது முதல் 45 நாள் வயது வரையில் கன்றுகளுக்கு தினம் இரண்டு லிட்டர் பாலும் பிறகு 46 முதல் 60 நாள் வயது வரையில் தினம் 1.5 லிட்டர் பால் அளித்து வளர்க்க வேண்டும். பிறகு 3 மாதத்திலிருந்து கன்றுகளுக்குப் பால் தேவையில்லை.

**கன்று ஊட்டச்சத்துணவு**

கன்று ஆறு மாத வயது வரை ஒரு அறையுடன் கூடிய இரைப்பையுள்ள மிருகங்களை (Mono gastric animals ) போன்றது. ஆறு மாத வயது வரை கன்றுகளுக்கு உணவில் நார்ச்சத்து குறைந்து எளிதில் ஜீரணிக்கக்கூடியதும், புரதம் மிகுந்தும், வைட்டமின்கள் கலந்த சத்துணவாகயிருக்க வேண்டும். கன்று ஊட்டச் சத்துணவு கன்று மூன்றுமாத வயதை அடைந்ததும் அவசியம் அளிக்க வேண்டும். கன்று ஊட்டச்சத்துணவில் புரதம் 18 முதல் 22 சதவிகிதமிருக்கும். மொத்த செரிமான பொருட்கள் (Total digestible Nutriens) குறைந்தது 70 சதவிகிதமிருக்க வேண்டும். கன்று ஊட்டச் சத்துணவில் மக்காச் சோளம் 35 பாகம், ராகி அல்லது கேப்பை 17 பாகம், கடலைப் பிண்ணாக்கு 25 பாகம், மீன்தூள் 10 பாகம், கோதுமை தவிடு 10 பாகம், தாது உப்பு கலவை 3 பாகம் சேர்க்க வேண்டும். மேற்கூறிய 100 கிலோ ஊட்டச்சத்துணவுடன், வைட்டமின் A, B2, D3 கலவை 15 கிராமும், ஆண்டிபயாடிக்கலவை 300 கிராமும் சேர்க்க வேண்டும்.

மக்காச்சோளம், ராகியை மாவாக்கி கஞ்சி போல் செய்து ஆறினவுடன், ஊரவைத்த பிண்ணாக்கு, மீன்தூள், தவிடு, தாது உப்புக் கலவை, வைட்டமின் ஆண்டிபயாடிக்கலவை சேர்த்து அளிக்க வேண்டும். சத்துணவுடன் பசுந்தீவனமும், பயறு வகைத் தீவனங்களான குதிரை மசாலா, காராமணிப்பயறை அளித்தால் கன்றுகளுக்கு வேண்டிய புரதம் தாது உப்புக்கள், வைட்டமின்கள் கிடைப்பதுடன், கன்றின் வயிற்றின் எல்லா அறைகளும் விரிவடைந்து நன்கு செயல்பட ஆரம்பிக்கும். இளம் கன்றுகளுக்கு கன்று ஊட்டச்சத்துணவு இரண்டு வார வயதிலேயே 50 கிராம் பாலுடன் கலந்து அளித்து ஒவ்வொரு வாரமும் 100 முதல் 150 கிராம் ஊட்டச் சத்துணவை அதிகப்படுத்தி 3 மாத வயதில் 1 கிலோவும், 4 மாத வயது முடியும்போது 1.5 கிலோவும், 5 மாத வயது முடியும்போது 1.75 கிலோவும் ஊட்டச் சத்து அளிக்க வேண்டும்.

கலப்பினக்கன்று பிறந்தவுடன் நான்கு நாட்களுக்கு 10 லிட்டர் சீம்பாலையும் 60 நாட்கள் வயது வரையில் 102 லிட்டர் பாலையும், தொடர்ந்து 5 மாத வயது முடியும் வரை 130 கிலோ ஊட்டச்சத்துணவை அளித்து வளர்த்தோமானால் 100 முதல் 120 கிலோ வரை உடல் எடையை ஆறு மாத வயதில் அடையும். குறைந்தது தினம் 400 கிராம் அல்லது வாரத்திற்கு 2 முதல் 2½ கிலோ உடல் எடை அதிகரிக்கும்.



கன்று ஆறு மாத வயதை அடைந்தவுடன் கன்று ஊட்டச் சத்துணவை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக மாடுகளுக்கு அளிக்கும் ஊட்டச்சத்துணவை 1.5 கிலோ ஒரு வருட வயது வரையிலும், ஓராண்டிலிருந்து ஒன்றரை வயது வரையில் இரண்டு கிலோ தீவனமும், ஒன்றரை வயதிற்கு மேல் இரண்டரை கிலோ ஊட்டச் சத்துணவை அளித்தால் ஓர் ஆண்டு வயதில் கலப்பினக் கன்றுகள் 180 முதல் 200 கிலோ எடையை அடைவதுடன் 15 முதல் 18 மாத வயதிற்குள் பருவத்திற்கு வந்து பலனடைந்து கர்ப்பமுற்று 25-30 மாத வயதிற்குள் தாய்ப் பசுவாக மாறிவிடுகிறது. குறைந்த வயதில் 25 மாதத்தில் கன்று தாய்ப் பசுவாக மாறி பால் அளிக்க ஆரம்பித்தால் கன்றை பிறந்ததிலிருந்து பசுவாக மாறும்வரையில் ஆகும் பராமரிப்புச் செலவு குறைவதுடன், தன் ஆயுட்காலத்தில் அதிகக் கன்றுகளைப் பெற்று அதிகப் பாலையும் அளிக்கும் வாய்ப்பைப் பெறுகிறது.

நாட்டு மாடுகளின் கன்றுகள் சத்தற்ற வைக்கோலை உட்கொண்டு, நல்ல பராமரிப்புமின்றி வளர்வதால் 3 முதல் 3½ ஆண்டு வயதில்தான் பருவத்திற்கு வருகின்றன. 4 அல்லது 4½ ஆண்டு வயதில் தாய்ப்பசுவாக மாறுகிறது. இதனால் கன்றை நான்கு ஆண்டுகள் வளர்க்கும் விவசாயிகளுக்குக் கன்றுகள் முதலீடாக இல்லாமல், பாரமாகவேயிருக்கின்றன. எருமைக் கன்றுகளும் சத்தற்றதும், வீணாக்கப்பட்ட உணவை உட்கொண்டு, சரிவர கவனிப்பாரற்று வளர்ச்சி குன்றி 4 வயதில் பலனடைந்து 5 ஆண்டு வயதில் கன்றை ஈன்று பால் அளிக்கத் தொடங்குகின்றன.

நாம் பசுங்கன்றுகளையும், எருமைக் கன்றுகளையும் நன்கு பராமரித்து, உணவளித்து வளர்த்தோமானால் பெருகிவரும் மக்கள் தொகைக்குப் பாலும், உழவுத் தொழிலுக்கு வேண்டிய நல்ல எருதுகளும், பால் உற்பத்தித்திறன் வாய்ந்த பசுக்களும், பால் உற்பத்தித் திறனை உயர்த்தும் பொலிகாளைகள் கிடைப்பதுடன், நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் மக்களின் ஆரோக்கியமும் பாதுகாக்கப்படுவது நிச்சயம்.

# பாலிதீன் பைகளில்... சனோலா



பாலிதீன் பைகளில் பால் விற்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால், பாலிதீன் பைகளில் எண்ணெய் விற்பதைப் பார்த்திருக்கிறோமா?

ஜூன் திங்கள் 8-ஆம் நாள், 'சனோலா' எண்ணெய் பாலிதீன் பைகளில் விற்கும் விற்பனையின் அறிமுக விழா, சென்னை, ஓட்டல் கன்னிமாராவில் நடந்தது.

'சனோலா' எண்ணெயினால் என்ன நன்மை?

மற்ற எந்தச் சமையல் எண்ணெய்களை விட கொழுப்புச் சத்து இதில் குறைவு.

உடல் நலத்துக்கு எந்தவிதமான தீங்கையும் ஏற்படுத்தாது.

பொதுவாக அனைவருக்கும், குறிப்பாக இரத்த அழுத்த நோய், இருதய நோய் உள்ளவர்களுக்கு ஏற்றது.

தேங்காய் எண்ணெயில் அதிகக் கொழுப்புச் சத்து அதாவது 90 சதவிகிதக் கொழுப்புச் சத்து உள்ளது. ஆனால், சலோனாவில் சுமார் 7 சதவிகித அளவே உள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகத் தலைவர் திரு கே. லியாகத் அலிகான் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில் சில முக்கியத் தகவல்களைத் தெரிவித்தார்:

''மழை இல்லாத வறட்சி நிலையிலும், எங்கும் சூரியகாந்தி செடிகளைப் பயிர் செய்ய முடியும். சூரியகாந்தி செடி விதையிலிருந்து இந்த எண்ணெய் எடுக்கப்படுவதால் விவசாயிகளுக்கும் வருமானம் கிடைக்கும். அதே சமயத்தில் குறைந்த விலையில் சமையல் எண்ணெய் கிடைக்கும் என்பதால், தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் சனோலா எண்ணெய் உற்பத்தியில் கடந்த சில ஆண்டுகளாக ஈடுபட்டுவருகிறது. பிளாஸ்டிக் டப்பாக்களில் எண்ணெய்யை அடைத்து விற்பனைக்கு விடுவதால், டப்பா விலையும் கூட்டி விற்க வேண்டியுள்ளது. இதனால் கூடுதல் விலை நிர்ணயிக்க வேண்டியுள்ளது. ஆகவே, விற்பனை விலையை மேலும் குறைக்க பால் கவர்களைப் போல், பிளாஸ்டிக் பைகளில் எண்ணெய்யை அடைத்து விற்பனை செய்யமுடிகிறது. இதனால் ரூ.1.70 விலை குறைக்கப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம், இந்த ஆண்டு 11 கோடி ரூபாய்க்கு உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்துள்ளது. கடந்த ஆண்டு 7 கோடியாக இருந்தது. இந்த ஆண்டு 11 கோடியாக உயர்ந்துள்ளது.

இந்த ஆண்டு 2½ இலட்ச ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது. மத்தியப் பிரதேசத்திலுள்ள அக்ரோ நிறுவன கடுகு எண்ணெய் தொழிற்கூடத்தை இது தமிழகத்தில் நிறுவ உள்ளது. ஏறக்குறைய 15 இலட்ச ரூபாய் முதலீட்டில் கடுகிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை இந்த இணையகம் நிறுவும். 50 இலட்ச ரூபாய் முதலீட்டில் நடந்து வரும் சென்னையில் உள்ள மீன் வலைத் தொழிற்சாலையை விரிவுபடுத்தும் வகையில், 11 இலட்ச ரூபாய் செலவில் ஜப்பானிலிருந்து புதிய இயந்திரம் ஒன்று விரைவில் பொருத்தப்படும். இதன் மூலம் ஏழை நடுத்தர மீனவர்களின் தேவைகள் முழுமையாக நிறைவேற்றப்படும்.

(எச்.எம்.டி) ஜெட்டார், இந்துஸ்தான் ஆகிய டிராக்டர்களையும், மிட்சிபுசி, குபேட்டா பவர் டில்லர் ஆகியவற்றை விவசாயிகளுக்கும், எஸ்கார்ட் போர்டு ஆகிய டிராக்டர்களுடன் மேற்கூறிய டிராக்டர் பவர்டில்லர் வாங்கி அரசு நிறுவனங்களுக்கும் நியாயவிலையில் விற்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் விவசாயிகள் பயனடைந்து வருகிறார்கள். இதற்குத் தேவையான டிராக்டர் பவர்டில்லர், உதிரிப் பாக விற்பனைக் கூடங்களை, சென்னை மதுரை, மதுராந்தகம், கோவை, திருநெல்வேலி, திருச்சி, சேலம், பண்ருட்டி, ஈரோடு, தஞ்சாவூர், பாண்டிச்சேரி, காரைக்கால், மதுராந்தகம், வேலூர் ஆகிய இடங்களில் அக்ரோ நிறுவனம் அரசின் அங்கீகாரத்துடன் நடத்தி வருகிறது. உடுமலைப்பேட்டையில் விவசாயிகள் தேவையை முன்னிட்டு இம்மாதக் கடைசியில் டிராக்டர் உதிரிப் பாக விற்பனைக்கூடம் ஆரம்பிக்கப்படும்.

பருத்தியிலிருந்து விதையைப் பிரித்தெடுக்கும் காட்டன் ஜின்னிங் தொழிற்கூடம் தேனி, உடுமலை, சேலம், விழுப்புரம் ஆகிய இடங்களில் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

கைகளினால் சோப்புத் தயாரிக்கும் தொழிற்சாலை மேட்டூர், திருச்சி, தஞ்சை ஆகிய ஊர்களில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. கோவை, மதுரை, ஹைதராபாத்தில் நடத்தியதைப் போன்று 'சனோலா அறிமுக விழா' டெல்லியிலும் விரைவில் நடக்க உள்ளது. ஆண்டுக்கு 750 டன் விற்பனையான சனோலா எண்ணெய் தற்போது 1300 டன் விற்பனையை எட்டியுள்ளது.

1981-82-ல் செய்த சூரியகாந்திவிதை கொள்முதலை விட, 1500 டன் அதிகமாக 1982-83ல் தமிழக அக்ரோ நிறுவனம் கொள்முதல் செய்து 3500 டன் சூரியகாந்தி விதை உற்பத்தியை எட்டியுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் புனக்குளத்திலுள்ள 1 கோடி ரூபாய் செலவிலான தவிட்டிலிரு

—பி. வி. கிரி.

ந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலைகளின் அனைத்துப் பணிகளும் முடிவடைந்து விட்டன. வரும் ஜுலை -ஆகஸ்டில் தனது உற்பத்தியைத் துவங்கும். இதற்கு வெளிநாட்டில் நல்ல மார்க்கெட் இருக்கிறது.

இந்தத் தொழிற்கூடத்தின் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் 250 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். உரம்-பூச்சிக் கொல்லி மருந்துகளையும் அக்ரோ நிறுவனம் விவசாயிகளுக்கு விற்று வருகிறது.

கடந்த ஆண்டு ஏற்பட்ட கடுமையான வறட்சியிலும் மதுரை முகவை மாவட்டத்தில் மட்டும்






1 கோடியே 62 இலட்ச ரூபாய்க்கு உரம் விற்பனையாகியுள்ளது. திருநெல்வேலியில் 85 இலட்ச ரூபாய்க்கும் உரம் விற்பனையாகியுள்ளது. மதுரை மாவட்டத்தில் மட்டும் 1000டன் சூரியகாந்தி விதை கொள்முதல் செய்ய நிர்ணயித்த குறியீட்டைக் காட்டிலும் 300 டன் அதிகமாகக் கொள்முதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தமிழகம் ஏற்றுமதி செய்யும் பொறியியல் பொருட்கள் !

மத்திய வர்த்தக அமைச்சகத்தின் நிறுவனமான பொறியியல் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சிக் குழு, நடப்பு ஆண்டில் (1983-84) தென் மாநிலங்களிலிருந்து ரூ. 175 கோடி மதிப்புள்ள பொறியியல் பொருட்களை ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது. இதில் தமிழகம் ரூ. 65 கோடி மதிப்புள்ள பொறியியல் பொருட்களை ஏற்றுமதி செய்யும்.

## பத்து ரூபாய் அஞ்சல் தலை

அஞ்சல் தலை சேகரிப்போருக்கு ஒரு இனிப்பான செய்தி!

தற்போதைய ஆறாவது அஞ்சல் தலை தொடர்வரிசையில்; காடு வளர்ப்பு பற்றிய பத்து ரூபாய் அஞ்சல் தலையொன்றை அஞ்சல் தந்தித்துறை விரைவில் வெளியிடவிருக்கின்றது.



# உங்களுக்காகவே ஊரக வளர்ச்சித் துறை

மனித வாழ்வில் தேவைகளும், பிரச்சினைகளும் தவிர்க்க முடியாதவை. தனிமனிதனைப் பொறுத்தவரையில், தனக்கென தன் குடும்பத்திற்கென அவன் பல தேவைகளை நிறைவு செய்ய வேண்டியுள்ளது - பல பிரச்சினைகளுக்கு அவன் முற்றுப் புள்ளி இட வேண்டியுள்ளது. தனி மனிதனைப் போலவே சமுதாயமும் பல தேவைகளையும் பிரச்சினைகளையும் சந்திக்க வேண்டிய நிலையிலுள்ளது. தனிமனிதன் தன் குடும்பத்துத் தேவைகளைத் தீர்த்துக் கொள்கிறான். சமுதாயத்தின் தேவைகளைத் தீர்க்கும் பொறுப்பு ஆளுகின்ற அரசிடம் விடப்படுகிறது. பல தனி மனிதர்கள் சேர்ந்து ஒரு குடும்பமாக உருவாகி, பல குடும்பங்கள் சேர்ந்து சமுதாயம் உரு



வாகிறது. சமுதாயத்தின் தேவைகளை மட்டும் தீர்ப்பதே தன்னுடைய கடமை என்று தமிழ்நாடு அரசு எண்ணுவதில்லை. சமுதாயத்தின் நலனும், தனிப்பட்டவர்களின் நலனும் இரண்டு கண்கள் போல் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தனிப்பட்டவர்களின் நலன்களைப் பேணி அவர்கள் வழியாகச் சமுதாயத்தை உயர்த்தும் பணியையும் ஊரக வளர்ச்சி - உள்ளாட்சித்துறை ஆற்றி வருகிறது.

சமுதாயத்தின் தேவைகள் என்கின்றபோது, நல்ல சாலை வசதி, குடிநீர் வசதி, கல்வி வசதி, மருத்துவ வசதி போன்ற அடிப்படைத் தேவைகள் முதலிடம் வகிக்கின்றன. சமுதாய வளர்ச்சித் திட்டம் செயல்படத் தொடங்கி முப்பது ஆண்டுகளுக்கு மேல் நாம் கடந்து வந்த பின்பு கூட, தன்னிறைவு என்ற நிலையே நம் சமுதாயம் பெற்றிடவில்லை. இந்தக் குறையை உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமுதாயம் தன்னிறைவு பெறுவதற்காக

**எச். பி. என். ஷெட்டி,**
**இ.ஆ.ப.,**
**ஆணையாளர்-அரசுச் செயலாளர்,**
**ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை**

அறிமுகப் படுத்திய திட்டம்தான், தன்னிறைவுத் திட்டம்,

தமிழக கிராமப் புறங்களில் அடிப்படைத் தேவைகளை நிறை செய்கின்ற இத்திட்டம் இரண்டு கட்டங்களில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டு, மூன்றாவது கட்டப்பணி, மன நிறைவுடன் முடியும் தருவாயில் உள்ளது. ''ஊராட்சிப் பகுதிகளுக்கு மட்டும் தானா தன்னிறைவுத் திட்டம்? எங்களுக்குக் கிடையாதா?'' எனப் பேரூராட்சிகளும், நகராட்சிகளும் வினா எழுப்பும் முன்பே, தன்னிறைவுத் திட்டம் பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

சமுதாயத்திற்கெனத் தன்னிறைவுத் திட்டம் அமைந்தது போல் சமுதாயத்திற்கும் தனிப்பட்டவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைந்தது, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்.



ஊர்ப்புறங்களில் உள்ளவேலையில்லா நிலையைக் களைந்து, உழைக்க முன்வரும் அனைவருக்கும், செய்யும் வேலைக்கு ஈடாக அரிசியும், பணமும் அளிக்கப்படும். இத்திட்டம், தனிமனிதனின் தேவைகளைத் தீர்ப்பதோடு சமுதாயத்தின் தேவைகளையும் தீர்த்து வருகின்றன. பள்ளிக் கூடங்கள், கழிவு நீர்க் கால்வாய்கள், சிறிய நீர்ப் பாசனத் திட்டங்கள் மேம்பாடு, குடிநீர்க் கிணறுகள் வெட்டுதல், கழிவு நீர்க் கால்வாய்கள் அமைத்தல் போன்ற 50க்கும் மேற்பட்ட பல்வேறு பணிகள், ஊர்ப் புறங்களில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் பெயரால் நிறைவேற்றப்படுகின்றன. சமுதாய உடைமைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

வேளாண்மையையே நம்பி வாழும், நம் கிராமப்புற உழைக்கும் வர்க்கத்தினர் வேளாண்மைத் தொழில் இல்லாத நாட்களில பட்டினியால் வாடாமலும், வீணாகப் பொழுதைக் கழிக்காமலும் உழைத்து, தாலும் பொருள் ஈட்டி, சமுதாயத்திற்கும் உதவும் வகையில் அமைந்துள்ளது, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்.

தனிப்பட்ட குடும்பங்களின் மேம்பாடுகளை எண்ணத்தில் கொண்டு நிறைவேற்றப்படுவது "ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்". தனிப்பட்ட குடும்பங்களை முன்னேற்றுவதன் மூலம், தனிப்பட்ட குடும்பங்களைக் கொண்ட சமுதாயம் முன்னேறுவதற்கு வழிவகை செய்கிறது இத்திட்டம்.

இத்திட்டத்தால் ஒரு தந்தை மட்டுமன்றி தாய், மற்றும் மகன், மகள் ஆகிய அனைவரும் பயன் பெற வாய்ப்பு உள்ளது.

இத்திட்டத்தின் கீழ், கறவை மாடுகள், வண்டி மாடுகள், ஆடு ஆகியவை வாங்க கோழிப் பண்ணை அமைக்க உதவி போன்றவற்றிற்கு வசதிகள் உண்டு. அது மட்டுமின்றி, இளைஞர்களுக்கும் இளம்பெண்களுக்கும் பல்வேறு சிறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. தனக்குத் தானே தொழில் புரிந்து, எவருடைய தயவையும் எதிர்பார்க்காமல் இளைஞர்களும், இளம் பெண்களும் தம் சொந்த வருவாயில் வாழும் வகையில் இத்தொழில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இளைஞர்களைப் பொறுத்த வரையில், வானொலிப் பெட்டிகள், வாகனங்கள் பழுது பார்க்கும் பயிற்சி, நீர் இறைவை, மின் எந்திரத்திற்குக் கம்பி சுற்றும் பயிற்சி போன்றவைகளும், பெண்களுக்கு கைவினைப் பொருள்கள் செய்தல், தட்டச்சு, தையல் பணி ஆகியவைகளில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன.

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியமும் ஒரு பிரிவாக எடுத்துக் கொள்ளப்பட்டு ஊர் நல அலுவலரால், இத்திட்டத்தினால் பயன்பெறத் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களில் குறைந்தது 50 சதவீதத்தினர் ஆதிதிராவிடர்களாக இருத்தல் வேண்டும். தவிர பொதுவான முறையில் வேளாண்மை, சிறிய நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றும்போது அவற்றின் முதலீட்டுத் தொகையில் குறைந்தது 30 சதவீதம் அச்சமுதாயத்தினரால் நன்மைக்கு வகை செய்யும் முறையில் அமைதல் வேண்டும். இத்திட்டத்தில் 600 குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக வைத்துக் கொண்டால், அதில் 200 பெண்கள் நிச்சயம் நன்மையடைய வேண்டுமென்பது, தமிழ்நாடு அரசின் கண்டிப்பான ஆணையாகும்.

சிறிய விவசாயிகளுக்கு முதலீட்டுத் தொகையில் 25 சதவீதமும், மற்றவர்களுக்கு 33 1/3 சதவீதமும் உதவித் தொகையாக அளிக்கப்படுகின்றன. மலைவாழ் மக்களுக்கு 50 சதவீதம் வரை உதவியுண்டு. ஆக உதவியாக அளிக்கும் ஒவ்வொரு







ரூபாய்க்கும், இரண்டு அல்லது மூன்று ரூபாய் வரை கடன் தொகை தேவையாகிறது. இதனை கடன்தரும் பொது நிறுவனங்களும் தேசியவங்கிகளும் அளிக்கின்றன.

இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தில், பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் திங்கள் தோறும் ரூ.50 உதவித் தொகை அளிக்கப் படுகிறது.

மேற்கூறிய மூன்று பெருந் திட்டங்களையும் ஒன்றிணைத்து காணும்போது, கிராமப் பெருமக்களில் பொதுவான, தனிப்பட்ட மற்றும் குடும்பங்களின் தேவைகள் சிரமமில்லாமல் தீர்த்துவைக்கப்படுகின்றன. சான்றாக, ஊருக்குப் பொதுவான குடிநீர், மருத்துவர் சாலை வசதிகள், பள்ளிக்கட்டிடங்கள், சிறிய நீர்ப்பாசன வசதிகள் தன்னிறைவுத் திட்டத்திலும், சாலைகளை ஒழுங்குபடுத்துதல், கால்வாய்களுக்குத் தடுப்புச் சுவர் கட்டுதல், சமுதாயக் கட்டடங்கள், சிறிய பாலங்கள், தாழ்வான இடத்திலிருந்து உயரமான இடத்திற்குச் செல்ல படிக்கட்டுகள் போன்ற கணக்கற்ற வேலைகள் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் நடைபெறுவதோடு, அன்றாடம் வேலையின்றி வாழும் ஆண், பெண், உழைப்பாளிகளுக்கு உடனே வேலையும் அரிசியும் கிடைத்து, இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

தனிப்பட்ட முறையிலே குடும்பவாரியாக என்னென்ன நன்மைகள் என நோக்கினால், மேற்கூறிய திட்டங்களிலே, வேலை கிடைப்பது ஒருபுறம் இருக்க, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் குடும்பத்திலுள்ளவர்கள் தனித்தனியே நன்மையடையலாம். சான்றாக குடும்பத் தலைவர், உழவு அல்லது வண்டி மாடுகளை உதவித் தொகையுடன் பெற்றுக் கொள்ளலாம். குடும்பத் தலைவியோ அல்லது பெண்ணோ, தையல் அல்லது பொம்மை பயிற்சியில் பங்கெடுத்து, உதவித் தொகையையும் பெற்று, தொழிலைக் கற்று, பொருள் ஈட்டலாம். அக்குடும்பத்தில் உள்ள பையன் வானொலிப் பெட்டிகள், வாகனங்கள் செப்பனிடப் பயிற்சி பெற்று தொழில் செய்து சம்பாதிக்கலாம். ஆனால், இதற்கென அரசு ஒரு குடும்பத்திற்கு அளிக்கும் உதவித் தொகை ரூ.3,000க்கு மேற்படக்கூடாது. இத்தொகை ஒரு குடும்பம் வறுமையில் உழலாமல், சிறிது சிறிதாகத் தொய்வின்றி முன்னேற நிச்சயமாகப் போதுமானதேயாகும். குழந்தைகளுக்கு நண்பகலில் சத்துணவு வயிறாறக் கிடைக்கிறது. இவையெல்லாம் தவிர, ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு வசதியுடன் மின் விளக்கு வசதியும், கூடுதலான உதவித் தொகையும் கிடைக்கிறது.

மேற்கூறிய திட்டங்களினால் உங்களை வளம்பெறச் செய்ய ஊர் நல அலுவலரும், வட்டார வளர்ச்சி அலுவலரும் உதவுவர். அவர்களை நாடி உங்கள் நிலையை விளக்கி உங்களையும் உங்கள் குடும்பத்தினையும் நாட்டையும் வளமுடையதாக்க முன்வரவேண்டியது உங்கள் பொறுப்புகளில் முதன்மையானதாகும்.







# தமிழ் நாட்டில் கல்லூரிக்கல்வி வளர்ச்சி

டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம்,
கல்லூரிக் கல்வி இயக்குநர்.

கல்லூரிக் கல்வித் துறையானது 1982-83 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து முன்னேறி வருகிறது. இத்துறை 188 கலை-அறிவியல் கல்லூரிகள், 23 கல்வியல் கல்லூரிகள் மற்றும் சிறப்புக் கல்வி நிறுவனங்களாக 24 உடற் பயிற்சிக் கல்வியல் கல்லூரிகள், கீழ்த்திசை மொழிக் கல்லூரிகள், இசைக் கல்லூரிகள், இவைகளைப் பொறுப்பேற்று நடத்துகிறது. கல்லூரிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் புள்ளி விவரப் பட்டியல் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பு நிலைகளில் மாணவர் சேர்க்கையை நிறுத்தியதன் விளைவாக ஏற்பட்ட இட நெருக்கடியைத் தவிர்க்குமுகமாக, சிதம்பரத்தில் ஒரு புதிய அரசுக் கல்லூரி துவக்கப் பெற்றது. மேலும், தற்போதுள்ள மற்ற அரசு/தனியார் கல்லூரிகளில் புதிதாக 22 நிறை நிலை பட்டப்படிப்பு வகுப்புகளும் மற்றும் 33 இளநிலை பட்டப்படிப்பு வகுப்புகளும் துவக்கப்பட்டுள்ளன. சேலத்தில் ''ஸ்ரீ சாரதா மகளிர் உடற் பயிற்சிக் கல்வியல் கல்லூரி'' என்ற பெயரில் ஒரு புதிய தொழிற் கல்லூரி துவக்கப்பட்டுள்ளது.

பொதுவிதி 10 (ஏ) (1) -ன் கீழ் நியமனம் செய்யப்பட்ட தற்காலிகப் பணியாளர்களின் பணிநிலையை ஒழுங்குபடுத்தத்தமிழ்நாடுதேர்வாணைக் குழுவினரால் ஒரு சிறப்புத் தேர்வு நடத்தப்பட்டது. இந்தக் குழு 224 உதவிப் பேராசிரியர்களையும், 160 பயிற்றுநர்/விளக்குநர்களையும் தேர்வு செய்தது. இதில் பயிற்றுநர் - விளக்குநர்களின் பணிநிலை ஒழுங்குபடுத்தப்பட்டு விட்டது. உதவிப் பேராசிரியர்களின் பணிநிலை ஒழுங்குபடுத்தப்பட்டு வருகிறது.

இளநிலை கல்வித் தகுதி பெற்ற பயிற்றுநர் விளக்குநர்கள் ஆகியோரை நிறைநிலை பட்டப்படிப்பு வகுப்புகளில் சேர்ந்து படிப்பதற்கு முழுச்சம்பளம், படித்தொகைகளுடன் அனுப்பும் திட்டத்தை அரசு ஏற்றுள்ளது. அதன்படி 1981-82, 1982-83 ஆகிய இரு ஆண்டுகளில் 60 பயிற்றுநர்/விளக்குநர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும் 1983-84லிருந்து ஒவ்வொரு ஆண்டும் 60 ஆசிரியர்களை நிறை நிலை பட்டப்படிப்புக்கென அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பத்து ஆண்டுகள் தகுதியுடைய பணிக்காலம் முடித்த உதவிப் பேராசிரியர்கள் 1.4.1980 முதல் பேராசிரியர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர். இந்த ஆண்டில் அரசு/தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் 1444 உதவிப் பேராசிரியர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

மூன்றாண்டுப் பணிக்காலத்தை நிறைவு செய்து தம் துறையில் நிறைநிலை பட்டம் பெற்ற பயிற்றுநர் விளக்குநர்கள் 1.12.1977 முதல் உதவிப் பேராசிரியர்களாக உயர்த்தப்பட்டு வருகிறார்கள். இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் 76 பயிற்றுநர்/விளக்குநர்கள் உதவிப் பேராசிரியர்களாகப் பணி மேம்பாடு அடைந்துள்ளனர்.

கடந்த ஆண்டுகளைப் போலவே, நடப்பாண்டிலும் பல்கலைக் கழக மானியக்குழுவின் தரம்மேம்பாட்டுத் திட்டம் ( FIP ) செயல்முறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் 198 ஆசிரியர்கள் எம்ஃபில் (M.Phil) மற்றும் பிஎச்.டி. ( Ph.D. ) படிப்பிற்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

750க்கு அதிகமான மாணவர்கள் உள்ள கல்லூரி முதல்வர்களுக்கு ரூ.250-ம் 750க்கு குறைவான மாணவர்களுள்ள கல்லூரி முதல்வர்களுக்கு ரூ.200-ம், சிறப்பூதியமாக வழங்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இது 1.9.82 லிருந்து அமலுக்குக் கொண்டுவரப்பட்டது.

கல்லூரிகளில் பணிபுரியும் பகுதிநேர ஆசிரியர்களின் மாதாந்திர ஊதியம் ரூ. 220 லிருந்து ரூ. 275க்கு உயர்த்தப்பட்டுள்ளது.

கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் பணிக்காலத்தில் இறந்து போனால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் வேலை கொடுக்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு தேர்வாணைக்குழு நடத்தும் தேர்வுகளின் மைய மதிப்பீடு தொடர்பான பணிகளில் ஈடுபடும் தனியார் கல்லூரி ஆசிரியர்களின் பணிக்காலத்தை மாற்றுப் பணிக்காலமாகக் கருதும்படி அரசு ஆணையிட்டுள்ளது.

மேல்பதவிகளுக்குப்பதவி உயர்வு பெறும் போது தமிழ்நாடு அடிப்படை விதி 22(பி)ன்படி ஊதியம் நிர்ணயம் செய்யும் சலுகைகளை அரசு மானியம் பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் பிற பணியாளர்களுக்கும் அரசு அளித்துள்ளது.

அரசு மானியம் பெறும் கல்லூரிகளில் எந்தெந்தப் பாடங்களில் உபரி ஆசிரியர்கள் இருந்தனரோ அவர்களுக்குப் 'பணிமாற்று ஏற்பாடு செய்யும் திட்டம்' இந்த ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுகிறது. அவ்வாறு உபரி ஆசிரியரல்லாத பாடங்களைப் பொறுத்த வரை தனியார் கல்லூரி நிர்வாகங்களைப் பல்கலைக் கழகத்தின் அனுமதியுடன் காலியிடங்களை நிரப்பிக் கொள்ள அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய மாநில அரசுகள் வழங்கும் பலதரப்பட்ட படிப்புதவித் திட்டங்கள் இந்த ஆண்டிலும் தொடர்ந்து செயல்பட்டன. இதனால் சமூகத்தில் பிற்பட்ட பெரும்பாலான மாணவர்கள் அவர்கள் படிப்பை இடையூறின்றித் தொடர முடிந்தது. மேல்நிலைப் பள்ளி இறுதியாண்டில் அறுபது விழுக்காட்டுக்கு மேல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்ற தாழ்த்தப்பட்ட/பழங்குடியின் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு இடைக்காலத் தகுதிக் கொடையாக ரூ.300/- வீதம் வழங்கப்படுகிறது. பயிற்று மொழி தமிழில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.180/- ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இதற்காக நடப்பாண்டில் ரூ.41,30,020/- ஒதுக்கப்பட்டது.

கடந்த ஆண்டுகளைப் போலவே நடப்பாண்டிலும் கல்லூரிகளில் பகுதி-2 மற்றும் இளநிலை/நிறைநிலை பட்டப்படிப்பு வகுப்புகளில், ஆங்கில மொழி பயிற்றும் தரத்தை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்சாக மறுபயிற்சி மற்றும் பணியிடைப் பயிற்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இப்பயிற்சி ஆங்கில மொழி ஆசிரியர்கள் தற்கால ஆங்கிலமொழி பயிற்றுவிப்பு முறைகளை அறிந்து கொள்ள உதவியது. இத்திட்டங்களின் மூலம் மேலும் பல ஆசிரியர்கள் பயன்பெறும் பொருட்டு, முக்கியமாகக் கிராமப்புறம் மற்றும் கல்வியில் பின் தங்கிய பகுதிகளில் விரிவு படுத்தப்பட உள்ளது.

கல்லூரிகளில் காணும் மாணவர்கள் அமைதியின்மை முந்தைய ஆண்டுகளைவிட நடப்பு ஆண்டில் வெகுவாகக் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலை இனிவரும் ஆண்டுகளிலும் தொடரலாமென நம்பப்படுகிறது.

பொதுவாக மொத்தத்தில் இந்த ஆண்டில் இத்துறை சிறந்த மேம்பாடு கண்டுள்ளது எனக் கூறலாம்.

| | கல்லூரியின் வகை | கல்லூரிகள் | | மாணவர்கள் | ஆசிரியர்கள் |
|---|---|---|---|---|---|
| | | அரசு | தனியார். | | |
| 1) | கலை-அறிவியல் கல்லூரிகள் | 53 | 135 | 1,82,665 | 13,408 |
| 2) | கல்வியல் கல்லூரிகள் | 7 | 16 | 2,886 | 233 |
| 3) | உடற்பயிற்சிக் கல்வியல் கல்லூரிகள் | — | 4 | 401 | 36 |
| 4) | கீழ்த்திசை மொழிக் கல்லூரிகள் | — | 15 | 1,615 | 153 |
| 5) | சமூகப் பணி கல்வி நிறுவனங்கள் | — | 2 | 243 | 25 |
| 6) | ஊரக உயர் கல்வி நிறுவனம் | — | 1 | 623 | 76 |
| 7) | இசைக் கல்லூரிகள் | 2 | — | 563 | 45 |
| | மொத்தம் | 62 | 173 | 1,88,996 | 13,976 |



# சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாப்போம்

ஜூன் மாதம் 5 ஆம் நாள்:

உலகச் சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பு நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சுற்றுப்புறச் சூழ்நிலையைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை மக்களுக்கு எடுத்துரைக்க இந்நாள் பயன்படுகிறது.

ஜூன் 4 ஆம் நாளன்று, சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகமும், பொதுச்சுகாதாரப் பொறியாளர் நிறுவனத்தின் சென்னைக் கிளையும், தமிழ்நாடு, நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு வாரியமும் இணைந்து சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பு நாளைக் கொண்டாடின.

வாரியத்தின் உறுப்பினர் — செயலர் திரு எஸ். கோவிந்தராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''1972 ஆம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து மாநாடு ஒன்று நடைபெற்றது. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5 ஆம் நாளை சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பு நாளாகக் கொண்டாட வேண்டும் என்று அங்கு முடிவெடுக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டில் இந்திய அரசு, தூய்மைப் பாதுகாப்புக் குறித்து ஒரு சட்டம் இயற்றியது. 1980ல் இதற்கென ஒரு துறையை இந்திய அரசு உருவாக்கியது. மைய அரசின் சட்டத்தை மாநில அரசுகள் ஏற்றுச் செயல்படுத்தி வருகின்றன என்றாலும் இதுபோன்ற சட்டங்கள் போதுமானவையாக இல்லை. உள்ளாட்சிகள் — பொதுமக்கள் அனைவரும் மிகவும் எச்சரிக்கையுடனும் பொறுப்புடனும் இது விஷயத்தில் செயலாற்றினால் தான் நாம் வெற்றி பெற முடியும்''.

வாரியத்தின் முன்னாள் தலைவர் திரு மியாகான் தமது உரையில் தெரிவித்தார் :

''1974 மார்ச் மாதத்தில் தூய்மைப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆறு மாதத்திற்குள் (1974 செப்டம்பரில்) வாரியம் அமைக்கப்பட்டது. நான் முதல் உறுப்பினர்—செயலராக நியமிக்கப்பெற்றேன். சில அரசு அலுவலர்களும் சில தொழில் அதிபர்களும் உறுப்பினர்களாக நியமிக்கப் பெற்றனர்.

“டிசம்பர் மாதவாக்கில் கோவா கடற்கரையில் ஏராளமான மீன்கள் செத்துக் கிடக்கும் தகவல் எங்களை எட்டியது. உடனே அங்கு விரைந்தோம். அந்த நிலை ஏற்படுவதற்குக் காரணம் யார் என்று ஆய்வு செய்தோம். அங்குள்ள உரத் தொழிற்சாலைதான் அதற்குக் காரணம் என்பதைக் கண்டறிந்தோம். உரத் தொழிலுக்குப் பயன்படும் அம்மோனியா கழிவை மீன்கள் சாப்பிட்டு இறந்து போகின்றன என்னும் உண்மை கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின்னர் அந்நாளைய கோவா அரசின் உதவியுடன் அத்தொழிற்சாலைக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டதன் மூலம் மீன்கள் சாகும் நிலை தவிர்க்கப்பட்டது. இதுபோன்ற பல பெரும் பெரும் பிரச்சினைகளை நாங்கள் சந்தித்திருக்கிறோம். ''

பொறியாளர் திரு. எம். துரைராஜன் தமது உரையில் குறிப்பிட்டார்:

''உலகம் வெகு வேகமாக நடைபோடுகிறது. நாம் பல வகையிலும் இயற்கையை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறோம். நாம் செய்யும் ஒவ்வொரு செயலின் மூலமாகவும்— நமது சூழ்நிலைகளை மாசுபடுத்திக் கொண்டிருக்கிறோம். காற்று, புவி, நீர் ஆகிய யாவற்றையும் நாம் அசுத்தப்படுத்துகிறோம். தூய்மைக் கெடுப்பைத் தடுப்பதற்குக் கடும் நடவடிக்கைகளை நாம் எடுக்காவிட்டால்— நாம் மிக மிகத் துன்புறுவோம்.''

திரு டி. ஆர். வி. மணி தமது உரையில் தெரிவித்தார் :

''முற்காலத்தில் எல்லாம் வாழ்க்கை எவ்விதச் சிரமமுமின்றி நடைபெற்றது. இன்றைய நாளில் பல்வேறு இன்னல்களை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

'' அந்நாட்களில் மாவட்ட ஆட்சியாளரைப் போன்ற பதவியில் உள்ளவர்கள் குதிரையின் மீதமர்ந்து சென்றனர். இந்நாளில் மோட்டார் வாகனங்களில் செல்கின்றனர். அந்த மோட்டார் வாகனங்கள் எழுப்பும் புகை மண்டலம், கரியமில வாயுவை வெளித்தள்ளி— சுற்றுப்புறச் சூழ்நிலையை மாசுபடுத்துகிறது. இவ்வகையில் தொழிற்சாலைகளும் சளைக்கவில்லை. எனவே, சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாப்பதில் பல அரும்பெரும் நுட்பங்களை நாம் கையாள வேண்டும். சுற்றுப்புறச் சூழலைக் கெடுப்பவர்களுக்குக் கடும் தண்டனை விதிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் மனித இனத்தையும்— இயற்கை வளத்தையும் நாம் பாதுகாக்க முடியும்''.



கண்காணிப்புப் பொறியாளர் திரு. சுந்தரமூர்த்தி தமது உரையில் குறிப்பிட்டார்:

''நெருப்பாற்றின் மீது நடப்பது போன்ற வகையிலே உள்ளது நமது வாழ்க்கை முறை. சுற்றுப்புறச் சூழ்நிலை என்றால் என்ன, அது எவ்வாறு மாசுபடுத்தப்படுகிறது, அதை எப்படி நிவர்த்தி செய்வது என்பன போன்ற அடிப்படை உண்மைகளை நமது நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறுவது நமது பொறுப்பாகும்.''

அடுத்து உரையாற்றிய சென்னை மாவட்ட ஆட்சியாளர் திருமதி யாஸ்மின் அஹமது, இ. ஆ. ப., தெரிவித்ததாவது:

''சுற்றுப்புறச் சூழல் மாசுபடுத்தப்படும் செய்தியை விடுதவறாமல் சென்று நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். நான் தினமும் வீட்டிலிருந்து அலுவலகம் செல்லும்போது கவனித்து வருகிறேன். காற்றிலே எவ்வளவு நச்சுத்தன்மை கலக்கிறது என்பதை! காற்றிலே மட்டுமல்ல நீரிலும் மாசு ஏற்படுகிறது.

“பெரும் பெரும் கழிவுக் குழாய்களின் மூலமாக வெளிவரும் புகை நகரத்தையே திக்குமுக்காட வைக்கிறது. காசம், ஆஸ்துமா போன்ற நோய்களை அது ஏற்படுத்துகிறது.

''சமீபத்தில், பாடப் புத்தகம் ஒன்றை நான் படிக்கும் வாய்ப்புப் பெற்றேன். அதிலே இயற்கைப் பாடம் தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதை நான் உணர்ந்தேன். மக்கள், நகரங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும், சுகாதாரமான முறையில் எப்படி இயங்க வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் அதில் தெளிவாகச் சொல்லப்பட்டிருந்தது.

“சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பின் அவசியம் குறித்துப் பொதுமக்களுக்குப் பலவகையிலும் நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். திரைப்படங்கள் சிலைடுகள் - சுவரொட்டி விளம்பரங்கள் - பத்திரிகைகள் ஆகியவற்றின் மூலமாகப் பொதுமக்களுக்கு நாம் அறிவுறுத்த வேண்டும்.

“பொதுச் சுகாதாரப் பொறியாளர் நிறுவனம் - சென்னை மையம் - தமிழ்நாடு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றின் தலைவர் திரு ஆர். கிருஷ்ணசாமி தமது தலைமை உரையில் தெரிவித்தார்:

''மக்கள் தொகைப் பெருக்கம் அதிகமாகும்போது இயற்கை வளம் பாதிக்கப்படுகிறது. காற்று, நீர், புவி மூன்றிலும் மாசு ஏற்பட்டு விடுகிறது.

''தொழிற்சாலைகளின் வாயிலாக சுற்றுப்புறச் சூழலில் மாசு ஏற்படுகிறது. பெரும்பான்மையான மூலப் பொருள்கள் உற்பத்திக்கு உதவுவதைவிட வீணாக்குவதற்கே பயன்படுகின்றன. இதனால்தான், ''எதையும் வீணாக்காதே, மாசு படுத்தாதே'' என்ற முழக்கம் எழுந்துள்ளது.

"ஒரு நாட்டில் 33 சதவிகிதப் பகுதி காடுகளாக இருக்க வேண்டும். ஆனால் நமது தமிழகத்தைப் பொறுத்தவரையில் 16.5 சதவிகிதம் தான் காடுகளாக உள்ளன. இந்தக் காட்டுப் பகுதிகளை நாம் பாதுகாக்க வேண்டும் - சமுதாயத்தின் நல்வாழ்வுக்காக!

“சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்புக்காக ஒரு சட்டத்தை மைய அரசு 1974ல் நிறைவேற்றியுள்ளது. இந்தியாவில் உள்ள 22 மாநிலங்களில் 16 மாநிலங்கள் கடைப்பிடித்து வருகின்றன. அவற்றில் நமது தமிழகமும் ஒன்று. மணிப்பூர், மேகாலயா போன்ற மாநிலங்கள் விரைவில் கடைப்பிடிக்க இருக்கின்றன.

“பொதுமக்கள், ஊராட்சி அலுவலர்கள், தொழில் முனைவர்கள் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும். அப்போது தான் இந்தப் பிரச்சினைக்கு விடிவு காண முடியும்.”

இறுதியாக நன்றி உரை கூறிய பொறியாளர் திரு எஸ். ஏ. ஜெகதீசன் குறிப்பிட்டார்:

''சுத்தம் சோறு போடும்- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்றும், ''சுத்தமே பக்திக்கு அடுத்த நிலை'' என்றும் நாம் சொல்லி வருகிறோம். சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்புக் குறித்து 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே திருவள்ளுவர் “புறந்தூய்மை நீரான் அமையும்'' என்ற குறளில் குறிப்பிட்டுள்ளார். எனவே நாம் காற்று, நீர், புவி யாவற்றையும் மாசுபடாமல் காக்கவேண்டும்''

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் விழா சிறப்பாக அமைந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
**எஸ். சண்முகசுந்தரம்**

# பாரதியார் பற்றி ம.பொ.சி. பேருரை

ஆசிரியர்: சிலம்புச் செல்வர்
டாக்டர் ம.பொ. சிவஞானம்
பூங்கொடி பதிப்பகம்
சித்திரக்குளம் மேல் தெரு,
சென்னை-600 004
பக்கங்கள்: 628 விலை: ரூ. 35

மகாகவி பாரதியாரின் பாடல்களைப் பொது இடத்தில் பாடியதற்காகச் சிறை சென்ற சிலம்புச் செல்வர் பாரதியாரின் படைப்புகளனைத்தையும் தமக்கே உரித்தான வரலாற்று நோக்குடனும், ஆழ்ந்த இலக்கிய ஒப்புநோக்குடனும் அலைத்துக்கும் மேலாக, தணியாத மொழி, நாட்டுப்பற்றுடனும், தமிழுலகிற்குப்பாரதியாரின் நூற்றாண்டு விழா நினைவாக அளித்துள்ள மாபெரும் இலக்கியம் "பாரதியார் பற்றி ம.பொ.சி பேருரை" என்ற நூலாகும்.

இந்நூல் 20.9.'80 தொடங்கி 20.9.'82 வரை திங்களுக்கொரு சொற்பொழிவாக மயிலை பாரதிய வித்யா பவனத்தில், மயிலை இலக்கிய வட்டத்தின் சார்பாகவும், பாரதிய வித்யா பவனத்தின் சார்பாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட 19 சொற்பொழிவுகளின் தொகுப்பாகும்.

முன்னுரையில் ஆசிரியர் "எனது சொற்பொழிவுகளிலே பாரதியாரின் புலமையையோ, கொள்கைகளையோ, தேசபக்தியையோ, சமூக சீர்திருத்தப் புரட்சியையோ, ஆன்மிக உணர்வையோ யான் முழு அளவில் எடுத்துக் காட்டிவிட்டதாக நானே நம்பவில்லை. ஆயினும், அதிலே வெற்றி காண இயன்றவரை முயன்றிருக்கிறேன்" என்று அவையடக்கமாகக் கூறியுள்ளாரேயன்றி, நூல் முழுவதும் மேற்கூறிய சிறப்பு மணந்தான் கமழ்கிறது. அவற்றுடன் அவைகளுக்களித்துள்ள வரலாற்றுப் பின்னணி, இலக்கிய மேற்கோள்கள் முதலியவை இந்நூலினை தமிழிலக்கியத்தின் தனிப்பெரும் படைப்பாக மிளிரச்செய்கின்றன.

பாரதி தமிழகம் தந்த தேசிய கவி மாத்திரமல்ல. இந்திய நாட்டிலேயே இந்தியா முழுமைக்குமாக உரிமைக்குரலும், ஒருமைப்பாட்டுக்குரலும் எழுப்பிய முதல் தேசியக் கவிஞர் என்பதனைக் கோடிட்டுக் காட்டியுள்ளார். இதனையே கீழைநாட்டியல் ஆராய்ச்சிக் கல்லூரியின் ஆசிய மக்கள் இலக்கியங்கள் பிரிவின் தலைவர் சோவியத் நாட்டுப் பேராசிரியர் இ.பி.செலிஷேவ் என்பவர் "பாரதியின் தேசபக்திப் பாடல்களை இந்தியாவின் ஏனைய மொழிக் கவிதைகளோடு ஒப்பு நோக்குகையில் தமிழகத்தின் பாரதி, தேசவிடுதலை இயக்கத்தால் உத்வேகம் பெற்ற இந்திய இலக்கிய விற்பன்னர்களின் முதல் வரிசையில் இடம் பெறுகிறார் என்ற முடிவுக்கே வரமுடியும்" என்று பல இந்தியக் கவிஞர்களுடன் ஒப்புநோக்கி எழுதிய கட்டுரையின் முடிவுரையாகக் கூறுவது எவ்வளவு பொருத்தமாக உள்ளது!

வள்ளுவனையும், கம்பனையும், இளங்கோவையும் பாரதியின் பாடல்கள் எடுத்துக் காட்டிய பின்னரே கற்றதாகக் கூறும் சிலம்புச் செல்வர் அந்நூல்களின் நயங்களோடு பாரதியின் படைப்




புகள் எவ்வாறு ஒட்டியும் ஓங்கியும் செல்கின்றன என்பதைப் பல இடங்களில் விளக்கியுள்ளார். பாஞ்சாலி சபதத்தின் மூலக் கருத்து மகாபாரதமாக இருந்தாலும் அதனை எடுத்தாண்ட பான்மை சிலப்பதிகாரத்தில் கண்ணகி அவையில் வழக்காடுவதை நினைவூட்டுவதாகவே கூறுகிறார்.

கண்ணன் பாட்டு இலக்கியம் பக்திப் பாடல்களின் தொகுப்பு மாத்திரமல்ல. பெரும் தத்துவங்களின் குவியல் என்பதை விளக்கியுள்ளார். 'கண்ணன் என் அரசன்' என்ற கவிதைக்கு இருபதாண்டுகளுக்கு முன்னர் விளக்கம் சொன்ன சிலம்புச் செல்வர் அன்று இந்தியப் பிரதமராக இருந்த நேருவுடன் ஒப்பிட்டது மெய் சிலிர்க்க வைப்பதாக இருந்தது.

இப்படியே ஒவ்வொரு தலைப்பிலும் அரிய புதுக்கருத்துக்களை உணர்ச்சிபூர்வமாக—ஆதாரங்களுடன் கொடுத்திருக்கும் முறைமை அவரது ஆராய்ச்சி உணர்வின் ஆழத்தைக் காட்டுகிறது. மகாகவி பாரதியைப் பற்றிப் படிக்கும்போது பெறும் பேருணர்ச்சிகட்கெல்லாம் பெருவடிவம் கொடுத்துச் சமைக்கப்பட்டிருக்கும் இவ்வொப்பரிய நூல் பாரதியின் படைப்புகளுக்கு இதுவரை தோன்றியிராத "பாஷ்ய" நூலாகக் கொள்வதா, பேராராய்ச்சிக் கருவூலமாகக் கொள்வதா என்பதனைப் படிப்பவர்களேதான் முடிவு செய்ய வேண்டும்.

மகாகவி பாரதி நூற்றாண்டு விழா தமிழுலகிற்களித்த மாபெரும் இலக்கியமாக இதனை ஏற்கும் என்பதில் ஐயமில்லை. இந்நூலை மாண்புமிகு முதலமைச்சருக்குக் காணிக்கையாக்கியுள்ள சிலம்புச் செல்வர் மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாவை வரலாறு காணாத வகையில் நடத்தியதாகப் புகழாரம் சூட்டியுள்ளார். நூற்றாண்டு விழாக் குழுத் தலைவரான டாக்டர் ம.பொ.சி.யின் படைப்பும் அத்தகைய வரலாறு காணாத இடத்தைப் பெற்றுச் சிறக்கும் என்பதில் ஐயமில்லை.

பாரதி படைப்புகளில் அவரது உரைநடை நூல்கள் பற்றிய ஆய்வும், சமய உணர்வு பற்றிய ஆய்வும், புதுமை நோக்கில் காட்டப்பட்டுள்ளன. பாரதியை முழுக்க முழுக்க அறியவும், உணரவும் எழுந்த மிகச் சிறந்த படைப்பிலக்கியம். இது, பாரதி படைப்புகளுடன் பாதுகாத்துப் பயன் பெற வேண்டிய சிறந்த நூல். இது மற்ற மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டால் பாரதியை உலகம் இன்னும் தெளிவாகத் தெரிந்து கொள்ள இயலும்.

இந்நூலை எழிலுடன் அமைத்துக் கொடுத்த பதிப்பாளர்கள் பாராட்டுக்குரியவர்.

—சி. என். கிருஷ்ணபாரதி

## ஓர் அறிவிப்பு!

'தமிழரசு' இதழுக்கு எழுத்தோவியங்களை அனுப்பும் நண்பர்கள், வெளியிடப் பெறாத வற்றைத் திரும்பப் பெறுவதற்கு, உரிய அஞ்சல் தலைகளை இணைத்து அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

சென்னைக்குக் கிருஷ்ணா குடிநீர் திட்டப் பணிகள் துவக்க விழா காட்சிகள்








பொதுப்பணித் துறை
இந்திரா காந்தி












# தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டப் பணிகள்



**கோ. இராதாகிருஷ்ணன்**
**துணை இயக்குநர்,**
**(குடும்ப நல விளம்பரம்)**

மக்கள் தொகைப் பெருக்கம் உலகம் முழுவதற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் ஓர் அறைகூவலாக இருந்து வருகிறது. சிறப்பாகச் சீனா, இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், போன்ற நாடுகளில் மக்கள் தொகை வெகுவாகப் பெருகி வருகிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இங்கேதேசியக்குடும்பநலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசியக் குடும்ப நலத் திட்டத்தை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி முன்னணியில் இருக்கும் மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும்.

கி.பி. 2001-க்குள் தகுதி வாய்ந்த தம்பதியரில் 60 சதவிகிதத்தினரை குடும்பநலத் திட்ட முறைகளைப் பின்பற்றச் செய்து இந்திய மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தையும், பிறப்பு விகிதத்தையும் குறைக்க வேண்டுமென்று கூறப்பட்டு, அந்த அடிப்படையில் குடும்பநலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நல்வாழ்வு-மருத்துவ, குடும்ப நலப் பணிகளை முனைப்பாகச் செயல்படுத்துவது - பிறந்த குழந்தைகள் நிச்சயமாக உயிர் வாழும் என்ற எண்ணம் மக்களிடையே தோன்றும் அளவுக்குக் குழந்தை நலம் காக்கும் பணிகள் ஆற்றுவது போன்ற பல கருத்துக்களையும், நோக்கங்களையும் கொண்ட முழுமையான திட்டமாகக் குடும்ப நலத் திட்டம் இயங்கி வருகிறது.

தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் குடும்பநலத்திட்டத்தின் அவசியத்தைப் பன்னெடுங்காலமாக வலியுறுத்தியதன் காரணமாக, மேடு பள்ளங்கள் அற்ற சாலையில் சிரமம் ஏதுமின்றி வண்டியோட்டுவது போல, குடும்பநலத் திட்டக் கருத்துக்களை இன்றைக்கு மக்களிடையே எடுத்து வைக்க முடிகிறது. அவர்கள் ஆக்கித் தந்த சாதகமான சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு திட்டத்திற்கு ஆதரவான சூழல் தமிழகத்தில் தொடர்ந்து உருவாக்கப்பட்டு வருகிறது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் வகுத்தளித்த கொள்கை வழி நடைபோடும் தமிழ்நாடு அரசு குடும்ப நலத் திட்டத்தை மிகுந்த ஆர்வம் காட்டிச் செயல்படுத்தி வருகிறது.

திட்டம் குறித்த கல்வி அளித்தல், விளம்பரப் பணிகள் ஆற்றுதல் ஆகியவற்றின் மூலம் மக்களுடைய கருத்துக்கள் ஆதரவாகத் திரட்டப்பட்டு வருகின்றன. தகுதிவாய்ந்த தம்பதியர் சிறு குடும்ப நெறி ஏற்பதற்குரிய போதுமான சேவை வசதிகளை அளிப்பது, பின் கவனிப்புப் பணிகளை ஆற்றுவது, தாய்சேய் நலத் திட்டப் பணிகளை ஓங்கச் செய்வது போன்ற பணிகளெல்லாம் செவ்வனே ஆற்றப்பட்டு வருகின்றன.

கட்டாயமோ, அச்சுறுத்தலோ இல்லாமல், குடும்பநலத் திட்டத்தை மக்கள் இயக்கமாக மாற்றி வெற்றியுறச்செய்யும் உத்தியைத் தமிழ்நாடு தொடர்ந்து பின்பற்றி வருகிறது. திட்டத்தை மக்கள் இயக்கமாக மாற்றிட குடும்பநல விளம்பரப் பணிகள் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சமுதாயத்தின் வலிமையற்ற பிரிவினர், பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் ஆகியோரைத் திட்டத்தில் பங்கு பெறச் செய்ய வேண்டி கிராமத் தலைவர்களுக்கான குடும்பநலத் திட்டப் பயிற்சி முகாம்கள் 1500 கிராமப்புறங்களில் நடத்தப்பட்டுள்ளன.

சென்னை மாநகராட்சி இத்தகைய 400 முகாம்களைக் குடிசைப் பகுதிகளில் நடத்தியிருக்கிறது. குடும்பநல விளம்பரத்துடன் சுவரணைச் சட்டங்கள் வைப்பது, பேருந்துகளில் விளம்பரப்பலகைகள் வைப்பது, சுவர்ச் சித்திரங்கள் தீட்டுவது போன்ற பணிகளின் வாயிலாகவும் அளவான குடும்பத்தில் அவசியம் பரப்பப்பட்டு வருகிறது. சினிமா சிலைடுகள், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் வாயிலாகவும் திட்டக் கருத்துக்கள் மக்களிடையே வேரூன்ற ஆவன செய்யப்பட்டு வருகிறது. இளைய சமுதாயத்தினரிடையே மக்கள் தொகையியல் கருத்துக்களை இடம் பெறச் செய்வதற்காக, மாணவ-மாணவிகளுக்கென கட்டுரைப் போட்டிகளும், பேச்சுப் போட்டிகளும் தமிழகம் முழுவதும் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

களை நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதல் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் வரையுள்ள அனைத்து மட்டங்களிலும், திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்குத் தொடர்ந்து எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்காலிகக் குடும்ப நல முறைகளைப் பின்பற்றுவதற்குத் தேவையான சாதனங்களை வழங்குவது முதல், குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்வது வரை அனைத்தும் அந்தந்த இடங்களில் இலவசமாகக் கிடைப்பதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இப்படிக் குடும்பநலத் திட்ட வெற்றிக்காக எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க ஒன்று மண்டல அளவில் நடத்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டமாகும். சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் நடைபெற்ற இந்த மண்டல மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டங்கள் மாண்புமிகு நல்வாழ்வு - குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் தலைமையில் நடைபெற்றன. மண்டல ஆய்வுக் கூட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு மாவட்ட அலுவலர்களும், இயக்குநர்களும், துணை இயக்குநர்களும பிறரும் கலந்து கொண்டனர். தமிழ்நாடு அரசின் நல்வாழ்வு, குடும்பநலத் துறை ஆணையரும் - செயலாளருமான திரு. இலட்சுமிகாந்தன் பாரதி அவர்கள் அனைத்து ஆய்வுக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு ஆய்வு வெற்றிகரமாக அமைய உறுதுணையாக இருந்தார்.

மண்டலக் கூட்டங்களுக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்ற அரசுச் செயலாளர் கருத்தில் சில:

''லெப்ராஸ்கோபிக்'' கருவிகளை வைத்திருக்கும் தனிப்பட்ட மருததுவர்கள், தாங்கள் செய்யும ஒவ்வொரு அறுவைச் சிகிச்சைக்கும் ரூ.50 பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். எந்தெந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் எல்லாம் தாய்மார்களுக்கான அறுவைச் சிகிச்சை செய்ய முடியுமோ அங்கெல்லாம் அத்தகைய அறுவைச் சிகிச்சைகளைச் செய்ய, தக்க ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும்.

மாவட்ட அதிகாரிகள் தங்கள் அதிகாரத்துக்குட்பட்ட அனைத்தையும் குடும்பநலத் திட்ட வெற்றிக்காகப் பயன்படுத்தி உதவ வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு கூட, மற்ற மாவட்ட அலுவலர்களும், குடும்ப நலத் திட்டத்தை வெற்றியுறச் செய்ய ஆர்வம் காட்ட வேண்டும். காலியாக இருக்கும் குடும்பநல அலுவலர், ஊழியர் இடங்களில் உரியவர்களை நியமிக்க ஆவன செய்யப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஆசிரியர்களைக் குடும்ப நலத் திட்டப் பணிகளில் ஈடுபடுத்த வேண்டாம் - இது கொள்கை அடிப்படையிலான முடிவு.

'லெப்ராஸ்கோபிக்' முறையில் அல்லது சாதாரண வழக்கமான முறையில் தாய்மார்களுக்குச் செய்யும் அறுவைச் சிகிச்சைகளுக்கான சிறு முகாம்களை எவ்வளவு நடத்த முடியுமோ அவ்வளவு நடத்தலாம். ஆரம்ப சுகாதார நிலையங்களின் இயக்குநர் கருத்தறிவித்தபடி, எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களில் பெண் அறுவைச் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்ய முடியுமோ அத்தனையிலும் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் எத்தனை தனியார் மருத்துவ நிலையங்களை அறுவைச்சிகிச்சை நிலையங்களாக அனுமதிக்க முடியுமோ அத்தகைய நிலையங்களை அனுமதிக்க வேண்டும். தொழில் அதிபர்களை அணுகி, தொழிலாளர்களுக்காகக் குடும்பநல முகாம்களை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். மிகத் திறமையாகச் செயல்படும் ஊழியர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அங்கெல்லாம் குடும்பநலப் பணிகள் எப்படி நிறைவேற்றப்படுகின்றன என்பதை அறிந்து வரச் செய்யலாம்" என்றார்.

திட்ட வெற்றிக்காக என்னென்ன செய்ய வேண்டுமென்பது குறித்து மாண்புமிகு நல்வாழ்வு - குடும்பநலத் துறை அமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். அவர்கள் தெரிவித்த கருத்துகளில் முக்கியமானவை;

''தனிப்பட்ட முறையில் தொழில் செய்யும் மருத்துவர்களிடம் உள்ள 'லெப்ராஸ்கோபிக்' கருவிகளைப் பெருமளவு பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும். இரண்டு அல்லது மூன்று மருத்துவக் குழுக்களை அமைத்து, முகாம்களை நடத்தி, இவ்வகை அறுவைச் சிகிச்சை வசதிகள் தாய்மார்களுக்குத் தங்கு



நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டும்.

எந்தெந்தத் தனியார் மருத்துவ நிலையங்களில் எல்லாம் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்ய வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன என்பதைக் காட்டும் பட்டியல் தயாரிக்க வேண்டும். எத்தனை தனியார் மருத்துவ நிலையங்களைக் குடும்பநல அறுவைச் சிகிச்சை நிலையங்களாக அனுமதிக்க முடியுமோ அத்தனை நிலையங்களை அனுமதித்து, மாவட்ட இலக்கை எட்டி வெற்றியீட்டப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கென அறுவைச் சிகிச்சை முகாம்களை நடத்த வேண்டும். மக்கள் தொடர்பு அலுவலர்களை இத்தகைய முகாம்கள் நடத்த மாவட்ட அதிகாரிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் மேலும் தொழில் அதிபர்களின் உதவியைப் பயன்படுத்திக் கொண்டு சர்க்கரை ஆலைகள் போன்ற பகுதிகளில் தொழிலாளர்களுக்கெனக் குடும்ப நல முகாம்களை நடத்த வேண்டும்.

உட்கொள்ளும் கருத்தடை மாத்திரைகள், கருத்தடை வளையம் பொருத்திக் கொள்ளுதல் போன்ற தற்காலிக முறைகளைப்பற்றி மக்களிடையே செய்திகளை அதிகமாகப் பரப்ப வேண்டும். 'உட்கொள்ளும் கருத்தடை மாத்திரைகளைத்' தொடர்ந்து உட்கொள்ளச் செய்தால் பிறப்புக்களைத் தவிர்க்கலாம். இத்தகைய தற்காலிகக் கருத்தடை முறைகளைப் பின்பற்றுவோரின் தொகை குறைவாக உள்ளது. பிறப்பு விகிதத்தைக் குறைக்க இம்முறைகளை மக்களிடையே செல்வாக்குப் பெறச் செய்ய வேண்டும். அதற்கெனச் சிறப்புக் கவனம் செலுத்தி இயக்க வேண்டும். தகுதி வாய்ந்த இளம் தம்பதியர்களுக்குத் தற்காலிக முறைகள் பற்றிக் கல்வி





அளித்து, அம்முறைகளை அவர்கள் பின்பற்றுமாறு செய்ய எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மாவட்ட குடும்பநல விளம்பர அலுவலர்கள் எடுக்க வேண்டும். இந்திய மருத்துவக் கழகத்தில் உறுப்பினர்களாக இருக்கும் தனிப்பட்ட மருத்துவர்களின் மூலம் உட்கொள்ளும் கருத்தடை மாத்திரைகளை வழங்குவதற்கும் கருத்தடை வளையம் பொருத்துவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சிவகாசி, சாத்தூர் போன்ற மேற்குப் பகுதியில் இருக்கும் தகுதிவாய்ந்த தம்பதியரில் பேரளவினரைத் திட்டத்தில் ஈடுபடச் செய்வதின் மூலம் திட்டத்திற்கு வெற்றி தேட முனையலாம்.

குடும்ப நலத் திட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டத் தகுதி வாய்ந்த தம்பதியர், பாதுகாக்கப்படாத தம்பதியர் இத்தனை பேர், தற்காலிக முறைகளைப் பின்பற்றுவோர், நிரந்தர சிகிச்சை ஏற்றவர்கள் இத்தனைப் பேர் என்ற விவரங்களையெல்லாம் காட்டும் மாவட்டப் படங்களை மாவட்டக் குடும்ப நல விளம்பர அலுவலர்கள் தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும். மாவட்டத்தின் எந்தெந்தப் பகுதிகளில் திட்டத்திற்கு வெற்றி கிட்டவில்லை என்பதை இந்தப் படங்களின் மூலம் சட்டெனத் தெரிந்து கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க இப்படங்கள் உதவியாக இருக்கும்.

திட்டத்தை வெற்றி பெறச் செய்ய மதுரைக்கு இரண்டு வித அனுகூலமான சூழ்நிலைகள் இருக்கின்றன. ஒன்று மதுரை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டிருக்கும் அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை மாவட்டத்தில் இருப்பது இன்னொன்று மதுரைக்கருகில் உள்ள காந்தி கிராமம் மருத்துவ மனை வசதிகளாகும். காந்தி கிராமத்திலிருக்கும் வசதிகளைப் பெருமளவு பயன்படுத்திக் கொள்ள் முனைவதின் மூலம் திட்டத்தை வெற்றியுறச் செய்யலாம்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருக்கும் தகுதிவாய்ந்த தம்பதியர் பதிவேடுகளை நாளது தேதி வரை சரி செய்யவேண்டும். இந்தப் பணியில் சுணக்க மிருந்தால் துரிதப்படுத்த வேண்டும். இதைச் செய்து முடிக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பணி செவ்வனே நடைபெறுகிறதா என்பதைக் கவனிக்க 'பின் கவனிப்புப் பணிகளும்' ஆற்றப்பட வேண்டும்.

ஆண்டு முழுவதும் தொய்வில்லாமல் குடும்பநலத் திட்டப் பணிகள் விறுவிறுப்பாக நடந்தேற ஆவன செய்ய வேண்டும். குறிப்பாக மாவட்டக் குடும்ப நல விளம்பர அலுவலர்கள் பிறப்பு, இறப்பு விகிதங்கள், போன்ற மக்கள் தொகையியல் தகவல்களைத் தயாராக வைத்திருக்க வேண்டும். ஆய்வுக்கு வரும் அலுவலர்களுக்கும் மற்றவர்களுக்கும் அது பேருதவியாக இருக்கும். அதோடு மாவட்டத்தின் எந்தெந்தப் பகுதிகளில் திட்ட வெற்றி குறைவாக இருக்கிறது என்பதையும் அதன்மூலம் அறிந்து கொள்ளலாம்.

''சிரித்த முகத்தோடு பணியாற்றுவது'' என்பதை அனைவரும் கொள்கையாக - கடமையாகக் கொள்ள வேண்டும். அப்படிப் பணியாற்றினால் ஏராள மானவர்களைக் கவர்ந்து திட்டத்தை ஏற்கச் செய்யலாம். திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு மருத்துவமனைகளில் பிரமுகர்களுக்கு அளிப்பது போல் சிறப்பிடம் தந்து சிகிச்சை அளிக்க வேண்டும். மேலும் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்யப்படும் இடங்களுக்குத் தகுதி வாய்ந்த தம்பதியரை அழைத்துவரக் குடும்ப நல வண்டிகளைப் பயன்படுத்த வேண்டும். முழுமையாக அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு முழுமையான ஈட்டுத் தொகை வழங்குவதில் எந்த விதமான சுணக்கமும் ஏற்படாது பார்த்துக் கொள்ள வேண்டும். திட்டப் பணிகளுக்கு முதலிடம் தந்து செயல்பட வேண்டும. இலக்கு மீறிய சாதனையை ஏற்படுத்த வேண்டும் என்ற பெரு நோக்கோடு மாவட்ட அலுவலர்கள் பணியாற்ற வேண்டும்.

கடநத காலத்தில் குடும்பநலத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னணியில் இருந்தது. இப்போது ஆறாவது இடத்தில் உள்ளது. இந்நிலை தொடர அனுமதிக்கக்கூடாது.

*1971, 1981* ஆகிய ஆண்டுகளில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்குக் குறித்த புள்ளி விவரங்களை வைத்துப் பார்க்கும்போது, நீலகிரி மாவட்டத்தில் குறிப்பிட்ட மக்கள்

தொகையியல் நிலைமைகள் நிலவுவது தெரிகிறது. இந்த மாவட்டத்தில் மக்கள் தொகை பெருகுவதற்கான சிறப்புக் காரணங்கள் என்ன என்பதைக் கண்டறிய மாவட்ட ஆட்சித் தலைவர் சிறப்பு ஆய்வு ஒன்றினை நடத்த வேண்டும். மாவட்டத்தின் உண்மையான பிறப்பு, இறப்பு விகிதங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வினை நடத்தி, முடிவுகளை அரசுக்கு அறிக்கையாகத் தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் பேறு காலத்திற்காகச் சேரும் தாய்மார்களுக்கு ' குழந்தை பிறந்ததும் அவர்களுக்கு ஏற்கெனவே இரண்டு குழந்தைகள் இருந்து. மனப்பூர்வமாக சிறு குடும்பநெறி ஏற்க அவர்கள் சம்மதம் கொடுத்தபின் - அந்த அளவுக்குத் தூண்டுகோல் செய்து, கருத்தடை வளையம் பொருத்தி விடுகிறார்கள். அல்லது நிரந்தர சிகிச்சை ஏற்கச் செய்கிறார்கள். நீலகிரி மாவட்ட அரசு மருத்துவ மனைகளின் முன் உதாரணத்தை மற்ற மாவட்டங்களும் பின்பற்ற வேண்டும்.

தேசிய குடும்ப நலத் திட்டத்தின் வெற்றி மற்ற சமூக பொருளாதாரத் திட்டங்களின் வெற்றிக்கு அடிப்படையாக அமைவதாகும். நாட்டினுடைய வளர்ச்சிப் பணிகளில் நாம் காண வேண்டிய வெற்றிகளுக்கெல்லாம் அடிப்படையாக அமைகின்ற வெற்றியாகும். எனவே குடும்ப நலத் திட்டத் தற்காலிக முறைகளைப் பின்பற்றச் செய்வது, குடும்ப நலத் திட்ட, நிரந்தர சிகிச்சை ஏற்கச் செய்வது ஆகியவற்றில் வெற்றியீட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மற்ற மாவட்ட அலுவலர்களும் பிறரும் அயராது பணியாற்றி ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். கடந்த காலத்தில் 20 அம்சத் திட்டம் குறித்து ஆய்வு நடத்திய பிரதமர் அவர்கள் குடும்பநலத் திட்டத்தைத் தமிழ்நாடு சிறப்பாகச் செயல்படுத்தியதாகப் பாராட்டியுள்ளார். மற்ற மாநிலங்கள் இந்த வகைப் பணியில் முன்னணிக்கு வர முயலும் இன்றைய சூழ்நிலையில் நாம் பின் தங்கிவிடக் கூடாது. சுணக்கம் ஏற்படுத்தத் தக்க சூழ்நிலை எதற்கும் இடந்தந்து விடக் கூடாது. இலக்கு மீறிய சாதனையை ஏற்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டுகிறேன்''.

**மண்டலக் கூட்டங்களின் முடிவுகள்**

குடும்ப நலத் திட்டத்தில் எட்ட வேண்டிய வெற்றி, எட்டியிருக்-



கும் வெற்றி ஆகியவை குறித்து இந்த மண்டலக் கூட்டங்களில் ஆழமாக விவாதிக்கப்பட்டன.

மண்டல ஆய்வுக் கூட்டங்களில் விவாதங்களுக்குப் பின் எடுக்கப் பட்ட முக்கியமான முடிவுகளாவன:

மாவட்டங்களில் நிலவும் வறட்சி தொடர்பான பணிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வெகுவாக ஈடுபட்டிருக்கிறார்கள். அதோடு குடும்பநலத் திட்டத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டியும் அவர்கள் முனைப்பாகச் செயலாற்றி வருகிறார்கள். அவர்களுடன் கூட எல்லாத் துறைகளைச் சார்ந்த மாவட்ட அலுவலர்களும் தங்களுக்கிருக்கும் வாய்ப்பு வசதிகளையெல்லாம் பயன்படுத்தி இலக்கினைக் காலத்தில் எட்டத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

எத்தனை தனியார் மருத்துவ நிலையங்களை அறுவைச் சிகிச்சை நிலையங்களாக அனுமதிக்க முடியுமோ அத்தனை நிலையங்களை அனுமதிக்க வேண்டும். மாவட்ட இலக்கை எட்ட இது உதவும்.

'தகுதி வாய்ந்த தம்பதியர் பதிவேடுகளை' ஆய்வு செய்யும் பொறுப்பை மாவட்ட சுகாதார அலுவலர்களுக்குத் தர வேண்டும் 'பின் நடவடிக்கைகள்' குறித்துக் கவனிக்க வேண்டும். நாளது தேதி வரை அந்தப் பதிவேடுகளைச் சரி செய்ய வேண்டும். சரி செய்வதில் எந்த அலுவலராவது தவறினால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

களத்திலே பணியாற்றுபவர்கள், குடும்ப நலப் பணியே ஆற்றவில்லையானால் தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும்.

மாவட்டங்களில் காலியாக உள்ள இடங்களை எல்லாம் நிரப்புவதற்கு ஆவன செய்ய வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

கிளை நிலைய ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்குக் கிடைக்க வேண்டிய பயணப்படியை, ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து முதலில் கொடுத்துவிட்டு பின மாநில நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

குடும்ப நல வண்டிகளை குடும்பநலம் தவிர்த்த பணிகளுக்குப் பயன்படுத்தக் கூடாது என மாவட்ட அலுவலர்களை அறிவுறுத்த வேண்டும்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் 'லெப்ராஸ்கோப்பிக்' கருவியொன்றை வாங்கிக் காந்திராமம் மருத்துவ மனைக்கு வழங்கி - மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் அறுவைச் சிகிச்சை முகாம் நடக்க ஆவன செய்யலாம்.

பிரிட்டிஷ் உதவித் திட்டத்தின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அறுவைச் சிகிச்சைக் கூடங்களை காலதாமதமின்றி இயக்குவதற்கு மாவட்டக் குடும்பநல - தாய் சேய் நல அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

'மினி லெப்பராட்டமி' முறையில் தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்பாடு செய்ய முடியுமோ அத்தனையிலும் ஏற்பாடு செய்ய வேண்டும். மாவட்டக் குடும்ப நல அலுவலர்களும், மாவட்ட சுகாதார அலுவலர்களும் இப்பணியில் ஈடுபட வேண்டும்.

நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர், 1971, 1981 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்புகளின் படி, அந்த மாவட்ட மக்கள் தொகை உயருவதற்கான மக்கள் தொகையியல் காரணங்களை, ஆய்வு ஒன்றினை நடத்துவதின் மூலம் கண்டறிந்து, அரசுக்கு அறிக்கை தர வேண்டும்.

இத்தகைய பல முடிவுகள மண்டல ஆய்வுக் கூட்டங்களில் நிறைவேற்றப்பட்டன. அவற்றின் அடிப்படையில் செயல்பட்டு திட்ட வெற்றிக்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. 1983ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முடிய 2,08,396 குடும்பநல அறுவைச் சிகிச்சைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 31,323 கருத்தடை வளையங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. வழக்கமான கருத்தடை முறைகளைப் பின்பற்றுபவர்களாக 39,270 பேர்கள் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டங்கள் நல்ல பலன் உருவாக உதவின எனலாம்.



# சிந்துவெளியில் திராவிடப் பண்பாடு

வே. தமையந்திரன்

**ம**னிதன் முதன் முதலில் எங்கு தோன்றினான்? ஓரிடத்தில் தோன்றி, பல்வேறு இடங்களுக்கும் பரவினானா? பல்வேறு இடங்களிலும் தனித்தனியாகத் தோன்றினானா? மனித இனத்திற்குள்ளேயே உண்மையான இனப் பாகுபாடு உள்ளதா?

இவை இன்று அறிவியல் அறிஞர்களின் சிந்தனையை ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் சில கேள்விகள். இந்தக் கேள்விகளுக்கு விடை காணுவதற்காக அவர்கள் பல்வேறு வழிகளில் அயராது உழைத்து வருகின்றனர். இந்தக் கேள்விகளுக்கு விடை காண வேண்டியது வெறும் அறிவியல் பிரச்சினைமட்டுமல்ல, அதனால், இன்றுள்ள சில சமூகப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும்.

மனித இனத்திற்குள்ளேயே எந்த வகையான இனப்பாகுபாடு (பண்பாட்டு வேறுபாடு என்பது வேறு) கிடையாது என்பது இன்று அறிவியல் அறிஞர்கள் பரவலாக ஏற்றுக் கொண்டுள்ள ஓர் உண்மை. எனவே, மனித இனம் ஒரே இடத்தில்தான் தோன்றியிருக்க வேண்டும் என்பதை இந்த உண்மை தெளிவு படுத்துகிறது. அந்த இடம் எது என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது.

ஆனால், பழங்காலத்தில் நாகரிக வளர்ச்சியில் சிறப்புற்றோங்கியிருந்த நான்கு கலாச்சாரங்களைப் பற்றி எந்தவிதக் கருத்து வேறுபாடும் இல்லை. அவை: சுமேரிய நாகரிகம், எகிப்து நாகரிகம், சீன நாகரிகம், சிந்து சமவெளி நாகரிகம் என்பன.

இந்தியாவில் வடமேற்குப் பகுதியில் இன்று இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் பகுதிகள் பரவியிருக்கும் சிந்து சமவெளியில்தான் இன்றைய இந்திய நாகரிகத்திற்கு ஒரு வடிவம் கொடுத்த சிந்து சமவெளி நாகரிகம் வேரூன்றியிருந்தது.

சிந்துவெளி நாகரிகத்தில் மொஹஞ்சதாரா, ஹரப்பா ஆகிய இரு நகரங்கள் முக்கியமாக விளங்கின. எனவே, அது, மொஹஞ்சதாரா - ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படுவது உண்டு.

இரண்டாம் உலகப் போர் சமயத்தில் 1920களில்தான் அகழ் வராய்ச்சியின்போது இந்த இரு நகரங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தியாவின் மேற்குப் பகுதியில் நர்மதை ஆறு தொடங்கி சிந்துப் பகுதியில் பாகிஸ்தானிய பிரதேசங்கள் வழியாக குஜராத், கச்சு வளைகுடா, தொடர்ந்து பஞ்சாபின் கீழைப்பகுதி ஆகியவை கடந்து டெல்லி வரை சிந்துசமவெளி நாகரிகத்திற்கான சான்றுகள் பரவிக் கிடக்கின்றன. இவை தவிர அரபிக்கடலின் கரையோரத்தில் ஈரானிய எல்லைப் பகுதிகளிலும் பலுச்சிஸ்தானத்திலும் பரவியிருந்தது.

சிந்து வெளி மக்கள் சுமார் கி.மு. 2200க்கும் 1700க்கும் இடைப்பட்ட காலத்தில் நாகரிகத்தின் உச்ச நிலையில் இருந்தனர். (அதாவது இன்றைக்குச் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னால்!) பொதுவாக ஆற்று ஓரங்களிலேயே வாழ்ந்து வந்தனர். வேளாண்மையும், கால்நடை வளர்ப்பும் முக்கியத் தொழில்களாக இருந்தன. செம்பு, வெண்கலம் ஆகிய உலோகங்களால் ஆன ஆயுதங்களைப் பயன்படுத்தினர். தங்கத்தைப் பயன்படுத்தி ஆபரணங்கள் செய்வதற்கு அறிந்திருந்தனர்.

சிந்து சமவெளி மக்களின் வாழ்க்கை, முறைப்படுத்தப்பட்டதாக இருந்தது. வீடு கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட செங்கல்கள் ஒரே அளவினதாக இருந்தன. கழிவு நீர் வடிகால்களின் அமைப்பு, வாழ்விடங்களின் அளவுகள், மன்றங்கள் ஆகியன ஒரே மாதிரியாக வடிவமைக்கப்பட்டன.

எடைக் கற்களும், மற்ற அளக்கும் சாதனங்களும் தரநிர்ணயம் செய்யப்பட்டிருந்தன. தலைப்பாகை, வளையல் அணிதல், அட்டியல் (ஒருவகை கழுத்தணி) அணிதல் போன்று இன்றும் வழக்கத்தில் இருக்கும் செயல்கள் ஹரப்பா கலாச்சாரக் காலத்தவைதான்.

சிந்து சமவெளி நாகரிகத்தைப் பொறுத்த வரையில் இன்றும் ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரும் சவாலாக இருப்பது ஹரப்பா எழுத்துக்களைப் படிப்பதுதான். இதுவரை சுமார் 4000 முத்திரைகள், முத்திரைப்பதிப்புகள், ஓட்டு ஓவியங்கள் (Graffti) முதலியன கிடைத்துள்ளன. ஆனால், இவற்றில் காணப்படும் எழுத்துக்கள் எந்த மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை, அவற்றை எவ்வாறு படிப்பது என்பது பற்றி ஆராய்ச்சியாளர்களிடையே இதுவரை பலத்த கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. (மற்ற மூன்று கலாச்சாரங்களின் எழுத்துக்களைப் படிப்பதில் இந்த அளவிற்குச் சிக்கல் இருந்ததில்லை).

ஆங்கிலேய ஆராய்ச்சியாளர் ஜீ. ஆர் ஹன்டர் 1930ல் மொத்தம் 396 ஹரப்பா எழுத்துக்களை அடையாளம் கண்டார். இன்றைய ஆராய்ச்சிகளின் விளைவாக கூடுதலாக 23 எழுத்துக்கள் இருப்பதுதெரியவந்துள்ளது. எனவே, இப்போது மொத்தம் 419 எழுத்துக்

கள் (Signs) தெரியவந்துள்ளன. இவற்றை எவ்வாறு படிப்பது? இவை எந்த மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை?

சிலர் ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்றனர். ஆனால், ஆரியர்களின் மிகப் பழைய இலக்கியமான ரிக் வேதத்தில் ஹரப்பா பண்பாட்டுக் கூறுகளைக் காண முடியவில்லை. எனவே, சிந்துவெளி மக்களின் மொழி ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததாக இருக்க முடியாது.

வேறுசில ஆராய்ச்சியாளர்கள் சிந்து சமவெளி மக்களின் மொழி, திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்றனர். இந்தக் கருத்துக்கே இன்று வலுவான சான்றுகள் கிடைத்து வருகின்றன.

வால்டெர் ஏஃபேர் செர்விஸ் (ஜூனியர்) என்னும் அமெரிக்க நாட்டு ஆராய்ச்சியாளரின் ஆராய்ச்சிக் கட்டுரை சமீபத்தில் வெளியாகியுள்ளது. (சயன்டிபிக் அமெரிக்கன், மார்ச் 1983) இந்த ஆராய்ச்சியாளர் சிந்து சமவெளி மக்களின் மொழி இன்றைய திராவிட மொழிகளின் மூதாதை என்பதைப் பல சான்றுகளுடன் சந்தேகத்திற்கு இடமின்றி நிறுவியுள்ளார்.

மொஹஞ்சதாரா தந்த வில்லைகள் பலவற்றில் செடியைக் குறிப்பது போன்ற ஒரு அடையாளம் காணப்படுகிறது. பல்வேறு முத்திரைகளில் இந்த அடையாளத்தில் ஒன்று முதல் ஏழு வரையான செங்குத்துக் கோடுகள் காணப்படுகின்றன. இவை மாதத்தைக் குறிப்பனவாக இருக்கலாம். அதே சமயத்தில் இவை செடியைக் குறிப்பதாகவும் இருக்கலாம். மேலும், ஹரப்பா மக்கள் எட்டின் அடிமான எண் முறையைப் பயன்படுத்தியிருக்கலாம் என்றும் சில சான்றுகள் அறிவுறுத்துகின்றன.

ஐந்து திராவிட மொழிகளில் 'நெல்' என்னும் சொல் ஒரு தானியத்தைக் குறிக்கின்றது. இந்த ஐந்து மொழிகளில் மூன்றில் 'நிலா' என்னும் சொல் சந்திரனையும், வேறு சில திராவிட மொழிகளில் இந்தச் சொல் மாதத்தையும் குறிக்கின்றது. அடுத்து திராவிட மொழி ஆராய்ச்சியாளர் கமிர் வி. ஜ்வெலபில் ( Kamir V. Zvelebil ) ஒரு கருத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். திராவிடர்கள் முற்காலத்தின் எட்டின் அடிமான எண் முறையையே பயன்படுத்தினர் என்றும், இன்று வழக்கிலுள்ள பத்தின் அடிமான எண்களின் பொருள் (ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எண்(டு) ( Number ) ஒன்பது ( Many minus one ), பத்து ( Many ) அதைத் தெளிவுபடுத்துகின்றது என்றும் கூறியுள்ளார். இந்த இரண்டு அம்சங்களும், சிந்து சமவெளியில் கிடைத்துள்ள சான்றுகளுக்கு ஒத்து வருகின்றன.

திராவிட மொழிகளில் ஒத்த ஒலிச் சொற்கள் (Homo Phones) நிறைய காணப்படுகின்றன. ஒரே மாதிரி ஒலித்து வெவ்வேறு பொருட்களைக் குறிக்கும் சொற்கள் ஒத்த ஒலிச் சொற்கள் எனப்படும். ஒரே சொல் பல பொருட்களைக் குறிப்பது அல்ல எடுத்துக்காட்டாக, தோளில் நீர் சுமந்து செல்ல உதவும் கம்பு 'கா' (வடி) எனப்படுகிறது. அதே




நேரத்தில் 'கா' என்னும் சொல் பாதுகாத்தல் என்னும் பொருளையும் குறிக்கிறது. 'நூறு' என்னும் சொல் 100 என்ற எண்ணைக் குறிப்பதோடு 'நொறுக்குதல்' என்னும் பொருளையும் கொடுக்கிறது. சிந்து சமவெளி மக்களின் மொழி இந்த ஒத்த ஒலிச் சொல் முறையிலேயே அமைந்துள்ளது என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

“ ” என்னும் அடையாளத்தை எடுத்துக் கொள்வோம். இந்தச் சித்திர எழுத்து உரலும், உலக்கையும் போல அமைந்துள்ளது. உரலும், உலக்கையும் நொறுக்குவதற்கு உதவுவன. நொறுக்குதல் என்னும் சொல்லில் 'நூறு' என்னும் ஒலியும் அமைந்துள்ளது. எழுத்துக்களைப் படிக்கும்போது இந்த அடையாள எழுத்து 100 என்னும் எண்ணைக் குறிப்பது உறுதியாகியுள்ளது.

இனி வேறொரு எழுத்தை எடுத்துக் கொள்வோம். இந்த எழுத்து தோளில் தண்ணீர்ப் பானை சுமந்து செல்லும் ஒரு மனிதனைப் போலக் காட்சியளிக்கிறது. இவ்வாறு தண்ணீர் சுமந்து செல்ல உதவும் 'கம்பு' 'கா' (வடி) எனப்படும். 'கா' என்னும் சொல் பாதுகாத்தல் என்னும் பொருளையும் குறிக்கும். திராவிட மொழியில் மனிதனைக் குறிக்க 'ஆள்' என்னும் சொல் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. இப்போது இந்த அடையாளத்தின் மதிப்பைக் கவனியுங்கள். கா + ஆள் காவாள் (இடையில் 'வா' வந்தது புணர்ச்சி விகாரம்). அதாவது இந்த அடையாளம் 'காவலன்' என்று பொருள்படுகின்றது.

இதுவரை சுமார் 100 முத்திரை மற்றும் ஓட்டு ஓவியங்களுக்குச் சொல் மதிப்பு அறியப்பட்டு அவற்றிற்குச் சரியான - திராவிட - ஒத்த ஒலிச் சொற்களும் கண்டறியப்பட்டுள்ளன.

இந்தச் சான்றுகள் அடிப்படையில் நோக்கும்போது சுமார் 4000 ஆண்டுகளுக்கு முந்திய மொஹஞ்சதாரா ஹரப்பா மொழி, திராவிட மொழிதான் என்று உறுதியாகக்கூற முடிகின்றது. அதாவது தமிழ்மொழி 4000 ஆண்டுக்கால பழமையுடையதென்பதற்கு வரலாற்றுச் சான்று உள்ளது. அப்படியானால் அதற்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்மொழி தோன்றியதோ!

[ஆதாரம் : சயின்டிபிக் அமெரிக்கன் (1983) என்னும் நூலில் வெளிவந்துள்ள The script of the Indu valley civilization என்ற கட்டுரை.



# தெருக்கூத்து பாணியில் சிலப்பதிகார நாடகம்

தமிழ்ப்பித்தன்



கலைமாமணி நடராஜ் சகுந்தலா அவர்களின் நடன கலா நிலையம், வி.ஜி.பி. கல்சுரல் அகாடமியுடன் இணைந்து சிலப்பதிகாரக் காவியக் கூத்தை 30.5.83 அன்று சென்னை மியூசிக் அகாடமி அரங்கில் மிகச் சிறப்பாக அரங்கேற்றம் செய்தது. தமிழ்நாடு அரசு, இந்திய அரசு, இரண்டும் இந் நாடகத் தயாரிப்புக்குப் பண உதவி செய்துள்ளன.

தெருக்கூத்து முறையிலே முதன் முதலாக இந்நாடகம் அரங்கேறியிருப்பது வியப்புக்குரியது மட்டுமல்ல - பாராட்டுக்குரியதும் ஆகும்.

பாமர மக்களை - ஏழை எளிய சாதாரண மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் தெருக்கூத்து, அரங்கம் இன்றி - முச்சந்தியில் நடத்தப்பட்டதுண்டு; நடத்தப்படுவதும் உண்டு. அந்தப் பாணியை நகர்ப்புறங்களில் உள்ளவர்களும் கண்டு களிக்க வேண்டும் என்ற பெருநோக்கத்துடன் இந்த நாடகம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

தெருக்கூத்துக் கதை வடிவங்கள் நூற்றுக்கணக்கில் இருந்து வருகின்றன. அவை பெரும்பாலும் இராமாயணம்,



மகாபாரதம் போன்ற புராணக் கதைகளின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. அந்த முறையை மாற்றி - ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தைத் தேர்ந்தெடுத்து, தெருக்கூத்து பாணியில் அமைத்துள்ளனர் நடன கலா நிலையத்தினர்.

மன்னர்களையே கதாநாயகர்களாக வடித்து வந்த காவியப் புலவர்களிடையே இளங்கோவடிகள் என்னும் ஈடற்ற கவிஞர், குடிமகன் ஒருவனைக் கதாநாயகனாக்கிச் சிலப்பதிகாரம் வடித்தார்; அதைப்போல-புராணக் கதைகளே அங்கம் பெற்றிருந்த



நாட்டிய நாடகக் கலைஞர்களுடன் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர், மாண்புமிகு கல்வி அமைச்சர், இயல் இசை நாடக மன்றச் செயலர், மற்றும் வி.ஜி.பி. சகோதரர்கள்.

தெருக்கூத்து மரபில்-சிலப்பதிகாரத்தைப் புதிய சேர்க்கையாக அறிமுகம் செய்துள்ள கலைமாமணிகள் நடராஜ்-சகுந்தலா பழமையிலும் புதுமை மிளிரச் செய்திருக்கிறார்கள்

நாடகம், துவக்கம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாக இருந்தது. பழைய கதைதான் என்றாலும்-அதனை மக்களுக்கு எடுத்துச் சொல்லிய பாங்கு பாராட்டத் தக்கதாக விளங்கியது. காட்சி அமைப்பிலும்-நாட்டிய அசைவுகளிலும் அனுபவத்தின் முத்திரை ஆழமாகப் பதிந்திருப்பதைப் பார்வையாளர்கள் உணர்ந்தார்கள். இசைஅமைப்பு அனைவரையும் வசப்படுத்தியது. மாதவியின் அரங்கேற்ற நாட்டியம் அருமை. நாட்டிய வகைகளின் விளக்கம் இக்காட்சியில் சொல்லப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. கண்ணகி வழக்குரைக்கும் காட்சி மிக அருமை.

இந்த நாடக விழாவுக்கு வருகை புரிந்திருந்த அனைவரையும் திரு வி.ஜி.பன்னீர்தாஸ் வரவேற்றார்; அப்போது அவர் குறிப்பிட்டார்:

''கலைமாமணி நடராஜ்-சகுந்தலா அவர்களின் இந்த நாடகம் இன்று வீடியோ கேஸட் மூலம் படமாக்கப்படுகிறது. இது உலக நாடுகளில் எல்லாம் காண்பிக்கப்படும். அதன்மூலம் இந்தக் கலைஞர்கள் பெரும்புகழ் பெறுவர்!''

தூத்துக்குடியைச் சேர்ந்த தவத்திரு தவமணி அடிகள் கலைமாமணிகளை வாழ்த்திக் கூறியதாவது:

''ஆண்டவன் படைப்பில் அற்புதமான படைப்புதான் கலை என்பது. இதனை வளர்க்க வேண்டியது நமது கடமை. இந்நாடகத்தைப் பார்த்து நான் பிரமிப்படைந்தேன். உள்ளத்தை உருக்கும் காட்சிகள் - கண்ணைக் கவரும் காட்சிகள் இதில் இருக்கின்றன''.

சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு அனகாபுத்தூர் ராமலிங்கம், தமது உரையில் தெரிவித்தார்—

''சிறப்பான நாடகத்தை உருவாக்கித் தந்துள்ள கலைமாமணிகளை நான் வாழ்த்துகிறேன்; போற்றுகிறேன்''.

இயல் இசை நாடக மன்றச் செயலர், திரு.டி.வி.நாராயணசாமி, தமது உரையில் தெரிவித்தார்:

''கலைக்காக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்-கலையைத் தவிர வேறு எதுவுமே தெரியாதவர்கள்-கலையே வாழ்வாக அமைத்துக் கொண்டிருப்பவர்கள் நடராஜ்-சகுந்தலா ஆவர். இந்த நாடகத்தைத் தெருக்கூத்து பாணியில் உருவாக்கி உயிரோட்டத்துடன் வழங்கியுள்ளனர். இது மேலும் மேலும் மெருகேற்றப்படும்''.

நாடகத்திற்குத் தலைமை வகித்த மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள், தமது உரையில் குறிப்பிட்டார்:

''ஆண்டவனையும் அரசனையும் காவியமாக்கிய கவிஞர்களின் மத்தியில், குடிமகனைக் காவியமாக்கிய பெருமை இளங்கோ அடிகளைச் சேரும். எல்லா முறைகளிலும் இந்தக் காவியம் சொல்லப்பட்டு வருகிறது. நாடகமாகச் சொல்லப்படுகிறது; கதாகாலட்சேபமாகச் சொல்லப்படுகிறது; திரைப்படமாகச் சொல்லப்படுகிறது; இப்போது தெருக்கூத்து பாணியில் இங்கே நடத்தப்பட்டுள்ளது.

“மக்கள் ரசிக்கும் பாணியில் கதை சொல்லப்பட்டு வருகிறது. சாதாரண மக்கள் பார்த்து ரசிக்கும் வகையில் இந்த நிகழ்ச்சி நடைபெறுவதைத் தமிழக அரசு விரும்புகிறது. கலையின் மூலம் மக்களுக்கு நல்ல கருத்துகளைச் சொல்லமுடியும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் தெரிவித்ததாவது;

''இந்த நவீன காலத்தில் இந்த நாடகத்தைத் தெருக்கூத்து பாணியில் அமைத்துத் தருவதற்குத் துணிவு பெற்ற கலைமாமணிகளைப் பாராட்டுவது தகும், திரும்பவும் நாம் பழைய நாகரித்துக்குச் செல்ல வேண்டிய காலம் வரும் என்பதை இந்த நாடகம் நிரூபித்திருக்கிறது.

''எழுதப்படிக்கக் கூடத் தெரியாத சாதாரண மக்களுக்கு இரவும் பகலும் செவிக்கு உணவு கொடுத்து வந்தது தெருக்கூத்து'

இறுதியில் வி.ஜி: சந்தோஷம் நன்றியுரை கூறினார்.





# தமிழ்நாட்டில் நூலகத்துறை வளர்ச்சி

சென்னையிலுள்ள கன்னிமரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். அதில் 3·43 இலட்சம் புத்தகங்கள் உள்ளன. இதன் உறுப்பினர்கள் சுமார் 18,300 பேராவர். மாணவர்களின் வசதிக்காகத் தனியாக பாட புத்தகப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்நூலகத்திற்கு அண்மைக்காலத்தில் வெளிவந்துள்ள புத்தகங்களை வாங்குவதற்கும், நவீனப்படுத்துவதற்கும் 1982–83 முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஆண்டுக்கு ரூ.15 லட்சம் செலவுக்கு அரசு ஏற்பளித்துள்ளது.

தற்பொழுது மாவட்டத்திற்கு ஒன்று விதம் 16 நூலக ஆணைக் குழுக்கள் உள்ளன. புதுக்கோட்டை மாவட்ட நூலக ஆணைக் குழு 1981 செப்டம்பரிலும் கன்னியாகுமரி மாவட்ட நூலக ஆணைக்குழு 1982 ஜூனிலும் அமைக்கப்பட்டன. மாவட்டத்திற்கு ஒன்று விதம் 16 மாவட்ட மைய நூலகங்களும் 1477 கிளை நூலகங்களும் உள்ளன. நாகர் கோவிலுள்ள கவிமணி நிலைய நூலகம் கன்னியாகுமரி மாவட்ட மைய நூலகமாகச் செயல்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் புதிய கிளை நூலகங்கள் 40 திறக்கப்பட்டன.; 1983–84 ல் மேலும் 20 திறக்கப்படும்.

வரும் ஆண்டில் (1983–84) சென்னை நகரில் குடிசைக் பகுதிகளில் 25 படிப்பகங்கள் தொடங்கப்படும். இதற்காகும் மொத்தச் செலவு ரூ. 4·62 இலட்சமாகும். அதில் பாதியாகிய ரூ. 2·31 இலட்சத்தை அரசு மானியமாகத் தரும். மற்றப் பாதி செலவை சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழு ஏற்கும்.

நூலக ஆணைக் குழுக்களின் கீழ் இயங்கும் அனைத்து நூலகங்களிலும் உள்ள நூல்களின் மொத்த எண்ணிக்கை 90 இலட்சமாகும். மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 9·50 இலட்சம். உறுப்பினர்களாக இல்லாதவர்களும் இந்நூலகங்களிலுள்ள நூல்களைப் பயன்படுத்தலாம்.

1981–82-ல் மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் நூலக மேல் வரியாக ரூ. 148 லட்சம் பெற்றன. (சென்னை மாவட்டக் குழு பெற்ற ரூ. 52 லட்சம் உட்பட).

**நூலகக் கட்டடப்பணிகள்.**

சேலத்தில் மாவட்ட மைய நூலகத்துக்கு புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியிலும் கோயம்புத்தூரிலும் மாவட்ட மைய நூலகங்கள் கட்டடம் கட்டும் பணி நடந்து வருகிறது. தருமபுரி மாவட்ட மைய நூலகத்துக்குக் கட்டிடம் கட்ட 1982–83ல் ரூ. 5 லட்சம் அரசு மானியம் தரப்பட்டது. 1983–84-ல் பெரியார் மாவட்டத்தில் மைய நூலகத்துக்கு கட்டடம் கட்ட ரூ. 5 லட்சத்தை அரசு மானியமாகத் தரும்.

கிளை நூலகங்களுக்கு கட்டடங்கள் கட்டித்தரும்பணியை பெரும் அளவில் மாவட்ட மைய நூலகங்கள் மேற் கொண்டுள்ளன. அவை தங்கள் நிதி வசதியிலிருந்தே பல கிளை நூலகங்களுக்கு கட்டட வசதி செய்து வருகின்றன. அத்துடன் 1980–81 மற்றும் 1981–82 ஆண்டுகளில் அரசு மொத்தம் கொடுத்த ரூ. 10 லட்சம் கட்டட மானியத்தைப் பயன்படுத்தியும் கிளை நூலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு சென்னையில் வட்டார நூலகங்களுக்கும் கிளை நூலகங்கள் அனைத்துக்கும் படிப்படியாகக் கட்டடங்கள் கட்டித்தரும் திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது. காந்திநகர், ஷெனாய் நகர், அயனாவரம் ஆகிய வட்டார நூலகங்கள் கட்டி முடிந்து நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. கிளை நூலகங்களைப் பொறுத்தவரை 7 நூலகங்களுக்குக் கட்டிடங்கள் கட்டி முடிக்கபட்டுள்ளன : 11 நூலகங்களுக்கு கட்டிட வேலை நடந்து வருகிறது.

மாவட்ட நூலக ஆணைக்குழுப்பணியாளர்கள் அனைவரும் 1–4–82 முதல் அரசுப் பணியாளர்களாக ஏற்கப்பட்டுள்ளனர். இதனால் 3,214 பேர்கள் பயன் பெற்றுள்ளனர்.



நாட்டு வைத்தியர் காட்டும் மூலிகை

# மருந்தோ மருந்து

—இல. இராசேந்திரன்

பாட்டி வைத்தியம், கைமுறை வைத்தியம் என்றெல்லாம் கூறப் படுவதாலேயே நம்முடைய நாட்டு வைத்திய முறைகள், இங்குள்ள பெரும்பாலானோர் களாலேயே செல்லாக் காசாக எண்ணப்படுவதைப் பார்க்கிறோம். உள்ளபடியே அந்த வைத்தியத்தின் மதிப்பு அவ்வளவு தானா என்றால் அதுதான் இல்லை!

'கேளப்பா மருந்துசொல்வேன் வாதம் பித்தம்...' என்று வைத்திய முறைகளைப் பாட்டாகப் பாடி வைத்தோர், தோற்றத்தால் சிலருக்குக் கேலிக்குரியவர்களாகத் தென்படலாம். ஆனால் அவர்கள் எழுதி வைத்த - அல்லது சொல்லி விட்டுச் சென்ற மூலிகை வைத்திய முறைகள் யாவும் ஒப்பற்றவைகளாகும்.

அத்தகைய அரிய மருத்துவத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்திடும் வகையில் எழுப்பப்பட்டதே சென்னை அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை.

பனகல் அரசர் காலத்திலே துவக்கப்பட்டு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையோடு இணைந்தாற்போல் செயல்பட்டுவந்தது இந்த மருத்துவமனை. 1970ல் தான் இது தனியே பிரிக்கப்பட்டு அரும்பாக்கத்தில் விரிவாக்கப்பட்டது.

10 ஏகருக்கு மேலான நிலப் பரப்பில் கட்டப்பட்டுள்ள அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனையில் - நிர்வாகப்பிரிவு, உள்



இயக்குநர்
டாக்டர் முகமது ஹபிபுல்லா

விருப்பு ஆண்-பெண் நோயாளிகள் பிரிவு, புறநோயாளிகள் பிரிவு, மருத்துவமனை நூலகம், மருத்துவமனை நிர்வாகப் பிரிவு, மருந்திற்கான மூலப் பொருட்கள் சேமிப்பு அறை, மாத்திரைகள் தயாரித்தல், கஷாயம் காய்ச்சுதல், தயாரிக்கப்பட்ட மருந்துகள் பாதுகாப்பு, எக்ஸ்-ரே, நோய்க்குறியியல், மருத்துவ ஆய்வுக் கூடம், மொழிபெயர்ப்புப் பிரிவு எனப் பல்வேறு பிரிவுகள் செயல்படுகின்றன.



திரு. ஏ.கே. விஜயபானு (இ.ஆ.ப.) அவர்களுக்குப் பின், இப்போது டாக்டர் முகமது ஹபிபுல்லா அவர்கள் இந்த மருத்துவமனையின் கண்காணிப்பாளர் பொறுப்போடு இயக்குநர் பொறுப்பையும் ஏற்றுத் திறம் படச் செயல்பட்டு வருகிறார்.

### மூலிகைப் பண்ணை

மருத்துவமனைக்கு எதிரிலேயே, 9 ஏக்கர் நிலப்பரப்பில், இங்கு தயாரிக்கப்படும் மருந்துகளுக்கான மூலிகைப் பண்ணை





நோய்க் குறியியல்



நிர்வாகப் பிரிவு

ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. தனி அலுவலர் பேராசிரியர் திரு குணசேகரன் மேற்பார்வையில் இப்பண்ணை நிர்வகிக்கப்பட்டு வருகிறது.



ஹரே கிருஷ்ணா ஹரே ராமா இயக்கத்'தைச் சேர்ந்த அமெரிக்கரானாலும் திரு இராதாகிருஷ்ணன் எனப் பெயரை மாற்றிக் கொண்ட ஒருவருக்கு, 1981-ல் இரண்டு கால்களும் வாதநோயால் விளங்காமல் போய்விட்டது. ஆங்கில முறை மருந்துவத்தால் எதுவும் ஆகாது என்று முயன்று பார்த்துக் கைவிரிக்கப்பட்ட பிறகு அவர் இந்த மருத்துவமனையிலே வந்து சேர்ந்திருக்கிறார். டாக்டர் எஸ். வெங்கட்ராமன், டாக்டர் பி.கே. கிருஷ்ணன் இருவரும் சிகிச்சையளித்துள்ளனர். நான்கைந்தே மாதத்தில் இங்கு அளிக்கப்பட்ட நாட்டு வைத்தியத்தால் நல்லபடி குணம் பெற்று நடக்கிற அளவிற்குக் கால்கள் சரியாகி இங்கிருந்து சென்றிருக்கிறார் அவர்.

நாட்டு வைத்துய முறையை நல்ல முறை - உயர்ந்த முறை என்ற பொருள்பட அவர் அறிஞர் அண்ணா மருத்துவமனை பற்றி எழுதித்தந்த குறிப்பை நமக்குக் காட்டிப் பெருமைப் பட்டுக் கொண்டார் இயக்குநர் திரு. முகமது ஹபிபுல்லா.

### முக்கிய கவனிப்புகள்

முக்கியமாகப், பக்கவாதம், அல்சர், இளம்பிள்ளை வாதம், கீழ் வாதம், வாத நோய்கள், மஞ்சட் காமாலை போன்றவைகளும் சாதாரண இருமலிலிருந்து காச நோய் வரையும் இங்குள்ள திறம் மிக்க மருத்துவர்களால் நன்கு பரிசீலிக்கப்பட்டு சிகிச்சை தரப் பட்டு பரிபூரணமாகக் குணப் படுத்தப்படுகின்றன.

பாதரசம், கந்தகம், வீரம், பூரம், லிங்கம் போன்ற பாஷாணங்களெல்லாம் கூட சித்தவைத்தியமுறைப்படி, நோய் தீர்க்கும் மருந்துப் பொருட்களாக்கப்படுகின்றன இங்கே. இங்குள்ள





மாத்திரை தயாரித்தல்



நூலகம்

நோயாளிகளுக்குத் தரப்படும் மருந்துகள் யாவும் இங்கேயே தயாரிக்கப்படுகின்றன. அதற்கான மூலப் பொருட்கள் மூலிகைப் பண்ணையிலிருந்து மட்டுமேயல்லாமல் - சீனம், ஆப்கானிஸ்தான், காபூல், ஸ்பெயின், மெக்கா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலிருந்தும் தருவிக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் திருமதி ரதிதேவி, டாக்டர் எஸ். வெங்கட்ராமன், மருத்துவ அதிகாரி டாக்டர் சையத் இமாமுதீன், உதவி மருத்துவ அதிகாரி டாக்டர் அஸீர் ரகுமான், அலுவலக உதவியாளர்

திரு. நாதமுனி, முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. அவர்கள் தலைவராயுள்ள சித்த அறிவியல் மேம்பாட்டுக்குழு தனிஅலுவலர் டாக்டர் கே. பலவேசம் போன்றோர் நம் வினாக்களுக்கெல்லாம் மாறிமாறி விடையளிக்கின்றனர்.

**நவரங்கிழி**

வாதநோய்க்கு அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில் அளிக்கப்படும் 'நவரங்கிழி' என்கிற நூதன சிகிச்சை முறை பற்றி அவர்கள் விளக்குவது நம்மை வியக்கவைக்கிறது.

வாதநோயால் பாதிக்கப்பட்டோரின் அங்கத்தில் எண்ணெய் தடவி, நவர அரிசியைச் சிறு







முட்டையாகக் கட்டி சூடுகாட்டி, நோயாளி தாங்கும் அளவில் 'மசாஜ்' பண்ணினால் அந்த நோய் பதினான்கே நாளில் பறந்தோடிவிடும் என்றார்கள் அவர்கள். பலபேர் இச்சிகிச்சை மூலம் குணம் பெற்றுச் சென்றதையும் பெருமிதத்தோடு குறிப்பிடுகிறார்கள் அவர்கள்.

தமிழகத்திலேயே இந்தமுறை சிகிச்சை இங்கு தவிர வேறெங்கும் அளிக்கப்படுவதில்லை.

ஆண்-பெண் அத்தனை உள்ளிருப்பு நோயாளிகள் முகத்திலும் குணம் பெற்றெழும் நம்பிக்கை பிரதிபலிப்பதை நாம் காண்கிறோம்.

தமிழக மருத்துவமுறையான சித்த மருத்துவம், அரபு நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்த யூனானி மருத்துவம், வடக்கத்திய முறையானாலும் இந்தியாவெங்கும் பரவியுள்ள ஆயுர்வேதம் ஆகிய முறை மருத்துவங்கள் அது அதில் பயிற்சி பெற்ற கைதேர்ந்த மருத்துவர்களால் இங்கே செயல்படுத்தப்படுகின்றன. இம் மூன்று மருத்துவத்திலும் கடைப்பிடிக்கப்படும் முறைகள் வெவ்வேறாக இருந்தாலும் அடிப்படை ஒன்றாகவே இருக்கிறது.

சித்த வைத்திய முறையில் சிகிச்சை பெறுவோர் வார்டில் 51 படுக்கைகள் உள்ளன. ஆயுர்வேத முறையில் சிகிச்சை பெறுவோர் வார்டில் 50 படுக்கைகள் உள்ளன. யூனானி முறையில் சிகிச்சை பெறுவோர் வார்டில் 49 படுக்கைகள் உள்ளன. மொத்தப் படுக்கைகள் இப்படி 150 என்றாலும், உள்ளிருப்பு நோயாளிகளின் எண்ணிக்கை இருநூறை எட்டும் போலிருக்கிறது. தினசரி வந்து போகும் புற நோயாளிகளின் எண்ணிக்கை ஆயிரத்திற்குக் குறையாது.

பழங்கால மருத்துவ முறை பற்றிய நூற்கள் அடங்கிய நூலகம் ஒன்று இங்கே உள்ளது. திருமதி தில்ஷாட் பேகம் நூலகர்.



தயாரிக்கப்பட்ட மருந்துகள்

மருத்துவக் கல்லூரி

இந்திய முறை மருத்



மருந்துப் பொருட்கள் சேமிப்பு

துவத்திற்கான கல்லூரியொன்றும் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையுடன் இணைந்து செயல்படுகிறது.

இரண்டாண்டுப் பட்டப் படிப்புகளாக இங்கே சித்தவைத்தியத்தை 25 பேர்களும், யூனானியை ஐவரும், ஆயுர் தேவத்தை ஐவருமாகப் பயின்று வருகிறார்கள். மருந்தாளுநர் பயிற்சி வகுப்பும் இங்குண்டு.

சித்த வைத்தியத்திற்கான நர்சுகள் பயிற்சி வகுப்பும் விரைவில் துவக்கப்படவிருக்கிறது.

இந்த மூன்றுவகை வைத்தியமும் ஒருசேரக் கற்பிப்பதும், செயல்படுத்தப்படுவதும் இங்கு தவிர வேறு எங்கும் இல்லை. இங்குள்ள சித்த வைத்தியத் துறைக்கு டாக்டர் கே. பரமேஸ்வரன் தலைமையிலான மருத்துவர் குழுவும், யூனானி மருத்துவ முறைக்கு இயக்குநர் டாக்டர் முகமது ஹபிபுல்லா தலைமையிலான மருத்துவர் குழுவும், ஆயுர் வேத மருத்துவ முறைக்கு டாக்டர் திருமதி பி.கே.ரதிதேவி தலைமையிலான மருத்துவர் குழுவும் சிறப்புறச் செயல்பட்டுவருகின்றன.

''இந்திய முறை மருத்துவத்தால் முடியாதது என்று எதுவுமே இல்லை; ஆங்கில முறை மருத்துவத்தால் உடனே நோய் குணமாகலாம், ஆனால் அதே நோய் திரும்ப வருவதையும் சில நேரங்களில் பார்க்கிறோம். இந்திய முறை மருத்துவம் நோயை மெள்ளத்தான் குணப்படுத்தும்-ஆனால் அந்நோய் மறுபடி வராமலே செய்து விடும்'' என்று உறுதியாகச் சொன்னார் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை இயக்குநரான டாக்டர் முகமது ஹபிபுல்லா அவர்கள்.

## அறிவியல் கல்வி



அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டத்தின்கீழ் 1982-83 முடிய 1,093 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள்ளன. 1983-84-ல் மேலும் 13 பள்ளிகள் பயன் பெறும். இத்திட்டத்தின்கீழ் பள்ளிகளுக்குத் தேவையான அறிவியல் தளவாடங்களை மொத்தமாகப்பள்ளிக் கல்வி இயக்குநரே வாங்கி, அனுப்பி வைக்கிறார். அறிவியல் தளவாடங்கள் வழங்குவதற்கு பள்ளிக்கு ரூ. 20,000 அனுமதிக்கப்படுகிறது. அரசு உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை. இத்திட்டத்தின்கீழ் ஆய்வுக்கூடக் கட்டட வகையில் ஒரு பள்ளிக்கு இப்பொழுது ரூ. 80,000 செலவிடப்படுகிறது. இத்தொகை 1983-84-ல் ரூ. 1,20,000 ஆக உயர்த்தப்படும். உள்ளாட்சி மன்ற மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகள் கட்டடச் செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ. 72,000 இதில் எது குறைவோ அது, என்ற அடிப்படையில் இத்திட்டத்தின்கீழ் ஆய்வுக்கூட கட்டிட மானியம் 1983-84-ல் வழங்கப்படும்.

இது வரையில் அறிவியல் ஆய்வுக் கூட வசதியினைப் பெறாத கிராமப் புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வண்ணம் கல்வி மாவட்டங்கள் 51-ல் ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக் கூட வண்டி செயல்பட்டு வருகிறது.

மாநில அளவில் ஆண்டு தோறும் நடத்தும் அறிவியல் கண்காட்சி 1978-ல் மதுரையிலும், 1979-ல் கோவையிலும், 1980-ல் திருநெல்வேலியிலும், 1981-ல் திருச்சிராபபள்ளியிலும் 1982-ல் ராசபாளையத்திலும் நடத்தப்பட்டது. மாணவர்களின் அறிவியல் திறனை ஊக்குவிப்பதும் அறிவியல் பயிற்றுந் தரத்தினை மேம்படுத்துவதும் இக் கண்காட்சிகளின் குறிக்கோளாகும்.









## கண்ணைக் கவரும் கையெழுத்துப் பிரதி

சென்னை-திருவல்லிக்கேணி கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள வெலிங்டன் சீமாட்டி மேல்நிலைப் பள்ளி மாணவியர் 1982-83 ஆம் ஆண்டு மலர் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இம்மலர் முழுக்க, முழுக்க கையாலேயே எழுதப்பெற்ற, ஒரு அழகிய கையெழுத்துப் பிரதியாகும். இது 425 பக்கங்கள் கொண்டதாகும்.

இந்தக் கையெழுத்துப் பத்திரிகையில், தமிழ், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கட்டுரைகள் எழுதப்பெற்றுள்ளன.

மலரில் இடம் பெற்றுள்ள அனைத்து கதை, கவிதை, கட்டுரை, கணிதம், நாடகம், ஓவியம் போன்றவை பள்ளி மாணவிகளால் உருவாக்கப்பட்டவையாகும்.



## பெண் கல்வி

வெறும் உத்தியோக நோக்குடன் கல்வி பயில்வதோடு நின்றுவிடாமல் நம் பெண்கள் அறிவு வளர்ச்சி வேகத்தோடும் கல்விபெற முற்படுவது மிக முக்கியம்!

—பண்டித நேரு

## பற்றுவைத்து நாம் உழைத்தால்...

பற்று வைத்து நாமுழைத்தால் நலம் பெறலாம்
பாய்ந்து வரும் நதிகளிலே ஒளிபெறலாம்
சுற்றமென்று ஆயிரம்பேர் தினம் வரலாம்
சோம்பலின்றி வாழ்வதிலே சுகம் பெறலாம்!

கற்றறிந்தும் வேற்றுமைகள் நமக்கு வேண்டுமா?
கடமைகளைச் சுமைகளென்று வெறுக்கலாகுமா?
பெற்றதிரு நாடுதன்னை நினைக்கவேண்டுமே
பெருவளத்தால் உயர்த்தவேண்டும் கடமையாகுமே!

'தட்டி' கொட்டி சிற்பியொரு சிலை வடிக்கிறான்
தம்பி தங்கை படைக்கவேண்டும் புதிய உலகமே
எட்டியாக நினைத்துவிட்டால் எதுவும் நடக்குமா?
இரவு பகல் இயற்கை விதித்த சட்டமாகுமே!

உற்றபெரும் வாழ்க்கையிதை மனத்தில்
கொள்ளுவோம்
உயர்வு தாழ்வு பேதங்களை நெருப்பில் தள்ளுவோம்
வெற்றியென்றும் உறுதியென்றும்ஒன்று கூடுவோம்
விடிவு காலம் தூரமில்லை சிந்து பாடுவோம்!

—மாணிக்கம்

# அறிவுச் சுடர்

**இந்தியப் புத்தகங்கள்**
**—சில விவரங்கள்**

பத்திரிகைகள் மற்றும் மாதவார இதழ்கள் உட்பட புத்தகங்கள் ஏற்றுமதி மதிப்பு 1981-82இல் சுமார் ரூ.10 கோடி. உலகின் பத்து பெரிய புத்தகத் தயாரிப்பு நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஆங்கிலப் புத்தக வெளியீட்டில் இந்தியா மூன்றாவது இடம் வகிக்கின்றது.

சர்வதேசப் புத்தகக் கண்காட்சியில் பங்கு கொள்ளுதல், இந்தியப் புத்தகங்கள் சம்பந்தப்பட்ட சிறப்புக் கண்காட்சிகள், சந்தை ஆய்வு மற்றும் வர்த்தக ரீதியான விளம்பரம் ஆகியவற்றின் மூலம் இந்தியப் புத்தகங்களை வெளிநாடுகளில் விற்கவும் மொழி பெயர்ப்பு நூல்களை விற்பனை செய்யவும், அயல்நாட்டு அச்சுப் பணிகளைப் பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தாய்லாந்து, வீப்சிக், சிங்கப்பூர், பிராங்க்பர்ட், கானா, பாஸ்ரைன், மணிலா மற்றும் கெய்ரோ தேசிய புத்தகக் கண்காட்சிகள் மற்றும் சர்வதேசப் புத்தகக் கண்காட்சியில் இந்தியா பங்கு கொண்டது.

இலண்டனில் நடைபெற்ற இஸ்லாம் மற்றும் முஸ்லீம் உலக சம்பந்தப்பட்ட மூன்றாவது ஆண்டுக் கண்காட்சியில் இந்தியா பங்கு கொண்டது. கென்யா, பிஜி, நேபாளம் மற்றும் தாய்லாந்தி லுள்ள இந்தியத் தூதரகங்களின் உதவியுடன் சிறப்பு இந்தியப் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பெற்றன.

ஹனோவா, மொரீசியஸ், ஜகார்த்தா, ஹாங்காங், நைஜீரியா மற்றும் டெஹ்ரானில் புத்தகக் கண்காட்சிகளை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

oooooo

**உலக வானிலை நாள்**

உலக வானிலை ஆய்வு மாநாடு 1950 மார்ச் 23 ஆம் தேதி கூடியது. அம்மாநாடு அன்று முதல் ஐக்கிய நாடுகள் சபையின் கிளை அமைப்பாக மாறியது. அதனால் ஆண்டுதோறும் மார்ச் 23ஆம் தேதி உலக வானிலை தினமாகக் கொண்டாடப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் வானிலை ஆய்வு தொடர்பாக ஒரு அம்சத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் வானிலை ஆய்வாளர் என்ற அம்சத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

உலகம் முழுக்க பூமியில் ஒன்பது ஆயிரம் வானிலை ஆய்வு நிலையங்கள் உள்ளன. இவற்றில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட குறிப்புகள் பதிவு செய்யப்படுகின்றன.

நாட்டின் தொலைதூரப் பகுதிகளிலும் வானிலை ஆய்வு நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு கடினமான நிலைகளில் கூட வானிலை ஆய்வாளர்கள் தங்கள் பணியினைத் திறம்படச் செய்யவேண்டியுள்ளது.

வானிலை ஆய்வாளர்களின் கணிப்பு, வானிலை முன்னறிவிப்பு என்று மட்டும் பலர் கருதலாம். ஆனால் விவசாயம், நீர்ப்பாசனம், தொழில்கள் போன்றவற்றிற்கும் கூட அவர்களின் பணி உதவுகிறது.



அகில இந்திய ஐ.ஐ.டி. நுழைவுத் தேர்வில் முதல் இடத்தைப் பெற்ற மாணவர் ஆர். எல். சுந்தரேஷ்.

## தெரிந்து கொண்டால் நல்லது

- நாம் காவல்துறையினரை 'POLICE' என்கிறோம். இந்த 'POLICE' என்பதற்கு, Protection of Life In Civil Establishment என்று பொருள்.
- இங்கிலாந்தில் வெளியிட்ட முதல் அஞ்சல் தலை "பென்னி பிளாக்". இது 1840 ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் தேதி வெளியிடப்பட்டது.
- சிவப்பு, வெள்ளை கலந்த நிறமுடைய வேர்வையை வெளியிடும் ஒரே விலங்கு காண்டாமிருகம்.
- ஆர்யபட்டா (Aryabhata) வின் எடை 360 கிலோ கிராம்.
- முதல் கரென்சி நோட்டு (காகிதப் பணம்) சீனாவில் தோன்றியது.

—இரா. இராஜசேகரன்,
பன்னிரண்டாம் வகுப்பு,
இராமகிருஷ்ணா சாரதா
மேனிலைப் பள்ளி,
சேலம்-5.

# 'ஆப்பிள்' மூலம் பாட போதனை!

தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம் குஜராத், கர்நாடகம் ஆகிய நான்கு மாநிலங்களில் ஆங்காங்கு கூடியிருந்த சுமார் 500 பேருக்கு ஒரே சமயத்தில் ''ஆப்பிள்'' செயற்கைக்கோள் மூலம் சுமார் 5 மணி நேர பாட போதனை நடந்தது!

செங்கல்பட்டு அருகே அஞ்சல்-தந்தித்துறை நிறுவியுள்ள செயற்கைக் கோள் தொடர்பு நிலையம் ஆமதாபாத்தில் உள்ள விண்வெளி பயன்கோள் கேந்திரம், பெங்களூரில் உள்ள இந்திய விஞ்ஞானக் கழகம், உத்தரப்பிரதேசம் மாநில காஜியாபாத்தில் உள்ள தொலைதூரத் தகவல் தொடர்பு ஆராய்ச்சிக் கேந்திரம் ஆகியவற்றில் மாணவர்களும், ஆராய்ச்சியாளர்களுமாக மொத்தம் சுமார் 500 பேர் கூடியிருந்தனர். இந்நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சிப் பெட்டிகள் வழியே இந்த 5 மணி நேர பாடபோதனை நடந்தது. நுட்பமான விஞ்ஞான விஷயம் பற்றி இப்பாட போதனை நடத்தப்பட்டது.

''ஆப்பிள்'' தகவல் தொடர்பு செயற்கைக்கோள் மூலம் மாணவருக்கும், மற்றவர்களுக்கும் நுட்பமான ஒரு பொருள் பற்றித் தொலைக்காட்சி மூலம் பாட போதனை நடத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

இப்பாட போதனை நிகழ்ச்சி முன்கூட்டி நாடாவில் பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்டது. ஆமதாபாத் விண்வெளிக் கேந்திரத்திலிருந்து இந்நிகழ்ச்சி ஆப்பிள் செயற்கைக் கோளுக்கு அனுப்பப்பட்டது. அச்செயற்கைக் கோள் இதனை மேற்கூறிய இடங்களுக்கு அஞ்சல் செய்தது. ஆங்காங்குள்ள செயற்கைக்கோள் தகவல் தொடர்பு நிலையங்கள் இந்நிகழ்ச்சிகளைப் பெற்று அளித்தன.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம், திரூயார்க்கில் அமைந்த மின்சார, மின்னணு பொறியியல் அமைப்பு - அஞ்சல் - தந்தித் துறை ஆகிய மூன்றும் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தன.

இந்திய நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட ஆப்பிள் செயற்கைக் கோள் 1981 ஜூன் 19ந்தேதி பிரெஞ்சு ராக்கெட் மூலம் செலுத்தப்பட்டதாகும். இச்செயற்கைக் கோள் மூலம் இதுவரை தகவல் தொடர்புத் துறையில் பல பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

## சோவியத் அரசு பாதுகாப்பில் உள்ள பல்வகைப் பறவைகள்!





# மறைந்த மேதை திரவியம்

சி. என். கிருஷ்ணபாரதி

அறிவுப் பெருஞ்சுடர், ஆற்றலின் உருவம், உழைப்பின் சிகரம் தொண்டுணர்வின் முழுவடிவம் தமிழ்நாடு தலைமைச் செயலர் திரு கா. திரவியம் அவர்களின் மறைவு தமிழகத்தையே பெருந்துயரில் ஆழ்த்திவிட்டது.

திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடியில் 1925ஆம் ஆண்டு ஜூலை 7-ந் தேதி பிறந்தார். தனது 15-வது வயதிலேயே பல்கலைக் கழகக் கல்வி பயில அடியெடுத்து வைத்த இவரை நாட்டு விடுதலைப் போராட்டம் ஈர்த்தது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இடைநிலை வகுப்பு (இண்டர்மீடியட்) கற்கும்போதே ஓர் உணர்ச்சியூட்டும் பேச்சாளராகத் திகழ்ந்தார்.

அன்றைய ஆங்கில அரசுக்கு இந்த இளம் மாணவர் பெரும் பிரச்சினையாகிவிட்டார். இவருக்குச் சிறை செல்லும் வயது ஆகாததால் அவரை 1940 ஆம் ஆண்டு வீட்டுக்காவலில் ஓராண்டுக் காலம் வைத்திருந்தனர்.

பட்டப் படிப்பிற்காகச் சென்னை கிருஸ்துவக் கல்லூரியில் படிக்கும்போது ''வெள்ளையனே வெளியேறு'' போராட்டத்தில் கலந்து கொண்டமைக்கு அலிப்புரத்தில் ஆறுமாதம் சிறைவாசம் அனுபவித்தார். தண்டனை முடிந்து சிறைக் கூடத்திற்கு வெளியில் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, ஒன்றரை ஆண்டுகள் வேலூர், தஞ்சை சிறைகளில் சிறைவாசம் அனுபவித்தார்.

நாட்டின் உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்ட இவரை, பின்னர் எந்தக் கல்லூரியும் ஏற்றுக் கொள்ளாததால் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, பத்திரிகைத் துறையில் புகுந்தார். இக்காலகட்டத்தில் காந்திய இலக்கியங்கள் பலவற்றையும் மொழி பெயர்த்துத் தமிழ்த்தொண்டும் தேசியத் தொண்டும் செய்தார்.

1947ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் செய்தித் துறையில் உதவி இயக்குநராகப் பணியேற்றி, துணை இயக்குநராகவும், 1954ல் இயக்குநராகவும் உயர்ந்தார். செய்தித்துறையின் வளர்ச்சிக்கு அவரது பணிகள் ஏராளம்.

1958ல் இவர் ஐ.ஏ.எஸ். பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். செங்கை, மதுரை மாவட்டங்களில் ஆட்சித் தலைவராகப் பணிபுரிந்தார்.

பின்னர் கிராம வளர்ச்சித் துறை இயக்குநராகவும், கல்வித் துறைச் செயலாளராகவும், உணவுத் துறைச் செயலாளராகவும் சிறந்த முறையில் பணியாற்றினார். பின்னர் இரண்டாம் செயலாளராகவும், தலைமைச் செயலாளராகவும் பணியாற்றினார். அவரது நேரடி பார்வையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டினைக் கண்டு நாடே வியந்தது.

மாண்புமிகு முதலமைச்சரது புரட்சித் திட்டமான சத்துணவுத் திட்டத்தினைச் செயல்படுத்த அவர் எடுத்துக் கொண்ட முயற்சியும், செய்த ஆர்வமிக்க பணிகளும், அனைத்து அலுவலர்களுக்கும் அளித்த ஊக்கமும் அதனை வெற்றிகரமானதோர் திட்டமாக இயங்கச் செய்து கொண்டிருக்கின்றன.

இத்தனைப் பணிகளுக்கிடையிலும் அவரது இலக்கியப் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வந்தன. காந்தியடிகளின் கடிதங்களையும், மீரா பென் அம்மையாரின் நூலினையும், டாக்டர் ராதாகிருஷ்ணன் பேருரைகளையும் தமிழாக்கிச் சிறந்த நூல்களாகத் தந்துள்ளார்.

அவரது அமர இலக்கியமாக





தமிழக மக்களிடம் திகழ்ந்து நிற்பது அவரது படைப்பான 'தேசியம் வளர்த்த தமிழ்' என்ற நூலாகும்.

தேசியப் போராட்டத்தின் போது தமிழ் இலக்கியத்தினை பங்கையும் பல்வேறு இலக்கியங்களின் மூலமாக உணர்வூட்டிய மேதைகளைப் பற்றியும் எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல் இது.

அவரது இறப்பிற்கு நாடே துயரப்பட்டு நிற்கும் வேளையில் அவரைப் பிரிந்து பெருந்துயரில் மூழ்கியிருக்கும் அவரது துணைவியாருக்கும், மகள்களுக்கும், சகோதரருக்கும் நமது அனுதாபங்கள்.

அவர் 1983 ஜூன் 13ந் தேதி காலை 7 மணியளவில் மறைந்தார் என்ற செய்தியறிந்ததும் தலைமைச் செயலர் பொறுப்பிலுள்ள திரு.சொக்கலிங்கம் அவர்கள் விரைந்து சென்று தலைமைச் செயலகத்தின் சார்பாகத நமது மரியாதையைத் தெரிவித்துக் கொண்டதுடன், உரிய முறையில் இவரது இறுதி மரியாதைகள் நடந்தேற எல்லா ஏற்பாடுகளையும் நேரிலிருந்து கவனித்துக் கொண்டார்.

செய்தி அறிந்தவுடன் அமைச்சர்கள் அனைவரும், உயர் அதிகாரிகளும், அரசு பணியாளர்களும் நாள் முழுதும் தங்கள் இறுதி யாதையைச் செலுத்த அவரது இல்லம் விரைந்தனர்.

கோவை சென்றிருந்த நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்று மாலையே அத்துடன் பயணத்தை முடித்துக் கொண்டு சென்னை திரும்பினார். விமான நிலையத்திலிருந்து நேரடியாக திரு.திரவியத்தின் இல்லத்திற்குச் சென்று அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியது அனைவரையும் நெகிழவைத்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனிருந்து இறுதி ஊர்வலத்தினைத் தொடங்கி வைத்தார்.

சட்டமன்ற மேலவைத் தலைவர் மாண்புமிகு டாக்டர் ம.பொ. சிவஞானம், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன், மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் பொன்னையன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச்.வி. ஹண்டே மற்றும் தலைமைச் செயலாளர் பொறுப்பிலிருக்கும் திரு சொக்கலிங்கம், பல்வேறு துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், அதிகாரிகள் அவரது நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் உடன் வர அவரது உடல் இராணுவ பீரங்கி வண்டியில் வைக்கப்பட்டு, மயிலாப்பூர் மயானம் சென்றடைந்தது. அவரது பேரன் 7 வயது க் குமரன் சிதைக்கு எரியூட்டினான். பூதவுடல் மறைந்தாலும் அவரது புகழுடம்பு என்றும் நிலைத்திருக்கும்.

# வேளாண்மை வளர்ச்சியில் விதைச் சான்றளிப்பின் பங்கு



நீண்ட காலமாகப் பல ரகப் பயிர்ப் பெருக்கத் திட்டத்தில், போதுமான தொழில் நுட்பம், காலம், சக்தி ஆகியவை அதிக அளவில் பயன்படுத்தப்படினும் விவசாயப் பெருங்குடி மக்களின் வருவாயைப் பெருக்குவதில் விதையே முதன்மையாக விளங்குகிறது. நாட்டில் வேளாண்மை அபிவிருத்தியில் விதையே முக்கிய இடம் வகிக்கின்றது.

வேளாண்மை இடு பொருள்களில் விதையின் விலை மிகவும் சிக்கனமானது. தரமுள்ள விதைகளை உபயோகித்து 20 முதல் 40 வரை மகசூல் அதிகப்படுத்தலாம் என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. வெற்றிகரமான சிறந்த பயிர் உற்பத்திக்கு, மரபு வழித் தூய்மை, புறத்தூய்மை, வெளி முதிர்ச்சி ஆகிய குணங்களுடன் கூடிய சிறந்த விதை அவசியம். இவ்வித விதைகளைப் பெற, தக்க, தரமுள்ள விதைக் கட்டுப்பாட்டு அமைப்பு மிக அவசியம்.

விதைகளைத் தேர்ந்தெடுத்துப் பயிர் உற்பத்தி செய்வது முதல், மறு உற்பத்திக்கு விதை வழங்குவதையும் இவ்வமைப்பு கவனிப்பதும் அவசியமாகிறது. முந்தைய அனுபவங்களிலிருந்து தரமுள்ள விதை உற்பத்திக்குச் சிறந்த வழி, விதைச் சான்றளிப்பு ஒருங்கமைப்பேயாகும் என்பது தெளிவு. எவ்விதமான விதைப் பெருக்கத் திட்டத்திலும் விதைச் சான்றளிப்பே முக்கியப் பங்கு வகிக்கிறது.

நமது நாட்டில் சுதந்திரத்திற்கு முன்பே விதைச் சான்றளிப்பின் அவசியம் பற்றிய பொதுக்கருத்து இருந்து வந்துள்ளது. எனினும், உணவு, எண்ணெய் வித்துக்கள் குறைந்த அவில் கடைப்பிடிக்கப்பட்டன. விதை உற்பத்தியில் வீரிய மக்காச்சோளம், வீரிய காய்கறித் தட்டுப்பாட்டின்போது தனியார் துறையாலும் விதைச் சான்றளிப்புக் கொள்கைகள் குறைந்த அளவில் கடைப்பிடிக்கப்பட்டன. விதை உற்பத்தியில் வீரிய மக்காச்சோளம், வீரிய சோளம், வீரிய கம்பு ஆகிய விதைகளுக்கே விதைச் சான்றளிப்பு முதலில் ஆரம்பிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டது.

1966 ஆம் ஆண்டு இந்திய விதைச் சட்டம் நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பயனாக விதைச் சான்றளிப்புச் செயலாண்மை நிலையம் அமைப்பதற்கும் வழி வகுக்கப்பட்டது. இந்நிலையம் உடனடியாக பாநிலத்தில் ஏற்படுத்த இயலாத நிலைமை இருந்ததால், மத்திய அரசு மாநில அரசுடன் கலந்து கொண்டு விதைச் சான்றளிப்புப் பணியைத் தற்காலிகமாகத் தேசிய விதைக் கழகத்தின் பொறுப்பில் விட்டது.

இந்த முறை 1969 வரை செயலில் இருந்து, பின் 1970-லிருந்து வேளாண்மை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் தனி அமைப்பாக இயங்கத் தொடங்கியது. வேளாண்மைத் துறை விதை உற்பத்தியில் பெரும் பங்கு வகித்து சுமார் 60 க்கு மேல் சான்றிதழ் விதை உற்பத்தியாளராக இருப்பதால் விதைச் சான்றளிப்பில் சாதகமாக முடிவெடுக்கும் வாய்ப்பு இருக்கும் என்ற கருத்து மற்ற உற்பத்தியாளர்களிடம் ஏற்படும் என்று கருதி விதைச்சட்டம் 1966ன்படி தனியாக விதைச் சான்றளிப்புச் செயலாண்மை நிலையம் ஏற்படுத்துவதன் அவசியம் அரசால் பரிசீலிக்கப்பட்டது. 30.6.79ல் அரசு ஆணையின்படி 24.10.79ல் கோவையைத் தலைமையகமாகக் கொண்டு விதைச் சான்றளிப்பு இயக்குநர் அகம் செயல்படத் துவங்கியது.

தனியாக விதைச் சான்றளிப்புச் செயலாண்மை நிலையம் அமைக்கப்பட்டது சிறப்பானதொரு நிகழ்ச்சியாகும். விதைச் சான்றளிப்பு சட்டமுறையான விதிகளின்படியே செயல்படுகிறது. விதிமுறைச் சட்டம் 8 மற்றும் 9ன்படி முறையே விதைச் சான்றளிப்பை நெறிமுறைப்படுத்துவதும் விதைச் சான்றளிப்பின் கீழ் விதை உற்பத்தி செய்ய விரும்பும் ஒருவருக்கு அவரது தேவையைச் சட்டப்படி பூர்த்தி செய்வதுமேயாகும். விதைச் சான்றளிப்பு, மனித சக்தியுடன் இணைந்து தனித்தன்மை கொண்ட, நுட்பம் வாய்ந்த பணியாகும். விதைச் சான்றளிப்பு ஆறு வழிகளில் முடிவடைகிறது. அவையாவன:





1. விண்ணப்பம் பெறுதலும், பரிசீலித்தலும்.
2. பயிர் உற்பத்திசெய்வதற்கு உபயோகித்த விதை அளவும், விதை மூலத்தையும் சரிபார்த்தல்.
3. சான்றளிப்பில் நிர்ணயிக்கப்பட்ட வயல் தரத்துக்கு உகந்ததாகப் பயிர் பராமரிக்கப்பட்டு உள்ளதா என ஆய்வு செய்தல்.
4. பல்வேறு நிலைகளில் பார்வையிடுதல், குறிப்பாக அறுவடைசெய்யும்பொழுது அறுவடை செய்த கதிர்களைக் களத்திற்குக் கொண்டு செல்லுதல், கதிரடிப்பது, தூற்றுதல், சுத்திகரித்தல், பை பிடித்தல்.
5. விதை மாதிரி எடுத்தல், இனத்தூய்மை சோதனை உட்பட விதைச் சோதனை முடிவு விதை ஆய்வுக் கூடத்தில் பரிசீலித்தல்.
6. சான்றுரை வழங்குதல், சான்று அட்டை வழங்குதல், முத்திரையிடுதல்.

மேலே கூறிய விதைச் சான்றளிப்புப் பணிகள் மேற்கூறிய எல்லா நிலைகளிலும், விதைச் சான்றளிப்புத் துறையினரால் சான்றளிப்புத் தரத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகின்றன.

சான்றளிப்பு, விருப்பத்திற்குட்பட்டது. சான்று விதை உற்பத்தி, உற்பத்தி செய்யும் விருப்பம் உள்ள விதை உற்பத்தியாளர்கள் குறிப்பிட்ட விண்ணப்பப் படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட விதைச் சான்றுக் கட்டணத்துடன் இத்துறையின் (விதைச்சான்று) உதவி வேளாண்மை இயக்குநர்களிடம் விண்ணப்பிக்கலாம். விதைச் சான்றளிப்பு விருப்பத்திற்குட்பட்டதாயினும் இத்துறை துவங்கிய அடிப்படை ஆண்டு, 1979-80-லிருந்து சான்றளிப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பளவு உற்பத்தி செய்யப்பட்ட - சான்றளிக்கப்பட்ட விதைகளின் அளவு குறிப்பிடத்தக்க வகையில் அதிகமாகிக் கொண்டே வந்துள்ளது.

இதற்குக் காரணம், தமிழ்நாட்டில் சான்று விதை உற்பத்திக்கு- குறிப்பாக வீரிய சிறு தானியங்கள் மற்றும் வீரியப் பருத்தி போன்ற ரகங்களுக்கு நிலவும்



சாதகமான பருவ நிலையும் ஒவ்வொரு வருடமும் விவசாயிகளால் அதிகமான அளவில் சான்று விதை உபயோகப்படுத்தப்படுதலும், தமிழ்நாடு சான்று விதைகளை அடுத்த மாநிலங்களில் அதிகமான அளவு விரும்பி வாங்குவதுமேயாகும்.

நடுத்தர மற்றும் அதிக அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் தாங்களே சான்று விதை உற்பத்தியில் ஈடுபட்டுத் தங்களது சொந்தப் பெயரிலேயே விதை விற்பனை செய்து வருகின்றனர். அடுத்த மாநிலங்களில் அதிக அளவு விதை உற்பத்தி செய்யும் விதை உற்பத்தியாளர்கள், இம் மாநிலத்தில் உள்ள நடுத்தர, சிறிய விவசாயிகளின் வயல்களில் ஒப்பந்த முறையில் சான்று விதை உற்பத்தியில் அண்டை மாநிலங்களில் உள்ள விதை உற்பத்தியாளர்கள் குறிப்பிடத்தக்க வகையில் ஈடுபட்டு, நல்ல விலை கொடுத்து, சான்று விதைகளைக் கொள்முதல் செய்து வருகிறார்கள். மாநிலவேளாண்மைத்துறை, தேசிய விதை நிறுவனம், எண்ணெய் வித்துத் துறை, தோட்டக் கலைத்துறை, செங்கம் மாநிலப் பண்ணை நிறுவனம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மற்றும் கூட்டுறவுத் துறைகளாலும் சான்று விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன.

இம்மாநிலத்தில் விதைச் சான்றுத் துறையினால், மாநில வேளாண்துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தனியாருக்குச் சொந்தமான 234 சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ஒப்புதல் அளிக்






கப்பட்டுள்ளன. இந்தச் சுத்திகரிப்பு நிலையங்களில், விதைத் தூய்மை, உறுதி செய்வதற்காக சான்றளிப்புத்துறை அலுவலர்களின் மேற்பார்வையில் கதிரடித்தல், விதை சுத்தம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

எனவே விதை நட்டது முதல் விதைச் சான்றளிப்பு வரை ஒவ்வொரு நிலையிலும் நிறைய வேலை வாய்ப்பு உள்ளது. எனவே வேலைவாய்ப்புப் பெருகவும், வேலையாட்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும் வழி கோலுகிறது. ஒரே பயிரின் தானிய மணிகளை விட விதையின் விலை அதிகமாக இருப்பதால் விதைச் சான்றளிப்பின் கீழ் பயிர் செய்யும் விவசாயிகளின் பொருளாதாரம் மேம்பட உதவி புரிகிறது. அதிக அளவு சான்று விதை உற்பத்தி, விவசாயப் பெருமக்களால் அதிக அளவு சான்று விதைகளே உபயோகிக்க வழி வகுக்கிறது. இதுவே அதிக விவசாய உற்பத்திக்கு உதவி செய்யும். சான்று விதை அதிகமாக உற்பத்தி செய்வதால், கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பைப் பெருக்குவதோடல்லாமல், கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தையும் செம்மையாக்குகிறது.

## விதை ஆய்வுத் திட்டம்

நல்ல பயனுள்ள, தரமான விதைகளையே உபயோகித்து சிறந்த விதைகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணம் விவசாயிகளிடையே பெருகியுள்ளது. விதைச் சட்டம் 1966-ன் கீழ் எல்லா மேம்பட்ட உயர்ரக விதைகள் அங்கீகரிக்கப்பட்டு வருகின்றன. இதனால் அங்கீகரிப்புச் செய்த விதைகள், விற்பனை நிலையங்களில் அதிகரித்து வருகின்றன. விதைகளின் தரத்தை முறைப்படுத்துவதற்கு விதைச் சட்டம் 1966 வழி வகுக்கிறது. மேலும் தரமற்ற விதைகளை விற்கும் உரிமையாளர்களின் மேல், நீதிமன்ற வழக்குகள் தொடரவும்வழி வகுத்தது.

விதை உற்பத்தி நிலையங்கள் அதிகமாக வளர்ச்சி பெற்று வருவதால் விற்பனையாளர்கள் தரமற்ற விதைகள் விற்பனைக்குக் கொண்டுவரும் முறைகேடுகளும் வளர வாய்ப்பு ஏற்பட்டதால், இந்நிலையைப் போக்க விதை ஆய்வு அவசியம் எனக் கருதி, அரசாங்கம் 1977ல் விதை ஆய்வுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி வேளாண்மைத்துறை (சென்னை) அவர்களின் கட்டுப்பாட்டில் உதவி வேளாண்மை இயக்குநர் (விதை ஆய்வு), கோவை அலுவலகம் ஆகியவை நிறுவப்பட்டன. விதைச் சான்றளிப்புத் துறை 1.10.81 முதல் தனியாகத் துவங்கிய பின்பு, விதை ஆய்வு, விதைச்சான்று இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. இப்பொழுது 5 உதவி வேளாண்மை இயக்குநர்களும் (விதை ஆய்வு), 18 வேளாண்மை அலுவலர்களும் (விதை ஆய்வு) திட்டப் பணியில் பணி புரிகிறார்கள்.

விதை ஆய்வாளரின் முக்கியமான கடமைகளும், பொறுப்பும் பின்வருமாறு:

### ஒழுங்கு படுத்துதல்:

விதைச் சட்டம், விதை உற்பத்தியாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட நல்ல தரமான விதைகளையே உழவர்களுக்கு விற்பனை செய்ய வழி வகுக்கின்றது.

### திட்டங்கள்:

விரிவாக்கப் பணியின் மூலம்



விவசாயிகளின் இடையே சான்றளிப்புப் பெற்ற விதைகளையே உபயோகிக்க வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியும், விதை விற்பனையாளர்கள், விதைச் சட்டத்திற்குப் புறம்பாக விதை விற்பது தடை செய்யப்பட்டு, விவசாயிகள் நல்ல விதை உபயோகிக்க இத்திட்டம் வழி வகுக்கிறது.

## கடைசி அட்டையில்

# + 2 தேர்வில் முதலாவது மாணவ மணிகள்

தமிழ்நாட்டில் கடந்த ஏப்ரல் திங்களில் நடைபெற்ற மேல் நிலைப் பள்ளித் தேர்வுகளில் ( + 2தேர்வில்) 66 சதவிகித மாணவர்கள் தேர்ச்சி, பெற்றுள்ளனர். இது கடந்த ஆண்டைவிட 4 சதவிகிதம் அதிகமாகும்.

இவ்வாண்டு மொத்தம் 1,75,092 மாணவர்கள் தேர்வு எழுதினார்கள். பள்ளிகள் மூலம் 1,41,692 மாணவர்கள் தேர்வு எழுதினார்கள்.

இந்த ஆண்டு 53,368 மாணவர்கள் 68 சதவிகித மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர். இவ்வாண்டு 79 சதவிகித மாணவர்கள் பொதுவான பாடங்கள் எடுத்துப் படித்தனர் 21 சதவிகிதத்தினர் தொழில் கல்விபாடம் படித்தனர்.

**முதல் இடம் பெற்ற மாணவர்:**

+ 2தேர்வில் முதல் இடத்தைப் பெற்ற மாணவர் எஸ். பிரபு. கோயம்புத்தூர் கார்மல் கார்டன் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர் ஆவார். இவர் 1200க்கு 1153 மதிப்பெண்கள் (96.1 சதவிகிதம்) பெற்றுள்ளார். பிரபு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரபுவின் தந்தையின் பெயர் சிவலிங்கம். தாயார் பெயர் சரோஜா.சேலம்குகையைச்சேர்ந்வர்கள். பிரபுவின் தந்தை திரு. சிவலிங்கம்குடந்தையில் துணைப் பதிவாளராக பணியாற்றுகிறார். தாயார் சரோஜா கோவையில் ஒரு பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றுகிறார். அவர்களுக்கு இரு புதல்வர்கள். பிரபு மூத்த புதல்வர்.

தாம் பொறியியல் பட்டம் பெற விரும்புவதாக எஸ்.பிரபு விருப்பம் தெரிவித்துள்ளார்.

**இரண்டாவது இடம் பெற்ற மாணவி:**

+ 2 தேர்வில் 1200க்கு 1145 மதிப்பெண்கள் (95.4 சதவிகிதம்) பெற்று' இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ள என். கலா சென்னை ஆதர்ஸ வித்யாலயா மாணவி.

கலாவின் தந்தை பெயர் பி.நடராஜன்.இஞ்சினியர் ஆவர். தாயார் பெயர் திருமதி சாந்தா.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் மாநிலத்தில் முதலாவதாகதேறிய என்.கலா, ப்ளஸ் டூ தேர்வில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார். இம்முறை கலாவை விட 8 மதிப்பெண்கள் கூடுதலாகப் பெற்று முதல் இடத்தைப் பெற்றுள்ள கோவை மாணவர் எஸ்.பிரபு 1981 ல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் கலாவுக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தார்.

என்.கலா பொறியியல் துறையில் கட்டடக்கலை (ஆர்கிடெக்சர்) அல்லது மருத்துவப் படிப்பைப் படிக்க விரும்புகிறார்.

**மூன்றாவது இடம் பெற்ற மாணவி:**

சென்னை சேக்ரட் ஹார்ட் மெட்ரிகுலேஷன் மேல் நிலைப் பள்ளி மாணவி ஜி.தீபிகா, 1200க்கு 1140 மதிப்பெண்கள் பெற்று மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

தீபிகா மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிக்க விரும்புகிறார். இவருடைய தந்தையின் பெயர் கோபாலகிருஷ்ணன். தாயாரின் பெயர் மீனலோசனி.

**பெண்களுக்கு முதலிடம்:**

இந்தத் தேர்வில் இவ்வாண்டு முதல் 10 இடங்களை 17 மாணவர்கள் பெற்றுள்ளனர். இதில் ஒன்பது பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரையைச் சேர்ந்த ஏ.எஸ். பிஸ்வஜித் (டி.வி.எஸ். மேல் நிலைப்பள்ளி), சென்னையைச் சேர்ந்த எஸ். ராமகிருஷ்ணன், (சென்னை கிறித்துவக் கல்லூரி பள்ளி) ஆகியோர் 1138 மதிப்பெண்கள் பெற்று நான்காவது இடத்தைப் பெற்றனர்.

ராஜபாளையத்தைச் சேர்ந்த ஏ.சகாய ஸ்டீபன் ராஜ் (பி.ஏ.சி. ஆர்.எம். மேல்நிலைப்பள்ளி) 1130 மதிப்பெண்கள் பெற்று ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்றுள்ளார். எஸ்.எம்.ராஜேந்திரன் (டி.வி.எஸ். லட்சுமி மேல்நிலைப் பள்ளி, மதுரை), உன்னிசக்கோ தாமஸ்(சென்னை டான்பாஸ்கோ மேல்நிலைப்பள்ளி) ஆகியோர் 1129 மதிப்பெண்கள் பெற்று ஆறாவது இடத்தைப் பெற்றுள்ளனர்.

பி.சாந்தி (புனித ஜோசப் பெண்கள் பள்ளி, திண்டுக்கல்) 1127 மதிப்பெண்கள் பெற்று ஏழாவது இடத்தைப் பெற்றுள்ளார். வி.சுந்தரராஜன் (எம்.சி. டி.எம். மேல்நிலைப்பள்ளி, சென்னை) 1126 மதிப்பெண்கள் பெற்று எட்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

ஜி.எஸ்தர் அமிர்த குமாரி (என்.எல்.சி. பெண்கள் மேல் நிலைப் பள்ளி, நெய்வேலி), வி. ரவிசங்கர், செண்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்திய மேல்நிலைப் பள்ளி, சாந்தோம் சென்னை) எஸ்.விஜயலட்சுமி (ரோஸரிமெட்ரிகுலேஷன் மேல் நிலைப்பள்ளி, சாந்தோம் சென்னை) ஜே.அனித செல்வகுமாரி (புனித மேரி பெண்கள் மேல் நிலைப் பள்ளி, அரிசிபாளையம், சேலம்) ஆகிய நால்வர் 1125 மதிப்பெண்கள் பெற்று ஒன்பதாவது இடத்தைப் பெற்றுள்ளார்கள்.

ஆர் ராதிகா (எஸ்.ஆர்.கே. எம். சாரதா வித்யாலாயா பெண்கள் பள்ளி தியாகராய நகர் சென்னை) காயத்திரி மணி (ரோஸரி மெட்ரிகுலேஷன் மேல் நிலைப்பள்ளி, சாந்தோம் சென்னை) ஏ.சிரீன் (புனித உர்ஸூலா இந்தியப்பள்ளிசென்னை, ஆகியோர் 1123 மதிப்பெண்கள் பற்று பத்தாவது இடத்தைப் பெற்றுள்ளனர்.

கடின உழைப்பின் மூலம் + 2 தேர்வில் உயர்ந்த மதிப்பெண்களை எடுத்துள்ள மாணவமணிகளைப் பாராட்டுவோம், வாழ்த்துவோம்.

—மாமூலன்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



"கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்"
பார்த்தாலே தெரிகி
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

தமிழரசு
16-6-1983
Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676

# +2 தேர்வில்...



முதல் மாணவர்
எஸ். பிரபு



இரண்டாவது மாணவி
என். கலா



மூன்றாவது மாணவி
தீபிகா





மகாகவி பாரதியார் நூற்றாண்டு நிறைவு விழா சென்னை (16,17-12-82)



தமிழ்த் தென்றல் திரு.வி.க நூற்றாண்டுத் தொடக்க விழா சென்னை (26-8-82)

## நாங்கள் பெற்ற வெற்றி

சமுதாயத்தின் ஒவ்வொரு தரப்பாருடைய நன்மையும், அவரவர்களது மகிழ்ச்சியுமே எங்கள் குறிக்கோள்! இப்படி ஒவ்வொரு பகுதியினரும் மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்வதன் மூலம், சமூகமுழுமையும் மகிழ்ச்சியுடன் இருக்க வழிகோல வேண்டுமென்பதே எங்கள் குறிக்கோள்! இந்தக் குறிக்கோளை நோக்கிப் பணியாற்றுவதில் இதுவரை நாங்கள் வெற்றி கண்டுள்ளோம்; இனியும் வெற்றி காண்போம்!

—பேரறிஞர் அண்ணா




# தமிழரசு

மலர் : 14 இதழ் : 1

1-7-1983

திருவள்ளுவர் ஆண்டு 2014

ருத்ரோத்காரி — ஆனி 17



## தமிழக அரசு உறுதி மொழி

மாற்றங்களின்றி முன்னேற்றமில்லை. முன்னேற்றமில்லையேல் வரலாறு இல்லை. மாறுதல் என்பது சிறப்பாக அமையும் போதுதான், அதுவே முன்னேற்றத்திற்கான சீரான பாதையினையும் அமைத்துக் கொடுத்துவிடுகிறது. சமுக முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத தேவை என்றாலும், அதன் பலன்கள் ஏழை எளிய மக்களுக்குக் கிடைப்பது அவசியம்;

அண்ணா அவர்களின் அணுகுமுறையைத்தான் தமிழக அரசு கடைப்பிடித்துச் செயல்பட்டு வருகிறது. பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் காண விரும்பிய சமத்துவச் சமுதாயத்தைக் காண்பதில் ஏற்படுகின்ற தடை எதுவானாலும் அதை அப்புறப்படுத்திச் செயல்படத் தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.

—மாண்புமிகு முதல்வர்

# முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்



நம்முடைய முன்னோர்கள் உணவைப் பிறர்க்கென வழங்கி உண்பவர்களை மிகவும் புகழ்ந்துரைத்து, பிறர்க்குத் தெரியாமல் தானே உண்பவர்களை இகழ்ந்துரைத்தனர்.

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்
தாமுடைமை
வைத்திழக்கும் வன்கணவர்"

என்ற திருக்குறள் இக்கருத்தை வலியுறுத்தும்.

''தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இச் செகத்தினை அழித்திடுவோம்''-என்று மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கூறுரைத்தார்.

'ஏழைகளுக்கு உண்ணும் உணவின் வடிவத்தில் இறைவன் தோற்றமளிக்கிறான்'. என்று காந்தியடிகள் கூறியுள்ளார். இக்கருத்தின் விளக்கமாகவே ''ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன்'' என்று பேரறிஞர் அண்ணா கூறினார். குழந்தைகளிடையே நிலவும் பசிப் பிணி அதுவும் குறிப்பாக அவர்கள் வாழ்வையே அழிக்கும் கொடுமை கொண்ட அந்த பசிப்பிணித்துயரைச் சொல்லி முடியாது.

மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்களைப் பொறுத்த மட்டில், பசியும், வறுமையும் ஏட்டளவிலானதோ, கருத்தளவிலானதோ அல்ல; அவருடைய இளமைக் காலத்தில் அவர் வாழ்வோடு அந்த வருத்தம் இணைந்திருந்தது. தானே துயர்ப்பட்டதை உள்ளமுருக அவர் எடுத்துரைத்தார். அவருடைய அண்டை வீட்டார் அன்றைய உணவுக்காக அரிசி கொடுத்து இவருக்கும் இவருடைய குடும்பத்தாருக்கும் ஏற்படவிருந்த அவலத்தைத் தவிர்த்தார்கள் என்று அவர் நெஞ்சுருகக் கூறியுள்ளார்.

எனவே அத்தகைய அவல நிலைமையைத் தவிர்க்கும் பொருட்டே நம்முடைய குழந்தைகளுக்கான நண்பகல் சத்துணவுத் திட்டம் இந்த அடிப்படையில் கொண்டு வரப்பட்டுள்ளது. மனிதாபிமான கோட்பாட்டினாலும், நல்லெண்ணத்தினாலும், தூய பணியைத் தொடர்கிறோம் என்ற உன்னத உணர்வினாலும் தொடங்கப்பட்ட சில வாரங்களுக்குள் இம்மகத்தான திட்டம் மக்களிடையே ஆர்வத்தையும் ஆதரவையும் எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

## முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்

2 முதல் 10 வயதுப் பிள்ளைகளுக்கு இலவச சத்துணவு வழங்குவதற்கான ஒரு சரித்திர முதன்மை பெற்ற திட்டத்தை 1.7.1982 அன்று தமிழ்நாடு அறிமுகப்படுத்தியது. அன்று நண்பகல் 12 மணி அளவில் 55.96 லட்சம் குழந்தைகள் தமிழகக் கிராமப்புறங்களில் உள்ள ஆயிரக்கணக்கான குழந்தைகள் சத்துணவு மையங்களிலும் துவக்கப்பள்ளிகளிலும் அரசு இலவசமாக வழங்கும் சத்துணவை அருந்த அமர்ந்தனர். குழந்தைகள் உடல் நலத்தில் மட்டுமல்லாமல் கிராமப்புற சமூக நிலைகளிலும் புதிய மாற்றங்களுக்கு வழி வகுத்துள்ள இம்மாபெரும் ரூ. 100 கோடி முயற்சி மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். உள்ளத்தில் உதித்த திட்டமாகும். இத்திட்டம் செயற்கரிய பரிமாணமும், அளப்பரிய பிள்ளைகளின் எண்ணிக்கையும் கொண்டிருப்பதால் நுணுக்கமான செயல் திட்டத்தை வெகு தீர்க்கமாக வகுக்க வேண்டியிருந்தது. இம் மாபெரும் திட்டத்தில் உன்னதமான நோக்கத்தால் உந்தப்பட்டு நிருவாகம் மிகத் திறமையுடனும் கட்டுப்பாட்டுடனும், நம்பிக்கையுடனும் செயல்பட்டுள்ளது. ஆயினும் இத்திட்டத்தின் வெற்றி பொதுமக்கள் காட்டும் ஆதரவையும், கண்காணிப்பையும்பொறுத்தும் இருக்கிறது. இத்திட்டத்திற்காகப் பல்வேறு அறிவுத் திறம் படைத்த பொது மக்களிடமிருந்து வந்துள்ள மாபெரும் வரவேற்பு இத்திட்ட அலுவலர்களுக்கு ஒரு பெரும் ஊக்கமாக இருந்தது.



## 2– 4 வயதுப் பிரிவினர்

இத்திட்டத்தினால் பயனடையும் பிள்ளைகள் இரு பிரிவினராக வகுக்கப்பட்டுள்ளனர். 2 –4 வயதுப் பிரிவினர் குழந்தைகள் மையங்கள் குழந்தைகள் நல அமைப்பாளர்களால் இரு உதவியாளர்களின் துணையோடு பயிற்சியும் உணவும் அளிக்கப்படுகிறார்கள். அமைப்பாளர்கள் உதவியாளர்கள் பணியிடங்களுக்கு உள்ளூர் பெண்மணிகளே நியமிக்க தனிக்கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அமைப்பாளர்களில் பெரும்பாலோர் பள்ளி இறுதி வகுப்புத் தேறியவர்களாவர். இவர்கள் வயது வரம்பு 25 முதல் 35 வரை ஆகும். விதவைகளுக்கு இவ்வயது வரம்பு 25 முதல் 40 வரை அனுமதிக்கப்பட்டுள்ளது. 25-40 வயதிற்குட்பட்ட தமிழ் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் உதவியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்விரு நியமனங்களிலும் விதவைகளுக்கும் கைவிடப்பட்ட பெண்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அமைப்பாளர்களுக்கு ரூ. 175-ம் உதவியாளர்களுக்கு ரூ. 60 -ம் மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது. உதவியாளர்கள் சமையல் மற்றும் பரிமாறுதல் பணியைச் செய்வர். அமைப்பாளர்கள் மையத்தின் பொது மேற்பார்வைகளையும் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் பணியையும் ஆற்றுவர். ரூ.600 -மதிப்புள்ள கல்வி மற்றும் விளையாட்டுச் சாதனங்கள் ஒவ்வொரு பாலர் பள்ளி மையத்திற்கும் அளிக்கப்பட்டு வருகின்றன. ரூ.2000 - மதிப்புள்ள சமையல் பாத்திரங்கள் தட்டுக்கள் குவளைகள் ஒவ்வொரு மையத்திற்கும் அளிக்கப்பட்டுள்ளன. 1.8.82 நாளின்படி 2 –4 வயதுப்பிரிவில் 19.89 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தால் பலனடைந்துள்ளனர்.

## 5 –9 வயதுப் பிரிவினர்

துவக்கப்பள்ளிகளில் பயிலும் 5 -9 வயதுப் பிள்ளைகள் இப்பிரிவின் கீழ் பலனடைகின்றனர். இத்திட்டம் நடக்கும் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.2 - தினசரி ஊதியத்தில் ஒரு பகுதிநேரச் சமையலரும், ரூ. 1- தினசரி ஊதியத்தில் ஒரு பகுதி நேர உதவியாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர். 500 பிள்ளைகளுக்கும் மேல் உணவுண்ணும் பள்ளிகளுக்கு கூடுதலாக ஒரு சமையலர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கீழ்க்கண்ட விகிதத்தில் சத்துணவு தயாரித்து வழங்கப்படுகிறது.

| பொருட்கள் | 2 -4 | 5 -9 |
|---|---|---|
| | கிராம் | கிராம் |
| அரிசி | 80 | 100 |
| பருப்பு | 10 | 15 |
| எண்ணெய் | 7 | 7 |
| காய்கறி தாளிதம் | 50 | 50 |





## முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்

| | |
|---|---|
| மொத்த மையங்கள் | 61,749 |
| பள்ளிச் சத்துணவு மையங்கள் | 33,829 |
| பாலர் பள்ளி மையங்கள் | 27,920 |
| பயன் பெறும் குழந்தைகள் | 64.4 லட்சம் |
| 2—4 வயதினர் | 22.66 லட்சம் |
| 5—9 வயதினர் | 41.74 லட்சம் |
| இத்திட்டத்தினால் வேலை வாய்ப்புப் பெற்றோர் | 1,80,119 |
| இதில் பெண்கள் மட்டும் | 1,58,387 |
| இத்திட்டத்திற்கு ஆகும் ஆண்டுச் செலவு | ரு. 133 கோடி |

### பழைய திட்டமும் புதிய திட்டமும்

முந்தைய திட்டத்தின் கீழ், அரசின் பங்குத் தொகை 10 காசு மட்டுமே, அதில் 0.05 காசு உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து பெறப்பட வேண்டும். பல உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து இந்த 5 காசு பங்குத் தொகையும் வரவே இல்லை. எனவே நன்கொடைகளையே பெரிதும் நம்பி இத்திட்டத்தைச் செயல்படுத்தப்பட வேண்டியிருந்தது. அன்றாடம் உள்ளூர் ஆதாரங்களை ஒழுங்கு திரட்டுவது இத்திட்டத்திற்குப் பொறுப்பு வகித்த ஆசிரியர்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது. தற்போதைய திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சிறுவருக்கும் உணவுச் செலவுகளுக்காக 45 காசு மானியமும், நிர்வாகச் செலவுகளுக்காக 5 காசும் அளிக்கப்படுகிறது. இவ்வாறாக இத்திட்டத்திற்காகும் நிதிப் பொறுப்பு முழுவதையும் அரசே ஏற்றுக் கொண்டு உள்ளது. நாள்தோறும் இத்திட்டத்தைச் செயற்படுத்த அன்றாடம் பொதுமக்களிடமிருந்து நன்கொடை கேட்டுப் பெறும் நிலை தற்போது ஆசிரியர்கட்கு இல்லை. முந்தைய திட்டத்தின் கீழ் இத்திட்டத்தைச் செயல்படுத்த பள்ளிகள் நிலையில் சிறப்புப் பணியாளர்கள் நியமிக்க அனுமதி வழங்கப்படவில்லை. தற்போதைய திட்டத்தின் கீழ் ஒவ்வொரு 500 சிறுவர்களுக்கும் ஒரு சமையற்காரரையும் உதவியாளர் ஒருவரையும் நியமித்து அவர்களுக்கு அரசு நிதியிலிருந்து மதிப்பூதியம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.





### பெண்கள் வேலை வாய்ப்பிற்கான மாபெரும் திட்டம்

இத்திட்டத்தினால் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் 1,32,713 பெண்களுக்கு குறிப்பாக விதவைகளுக்கும், கைவிடப்பட்ட பெண்களுக்கும் முன்னுரிமை தரப்பட்டு, வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இம் மாபெரும் வேலைவாய்ப்புத் திட்டம் கிராமப்புறங்களில் ஒரு புதிய மலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சுதந்திர இந்தியாவின் 35 ஆண்டுக் காலத்தில் இத்தகு மாபெரும் வேலைவாய்ப்பு ஏற்படுத்திய முன்னோடித் திட்டமாக இது திகழ்கிறது.

### பாலர் பள்ளிகளில் வேலைவாய்ப்பு

பாலர் பள்ளிகளில் குழந்தைகள் நல அமைப்பாளர் குழந்தைகள் நல உதவியாளர் பணிகளுக்காக 78,490 பெண்களுக்குப் புதிதாக வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர்களுள் 20,531 பேர் ஆதிதிராவிடர் மற்றும் மலைச்சாதி வகுப்பினர். கிராமப்புறக் குழந்தைகளைக் கண்காணிக்கும் பொறுப்பிற்கும், சமைத்து உணவூட்டும் சேவைக்கும் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள் குழந்தைகள் நல அமைப்பாளர்களாகவும், குழந்தைகள் நல உதவியாளர்களாகவும் மக்களால் ஏற்கப்பட்டிருப்பது ஒரு மனநிறைவு தரும் அனுபவமாகும். சமுதாய ஒருமைப்பாட்டிற்கு இத்திட்டம் வழிவகுத்துள்ளது என்பது தெளிவு. சாதி வேறுபாட்டுணர்வுகள் முற்றும் மறைந்து ஒருமைப்பாடு நிலைபெற்று தழைக்க பல்லாண்டுகள் ஆகலாம் எனினும், இந்த ஒருமைப்பாட்டிற்குச் சரியான ஒரு துவக்கத்தை இத்திட்டம் ஆரம்பித்துள்ளது என்பதில் ஐயமில்லை.

பாலர் பள்ளிகளில் பணிபுரியும் பெண்களில் 10,507 விதவைகளும் 3416 கைவிடப்பட்ட பெண்களும் உள்ளனர். வாழ்வில் முதன்முறையாக இவர்களுக்கு நிலையான வருவாய் தரும் ஒரு பணி ஆற்றும் மகிழ்ச்சி கிட்டியுள்ளது.

### பள்ளிகளில் வேலை வாய்ப்பு

பள்ளிகளில் சமைக்கும் பணிக்கும் எடுபிடி பணிக்கும் முறையே 34,290 பேர்களும், 33,828 பேர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். சமையலாளர்களில் 2,490 பேர்களே ஆண்கள், பிற 31,808 பேர்கள் பெண்கள். 3,785 ஆதிதிராவிடர் வகுப்பினர் இப்பணியில் உள்ளனர். உதவியாளர்களில் 2,396 ஆண்களும், 31,432 பெண்களும் உள்ளனர். சுருக்கமாக இத்திட்டத்தினால் கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் 1,80,119 பேர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 18 0119 பேர்களில் 1,58,387 பேர் பெண்கள் ஆவர்.

பெண்கள், சமூக ஊழியர்கள், கொடையாளர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர்கள் அடங்கிய கிராமப்புற ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளூர்களில் இத்திட்டம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அதிகாரிகள் மற்றும் அலுவல் சார்பற்றவர்களால் இத்திட்டம் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### நகர்ப்புற விரிவாக்கம்

15.9.1982 முதல் இத்திட்டம் 2 -4 வயதுப் பிள்ளைகளுக்காக நகர்ப்புறங்களுக்கும், பள்ளிப் பிள்ளைகளுக்காக சென்னை, கோவை, மதுரை மாநகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனால் மேலும் 4 லட்சம் 2 -4 வயதுப் பிள்ளைகளும் 2.5 லட்சம் 5 -9 வயதுப் பிள்ளைகளும் பயன





டைந்துள்ளனர். இவர்களுள் 2 -4 வயதுப் பிரிவில் 1.43 லட்சம் பிள்ளைகளும், 5 -9 வயதுப்பிரிவில் 46,000 பிள்ளைகளும் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள். இம் மாபெரும் திட்டத்தினால் தற்போது மாநிலமெங்கும் 22.66 லட்சம் 2 -4 வயதுப்பிள்ளைகளும், 41.74 லட்சம் 5 -9 வயதுப் பிள்ளைகளும் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் பயனடைந்து வரும் 64.4 லட்சம் பிள்ளைகள் இந்த வயதுப் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கையில் 60 சதவிகிதம் ஆகும்.

தற்போது 33,829 பள்ளிச் சத்துணவு மையங்களும், 2 7 9 2 0 பாலர் பள்ளி மையங்களும் ஆக மொத்தம் 61,749 முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்கள் இயங்குகின்றன. இவற்றுள் 90 சதவிகிதம் பள்ளி மையங்கள் கிராமப்புறங்களில் 'இருக்கின்றன.

**கட்டடங்கள்**

ரூ.38,000 - முதல் ரூ.40,000 - மதிப்பீட்டில் சத்துணவு மையத்திற்கான ஒரு கட்டிட மாதிரி வரைவு செய்யப்பட்டுள்ளது. இச் சத்துணவு மையங்களைக் கட்டுவதற்காகப் பொதுமக்களிடமிருந்து பெருமளவு நன்கொடை வருகிறது. இது நாள்வரை ரூ. 2,04,91,696 - நன்கொடை வரப்பெற்றுள்ளது. கட்டடம் கட்டுவதற்காக நன்கொடை தருவோரின் பெயரை அந்தந்த மையங்களுக்கு வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை வரப்பெற்றுள்ள நன்கொடைகளிலிருந்து 5 மாவட்டங்களில் 6 மையங்கள் கட்டி முடிக்கப்பட்டமைக்காக ரூ.2.40 லட்சம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

**முதியோர் உதவித் தொகை பெறுவோர்க்குச் சத்துணவு**

11.1.1983 நாளிட்ட சமூக நலத்துறை அரசாணை 69-இல் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுததிட்டம் முதியோர் உதவித் தொகை பெற்று வருவோர்க்கும் 15.1.1983 முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனால் 1,99,158 பேர் பலனடைவர். சத்துணவு மையத்திற்கு நேரில் வந்து உணவு பெறக்கூடிய முதியோர்களுக்கு 90 பைசா மதிப்புள்ள ஒரு வேளை மதிய உணவு இலவசமாக வழங்கப்படுகிறது. இதைத்தவிர அவர்களுக்கு ஏற்கெனவே முதியோர் உதவித் தொகை திட்டத்தில் வழங்கப்பட்டு வந்த ஒரு கிலோ அரிசியில் அரை கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. சத்துணவு மையங்களுக்கு வர இயலாத முதியோர்களுக்கு அவர்கள் முன்பு பெற்று வந்தது போலவே ஒரு கிலோ அரிசி தொடர்ந்து வழங்கப்படும். 2 லட்சம் முதியோர்களுக்கு இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டதால் அரசுக்குக் கூடுதலாக ரூ.6.48 கோடி செலவாகும் என மதிப்பிடப்படுகிறது. 1,99,158 முதியோர்களில் 43,888 கைவிடப்பட்ட விதவைகளும் 14,471 ஊனமுற்றவர்களும் 30,000 விவசாயத் தொழிலாளர்களும் உள்ளனர்.

| | கிராம் |
|---|---|
| அரிசி | 200 |
| எண்ணெய் | 14 |
| பருப்பு | 15 |
| காய்கறி மற்றும் தாளிதம் | 50 |

இத்திட்டத்திற்கு மொத்த செலவு ரூ.133 கோடி ஆகுமெனத் தோராயமாகக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.



இத்திட்டச் செலவுகளுக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதிலுள்ள இடர்ப்பாடுகளை நாம் அறிவோம். எனினும் இச்செலவு இந்நாட்டில் வருங்கால முதலீடு என்பதாலும் நாளைய இளைய தலைமுறையினரின் நல்வாழ்விற்குச் செய்து கொள்ளும் முன்வைப்பீடு என்பதாலும் ஆழ்ந்த நம்பிக்கையுடைய இந்த அரசினரும் அதைவிட தமிழக மக்களும் இதன் நிதிச் சுமையை ஏற்க உறுதியோடும் மகிழ்ச்சியோடும் முன்வந்துள்ளனர்.



இருபது அம்சத் திட்டப் பணிகளை நிறைவேற்றி வருவதில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது தமிழ்நாடு. அனைத்து இந்திய அடிப்படையில் செய்யப்படும் ஆய்வுகள் அனைத்திலும் இவ்வுண்மை ஒப்புக்கொள்ளப்பட்டுப் பாராட்டப்படுகிறது.



## இருபது அம்சத்திட்டம்

# பெருமை தரும் தமிழ்நாட்டின் அரும் பணிகள்

இந்தியா, உரிமைபெற்ற நாளிலிருந்து வளரும் நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. பொருளாதாரத் துறையில் படிப்படியாக முன்னேற்றமடைந்து இன்று உலகின் முன்னணித் தொழில் வளமிக்க நாடுகளில் ஒன்றாக உயர்ந்துள்ளது. வேளாண்மையிலும் தொழில்துறையிலும் ஐந்தாண்டுத் திட்டங்கள் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

1975-ஆம் ஆண்டில் 20 அம்சத் திட்டமென்ற அரிய இலக்கை நோக்கி நாடு வீறுநடைபோட்டது. அதன் பயனாக நமது மக்களின் பொருளாதார, சமூக வாழ்வில் பல்வேறு மாற்றங்கள் மலர்ந்துள்ளன.

இந்நிலையில், 1982, ஜனவரி 14ஆம் நாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் புதிய 20 அம்சத் திட்டத்தை நாட்டுக்கு அறிவித்தார்.

தமிழ்நாடு அரசு, புதிய 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றி பல்வேறு திட்டங்களில் இலக்கையும் விட அதிக முன்னேற்றம் கண்டுள்ளது.

கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்கள், கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டங்கள், வீடற்றவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டங்கள், கிராமப்புறங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கும் திட்டங்கள் ஆகியவற்றில் மிகச் சிறந்த சாதனையை எய்தியிருப்பதாக மத்திய அரசின் ஆய்வு அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.

குடும்ப நலத் திட்டங்களை மக்களிடையே பரப்பி மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் திட்டங்களைச் செயற்படுத்துவதில் மிகவும் பாராட்டைப் பெற்றுள்ளது, தமிழ்நாடு அரசு. தன்னிறைவுத் திட்டங்களைச் செயற்படுத்திக் கிராமங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தமிழ்நாடு இந்தியாவில் முன்னணியில் திகழ்கிறது.

பாசன வசதிகளை அதிகரித்து நிலங்களுக்கான தொழில்நுட்பத்தை வளர்த்துப் பரப்ப வேண்டுமென்னும் முதலாவது இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு அரசு 1982-83-ஆம் ஆண்டு 200 இடங்களில் 1000 ஏக்கர் பரப்புக் கொண்ட பெருவிளக்கப்பண்ணைகளை நிறுவி மானாவாரி சாகுபடியில் அனைத்துத் தொழில் நுட்பங்களை விளக்கிடத் திட்ட

தமிழ்நாட்டில் இருபது அம்சத்திட்டப் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை விளக்கி, எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டும் வகையில், அனைத்து அம்சங்களுக்கும் கையேடுகளை வெளியிட்டுள்ளது தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத்துறை.

மிட்டுச் செயலாற்றி வருகிறது. 1982, ஜூலை மாதம் முடிய 146 பெருவிளக்கப் பண்ணைகள் நிறுவப்பட்டு சுமார் 66,172 எக்டர் நிலம் கட்டுக்கோப்பான சாகுபடிக்கு ஏற்றதாக மாற்றப்பட்டுள்ளது.

பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப்பெருக்க வேண்டுமென்னும் இரண்டாவது அம்சத் திட்டத்தில், தமிழ்நாடு பாராட்டத்தக்க அரும் சாதனை புரிந்துள்ளது.

ரூ. 11.45 கோடி செலவில் 7 ஆண்டுகளில் எண்ணெய் வளப் பெருக்கத் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு நிறைவேற்ற உள்ளது.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி, தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டங்களை வலுப்படுத்தவும் விரிவாக்கவும் வேண்டுமென்னும் மூன்றாவது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில், தமிழகம் முன்னணியில் நிற்கின்றது.

தன்னிறைவுத் திட்டத்தின் முதற்கட்டப் பணியில், 69 ஒன்றியங்களிலுள்ள 3,131 குடியிருப்புகளுக்கு ரூ. 2,100இலட்சம் செலவில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன; ரூ. 1,221 இலட்சம் செலவில் 4,220கி.மீ. தொலைவு இணைப்புச்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன; 228 தாய் சேய் நல விடுதிகளும், 71 மருந்தகங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. முதற் கட்டப் பணிகள் ரூ. 51.13 கோடி செலவிடப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. எஞ்சிய ஒன்றியங்களில் ரூ. 270 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

''விளைநில உச்சவரம்பைச் செயற்படுத்தவும் உபரி நிலங்களின் விநியோகத்தைப் பூர்த்தி செய்யவும் வேண்டும். நிர்வாக, சட்ட இடையூறுகளை நீக்கி நிலப் பட்டாக்களைத் தொகுக்கும் பணியைப் பூர்த்தி செய்ய வேண்டும்'' என்னும் 4வது அம்சத் திட்டத்தை முனைப்புடன் செயலாற்றி வருகிறது தமிழ்நாடு அரசு.

இம்மாநிலத்தில் 30,000 சதுர மைல்கள் பரப்புள்ள நிலங்கள் அளவை செய்யப்பட்டு ஐந்தாண்டுகளில் மாநிலம் தழுவிய அளவில் முடித்திடத் திட்டமுள்ளது. ரூ. 1.48 கோடி செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. விளைநில உச்சவரம்பைத் தீவிரமாகச் செயற்படுத்துவதுடன் சட்டப்படியான உரிமை குறிக்கப்பட்ட நிலப்பட்டாப்



புத்தகம் வழங்குவதையும் அரசு விரைந்து செய்து வருகிறது.

''விவசாயத் தொழிலாளரின் குறைந்தளவு ஊதியத்தை மறு ஆய்வு செய்சு பயன்கரும் வகையில் செயற்படுத்த வேண்டும்'' என்று குறிப்பிடுவது 5-வது அம்சத் திட்டம்.

விவசாய ஊதிய விதங்கள் 1979-ல் திருத்தியமைக்கப்பட்டன. விவசாயக் குறைந்த அளவு விதங்களைக் கண்டிப்புடன் செயற்படுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

பிணைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் 6-வது அம்சத் திட்டத்தை மிகச்சிறப்பாக நிறைவேற்றியுள்ளது தமிழக அரசு.

இதுவரை 10 மாவட்டங்களில் 2,920 பிணைத் தொழிலாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். கல்ராயன்மலையில் 24,945 பிணைத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளனர். விடுவிக்கப்பட்ட பிணைத்தொழிலாளர் ஏழையாயிருந்தால் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.1,000 உதவித்தொகை அளிக்கப்படுகிறது. இதுவரை ரூ. 1,71,000 அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் வளர்ச்சித் திட்டங்களை விரைந்து செயல்படுத்த வேண்டுமென்னும் 7-வது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு அரசு முன்னணியில் நிற்பது பெருமையுடைத்தாகும்.

பொதுத் துறையிலிருந்து குறைந்தது 18 சதவீத நன்மைகளை ஆதிதிராவிடர் பயன்பெற அரசு வழி செய்துள்ளது. ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் பயன்பெறுவோரில் 60 சதவீதத்தினர், ஆதிதிராவிடர்கள்,

8-வது அம்சத் திட்டம் குடிநீர் ஆதாரமற்ற கிராமங்களுக்குக் குடிநீர் வசதி அளிக்க வேண்டுமென்பது. இத்திட்டத்தில் தமிழ்நாடு அரசு பாராட்டத்தக்க சாதனை எய்தியுள்ளது.

1980 வரையில் ரூ. 2,598 இலட்சம் செலவில் 3,387 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்யப்பட்டது. 1980-81-ஆம் நிதி ஆண்டில் குடிநீர் வழங்கப்பட வேண்டிய கிராமங்கள் 14,582 இருந்தன. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் இக்கிராமங்கள் அனைத்திற்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

கிராமங்களில் வீட்டு வசதிகளைப் பெருக்க வேண்டுமென்னும் 9-வது அம்சத் திட்டம் விரைந்து செயற்படுத்தப்படுகிறது.

1982-83ல் 36,180 குடும்பத்தினருக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. 1980-81 முதல் 1984-85 வரை 5 ஆண்டுகளில் 2 இலட்சம் வீடுகள் கட்டப்படும். 1981-82 கூட்டுறவு ஆண்டு வரையில் ஆதிதிராவிடர்கள் 87,313 வீடுகளையும் மற்றவர்கள் 22,735 வீடுகளையும் கட்டியுள்ளனர். வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 4815.92 இலட்சம். 1982-83ல் 40,000 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

30-9-82 வரை 18,208 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

சேரிகளின் சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்திப் பொருளாதாரத்தில் பின்தங்கிய எளியோருக்கு வீடுகட்டும் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டுமென்னும் 10-வது அம்சத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது தமிழக அரசு.

பொருளாதார வகையில் நலிவுற்றவர்க்கு வீடு கட்டிக் கொடுக்கத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1983-ல் 5,065 வீடுகளையும், குடிசை மாற்றுத் திட்டத்தின் கீழ் 2,935 வீடுகளையும் கட்டத் திட்டமுள்ளது.

''மின் உற்பத்தியைப் பெருக்குதல் - மின்சார விநியோகத்தைச் சீரமைத்தல் - கிராமங்கள் அனைத்துக்கும் மின்வசதி ஏற்படுத்தித் தருதல்'- 11-வது அம்சத் திட்டமாகும். மாநில அரசின் வளர்ச்சித் திட்டத்தில் 35 விழுக்காட்டுக்கும் அதிகமான தொகை மின்துறை வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்துறை வளர்ச்சிக்கென மொத்தம் ரூ. 1,230 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1975-76ஆம் ஆண்டில் மின் துறைக்கான முதலீட்டுச் செலவு ரூ. 45 கோடியாக இருந்தது. 1982-83-ல் ரூ. 220 கோடியாக வளர்ந்துள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள 15,735 சிற்றூர்களில் 31-3-83 வரையில் 15,639 சிற்றூர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. 1982-83-ல் மட்டும் 19,497 மின்தொடர்புகள் வேளாண்மை விசையேற்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. வேளாண்மை விசையேற்றத்துக்கு மின் இணைப்பு வழங்குவதில் மற்றெல்லா மாநிலங்களையும்விடத் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது.

''காடுகள் வளர்ப்பு-சமுதாய, பண்ணை மரவளர்ப்பு ஆகியவற்றுக்கான திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துவதும், கரிமவாயு போன்ற மாற்று எரிபொருள் மூலங்களை வளர்த்தலும்'' என்பது 12-வது அம்சத் திட்டத்தின் நோக்கமாகும். பல்வேறு திட்டங்கள் மூலம் 1981-82-ல் காப்புக் காடுகளுக்கு வெளியில் 56,510 எக்டர் பரப்பில் மரங்கள நட நிர்ணயிக்கப்பட்டு 61,997 எக்டர் பரப்பில் நடப்பட்டது. சாலையோரங்களிலும் இருப்புப்பாதை ஓரங்கள், நதியோரங்களிலும் 1065 கிலோ மீட்டர் தொலைவுக்கு மரங்கள் நடப்பட்டன. சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் நடக்கும் சமூக நலக்காடுகள் திட்டத்தின் கீழ் 1981-82முதல் 5 ஆண்டுகளில் சுமார் ரூ. 45 கோடி செலவில் 1,75,000 ஏக்கர் பரப்பில் பலவித மரக்காடுகளும் 60,075 கிலோ மீட்டர் நீளத்தில்தொடர் வரிசைத் தோட்டங்களும் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது

தமிழ்நாடு. 'குடும்பநலத் திட்டத்தை மக்கள் இயக்கமாகப் பரப்பிட வேண்டும் என்பது 13-வது அம்சத் திட்டத்தின் குறிக்கோள். தமிழ்நாடு, குடும்பநலத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் மிகுந்த முனைப்புடன் இருப்பதுடன் இந்திய அரசின் பாராட்டையும் பெற்றுள்ளது.

''அடிப்படைச் சுகாதார வசதிகளை அதிகப்படுத்தலும் நோய்களைத் தடுத்தலும்'' 14வது அம்சத் திட்டத்தின் நோக்கமாகும்.

''கி.பி. 2000-க்குள் அனைவருக்கும் நலவாழ்வு'' என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது நமது அரசு. நடமாடும் கண்சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கும் திட்டமும் தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டமும் காசநோய்த் தடுப்புத் திட்டமும், கைத்தறி நெசவாளர் பீடித்தொழிலாளர் சுகாதார உதவித் திட்டமும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

''பெண்கள், குழந்தைகள், கருவுற்ற பெண்கள், மற்றும் பாலூட்டும் பெண்கள் முதலியோருக்கான சத்துணவு மற்றும் நல்வாழ்வுத்திட்டங்களை விரைவுபடுத்த வேண்டும். முக்கியமாகப் பழங்குடியினத்தவர், மலைவாழ் மக்கள், பிற்பட்ட பகுதிகளில் வாழ்வோர் ஆகியோருக்கு இத்திட்டத்தை விரைவுபடுத்தவேண்டும்.''

15-வது அம்சத் திட்டம் இவ்வாறு குறிப்பிடுகின்றது.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டம், மக்களின் உடல்நலம், ஊட்டச் சத்து நிலைமைகளை மேம்படுத்தத் தொடங்கப்பட்டதாகும். ஊட்டச்சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்ட கருவுற்ற பாலூட்டும் தாய்மார்கள், பள்ளி செல்லும் வயது அடையாத குழந்தைகள் இவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. திட்ட மதிப்பீடு ரூ. 55.78 கோடி. இதில் 26.88 கோடி தொகையை உலக வங்கி கொடுத்துதவுகிறது.

''6-14 வயதுள்ள குழந்தைகளுக்கு, முக்கியமாகப் பெண் குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வியைப் பரப்ப வேண்டும். மாணவ, மாணவிகளையும் தொண்டு அமைப்புகளையும் வயது வந்தோரிடை எழுத்தறிவின்மையை நீக்கும் திட்டங்களில் ஈடுபடுத்த வேண்டும்''

இது, 16வது அம்சத் திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாடு அரசு, இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் வியத்தகு முன்னேற்றம் கண்டுள்ளது.

ஆறு முதல் 11 வயதுக்குள் உள்ள குழந்தைகளில் 96.2 விழுக்காடு குழந்தைகளும், 11 முதல் 14 வயதுத் தொகுதியிலுள்ள சிறுவர், சிறுமிகளில் 66.03 விழுக்காட்டினரும் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் எய்தப்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதைத் தற்போதே தமிழகம் விஞ்சியிருப்பது பெருமைக்குரியதாகும்.

1 முதல் 3-ஆம் வகுப்பு வரையில் பயிலும் ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள், சிலேட்டுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

வயதுவந்தோர் கல்வியில் நமது அரசு எய்திய சாதனை, உலக மட்டத்தில் பாராட்டுப் பெற்றுள்ளது. எழுத்தறிவுப் பணிக்கு யுனெஸ்கோ நிறுவனம் தரும் விருது 1982-ஆம் ஆண்டுக்குத் தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது பெருமைக்குரியதாகும்.





''அதிக அளவில் நியாயவிலைக் கடைகள் மூலம் பொதுவிநியோக முறையை விரிவுபடுத்த வேண்டும். தொலைதூரப் பகுதியில் நடமாடும் கடைகளை ஏற்படுத்த வேண்டும். வலுவான நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தை வளர்க்க வேண்டும்''

17வது அம்சத் திட்டம் இத்தகைய பொது விநியோக முறையை வலியுறுத்துகின்றது.

தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் பொது விநியோக முறை செயல்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதிலும் 118 இலட்சம் குடும்ப அட்டைகள் விநியோகம்செய்யப்பட்டுள்ளன. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 17,844 நியாய விலைக் கடைகள் இயங்குகின்றன. இவற்றில் 15,842 கடைகள் கிராமப் புறங்களில் உள்ளன.

18-வது அம்சத் திட்டம் கீழ்க் கண்டவாறு தொழில்துறைக் கொள்கையை விவரிக்கின்றது:

''முதலீட்டு நடவடிக்கைகளைத் தாராளப்படுத்த வேண்டும். தொழில்துறைக் கொள்கைகளை எளிதாக்க வேண்டும். கைவினைப் பொருள்கள், கைத்தறி மற்றும் சிறிய, கிராமத் தொழில்கள் வளர்ந்து அவற்றின் தொழில் நுட்பங்கள் நவீனப்படுத்தப் படுவதற்கு எல்லா வசதிகளையும் அளிக்க வேண்டும்''.

தொழில்களுக்கு உரிமம் வழங்கும் காலவரம்பு குறைக்கப்பட்டுள்ளது. சிறுதொழில் துறையின் வளர்ச்சி தமிழ்நாட்டில் போற்றத்தக்க அளவிற்கு ஓங்கியுள்ளது. தொழிலதிபர்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்காக மாவட்ட ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.



''கள்ளக் கடத்தல்காரர்கள் பதுக்கல்காரர்கள், வரிகொடாது ஏய்ப்பவர்கள் ஆகியோருக்கு எதிராகத் தொடர்ந்து கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு கறுப்புப் பணத்தை ஒழிக்கவேண்டும்'' என்னும் 19வது அம்சத் திட்டத்தின் நோக்கத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டில் நெல் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த சமூக விரோதிகளைக் கண்டுபிடித்தது. அனுமதியின்றிப் பெருமளவு நெல் இருப்பு வைத்திருப்பவர்களையும், உரிமம் இன்றி வர்த்தகம் நடத்துபவர்களையும் கண்டுபிடிக்க வருவாய்க் கோட்ட அலுவலர்களும் வர்த்தக வரித் துறை அலுவலர்களும் திடீர்ச் சோதனை நடத்தி வருகின்றனர்.

20-வது அம்சம் குறிப்பிடுவதாவது :

''திறன், திறன் உபயோகித்தல், உள்வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளல் ஆகியவற்றின் மூலம் அரசு அமைப்புகளின் இயக்கத்தை மேம்படுத்த வேண்டும்''

அரசுத் துறைகளுக்கு முக்கிய பங்களிக்கும் நடைமுறை முற்றிலும் சிறப்பானதே என்பதைக் கடந்த கால முன்னேற்றத்திலிருந்து அறிகின்றோம். விரைந்து பொருளாதார வளர்ச்சியில் எய்தும் முன்னேற்றத்திற்கு மிக இன்றியமையாத உள் கட்டமைப்பு உருவாவதற்கும் அரசே காரணமாக இருந்திருக்கிறது. பொருளாதார, சமூகத் துறைகளில் தமிழ்நாடு அரசு செய்த பெரும் முதலீடும், தொழில் வளம் காணப் பின்பற்றும் நடைமுறையும் தனியார் தொழில் துறை உற்பத்தியை ஊக்குவிக்கும் சூழ்நிலையை உருவாக்கி உள்ளது.

தமிழகத்தின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு அரசு இருபது அம்சத் திட்டத்தினை முனைந்து செயலாற்றி வருவதுடன் வறுமையை ஒழித்து வளமான வாழ்வை மக்களுக்கு அளிப்பதில் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது, தெளிவாகிறது. இம்முன்னேற்றத்தைத் தொடர்ந்து நிர்வகித்து இத்திட்டத்தின் வெற்றிக்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.





# கடமையில் சிறந்த காவல் துறை

பொதுமக்களுக்குச் சேவை புரிவதையே தனது தலையாய குறிக்கோளாகக் கொண்டு தமிழகக்காவல்துறைதிறம்படப்பணியாற்றி தனது மதிப்பையும் பெருமையையும் நிலைநாட்டி வருகின்றது.

தமிழகத்தில் 1980 முதல் 1983 முடிய மூன்று ஆண்டுகளில் சொத்து சம்பந்தப்பட்ட குற்ற வழக்குகளை காவல்துறை தீவிர புலன்விசாரணை செய்து, வழக்குகளைத் துவக்கி களவுப் பொருட்களைக் குற்றவாளிகளிடமிருந்து மீட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் சொத்து சம்பந்தப்பட்ட குற்ற வழக்குகள் கணிசமான அளவில் குறைந்துள்ளன.

1980-ல் பதியப்பட்ட சொத்து சம்பந்தமான வழக்குகள் 39,087. கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் 59 சதவீதம், திரும்பப் பெறப்பட்ட சொத்துக்கள் 47.8 சதவீதம்; 1981ல் பதியப்பட்ட சொத்து சம்பந்தமான வழக்குகள் 38,029, கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் 69 சதவீதம், திரும்பப் பெறப்பட்ட சொத்துக்கள் 53.3 சதவீதம், 1982-ல் பதியப்பட்ட சொத்து சம்பந்தமான வழக்குகள் 34,680. கண்டுபிடிக்கப்பட்டவழக்குகள் 72 சதவீதம். திரும்பப் பெறப்பட்ட சொத்துக்கள் 58.8 சதவீதம்.

கீழ்க்காணும் பரபரப்பூட்டிய வழக்குகளில் காவல் துறையினர் திறன்மிக்க புலனாய்வு செய்து வழக்குகளைத் துவக்கினர்.

1980

1. நாமக்கல் காவல்நிலைய குற்ற எண்.11/80. இவ்வழக்கில் குற்றவாளி இப்ராகிம் பவானி வங்கிக் கொள்ளை காரணமாகக் கைது செய்யப்பட்டு, அவனிடமிருந்து சேலம்காவல் துறையினரால் 2,19,000 ரூபாய் மீட்கப்பட்டது.
2. தேனாம்பேட்டை காவல் நிலைய குற்ற எண். 432/80. இவ்வழக்கில் சையத் நூர் மற்றும் அன்வர் ஆகிய இருவரும் சென்னை நகரக் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு 52 களவு போன கார்கள் கைப்பற்றப்பட்டன.
3. அரும்பாவூர் காவல் நிலைய குற்ற எண்.144/80 (நரபலி) இவ்வழக்கில் தீவிர புலன் விசாரணை செய்து குற்றப் புலனாய்வுத் துறை வழக்கில் சம்பந்தப்பட்ட இரு குற்றவாளிகளுக்குக் கடும் தண்டனை பெற்றுத் தரப்பட்டது.
4. குற்றப் புலாய்வுத் துறைக் குற்ற எண்.3/80 (ஏமாற்றுதல்) இவ்வழக்கில் குற்றப் புலனாய்வுத் துறையினர் தீவிரமாக விசாரணை செய்து சென்னை ஆர்ச் பிசப் அவர்களை ஏமாற்றிய பலே மோசடிப் பேர்வழி கணேச ஐயர் என்பவர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர். கணேச ஐயர் ஆர்ச் பிசப் அவர்களிடத்தில் சுமார் 15 இலட்சம் ரூபாய் ஏமாற்றியுள்ளார்.

## 1981

1. தஞ்சை மேற்கு காவல் நிலைய குற்ற எண். 499/81. தஞ்சை பெரிய கோவிலில் விஸ்வநாதன் மற்றும் அவனது கூட்டாளிகள் சேர்த்து கூட்டுக் கொள்ளை செய்து, கோவில் சொத்து ரூ.30 ஆயிரம் களவாடிச் சென்றனர். காவல் துறையினர் அவர்களைக் கைது செய்து களவு போன பொருட்களை மீட்டனர்.

2. காட்பாடி காவல் நிலைய குற்ற எண்.562/81. பீகார் மாநிலக் குற்றவாளி சந்து மற்றும் அவனது கூட்டாளிகள் மூன்று பேருந்துகளை வழி மறித்துக் கொள்ளையடித்தனர். தீவிர விசாரணைக்குப் பின் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, பல ஆயிரம் பெறுமானமுள்ள களவுப் பொருட்கள் மீட்கப்பட்டன.

3. திருவாரூர் நகர் காவல் நிலைய குற்ற எண்.133/81. இவ்வழக்கில் நகைக்கடை ஒன்றில் தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் பெறுமானம் சுமார் ரூ.8 இலட்சம் களவாடிச் சென்ற குற்றவாளி சேகர் என்பவனிடமிருந்து மீட்கப்பட்டது.

4. ஹஸ்தம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.956/81. இவ்வழக்கில் ஐந்து வயதுக் குழந்தையை மூன்று இலட்ச ரூபாய் பணம் கேட்டு கடத்திச் சென்றனர். இவ்வழக்கில் தீவிர புலன் விசாரணை செய்து ஐந்து வயதுக் குழந்தையையும் மூன்று இலட்ச ரூபாய் பணத்தையும் காவல் துறையினர் மீட்டனர்.



காவலர் வீட்டு வசதி இணையத்தால் உருவாக்கப் பெறும் வீட்டின் மாதிரி அமைப்பு

## 1982

1. சைதாப்பேட்டை காவல் நிலைய குற்ற எண். 724/82 கார் திருடும் கும்பல் தலைவன் சந்திரமோகன் நெல்லை, மற்றும் கர்நாடகா, ஆந்திர மாநிலங்களைச் சேர்ந்த இரண்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு 5 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள 7 கார்கள் மற்றும் இரண்டு சக்கர ஊர்தி மீட்கப்பட்டன

2. பர்கூர் காவல் நிலைய குற்ற எண்.129/82. இவ்வழக்கில் கொள்ளைக் கன்னக் களவு ஆகிய 30 குற்ற வழக்குகளில் ஈடுபட்ட கொரவேடி என்பவனும் அவனுடைய கூட்டத்தைச் சேர்ந்த 9 குறவர்களும் கைது செய்யப்பட்டனர். மேற்படி கும்பல் சேலம், வட ஆர்க்காடு, தருமபுரி, ஆகிய மாவட்டங்களில் குற்றங்கள் புரிந்தது.

## 1983

1. தாரமங்கலம் 293/79. இவ்வழக்கில் கைதான கேடி சுப்பிரமணியன் அளித்த தகவலின் பேரில் மேற்படி வழக்கில் காவலாளியைக் கொன்று ரூபாய் மூன்று இலட்சம் பெறுமானமுள்ள சிலைகளைக் களவாடிச் சென்றது மற்றும் சேலம், நீலகிரி மாவட்டங்களில் ஐந்து களவு நிகழ்ச்சிகளிலும் துப்பு துலக்கியது.

குற்றப் புலனாய்வுத் துறை குற்ற எண். 2,3,4,5,6,3,9, 10,14, மற்றும் 15/83 சுங்க இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் என்று தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டுபெரும் வியாபாரிகள் போன்றோரிடமிருந்து வெளிநாட்டுத் தங்க நாணயங்களைப் பெற்று பல லட்ச ரூபாய் மோசடி செய்த முகமது ரபி என்பவனது தலைமையில் இயங்கிய 13 நபர்கள் கொண்ட மோசடிக் கும்பல் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செயப்பட்டனர்.








3. குற்றப் புலனாய்வுத் துறை குற்ற எண்.7/83. தமிழகத் தேர்வாணைக் குழு நடத்திய பிரிவு - நான்கு தேர்விற்கான வினாத் தாள்களைப் பெருமளவில் முன்கூட்டியே வெளியிட்டதற்காக அரசு அச்சக ஊழியர்கள் நடேசன் மற்றும் செரீப் மற்றும் நாஷிர் உசேன், ராமமூர்த்தி மேலும் தேர்வாணைக் குழுவின் 2 அதிகாரிகளும் கைது செய்யப்பட்டு வழக்கு துப்பு துலக்கப்பட்டது.

4. பி/2 காவல் நிலைய குற்ற எண்.594/83. 20.5.83அன்று சென்னை தம்புச் செட்டித் தெருவில் உள்ள கர்நாடகா வங்கியின் உதவி மேலாளராகப் பொறுப்பு வகித்த திரு ஞானசம்பந்தன் என்பவர் அவ்வங்கி ஊழியர் லெட்சுமி ராஜா ஷெட்டி என்பவரால் கொலைசெய்யப்பட்டு, சுமார் ரூ.13.97 இலட்சம்கொள்ளையடிக்கப்பட்டது. முதலில் குற்றவாளி யார் என்று தெரியாதிருந்தும் தீவிர புலன் விசாரணை செய்து காவல் துறையினர் குற்றவாளியை 29.5.83 அன்று கைது செய்து களவு போன பெரும்பாலான பணத்தினை மீட்டனர்.

குற்ற நிகழ்ச்சிகளைத் தடுப்பதில் காவல் துறையினருடன் பொதுமக்களும் இணைந்து செயல்பட்டு, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு காவல்துறை பொது மக்களுக்கு அரசினது ஆணையின் பேரில் பெரும் வெகுமதி அளிக்கிறது. இதனால் பொதுமக்கள் காவல்துறை தொடர்பு நெருக்கமாவது மட்டுமின்றி, சமுகத்தில் குற்றவாளிகளின் நடவடிக்கையை ஒடுக்குவது எளிதாகிறது.

### சட்டம் ஒழுங்கு பராமரிப்பு

1981-ம் ஆண்டு உலகத் தமிழ் மாநாடு மதுரையில் நிகழ்ந்தபோது இந்தியப் பிரதமர் அவர்கள் அவ்விழாவில் கலந்து கொண்டார். அவ்விழாவில் பங்கேற்றவர்களுக்கும் வருகை புரிந்த பிரதிநிதிகளுக்கும் மிகச் சீரிய பெருமக்களுக்கும் காவல் துறையினர் சிறப்பான வகையில் பாதுகாப்பு வசதி செய்து கொடுத்து, பொதுமக்களிடமிருந்து திறன்மிக்க பணிக்கான வாழ்த்துரை பெற்றனர். மேலும் திருப்பத்தூர், திருச்செந்தூர் ஆகிய இடைத் தேர்தல்களில் திறம்படப் பணிபுரிந்து சட்டம் ஒழுங்கு நிலை நிறுத்தினர். இராமநாதபுரம், குமரி, நெல்லை ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களை ஒடுக்கி நிலைமையைக் கட்டுக்குள் கொணர்ந்து, சட்டம் ஒழுங்கினைப் பராமரித்தனர். தர்மபுரி, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்கினர்.

### போக்குவரத்துப் பராமரிப்பு

சாலை விபத்துக்கள் நிகழ்வதற்குச் சாலைகளில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பும், சாலைப் போக்குவரத்து விதிகளை அனுசரிக்காததும் காரணமாகும். சாலை விபத்துக்களைக் குறைப்பதற்காக ''நெடுஞ்சாலை சுற்றுக் காவல்படை'' அமைக்கப்பட்டு, நெடுஞ்சாலை வாகனங்களின் போக்குவரத்தினைக் கட்டுக்குள் வைத்திருப்பது, போக்குவரத்து விதிகளை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பது போன்ற பணிகளைச் செவ்வனே செயலாக்கப்படுத்தி வருகிறது.

### பெண் காவல்

பொதுமக்களின் வசதிக்கேற்ப பெரும் இருப்புப் பாதை நிலையங்களில் உலவும் சமூக விரோதிகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதற்காகப் பெண் காவலர்கள் இருப்புப்பாதை நிலையங்களில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். பெண்காவல் துறையினர் பெரும் திருவிழாவிற்கான பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவதோடன்றி, ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பாதுகாப்பு பணியினால் புது டெல்லி மக்களிடமும் அயல்நாட்டு விளையாட்டு வீரர்களிடமும் பாராட்டுதல்கள் பெற்றுள்ளனர்.

### பொதுமக்கள் தொடர்பு

மாநில காவல்துறைத் தலைமையகம், நகர காவல் அலுவலகம், மற்றும் அனைத்து மாவட்டக் காவல் அலுவலகங்களிலும் "குறை பிரிவு'' ஒன்று அமைக்கப்பட்டு பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு ஆவன செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்கள் இப்பிரிவினை நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர்.

### காவலர் நலம்

தமிழக அரசு செப்டம்பர் 1980ல் தமிழகக் காவல்துறையில் காவலர்கள் முதற்கொண்டு ஆய்வாளர்கள் வரையில் சலுகை முறையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம் கொண்டு வந்து நிறைவேற்றி வருகிறது.

### காவலர் வீட்டு வசதி இணையம்

காவலர் வீட்டு வசதி இணையம் 30.4.81ல் தோற்றுவிக்கப்பட்டது. இதன் நோக்கம் ஓய்வு பெற்ற மற்றும் ஓய்வு பெறும் காவலர்களுக்கு வீட்டு வசதி அளிப்பதேயாம். இதுகாறும் இவ்விணையம் 720 இல்லங்களை, திருச்சி மாவட்டம் நாவல்பட்டியில் கட்டி முடித்து, தற்போது அதனைப் பகிர்ந்தளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. மேலும் காவலர் வீட்டு வசதி இணையம் 1983-84 ஆண்டில் 826 இல்லங்கள் கட்டுவதற்குத் தீர்மானித்துள்ளது. இவ்வசதி காவல்துறை அமைச்சுப் பணியாளர்களுக்கும் தற்போது வழங்கப்பட உள்ளது.

### முதலமைச்சர் காவலர் பதக்கம்

இப்பதக்கம் 1981ல் முதலமைச்சர் அவர்களால் காவலர்களுக்காக நிறுவப்பட்டது. இப்பதக்கம் சீரிய முறையில் ஒழுக்கக்கேடு ஏதுமின்றி சுமார் 10 ஆண்டு பணிபுரிந்த காவலர் தலைமைக் காவலர் ஆகியோருக்கு பொங்கல் தினத்தன்று ஆண்டுதோறும்வழங்கப்படுகிறது. மேலும் இப்பதக்கம் பெறுபவர்களுக்கு மாதச் சிறப்புப் படியும் அளிக்கப்படுகிறது. கடந்த 1982-83 ஆண்டுகளில் சுமார் 2,000 காவலர் தலைமைக் காவலர்களுக்கு மேல் இப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

# திட்டமும் வளர்ச்சியும்



பல்வேறு துறைகளின் திட்டமிடுதல்-வளர்ச்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் அமைப்பைப் பலப்படுத்தி, சீரமைக்கும் நோக்கோடுதிட்டமிடுதல்-வளர்ச்சித் துறை, 5.10.'80-ஆம் நாளன்று அமைக்கப்பட்டது. இந்தப் புதிய திட்டமிடுதல் வளர்ச்சித்துறை, முன்னர் அரசின் இரண்டாம் செயலாளரின் நேரடிப் பொறுப்பில் முதலில் இருந்தது. இதற்காக அவருக்கு இரண்டாம் செயலாளர்-வளர்ச்சித்துறை ஆணையர் என்று பதவிப் பெயர் வழங்கப்பட்டிருந்தது. பின்னர், இத்துறையின் பொறுப்பு அரசு ஆணையாளர்-செயலாளர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பல்வேறு துறைகளின் திட்டமிடுதல்-வளர்ச்சி நடவடிக்கைகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் பணியோடு, மாநில அரசின் ஆண்டுத் திட்டங்கள், ஐந்தாண்டுத் திட்டங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல், மாநில அரசின் திட்டப் பணிகளை மதிப்பிடுவதுடன் திட்டப்பணிகள் செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்தல், ஆய்வு செய்தல் ஆகிய முக்கிய பணிகளையும் கவனிப்பது இத்துறையின் பொறுப்பாகும்.

திட்டமிடுதல்-வளர்ச்சித்துறை அமைக்கப்பட்ட பின்னர் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தை முடிவு செய்யும் பொறுப்பினை ஏற்றதோடு, அதன் பிறகு ஆண்டுத் திட்டங்களை முடிவு செய்யும் பொறுப்பினையும் வகித்து வருகிறது. இப்பணியில், இத்துறைக்கு மாநிலத் திட்டக்குழு உதவி புரிகிறது. இந்தத் திட்டக் குழு, சம்பந்தப்பட்ட துறைகளோடு விரிவாகக் கலந்தாலோசித்த பிறகு அத்துறைகளின் புதிய திட்டப் பணிகளை முடிவு செய்கிறது.

இத்துறை அமைக்கப்பட்ட பின்னர் எய்திய பயன்களில் ஒன்று பகுதி II-திட்டங்கள் அனைத்திற்கும் உரிய நேரத்தில் அனுமதி வழங்கப்படுவதாகும். மாண்புமிகு முதலமைச்சர் பிறப்பித்த ஆணைகளையொட்டி, அனைத்துத் துறைகளின் பகுதி II திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதில் ஏற்பட்டுள்ள பணி முன்னேற்றம் குறித்து இத்துறை முறையாகக் கண்காணித்து வருகிறது.

திட்டப்பணி குறித்த செலவுக்காக, கடைசி நேரத்தில் நிதி கோருவதைத் தவிர்க்கும் பொருட்டு, மாவட்ட அளவில் திட்டப்பணிகளை மாதந்தோறும் ஆய்வு செய்வதென்று இத்துறை கருதியுள்ளது. வரவு-செலவுத் திட்டம் சட்டமன்றத்தில் நிறைவேறியதும், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்பட்டுள்ள சாதனையை உன்னிப்பாகக் கவனிக்கும் வகையில், திட்ட இலக்குகளையும், நிதி முதலீடுகளையும் தனித் தனியாகப் பிரித்து மாவட்ட ஆட்சியாளர்களுக்கும், மாவட்ட அதிகாரிகளுக்கும் எடுத்துக்காட்ட வேண்டும். அப்போது தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெற்று வரும் பணி முன்னேற்றம் குறித்து முறையாகக் கண்காணிக்க இயலும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் தனது மாவட்டத்தைப்பொறுத்த மட்டில், திட்டப்பணி சாதனை குறித்து ஆய்வு செய்ய மாதந்தோறும் அதிகாரிகளின் கூட்டத்தைக் கூட்டுகிறார். திட்டப்பணி குறித்த இந்த மாதாந்தர ஆய்வு பற்றிய தகவல் நேர்முகக் கடித வடிவில் தலைமைச் செயலாளருக்கும், திட்டமிடுதல்-வளர்ச்சித்துறை அரசு ஆணையாளர்-செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த மாதாந்தர ஆய்வானது திட்டமிடுதல்-வளர்ச்சித் துறையால் சரிபார்க்கப்பட்டு, எய்திய சாதனை குறைவாக இருக்கும்போது அதுபற்றி சம்பந்தப்பட்ட செயலாளர் அல்லது துறைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரவும், அரசு அளவில் நடவடிக்கை எடுக்க அவசியமாகவுள்ள அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திட்டமிடுதல், வளர்ச்சித் துறை கணிசமான அளவுக்கு வெற்றி பெற்றுள்ள துறைகளில், மதிப்பிடுதல்-செயல்முறை ஆராய்ச்சித் துறையும் ஒன்றாகும். 1980-முதல் 1983-ஆம் ஆண்டு வரையில் இந்த, மதிப்பிடுதல் செயல்முறை ஆராய்ச்சி இயக்ககம், திட்டமிடுதல்-வளர்ச்சித் துறையின் ஆலோசனையின் கீழ் சுமார் 80 ஆய்வுகளை நடத்தியுள்ளது. இந்த இயக்கக அலுவலகம், எடுத்துக்காட்டாக, வேளாண் விற்பனை அங்காடிகள், உலக வங்கி உதவித் திட்டம், மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்திற்கான, மஞ்சளாறு நீர்ப்பிடிப்புப் பகுதிச் செயல் திட்டம் போன்ற செயல் திட்டங்களை உருவாக்குவதில் பல்வேறு துறைகளுக்கு உதவியுள்ளது. மேலும், முந்திரித் தோட்ட மேம்பாடு, பட்டுப்பூச்சி வளர்த்தல், உவர்-களர் நிலங்களைப் பயன்படுத்துதல் முதலிய செயல் திட்டங்களைத் தயாரித்துள்ளது.

அண்மையில், தலைமைச் செயலாளரின் தலைமையில் நடந்த கூட்டத்தில் திட்டமிடுதல்-வளர்ச்சித்துறை, பல்வேறு துறைகளின் திட்ட இலக்கு, நிதிச் செலவு ஆகியவற்றைக் காலாண்டு தோறும் கண்காணிக்கும் பணியையும் மேற்கொள்ளும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. திட்ட இலக்குகளைக் கண்காணிப்பதற்கான படிவங்களைத் தயாரிக்குமாறு, மதிப்பிடுதல் இயக்குநர் அலுவலகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. பொதுத்துறை நிறுவனங்களின் திட்டச் சாதனைகளையும் நிதிச் சாதனைகளையும் காலாண்டிற்கொரு முறை நுணுக்கமாகக் கண்காணிக்கவும் கருதப்பட்டுள்ளது. இதற்காக விரிவான படிவங்கள் தயாரிக்கப்பட்டு அவை முடிவு செய்யப்பட்டு வருகின்றன. பொறுப்புகள் அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டும், திட்ட மதிப்பீட்டு நிறுவன அமைப்பில் அமைந்துள்ள மதிப்பீடு செயல்முறை ஆராய்ச்சி இயக்ககத்தை வலுப்படுத்துவதற்காக மத்திய அரசு நிதி உதவி கிடைப்பது குறித்து திட்டக்குழு தெரிவித்துள்ளதைக் கருத்திற்கொண்டும் இயக்ககத்தை வலுப்படுத்துவதற்கான செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.





திட்டச் செயல்கள் அனைத்திலும் உழைப்புச்சக்தி பயன்பாட்டு வேலை வாய்ப்புத் திட்டம் மிக முக்கியக் கூறு ஆகும். இந்த வகையில் ஒரளவே பணி நடந்துள்ளது. புள்ளி விவரத் துறையில் மிகக் குறைந்த பணியாளர்கள் உள்ளதே இதற்குக் காரணம். உழைப்புச்சக்தி பயன்பாடு வேலை வாய்ப்புத் திட்டப் பிரிவு புள்ளியியல் துறையில் அமைக்கப்பட்டு, ஆறாம் ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுப்பது குறித்து இலக்கு நிர்ணயிக்கப்பட்ட ஆய்வுகள் திட்டவட்டமாக மேற்கொள்வதற்கு இயலும் வகையில் இப்பொழுது திட்டமிடல் வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது.

ஆறாவது திட்ட இறுதிக்காலத்தில் திட்ட செயல்பாட்டில் இது வரை நாம் அடைந்துள்ள சாதனை, எதிர்பார்க்கும் சாதனை ஆகியவை குறித்து இடைக்கால முக்கிய மதிப்பீடு மேற்கொள்ளவும் முக்கியத்துவம் வாய்ந்த அனைத்துத் துறைகளிலும் பணிக்குழுக்களை அமைக்க மாநில திட்டக்குழு அண்மையில் முடிவு செய்தது. இப்பணி தற்போதுதான் தொடங்கப்பட்டுள்ளது.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம் :**

மாவட்டஆட்சித் தலைவர்கள் மூலம் நேரடியாக நிர்வகிக்கப்படும் இரண்டு திட்டங்கள் திட்டமிடல் வளர்ச்சித் துறையிடம் உள்ளன. அவை மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் ஆகும். இந்த இரண்டு திட்டங்களில் வளர்ச்சியின் வேகம் விரைந்து வருகிறது. பல்வேறு துறைகளில் சாதனையை மதிப்பீடு செய்வதில் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாலும், சிறப்பான முறையில் கண்காணிக்கப்பட்டதாலும் இந்த வளர்ச்சி வேகம் ஏற்பட்டுள்ளது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் யூனிசெப் நிறுவனத்தை பங்கு பெறச் செய்வதிலும் திட்டமிடல் வளர்ச்சித்துறை வெற்றி பெற்றுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினையடுத்து யூனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கூடிய சமூக மூலதனத் திட்டத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**கிராம எரி சக்தி ஒருங்கிணைந்த திட்டம்**

1983-84ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டமாக, திட்டமிடல் வளர்ச்சித் துறையால் கிராம எரி சக்திப் பிரிவு ஒன்றை அமைக்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது. கிராம எரிசக்தி திட்டத்தில் எரிசக்தியின் அளவு பற்றி மதிப்பிடுவதற்காக அத்திட்டத்தின் பல்வேறு கூறுகள் பற்றி புள்ளி விவரம் சேகரிப்பதற்கென்று இரண்டு அல்லது மூன்று வட்டாரங்களில் கிராம எரிசக்தி ஆய்வுகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இந்த ஆய்வு புதிய ஆதாரங்களின் குறிப்பிட்ட பங்கையும் பிரதிபலிக்கும். இதன் அடிப்படையில் முன்னோடித் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும்.

பல்வேறு முகவரமைப்புகள் மூலமாக வேளாண்மைக் கடன் பற்றி ஆய்வு செய்வதன் மூலம் வேளாண்மை மற்றும் அதன் துணைத் துறைகளில் நிதிதிரட்டுவதற்கான ஆய்வு நடத்துவதற்,




# கனிம வளம்

மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரிய முயற்சியின் விளைவாக, கனிம வளர்ச்சிக்காகத் தமிழ்நாடு கனிம நிறுவனம், முற்றிலும் அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக 1978ஆம் ஆண்டு ஏப்ரலில் துவக்கப்பட்டது. கடந்த ஐந்தாண்டுகளில் இந்நிறுவனம் பல சாதனைகளைப் புரிந்துள்ளது.

கரும்பாறைகளை வெளிநாட்டு வணிகர்களுக்கு நேரடியாக விற்பனை செய்வது என்ற அரசின் கொள்கையைச் செயல்படுத்தி, தமிழ்நாடு கனிம நிறுவனம் முன்னெப்போதும் பெறாத அதிக பட்ச விலையாக கன மீட்டருக்கு 800 அமெரிக்க டாலர் பெற்றுள்ளது.

ஆரம்பத்தில் (1978-79) ரூ.1.45 இலட்சமாக இருந்த விற்பனை வருவாய், 1982-83 ஆம் ஆண்டில் ரூ.168 இலட்சத்தை எட்டியது. இதுவரை ரூ.311.81 இலட்சம் அந்நியச் செலாவணியாக நாட்டிற்கு ஈட்டித் தந்துள்ளது.

இந்நிறுவனம், இரண்டாம் ஆண்டிலிருந்து ஆதாயம் ஈட்டத் துவங்கியது. கடந்த 1982-83ஆம் ஆண்டு ஆதாயம் ரூ.15 இலட்சமாகும். 1981-82ல் அரசுக்கு மூலதனப் பங்கீட்டுத் தொகையாக ரூ.1.43 இலட்சம் அளித்துள்ளது. கடந்த ஆண்டு வரை ரூ.57.50 இலட்சம் செலுத்தப்பட்ட மூலதனத்தைக் கொண்டு வேறு எந்த நிதியுதவி நிறுவனத்திடமும் கடன் பெறாமல் இதுவரை சுமார் ரூ.105 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் மற்றும் தளவாடங்களைச் சேகரித்து வைத்துள்ளது.

இதுவரை பின்தங்கிய கிராமப்புறங்களில் சுமார் 2000 பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி ஊதியத்துடன் கூடிய விடுமுறை ஆகிய வசதிகளுடன் தொடர்ந்து இரண்டாண்டுக்காலமாக தமிழ்நாடு கனிம நிறுவனம் போனஸ் அளித்து வருகிறது.

தமிழ்நாட்டிலிருந்து முதன் முறையாக சாம்பல் நிறப் பாறைகளுக்கு மேற்கு ஜெர்மனியில் சந்தையைப் பிடித்து இந்நிறுவனம் ஏற்றுமதி செய்து வருகிறது. ஆண்டொன்றுக்குத் தற்போது சுமார் 2000 கனமீட்டர் ஏற்றுமதி செய்து வருகிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனம், சமுதாய நலப் பணிகளுக்கும் நிதியுதவி செய்து வருகிறது. கிராமப்புற புனரமைப்புத் திட்டத்திற்கு 1980-81ஆம் ஆண்டு ரூ.1.53 இலட்சமும், முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு 1980-81ல் ரூ.1 இலட்சமும், 1981-82ல் ரூ2. இலட்சமும், 1982-83ல் ரூ.1 இலட்சமும் அளித்துள்ளது. இது தவிர மாண்புமிகு முதல்வரின் மதிய சத்துணவுத் திட்டத்திற்கு 1981-82ல் ரூ.2.50 இலட்சமும் அளித்துள்ளது.

நாட்டின் கனிம வரைபடத்தில் தமிழ்நாட்டிற்கு நிலையானதொரு இடத்தைத் தமிழ்நாடு கனிம நிறுவனம் பெற்றுத் தந்துள்ளது.

---

குத் திட்டமிடல்-வளர்ச்சித்துறை தற்போது கருதியுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட இரண்டு அல்லது மூன்று மாவட்டங்களின் மாவட்டக் கடன் திட்டங்களை ஆழ்ந்து ஆய்வு செய்வதும் இத்திட்டத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. தொழில் துறைக்குக் கடன் அளிப்பது குறித்து ஆய்வு செய்யவும் கருதப்படுகிறது.

**இருபது அம்சத் திட்டம்**

1982ஆம் ஆண்டு முதல் திட்டமிடுதல்-வளர்ச்சித் துறையும், 20 அம்சத் திட்டப்பணிகளை நிறைவேற்றும் மையத் துறையாகச் செயலாற்றி வருகிறது. பல்வேறு துறைகளைச் சேர்ந்த மைய அதிகாரிகளுடன் பல கூட்டங்கள் கூட்டி ஆலோசனை நடத்தியும் திங்கள்தோறும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து அறிக்கைகள் பெற்றும் இத்திட்டம் தீவிரமாகச் செயலாக்கப்பட்டு வருகிறது. திறம்படக் கண்காணிப்பதன் மூலமாகவும் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நிலையில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைய தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பலனாகவும் இருபது அம்சத் திட்டத்தை நமது நாட்டில் திறமையாக செயல்படுத்துவதில் முதன்மையிடம் வகிக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

திட்டக்குழு அண்மையில் நடத்திய மறு ஆய்வில் தமிழ்நாட்டிற்கு 26 புள்ளிகளை அளித்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் இரண்டாம் இடம் வகிக்கும் ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றுக்கும் 20 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.







# மீன் வளம்

தமிழ்நாட்டின் கடற்கரையிலுள்ள 402 கிராமங்களில் சுமார் 3,38,000 மீனவர்கள், மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சென்ற 3 ஆண்டுகளில் மீன்வளத் துறையில் சிறப்பான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த 3 ஆண்டுகளில் உள்நாட்டு மீன் உற்பத்தி 1.60 இலட்சம் டன்னிலிருந்து 1.85 இலட்சம் டன்னாகவும், கடல் மீன் உற்பத்தி 2.16 இலட்சம் டன்னிலிருந்து 2.60 இலட்சம் டன்னாகவும் உயர்ந்துள்ளது.

**புதிய மீன்பிடி துறைமுகங்கள் அமைத்தல்:**

கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டத்தில் ரூ. 234 இலட்சம் செலவில் மீன்பிடி துறைமுகம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. 240 படகுகளும் 10 இழுவைப் படகுகளும் தங்க இது வசதி அளிக்கும். கட்டுமானப் பணிகள் 1983 சனவரித் திங்களில் துவக்கப்பட்டுவிட்டன. இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலிநோக்கம் என்னுமிடத்தில் ரூ. 77 இலட்சம் செலவில் 150 படகுகள் தங்குவதற்கு வசதியாக மீன்பிடி துறைமுகம் கட்டப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள பழையாறு என்னுமிடத்தில் ரூ. 67.32 இலட்சம் செலவில் ஒரு துறைமுகமும், இராமநாதபுரம் மாவட்டம் தொண்டியில் ரூ. 41 இலட்சம் செலவில் மீன்பிடி தங்குதளம் ஒன்றும் கட்ட, அண்மையில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டினத்தில் ரூ.22 இலட்சம் செலவில் தங்குதளம் ஒன்று கட்ட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள கட்டுமானப் பணிகளுக்குரிய அனைத்துச் செலவையும் மத்திய அரசும் மாநில அரசும் சரிசமமாக ஏற்றுக் கொள்ளும்.

**வழிகாட்டி விளக்குகள் அமைத்தல்**

தமிழ்நாட்டின் கடற்கரையோர மீனவ கிராமங்களிலிருந்து சுமார் 38,000 கட்டுமரங்கள் மற்றும் நாட்டுப்படகுகளும், 4,800 இயந்திரப்படகுகளும் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளன. மீன்பிடி கலங்கள் இரவு நேரங்களிலும் புயல் நேரங்களிலும் பவழப்பாறைகள் மற்றுமுள்ள தடைகளில் மோதி சேதமடையாமல் பாதுகாப்பாகக் கரையை அடைவதற்கு வழிகாட்டி விளக்குகள் உதவுகின்றன. நடப்புத் திட்டக் காலத்தில் மேற்படி வசதியை இதுவரை 30 மீன்பிடி கிராமங்களில் ரூ.8.10 இலட்சம் செலவில் அமைக்க அரசால் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு இவை அமைக்கப்படுகின்றன. இவ்வசதியை மேலும் 10 மீன்பிடி கிராமங்களில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மீனவர்களுக்குப் படகுகள் வலைகள் வழங்குதல்**

தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மற்றும் மாநில அரசால் மீனவர்களுக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 20 விழுக்காடு மானியத்துடன் 1980-81ல் 2 படகுகளும் 839 வலைகளும் ஓர் ஊர்தியும் வழங்கப்பட்டன. 969 பேர் இவற்றால் பயன்பெற்றனர். 1981-82ல் 8 படகுகளும், 314 வலை





களும் ஓர் ஊர்தியும் வழங்கப்பட்டன. இவற்றால் 222 பேர் பயன் பெற்றனர். 1982-83ல் 15 படகுகளும் 916 வலைகளும் ஓர் ஊர்தியும் வழங்கப்பட்டன. இவற்றால் 991 பேர் பயனடைந்தனர். இந்த வகைக்காக ரூ. 166.51 இலட்சத்தை கூட்டுறவு சங்கங்களின் மூலம் மீனவர்கள் நிதி உதவியாகப் பெற்றனர்.

### மீனளச் சட்டம்

மீன்பிடி கலங்களைக் கொண்டு மீன்பிடிப்பவர்களுக்கும், பரம்பரை மீனவர்களுக்குமிடையே தகராறுகள் ஏற்படுவதைத் தவிர்க்கவும், தமிழ்நாட்டுக் கடற்கரையோரப் பகுதிகள் முழுவதிலும் அல்லது ஒரு குறிப்பிட்ட பகுதி நெடுகிலும் கடலில் மீன்பிடி கலங்களைக் கொண்டு மீன் பிடித்தலை முறைப் படுத்தவும் கடல் மீன்வளத்தைப் பாதுகாத்து அறிவியல் அடிப்படையில் மீன்பிடித்தலை முறைப்படுத்தும் நோக்கத்தோடும் கடலில் மீன் பிடித்தலை முறைப்படுத்தல் குறித்துத் தனிச்சட்டம் ஒன்றை அரசு இயற்றியுள்ளது. 1983ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 5ஆம் நாள் மீன்பிடித்தலை முறைப் படுத்தல் சட்ட முன்வடிவு, சட்டமன்றப் பேரவையிலும் மேலவையிலும் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் பரம்பரை மீனவர்களுக்கும், இயந்திரப் படகு உரிமையாளர்களுக்கும் இடையில் அமைதியும் நல்லுறவும் நிலவ வழி ஏற்பட்டுள்ளது.

### மீனவர்களுக்கான சேமிப்பு - நிவாரணத் திட்டம்

கடுமையான பருவநிலை காரணமாகக் கடலுக்குப் போக முடியாத நிலையினாலோ, கடல் பருவநிலை காரணமாக மீன்களின் இடப்பெயர்ச்சி காரணமாகவோ; ஆண்டில்முன்வருமான வாய்ப்பு இல்லாது இருக்கும் காலத்தில், கடல் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டம் ஒன்றை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக உள்ள மீனவர்களிடமிருந்து வருவாய் ஈட்டும் 9 மாதங்களில் மாதம் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் வசூலிக்கப்பட்டு, அவ்வாறு சேர்ந்த ரூ. 90 உடன், அரசு ரூ. 90 சேர்த்து மொத்தம் ரூ. 180, வருவாய் இல்லாத மூன்று மாதங்களில் மாதம் ஒன்றுக்கு ரூ. 60 வீதம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு மீனவர்களிடமிருந்து நல்ல வரவேற்புக் கிடைத்திருப்பதுடன் பல நூற்றுக் கணக்கான மீனவர்கள் மண்டல உதவி இயக்குநர்களிடம் ரூ. 10 வீதம் செலுத்தத் தொடங்கியுள்ளார்கள். இத்திட்டத்தைச் செயல்படுத்தும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் இதை வசூலிப்பதற்கும், இதுபற்றிய வரவு செலவுக் கணக்குகளை நிர்வகிப்பதற்கும் பொறுப்பேற்கும்.

### விபத்துக்காப்பீட்டுத் திட்டம்

மத்திய அரசு இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள எல்லா மீனவர்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் மீனவர்களுக்கான விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இதனைத் தமிழக அரசு நிறைவேற்றுகிறது. (1) இத்திட்டத்தின் கீழ் மீனவர்கள் கடல் மற்றும் உள்நாட்டு விபத்துக்களில் இறந்தால் ரூ. 15,000 அளிக்கப்படும். (2) உடலில் ஏதாவது ஒரு பகுதியில் நிரந்தரமான ஊனம் ஏற்பட்டு விட்டால் ரூ. 7500 வழங்கப்படும். (3) இத்திட்டத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 12 பிரிமியமாக கட்ட வேண்டும். இதில் பாதித் தொகை ரூ. 6 மத்திய அரசு மானியமாக அளிக்கும். (4) மீதித்தொகையில் ரூ.3-ஐத் தமிழக அரசு அளிக்கும். ரூ. 3ஐ மீனவர்கள், கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகச் செலுத்த வேண்டும்.

இதனால் 1,03,839 மீனவர்கள் (86,299 கடல் மீனவர்கள், 17,540 உள்நாட்டு மீனவர்கள்) குடும்பங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்.

### அடிப்படை வசதிகள்

மீன்பிடி தொழிலுக்கும் மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தவும் பல அடிப்படை வசதிகளை மீன்வளத்துறை செய்து தருதல் மிகவும் அவசியமாகும். எனவே 40 மீனவ கிராமங்களுக்குக் கீழ்க்கண்ட வசதிகளை அளிப்பதற்காக ஒரு விரிவான திட்டத்தை ரூ. 189 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்ற அரசு கருதியுள்ளது.



1. சமூகக் கூடங்கள்
2. மீன் உலர்த்தும் மேடை
3. ஏலக் கூடங்கள்
4. நிலத்தடி நீர்த்தொட்டிகள்
5. இணைப்புச் சாலைகள்.

### இணைப்புச் சாலைகள்

கடற்கரையோரப் பகுதிகளில் இணைப்புச் சாலை வசதிகள் இல்லாவிட்டால் மீன்களை மிகக் குறைந்த விலைக்கே விற்று, மீனவர்கள் நட்டமடைவார்கள் என்ற உண்மையை உணர்ந்து அரசு, மீனவர் கிராமங்கள் மற்றும் குடியிருப்புகளையும் மீன் விற்பனை நிலையங்களையும் இணைக்க-சாலைகள் போட-கணிசமான நிதி ஒதுக்கீடு செய்து வந்துள்ளது. ரூபாய் 119 இலட்சம் செலவில் 56 இணைப்புச் சாலைகள் போட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 44 சாலைகளின் அமைப்பு வேலைகள் முடிவு பெற்றிருப்பதுடன் இதர சாலைகள் அமைக்கும் வேலையும் நடைபெற்று வருகிறது.

### மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிருவாக உதவி அளித்தல்

நம் மாநிலத்தில் கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் 289 உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் 187 உள்ளன. அவற்றின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து இவர்களுக்குப் படகுகள், வலைகள், ஊர்திகள், மீன்பிடிப்பதற்குத் தேவைப்படும் ஏனைய சாதனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு நீண்ட, குறுகிய காலக் கடன்கள் மற்றும் பங்கு மூலதனக் கடன்களும இத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. 1980-81 முதல் 1982-83 வரை ரூ. 166.51 இலட்சம் அளவில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டிருக்கிறது. மேலும்ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1981-82ல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நாட்டுப் படகுகள், கட்டுமரங்கள், வலைகள், கண்ணாடி இழைப்படகுகள், பதனப் பாதுகாப்புப் பெட்டி போன்றவை வாங்க ரூ.80.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பெருமளவில் நிதியுதவி கிடைப்பதால் இக்கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலைமையை மேம்பாடு செய்வதற்கு வளர்ச்சிப் பணிகளுக்கு உதவும் வகையில் ஒவ்வொரு சங்கத்திற்கும் ஓர் உதவியாளரை நியமனம் செய்ய அரசு ஒப்புக்கொண்டு 1983-84ல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் 200ஐ தேர்ந்தெடுத்து மாதத்திற்கு ரூ. 250 வீதம் ஆண்டொன்றிற்கு ரூ. 3,000-ஒவ்வொரு சங்கத்திற்கும் அளிக்க நிதி ஒதுக்கியுள்ளது. இவ்வாண்டு இதற்காக ரூ. 6 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. உதவியாளர் பதவிக்கு மீனவர் சமுதாயத்தில் படித்த ஒருவருக்கு முதலிடம் வழங்கப்படும்.

### தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், இறக்குமதி செய்யப்பட்ட இரு மெக்ஸிகன் இழுபடகுகளைத் தற்போது இயக்குகின்றது. அவை முக்கியமாக இறால் மீன் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. 1981-82ஆம் ஆண்டில் 99.6 டன் இறாலும் 36.3 டன் மற்ற மீன்களும் இப்படகுகளைக் கொண்டு பிடிக்கப்பட்டன. அவற்றின் மொத்த மதிப்பு ரூ.64 இலட்சம் ஆகும்.

இவ்விரு இழுபடகுகளை இயக்கி, 1979-80ல், 61,385 கிலோ கிராம் இறால்களும் 23,315கிலோ கிராம்ஏனைய மீன்களும் பிடிக்கப்பட்டன. அவற்றை விற்பனை செய்ததில் வந்த வருவாய் ரூ. 31.45 இலட்சமாகும். 1980-81ல் பிடிக்கப்பட்ட இறால்கள் 92,649 கிலோ கிராம். ஏனைய மீன்கள் 35,593 கிலோகிராம். கிடைத்த வருவாய் ரூ. 43.46 இலட்சம். 1981-82ல் பிடிக்கப்பட்ட இறால்கள் 99,589 கிலோ கிராம்; ஏனைய மீன்கள் 36,329 கிலோ கிராம்; கிடைத்த வருவாய் ரூ. 63.94 இலட்சம்.

மேலும் பர்ஸ்சீன் படகுகளைக் கொண்டு 1980-81ல் ரூ. 0.48 இலட்சம் மதிப்புள்ள 64.636 டன் மீன்களும், 1981-82ல் 5 படகுகளைக் கொண்டு ரூ.5.16 இலட்சம் மதிப்புள்ள 724.793 டன் மீன்களும் பிடிக்கப்பட்டன.



இது தவிர 4 கேரியர் படகுகளைக் கொண்டு 1981-82ல் மீன்பிடிப்பை மேற்கொண்டதில் 129.315 டன் எடையுள்ள மீன்கள் பிடிக்கப்பட்டன. அவை 1.47 லட்ச ரூபாய்க்கு விற்கப்பட்டன.

### மீன் விற்பனை

சென்னை மாநகர், மதுரை, கோவை, பெரியார், திருச்சி, ஆகிய மாவட்டங்களில் 1981-82 முடிய 82 மீன் விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டு மீன் விற்பனையைச் செய்து வருகின்றன. இந்நிலையங்களின் மூலம்குறைந்த விலையில் தரமான மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

1979-80ல் 209 டன் மீன்கள் ரூ: 15.35 இலட்சத்திற்கும், 1980-81ல்395டன்மீன்கள் ரூ. 32.15 இலட்சத்திற்கும், 1981-82ல் 664 டன் மீன்கள் 55.05 லட்சத்திற்கும் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன.





# சோதனைகளை விஞ்சிய மின் துறை சாதனை

1980ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 2719 மெகாவாட்டாக இருந்த மின் இணைப்பின் நிறுவனத்திறன் ஏப்ரல் 1983ல் 3109 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது.

இந்தக் கால கட்டத்தில் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் 210 மெ.வா. திறனுள்ள இரண்டாவது, மூன்றாவது பிரிவுகள் இயக்கத்திற்கு வந்தன. 1979-80ல் 1710 மெ.வா.ஆக இருந்த மின் உச்சத் தேவை 2200 மெ.வா.ஆக உயர்ந்தது. ஆண்டொன்றுக்கு இதனால் ஏற்பட்டுள்ள சராசரி வளர்ச்சி வீதம் 9 விழுக்காடு ஆகும். தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் மின் உற்பத்தி 630 மெ.வாட்டை எட்டிப் பிடித்ததும், நாளொன்றுக்கு மிக உயர்ந்த அளவாக 13.1 மிலியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்ததும் உண்மையிலேயே சிறப்புச் சாதனைகள் ஆகும்.

மொத்தம் 1873 மெ.வா. நிறுவனத் திறன் அளிக்கவல்ல பின் வரும் புதிய திட்டங்கள் இந்திய அரசினரது அனுமதிக்காக இந்த மூன்று ஆண்டுகளில் அனுப்பப்பட்டுள்ளன.

| எண். | திட்டத்தின்பெயர் | நிறுவனத் திறன் (மெ.வா.) |
|---|---|---|
| 1. | வடசென்னை அனல் மின் திட்டம் | 1050 |
| 2. | தூத்துக்குடி அனல் மின்நிலைய விரிவாக்கம் | 420 |
| 3. | காஸ் சுழலி | 300 |
| 4. | பைக்காரா இறுதி நிலை நீர் மின்திட்டம் | 100 |
| 5. | சிறுவாணி சிறிய நீர் மின்திட்டம் | 3 |
| | | 1873 |

இவற்றுடன் நெய்வேலியில் 1050 மெ.வா. நிறுவனத்திறன் கொண்ட அனல் மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கான திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டு, மே' 83-இல் மத்திய அதிகார மன்றத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

மின்துறைக்காக குறிப்பாக, மின் உற்பத்திக்கெனச் செய்யப்பட்டு வருகின்ற முதலீட்டின் அளவு ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டே வருவதைக் கவனித்தால் இத்துறைக்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் எத்தகையது என்பது தெளிவாகும். 1975-76ஆம் ஆண்டில் மின்துறைக்கான முதலீடு 56.94 கோடிகளாகும். இதில் 24.92 கோடி ரூபாய் மின் உற்பத்திக்கான முதலீடாகும்.

1979-80ஆம் ஆண்டிலும், 1982-83ஆம் ஆண்டிலும் மின்துறைக்கெனச் செய்யப்பட்ட முதலீட்டின் அளவு முறையே 136,220 கோடிகளாகும். இவற்றுள் மின் உற்பத்திக்கென ஒதுக்கப்பட்ட முதலீட்டின் அளவு முறையே 77.95, 117.25 கோடிகளாகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநிலம் முழுவதற்குமென ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் 3150 கோடிகளில், மின்துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள அளவு 1022.80 கோடி என்பதை அறியும்போது மின்துறை வளர்ச்சிக்கு எத்தகைய முன் உரிமை வழங்கப்படுகிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி என விளங்கும்.

இந்த மூன்று ஆண்டுகளில் ஏறத்தாழ 8000 கிலோ மீட்டர் மிகை உயர் அழுத்தக் கம்பித் தொடர்களும், 25000 கி.மீ. குறைவழுத்தக் கம்பித் தொடர்களும், 31 மிகை உயர் அழுத்த துணை மின் நிலையங்களும், 24 உயர் அழுத்தத் துணை மின் நிலையங்களும் அமைக்கப்பட்டன. முதன் முறையாக சென்னை நகரில் மின் விநியோகத்தைச் சீராக்கும்பொருட்டு, 110 கே.வி புதைவடம் under ground cable பொருத்தப்பட்டு வருகிறது.

கிராம மின் மயமாக்குத் திட்டத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

ஆதித் திராவிடர் குடியிருப்புகளுக்கு மின்வசதி வழங்குவதில் தனி முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக ஆதி திராவிடர் குடியிருப்புகள் 100 விழுக்காடு அளவிற்கு மின் வசதியைப் பெற முடிந்தது.

நலிவுற்ற பிரிவினரையும் மின்சாரத்தின் பயனை நுகரச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் 1979ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட "குடிசைகளுக்கு ஓர் மின்விளக்கு" திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதன் காரணமாக, இதுவரை 5.2 இலட்சம் குடிசைகளுக்கு வாரியம் மின் இணைப்பு அளித்துள்ளது.

இந்தியாவிலேயே புதுமையாக ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் கொண்ட தன்னிறைவுத் திட்டத்தை 1980 ஆண்டு இந்திய அரசினரின் ஒப்புதலோடு தமிழக அரசு துவக்கியபோது இது வெற்றி அடைய தமிழ்நாடு மின்சார வாரியம் தனது முழு ஒத்துழைப்பை நல்க முன் வந்தது. இத்திட்டத்தின் கீழ் 2219 மேல்நிலைத் தொட்டிகளுக்கும் தரையடி நீர்த் தேக்கங்களுக்கும் மின் இணைப்பு அளிக்கப்பட்டது. மாநில அரசு துவங்கியுள்ள ஊரகப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் முயற்சிக்கு இது பேராதரவாக உள்ளது.

## இருளகற்றும் இலட்சியப் பணி

| | |
|---|---|
| கடந்த மூன்றாண்டுகளில் போடப்பட்ட மிகை உயர் அழுத்தக் கம்பித் தொடர்கள் | 8,000கி.மீ |
| குறைவழுத்தக் கம்பித் தொடர்கள் | 25,000கி.மீ. |
| மிகை உயர் அழுத்தத் துணை மின் நிலையங்கள் | 31 |
| உயர் அழுத்தத் துணை மின் நிலையங்கள் | 24 |
| மின் வசதி பெற்ற ஆதிதிராவிடர் குடியிருப்புகள் | 100% |
| மின்னொளி பெற்ற குடிசைகள் | 5.2 இலட்சம் |

மின் திருட்டை அறவே ஒழிக்க மின் திருட்டுப் பற்றித் தகவல் தரும் பொதுமக்களுக்கு ரூபாய் 10,000 வரை ரொக்கமாகப் பரிசு அளிக்கும் திட்டம் ஒன்றை ஏப்ரல் 1983ல் வாரியம் துவங்கியுள்ளது. மின் திருட்டு ஒழிப்புப் பணிகளுக்கென இரண்டு மேற்பார்வைப் பொறியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். தூத்துக்குடியில் 1.4.'83 முதல் மாத அனல் மின் ஊக்கப் படியும், ஆண்டுப் பூரிப்பு ஊதியமும் (போனஸ்) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வாரியப் பணியாளர்களது, குறிப்பாக அடி மட்டத்திலுள்ள ஊழியர்களது நலன்களைக் கருதி, தமிழ்நாடு மின்சார வாரியம் கீழ்க்கண்ட சலுகைகளை அறிவித்துள்ளது.

அ. எல்லாப் பணியாளர்களுக்கும் ஓய்வூதிய திட்டம் பரவலாக்கப்பட்டுள்ளது.

ஆ. சீருடை வழங்கப்பட்டுள்ள பணியாளர்களுக்கு சலவைப்படி.

இ. பணிக்காலத்தில் மரணமடைந்த பணியாளர்களது வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பளிப்பதில் வயது, கல்வித் தகுதிகளைத் தளர்த்துவது.

ஈ. ஆண்டுக்கு 5000 வீடுகள் என்ற கணக்கில் குடியிருப்பு வசதி.

உ. மதிப்பீட்டாளர் பதவிகளை நியமிப்பதில் தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களைச் சார்ந்த 2000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பு

ஊ. மாநிலத்தில் தொழிலகங்களைத் தொடங்க விரும்பும் பொறியாளர்களுக்கு 5 ஆண்டுகள் வரை சிறப்பு விடுப்பு வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்திக்



கொள்ளும் பொறியாளர்கள், இம்முயற்சியில் தங்களால் வெற்றிகாண முடியவில்லையெனில் பணிக்குத் திரும்ப சலுகையளிக்கப்பட்டுள்ளது.

எ. மின் பயனீட்டளவைக் கணக்கிடல் மின் கட்டணப் பட்டியலைத் தயாரித்தல், மின் கட்டண வசூல் என்ற மூன்று வகைப் பணிகளை ஒருங்கிணைந்த அட்டைப்பட்டி முறை என்ற பெயரில் மதிப்பீட்டாளரால் செய்யுமுறை 1.1.1982 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஏ. சென்னை நகரில் மின்தடை சீர் செய் பணிகளை உடனுக்குடன் திறமையாகச் செய்யும் பணிக்கென வி.எச்.எப். பொருத்தப்பட்ட 19 ஊர்திகள் இருப்பப்பட்டுள்ளன. மத்திய மின்தடை சீர் செய் துணைப் பிரிவு ஒன்றும் துவக்கப்பட்டுள்ளது.

ஐ. தலைமை அலுவலகங்களை இடம் பெறச் செய்ய பத்து மாடிக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

திட்டங்களைத் தீட்டுவதிலும், செயல்படுத்துவதிலும், மின்நுகர்வோர் குறைகளைக் களையவும், பணியாளர் நலன்களைப் பேணவும், நிர்வாக அமைப்பை இன்னும் அதிக அளவுக்குத் திறம்பட இயக்கவும் மேற்கூறிய செயல் வகைகள் எல்லாம் உறுதுணையாக இருக்கும் என்று உறுதியாக நம்பலாம்.






# வெண்மைப் புரட்சி

ஒரு மாலைப்பொழுது!

ஆவின் நிறுவனக் கால்நடை மருத்துவர் இருவர் அவசரமாக மருத்துவ உதவிபுரிய ஒரு கிராமத்திற்கு ஜீப்பில் செல்கின்றனர். கன்று பெற சிரமப்படும் ஒரு பசுவினைக் காப்பாற்ற விரைந்து செல்லும் வேளையில் திடீரென்று ஜீப் கவிழ்கிறது!

அடிபட்ட டாக்டர் இருவரும் தூரத்தில் இருக்கும் கிராமத்திற்கு நடந்தே செல்கின்றனர். துயரத்தின் சிகரத்தில் இருக்கும் விவசாயியின்முகத்தில் ஒரு நம்பிக்கைச் சுடர் தென்படுகிறது. பெருமுயற்சிக்குப் பிறகு, கால்நடை மருத்துவர்கள் பசுவையும் கன்றையும் காப்பாற்றுகின்றனர். இன்னல் கருதாது கடமை புரிந்த கால்நடை மருத்துவர்களின் பணி கண்டு கிராம மக்களின் இதயம் நன்றியில் நனைகிறது.

சிறுசிறு நிகழ்ச்சிகள். ஆனால பால் உற்பத்தியாளர்களின் மனத்தில் ஒன்றிடும் நிகழ்ச்சிகள். விவசாயிகளின் வாழ்வில் ஒன்றிப் பணியாற்றிடும் கடமையுணர்வு. இவை 'ஆவின்' நிறுவனத்தின் சாதனைகளுக்கு வழித்தடம் ஏற்படுத்திய நிகழ்ச்சிகள். இன்று 'வெண்மைப் புரட்சியில்' தமிழ்நாடு தலை நிமிர்ந்து முன்னேற்றப் பாதையில் செல்கின்றது.

இந்தியாவின் வெண்மைப் புரட்சிக்கு வழிவகுத்தவரும், இந்தியாவின் பால் வளத் தந்தை என அழைக்கப்படுபவருமான டாக்டர் குரியன் அவர்கள், 19வது அகில இந்தியப் பால் வள மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில், தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பால் பெருக்குத் திட்ட வளர்ச்சி பற்றிக் கூறுகையில் ''மாண்புமிகு முதலமைச்சரின் சீரிய தலைமையின்கீழ் தமிழ்நாட்டில் ஆனந்த் பாணி வெற்றிகரமான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது... குறுகிய இரண்டாண்டுகளில் தமிழ்நாட்டில்பால்வளத் தொழில் ஆற்றிய சாதனைகளை மற்ற மாநிலங்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. தமிழ்நாடு, குஜராத் மாநிலத்தைவிட இத்துறையில் முன்னேறத் தயாராக உள்ளது'' என்று பெருமிதத்துடன் கூறினார்.

கடந்த 5 ஆண்டுகளில் பெருமளவில் விவசாயிகள் கூட்டுறவின்கீழ் கொண்டு வரப்பட்டனர். அதிக அளவில் பால் கொள்முதல் செய்யப்பட்டு, பதப்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. பல வகையான பால் பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அதிக விற்பனை மையங்களுக்கு 'ஆவின்' சேவை விரிவாக்கப்பட்டுள்ளது.

வரும் ஆண்டுகளில், அனைத்து மாவட்டங்களிலும், பால் பண்ணை வளர்ச்சி விரிவாக்கப் பணிகள் முனைந்து செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டங்களை நிறைவேற்றுவதில் இரண்டு பொதுவான நோக்கங்கள் உள்ளன. வறுமையில் வாடும், பால் உற்பத்தி செய்யும் விவசாயப் பெருமக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது ஒன்று; அதே சமயம் நுகர்வோருக்குச் சத்துள்ள பாலை, குறித்த நேரத்தில் , நியாய விலையில் வழங்குவதை உறுதிப்படுத்துவது பிரிதொன்று..

தமிழகத்தில் வெண்மைப் புரட்சி வெகு நேர்த்தியாகத் தொடங்கப்பட்டு வியத்தகு சாதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்பணியில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், உச்சகட்ட வளர்ச்சியை எட்டிடத் தேவையான நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொண்டுள்ளது.



# வருவாய்த் துறையின் பெரும் பணிகள்



வருவாய் வாரியத்தை 1-12-'80 முதல் நீக்கியது இவ்வரசுகொண்டு வந்த மிக முக்கியமான சீர்திருத்தங்களில் ஒன்று ஆகும். அதற்கு பதிலாக, போக்குவரத்து வணிக வரிகள், வருவாய் நிர்வாகம், நில நிர்வாகம், நிலவரி நிர்வாகம், நிலச் சீர்திருத்தம், ஆயத் தீர்வை-மதுவிலக்கு ஆகிய ஆறு துறைகளை அரசு அமைத்தது. போக்குவரத்து, வணிக வரிகள், வருவாய் நிர்வாகம், நில நிர்வாகம் ஆகிய துறைகளின் தலைவர்களாக ஆணையாளர்கள் பதவித் தரத்திலுள்ள அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிலச் சீர்திருத்தத் துறையில் தலைவராகத் தனி ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆயத் தீர்வை-மதுவிலக்கு துறைத் தலைவராக இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். நவீன நிர்வாகத் தேவைகளுக்கேற்ப நிர்வாக அமைப்பைக் கொண்டுவரும் நோக்குடன் அரசு இச்சீர்திருத்தத்தை மேற்கொண்டது. அதனால், தாமதங்களைத் தவிர்க்கலாம். கிராம மக்கள் பயனடையும் வகையில் சிறந்த முடிவுகளை எடுக்க இயலும்.

தமிழ்நாட்டிலுள்ள பகுதி நேர கிராம அதிகாரிகளை நீக்கிவிட்டு, இடம் விட்டு இடம் மாற்றம் செய்யத்தக்க முழு நேர அரசுப் பணியாளர்களை, அமர்த்தும் புதிய முறையைக் கொண்டுவந்து கிராம நிர்வாக அதிகாரிகள் என்ற பதவிகளை அரசு ஏற்படுத்தியுள்ளது. பழைய முறையான, பகுதி நேர கிராம அதிகாரிகளின் அமைப்பில் முக்கிய குறைபாடுகள் இருந்தன. இக்குறைபாடுகள் காரணமாக இந்த அமைப்பு காலப்போக்கில் கிராம நிர்வாகத்தின் தரத்தையும் தன்மையையும் பாதிக்கத் தொடங்கியது. அரசு 12,550 முழு நேர கிராம நிர்வாக அதிகாரிகள் பதவிகளை ஏற்படுத்தியுள்ளது.

மாவட்ட வருவாய் நிர்வாகம் செயல்படுவது பற்றி, குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள், கோட்ட ஆட்சி அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள் செயல்படுவது பற்றி ஆராய்வதற்காகவும், பொது மக்கள் நலனைக் கருதி அலுவலகங்களில் பணிகளை விரைவில் முடிவு செய்யும் வகையில், இவ்வலுவலகங்களின் திறனை உயர்த்துவதற்கான முறைகளை ஆராய்வதற்காகவும் தனி நபர் குழுவாக திரு எஸ். பி. அம்புரோஸ், ஐ. ஏ. எஸ் அவர்களை அரசு 1979-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நியமித்தது. அவர் தனது அறிக்கையை 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31ஆம் நாள் அன்று சமர்ப்பித்தார் அவரது பரிந்துரையின் மீது இதுவரை பிறப்பிக்கப்பட்ட ஆணைகள், மாவட்ட அலுவலகங்களில் நடைமுறைகளை எளிமைப்படுத்துதல், பணியை உன்னிப்பாக மேற்பார்வை செய்தல், கோப்புகளைக் கவனிப்பதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்த்தல், நில ஒப்படை செய்தல் முதலியன தொடர்பான கோப்புகளை விரைந்து பார்வையிடல், பொது மக்கள் வேண்டுகோள் சம்பந்தப்பட்ட கோப்புகளைக் கவனித்தல் போன்றவைகளை, குறிப்பிடுகின்றன.

வருவாய்ப் பிர்க்காக்கள் நிர்வாகத்தின் முக்கிய பிரிவுகளாகும். வருவாய் ஆய்வாளர்களின் பொறுப்பை அதிகரிக்கும் வகையில், வருவாய்ப் பிர்க்காக்களின் அதிகார வரம்பை மாற்றியமைக்க அரசு முடிவெடுத்தது. இம்மாநிலம், தற்போது 1,097 பிர்க்காக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்திலுள்ள துணை வட்டங்களை முழு வளர்ச்சி பெற்ற வட்டங்களாக உயர்த்துவதை மேற்கொண்ட திட்டத்தின்படி, தற்போது இம்மாநிலத்தில் துணை வட்டங்கள் எதுவும் இல்லை. மக்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டுமானால், நிர்வாகப் பிரிவுகளில், மாவட்டங்களில் வருவாய்க் கோட்டங்களில், வட்டங்களில் ஆட்சிப் பகுதியை குறைக்க வேண்டும். அதன்படி, கோயம்புத்தூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு பெரியார் மாவட்டம் 17-9-'79 அன்று உருவாக்கப்பட்டது. பெரியார் மாவட்டத்திலுள்ள தாராபுரத்தைத் தலைமையிடமாகவும், தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூரைத் தலைமையிடமாகவும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருப்பூரைத் தலைமையிடமாகவும் கொண்ட 3 புதிய வருவாய்க் கோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1978-79ஆம் ஆண்டு முதல் 323 பிர்க்காக்கள், 34 வட்டங்கள் 6 வருவாய்க் கோட்டங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## நில ஒப்படை

1-6-80 முதல் 31-3-83 வரை 13,143.83 ஏக்கர், பயிரிடத்தக்க தரிசு நிலங்கள், 10,880 நிலமற்ற ஏழைகளுக்கும், 3,03,750 வீட்டு மனைகள் ஏழைகளுக்கும் ஒப்படை செய்யப்பட்டுள்ளன.



சென்னை நகரத்தில் ஆதி ஆந்திரர்கள் செய்துள்ள ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்தும் தனித் திட்டத்தின்படி ஒரு மனைக்கு 3,000 ரூபாயும் 750 சதுர அடிக்கு மேற்பட்ட நிலத்திற்கு இரண்டு மடங்கு விலையும் செலுத்துவதன் பேரில் ஆதி ஆந்திரர் குடும்பங்களுக்கு வீட்டு மனை ஒப்படை செய்யப்படுகிறது. இத்திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்படுகிறது. 2,170 ஆதி ஆந்திரர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இதில் 1924 ஆக்கிரமிப்புக்கள் இது வரை முறைப்படுத்தப்பட்டுள்ளன.

'வீட்டுக்கு ஒரு மரம் வளர்த்தல்' திட்டத்தைச் செவ்வனே செயல்படுத்துவதற்காக அரசு நிலங்களில் வீட்டு மனை அளிக்கப்பட்ட ஒவ்வொருவரும் வீட்டின் முன் பக்கத்தில் அல்லது புறக்கடையில் குறைந்தது ஒரு மரமாவது வளர்க்க வேண்டும் என்ற நிபந்தனை கொண்டு வரப்பட்டுள்ளது.

## நிலச் சீர்திருத்தங்கள்

நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட உபரி நிலங்களுக்காக நில உரிமையாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய தொகையைக் கணக்கிடுதல்..

தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது வரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/61) கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட உபரி நிலங்களுக்காக அளிக்கப்படவேண்டிய தொகை சில நேர்வுகளில் அந்த நிலங்களின் அங்காடி விலையைக் காட்டிலும் அதிகமாக இருப்பதாகத் தெரிய வந்தது. உபரி நிலங்களின் உரிமையாளர்களுக்கு அளிக்கப்பட்ட தொகையை நில உரிமையளிப்புப் பெற்றவர்களிடமிருந்து நில மதிப்பாக வசூலிக்கப்படவேண்டியுள்ளதால், அத்தகைய உபரி நிலங்களுக்கு உரிமையளிப்புப் பெற்றவர்களிடமிருந்து உபரி நிலத்தின் மதிப்பை வசூலிப்பதில் சிரமம் ஏற்பட்டது. எனவே தொகையைக் கணக்கிடுவதன் அடிப்படை, நிலவரியின் குறிப்பிட்ட மடங்கை அந்நிலத்தின் ஆண்டு மதிப்பாகக் கணக்கிட்டு அந்த ஆண்டு மதிப்பின் குறிப்பிட்ட மடங்கை, பாசனம் பெறும் புஞ்சை அல்லது மானாவாரி நிலங்களுக்குச் சற்றுக் கூடுதலாக வைத்து, ஏக்கர் ஒன்றுக்கு ரூ.350க்கு உட்பட்டு, மிகச் சிறந்த நிலத்திற்கு அளிக்கப்பட வேண்டியதொகைஒரு ஏக்கருக்கு ரூ. 3500-க்கு மேற்போகாது.

மூலச் சட்டம் திருத்தச் சட்டம் 11/69இன் மூலம் திருத்தப்பட்டது. இது தவிர மரங்களின் மதிப்பு, கட்டடங்கள், இயந்திரங்கள் ஆகியவைகளின் மதிப்பையும் கணக்கிடப்பட்டவாறு செலுத்த வகை செய்யப்பட்டது. இதனால் நில உரிமைபெற்ற ஏழைமக்கள் பயனடைந்தனர்.

பெரும்பாலான தகுதியுடைய ஏழை மக்கள் பயனடையும் வகையில் உபரி நிலங்களை ஒப்படை செய்யும் வரம்பு 5 தர ஏக்கரிலிருந்து புன்செய் நிலத்திற்கு 3 சாதாரண ஏக்கர்களாகவும் நன்செய் நிலத்திற்கு 1½ சாதாரண ஏக்கர்களாகவும் குறைக்கப்பட்டது.

தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின் கீழ் கையகப்படுத்தும் உபரி நிலங்களை தமிழ்நாடு 1965ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை வினியோகம் செய்தல்) விதிகளின் கீழ் ஒரு நபருக்கு உயர்ந்த அளவு 5 தர ஏக்கர்வரை ஒப்படை செய்யலாமென்றிருந்தது. இதன்படி விதிகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட உயர் வரம்பு 5 தர ஏக்கர் என்றாலும், அதிக நிலங்கள் அதாவது 15 சாதாரண ஏக்கர்கள் வரை தகுதி வாய்ந்த நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. உயர் உச்சவரம்பான 5 தர ஏக்கர்கள் 1965ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டது.

அரசு புறம்போக்கு நிலம் ஒப்படை செய்யப்படும் உச்சவரம்பு 1961ஆம் ஆண்டிலிருந்து 3 சாதாரண ஏக்கர் புன்செய்நிலம் அல்லது 1½ சாதாரண ஏக்கர் நன்செய் நிலம் என்று குறைக்கப்பட்டது. அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட பெரும்பாலான உபரி நிலங்கள் சாகுபடி செய்யத்தக்க நிலங்களாக உள்ளன. மேலும் அவை புறம்போக்கு அல்லது வரி விதிக்கப்பட்ட தரிசு நிலங்களை விட மதிப்பு வாய்ந்தவை. உபரி நிலங்களுக்கான ஒப்படை உச்சவரம்பு அரசு புறம்போக்கு நிலங்களுக்கு உள்ளதுபோல் குறைக்கப்பட்டால் ஏராளமான நிலமற்ற ஏழைகள் இத்திட்டத்தின்மூலம் பயனடைவர் என்று கருதப்பட்டது. எனவே திருத்தச் சட்டம் 8/80இன் மூலம் தகுதியுடைய ஒரு நபருக்கு ஒப்படை செய்யப்பட வேண்டிய உபரி நிலங்களின் உயரளவை 5 தர ஏக்கரிலிருந்து 3 சாதாரண ஏக்கர் புன்செய் நிலம் அல்லது 1½ சாதாரண ஏக்கர் நன்செய் நிலமாகக் குறைக்கப்பட்டதன் மூலம் கிராமப்புற பெருவாரியான ஏழை மக்களுக்குப் பயன் அளிக்கப்பட்டது.

நிலச்சீர்திருத்தங்களின் கீழ் குத்தகையைப் பொறுத்து 1977





ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள் 1ஆம் நாள் முதல், இதுநாள்வரை செய்யப்பட்டுள்ள சாதனைகள்.

பயிரிடும் குத்தகைதாரர்கள் நில உரிமையாளர்களுக்கு 1.7.75 முதல் 30.6.76 முடிவடையும் 1385 விளைச்சல் ஆண்டுக்கு அல்லது அதற்கு முந்தைய விளைச்சல் ஆண்டுகளுக்குச் செலுத்தவேண்டிய குத்தகைப் பாக்கிகள் செலுத்தும் கால எல்லை 15.7.78, 15.1.79, 15.7.79, 15.1.80 மற்றும் 15.7.80 வரை அவ்வப்போது நீட்டிக்கப்பட்டது. இதேபோல 1977ஆம் ஆண்டு நிகழ்ந்த புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், 1383 முதல் 1387 வரை உள்ள விளைச்சல் ஆண்டுகளுக்குக் குத்தகைப் பாக்கிகளை வசூலிக்கும் நடவடிக்கைகளும், குத்தகைப் பாக்கிகளைச் செலுத்தாமைக்காக, குத்தகைதாரரை நிலத்திலிருந்து வெளியேற்றம் செய்யும் நடவடிக்கைகளும் தடை செய்யப்பட்டு, இத்தடை 15.7.80 வரை நீட்டிக்கப்பட்டது.

குவிந்துவிட்ட குத்தகைப் பாக்கிகளை வசூல் செய்வதற்கு நிரந்தர குத்தகை நிவாரண ஏற்பாடுகள் 1980-ல் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, 1977-ஆம் ஆண்டு நிகழ்ந்த புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் அல்லாத பகுதிகளில் 1383 விளைச்சல் ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய விளைச்சல் ஆண்டுகளில் சேர்ந்துள்ள குத்தகைப் பாக்கிகளில் 3இல் 1 பங்கையும், 1977ஆம் ஆண்டு நிகழ்ந்த புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 1383 முதல் 1387 வரை உள்ள விளைச்சல் ஆண்டுகளில் சேர்ந்துள்ள குத்தகை நிலுவையில் 5ல் 1 பங்கையும் 31.12.80, 30.6.81 மற்றும் 30.6.82 ஆகிய மூன்று தவணைகளில் செலுத்த வகை செய்யப்பட்டது.

நிலச்சுவான்தாரருக்கு அல்லது பொதுப் பொறுப்புக் கழகத்திற்குப் பயிரிடும் குத்தகைதாரர் செலுத்தவேண்டிய நியாய குத்தகை மொத்த விளைச்சலில் 33⅓ விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடு வரை இருந்தது. 25 விழுக்காடாக 1980ல் குறைக்கப்பட்டது.

தமிழ்நாடு 1969ஆம் ஆண்டு வேளாண் தொழிலாளர்கள் நியாய ஊதிய சட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, மயிலாடுதுறை, சீர்காழி, நாகப்பட்டினம், நன்னிலம், திருவாரூர் மற்றும் வேதாரண்யம் ஆகிய கிழக்கு வட்டங்களில் நியாய ஊதியத்தைத் திருத்தியமைப்பது பற்றி விசாரணை செய்ய அரசு 1978-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் திரு இராமசந்தர், இ.ஆ.ப. அவர்களைத் தனிநபர் குழுவாக நியமித்தது. இக்குழுவின் பரிந்துரைப்படி 1979-ஆம் ஆண்டிலும், இறுதியாக 1981ஆம் ஆண்டிலும் நியாய ஊதியம் திருத்தியமைக்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் உட்பட எல்லா வேளாண் சட்டங்களையும் சரியான முறையில் அமல்படுத்த அதிகாரிகளுக்கு உதவும் பொருட்டும் வேளாண் தொழிலாளர்கள் தங்கள் குறைகளைப் பயமின்றித் தெரிவிக்கவும் 1978 ஜூலைத் திங்களில் கிராம அளவில் மக்கள் குழுவை நியமிக்க அரசு உத்தரவிட்டது.

1981-82ஆம் ஆண்டிலும், 1982-83ஆம் ஆண்டிலும் இம்மாநிலத்தில் பருவமழை தவறிவிட்டதால் பயிரிடு குத்தகைதாரர்கள் நடப்பு விளைச்சல் ஆண்டுக்கான குத்தகைத்தொகையையோ முந்தைய விளைச்சல் ஆண்டுக்கான குத்தகைத் தொகையையோ செலுத்தும் நிலையில் இல்லை. ஆகவே பயிரிடும் குத்தகைதாரர், 30.6.83 உடன் முடிவடையும விளைச்சல் ஆண்டிடிற்கோ, அதற்கு முந்தைய விளைச்சல் ஆண்டுகளுக்கோ செலுத்தத்தக்க குத்தகைத் தொகையைச் செலுத்த தவறுவதன் காரணமாக நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதினின்று, 1984ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 15ஆம் நாள்வரை பாதுகாக்க வகை செய்ய அரசு 1983, ஏப்ரல் திங்களில் சட்டம் இயற்றியுள்ளது. இச்சட்டம், குத்தகைத் தொகை செலுத்தத் தவறியதற்காக 1982 ஜூலை 1ஆம் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் உத்தேசச் சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முன்னர் வெளியேற்றப்பட்டுள்ள குத்தகைதாரர்களை நிலத்தில் மீண்டும் அமர்த்த வகைசெய்கிறது.

| | |
|---|---|
| 1.6.80 முதல் 31.3.83 வரை ஏழைகளுக்கு ஒப்படை செய்த தரிசு நிலம் | 13,143.83 ஏக்கர் |
| ஏழைகளுக்கு ஒப்படை செய்த வீட்டு மனைகள் | 3,03,750 |
| முறைப்படுத்தப்பட்ட ஆதி ஆந்திரர் ஆக்கிரமிப்புகள் | 1,924 |

ஏழை மக்கள் பயனடைய உபரி நிலங்களை ஒப்படை செய்யும் வரம்பு 5 தர ஏக்கரிலிருந்து புன்செய் நிலத்திற்கு 3 சாதாரண ஏக்கராகவும் நன்செய் நிலத்திற்கு 1½ சாதாரண ஏக்கராகவும் குறைக்கப்பட்டது.





# வனவளம்

வனத்துறை முன்பு பொதுமக்களின் தொடர்பில்லாமல் அரசின் ஓர் இயந்திரமாகவே இயங்கி வந்தது. இது படிப்படியாக பொதுமக்கள் தொடர்பு கொண்ட துறையாக மாற்றப்பட்டு வருகிறது. அண்மையில், இவ்வரசே சமூகநலக்காடு திட்டத்தை விரிவுபடுத்தி, வனத்துறைத் திட்டம் மக்களின் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. பொதுமக்களிடமிருந்து பெருமளவு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு காடுகளை அழிப்பதைத் தவிர்க்கவும் தற்போதுள்ள காடுகளைப் பேணிக் காக்கவும் சமுதாயக் காடுகள் வளர்ப்பதிலும் மற்றும் வனவிலங்குகளைப் பேணிக் காப்பதிலும் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு உள்ளது.

சமூகக் காடு வளர்ப்பில் நம் மாநிலம் முன்னோடியாக விளங்கும் பெருமையைப் பெற்றுள்ளது. 1.4.1981ஆம் நாளிலிருந்து சுவீடன் அனைத்து நாட்டு வளர்ச்சி அமைப்பின் நிதி உதவியுடன் வன எல்லைகளுக்கு வெளியே பெருமளவிலான காடு வளர்ப்புத் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. ஏரி நிலங்கள், கிராமத்திலுள்ள காலி நிலங்கள், சாலை, கடற்கரை ஓரங்கள், ரயில்வே நிலங்கள் போன்ற அரசு ஊராட்சி நிலங்களையும் தனியாரிடம் உள்ள வளம் குன்றிய நிலங்களையும் பயன்படுத்திக் காடுகளும், மரங்களும் வளர்க்கப்படுகின்றன. கிராமப்புற மக்களின் தேவைகளான விறகு, சிறிய மரங்கள்,



தீவனம், காடுபடு சிறுபொருள்கள் ஆகியவை கிடைப்பதற்காக பொதுமக்களுக்காகவே, பொது மக்களாலும், வனத்துறை அதிகாரிகள் அலுவலர்களாலும் நிறைவேற்றப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின் விவரங்கள் கீழ்வருமாறு:



**சமூக நலக் காடுகள்-சிடா**

| | |
|---|---|
| சிடா திட்டம் செயல்படும் ஆண்டுகள் | 1981-82 முதல் 1985-86 வரை |
| திட்ட மதிப்பு | ரூ.45 கோடி |

மரக்கன்று இனாமாகவும் மற்றும் மலிவு விலைக்கும் அளிக்கப்படுகிறது. பாலிதீன் பையுடன் கூடிய மரக்கன்றின் விலை ஒன்றுக்கு 10 காசு முதல் 25 காசு வரையாகும்.

## 1981-82

| | |
|---|---|
| செலவு செய்த தொகை | ரூ.418.27 இலட்சம் |
| மரங்கள் எழுப்பிய பரப்பு | 31,371 எக்டேர் |
| நீளவாட்டில் | 2336 கி.மீ. |
| பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட மரக்கன்றுகள் | 38.58 இலட்சம் |

## 1982-83

| | |
|---|---|
| செலவிடப்பட்ட தொகை | ரூ.794.91 இலட்சம் |

செயல்படும் பணிகள்

| | |
|---|---|
| கோட்டங்கள் எழுப்புதல் | 34,67. எக்டேர் |
| சாலையோரங்களில் மரம் நடுதல் | 945 கி.மீ. |
| தொடர்கோட்டங்கள் எழுப்புதல் | 830 கி.மீ. |
| மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு வழங்குதல் | 217 இலட்சம் |
| ஒரு குடும்பத்திற்கு இலவசமாகக் கொடுக்கும் மரக்கன்றுகள் | 500 |
| ஆண்டு ஒன்றுக்கு ஊக்கத் தொகை (500மரங்களுக்கு) | ரூ.77.50 |

வழங்கப்படும் மரக்கன்றுகளில் 100 மரக்கன்றுகளில் ஒன்று பழமரமாக இருக்கும்; மீதம் உள்ளவை பலன் தரும் மரங்கள்.

| | |
|---|---|
| 1981-82ல் உயிருடன் பிழைத்திருக்கும் மரங்கள் | 73% |
| 1982-83ல் உயிருடன் பிழைத்திருக்கும் மரங்கள் | 82% |
| 5 ஆண்டுகளுக்கு சமூக நலப் பணியாளர்கள் நியமிக்கப்பட உள்ளவர்கள் எண்ணிக்கை ஒரு ஆண்டுக்கு 1000 நபர்கள் வீதம் 5 ஆண்டுக்கு | 5000 நபர்கள் |
| இதுவரை நியமிக்கப்பட்ட சமூகநலப் பணியாளர்கள் | 980(இதில் 60 பேர் பெண்கள்) |

வேலை வாய்ப்பு

| | |
|---|---|
| 5 ஆண்டுகளில் வேலை வாய்ப்பு | 30.6 மிலியன் |





## 1983-84

| | |
|---|---|
| உத்தேசிக்கப்பட்ட செலவு | ரூ. 846.86 இல்ட்சம் |
| தோட்டங்கள் எழுப்பப்பட வேண்டிய பரப்பு | 27,530 எக்டேர் |
| சாலையோர நிலம் | 1925 கி.மீ. |
| கன்றுகள் வளர்த்து வழங்குவது | 209 இலட்சம் |

சமூகநலக் காடுகள் திட்டத்தின் கீழ் சேலம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு புதிதாக ஏற்படுத்தப்பட்ட கிராமப்புற விறகு மரத் திட்டங்களும் இணைக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய இத்திட்டம் புதிய 20 அம்சத் திட்டத்தில் 12வது இனமாகச் சேர்க்கப்பட்டு உள்ள காடுகள், வளர்ப்பது என்ற குறிக்கோளைப் பூர்த்தி செய்கிறது. 20 அம்சத் திட்டத்தின்படி சென்ற ஆண்டு (1982-83) 11 கோடி மரங்கள் நடவேண்டுமென்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. பருவ மழை பொய்த்த போதிலும் வனத்துறையின் முயற்சியால் 11.61 கோடி மரங்கள் நடப்பட்டன. இதில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட நாற்றும் மற்றும் இதர அரசுத் துறையினர் மரம் நடுவதற்காகச் செய்த பணிகளும் அடங்கும். சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டம் செயல்பட ஆரம்பித்ததின் காரணமாக 980 (இதில் 60 பேர் பெண்கள்) நபர்கள் சமூக நல ஊழியர்களாக நியமிக்கப்பட்டனர். இத்திட்டத்தின் காரணமாக 61இலட்சம் கிராமப்புற மனித நாட்கள் ( Rural Man days ) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**வன்பாதுகாப்பு:**

வனப் பணியாளர்கள் திறமையாகப் பணியாற்ற வகை செய்யும் பொருட்டு அவர்களுக்கு 40 துப்பாக்கிகளும், 24 ஜீப்புகளும், 1982-83ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன. காடுகளைத் தீயிலிருந்து நவீன முறையில் பாதுகாக்க மேல் பழனியில் இருவழி செய்தித் தொடர்புச் சாதனம் ( Walkie Talkie ) அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப் பணி முடிந்துள்ளது. 1982 அக்டோபரில் கடத்தப்பட்ட 12,406 பாம்புத்தோல்கள் வனத் துறைப் பாதுகாப்புப் படையினரால் சென்னையில் கைப்பற்றப்பட்டன.

**சந்தன மரம்**

திருப்பத்தூர் கோட்டத்தில் சந்தனத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையை சுமார் ரூ. 50 இலட்சம் மதிப்பில் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வடார்க்காடு மாவட்டம், வாணியம்பாடி வட்டத்திலுள்ள தெக்குப்பட்டு கிராமத்தில் மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காக 9.25 ஏக்கர் பரப்பளவுள்ள இடம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. ஆயத்த நிலை அடிப்படையில் செயல்படுவதற்காக, இப்பணி 'டான்சி' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1981 மற்றும் 1982-ல் சந்தனமரம் ஏலத்தின் மூலம் கணிசமான வருவாய் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

## 1980

| | |
|---|---|
| விற்ற அளவு | 1230.25 டன்கள் |
| வருவாய் | ரூ. 286.02லட்சம் |
| சராசரி விலை | ஜூலை ரூ.20.415 டிசம்பர் ரூ.16,934 |

## 1981

| | |
|---|---|
| விற்ற அளவு | 1923.20டன்கள் |
| வருவாய் | ரூ. 505.32லட்சம் |
| சராசரி விலை | ஜூலை ரூ.23,673 டிசம்பர் ரூ.29,041 |

## 1982

| | |
|---|---|
| விற்ற அளவு | 1947 டன்கள் |
| வருவாய் | ரூ.568.18 லட்சம் |
| சராசரி விலை | ஜூலை ரூ. 34,869 டிசம்பர் ரூ.32,561 |



### பழங்குடியினர் மேம்பாடு

தென்னார்க்காடு, வடார்க்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில்(வனப் பகுதிகளுக்கு வெளியே) சமூகக் காடுகள் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பழங்குடியினர் வனப் பணி துணைத் திட்டப் பிரிவில் இத்துறை நிறைவேற்ற இலக்கிட்ட பணிகளும் 1980-81 முதல் 1982-83 வரை நிறைவேற்றியுள்ள பணிகளும் வருமாறு

| ஆண்டு | நிர்ணயிக்கப் பட்ட நிதி இலக்கு | நிறைவேற் றப்பட்டவை |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1980—81 | 23.01 | 18.34 |
| 1981—82 | 32.02 | 33.77 |
| 1982—83 | 46.52 | பணி நடந்தேறி வருகிறது |

1983-84ஆம் ஆண்டின் பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்ட வனப் பணி பிரிவில் ரூ 43.65 இலட்சம் செலவில் பல்வேறு பணிகளை நிறைவேற்றக் கருதப் பட்டுள்ளது.




### தமிழ்நாடு வனப் பணிப் பயிற்சிப் பள்ளி, வைகை அணை

இப்பள்ளியில் பயில்பவர்களுக்காக ஒரு மாணவர் தங்கும் விடுதி ரூ. 20 இலட்சம் செலவில் கட்டப்படுகிறது. இப்பணி விரைவில் முடிவு பெறும். நீலகிரி மாவட்டத்திற்காக வட்ட அலுவலகம் ஒன்று அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.

### காடுபடு பொருட்கள்

சிறு காடுபடு பொருள் விற்பனை மூலம் வனத்துறைக்கு கீழ்க்கண்டவாறு ஆண்டுக்கு ஆண்டு அதிக வருமானம் கிடைக்கிறது.

| | ரூ. இலட்சம் |
|---|---|
| 1981-82 | 69.57 |
| 1982-83 | 92.00 |
| 1983-84 | 102.00 (எதிர்பார்க்கப்படுகிறது.) |

### வண்டலூர் விலங்ககம்

வண்டலூர் விலங்ககம் அமைப்பதற்காக 1982 டிசம்பர் இறுதி வரையில் ரூ 49.43 இலட்சம் செலவிடப்பட்டு உள்ளது. 1982-83இல் மாநகராட்சி விலங்ககத்திலிருந்து நீர் யானை, வரிக்குதிரை, மான், சில பறவைகள் ஆகியன வண்டலூர் விலங்ககத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு புதிய அடைப்புகளில் விடப்பட்டுள்ளன. மேலும் துறையைச் சேர்ந்த யானை முகாம்களிலிருந்து யானைகள் கொண்டு வரப்பட்டு வண்டலூர் விலங்ககத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

### கடல் ஆமைகள்

கடல் ஆமைகள் அழிந்து வருகின்றன. இக்கடலாமைகள் குஞ்சு பொறிக்கும் கால அளவில்..அதாவது ஜனவரி முதல் மார்ச் திங்கள் வரை, தகுந்த பாதுகாப்பு அளிப்பதில் மத்திய அரசும், மாநில அரசும் மிக்க அக்கறை கொண்டுள்ளன. இக்கடலாமை முட்டைகள் சேதம் அடைவதனின்றும் களவு போவதனின்றும் தடுப்பதற்காகவும், கரையோரத்திலுள்ள குஞ்சு பொரிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் தனிப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### ரப்பர்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசின் ரப்பர் தோட்ட நிறுவனம் தன்னிச்சையாகச் செயல்படும் ஒரு கழகமாக அமைக்கப் பட வேண்டுமென்ற எண்ணம் சிறிது காலமாக அரசின் கவனத்தில் இருந்து வந்தது. தீவிர பரிசிலனைக்குப் பின்னர் அரசின் ரப்பர் தோட்டத்தினைத் தமிழ்நாடு ரப்பர் தோட்டக் கழகமென மாற்றி அமைக்க அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது.



# கல்வி வளர்ச்சி

**1983-84**ல் தமிழக அரசு நிதிநிலை அறிக்கையில் கல்வி மானியத்தின் கீழ் ஒதுக்கியுள்ள தொகை ரூ. 356 கோடியாகும். இது அரசின் மொத்த செலவான ரூ. 1654 கோடியில் 21.5% ஆகும். 1976-77ல் கல்வி மானியத்தின் கீழ் செலவிடப்பட்ட தொகை ரூ. 143 கோடி மட்டுமேயாகும்.

இது இவ்வாண்டு ரூ. 356 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும்.

### தொடக்கக் கல்வி

14வயது முடிய அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிக்க வேண்டும் என்பது இந்திய அரசியல் சட்டத்தின் கோட்பாடாகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 6-11 வயதுத் தொகுதியில் 95 சதவீதத்தினரையும், 11-14 வயதுத் தொகுதியில் 50 சதவீதத்தினரையும் பள்ளிகளில் சேர்த்தாக வேண்டும் என்பது அனைத்திந்தியாவிற்கும் மைய அரசுத் திட்டக்குழு விதித்துள்ள இலக்காகும். தமிழகத்தைப் பொறுத்த வரையில் தற்பொழுதே (1982-83 இறுதியில்) 6-11 வயதுத் தொகுதியினரில் 96.2 சதவீதத்தினரும் 11-14 வயதுத் தொகுதியினரில் 66.03 சதவீதத்தினரும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (1976-77ல் பள்ளிகளில் படித்தோர் விழுக்காடு 6-11 வயதுத் தொகுதியில் 91.7 சதவீதமும் 11-14 வயது தொகுதியில் 54.4சதவீதமும்மட்டுமே ஆகும்.) 1977-78 முதல் 1982-83 முடிய 6 ஆண்டுகளில் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 14 இலட்சமாகும்—



1982-83ல் கூடுதலாகச் சேர்ந்த 3.11 இலட்சம் மாணவ மாணவியர் உட்பட, 1982-83ல் இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் மாணவ மாணவியர் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்ந்துள்ளதற்கு 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டமே' காரணமாகும்.

### தொடக்கப் பள்ளிகளில் 'முதலமைச்சர் சத்துணவுத் திட்டம்'

தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 5 முதல் 9 முடியவுள்ள வயதுத் தொகுதி மாணவ மாணவியருள் (பெரும்பாலும் 1-5 வகுப்புக்களில் பயிலுவோர்) ஏழைக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் அனைவருக்கும் 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்' கீழ் 1982 சூலை-செப்டம்பர் முதல் சத்துணவு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் நாள்தோறும் 33,829க்கு மேற்பட்ட பள்ளிகளில் மொத்தம் 42 இலட்சத்துக்கு மேற்பட்ட மாணவ, மாணவியர் (நாள்தோறும் குழந்தைக்கு 45 காசு செலவில், சத்துணவு பெற்று வருவது வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையாகும். (பழைய தொடக்கப் பள்ளி மதிய உணவுத்திட்டத்தின் கீழ் சுமார் 20 இலட்சம் மாணவ, மாணவியர்

மட்டுமே அதுவும் ஆண்டுக்கு 200 நாட்கள் மட்டுமே மதிய உணவு பெற்று வந்தனர். அதற்கு ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்கு அரசு மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் 10 அல்லது 15 காசு அளவுக்கே செலவிட்டு வந்தன). ஒவ்வொரு பள்ளியிலும் சத்துணவுப் பணியைக் கவனிக்க, பகுதி நேர அமைப்பாளர் ஒருவர்; பகுதி நேரச் சமையற்காரர் ஒருவர், பகுதிநேர உதவியாளர் ஒருவர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## தொடக்கக் கல்வி வளர்ச்சிக்கான பிற நடவடிக்கைகள்

தொடக்கப் பள்ளிகளில் 1-3 வகுப்புக்களில் பயிலும் ஏழைக் குழந்தைகளுக்கு ஏறத்தாழ ஆண்டுக்கு ரூ. 1 கோடி செலவில் இலவசமாகப் பாடநூல்கள் வழங்கப்படுகின்றன.

1-3 வகுப்புகளில் யாரும் தோல்வியுறச் செய்யப்படுவதில்லை. இச்சீர்திருத்தம் 1977-78 முதல் அமலாக்கப்பட்டது. தொடக்கப் பள்ளியில் சேரும் (6-11 வயது) மாணவ, மாணவியர் தொடர்ந்து 5 ஆவது வரையில் படிக்காமல் இடையிலேயே பள்ளியிலிருந்து நின்று விடும் நிலைமை அண்மை ஆண்டுகளில் சீர்பட்டு வந்துள்ளது மகிழ்ச்சிக்குரியது. அவ்வாறு நின்று விடுவோர் 1977-78ல் 40 விழுக்காடு ஆக இருந்தது. 1980-81ல் அது 30% ஆகக் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. பள்ளி செல்லும் மனப்பான்மையைப் பிஞ்சுப் பருவத்திலேயே புகட்டுவதற்காக தமிழகத்தில் கிராமப்புறங்களிலுள்ள 4343 குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நர்சரி (இளஞ்சிறார் பள்ளி) வகுப்பைத் தொடங்க அரசு அண்மையில் ஏற்பளித்துள்ளது.

தொடக்கப் பள்ளிகளில் பெரும்பாலானவை ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள். அவற்றில் பணி செய்யும் சுமார் 95,000 ஆசிரியர்களும் யாதொரு இடர்ப்பாடும் இன்றி, கல்விப் பணியில் ஆர்வத்தோடு பணி செய்ய வழி வகுத்து அவர்கள் அனைவரும் 1.6.81 முதல் அரசுப் பணியாளர்களாக ஏற்கப்பட்டுள்ளனர். (இது அவ்வாசிரியர்கள் பல ஆண்டுகளாக வற்புறுத்தி வந்த கோரிக்கையாகும்). தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களிலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் 5181க்கு, கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் ரூ. 30 கோடி செலவில் கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன.

## உயர்நிலைப் பள்ளிக் கல்வி வசதி

1977-78 முதல் இதுவரை மொத்தம் 550க்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. உயர்நிலைப் பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக அறிவியல் ஆய்வுக்கூடங்கள் அமைத்தல், இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூட உந்து வண்டிகள் தருதல், கட்டடங்கள் ஆகியவைகளில் அரசு ஆண்டுதோறும் நிதிநிலை இடந்தரும் அளவுக்குச் செலவிட்டு வருகிறது.

ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு 1981-82 முதல் 500 உயர்நிலைப் பள்ளிகளில் 8, 9, 10 வகுப்புகளில் பயிலும் அம்மாணவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் ஆகிய பாடங்களில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள்தோறும் மொத்தம் 1 மணி நேரம் உரிய ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில்



சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் சுமார் 37,000 மாணவர்கள் பயன்பெறுகின்றனர். இந்தச் சிறப்புப் பயிற்சித் திட்டம் 1982-83 முதல் 300 மேல்நிலைப் பள்ளிகளில், மேல்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. இது இவ்வரசு செயல்படுத்தியுள்ள முற்றிலும் புதிய சிறப்புத் திட்டமாகும்.

பள்ளி மாணவர்களுக்கு மலிவு விலையில் நோட்டுப் புத்தகங்கள் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மூலம் தயாரித்து வழங்கப்படுகின்றன. பாடப் புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும் மாணவர்கள் எளிதில் பெறும் வகையில் பள்ளிதோறும் கூட்டுறவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வைப் பாடம் பாடமாக எழுதித் தேர்ச்சி பெறும் 'கம்பார்ட்மெண்டல் முறை'யை இவ்வரசு 1978 முதல் அமலாக்கி அனைவரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளது. 1978-79 முதல் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ-இந்திய மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அமலாக்கப்பட்டுள்ளது.

## மேல்நிலைப் பள்ளிக் கல்வி

1978-79ல் புதிதாகத் தொடங்கிய +2, அதாவது மேல்நிலைப் பள்ளிக் கல்வியைப் பள்ளிகளிலேயே படித்தல் வேண்டும் என்ற இவ்வரசின் சீரிய முடிவினால் எஸ்.எஸ்.எல்.சிக்கு மேலான உயர் கல்வி பயிலும் வசதி தற்பொழுது ஆயிரக்கணக்கான கிராமப் புற மையங்களிலும் கிட்டியுள்ளது.



முன்னர் புகுமுக வகுப்பு பயிலும் வசதி சுமார் 188 மையங்களில் தான் இருந்தது. இப்பொழுதோ மேல்நிலைப் பள்ளி வகுப்புகள், 1400க்கு மேற்பட்ட பள்ளிகளில் உள்ளன. இவற்றில் சுமார் 1000 மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்பாடங்கள் கற்றுத் தரப்படுகின்றன. மேல்நிலைப் பள்ளிகளில் 1982-83ல் பயின்று வந்த 2.92 இலட்சம் மாணவர்களில் 57,000 பேர் தொழிற்பாடங்களைப் பயின்று வந்தனர். (இந்தியா முழுவதிலும் மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற்கல்வி பயின்று வந்தவர்கள் எண்ணிக்கை 1982-83ல் 85,000 மட்டுமேயாகும்.) அனைத்து மாநிலங்களிலும் மேல்நிலைப் பள்ளித் தொழிற்பாட வகுப்புகளின் எண்ணிக்கையிலும் தரத்திலும் தமிழ்நாடு முன்னோடியாக இருக்கிறது.

கடந்த சில ஆண்டுகளில் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை மற்றும் ஆய்வுக்கூடக் கட்டடங்கள் கட்ட ரூ. 12 கோடி அளவிலும், ஆய்வுக்கூடத் தளவாடங்கள் வாங்க ரூ. 5 கோடி அளவிலும் ஆன பெருந்தொகைகளை இவ்வரசு செலவிட்டு அறிவியல் கல்வி வளர்ச்சிக்கு உதவியுள்ளது.

## பள்ளி ஆசிரியர்களுக்கான நலன்கள்

மனநிறைவு கொண்ட ஆசிரியர் சமுதாயத்தின் முழு ஒத்துழைப்புடன் தான் கல்வி சிறப்பாக அமைய முடியும் என்பதை அறிந்து ஆசிரியர்களுக்கு இவ்வரசு அண்மை ஆண்டுகளில் வழங்கியுள்ள முதன்மை வாய்ந்த நன்மைகளில் சில:

- ஆண்டுக்கு 10 நாட்கள் ஈட்டிய விடுப்பு.
- 20 ஆண்டுப் பணிக்குச் சிறப்பு நிலை.
- இளநிலை ஆசிரியர்கள் அனைவரும் படிப்படியாக இடைநிலை ஆசிரியர்களாக உயர்வு பெறவசதி.
- ஆசிரியர்கள் குறைகளை அவ்வப்பொழுது உடனடியாகத் தீர்க்க கல்வி மாவட்டம் வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவில் குழுக்கள்
- தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு முதலியவையாகும்.

## முதியோர் கல்வி

1981ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி தமிழ்நாட்டில் இருந்த 4.83 கோடி மக்களில் 2,21 கோடி பேர்களே எழுதப்படிக்கத் தெரிந்திருந்தனர். எழுத்தறிவற்றோர் எண்ணிக்கை 2.62 கோடியாகும். அவர்கள் 54 விழுக்காடு ஆகும் எழுத்தறிவற்றோருக்கு எழுத்தறிவிக்கும் பணிக்குக் கடந்த சில ஆண்டுகளாகத்தான் முதன்மை தரப்பட்டு வருகிறது 1976-77ல் முதியோர் கல்விக்கு ரூ. 11 இலட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. இப்பொழுதோ ஆண்டுக்கு ரூ. 3 கோடி அளவில் நிதி ஒதுக்கப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளில் 11 இலட்சம் பேருக்கு முதியோர் கல்வி அளிக்கப்பட்டது.

1983-84ல் செயல்படும் முதியோர் கல்வி மையங்கள் எண்ணிக்கை 15,400க்கு மேல் இருக்கும். முறையான பள்ளிகளில் பயில இயலாத மாணவ, மாணவியருக்காகக் கிராமப்புறங்களில் பள்ளி சாராக் கல்வி மையங்கள் 1000க்கு மேல் நடைபெற்று வருகின்றன. அவற்றில் 5-14 வயதுத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் ஆண்டுதோறும் 3000க்கு மேலானவர்கள் கல்வி பெற்று வருகின்றனர்.

முதியோர் கல்விப் பணியில் இவ்வரசு காட்டும் ஊக்கத்தை மெச்சி யுனெஸ்கோ நிறுவனம் இவ்வரசின் முதியோர் கல்வித் துறைக்கு 1982ஆம் ஆண்டுக்கான நடேஸ்டா குருப்ஸ்சாயா முதியோர் கல்வி விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது.

## கல்லூரிக் கல்வி-புதிய பல்கலைக் கழகங்கள்

தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை அண்மையாண்டுகளில் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்க சாதனையாகும். அண்ணா பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகிய நான்கும் இவ்வரசின் முனைப்பான முயற்சிகளின் பயனாக நிறுவப்பட்டவையாகும். கோடைக்கானலில் மகளிர் பல்கலைக்கழகம் இவ்வாண்டுஅமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்கவும்





நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கல்லூரிகளிலிருந்து 1978-79 முதல் புகுமுக வகுப்பு நீங்கிய பின்னர் கல்லூரிக் கல்வியின் தர உயர்வுக்குத் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தற்பொழுதுள்ள கலைக் கல்லூரிகள் 188 ஆகும். (1982-83ல் சிதம்பரத்தில் அரசு தொடங்கியுள்ள கலைக் கல்லூரியும் இவ்வெண்ணிக்கையில் அடங்கும்).

கோயம்புத்தூரில் ஒன்றும், திருச்சிராப்பள்ளியில் ஒன்றுமாக இவ்வரசு புதிதாகத் தொடங்கிய 2 சட்டக் கல்லூரிகள் உட்பட இப்பொழுது மொத்தம் 4 சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் யோசனைக்கேற்ப இம்மாநிலத்திலுள்ள சட்டக் கல்லூரிகளில் 1983-84 முதல் ஐந்தாண்டு (மேல்நிலைப் பள்ளிப் படிப்பில் தேறிய பின் 5 ஆண்டு) சட்டப்படிப்பு முறை புகுத்தப்பட இருக்கிறது

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலில் இடைவிடாத நாட்டம் செலுத்த வேண்டியதை வலியுறுத்துவதற்காகத் தலைமை செயலகக் கல்வித்துறையின் பெயர் 1982 மார்ச் மாதத்தில் ''கல்வி, அறிவியல் தொழில் நுட்பவியல் துறை'' என்று மாற்றியமைக்கப்பட்டது. ''அறிவியல் தொழில் நுட்பவியல் மாநிலக் கவுன்சில்'' ஒன்றை அமைக்க அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது.

தொழில் நுட்பக் கல்விக்காக அண்ணா பல்கலைக் கழகம் 1978 செப்டம்பரில் அமைக்கப்பட்டது. கடந்த 4 ஆண்டுகளில் பல் தொழில் பயிலகங்கள் (பாலிடெக்னிக்) 23, புதிதாகத்தொடங்கப்பட்டுள்ளன. 1981-82ல் திருநெல்வேலியில் புதிதாகப் பொறியியல் கல்லூரி ஒன்றும் தொடங்கப்பட்டது. திருச்சிராப்பள்ளி உணவுத் தொழில் கல்வியகம் ஒன்று 1981-82ல் தொடங்கியது. ஏற்கெனவே உள்ள தொழிற் கல்வி நிலையங்களிலும் தேவைக்கேற்ப பல்வேறு புதிய பட்டயப் படிப்புகளும், பட்டப் படிப்புகளும் தொடங்கப்பட்டுள்ளன.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலனுக்காக 1979 செப்டம்பரில் புதிதாக ஒரு துறை அமைக்கப்பட்டது. சென்னை, கோயம்புத்தூர், அண்ணாமலை நகர் ஆகிய மூன்று இடங்களில் விளையாட்டுப் பள்ளிகளும், கோயம்புத்தூரில் மாணவியர் விளையாட்டுப் பள்ளி ஒன்றும், மதுரை திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் விளையாட்டு விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. வரும்1983-84ஆம் ஆண்டில் விளையாட்டுப் பள்ளி மற்றும் விடுதி வசதிகளை மேல்நிலைப் பள்ளி வகுப்பு நிலைக்கும் விரிவாக்கக் கருதப்பட்டுள்ளது. ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, சென்னை மற்றும் மாருதி உடற் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றில் இவ்வசதி அளிக்கப்படும். மாநில விளையாட்டு நிலையம் ஒன்றையும் அதனுடன் இணைந்த முழு வளர்ச்சியுற்ற விளையாட்டு உயர்நிலைப் பள்ளி ஒன்றையும் அமைப்பதற்கான அடையாள நிதி ஒதுக்கீடு 1983-84ல் செய்யப்பட்டுள்ளது.

விளையாட்டில் ஆர்வம்மிக்க இளஞ்சிறார்களைப் பாலர் பள்ளி நிலையிலேயே தெரிந்தெடுத்து அவர்களுடைய விளையாட்டுத் திறனைப் பேணி வளர்க்கும் திட்டம் ஒன்றையும் விளையாட்டுத் துறை செயல்படுத்தி வருகிறது.

பள்ளிகளில் சாரண, சாரணியர் இயக்கத்தைத் தமிழக அரசு வெகுவாக ஊக்குவித்து வருகிறது. இந்தியா அனைத்திலும் உள்ள சாரண, சாரணியர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கினர் தமிழகத்தில் உள்ளனர். சாரண, சாரணியர் இயக்கத்தின் தலைசிறந்த விருது, தமிழக முதல்வருக்கு 1982ல் வழங்கப்பெற்றது. தேசிய பணித் திட்டம் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் மேல்நிலைப் பள்ளி வகுப்பு நிலையிலும் அமலாக்கப்படுகிறது. 1983-84ல் மேல்நிலைப் பள்ளி வகுப்பு மாணவர்கள் 25.000பேர் தேசியப் பணித்திட்டத்தில் பங்கு பெறுவார்கள்.

நூலக வசதிகள் சிறந்த முறையில் விரிவாக்கப்பட்டு வருகின்றன. மாவட்ட நூலகக் குழுக்களின் பணியாளர்கள் 1982-83 முதல் அரசு ஊழியர்களாக ஏற்கப்பட்டுள்ளனர். நூலகங்களுக்கு ஆங்காங்கு கட்டட வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

மாவட்டத் தலைமையிடம் ஒவ்வொன்றிலும் அருங்காட்சியகம் ஒன்றை அமைக்கும் திட்டம் ஒன்றை இவ்வரசு தொடங்கி இதுவரை சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டத் தலைமையிடங்களில் அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன வேலூர், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மாவட்ட அருங்காட்சியகங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சென்னையில் ரூ. 29 இலட்சம் செலவில் குழந்தைகள் அருங்காட்சியகமும் ரூ. 25 இலட்சம் செலவில் தேசிய கலைக்கூடத்திற்குப் புதிய கட்டடமும் கட்டும் பணிகள் நடந்துவருகின்றன.

கடல்கொண்ட பூம்புகார் நகரின் சின்னங்கள் குறித்து காவேரிபூம்பட்டினத்தை ஒட்டிய கடற்கரைப் பகுதியில் கடல் படுகையில் ஆய்வு செய்யும் பணியை மாநிலத் தொல்பொருள் ஆய்வுத் துறை மேற்கொண்டுள்ளது.

### தமிழ் வளர்ச்சி

தமிழ் வளர்ச்சிக்கான பல்வேறு புதிய திட்டங்களை இவ்வரசு முனைப்புடன் மேற்கொண்டுள்ளது. 15.9.'81ல் தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது. உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கும் பணி நடந்து வருகிறது. சிறந்த தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்கும் சிறந்த பிற மொழி நூல்களைத் தமிழில் வெளியிடுவதற்கும் ஆன மொழி பெயர்ப்புத்திட்டம்;பிறமாநிலங்களிலும்தமிழ்க் கல்வியையும் தமிழ் ஆராய்ச்சியையும் ஊக்குவிப்பதற்காக மானியம் தரும் திட்டம்; வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம் தரும் திட்டம்; ஓலைச் சுவடிகளைச் சேகரித்துப் பேணிப் பாதுகாத்து அச்சிட்டு வெளியிடும் திட்டம் ஆகியவை செவ்வனே நடைபெற்று வருகின்றன.





# வேளாண்துறையின் விரிவாக்கப்பணிகள்

கடந்த மூன்றாண்டுக் காலமாக, தமிழகம் தொடர்ந்து வறட்சியைச் சந்தித்து வருவது அனைவரும் அறிந்ததே. மேலும், கடந்த ஆண்டு, காவிரி, வைகை, பெரியாறு, பாபநாசம் போன்ற நீர்த்தேக்கங்களில் பாசன நீர் குறைந்து சாகுபடி பரப்பும், உற்பத்தியும், வெகுவாகப் பாதித்தது. இருப்பினும் தமிழகம் வறுமையின் எல்லையைச் சந்திக்காத அளவு ஏக்கர் உற்பத்தித் திறனில் கணிசமான அளவு முன்னேற்றம் அடைந்து வந்திருப்பது ஒரு சாதனையாகும்.

### இடுபொருள் விநியோகம்

கீழ்குறிப்பிட்டுள்ள அளவில் இடு பொருட்கள் விநியோகிக்கப்பட்டன.

### வறட்சி நிவாரணப் பணி

வானம் பொய்த்திட்ட 1980-81ஆம் ஆண்டின் துயர் துடைக்க வேளாண்துறை, 2000 டன்கள் நெல் விதைகள், மற்றும் 100 டன்கள் சிறுதானிய விதைகள் கொள்முதல் செய்தது. இவையன்றி வேளாண் கிடங்குகளில் இருந்த பயிறு மற்றும் பருத்தி விதைகளை, சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கியது. இவ்வகையில் மானியத் தொகையாக 39.80 இலட்சம் ரூபாய் அரசு செலவிட்டிருக்கிறது.







### பயிற்சி வழித் தொடர்புத் திட்டம்

வேளாண் துறையில் புதிய புதிய ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை உடனுக்குடன் வேளாண் பெருமக்களுக்குத் தாமதமின்றிச் சென்றடைந்து பயன்தரத்தக்க வகையில் வேளாண் விரிவாக்கப் பணிகள் திருத்தி அமைக்கப்பட்டுப் பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் என்ற புதிய திட்டம் உலக வங்கியின் உதவியோடு 36.48 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டம் இரு கட்டங்களில் தமிழகத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. முதல் கட்டமாக 1981 ஆம் ஆண்டிலிருந்து எட்டு மாவட்டங்களிலும், இரண்டாவது கட்டமாக 1982-ஆம் ஆண்டிலிருந்து ஏழு மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் விரிவாக்கப்பணியாளர்களும், உழவர் பெருமக்களும் மேற்கொண்ட தீவிர முயற்சியின் பலனால் ஐ.ஆர். 50. நெல்லின் சராசரி மகசூல் ஹெக்டருக்கு 7000 கிலோவாகவும், சி.எஸ்.எச்.5 சோளம் பயிரின் சராசரி மகசூல் ஹெக்டேருக்கு 2,000 கிலோவாகவும், கோவை மாவட்டத்தில் அடைய முடிந்தது, ஒரு பெரும் சாதனையே. இதுபோன்று இதர பயிர்களின் உற்பத்தித் திறனை இதர மாவட்டங்களில் அதிகரிக்க இத்திட்டத்தின் கீழ் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு வறட்சிக் காலத்திலும் உற்பத்திப் பாதிப்பைப் பெருமளவு தவிர்க்க முடிந்தது.

### புதிய இருபது அம்சத் திட்டம்

இந்தியப் பிரதமரின் இத்திட்டத்தின் கீழ் மானாவாரி சாகுபடி நிலங்களில் 212 சிறிய நீர்ப்பிடிப்புப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 81,592 ஹெக்டேர் பரப்பளவில் முன்னேற்ற மானாவாரிச் சாகுபடி முறைகள் கையாளப்பட்டன.

இதுவன்றி, 3.24 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் மானாவாரிச் சாகுபடியின் ஒரு சில முன்னேற்ற உத்திகள் கையாளப்பட்டன. மானாவாரிச் சாகுபடி நிலங்களில், வரிசையில் விதைத்து உரமிடுதலை ஊக்குவிக்கும் பொருட்டு விதை மற்றும் உரமிடும் கருவிகள் 443 விநியோகிக்கப்பட்டன.

மேலும், ஆதிதிராவிட மக்களுக்கு விதை மற்றும் பூச்சி மருந்துகள் 25 விழுக்காடு மானிய விலையில் வழங்கப்பட்டு 1981-82ஆம் ஆண்டில் 8.74 இலட்சம் ரூபாயும், 1982-83-ஆம் ஆண்டில் 28.52 இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டது.











# வேளாண்மைப் பொருட்களின் வியத்தகு விற்பனை

**வே**ளாண்மை விற்பனைத் துறை சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு 1977 அக்டோபர் 14ல் ஆரம்பிக்கப்பட்டது. வேளாண்மை விளைபொருட்களுக்குத் தகுந்த விலை கிடைக்கவும், நல்ல தரமான பொருட்கள் விற்பனைக்கு வரவும், விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் விளைபொருட்களின் விலை விவரம் அவ்வப்போது தெரிவிப்பதும் இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

மேலும் இத்துறை அக்மார்க் ஆய்வுக் கூடங்கள், தரம் பிரிப்பு மையங்கள் மூலமாகக் கலப்படமற்ற - சுத்தமான பொருட்களை விற்பனை செய்ய உதவுகிறது. பருத்திச் சான்றுரையும் சட்ட அமலுமான திட்டமும் இத்துறையின் கீழ் செயல்படுகின்றன. இதைத் தவிர, தரம்பிரிப்புப் பயிற்சியை இத்துறை நடத்தி வருகிறது.

### ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்:

1980-'81ல் 208 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இருந்தன. 1982-'83ல் 256 ஆக இது உயர்ந்துள்ளது. 4.22 இலட்சம் டன்கள் 1980-81ஆம் ஆண்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் வழியாக விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் 1982-83ல் 4.79 இலட்சம் டன்னாக அதிகரித்துள்ளன நிலக்கடலை, நெல், பருத்தி கரும்பு, வெல்லம் ஆகியவை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் விற்பனை செய்யப்படும் முக்கிய விளை பொருட்களாகும். 1980-'81ல் விற்பனைக் குழுக்களின் வருமானம் ரூ.429 லட்சம். 1982-83ல் இதன் வருமானம் ரூ.466 இலட்சமாகும்.

### சேமிப்புக் கிட்டங்கிகள்:

ரூபாய் 89 இலட்சம் மைய அரசு மாநில அரசு மானியமாக 89 சேமிப்புக்கிட்டங்கி கட்டுவதற்கு வழங்கியுள்ளது. ஒவ்வொரு கிட்டங்கியின் உத்தேச மதிப்பு ரூ.4 இலட்சமாகும். இதில் 25 சதவிகிதம் மைய அரசும், 25 சதவிகிதம் மாநில அரசும், மீதி 50 சதவிகிதம் விற்பனைக் குழுக்களும் ஏற்கும். ஆறாவது 5 ஆண்டுத்திட்டத்தில் மொத்தம் 109 கிட்டங்கிகள் கட்டத் தீர்மானித்துள்ளது. இக்கிட்டங்கிகள் மூலம் தானியங்கள் கெட்டுப் போகாமல் நவீன வசதிகளுடன் பாதுகாத்து இருப்பு வைக்கலாம். விலை குறைந்த சமயங்களில் இருப்புவைத்து, தகுந்த விலை பெறக்கூடிய சமயங்களில் விற்பனை செய்யவும் வசதி செய்யப்படுகிறது.

### தரம் பிரிப்பு:

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வேளாண்மை விளை பொருட்கள் தரம் வாரியாகப் பிரிக்கப்படுவதால் தரத்திற்குத் தகுந்த மாதிரி விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கின்றது. வாங்குவோருக்குத் தரமான பொருட்கள் விலைக்குத் தகுந்த மாதிரி கிடைக்கின்றன. இப்பணியில் தரம்பிரிப்பு மையங்கள் ஈடுபட்டுள்ளன. இப்பணியின் முக்கியத்துவத்தைக் கருதி 1980-81க்கு முன்பு 50 ஆக இருந்த மையங்கள் 1980-81 ல் 75 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன. நிலக்கடலை, எள், வெல்லம், மஞ்சள், உருளைக்கிழங்கு, நெல், முந்திரி, மிளகாய், மல்லி, சிறுதானியங்கள், பருத்தி, பயிறுவகைகள்

இப்பணி தற்சமயம் 36 அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் மூலம் நிறைவேற்றப்படுகிறது. இதைத் தவிர திருச்சியில் ஒரு முதன்மை ஆய்வுக்கூடமும், செயல்படுகிறது. இவ்வாய்வுக் கூடங்களில் 12.98 லட்சம் குவிண்டால் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய், தேன், நெய், மசாலாப்பொடிகள், அரிசி, பயிறு வகைகள், பருத்திவிதை எண்ணெய் ஆகியவை கடந்த மூன்று ஆண்டுகளாக 'அக்மார்க்' மூலம் தரம் பிரிக்கப்பட்டுள்ளன.

ஆகியவை தரம் பிரிக்கப்படுகின்றன.

1980-1981ல் 2 லட்சம் டன்
1981-1982ல் 2.50 லட்சம் டன்
1982-1983ல் 2.60 லட்சம் டன்

### பருத்தி தரம் பிரித்தல்:

பருத்திக்கென்று தனியாகத் தரம்பிரிப்பு மையங்கள் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பெருந்துறை, சத்தியமங்கலம், புதூர், கோவில்பட்டி, சங்கரன் கோயில், தேனி, திருப்பூர், இராஜபாளையம், மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. பருத்தி ஒழுங்கு

# கடன்பட்டோர் கவலை தீர்ப்போம்

சமுதாயத்தின் நலிந்த பிரிவினர் கடன் சுமையால் வாடுவதை அரசு உணர்ந்து அவர்களின் கடன் சுமையிலிருந்து அவர்களை மீட்கும் நோக்கத்தில் பல்வேறு கடன் நிவாரணச் சட்டங்களை இயற்றி அமல் படுத்தி வருகிறது.

அடகுக் கடைக்காரர்கள் மற்றும் வட்டிக்குப் பணம் கொடுப்பவர்கள், ஏழைகளைச் சுரண்டும் நோக்கத்தில் கடன்கள்மீது அநியாய வட்டி வசூலித்தும் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறினால் அடகுப் பொருட்களை விற்றும், அடமானச் சொத்தினை அபகரிப்பதுமாகக் கொடுமை புரிந்துவந்தனர். அத்தகையோரின் கொடுமைகளிலிருந்து ஏழைகளையும் அவர்களது அடகு மற்றும் அடமானச் சொத்துக்களையும் காப்பாற்ற 1980ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 13/1980) இயற்றப்பட்டது. இச்சட்டம் 19.4.1980 ஆம் நாளன்று அமலுக்கு வந்தது.

இந்தச் சட்டத்தின்படி ஆண்டு குடும்ப வருமானம் ரூ. 4800க்கு மேற்படாதவர்கள், அவர்கள் கிராமப்புறத்தில் இருந்தாலும் சரி அல்லது நகர்ப்புறத்தில் இருந்தாலும் சரி, அவர்கள் 1.1.1980 நாளுக்கு முன்னர் தனியாரிடம் வாங்கிய கடன்கள் அனைத்தும் தள்ளுபடிச் செய்யப்படும். இச்சட்டத்தின் கீழ் 31.3.1983 நாள் முடிய 13,892 நபர்கள் ரூ.3,19,43,879 அளவுக்குப் பயன் அடைந்துள்ளனர்.

இதேபோன்று 1.1.1980ஆம் நாளும் அதற்குப் பிறகும் வாங்கிய கடன்களிலிருந்தும் நிவாரணம் அளிக்கும் நோக்கத்தில் 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 50/1982) இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் நிவாரணம் பெற ஆண்டுக் குடும்ப வருமானம் ரூ.4800க்கு மேற்படக்கூடாது. இச்சட்டம் 24.8.1982ஆம் நாளன்று அமலுக்கு வந்தது. இச்சட்டம் 1.1.1980 முதல் 24.8.1982 நாள்வரை வாங்கிய கடன்களைத் தள்ளுபடிச் செய்ய வகை செய்கிறது. இச்சட்டத்தின் கீழ் 31.3.1983 நாள் முடிய 48 நபர்கள் ரூ. 1,48,970 அளவுக்குப் பயன் அடைந்துள்ளனர்.

---

முறை விற்பனைக் கூடங்களிலும், உற்பத்தி செய்யப்படும் இடங்களிலும் தரம் பிரிக்கப்பட்டு, தரம் வாரியான விலைபெற இம்மையங்கள் உதவுகின்றன. இதற்கென்றுதனியாக எவ்விதக் கட்டணமும் பெறப்படுவதில்லை.

**தரம் பிரிப்புப் பயிற்சி:**

தரம் பிரித்தலின் அவசியம் பற்றியும் நுணுக்கங்கள் பற்றியும் வேளாண்மை விற்பனைத் துறையின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் உதவி வேளாண்மை அலுவலர், மேற்பார்வையாளர் ஆகியோருக்கு ஆண்டிற்கு 60 பேருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது மூன்று மாதப் பயிற்சியாகும் இதுவரை 436 பேருக்குப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**பருத்திச் சான்றுரையும் சட்ட அமலும்:**

வேளாண்மை விற்பனைத் துறையின் மூலம் பருத்தி போக்குவரத்துச் சட்டம், பருத்திக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் பருத்தி சம்பந்தமான அனைத்துச் சட்டங்களும் அமல்படுத்தப் படுகின்றன.

335 அரவை ஆலை உரிமங்களும், 17 பஞ்சு அழுத்தும் ஆலை உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளன. உயர்ரகப் பருத்திசான்றுரைத் திட்டத்தின் கீழ் 1982-83 ஆம் ஆண்டில் 900 ஏக்கர் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**விற்பனைக் கூடங்களில் வளர்ச்சிக்கு மத்திய மானியம்:**

தமிழ்நாட்டில் உள்ள விற்பனைக் கூடங்களின் வளர்ச்சிக்காக 1980-81 மற்றும் 1981-'82 ஆம் ஆண்டுகளில் ரூ.18.50 இலட்சம் மத்திய மானியமாகப் பெறப்பட்டுள்ளது.

**உலக வங்கி உதவி:**

வாய்ப்புள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் வளர்ச்சிக்காக 127.76 கோடி ரூபாய் நிதி உதவி உலக வங்கியிடமிருந்து கோரி மத்திய அரசிற்கு ஒரு திட்டம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்மேல் மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.



# கோடி நன்மை தரும் கூட்டுறவு





சிக்கனம், சுய உதவி மற்றும் ஒருவருக்கொருவர் உதவுதல் என்னும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, விவசாயம், தொழில், உற்பத்தி முறைகள் வாணிபம், வாழ்க்கைத்தரம் ஆகியவற்றில் முன்னேற்றம் காணும் நோக்கத்துடன் தமிழகத்தில் தழைத்து வளர்ந்து வரும் கூட்டுறவு இயக்கம் கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் முக்கியமானதாகும். பெரிதும் விரிவானதுமான பங்கைத் தொடர்ந்து வகித்து வருகிறது.

மாநிலத்திலுள்ள பலவகைக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களின் பல்வகைப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளிலும், குறிப்பாக விவசாயிகளுக்குத் தேவையான கடன்களையும் விவசாய இடுபொருட்களையும் வழங்கியும் விவசாய விளைபொருட்களை விற்பனை செய்தும், நுகர்வோரின் நலன்களைப் பாதுகாத்தும் மக்களுக்கு உறுதுணையாக இருந்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் அரிய பணி ஆற்றி வருகின்றன.



**விவசாயிகளுக்கு உதவி**

தமிழக விவசாயிகளின் நலன்களைப் பேணுவதில் சுமார் மூன்று கிராமங்களுக்கு ஒரு சங்கம் என்ற முறையில் சுமார் 4,700 கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும், வட்ட மற்றும் வட்டார அளவிலுமான 182 பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகளும், தம்மை ஈடுபடுத்தியுள்ளன.

ஆதிதிராவிடர் வகுப்புகளைச் சேர்ந்த விவசாயிகளைப் பெருமளவில் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டுவரும் நோக்கத்துடன், அவ்வகை விவசாயிகளின் குடும்பம் ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொருவரை விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ப்பதன் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 60,000 குடும்பங்கள் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இவ்வாறு உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டவர்களுக்கு அவர்கள் சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்காக, ஒவ்வொருவருக்கும் 100 ரூபாய் வீதம் 60 இலட்சம் ரூபாயை மானியமாக தமிழக அரசு வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டில் மேலும் 20,000 இவ்வகைக் குடும்பங்களும், அடுத்த ஆண்டில் இன்னும் 20,000 இவ்வகைக் குடும்பங்களும் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டுவரப்படும்.

**விவசாயக் கடன்களை வழங்குதல்**

கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், பயிர்ச் செலவிற்காகவும், ஆடு, பால்மாடு, கோழி வளர்த்தல் போன்ற, துணைத் தொழில்களை ஏற்று நடத்துவதற்காகவும் விவசாயிகளுக்குக் கடன்களை வழங்கி வருகின்றன. குத்தகைக்குப் பயிரிடுவோருக்குக் கூட பயிர்க் கடன்களும், நிலமில்லாத பண்ணைத் தொழிலாளர்களுக்குக் கூட



துணைத் தொழில் கடன்களும் இச்சங்கங்களால் வழங்கப்படுகின்றன. தேவைக்கேற்ப கடன்கள் தனி ஒருவருக்கு 30,000 ரூபாய் வரையில் வழங்கப்படுகின்றன. இதில் தனி நபர் ஜாமீன் பேரில் 25,000 ரூபாய் வரையில் வழங்கப்படுகின்றன.

சிறு விவசாயிகளுக்கு 11½ சதவீத வட்டிக்கும், மற்றவர்களுக்கு 12½ சதவீத வட்டிக்கும் இச்சங்கங்கள் கடன் வழங்குகின்றன. பயிர்ச் செலவிற்காகக் கொடுக்கப்படும் குறுகிய காலக் கடன்கள் அறுவடையான விளை பொருள் விற்பனைத் தொகையிலிருந்து திருப்பித் தரப்பட வேண்டும். துணைத் தொழில்களுக்காகப் பெறப்படும் மத்திய காலக் கடன்கள் மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் திருப்பித்தரப்பட வேண்டும்.

பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் நில மேம்பாட்டிற்காகவும், தென்னை, திராட்சை, மா, காப்பி, தேயிலை, முந்திரி, சவுக்கு, முசுக்கொட்டை மற்றும் மல்லிகை போன்ற தோட்டப் பயிர்களைச் சாகுபடி செய்தல், பால் பண்ணை, ஆடு வளர்த்தல், கோழிப் பண்ணை, இறால் வளர்த்தல் போன்ற துணைத் தொழில்களில் ஈடுபடுதல் முதலிய விவசாயத்தை ஒட்டிய இதர பல் வகைக் காரணங்களுக்காகவும், 7 முதல் 15 ஆண்டுகளுக்குள் திருப்பித் தரக்கூடிய நீண்ட காலக் கடன்களை வழங்கி வருகின்றன.

கடன்களை வழங்கியதில் ஆரம்பத்தில் தொய்வு இருந்ததற்கான காரணம், கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் விவசாயிகளின் சங்கங்கள் திட்டமிட்டு கடுமையாக எதிர்த்து வந்ததால், உறுப்பினர்களின் தவணை தவறிய கடன்கள் பெருமளவில் அதிகரித்தது ஆகும். மத்திய காலக் கடன்களையும், நீண்ட காலக் கடன்களையும் வழங்கியதில் கடந்த இரண்டு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த முன்னேற்றம் காரணமாக விவசாயிகள் குறிப்பாக நலிந்த பிரிவினர் பால்பண்ணை, ஆடுவளர்ப்பு, கோழி வளர்த்தல் போன்ற துணைத் தொழில்களில் ஈடுபட்டு, பெருமளவில் தங்களது வருவாயை அதிகரித்துக் கொள்ள இயலும்.

நடப்பு ஆண்டில் குறுகிய காலக் கடன்கள் மற்றும் மத்திய காலக் கடன்களை 112 கோடி ரூபாய் அளவிற்கும், நீண்ட காலக் கடன்களை 15 கோடி ரூபாய் அளவிற்கும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தேவையான குறுகிய மற்றும் மத்திய காலக் கடன்களை வழங்குவதற்கு ஏதுவாகும் பொருட்டு கடன் கூட்டுறவுச் சங்கங்கள் தமது உள்நிதி வசதிகளைப் பெருக்குவதில் தொடர்ந்து முன்னேற்றம் கண்டுள்ளன. இச்சங்கங்களிடம் 1979-80 ஆண்டு இறுதியில் 312.92 கோடி ரூபாய் என்ற அளவில் நிலுவை நின்ற வைப்புத் தொகைகள், ஆண்டுக்கு ஆண்டு கணிசமாகப் பெருகி, 1982-83 ஆம் ஆண்டு இறுதியில் 438.55 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்து, கடந்த மூன்று ஆண்டுகளில் 40 சதவீதம் பெருக்கத்தை அடைந்துள்ளன.

### கடன்களில் நலிந்த பிரிவினரின் பங்கை அதிகரித்தல்

கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வழங்கும் விவசாயக் கடன்களில் கணிசமான பகுதியை நலிந்த பிரிவினருக்குத் தருவதில் தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. இச்சங்கங்கள் வழங்கிய குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களில் 49 சதவீதம் அளவே 1979-80 ஆம் ஆண்டு இறுதியில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டிருந்தது.

1982-83 ஆம் ஆண்டு இறுதியில் நலிந்த பிரிவினரின் பங்கு 64 சதவீதம் ஆக உயர்த்தப்பட்டது. விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி தேசிய வங்கியின் நியதிப்படிகுறுகிய காலக் கடன்களில் 20 சதவீதத்திற்குக் குறையாமல் நலிந்த பிரிவினருக்குக் கடன்கள் வழங்கப்பட வேண்டுமென்றிருக்க, தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய குறுகிய காலக் கடன்களில் 56 சதவீதம் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்படுகிறது. மத்திய காலக் கடன்களில் 95 சதவீதம் அளவிற்கு நலிந்த பிரிவினருக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இதிலிருந்து நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்தில் இச்சங்கங்கள் கொண்டுள்ள அக்கறை நன்கு புலனாகும்.

### விவசாயிகளின் கடன் சுமையைக் குறைத்தது

விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கும் நோக்கத்துடன் தமிழக அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் வட்டி தள்ளுபடி செய்தல் அல்லது திருப்பித் தருதல், சிறு விவசாயி



களிடம் நிலுவை நின்ற மத்திய காலக் கடன்களாக மாற்றியமைக்கப்பட்ட அல்லது தவணை நீடித்துத் தரப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்தல் முதலியவற்றுக்காக 96 கோடி ரூபாய் அளவிற்கு நிதி உதவி அளித்துள்ளது. அன்றியும், தவணை தவறாத கடன்களை ஈடு கட்டுவதில் உள்ள குறைவை நீக்குவதற்காக அல்லது தவணைத்தேதியில் செலுத்தத் தவறிய தொகையைச் செலுத்துவதற்காக மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு 42 கோடி ரூபாயும், நீண்ட காலக் கடன்களைத் தள்ளி வைத்ததினால் ஏற்பட்ட நிதி நெருக்கடியை சமாளிப்பதற்காக தமிழ்நாடு கூட்டுறவு மாநில வங்கிக்கு 38 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 80 கோடி ரூபாய் அளவிற்கு அரசு நிதி உதவி செய்துள்ளது.

குறித்த காலத்தில் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் கடன்தாரர்களை ஊக்குவிக்கும் வகையில் தமது குறுகிய காலக் கடன்களையும், மத்திய காலக் கடன் தவணைகளையும் குறிப்பிட்ட நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தும் சிறு விவசாயிகளுக்குக் கடந்த இரண்டாண்டுகளாக அரசு 2 சதவீத வட்டி தள்ளுபடி செய்து சங்கங்களுக்கு மானியம் வழங்கி வருகிறது.

### வறட்சி நிவாரண நடவடிக்கைகள் எடுத்தல்

மாநிலத்தில் தற்போது நிலவி வரும் வறட்சி நிலை காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 33 கோடி ரூபாய் அளவிற்குக் குறுகிய காலக் கடன்களை மத்திய காலக்கடன்களாக மாற்றியமைக்கவும், நீண்ட காலக் கடன் தவணைகள் திருப்பிச் செலுத்தப்படுவதை 7 கோடி ரூபாய் அளவிற்குத் தள்ளிப் போடவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் பயிர் சாகுபடிக்காக 5,000 குழாய்க் கிணறுகள் அமைக்க




7½ கோடி ரூபாய் அளவிற்கு அரசு நிதி உதவியுடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் தனியார் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகக் கடன்கள் வழங்க அரசு 5கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

### பயிர்க் காப்புறுதித் திட்டம்

போர், அணு சம்பந்தப்பட்ட இடர்கள் தவிர வேறு எவ்வகையில் பயிர் பாதிக்கப்பட்டாலும், விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்டும் வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் நெல் பயிருக்கான பயிர்க் காப்புறுதித் திட்டத்தைத் தேர்ந்தெடுத்த வட்டங்களில் நிறைவேற்றி வருகின்றன. ஒரு விவசாயி காப்புறுதி செய்து கொள்ளக்கூடிய அதிக அளவுத் தொகை 5,000 ரூபாய் ஆகும். கடந்த இரண்டாண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் சுமார் 6 இலட்சம் ரூபாய் அளவிற்கு இழப்பீட்டுத் தொகை 4,582 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

1979-80ம் ஆண்டில் 25.82 கோடிரூபாய் மதிப்பிற்கு இரசாயன உரங்கள் விற்கப்பட்டிருக்க, 1982-83 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களில் 38.05 கோடி ரூபாய் அளவிற்கு இரசாயன உரங்கள் விநியோகிக்கப்பட்டன. விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு, கடந்த இரண்டாண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்கள், சிலவகை உரங்களின் விற்பனையில் மூட்டை ஒன்றுக்கு மூன்று முதல் நான்கு ரூபாய் வரையில் தள்ளுபடி அளித்தன. இவ் வகையில் 1981-82 ஆம் ஆண்டில் 19 கோடி ரூபாய் மதிப்புள்ள உரங்கள் விற்கப்பட்டு , சுமார் 4,50,000 விவசாயிகளுக்கு 50 இலட்சம் ரூபாய் அளவிற்கும், 1982-83 ஆம் ஆண்டில் 12 கோடி ரூபாய் மதிப்புள்ள உரங்கள் விற்கப்பட்டு, சுமார் 2,60,000 விவசாயிகளுக்கு 34 இலட்சம் ரூபாய் அளவிற்கும் தள்ளுபடி வழங்கப்பட்டது. நடப்பாண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 50 கோடி ரூபாய் அளவிற்கு இரசாயன உரங்களை விநியோகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள 115 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தம் உறுப்பினர்களின் விவசாய விளை பொருட்களை விற்பனை செய்வதில் அவர்களுக்குத் தொடர்ந்து உதவி செய்து, அதன் வாயிலாக அவர்கள் நியாயமான வருமானம் பெறுவதில் அவர்களுக்குத் துணை புரிகின்றன.

நடப்பு ஆண்டில் சுமார் 115 கோடி ரூபாய் அளவிற்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த மூன்றாண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 1½ கோடி ரூபாய் மதிப்புள்ள எண்ணெய் பிழிந்த மணிலாப் பிண்ணாக்கு, பருத்தி ஆகியவற்றைச் சிங்கப்பூருக்கும், சோவியத் யூனியனுக்கும் ஏற்றுமதி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகமெங்கும் கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் நகையீட்டின் பேரில் குடும்பச் செலவிற்காகக் கடன்களை வழங்கி வருகின்றன. சவரன் ஒன்றுக்கு 800 ரூபாய் வீதம் நபர் ஒருவருக்கு 5,000 ரூபாய்க்கு மேற்படாமல் இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்களின் பேரில் வசூலிக்கப்படும் வட்டி 18.2.81ஆம் தேதியிலிருந்து 15 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டிலும் நகைக் கடன்கள் தொடர்ந்து 160 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்படும்.

தமிழகத்தில் கடந்த இரண்டாண்டுக் காலமாக நலிந்த பிரிவினருக்குச் சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களை மிகக் குறைந்த வட்டிக்கு, அதாவது 4 சதவீத வட்டிக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன்களை வழங்கி வருகின்றன. சாதாரண வட்டிக்கும் இச்சலுகை வட்டிக்கும் உள்ள வித்தியாசத்தை அரசு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியமாக வழங்குகிறது. ஆண்டு வருவாய் கிராமப் புறங்களில் 2,500 ரூபாய்க்கும், ஓரளவு நகர்ப்புறங்களிலும், நகரங்களிலும் 3,000 ரூபாய்க்கும் அதிகமாகாமல் உள்ளவர்களுக்கு இக்கடன்கள் நபர் ஒன்றுக்கு 7,000 ரூபாய் வரையில் வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்கள் 1982-83ல் சுமார் 107 இலட்சம் ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டன.

நகர்ப்புற மக்களுக்காகவும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள மக்களுக்காகவும் பணியாற்றி வரும் நகரக் கூட்டுறவு வங்கிகள் குறுகிய காலக் கடன்களையும் மத்தியக் காலக் கடன்களையும் ஆண்டொன்றுக்குச் சுமார் 130 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கி வருவதுடன் வைப்புத் தொகையைப் பெருக்குவதிலும், பெரும் ஆர்வம் காட்டி வருகின்றன. அன்றியும், மத்திய மாநில அரசுகள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் அலுவலகங்களில் பணியாற்றுபவர்கள், ஆலைத் தொழிலாளர்கள் போன்றோருக்கான பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தம் உறுப்பினர்களுக்கு ஆண்டொன்றுக்குச் சுமார் 185 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கி வருவதுடன், அவர்களிடமிருந்து மாதா மாதம் சேமிப்புத் தொகைகளைத் திரட்டி வருவதில் நல்ல முன்னேற்றம் கண்டு வந்துள்ளன.

மாநிலம் முழுவதும் பரவியுள்ள கூட்டுறவுப் பண்டகச் சாலைகள் தமிழக மக்களுக்குத் தரமான நுகர்பொருட்களை நியாயமான விலைக்கு விநியோகித்து வருகின்றன. இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில் தான் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் முதன்மையில் உள்ளது என்பதும், அதை அடுத்து வரும் மராட்டிய மாநிலத்தில் முன்னேற்றத்தைப்போல் இருமடங்கு முன்னேற்றம் தமிழகத்தில் உள்ளது என்பதும் கவனிக்கத்தக்கன.

தமிழகக் கிராமங்களில் இன்றியமையாப் பொருட்கள் தாராளமாகக் கிடைக்கச் செய்யும் பொருட்டு, ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு கடை என்ற அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்கள், தமிழகம் முழுவதும் கிராமங்களில் 11,159 கடைகளை நடத்தி கிராம மக்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் தங்குதடையின்றிக் கிடைக்கச் செய்கின்றன.

நடப்பு ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களின் நுகர்பொருள் சில்லரை விற்பனையை 250 கோடி ரூபாய்க்கு அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாணவ சமுதாயத்திற்குச் சேவை புரியும் நோக்கத்துடன் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 5 கோடி ரூபாய் அளவிற்கு நாட்டுடைமை ஆக்கப்பட்ட பாட நூல்களையும், சுமார் 4 கோடி ரூபாய் அளவிற்குக் குறிப்பேடுகளையும் விற்பனை செய்து வருகின்றன.

மலைவாழ் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் சீரிய நோக்குடன் கடந்த மூன்றாண்டுகளில் துவக்கப்பட்ட 4 சங்கங்கள் உட்பட 13 பெரும்பலநோக்குக் (லாம்ப்) கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலத்தில் தொடர்ந்து அரும்பாடுபட்டுப் பணியாற்றி வருகின்றன. இவை அரசு மானியத்துடன் 4 சதவீத குறைந்த வட்டிக்குப் பயிர்ச் செலவிற்காகவும் இதர உற்பத்திக் காரியங்களுக்காகவும் கடன்களை வழங்கியும், விவசாய விளை பொருட்களையும் சிறு காடுபடு பொருட்களையும் விற்பனை செய்தும், தேவையான விவசாய இடுபொருட்களையும் நுகர் பொருட்களையும் விநியோகித்தும் மலை வாழ் மக்களுக்கு உறுதுணையாக விளங்குகின்றன.

சேலம் மாவட்டத்தில் பச்சைமலையிலும், வடஆர்க்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் உள்ள நம்பியம்பட்டிலும் மேலும் இரண்டு பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட உள்ளன.

சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநருக்காக திண்டுக்கல்லில் ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டு அரசிடமிருந்து மானியமாகவும் வட்டியில்லாக் கடனாகவும் 1.50 இலட்சம் ரூபாய் நிதி உதவியுடன் 100 சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கப்பட்டுள்ளன. சாதாரண சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களின் சிரமத்தைக் குறைக்கும் நோக்கத்துடன்



சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்த உதவும் பொருட்டு, அண்மையில் இரண்டு மோட்டார் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளன. இவை சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களுக்கு, மோட்டார் பொருத்தும் செலவில் 25 சதவீத அளவிற்கு அரசு மானியம் வழங்கி உதவுகின்றது. சென்ற ஆண்டில் இவ்வகையில் 109 ஓட்டுநர்களுக்காக 1.05 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

## புதிய கூட்டுறவுச் சட்டம்

கூட்டுறவு இயக்கத்தின் சீரிய வளர்ச்சிக்காக, கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய தற்போதைய சட்டங்களுக்குப் பதிலாக ஒரு புதிய கூட்டுறவுச் சட்டத்தை அரசு கொண்டு வந்துள்ளது.

தமிழகத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சமூக சேவையிலும், தம்மை ஈடுபடுத்தியுள்ளன.



# 1-7-'83ல் பதவி ஏற்கும் புதிய அமைச்சர்கள் வாழ்க்கைக் குறிப்புகள்



### திரு. எஸ். ஆர். இராதா

9.8.1934ல் பிறந்த திரு எஸ். ஆர். இராதா, மெட்ரிகுலேஷன் படித்தவர். 1946-ஆம் ஆண்டு திராவிடர் கழக மாணவர் இயக்கத்தில் பங்கு பெற்றார்.

1949-ல் தி.மு.க.வில் இணைந்தார். 1972-ல் அண்ணா தி.மு.க.வில் இணைந்தார். அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் தலைமைத் தொழிற்சங்க அமைப்பாளராகவும், நெசவாளர்பிரிவுச்செயலாளராகவும் இருந்தார் போராட்டங்களில் ஈடுபட்டு பலமுறை சிறைசென்றுள்ளார்

கும்பகோணம் நகராட்சி மன்ற உறுப்பினராக 12 ஆண்டுகள் இருந்தார்.

1973-ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா தி. மு. க. மாதமிருமுறை இதழாகப் "புரட்சிப் பாதை" என்ற பத்திரிகை நடத்தினார். 1977-ஆம் ஆண்டு கும்பகோணம் தொகுதியிலிருந்து சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; கும்பகோணம், துவரங்குறிச்சி சௌராஷ்டிரா சபைச் செயலாளராக இருந்து சமூகப் பணிகள் ஆற்றினார்; 1978-ஆம் ஆண்டு முதல் 1980 மார்ச் முடியத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக இருந்தார். 1980 முதல், சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்து வருகிறார்.

இவர், மீனத் துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்கிறார்.

### திரு. எம். ஆர். கோவேந்தன்



தஞ்சை மாவட்டத்தில் பி. முடச்சிக்காடு என்னும் ஊரில் 9.2.1932ல் பிறந்தவர் திரு எம். ஆர். கோவேந்தன். தந்தையார் பெயர் திரு ரெங்கசாமி. பள்ளியிறுதி வகுப்பு வரை படித்திருக்கிறார் மணமானவர்; இவருக்கு நான்கு குழந்தைகள் உள்ளனர்.

1952ல் முடச்சிக்காடு ஊராட்சி மன்றத்தின் உறுப்பினராகவும், 1955ல் துணைத் தலைவராகவும், 1959-67 வரை தலைவராகவும் பொறுப்பேற்றிருந்தார்.

1970ல் சேதுபாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராகப் பணியாற்றினார். பேராவூரணி வட்ட விவசாயிகள் சங்கத்தின் தலைவராகவும், மற்றும் பல தொழிற்சங்கங்களின் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் உறுப்பினராகவும் பணியாற்றியிருக்கின்றார். 1977 மற்றும் 1980 சட்டமன்றத் தேர்தல்களில் பேராவூரணித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

இவர், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்கிறார்.



### செல்வி ப. விஜயலட்சுமி

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பி. பாரபட்டி என்னும் ஊரில் 22.2.1952ல் பிறந்தவர் செல்வி ப. விஜயலட்சுமி.

சேலம் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பள்ளியிறுதி வகுப்பு வரை படித்திருக்கிறார். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இவர், சமூகநலப் பணிகளில் மிகுந்த நாட்டம் கொண்டவர். 1980ல் வீரபாண்டி தொகுதியிலிருந்து சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

இவர், கதர்த்துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்கிறார்.




உள்ளங்கவரும் டிசைன்களில் பெட்சீட்டுகள், டவல்கள், தலையணை உறைகள், இல்லங்களை அழகுபடுத்தும் அலங்காரத் துணிகள், உடுக்கத் தூண்டும் லுங்கிகள், நேப்கின்கள் மற்றும் பாலிஸ்டர் ரகங்கள்.

**Erotex**
**FABRICS**



## ஈரோடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.

"ஜெகநாத நிலையம்" 218, நேதாஜி ரோடு, ஈரோடு-638 001 போன் : 74170 & 75568 தந்தி: "ஈரோடெக்ஸ்"

ஷோரூம்கள் :

- 23, வடக்குமாட வீதி, மைலாப்பூர், சென்னை-600 004
- 10, பி. வி. கே. ஐயங்கார் ரோடு, பெங்களூர்-560 053
- 7-3-130, மெயின் ரோடு, ஹிந்துப்பூர் (ஆந்திரம்)
- 231, நாய்க்கர் புது வீதி, மதுரை-1,

ஜெ. சுந்தரானந்தன்
தலைவர்

ER/2/T






# சமுதாயம் வளம் பெற...

**ப**சியும் பிணியும் மலிந்த—வளராத நாடுகளின் முன்னேற்றம் அம்மக்களின் சமுதாய நலத்தில்தான் அமைந்துள்ளது.

ஒரு வேளைச் சோற்றுக்கு வருந்தும் பிஞ்சுக் குழந்தைகளும் ஏழை, எளிய மக்களும் நிரம்பிய நாட்டில், அவர்களின் வயிற்றுப் பசிக்கு உணவளிக்கும் திட்டங்களில் நாட்டம் செலுத்துவது அரசின் தலையாய கடமை.

1977ஆம் ஆண்டு ஜூன் திங்கள் மக்களின் மகத்தான ஆதரவையும் நம்பிக்கையையும் பெற்று ஆட்சியை அமைத்தது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். அறிஞர் அண்ணா அமைக்க விரும்பிய சமதர்ம சமுதாயத்தை அமைத்திடும் பணியில் அயராது உழைத்திடத் தலைப்பட்டது அரசு. 30.6.1980ல் தமிழ்நாட்டின் மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தின் பொற்காலத்தை உருவாக்கிட உறுதி பூண்டார். தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், பிற்பட்ட மக்கள் ஆகியோரின் நலன்களைக் காப்பதுடன் விவசாயிகள், கைத்தறி நெசவாளர்கள், மீனவர்கள், தொழிலாளர்கள், அரசு அலுவலர்கள், காவலர்கள், மற்றும் உழைக்கும் வர்க்கத்தினர் அனைவரது உரிமைகளையும் முன்னேற்றத்தையும் பாதுகாத்து வாழ்விப்பதாக உறுதி மேற்கொண்டார்.

நாடு முழுவதற்குமான ஆறாவது திட்டத்தின் முதலீடு ரூ.97,500 கோடி. இதில் ரூ.50,250 கோடி மாநிலத் திட்டங்களின் கீழும் ரூ.47,250 கோடி மத்திய அரசுத்துறையின் கீழும் வரும். தமிழ்நாட்டின் திட்டம் 1978-83ஆம் ஆண்டுகளில் ரூ. 2150 கோடி அளவில் இருந்தது. இப்போது ரூ. 3150 கோடி அளவில் உயர்ந்துள்ளது. 1978-83ஆம் ஆண்டுத் திட்டத்தைவிட ரூ. 1,000 கோடி அதிக அளவில், அதாவது 40 விழுக்காடு அதிகமாக இத்திட்டம் அமைந்துள்ளது. **இதன் விளைவாக நம் மாநிலத்தில் நபர் வாரித் திட்டச் செலவு ரூ. 522ல் இருந்து ரூ. 765 ஆக உயரும்.** வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஏழ்மையையும் போக்குவதற்கான சிறப்புத் திட்டங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் தனிப்பட்ட குடும்பங்களுக்கு உதவும் சிறப்புத்திட்டங்களின் மூலம் இவர்களுள் பெரும்பான்மையோரை வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வேலையற்றோரில் கணிசமான பகுதியினரைப் பயிற்சித் திட்டங்கள் வாயிலாக பல்வேறு வேலைகளை ஏற்கத் தயார்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. கிராமப் பகுதிகளில் வேலையின்மையைப் போக்க அதிக அளவில் தொழிலாளர்கள் தேவைப்படும் தொழிற்கூடங்களைத் துவக்கத் திட்டமிடப்பட்டது. வட்டார அளவிலும் மாவட்ட அளவிலும் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்பது மாநிலத் திட்டத்தின் குறிக்கோளாகும். சில ஆண்டுகளில் கிராமங்களும் திட்டங்களை வகுப்பதில் பங்குபெறும் அளவிற்குத் திட்டங்கள் வகுக்கப்படவிருக்கின்றன.

**தமிழக அரசின்
மூன்றாண்டுப் பணிகள் குறித்த
கட்டுரைகள் 'தமிழரசு' 16-7-83
இதழிலும் இடம் பெறும்.**

இந்த அரசு பொறுப்பேற்றுச் செயலாற்றும் இந்த ஐந்தாண்டுக் காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சி விகிதத்தில் கணிசமான உயர்வு எய்தியுள்ளது கண்கூடு. வறு

தந்தி: "சென்டெக்ஸ்" போன்: 32

ஒவ்வொருவரும் தேர்ந்தெடுப்பது

ஒவ்வொருவரும் உபயோகிப்பது

# சென்டெக்ஸ்

- படுக்கை விரிப்புகள்
- தலையணை உறைகள்
- மேஜை விரிப்புகள்
- அலங்காரத் திரைத் துணிகள்
- துண்டுகள்
- டர்க்கித் துண்டுகள்
- சீர் சக்கர் ரகங்கள்

தயாரிப்பாளர்கள் & ஏற்றுமதியாளர்கள் :

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட்.,
கே. 885.

தபால் பெட்டி எண். 32 சென்னிமலை - 638 051.
தமிழ்நாடு.

ஷோரூம்கள்: 1) சென்டெக்ஸ் ஷோரூம்,
811, அண்ணாசாலை, சென்னை-2

2) சென்டெக்ஸ் ஷோரூம்,
11, பிரிகேடு ரோடு,
பெங்களூர்-1.

M. P. நாச்சிமுத்து B.A.,B.L.
தலைவர்.




மையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் படிப்படியாகக் குறைப்பதில் வெற்றியடைந்து வருகிறது. வருவாய், செல்வம் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்வதில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் வகையில் ஏழைகளுக்குச் சாதகமாக சமுதாயப் பங்கீட்டுப் பகிர்வு முறையில் மாற்றம் செய்யப் புதுக் கொள்கையை வகுத்துள்ளது. கல்வி, மக்கள் தொடர்பு மூலம் மக்களின் அனைத்துப் பிரிவினரும் வளர்ச்சி இயக்கத்தில் முனைப்பாகப் பங்குகொள்ள அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. வேலைவாய்ப்புகளின் சதவீதம் 1971ல் 35.8 ஆக இருந்தது. 1981ஆம் ஆண்டில் 39.2 சதவீதமாக உயர்ந்தது. 1960-61ல் தனிநபர் வருமானம் ரூ.335 ஆக இருந்தது. 1970-71ல் ரூ.583 ஆகவும் 1980-81ல் ரூ.1269 ஆகவும் உயர்ந்துள்ளது. இவ்வாறு தனிநபர் வருவாய் உயர்ந்தும்கூட முப்பதாண்டுகளுக்கு முன்னர் இருந்த அளவே மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் அவலம் உள்ளது. செல்வத்தையும் வருவாயையும் பகிர்வதில் உள்ள வேறுபாடு அதிகரித்ததே இதற்குக் காரணமாகும். எனவேதான் வறுமை நிலையைக் குறைத்து வளப்பத்தை அதிகரிப்பது ஐந்தாவது, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய நோக்கமாய் அமைந்தது. வறுமை, வேலையில்லாத் திண்டாட்டத்துடனும் போதிய அளவு வேலையில்லா நிலையுடனும் நேரடியாக இணைந்ததொன்றாகும்.

எனவே, தமிழ்நாடு அரசு மக்களின் சமுதாய நலத் திட்டங்களில் அதிக நாட்டம் செலுத்தி, மக்களின் வறுமையைப் போக்கவும் வேலைவாய்ப்புகள் பெருகிடவும் திட்டம் வகுத்தது.

### கிராமங்கள் தன்னிறைவு அடைதல்

தமிழ்நாடு அரசு, தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டம், உழைப்புக்கு உணவுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகிய வேலைவாய்ப்பளிக்கும் சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

இதுபோன்ற ஒரு மாபெரும் திட்டம் தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இதற்குமுன் அறிமுகப்படுத்தப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டுக் கூறியாக வேண்டும்.

தமிழ்நாட்டில் 376 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. முதற்கட்டமாக 69 ஒன்றியங்களில் இத்திட்டம் 1981 மார்ச் திங்களுக்குள் நிறைவேற்றி முடிக்கப்பட்டது.




**தண்ணீர் இறைக்கும்போது இரண்டு கையாலும் இழுத்தால்தான் தண்ணீர் வரும். சர்க்கஸ் பார்த்த ஞாபகத்தில் ஒரு கையால் இழுத்தால் எப்படி நீர் வராதோ அதுபோல் அரசாங்கத்துடன் ஒத்துழைக்காமலிருந்தால் எந்தப் பலனையும் முழுமையாக அடைய முடியாது.**

1980-81ஆம் ஆண்டில் கிராமப் பகுதிகளில் தொடங்கப்பட்ட தன்னிறைவுத் திட்டம் 1983ஆம் ஆண்டு இறுதிக்குள் நிறைவடையும். மூன்றாண்டுக் காலமாகச் செயல்படுத்தப்பட்டுவரும் இத்திட்டத்தின் மூலம் சிறப்பான பயன்கள் கிட்டியுள்ளன. ரூ.200 கோடி பெறுமானமுள்ள சொத்துக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை புறக்கணிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி பொருளாதார வகையில் முன்னேற்றம் கண்டுள்ளது. சில மாற்றங்களுடன் இந்த நிதி ஆண்டில் பேரூராட்சிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 146 பேரூராட்சிகள் பயனடையும்; ரூ.5கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.10 கோடி ஒதுக்கீட்டுடன் அடுத்த நிதி ஆண்டிலும் தொடர்ந்து விரிவுபடுத்தப்படும்.

**முதற்கட்டமாக 69 ஒன்றியங்களில் ரூ. 57.13 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. எஞ்சிய ஒன்றியங்களில் இந்த ஆண்டு இறுதிக்குள் ரூ. 270 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுவருகிறது.**

கிராமப்புற வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடு 1978-83ல் 50.26 கோடியாக இருந்தது. இப்போது ரூ.120 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.



### முதலமைச்சரின் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம்

'ஸ்டேட்ஸ்மென்' என்ற சிறப்பான ஆங்கில நாளேடு கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது:

**"பிறந்துவிட்ட குழந்தைகளில் 10ல் 6 ஊட்டக்குறைவு என்ற காரணத்தால் நோயில் விழுந்து முடங்கும் நிலை இந்தியாவில் இருக்கும் பின்னணியில், எம்.ஜி.ஆர். அவர்களின் சத்துணவுத் திட்டம் விஞ்ஞான பூர்வமான சமுதாயத் திட்டமாகும். அது நவீன பொருளாதாரத் தத்துவங்களுக்கு முரண்பட்டதன்று."**

உலக நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டுக் கழகம் அண்மையில் நடத்திய ஆய்வு, முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு விஞ்ஞான விளக்கமென அமைந்துள்ளது.

அறுசுவை உணவுகள் தயாரிக்கச் சிறந்தது

"மேஜர் பிராண்டு டபுள் ரீபைண்டு ஆயில்"

தயாரிப்பாளர்கள் :

ஸ்ரீ கிருஷ்ணா ரீபைனரீஸ்

47-A, பார்க் ரோடு,

ஈரோடு - 1.

போன் : 75225 (3 lines)
73103
75577

தந்தி : "மேஜர்"   டெலக்ஸ்: 856-234 CIDI IN



Tel : COFFEE   Phone : Resi. : 74461, Office : 74164

- நல்ல மணம்
- நல்ல சுவை
- கூடுதல் டிகாஷன்
- உயர்ந்த ரக காபி கொட்டையில் தயாராகும் காபி
- நாள் முழுவதும் புத்துணர்ச்சியூட்டும் காபி

சாயிபாபா காபி ஒன்றே !



தயாரிப்பாளர்கள் :

சாயிபாபா காபி ஒர்க்ஸ்,

தபால் பெட்டி எண். 48

8, R. K. V. ரோடு, : : ஈரோடு - 638 001.

Prop. Lion N. ராதாகிருஷ்ண செட்டியார்




"ஆசிய, ஆப்பிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளில் 60 முதல் 80 சதவீதம் வரை சத்துணவுப் பற்றாக் குறைதான், உயிர் போக்கும் சீரழிவு நோய்களுக்குக் காரணம்" என்று அந்த ஆய்வறிக்கை கூறுகின்றது.

சத்துணவு உண்ட குழந்தைகளின் மன வளர்ச்சி வியப்பூட்டும் வகையில் அதிகரிப்பதையும் சோதனை வெளிப்படுத்தியுள்ளது. இத்தகைய மகத்தான சத்துணவுத்திட்டம் ஏழை எளிய மக்களின் மனநிறைவை சட்டியிருப்பதுடன் அறிவார்ந்த பெருமக்களின் பாராட்டையும் பெற்றுள்ளது. இத்திட்டம் புதிய சகாப்தத்தையே படைத்துவிட்டது.

இத்திட்டம் வெறும் உணவு வழங்கும் திட்டம் மட்டுமன்று. நாட்டில் நாம் ஏற்படுத்திட விழையும் புதிய சமுதாய அமைப்புக்கு வழிகாட்டும் முன்னோடி இது. எல்லா வேற்றுமைகளையும் மறந்து ஒன்றாகச் சேர்ந்து படிக்கவும் விளையாடவும் பிஞ்சுப் பருவத்திலேயே பயிற்சி பெறுகின்றனர். தூய்மை, சுகாதாரம் பற்றியும் குழந்தைகள் அறிந்து கொள்கின்றனர். இவர்களுக்கு மருத்துவ வசதியும் அளிக்கப்படுகிறது.

பெரும்பாலான நோய்களுக்கு அசுத்தமான பற்களே காரணம் என்பதால் மழலைப் பருவத்திலேயே பல் பாதுகாப்புப் பயிற்சி உணவு நிலையங்களில் அளிக்கப்படுவதுடன் மருத்துவ விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட பற்பொடி ஒவ்வொரு குழந்தைக்கும் 30 கிராம் அளவில் இலவசமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் கிராமப் பகுதிகளில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். விதவைகளுக்கும் ஆதரவற்ற பெண்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது. உரிமைபெற்ற இந்தியாவில் கடந்த 35 ஆண்டுகளில் இத்துணை பெரிய அளவில் வேலை வாய்ப்புத் தரும் திட்டம் எதுவுமில்லை.

நகர்ப்புறங்களில் 2 முதல் 4 வயது நிரம்பிய குழந்தைகளுக்கும் மதுரை, கோவை, சென்னை மாநகராட்சிகளில் உள்ள பள்ளிக் குழந்தைகளுக்கும் 1982, செப்டம்பர் 15 ஆம் நாளிலிருந்து இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. இதனால் 9.26 இலட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கு ஆண்டுக்கு ரூ. 125 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவு, நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கான முதலீடாகும். வளரும் தலைமுறையினருக்குச் செலுத்தப்படும் முன்பணமாகும்.

இத்திட்டம் இந்தியாவிற்கே வழிகாட்டும் திட்டம், மனிதாபிமானமும் விஞ்ஞான சமுதாயக் கண்ணோட்டமும் பிணைந்த மகத்தான திட்டம்.

ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை.

வறட்சி வாட்டும் வேளையில் கிராமப் புறங்களில் வாழும் ஏழை விவசாயத் தொழிலாளர்கள் உடுத்த உடையின்றி வேதனைப் படுவதைப் போக்கிடச் சமுதாய நலத்திட்டம் உருவாயிற்று. அதே சமயத்தில் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகள் விநியோகிக்கப்படுவதன் மூலம் கைத்தறி நெசவாளர் துயரும் துடைக்கப்பட அரசு திட்டமிட்டது. 1983-ஆம் ஆண்டு தமிழ்ப்புத்தாண்டில் தமிழ்நாடு முழுவதும் உள்ள ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள் 60 இலட்சம் பேருக்கு இலவசமாக வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டன.



## தலைமைச் செயலர்
## திரு கே. சொக்கலிங்கம்

தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு கே. சொக்கலிங்கம், இ.ஆ.ப., அவர்கள், தஞ்சை மாவட்டம் பண்டாரவாடை கிராமத்தில் 1926 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாளில் பிறந்தவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பௌதிகத்தில் பி.எஸ்சி (ஆனர்சு), மற்றும் எம்.ஏ. பட்டம் பெற்றவர். வன இயலில் பட்டயமும் பெற்ற பெருமையுடையவர்.

1947ல் தமிழ்நாடு அரசுப் பணியில் சேர்ந்தார். 1959ல் இ.ஆ.ப. அலுவலர் ஆனார்.

1959-60ல் திண்டிவனம் உதவி ஆட்சியராகவும், 1960-63ல் உள்துறை துணைச் செயலராகவும், 1963-67ல் திருச்சி மாவட்ட ஆட்சியராகவும் பணியாற்றினார்.

1967-69ல் பேரறிஞர் அண்ணா அவர்களின் தனிச் செயலராகவும், 1969-73ல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இயக்குநராகவும், 1974-75ல் வேளாண்மைத் துறைச் செயலராகவும், 1976ல் வேளாண்மைத் தொழிற் கழகத் தலைவராகவும், 1977ல் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைச் செயலராகவும், 1978-79ல் மின்வாரியத் தலைவராகவும், 1980-81ல் உள் துறைச் செயலராகவும், 1981ல் இரண்டாவது செயலராகவும் பணியாற்றினார்.

1983 பிப்ரவரி 11 ஆம் நாள் தலைமைச் செயலர் (பொறுப்பு) பணியேற்றார். 1983 ஜூன் 20 ஆம் நாள், தலைமைச் செயலராகப் பதவியேற்றுப் பணியாற்றி வருகின்றார்.

## With Compliments From

☐ *Elegant Publicities,*

**83, General Patters Road,**
**Mount Road,**
**Madras-600 002.**
**Phones : 89784, 87070**

☐ *Elegant Process,*

**Block Makers,**
**57. Peters Road,**
**Royapettah,**
**Madras-600 014.**
**Phone 847288**

☐ *Eminent Photo Service,*

**298, Royapettah High Road,**
**Madras-600 014.**
**Phone 847288 Extn. 2**

☐ *Eminent Enterprises.*

**83, General Patters Road,**
**Mount Road,**
**Madras-600 002.**
**Phones: 89784, 87070**

☐ *Elegant Art Printers.*

**57. Peters Road,**
**Royapettah,**
**Madras-600 014.**
**Phone 847288**

☐ *Elegant Process Offset Printers,*

**92-A, General Patters Road,**
**Mount Road,**
**Madras-600 002.**
**Phones: 89784, 87070.**

Founder: **M. SUBRAMANIAM**


## முன்னேற்றப் பாதையில் 'ஸ்பிக்'



**சொ**ந்தத் தயாரிப்பையும், இறக்குமதி செய்யும் உரங்களை யும் சேர்த்து ஸ்பிக் ஆண்டுக்கு சுமார் 10 இலட்சம் டன் உரவிற் பனை செய்கிறது. தீவிர விவ சாயிப் பயிற்சி கிராம ஏற்பு போன்ற திட்டங்களின் வாயி லாக உரம், மற்றும் இதர வேளாண் இடுபொருள்களைச் செவ்வனே உபயோகிக்கும் வழி முறைகளைப் போதித்து, வேளாண்மைத் துறையில் உற் பத்தித்திறன் பெருக ஸ்பிக் துணை செய்துள்ளது. தற்போது ஸ்பிக் நிறுவனம் 8 மாநிலங்களில் உர விற்பனை செய்து வருகிறது.

2169 பேர்களுக்கு நேர்முக மாகவும், மற்றும் 5000 பேர் களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை உண்டாக்கியுள் ளது ஸ்பிக் நிறுவனம். மாநில அரசின் வருவாய்க்கு ஸ்பிக் மூலம் விற்பனை வரியாக மட்டுமே ரூபாய் 3.90 கோடி அளவிற்கு ஆண்டொன்றுக்குக்கிடைக்கிறது.

கடந்த மூன்று ஆண்டுக் காலத் தில் ஸ்பிக் பல புதிய திட்டங் களைச் செயலாக்கியுள்ளது. கழி வுப் பொருளாக வெளியேற்றப் படும் வாயுவிலிருந்து ஹைட்ரஜ னைத் திரும்பப் பெற்று கூடுதல் அம்மோனியாவைத் தயாரிக்க அம்மோனியா ஆலையில் ஒரு புது அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. டி.ஏ.பி. யூரியா உரங்களில் உற் பத்தி அதிகப்படியாக்க, அம் மோனியா இறக்குமதி செய்வ தற்கான டாங்குகள், பாஸ்பாரிக் அமிலத்தை இறக்குமதி செய்து சேகரிக்க வேண்டிய டாங்குகள் போன்றவை ரூ. 7.80 கோடி செலவில் கட்டப்பட்டு உபயோ கிக்கப்பட்டு வருகின்றன.

கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி விற்பனை நிலையங்களில் ரூ.10 கோடி மதிப்புள்ள ஜனதா ரக வேட்டிகளும், சேலைகளும் தேக் கம் அடைந்தன. இதை நீக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசு அந்நிறுவனத்திடமிருந்து விலைக்கு வாங்கி நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கியது. 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கும் 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும் இலவச மாக இந்த வேட்டி, சேலைகள் வழங்கப் பட்டன.

**வறுமை களைதல்**

தமிழ்நாட்டில் எக்காரணத்தைக் கொண் டும் பட்டினிச்சாவு நிகழக்கூடாதென்று கருதி அரசு நடவடிக்கை மேற்கொண்டது. அந்நிலை யிலுள்ளவர்கள் அரசு அலுவலர்களை அணுகி அந்நிலையைக் கூறினால் ரூ.100 உதவித் தொகை அளிக்கப்படுவதுடன் தேவையான வேலை வாய்ப்பும் தர வழிவகை செய்யப்படு கிறது. இதுவரை 185 பேர் நிதி உதவி பெற் றுள்ளனர். ரூ.18,500 வழங்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளின் கடன் நிவாரணம்**

விவசாயிகளின் உற்பத்திப் பொருள் களுக்கு நியாயமான விலை கிடைக்கவும் இடு பொருள்கள் குறைந்த விலையில் கிடைக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 9½ இலட்சம் பம்பு செட்டுகள் மின் இணைப்பைப் பெற்று, இந்தியாவில் தலைசிறந்த மாநிலமாகத் திகழ் கிறது.

விவசாயிகளுக்குப் பயன்படும் பம்புசெட் டுகளைப் பொறுத்தவரையில் மீட்டர் வாடகை ரூ.5 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள தைக் குறைத்து, சில பணப்பயிர்களுக்கு முதன் முறையாக வரிவிதித்துக் குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது சட்டம் பிறப்பிக்கப்பட்டதை இந்த அரசு முழுமையாகத் தள்ளுபடி செய் தது.

திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை ஆகியவற்றின் மீது ஏக்கர் ஒன் றுக்கு, பயிர் ஒன்றுக்கு விதிக்கப்பட்டிருந்த வரி விகிதத்தை ரூ. 20 லிருந்து ரூ. 15 ஆக இந்த அரசு குறைத்தது.

புகையிலை, மிளகாய், பாசன வசதியு டன் சாகுபடியாகும் பருத்தி, வேர்க்கடலை ஆகியவற்றின்மீது விதிக்கப்பட்ட வரியை முழு மையாக இந்த அரசு நீக்கியது.

இதனால் தமிழக அரசுக்கு ஓராண்டில் ஒரு கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. மீட் டர் வாடகை ரூ.4 லிருந்து ரூ.2 ஆக அண்மை யில் குறைக்கப்பட்டது. 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையில் வேளாண்மை வருமான வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

1981-82ல் விவசாயத்திற்குக் குறுகிய காலக்கடன் ரூ.72 கோடியும் 1983ல் ரூ.82 கோடியும் வழங்கப்பட்டுள்ளன. 1984 ல் ரூ. 100 கோடி கடன் வழங்கத் திட்டமிடப்பட் டுள்ளது.

உழவர்களின் நீண்டகாலக் கடன் வசதி களைப் பூர்த்தி செய்ய 182 தலைமை நிலவள வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. உழவர் களின் தேவை அறிந்து பலகோடி ரூபாய் கட னாகக் கொடுக்கப்படுகிறது. கடனைத் திருப் பிச் செலுத்த முடியாத விவசாயிகளுக்கு 1982-83ல் ரூ.120 கோடி கடன்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. 1982-83ல் மொத்தம் ரூ.200 கோடி சலுகைகளை அரசு விவசாயி களுக்கு வழங்கியுள்ளது.

**மின் இணைப்பில் முன் நிற்கும் தமிழகம்**

நலிவுற்ற பிரிவினர் மின்வசதி பெறு வதற்கு இந்த அரசு ஆவன செய்துள்ளது. சாதாரண மக்களுக்கும், வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்களுக்கும் மின்சக்தியின் பயன் சென்றடைய வேண்டுமென்பதில் இந்த அரசு முனைப்பாகச் செயலில் ஈடுபட்டு, ஊரக மின் மயமாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத் தியது. .

# Lakshmi Machine Works Limited

Grams : LAKMAWORKS
Phone : 89371 (9 lines)
Telex : 0855/374 Coimbatore
P. B. No. : 5, Coimbatore 641 020

(In collaboration with M/s. Rieter Machine Works Limited and Schweiter Engineering Works Limited, Switzerland)

Registered Office, Administrative Office & Works :
PERIANAICKENPALAYAM, S. R. K. V. POST, COIMBATORE 641 020

*Manufacturers of :*

1. HIGH SPEED DRAW FRAMES (Model DO/2S) (Two Deliveries)
2. SPEED FRAMES (Model F/1 - Type GS & Model LF 1400)
3. RING SPINNING FRAMES (Type DJ5 & G5/1)
4. HIGH SPEED RING SPINDLES (M2)
5. SLIVER LAP MACHINES (Model E2/4A)
6. RIBBON LAP MACHINES (Model E4/1A)
7. HIGH SPEED COMBERS. (Model E7/4)
8. BLOW ROOM LINES
9. HIGH PRODUCTION CARDS CRISTALLINA (Type C1/2)
10. HIGH SPEED AUTOMATIC PIRN WINDERS (Type MSL)

For Other Particulars
Please Contact :

VOLTAS LIMITED
TEXTILE MACHINERY DIVISION
BOMBAY AND OTHER BRANCHES
and
SALES DEPARTMENT
LAKSHMI MACHINE WORKS LTD.
S. R. K. V. POST
COIMBATORE-641 020

**Textile Machinery of World Renown, for Performance, Quality and Workmanship**

Our Mechanised Foundry set up with the Technical Collaboration of Messrs. Krupps of West Germany can supply quality grey iron castings with excellent surface finish as per Indian Standard Grades 15, 20 and 25.




இத்திட்டத்தின் கீழ், குடிசை வாழ்வோருக்கு மின் வசதி அளிக்கப்படுகிறது. குடிசைகளுக்கு 40 வாட்ஸ் மின்சார பல்பு பொருத்தப்பட்ட மின் இணைப்பை வழங்கி மாதமொன்றுக்கு மிகக் குறைந்த மின் கட்டணம் ரூ. 2-50 மட்டும் வசூலிக்கப்படுகிறது.

தமிழகத்திலுள்ள 15,735 கிராமங்கள், 47,838 சிற்றூர்கள் ஆகியவற்றில் 1982 மார்ச் 31ஆம் நாள் வரையில் 15,611 கிராமங்களுக்கும் 47,468 சிற்றூர்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டது

ஆதிதிராவிடர் குடியிருப்புகள் அனைத்திற்கும் மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. இப்பெருமை பெற்ற ஒரே மாநிலம், தமிழ்நாடு தான்.

புதிய விவசாய விசையேற்றங்களுக்கு மின்னிணைப்பு வழங்குவதில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது.

| ஆண்டு | மின்னிணைப்புப் பெற்ற விசையேற்றங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1980—81 | 31,935 |
| 1981—82 | 26,358 |

1982, மே மாதம் வரையில் விவசாய விசையேற்றங்கள் மின்இணைப்புப் பெற்றவை 9½ இலட்சம்.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1523 மேல்நிலைத் தொட்டிகளுக்கும், தரைநிலை நீர்த்தொட்டிகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்குரிய மின் கட்டணம் நாட்டிலேயே மிகக் குறைவானதாகும், 1977ல் சிறுவிவசாயிகளுக்கான மின்கட்டணம் 16 காசிலிருந்து 14 காசாகக் குறைக்கப்பட்டது. 1980ல் சிறிய விவசாயிகளுக்கு 12 காசாகவும் மற்றவர்களுக்கு 14 காசாகவும் மீண்டும் குறைக்கப்பட்டது. ஆனால் அரசுக்கு ஆகும் அடக்கவிலை, யூனிட்டுக்கு 60 காசு ஆகும். இதனால் அரசுக்கு ஆண்டுக்கு ரூ 6 கோடி கூடுதல் இழப்பு ஏற்படுகிறது.

1980ஆம் ஆண்டு முதல் விவசாய இணைப்புகளுக்கு மின் வாடகைக் கட்டணம் ரூ. 4 லிருந்து ரூ. 2 ஆகக் குறைக்கப்பட்டது. 1981ஆம் ஆண்டு முதல் விவசாயத்திற்கான மின் கட்டண வீதம் எல்லா இனங்களையும் உள்ளடக்கியதாக சிறிய விவசாயிகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 12 காசாகத் திருத்தப்பட்டபோது மின் அளவி வாடகைக் கட்டணம் முழுவதும் நீக்கப்பட்டது.

1983ஆம் ஆண்டில் கிராமப்புற மின் இணைப்புத் திட்டத்தைச் செயற்படுத்த ரூ.9 கோடி கடன், இந்திய கிராமப்புற மின் இணைப்புக் கழகத்திடம் கோரப்பட்டுள்ளது.

### உடல் ஊனமுற்றோர்க்கு

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சமூக நலனிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.3.75 கோடி. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி ரூ.13.50 கோடி. இதில் உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புத் திட்டங்களுக்கு ரூ.4 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பயிற்சி, உற்பத்திப் பட்டறைகள் நடத்துதல், மூன்று சக்கர வண்டிகள் வழங்குதல், காதுகேட்கும் கருவிகள் வழங்குதல், மன வளர்ச்சி குன்றியோருக்கான நிலையம் ஒன்றை ஏற்படுத்துதல் அரசு மேற்கொண்ட சீரிய பணிகளாகும். பெட்டிக்கடை அமைப்பிற்காக ரூ.1,000 உதவித் தொகையை உடல் ஊனமுற்றோருக்கு அரசு அளித்து வருகிறது.

### ஆதிதிராவிடர் நலத் தனித்திட்டம்

ஆதி திராவிடர் நலத் தனித் திட்டம் எனும் திட்டத்தை வகுத்து அவர்கள் மேம்பாட்டுக்காக ஆவன செய்வது ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் சிறப்புக் கூறாகும்.

தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் 17.8 சதவிதத்தினர் ஆதி திராவிட வகுப்பினராவர். எனவே, ஆதி திராவிடர் ஆக்க நலத் தனித் திட்டத்தின் கீழ் எடுக்கப்படும் முதல் நடவடிக்கை மாநிலத்தின் ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் குறைந்தது 17.8 சதவீதமாகிலும் ஆதிதிராவிடர் நலனுக்காகச் செலவிடப்படுவதாகும். இதுதவிர இத்திட்டத்தின் கீழ் ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட கால அளவில் ரூ.60 கோடி அளவிற்கு இந்திய அரசு சிறப்பு நிதியுதவி அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 14-ஆம் ஆண்டில் 'தமிழரசு'

'தமிழரசு' இதழ் பதின்மூன்றாண்டுப் பயணத்தை வெற்றிகரமாக முடித்து, பதினான்காம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

'தமிழரசு' இதழுக்கு ஆதரவு தெரிவித்து வரும் வாசக நண்பர்கள், விற்பனையாளர்கள், எழுத்தாளர்கள், விளம்பரதாரர்கள் [illegible] அனைவருக்கும் [illegible]

With

the best

compliments

from :

# Chandrika Products

(Manufacturers of Chandrika Ayurvedic Toilet Soap)

Head Office :
**COIMBATORE**

Branch .
**MADRAS**



இந்நிதியுதவியைக் கொண்டு இம்மாநிலத்தில் வாழும் ஆதிதிராவிட வகுப்பினர் குடும்பங்களில் 50 சதவித குடும்பங்களேனும் படிப்படியாக போதிய வருவாய் ஈட்டி ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக்குள் வறுமைக்கோட்டின் கீழ் நிலையிலிருந்து மீள்வதற்கு உதவ உறுதியான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மலைப்பகுதி மேம்பாடு**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், தமிழ்நாட்டிலுள்ள நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து செயற்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நிதியுதவி முழுவதையும் மத்திய அரசு வழங்கும். 1980-85 வரையுள்ள 5 ஆண்டுகளுக்கு விரிவான செயல்திட்டம் 50 கோடி ரூபாய் செலவில் வகுக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்கு முழு ஆதரவையும் அளிக்குமாறு மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்படும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் பின்தங்கியோர் நலனிற்காக 1978-83 திட்டத்தில் ரூ.48.08 கோடி ஒதுக்கப்பட்டது; நடப்புத் திட்டத்தில் ரூ.80.30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்கவும், அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் உதவி செய்ய ரூ. 2.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பழங்குடியினர் நலனுக்கு ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பின்தங்கியோர் நலனிற்காக ரூ.11.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்குரிய நலத் திட்டங்களை நிறைவேற்றத் தனியாக ஒரு நிதி நிறுவனம் ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

**முதியோர் உதவித் தொகை**

எத்தொழிலும் செய்ய இயலாத, ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள், 60 வயதான ஆதரவற்ற ஏழைகள் ஆகியோருக்கு மாத ஓய்வூதியம் அளிப்பதாகத் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டதற்குச் செயல் வடிவம் கொடுத்துள்ளது அரசு.

1981ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தினை அரசு செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 60 வயதுக்கும் மேற்பட்ட ஆதரவற்ற, எத்தொழிலும் செய்ய இயலாத வேளாண் தொழிலாளர்கள் பயன் பெற்றுள்ளனர். முதற்கட்டமாக 30,000 ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை அளிக்க அரசு ஆணையிட்டது. முதியோர் உதவித்தொகை, விதவைகள் உதவித் தொகை, உடல் ஊனமுற்றோர் உதவித்



தொகை, ஆதரவற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் உதவித் தொகை பெறும் இரண்டு இலட்சம் பேர்களுக்கு வாரம் ஒரு கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது. ரூ. 30 மாத உதவிப் பணமும் அளிக்கப்படுகிறது.

வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்ட வேலையற்ற இளைஞர்களுக்கு ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளித்து வேலை கொடுக்கப்படுமென்றும், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்காவது கட்டாயமாக வேலை கொடுக்கப்படுமென்றும் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது.

இப்பணிக்காக, தொடக்கமாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் இனம் காணப்பட்டு, அக் குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் ஒருவருக்காவது வேலை வாய்ப்பு அளிக்கப்படத் திட்டமுள்ளது. இத்திட்டம் மாநிலம் முழுவதிலும் செயற்படுத்தப்படும். சுயமாக வேலை மேற்கொள்ள இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ், உதவி பெற்று ஏராளமான பயிற்சித் திட்டங்களையும் அரசு செயற்படுத்தி வருகிறது.

**அட்டைப்பட விளக்கம்**

சென்னைக்குக் கிருஷ்ணா ஆற்று நீரைக் கொண்டுவரும் மாபெரும் திட்டத்தை இம் மலரின் அட்டை சித்திரிக்கிறது.

படித்துப் பட்டம் பெற்ற வேலையில்லாத பட்டதாரிகளுக்கு ரூ.50 அளிக்கும் திட்டம் செயற்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 15.1.1982 நிலவரப்படி உதவித் தொகை வழங்கப்பட்டோர் எண்ணிக்கை 11,815. இத்திட்டத்தின் கீழ் 1980-81ல் செலவழிக்கப்பட்ட தொகை ரூ.22,04,000. 1981-82ல் செலவிடப்பட்ட தொகை ரூ.43,60,000.

சமுதாயம் வளம் பெற்றால்தான் நாடு உயரமுடியுமென்ற குறிக்கோளுடைய இந்த அரசு, ஆதரவற்ற விதவைத் தாய்மார்களின் மகளிருக்குத் திருமணம் செய்து கொள்ள ரூ. 1000 அளித்து வருகிறது. 1982ஆம் ஆண்டு இதற்கான ஆணையை அரசு பிறப்பித்தது. இத்துடன் விதவைகள் மறுமணம் செய்து கொண்டாலும் அரசு உதவுகிறது. ரூ.5,000 மதிப்புள்ள தேசிய சேமிப்புச் சான்றிதழ் 7 ஆண்டுகளுக்குத் தம்பதி பெயரில் வைப்புச் செய்யப்படுகிறது. 1980-81ல் 373 விதவைகள் மறுமணம் செய்ததன் காரணமாக இந்த உதவி பெற்றுள்ளனர்.

**"தமிழரசு" சந்தா விவரம்**

தமிழரசு தமிழ் (திங்களிருமுறை)
ஆண்டுச் சந்தா ரூ. 18.00

அரையாண்டுச் சந்தா ரூ. 9.00

விவரங்களுக்கு :-

தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

உங்களுடைய வாழ்வில் ஸ்ரீ லக்ஷ்மி நிலவிடவும்
உங்களுடைய இல்லத்தில் ஸ்ரீ லக்ஷ்மி குடிகொள்ளவும்
உங்களுடைய நினைவில் என்றும் ஸ்ரீ லக்ஷ்மி நிறைந்திடவும்

எங்களுடைய ஸ்ரீ லக்ஷ்மி ஜுவல்லரியின்
ஆபரணங்களை அணிந்திடுவீர் !

தந்தி: "அணிகலன்"

ஸ்ரீ லக்ஷ்மி ஜுவல்லரி



(REGISTERED)

- 292, பெரிய கடை வீதி A/C போன் : 33665
- 309, ராஜ வீதி A/C போன் : 24483
- 73, கிராஸ்கட் ரோடு, காந்திபுரம் A/C போன் : 36751
- 300, பெரிய கடை வீதி

ஸ்ரீ லக்ஷ்மி டைமண்ட்ஸ்
340, பெரிய கடை வீதி போன் : 36752

ஸ்ரீ லக்ஷ்மி வாட்ஸ்
311, ராஜ வீதி GRAMS: "SRI LAKME"
PHONE: 33487 33488 33489

ஸ்ரீ லக்ஷ்மி காம்ப்ளக்ஸ்
73 கிராஸ்கட் ரோடு காந்திபுரம்
கோயமுத்தூர்

செந்தில்




கொத்தடிமைகளை விடுவித்து மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தின் கீழ் 35,828 குடும்பங்களை மீட்டு மறு வாழ்வு அளிக்கும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. அதில் ஜனவரி மாதம் வரை 31,928 குடும்பங்கள் கொத்தடிமை நிலையிலிருந்து மீட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளன. இது 89 சதவீத சாதனையாகும்.

தமிழ்நாடு அரசு தனது குறியீட்டு அளவை நிறைவேற்றி சாதனை புரிந்துள்ளது. இதே போல் ஒரிசாவும் குறியீட்டு அளவை எட்டியுள்ளது.

[கடந்த மார்ச்சுத் திங்களில் மத்திய திட்டக்குழு நடத்திய ஆய்வில் வெளியிட்டுள்ள தகவல்]

தமிழகத்தில் கிராமப்புறங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதில் வியக்கத்தக்க அளவுக்கு தமிழக அரசு செயல்பட்டு இருக்கிறது. 99 சதவிகிதம் கிராமப்புறங்களுக்கு மின்சார வசதிகள் செய்து கொடுத்து இருக்கிறார்கள். குறிப்பாக குக்கிராமங்கள், ஆதி திராவிடர்கள் வாழும் பகுதிகள் மலை வாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு மின் வசதி செய்துள்ளனர்.

இதுவரை தமிழ்நாட்டில் 9 இலட்சத்து 65 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

[மத்திய அரசு கிராம மின்சார வளர்ச்சிக்கழகத்தலைவர் திரு எம். வெங்கடரத்தினம்]

## பாராட்டுகிறார்கள்

தென்னகத்தில் தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் பிற்பட்டோர் முன்னேற்ற இயக்கம் பல்வேறு நிலைகளில் வளர்ந்து வந்துள்ளது.

வடமாநிலங்களில் நிலப்பிரபுத்துவம் ஓரளவு இருப்பதால் பிற்பட்டவர்கள் மீது அவர்களது ஆதிக்கம் இருந்து வருகிறது.

அப்படிப்பட்ட நிலை தென்னகத்தில் இல்லை.

அதுமட்டுமல்ல தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் பிற்பட்டவர்கள் பொருளாதார வளர்ச்சியில் வேகமாக முன்னேறி வருகின்றனர்.

[மண்டல் கமிஷன் அறிக்கையில்]

"தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், ஏழைகளுக்குக் குறைந்த செலவில் வீடு கட்டிக் கொடுப்பதில் சிறப்பாகச் செயல்படுகிறது. குறைந்த செலவில் வீடு கட்டிக் கொடுப்பதில் இந்தியாவில் உள்ள 5 மாநிலங்கள் முன்னணி வகிக்கின்றன; அதில் தமிழ்நாடும் ஒன்று.

"வீடு கட்டுவதற்காகக் குறிப்பிட்ட பணத்தை "பட்ஜெட்"டில் ஒதுக்கி முறையாகச் செலவு செய்து சீரான முறையில் வீட்டு வசதிகளைப் பெருக்கி வருகிறது, தமிழக அரசு. அதற்காகப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

— 9.6.83 அன்று நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் (ஹட்கோ) தலைவர் திரு எச்.யு.பிஜ்லானி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்த கருத்துகளிலிருந்து....

## போற்றுகிறார்கள்

இந்தியாவிலேயே தோல் தொழிலில் தமிழகம்தான் முதலிடம் வகித்துவருகிறது. தோல் பொருட்கள் உற்பத்தியிலும் தோல்களை ஏற்றுமதி செய்வதிலும் தமிழகம் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது.

தோல் தொழில் வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு இத்தகைய வளர்ச்சிக் கார்ப்பரேஷன் ஒன்றை அமைத்திருப்பதற்கு மாநில அரசை நான் பாராட்டுகிறேன்.

—மாண்புமிகு மத்திய தொழில் அமைச்சர் திவாரி அவர்கள்

[சென்னை 1.4.1983 அன்று டான்சி அலுவலக வளாகத்தில் நடைபெற்ற விழாவில்]



85342

# தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட்

## (தமிழ்நாடு அரசு நிறுவனம்)

தொலைபேசி 812113
812059

1. எங்களது உப்பளத்தில் தரமான உப்பு தயாரிக்கப் படுகிறது. தொழிற்சாலைக்கு உகந்த உப்பு - 98% மேல் சோடியம் குளோரைடு உள்ளது. இவ்வுப்பு தற்போது விற்பனைக்குத் தயாராக உள்ளது. தூத்துக்குடி ஆல்காலி கெமிக்கல்ஸ், திருவாங்கூர் கொச்சின் கெமிக்கல்ஸ் போன்ற பெரிய நிறுவனங்கள் எங்களது உப்பை வாடிக்கையாக வாங்கு கிறார்கள்.

2. மாட்டுத் தீவனத் தயாரிப்பாளருக்கு மிகவும் தேவைப்படும் உப்பைத் தயாரித்து வருகிறோம்.

3. தோல் பதனிடும் தொழிலுக்கும் ஏற்ற உப்பு மலிவு விலையில் எங்களிடம் கிடைக்கும்.

4. உணவுக்குத் தேவையான உப்பைப் பொடி செய்தும் விற்கிறோம். தரத்தில் சிறந்தது. உணவுக்குகந்த உப்பில் 96% சோடியம் குளோரைடு இருக்க வேண்டும். எங்களது உப்பில் 96% லிருந்து 98% வரை சோடியம் குளோரைடு உள்ளது. நிறத்தைக் கண்டு ஏமாறாமல் எங்களிடம் தரமான உப்பை வாங்கவும்.

5. எங்களது உப்பு சிந்தாமணி சூப்பர் மார்க்கெட், அமுதம், டி.யூ.சி.எஸ். ஆகிய இடங்களில் கிடைக்கும். தொழிற்சாலைகு வேண்டிய உப்பும் உணவுக்குகந்த உப்பையும் நேரடியாகப்பெற எங்களது கீழ்க்கண்ட அலுவலகங்களை அணுகவும்:

பதிவு அலுவலகம் : 1. நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட்,
எல். எல். ஏ. பில்டிங்ஸ்,
735, அண்ணா சாலை,
சென்னை - 600 002.

2. பணி மேலாளர்,
மாரியூர் வாலிநோக்க உப்புத் திட்டம்,
வாலிநோக்கம்,
சிக்கல் - 623 528,
முதுகுளத்தூர் வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

3. பணி மேலாளர்,
மரவக்காடு வடகாடு உப்புத் திட்டம்,
5/21-சி, தம்பிக்கோட்டை,
பட்டுக்கோட்டை-614 737,
தஞ்சாவூர் மாவட்டம்.






# ஒப்பற்ற ஊரக வளர்ச்சித் திட்டம்

நாடு நலம் பெறவும் நன்மை விளைந்திடவும் தமிழக அரசால் நன்கு ஆராய்ந்து செயல்படுத்தப் படும் திட்டம்தான் ஒருங்கி ணைந்த ஊரக வளர்ச்சித் திட் டம்.

இத்திட்டம் 1978-ஆம் ஆண் டிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் செயல்படுத்தப் பட்டது. 2.10.1980 முதல் எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக் கும் விரிவாக்கப்பட்டுச் சிறப் புறச் செயல்படுத்தப்பட்டு வரு கின்றது. 1980-81 ஆம் ஆண்டு வட்டாரத்திற்கு மான்ய ஒதுக்கீடு ஆறு இலட்சம் ரூபாயாகும். 1982-83 ஆம் ஆண்டுக்குப் பிறகு வட்டாரத்திற்கான ஒதுக்கீடு ரூபாய் 8 இலட்சமாகும்.

1983-84ஆம் ஆண்டுக்கான மான்ய ஒதுக்கீடு ரூபாய் 3008 இலட்சமாகும். ஆறாவது ஐந் தாண்டுத் திட்டத்தின் மொத்த மான்ய ஒதுக்கீடு ரூ.131.60 கோடியாகும். இந்த மான்யத் தினை மத்திய அரசும், மாநில அரசும் 50:50 என்ற சதவீதத் தில் பகிர்ந்து கொள்ளும்.

இத்திட்டத்தின் முக்கிய நோக் கம் என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டாமா? இதோ, அது—

தெரிந்தெடுக்கப்பட்ட குறிப் பிட்ட குழுவினரை வறுமைக் கோட்டின் நிலைக்கு மேல் உயர்த் துவதும், படித்தோர் தொகைப் பெருக்கத்திற்கேற்ப வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதுமே ஆகும். சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் மான்யமும், குறுநில விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளர்கள் இன்னும் பிற பயன்பெறும் குடும்பங்களுக்கு 33 1/3 சதவிகிதம் மான்யமும் வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச சித்திட்டத்தின் கீழ் மாடு, கோழி, ஆடு போன்றவை வாங்கல், சிறு பாசனத் திட்டங்கள் போன்றவற் றுக்கும் மான்யம் வழங்கப்படு கின்றது. இத்திட்டத்திற்காக மான்யமும், நிதி நிறுவனங்களின் மூலமாகக் கடன் உதவியும் ஏற் பாடு செய்யப்படுகின்றது.

மேலும், இளைஞர்களுக்கான பயிற்சி மற்றும் சுயவேலை வாய்ப் புக்கான திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பொதுவாக 18 முதல் 35 வயதுவரை உள்ள வர்கள் இந்தப் பயிற்சிக்காகத் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். பயிற்சி பெறுவோர் ஒவ்வொரு வருக்கும் மாதத்திற்கு ரூபாய் 125 வரை ஆறுமாதத்திற்கு மான் யம் வழங்கப்படுகிறது. இது தவிர, கருவிகள் வாங்குவதற்கும் ரூபாய் 250 வழங்கப்படுகின்றது. பயிற்சி முடிந்தவுடன் அவர்களுக் குத் தொழில் அமைக்க உதவி அளிக்கப்படுகின்றது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச் சித் திட்டத்தின் கீழ் வட்டாரம் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு 600 குடும்பங்கள் பயனடைகின்றன. ஒவ்வாரு ஆண்டும் 2,25,000 குடும்பங்கள் பயன்பெறுகின்றன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட

காலத்தில் 11,25,000 குடும்பத்தார் பயன்பெறுவர். வறுமைக் கோட்டின் அடித்தளத்தில் உள்ளவர்களுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்பது இத்திட்டத்தில் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.



* ஜனநாயகம் பின்னோக்கிச் செல்லும் நிலை கூடாது; சிறந்த ஜனநாயகச் சூழ்நிலை வளர அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும்!
* மனத்தில் மாசு, மதவெறி, சாதி, சுயநலம், ஆணவம் இவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும்; அப்போதுதான் நம்நாடு முன்னேறும்!

1979-80ஆம் ஆண்டில் 6.87 கோடி ரூபாய் மான்யமாக வழங்கப்பட்டது. இதன் மூலம் பயன்பெற்றவர்கள் எண்ணிக்கை 1,82,136 ஆகும். இதில் பயன்பெற்ற தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கையோ 27,544.

1980-81ஆம் ஆண்டில் 16.91 கோடி ரூபாய் மான்யமாக வழங்கப்பட்டது. அப்போது பயன்பெற்றவர்கள் எண்ணிக்கை 3,75,934. பயன்பெற்ற தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 63,875 ஆகும். பயன்பெற்ற மலைவாழ் இனத்தைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கை 1,797. இத்திட்டத்திற்காக வழங்கப்பட்ட கடனுதவி ரூபாய் 2,966.52 இலட்சமாகும்.

1981-82 ஆம் ஆண்டு ரூபாய் 2,810.64 இலட்சம் மான்யமாக வழங்கப்பட்டது. இதன் மூலம் பயன்பெற்றோர் எண்ணிக்கை 3,58,225. இதில் பயன்பெற்ற தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 97,417 ஆகும். இத்திட்டத்திற்காக வழங்கப்பட்ட கடனுதவி ரூபாய் 4,736.44 இலட்சமாகும்.

1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 3,416.14 இலட்சம் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது. பயன்பெற்றோர் எண்ணிக்கை 2,71,563. இதில் பயன்பெற்ற தாழ்த்தப்பட்ட பிரிவினைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 1,020,26. இத்திட்டத்திற்காக வழங்கப்பட்ட கடனுதவி 6,286.87 இலட்சமாகும்.



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தால், 1983-84-ஆம் ஆண்டில் பயன்பெறத்தக்கவர்கள் எண்ணிக்கை 2,26,800. மான்ய ஒதுக்கீடு 3,600 இலட்சமாக இருக்கும்.

அரசின் பெரிய திட்டங்களில் இத்திட்டம் ஒரு பெரிய திட்டமெனப் பொருளாதார நிபுணர்களால் பாராட்டப்படுகிறது என்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.



* பிளவுபடுத்தும் அயல சக்திகளைப் புறம் தள்ளி, உழைப்பவரே உயர்ந்தவர் என்ற தத்துவத்தை நிலைநாட்ட உழைக்கும் மக்கள் ஒன்று சேர வேண்டும்!
* எதேச்சாதிகாரமும் சர்வாதிகாரமும் காற்றடைத்த பலூனைப் போன்றவை; எந்த நேரத்திலும் உடைந்துவிடும்!



# பெருமை மிகு பேரூராட்சிகள்

புற நகரங்கள் மற்றும் பெரு நகரங்களை இணைக்கும் நல்ல தோர் பாலமாகச் சிறிய நகர்கள் இயங்குவதனால், வளர்ச்சிப் பணியில் சிறு நகரங்கள் வளர்ச்சியுற முதலிடம் அளிக்கப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு சிறிய மற்றும் நடுத்தரமான நகரங்களின் முன்னேற்றத்திற்கும், அவற்றிற்குரிய அத்தியாவசிய மற்றும் அடிப்படைத் தேவைகளை உடனுக்குடன் எவ்விதச் சிரமமுமின்றி நிறைவு செய்யவும் தமிழக அரசு மூலம் இதற்கென்று ஒரு தனிப் பேரூராட்சி இயக்ககம் 13.5.1981லிருந்து துவக்கி வைக்கப்பட்டது.

தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு 620 பேரூராட்சிகள் மற்றும் நகரியங்களில் உள்ளது. மாநிலம் முழுவதும் ஏழு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திற்கும், பேரூராட்சி மண்டல இயக்குநர்கள் நியமிக்கப்பட்டு பேரூராட்சிகள் நிர்வாகம் மற்றும் முன்னேற்றம் பராமரிக்க வழிவகை செய்யப்பட்டது. தன்னிறைவுத் திட்டத்தினைப் பேரூராட்சிகளுக்கு விரிவாக்கி உத்தரவிட்டபோது மேலே குறிப்பிட்ட ஏழு மண்டலங்கள் மாவட்ட அளவில் மாற்றியமைக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்டப் பேரூராட்சி அலுவலர் நியமிக்கப்பட்டு, அவரை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளராக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டது.

பேரூராட்சிகள் இயக்ககம் துவக்கப்பட்டு இரண்டாண்டுகளில் வரவேற்றுப் பாராட்டக்கூடிய சாதனைகள் பல புரிந்துள்ளது:

பேரூராட்சிகள் இரண்டாண்டு காலத்தில் கீழ்க்கண்ட திட்டங்களில் பயனடைந்துள்ளன.

## குடிநீர்த் திட்டம்

168 பேரூராட்சிகளில் பெரிய குடிநீர்த் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. 67 பேரூராட்சிகளில் 11.08 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பணி நிறைவேற்றப்பட்டு வருகின்றது. 210 பேரூராட்சிகளுக்குரிய திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளன. 100 பேரூராட்சிகளில் 1983-84ஆம் ஆண்டில், எடுத்துச் செய்யவேண்டிய பணிகள் சம்பந்தமாக அரசிற்கும், குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் கருத்துக்கள் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உலக வங்கியின் மூலம் பொருளுதவி பெற 72 திட்டங்கள் ரூ. 37.23 கோடி செலவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. குடிநீர்த் திட்டத்திற்குக் கூடுதலாகச் செலவு ஆகின்ற காரணத்தினாலும், பேரூராட்சிகளின் நிதிநிலை அதற்கு ஈடுகட்ட முடியாத நிலையில் உள்ளதாலும், அரசு 1982-83ஆம் ஆண்டில், 50 சதவீத மான்யம் அளித்து திட்டம் நன்முறையில் செயல்பட உதவியுள்ளது. 1983-84ஆம் ஆண்டில் மேற்படி திட்டத்தின்கீழ் 11 திட்டப் பணிகள் 5.90 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு அனுமதித்துள்ளது.

## வறட்சி நிவாரணம்

1981-82 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் 3 பேரூராட்சிகளில், குடிநீர்வழங்கு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளுக்குத் தனி மின் இணைப்பு ரூ. 10.53 இலட்ச ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

1982-83ஆம் ஆண்டில் 24 பேரூராட்சிகளில் குடிநீர் விநியோகத் திட்டத்திற்குத் தடங்கலின்றி மின்சாரம் கிடைக்க ரூ. 66.59 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு மேற்படி 27 பேரூராட்சிகளிலும் நாள்தோறும், எவ்விதத் தடையுமின்றிக் குடிநீர் விநியோகம் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது.

32.06 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் குடிநீர் வழங்குவதிலுள்ள 18 திட்டங்களையும் மேம்பாடு செய்வதற்கும் 25 பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்டத்தினை விரிவுபடுத்த ரூ. 37.14 இலட்சம் மதிப்பீட்டில் குழாய்கள் அமைக்க வறட்சி நிரவாணத் திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.



3,464 குழாய்க் கிணறுகள் ரூ. 8.66 கோடி திட்ட மதிப்பீட்டில் தோண்டுவதற்கு அனுமதிக்கப் பட்டு, 1,968 குழாய்க் கிணறுகள் முடிக்கப்பட்டுள்ளன.

வறட்சி நிவாரணப் பணியின் கீழ் குடிநீர்ப் பற்றாக்குறையுள்ள இடங்களுக்குக் குடிநீர் எடுத்துச் சென்று வழங்குவதற்கு ரூ. 45.22 இலட்சம் செலவில் 74 பவர் டில் லர்கள் (குடிநீர்த் தொட்டி இணைப்புடன்) 35 தண்ணீர்த் தொட்டிகள், 135 இரும்புத் தொட்டிகள் அமைக்கவும் அனு மதித்து உள்ளது. பேரூராட்சி கள் நிர்வாகத்திற்கு, வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் குடி நீர் வழங்கும் திட்டத்திற்காக மட்டும் மொத்தம் ரூபாய் 10.57 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. கடன் நிலையில் ரூ. 58 இலட்சம் அனுமதித்துள்ளது.

**துப்புரவுத் திட்டம்**

திருச்சி மாவட்டத்தில் உள்ள லப்பைக்குடிக்காடு பேரூராட்சி யில் 2,144 உலர் கழிப்பிடங் களைத் துப்புரவுக் கழிப்பிடங் களாக மாற்றியமைக்க ரூ. 12 இலட்சம் செலவிடப்பட்டு, பணி கள் முடியும் தறுவாயிலுள்ளன.

**சாலைகள்**

இரண்டாண்டுக் காலத்தில், பேரூராட்சிகளில், 2,121 கி.மீ. உள்ள சாலைகள் ரூ. 3.46 கோடி செலவில் செப்பனிடப்பட்டுள் ளன.

**வடிகால்**

இத்திட்டத்தின்கீழ் 286.4 கி. மீட்டர் தூரத்திற்கு வடிகால்கள் ரூ. 264 இலட்சம் செலவில் சென்ற இரண்டாண்டுக் காலங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்**

தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் 8 விதப் பணிகள் 119.72 லட்சம் ரூபாய் செலவில் சிறப்புறபேரூராட்சிகளில் செயல் படுத்தப்பட்டுள்ளன.

**தெருவிளக்குகள்**

சென்ற இரண்டாண்டுக் காலத் தில் பேரூராட்சிகளில் சோடியம் வேப்பர் 57, மெர்க்குரி வேப்பர் 592, 4 குழல் விளக்குகள் 3959, சாதாரண விளக்குகள் 959 என்ற வகையில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு, பராமரிக்கப் பட்டு வருகின்றன.

இத்துடன் 7,864 சாதாரண விளக்குகள் குழல் விளக்குகளாக வும், 286 குழல் விளக்குகள் மெர்க்குரி மற்றும் சோடியம் வேப்பர் விளக்குகளாகவும் மாற்றி யமைக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த புறநகர் முன் னேற்றத் திட்டத்தின்கீழ், பலன் தரத் தக்க பல திட்டங்கள் அனு மதிக்கப்பட்டு அவை செயல் முறையில் உள்ளன.

1983-84 ஆம் ஆண்டில், 13 திட்டங்கள் ரூ. 110.34 இலட்சம் செலவில் அனுமதிக்கப்பட்டுள் ளன.

**நகரிய முன்னேற்றம்**

ரூ. 20 கோடி செலவில், மாமல்லபுரம், இராமேசுவரம் மற்றும் கன்னியாகுமரி நகரியங் களைச் சர்வதேச சுற்றுலா இடங்களாக மாற்றி அமைக்க மாபெரும் திட்டம் தயாரிக்கப் பட்டு மத்திய அரசிற்கு ஒப்புத லுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளது. 1982-83 ஆம் ஆண்டில் கடை கள், போக்குவரத்து நிலையங் கள், கட்டணக் குளியலறைகள், திறந்தவெளி அரங்குகள், மின் வசதி, குழந்தைகள் பூங்கா மற் றும் கேளிக்கை நிலையங்கள் அமைக்க அரசு 50 சதவீதம் மான்யம் மற்றும் 50 சதவீத

சென்ற இரண்டு ஆண்டுகளில் 35 பேரூராட்சிகளில் தண்ணீர் தொட்டிகளுடன் கூடிய பவர் டிரில்லர்கள் ரூ. 17.50 இலட்சம் தொகையில் துப்புரவுப் பணி களுக்காக வழங்கப்பட்டுள்ளன.

**பேரூராட்சி அலுவலகக்கட்டடங்கள்**

ரூ. 8.39 இலட்சம் செலவில் 21 பேரூராட்சி அலுவலகக் கட்ட டங்கள் கட்டும் பணி நடை பெற்று வருவதுடன், 10 பேரூ ராட்சிகளில் தேசிய ஊரகவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 5.01 இலட்சம் செலவில் அலுவல கக் கட்டடப்பணிகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

**தன்னிறைவுத் திட்டம்**

1982-83 ஆம் ஆண்டில் பேரூ ராட்சிகளுக்குத் தன்னிறைவுத் திட்டத்தின் முதல் கட்டமாக 146 பேரூராட்சிகளில் ரூ. 5 கோடி முழு மான்யத்தில் விரி வாக்கப்பட்டுள்ளது. அத்தியாவசி யத் தேவைகள் பலவாக இருப்பி னும், குடிநீர் வழங்குதல், இணைப் புச் சாலைகள், சிறு பாலங்கள், வடிகால்கள், ஆதிதிராவிடர்க் காலனியில் உள்ள இடுகாட்டிற்குப் பாதை அமைப்பு, தெருவிளக்கு கள் மற்றும் சலவைத் துறை ஆகிய பணிகளையே அரசு இத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுத் துள்ளது. 620 பேரூராட்சிகளுக் கும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படவிருக்கும் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி ரூ. 98.64 கோடி என அரசுக் குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1983-84 ஆம் ஆண்டிற்கு இரண் டாவது கட்டமாக மேற்படி திட் டத்தை 200 பேரூராட்சிகளில் செயல்படுத்துவதற்கு அரசு ரூ. 10 கோடி அனுமதித்துள்ளது.



மனத்தில் மாசு, மதவெறி, சாதி, சுய நலம், ஆணவம் இவற்றை மக்கள் விட் டொழிக்க வேண்டும்; அப்போதுதான் நம்நாடு முன்னேறும்!





# நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

சென்னை நகர்ப்புறவளர்ச்சித் திட்டம் மற்றும், செயல் படுத்தும் பொறுப்பு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நகர்ப் புறப் பகுதிகளில் வாழும் ஏழை எளியோருக்கான வசதிகளை குறைந்த செலவில் மேம்படுத்து வதே இத் திட்டத்தின் தலை யாய நோக்கமாகும். முதலாவது சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (MUDP I) 1977-78 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு தற் போது நிறைவடையும் தறுவா யில் உள்ளது. இரண்டாவது சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (MUDP II) 1981-82ம் ஆண்டுமுதல் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத் திட்டங்கள் மூலம் சென்னை நகரின் குடிசைப் பகுதிகளில் வேலை வாய்ப்பு உண் டாக்க, மருத்துவ வசதி வழங்க, ஆரம்பப்பள்ளிகள் அமைக்க, தன் னிறைவு வீட்டு, மனைகள் வழங்க சிறுதொழில் தொடங்க உதவி நகர்ப்புற தூய்மைப் பணிக்கு உதவி, சாலை அபிவிருத்தி, மற் றும் நகரப் பேருந்துப் பணிக்கு உதவி ஆகியவைகளுக்கு வழி வகைகள் செய்கின்றன.

**குடிசைப்பகுதிகள் மேம்பாடு**

குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழை எளியோரின் நலனுக்காக தெரு விளக்குகள், சாலை மேம் பாடு, வடிகால்கள், குடிநீர் வசதி பொதுக்கழிவறை முதலான வசதி கள் தமிழக குடிசை மாற்று வாரி யத்தின் மூலம் செய்து தரப்படு கின்றன. முதலாவது சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் கீழ் 24862 குடும்பங்கள் வாழும் 53 குடிசைப் பகுதி களை ரூ 444 இலட்சம் செலவில் மேம்படுத்தும் பணிகள் நிறை வேற்றப்பட்டு உள்ளன. திட்டத் தில் பயன்பெறும் 24862 குடும் பங்களுக்கு, 1984-ஆம் ஆண்டிற் குள் குடிசை மனை உரிமைப் பத் திரம் வழங்க திட்டமிட்டு, இது வரை 9736 குடும்பங்களுக்கு மனை உரிமைப்பத்திரம் வழங்கப் பட்டுள்ளது. குடிசைகளை மேம் படுத்துவதற்காக குடும்பம் ஒன் றுக்கு ரூ. 1500 முதல் ரூ. 3,500 வரை வழங்கப்படுகின்றது. மாத வருமானம் ரூ. 200க்குள் உள்ள குடும்பங்களுக்கு ரூ. 600 மானிய மாக வழங்கப்படுகிறது. இதற் காக ரூ. 1033.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இது வரை 5291 குடும்பங்களுக்கு ரூ. 148 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட குடிசைப் பகுதிகளில் உள்ள மக்களுக்காக, 5000 பேர்களுக்கு வேலைவாய்ப் பளிக்க 47 குடிசைத் தொழிற் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. தவிர 4064 நபர்களுக்கு, வேலை கிடைக்கும் அளவில், பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. சுயமாக வேலை செய்து சம்பாதிக்க, 1153 நபர் களுக்கு வங்கிகள் மூலம் கடன் உதவி செய்து தரப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழைப்பிரிவினர் வாழும் குடிசைப் பகுதியினை வெள்ள அபாயத்தி லிருந்து தவிர்க்க, ரூ. 483 லட் சம் செலவில் வெள்ள நீர் வடி கால் கட்ட, செப்பனிட நீர்மா





ணக்கப்பட்டுள்ளது. மாம்பலம், நந்தனம், விருகம்பாக்கம், சாலிகிராமம் மற்றும் அரும்பாக்கம் பகுதிகளில் உள்ள வடிகால்கள் கட்ட, செப்பனிடப்பட்டு வருகின்றன.

குடிசைப் பகுதிகள் மேம்பாட்டின்கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்குத் தேவையான பயிற்சி, உபகரணங்கள் மற்றும் கட்டடங்கள் அளிக்கப்படுகின்றன.

1. சிறுவர்களுக்கான சிறார் பள்ளிகள், குழந்தைகள் காப்பகம் அமைத்தல், சத்துணவு வழங்குதல், மருத்துவ உதவி, தடுப்பு ஊசி போடுதல் போன்ற பணிகள் மூலம் 6 வயதிற்குட்பட்ட 17000 சிறுவர்கள் பராமரித்தல்.
2. 7,000 கருவுற்ற தாய்மார்களுக்குத் தேவையான சத்துணவு மற்றும் மருத்துவ உதவி அளித்தல்.
3. 2,000 பெண்டிருக்குக் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய அறிவுரைகள் மற்றும் நடைமுறைக் கல்விப் பயிற்சி வழங்குதல்.
4. சிறுவர்களுக்கு போலியோ தடுப்பு ஊசி போடுதல், மற்றும் கருவுற்ற தாய்மார்களுக்கு த்தடுப்பு ஊசி போடுதல்.

மேற்கண்ட பணிகள் மூலம், சிறார் பள்ளியும், காப்பகமும் இணைந்த 129 மையங்களில் 7522 சிறுவர்களும் 2959 குழந்தைகளும் சேர்ந்துள்ளனர்; சத்துணவு திட்டம் மூலம் 15,000 சிறுவர்களும் 8000 சிறு குழந்தைகளும் பயன் பெற்றுள்ளனர். 28,000 பெண்டிருக்கு நடைமுறைக் கல்விக்கான பயிற்சி தரப்பட்டுள்ளது. 17,000 சிறுவர்களுக்கு மேல் இளம்பிள்ளை வாதத்தடுப்பு ஊசியும், 26,000 சிறுவர்களுக்கு மேல் தடுப்பு ஊசியும் போடப்பட்டுள்ளது.

திட்டத்தின் கீழ் மேலும் 50,000 குடும்பங்களுக்கு 1981 முதல் 1985 க்குள் மேற்குறித்த வசதிகள் செய்து தரும்பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. 250 சிறார் பள்ளிகளும், 15 மருத்துவ மையங்களும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 27,000 குடும்பங்களடங்கிய 94 குடிசைப் பகுதிகள் மேம்படுத்துவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டு, 8000 குடும்பங்களடங்கிய 27 குடிசைப் பகுதிகளில் மேம்படுத்தும் பணி நிறைவு பெற்றுள்ளது. 50,000 குடும்பங்களுக்கு குடியிருக்கும் குடிசை மனை உரிமை வழங்கப்பட உள்ளது. இதுவரை 1577 குடும்பங்களுக்கு நில உரிமைப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. தாங்கள் வாழும் குடிசைகளைத் திருத்தி அமைக்க, 796 குடும்பங்களுக்கு ரூ. 18.49 லட்சம் கடன் உதவி வழங்கப்பட்டு உள்ளது. இந்தத் திட்டம் முழுதும் நிறைவு பெற ரூ. 2587 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தன்னிறைவு வீட்டு மனைத்திட்டம்

இந்தத் திட்டத்தில் ஏழை எளியோருக்கு சகல வசதிகளும் அமைந்த வீட்டு மனைகள், சமுதாயக் கூடங்கள், வீடுகட்ட கடனுதவி முதலியன வழங்கப்படும். அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் பகுதிகளில் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம் நிறைவு பெற்று 5186 வீடுகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கும், 2882 மனைகள் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கும் முதலாவது திட்டத்தின்கீழ் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 1517 லட்சம் ரூபாய், 13,000 மனைகள் வழங்க செலவிடப்படும். இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 13,000 மனைகள் வழங்கப்படும். இரண்டாவது திட்டம் தொடரப்பட்டு, மொகப்பேர் நெற்குன்றம் பகுதிகளில் மேலும் 15,000 வீட்டுமனைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மொகப்பேர் பகுதியில் 5000 வீடு-மனைகள் இன்னும் மூன்று மாத காலத்தில் முடிவடையும். இவற்றில் 3700 வீடுகள்-மனைகள் பொருளாதார நலிவு பெற்ற ஏழைபிரிவினருக்கும், 1300 வீடுகள் குறைந்த வருவாய் பிரிவினருக்கும் வழங்கப்பட உள்ளது. இதுவரை ரூ. 652 லட்சம் இத்திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளது. தவிர திட்டப் பகுதிகளில் உள்ள ஏழை எளியோருக்கு வேலை வாய்ப்பு வசதிகளை பெருக்கும் வகையில் திட்டப்பகுதிகளில் சிறு தொழில் அதிபர்கள் மூலம் சிறு தொழில் தொடங்க தொழில் மனைகள் ,தொழிற் கூடங்கள், இயந்திரங்கள் கடனுதவி போன்ற பணிகள் நிறைவேறி வருகின்றன. 150 தொழிற் கூடங்கள் அரும்பாக்கம், வில்லிவாக்கம் மற்றும் கொடுங்கையூர் பகுதிகளில் ரூ. 194 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 49 லட்சம் இயந்திரங்கள் வாங்க கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது. மொகப்பேர், நெற்குன்றம் பகுதிகளிலும் ரூபாய் 479 லட்சம் செலவில் இது போன்ற சிறு தொழில் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

## குடிநீர் வசதி மற்றும் கழிவுநீர் அகற்றுதல்

குடிசைப் பகுதியில் வாழ்பவர்களுக்கும், பொது குடிநீர் குழாய்







உபயோகிப்பவருக்கும் ஏற்ற வகையில் தற்போதுள்ள குடிநீர் மற்றும் வடிகால் அமைப்பினை மாற்றியமைப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும். கழிவு நீர் அகற்றும் திட்டத்தின் கீழ் 4.2 கிலோ மீட்டர் தூரத்திற்கு புதிய குழாய்கள் அமைத்தல், மற்றும் தற்போதுள்ள அமைப்பை சீர்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு ரூ. 1171 லட்சம் வரை செலவிடப்பட்டுள்ளது. இந்த பணி நிறைவுற மேலும் ரூ. 80 லட்சம் செலவாகும்.

சென்னை நகரின் போக்குவரத்தை எளிதாக்க, 8 கிலோ மீட்டர் உள்வட்ட சாலைஅமைத்தல், 7 சிறுபாலங்கள், 2 மேம்பாலங்கள், 24 சந்திப்புகளுக்கு விளக்குகள் போடுதல் போன்ற பணிகள் நிறைவேறியுள்ளன. பாதசாரிகளின் நலன் கருதி 200 கிலோ மீட்டர் நடைபாதைகளும் 50 கிலோ மீட்டர் சைக்கிள் வழித்தடங்களும் 7 பாதசாரிகளுக்கான சுரங்க பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்ததிட்டத்திற்கான செலவு தொகை ரூ. 1369 லட்சம் ஆகும்.

மேலும் 6 கிலோ மீட்டர் உள்வட்ட பாதை பாடி மாதவரம் வரை அமைத்தல், சென்னை-திருவள்ளூர் சாலையை மேம்படுத்தும் பணி நிறைவேறிவருகின்றது. ரூ. 532 லட்சம் இதற்காக செலவிப்படும். இந்தப் பணி 1984ல் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நகர சுத்திகரிப்பு- பராமரிப்பு

இத்திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சியின் நகர சுத்திகரிப்பு பணிகளுக்கான வண்டிகள் வாகனங்கள் வாங்கவும், குப்பைகள் சேகரிப்பு நிலையம் மற்றும் 8 பணி மனைகள் கட்டவும் ரூ. 161 லட்சம் வரை செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தவிர நகரில் சிறு சாலைகள், நடைபாதைகள் வடிகால்கள், தெருவிளக்குகள், பொதுக் கழிவறைகள் போன்ற பணிகளுக்காக ரூ. 147 லட்சம் செலவிடப்படும்.

## பயணிகள் பேருந்து போக்குவரத்து

1977 முதல் 1981ஆம் ஆண்டு வரை 285 பேருந்துகள் வாங்க பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ. 424 லட்சம் உதவி அளிக்கப்பட்டுள்ளது. பேருந்துப் பணி மனைகள் 3, பேருந்து நிலையங்கள் 8 கட்ட ரூ. 147 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இரண்டாவது திட்டத்தின்படி 1981 முதல் 83க்குள் 555 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு பல்வேறு வழித்தடங்களில் விடப்பட்டுள்ளன. ஒரு பணிமனை கட்டும் வேலையும் முடிவடைந்து வருகின்றது. இதற்காக ரூ.1260 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

சென்னை பெருநகரின் ஏழை மக்களின் நிலையினை குறைந்த செலவில் மேம்படுத்த 1977ஆம் ஆண்டு முதல் இன்று வரை சுமார் ரூ. 72கோடி செலவிடப்பட்டுள்ளது. நிறைவேறியுள்ள பணிகள் மூலம் ஏழைமக்களின் வாழ்க்கைத் தரம் சீர் பெற்றுள்ளது.

சென்னை நகரின் வடஎல்லையில் அமைந்துள்ள மணலி தொழிற் பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை, உரத் தொழிற்சாலை போன்ற பெரிய தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. இதற்கேற்ற வகையில் குடியிருப்புகள் இல்லாததால் மணலியில் அனைத்து வசதிகளும் அமைந்த குடியிருப்பு பகுதியை 256 ஏக்கர் பரப்பில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்படுத்தியுள்ளது. 1973 முதல் 1983வரை ரூ. 393 லட்சம் செலவில் 958 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 500 குடும்பங்களை வரும் இரண்டு ஆண்டுகளில் குடியேற்றத் திட்டமுள்ளது.

சென்னை நகருக்கு வடக்கில் செங்கற்பட்டுக்கு அருகே மறைமலை நகர் என்ற புதிய நகரம் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் அமைக்கப்பட்டு வருகின்றது. திட்ட முடிவில் சுமார் 1 லட்சம் ஜனத்தொகையையும் அமைத்து வசதிகளும் கொண்டதாக அமையவிருக்கும் இந்த புது நகரத்திற்காக 1000 ஏக்கர் நிலம் ஆர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. ரூ. 472 லட்சம் செலவில் 678 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 508 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு வருகின்றன. இது தவிர 463 வீட்டு மனைகளும் பொது மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நகரை ஒட்டி 480 ஏக்கரில் ஏராளமான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு 148 தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னை நகருக்கு அருகாமையில் கோயம்பேடு பகுதியில் மொத்த வியாபார மையம் ஒன்றினை 330 ஏக்கர் பரப்பளவில் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. சுமார் 3000 கடைகள் அமைத்து ஜவுளி, உணவு தானியங்கள், அழுகும்பொருள்கள் ஆகியவற்றின் மொத்த வியாபாரத்திற்கு உதவ தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான நில ஆர்ஜிதத்திற்காக இதுவரை ரூ. 95 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்காக ரூ.1432 லட்சம் ரூபாயை, வரும் 5 ஆண்டுகளில் செலவிட அரசு தீர்மானித்துள்ளது.

சென்னை நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, நகரின் வெளிப்புறத்தில் மூன்று தேசிய நெடுஞ்சாலைகளை ஒட்டி ஆலந்தூர் (தேசிய நெடுஞ்சாலை 45,) கோயம்பேடு (தேசிய நெடுஞ்சாலை 4) மற்றும் மாதவரம் (தேசிய நெடுஞ்சாலை 5) ஆகிய இடங்களில் பயணிகள் பேருந்து நிலையங்களும், சரக்கு வாகன நிலையங்களும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காக ரூ. 324 லட்சம் செலவிட திட்டமிடப்பட்டு, ஏற்கனவே ரூ. 100 லட்சம் அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1983-84 திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. 100 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



புதிய ஒரு ரூபாய் நாணயத்தை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. வழக்கமான ஒரு ரூபாய் நாணயத்தைக் காட்டிலும் இது அளவில் சிறியதாகவும் எடை குறைவானதாகவும் இருக்கும். [illegible] வடிவமான இந்த நாணயம் 75 சதவிகிதம் செம்பு, 25 சதவிகிதம் நிக்கல் ஆகியவை கலந்து செய்யப்பட்டுள்ளது. இந்த நாணயத்தின் ஒரு புறம் அசோக ஸ்தூபி பொறிக்கப்பட்டுள்ளது. மற்றொரு புறத்தில் 1 ரூபாய் என்று எண்ணில் எழுதப்பட்டு, தானியக் கதிர் படமும் பொறிக்கப்பட்டிருக்கிறது.

மண்ணைப் பொன்னாக்கும்
மணிச்சத்து மிகுந்த அடியுரம்




நெற்பயிருக்கு ஸ்பிக் டி.ஏ.பி. இடுவதால்,
● ஸ்பிக் டி.ஏ.பி.யில் அமோனியா வடிவில் தழைச்சத்து 18 சதவீதமும், விரைந்து முழுவதும் தண்ணீரில் கரையக் கூடிய மணிச்சத்து 46 சதவீதமும் இருப்பதால் பயிரின் வளர்ச்சிக் காலம் முழுவதும் இச்சத்துக்கள் சீராகக்கிடைக்கின்றன.

● நெற் பயிரின் வேர்கள் துரிதமாக வளர்கின்றன. ● பக்கச் சிம்புகள் அதிகமாக வெடித்துத் தூர்களின் எண்ணிக்கையும், ஒவ்வொரு தூரிலிருந்து வெளிவரும் கதிர்களின் எண்ணிக்கையும், கதிர்களிலுள்ள மணிகளின் எண்ணிக்கையும் எடையும் கூடுகிறது. ● இதனால் அதிகப் படியான மகசூல் ஏக்கருக்கு 4 முதல் 5 மூட்டைகள்

CAS/SPIC/11/82 TAM

ஸ்பிக் டி.ஏ.பி. 18:46:0
மிக அதிக மணிச்சத்துள்ள, மிகச் சிக்கனமான காம்ப்ளெக்ஸ் உரம்



ஸ்பிக் உர சிபாரிசு — ஏக்கருக்கு/மூட்டை அளவில்

| உயர் விளைச்சல் இரகங்கள் | அடியுரம் | | மேலுரம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | நட்ட 15 முதல் 20 நாள் வரை | | நட்ட 35 நாள் 40 நாள் வரை | |
| | ஸ்பிக் டி.ஏ.பி. | ஸ்பிக் யூரியா | ஸ்பிக் யூரியா | பொட்டாஷ் | ஸ்பிக் யூரியா | பொட்டாஷ் |
| குறுகிய கால இரகங்கள் | 1 | $\frac{1}{2}$ | $\frac{1}{2}$ | $\frac{1}{2}$ | $\frac{1}{2}$ | $\frac{1}{4}$ |
| நடுத்தர கால / நீண்டகால இரகம் | $1\frac{1}{2}$ | $\frac{1}{2}$ | $\frac{1}{2}$ | $\frac{1}{2}$ | $\frac{1}{2}$ | $\frac{1}{2}$ |



SPIC

இலட்சக்கணக்கான விவசாயிகள் விரும்பும் உரம் ஸ்பிக் யூரியா


# பிற்பட்டோர் நலப் பணிகள்

மொத்த மக்கட் தொகையில் 54 விழுக்காடு பிற்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர் ஆவர். இவர்கள் வாழ்வில் மலர்ச்சி ஏற்பட அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துவருகிறது. இவர்கள் நலனில் தனிக் கவனம் செலுத்தத் தனியானதொரு துறையே இயங்கி வருகிறது. இத்துறை குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப் பட்ட இனத்தவர் நலனையும் கண்காணித்துக் கொள்கிறது.

## கல்வி

பொருளாதார முன்னேற்றம் பெரிதும் கல்வி முன்னேற்றத்தையே சார்ந்துள்ளது. இதனை உணர்ந்த இவ்வரசு கல்வி மேம்பாட்டுக்காகப் படிப்புதவித் தொகை மற்றும் மாணவர் இல்லங்கள் ஏற்படுத்தி இலவச உண்டி, உறையுள் வசதிகளைச் செய்து தருகிறது. மேலும் இம்மாணவர்களுக்கு மூன்றாம் வகுப்பு வரை பாடப் புத்தகங்கள் கல்வித் துறையின் மூலம் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. இந்த உதவித் தொகை பெறுவதற்கு மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5000-க்குள் இருக்க வேண்டும். இந்தப் புதிய வருமான வரம்பு 1981-82-ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. படிப்புதவித் தொகை பெறும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதற்கான ஒதுக்கீடும் உயர்ந்து கொண்டே வருகிறது. பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப் பட்ட மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்க 1979-80ல் ரூ.295.21 இலட்சம் செலவிடப்பட்டது. 1983-84ம் ஆண்டிற்கு ரூ. 372.04 இலட்சமாக ஒதுக்கீடு உயர்ந்துள்ளது.

இம்மாணவர்கள் தங்கிப் பயில மாணவர் இல்லங்கள் நடத்தப்படுகின்றன. தற்பொழுது 375 இல்லங்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காகவும், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக 65 இல்லங்களும் உள்ளன. சென்ற மூன்றாண்டுகளில் மட்டும், பிற்பட்டோர் நலனுக்காக 114 இல்லங்களும், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக 5 இல்லங்களும் திறக்கப்பட்டுள்ளன. இந்த இல்லங்களில் மொத்தம் 26,712 மாணவர்கள் தங்கிப் பயிலுகின்றனர். இந்த இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அனுமதிக்கப்படும் உணவுச் செலவுத்தொகை 1981-82ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினருக்காக 277 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் 50,413 மாணவர்கள் பயில்கின்றனர். இம்மாணவர்களுக்குப் புத்தகம் எழுதுபலகை மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதனால் ஆண்டுதோறும் 42,000 மாணவர்கள் பயன் பெறுகின்றனர். குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கான பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கும், இல்லங்களில் தங்கிப் பயிலும்மாணவர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

இந்திய ஆட்சிப் பணி, காவல் பணி போன்ற தேர்வுகளில் இம்மாணவர்களின் வெற்றி வாய்ப்பினைக் கூட்டும் நோக்குடன் ஒரு முன்னோடிப் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது.

## பொருளாதார முன்னேற்றம்

கிராமத் தொழிலாளர்கள் (முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளி போன்றவர்கள்) அவரவர் தொழிலைத் திறம்படச் செய்து நல்ல வருவாயைப் பெற்று மேம்பாடுறத் தொழிற் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 8000 பேர் இதனால் பயன் துய்க்கின்றனர். சலவைத் தொழிலாளர்கள் சலவையகம் தொடங்க 1982-83 முதல் மானியம் வழங்கப்படுகிறது. தேவையான இடங்களில் சலவைத்துறைகள் கட்டித் தரப்படுகின்றன.

குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் விவசாயம் செய்து முன்னேறுவதற்காக அவர்களுக்குப் பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கு, ஒரு கிணற்றுக்கு ரூ.2,500 வீதம் மானியம் அளிக்கப்படுகிறது.

## வீட்டு வசதி

குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கு வீடுகள் கட்ட மானியம் மற்றும் கடன் வழங்கப்படுகிறது. தற்போது ஒரு வீடு கட்ட ரூ. 4300 - தேவைப்படுகிறது. இதில் ரூ. 3225 அரசு மானியமாக வழங்குகிறது. இத்தொகையை மேலும் அதிகரிக்கும் கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒட்டர், நாவிதர், வண்ணார் போன்றவர்களுக்கு இலவச வீட்டுமனைகள் 1981-82 முதல் வழங்கப்படுகின்றன. 1983-84ல் ரூ.15 இலட்சம் இதற்காகச் செலவிட அரசு உத்தேசித்துள்ளது.

பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் ''தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்'' என்ற அமைப்பை நிறுவியுள்ளது. இக்கழகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

(1) பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டிற்காகக் குறைந்த வட்டி விகிதத்தில் பொருளாதாரத் தொழில் முயற்சிகளுக்கு உதவித் தொகை அளித்தல்:

(2) பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டிற்காகத் தேவையென்று கருதப்படும் வர்த்தக, வணிகத் தொழில் ரீதியான பல திட்டங்களை நேரிடையாகவும், மறைமுகமாகவும் மேற்கொள்ளுதல்.

இக்கழகம் அரசு நிதி பெறுவதுடன், வங்கிகள், இதர நிறுவனங்கள் மற்றும் இதர வகையில் நிதி உதவி பெற்று இயங்கும். இக்கழகம் மாநில ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற ஏனைய பொருளாதாரத் திட்டங்களில் தீவிர முறையில் பங்கேற்கும்.

தமிழ்நாடு அரசு இரண்டாம் பிற்பட்டோர் உயர் ஆணைக் குழுவினை அமைத்துள்ளது. இக்குழு உச்ச நீதி மன்றத்தின் பல்வேறு முடிவுகளைக் கருத்திற் கொண்டும், சீரிய முறைப்படி சரியான ஆய்வுகளை மேற்கொண்டும், பிற்பட்டோர் இனத்தவர் பட்டியலை ஆய்வு செய்வதோடு, அவர்களுடைய இன்றைய நிலையை அறிந்து அவர்கள் முன்னேற எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிப் பரிந்துரைகள் வழங்கும்.





# பாமரர்க்கு வாழ்வளிக்கும் பட்டுத் தொழில்

**1979**-ஆம் ஆண்டு புதியதாக ஆரம்பிக்கப்பட்ட பட்டு வளர்ச்சித் துறை, தமிழக அரசின் தளராத முயற்சியின் பயனாகக் கடந்த நான்கு ஆண்டுகளில் நல்ல வளர்ச்சி அடைந்துள்ளது.

பட்டு வளர்ச்சிக்காகத் தமிழக அரசு பல திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தியதன் விளைவாக பட்டு முட்டைகள், பட்டுக் கூடுகள் மற்றும் கச்சாப் பட்டு ஆகியவற்றின் உற்பத்தி பல மடங்கு அதிகரித்துள்ளது.

1.4.1980ல் முசுக்கொட்டை சாகுபடியின் பரப்பளவு 31,470 ஏககராவாக இருந்தது. கடந்த 3 ஆண்டுகளில் முசுக்கொட்டை சாகுபடி பரப்பளவு 23,572 ஏக்கர் அதிகப்படுத்தப்பட்டு 1.4.83 அன்று மொத்தச் சாகுபடி பரப்பளவு 55,042 ஏக்கராக உயர்ந்துள்ளது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புறங்களில் ஒரு இலட்சத்து இருபதாயிரம் நபர்களுக்கும் மேலாகக் கூடுதல் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது.

1979-80ஆம் ஆண்டில் நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகளின் உற்பத்தியின் அளவு 60.12 இலட்சம் ஆக இருந்ததை, 1982-83-ஆம் ஆண்டில் 109.80 இலட்சம் ஆக உற்பத்தியின் அளவு அதிகப்படுத்தப்பட்டது. இதேபோல் பட்டு நூற்புக்கான பட்டுக் கூடுகள் மற்றும் கச்சாப் பட்டு உற்பத்தி அதிகரித்துள்ளது.



உள்நாட்டு விதைக் கூடுகளின் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் நோக்குடன் தர்மபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டத்தில் தனியாக உள்நாட்டு விதைக்கூடுகள் உற்பத்திக் கேந்திரம் ( Local Seed Zone ) ஏற்படுத்தப்பட்டது.



- பெண்ணில்லாமல் [illegible] கூறும்போது, [illegible] இல்லை என்றும் [illegible] படித்தான் உழைப்பும் அறிவும் [illegible] வேண்டும்!
- வாழ்வு வளம்பெற வேண்டுமானால் எதிலும் பதட்டம் [illegible] பரபரப்பில்லாத எண்ணமும், [illegible]பில்லாத அன்பும் வேண்டும்.

ஒசூர், கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், சேலம், தாளவாடி ஆகிய இடங்களில் நவீன வசதிகள் அமைந்த புதிய கட்டடங்கள் கட்டப்பட்டதன் விளைவாக, பட்டு முட்டைகள் வித்தகங்களின் உற்பத்தியின் அளவு அதிகரிக்கப்படுத்தப்பட்டுள்ளது.

முசுக்கொட்டை சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பில் நவீன முறைகளைக் கையாளுவதற்கு விவசாயிகளுக்கு அறிவுரை வழங்க மாநிலத்தில் பல இடங்களில் விரிவாக்க நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.




பட்டுக்கூடு அறுவடையில் விவசாயிகள் நல்ல மகசூல் அடையும் நோக்குடன், தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் 65 சமுதாய கிராமிய இளம்புழு வளர்ப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

விவசாயிகள் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு வசதியாக - உதவி இயக்குநர் அலுவலகம், பட்டுக்கூடு அங்காடி, பட்டு நூற்பு நிலையம் மற்றும் பட்டு வித்தகம் ஆகியவை ஒரே இடத்தில் அமையப்பெற்ற மாவட்ட பட்டு வளர்ச்சி மையங்கள் - கோயம்புத்தூர், சேலம், வடஆர்க்காடு மாவட்டத்தில் வாணியம்பாடி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. இதே போன்று ஒரு மையம் மதுரையில் நிறுவ - அரசு ஒப்பளிப்பு பெறப்பட்டு கட்டடங்கள் கட்டும் பணி நடைபெறுகிறது.

தர்மபுரி, சேலம், கோயம்புத்தூர், வாணியம்பாடி ஆகிய இடங்களில் பட்டுக்கூடு விற்பனைக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியில் சுமார் ரூ.25 இலட்சத்திற்கும் அதிகமான முதலீட்டில் சிறிய அளவு பட்டு நூற்பு ஆலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பட்டு வளர்ப்பில் ஏற்பட்டுள்ள நவீன தொழில் நுட்ப வளர்ச்சியைக் கண்டறிய துறையின் இரு முதுநிலை அலுவலர்கள், ஜப்பான் நாட்டிற்குச் சென்று, நமது நாட்டில் பட்டு வளர்ச்சி முன்னேற்றத்திற்கான புதிய தொழில் நுட்பங்களை அறிந்து வந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் பட்டு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்பப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நோக்குடன், தர்மபுரி மாவட்டம் ஒசூரில் பட்டு வளர்ப்புப் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு, பட்டதாரியல்லாத மாணவர்களுக்கு 6 மாதக் காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் பட்டதாரி மாணவர்களுக்கு, கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 11 மாதக் காலப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது.

தமிழக அரசு, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் மத்திய பட்டு வாரியம் ஆகியவற்றின் தாராளமான நிதி உதவியைக் கொண்டு, காஞ்சிபுரத்தில் உள்ள தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு விற்பனை இணையத்தின் நிதி நிலைமை அதிகரிக்கப்பட்டுள்ளது. 82-83ஆம் ஆண்டில் மட்டும் இவ்விணையம் ரூ.2.25 கோடி மதிப்புள்ள 51,000 கிலோ கிராம் கச்சாப் பட்டு வியாபாரம் செய்துள்ளது.

பட்டு வளர்ப்புத் தொழில் ஒரு சிறிய அளவுத் தொழிலாக இருந்த போதிலும், கிராமப்புற மக்களுக்கு இது விரும்பி செய்யக்கூடிய இலாபகரமான தொழில் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.



# கிராமப்புற வீட்டுவசதி

மக்கட்தொகையில் சுமார் 80 சதவீதம் பேர் கிராமப் புறங்களில் வாழ்கின்றனர். 1976-ஆம் ஆண்டுக்கு முன் கிராம கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களினாலும், கிராம வீட்டு வசதிப் பிரிவின் மேற்பார்வையில் வட்டார வளர்ச்சி அதிகாரிகள் வாயிலாகவும், கிராமப்புற மக்களுக்கு வீடு கட்ட கடன் வழங்கப்பட்டு வந்தது. இத்திட்டங்களின் கீழ் கட்டப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்ததால், 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் கிராமப்புறங்களில் வீடுகள் கட்டும் திட்டம் கூட்டுறவு வீட்டுவசதிச்சங்கப்பதிவாளருக்கு மாற்றப்பட்டது. அவ்வாறு கூட்டுறவுத் துறையோடு இத்திட்டம் இணைக்கப்பட்ட பிறகு குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 1978-79ஆம் ஆண்டு தொடங்கிய ஐந்தாண்டு திட்டக்காலத்தில் கிராமக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் வாயிலாகக் கடன் வழங்கி ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென அரசு முடிவெடுத்தது. இத்திட்டத்திற்குக் கிராம மக்களிடையில் கிடைத்த மாபெரும் வரவேற்பினைக் கருத்தில் கொண்டு 1980-81ல் தொடங்கிய ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இரண்டு இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென அரசு முடிவெடுத்தது. 1982-ஆம் ஆண்டு இந்தியத் தலைமை அமைச்சரால் அறிவிக்கப்பட்ட புதிய 20 அம்சத் திட்டத்தில் இத்திட்டம் இடம் பெறுகிறதனால் இதனுடைய முக்கியத்துவம் நன்கு தெளிவாகும்.

கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் தற்பொழுது 104 வட்ட கோட்ட அளவிலான கிராமக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் வாயிலாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் இத்திட்டத்தினை நிறைவேற்றும் முகவராமைப்பாகப் பணியாற்றுகிறது.

இத்திட்டத்தின் கீழ், கிராமப் பகுதிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் வீடுகள் கட்ட, வட்ட கோட்ட அளவிலான கிராமக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகள் 200 சதுர அடி பரப்பளவுள்ள ஒரே வகையான வடிவமைப்பைக் கொண்டவை. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளின் மதிப்பீட்டுச் செலவு ரூ.3000 ஆக நிர்ணயிக்கப்பட்டு பின்னர் ரூ. 3750 ஆகவும், அதன் பின்னர் ரூ.4000எனவும் உயர்த்தப்பட்டது.

1983-84ஆம் ஆண்டு முதல் இம் மதிப்பீட்டுச் செலவு ரூ.6,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் ரூ.1500 பயனடைவோரினால் பணமாகவோ அல்லது கட்டுமான பொருள்கள் உழைப்பாகவோ தரப்படுதல் வேண்டும். இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட நபர்களுக்குக் கீழே குறிப்பிட்டுள்ள சிறப்புச் சலுகைகள் தரப்பட்டுள்ளன.

1) ரூ.1000 - மானியமாக தரப்படுகிறது. இதைப் பெற ஆதிதிராவிடர்கள் ஆண்டு வருமானம் 4200 ரூபாய்க்குள் இருக்க வேண்டும். ஆதிதிராவிடர்கள் பெருமளவில் வாழும் இடங்களில் வீடு கட்டிக் கொள்ள முன்வரும் ஆதிதிராவிடரல்லாதவர்களுக்கும் இம்மானியம் வழங்கப்படும்.

2) ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகைகளுக்கான வட்டியினை அரசு ஏற்கிறது.

1980-81ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 1,22,808வீடுகள் வட்ட கோட்ட அளவிலான கிராம கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தினால் கடன் வழங்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஆதிதிராவிடர்களால் 100709 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.







# நலங்காக்கும் நற்பணி

கி.பி. 2000-க்குள் யாவருக்கும் நல்வாழ்வு அளிக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில் தமிழக மக்களுக்காக குறிப்பாகக்கிராமப்புறங்களில் வாழும்பெரும்பான்மையோரின் நல்வாழ்வைக் கருதி இவ்வரசு திட்டங்கள் தீட்டி முனைப்புடன்செயல்படுத்தி வருகின்றது. 1980-81 முதல் 1982-83 வரையுள்ள சென்ற மூன்றாண்டுக் காலத்தில் மக்கள் நல்வாழ்வுக்காகச் செயல்படுத்தப்பட்ட முக்கிய திட்டங்களும், சாதனைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**சுகாதாரக் கிளை நிலையங்கள்:**

கிராமப்புற மக்களுக்கு அடிப்படையில் சுகாதாரம் மற்றும் மருத்துவப் பணிகளை அவர்களுக்கு மிக அண்மையில் அளிப்பவை சுகாதாரக் கிளை நிலையங்கள். ஏறத்தாழ 10,000 மக்களுக்கு ஒரு கிளை நிலையம் 1979-80 வரை செயல்பட்டு வந்தது. 1980-81 முதல் 5,000 மக்களுக்கு ஒரு கிளை நிலையம் வீதம் அமைக்கவேண்டும் என்ற அடிப்படையில் கூடுதல் கிளை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்றாண்டுக் காலத்தில் 1,226 கூடுதல் கிளை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது மொத்தம் 4,686 கிளை சுகாதார நிலையங்கள் தமிழ்நாட்டில் இயங்கிவருகின்றன.

**ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

சுகாதாரக் கிளை நிலையங்கள் யாவும் ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கீழ் பணியாற்றுகின்றன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையமும் ஏறத்தாழ ஒரு லட்சம் மக்களுக்குச் சேவை புரிகின்றது. சுகாதாரம் மற்றும் மருத்துவப் பணிகள், ஆரம்ப சுகாதார நிலையத்தை மையமாகக் கொண்டே கிராமப்புறங்களில் செயல்படுகின்றன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையமும் 50,000 மக்களுக்குப் பணி செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் இவ்வரசு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்துகின்றன. கடந்த மூன்றாண்டுகளில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்சமயம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் 407 செயல்படுகின்றன.

1980-81 முதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆண்டு ஒன்றுக்கு மருந்துக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 14,000-ல் இருந்து 20,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுக் காலத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் 41க்குத் தேவையான கட்டடங்கள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுக் காலத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருத்துவப் பணிகளைத் தாலுகா மருத்துவமனைகளின் பணிகளுக்கொப்ப மேம்பாடு செய்வதற்காக 24 படுக்கைகள் கொண்ட வார்டும், எக்ஸ்ரே

மற்றும் அறுவைச் சிகிச்சை அரங்கும் கட்ட 30 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவ்வரசால் இந்தியாவிலேயே புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நடமாடும் சுகாதாரக் குழுக்கள் 249 ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து கிராமங்களில் பணியாற்றுகின்றன. 1981-82 முதல் இக்குழு ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கப்படும் மருந்துச் செலவுக்கான தொகை ஆண்டொன்றுக்கு ரூபாய் 15,000-லிருந்து ரூபாய் 20,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

1981-82 முதல் எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் படிப்படியாகச் சித்த மருத்துவப் பகுதிகள் திறக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் கடந்த மூன்றாண்டுகளில் 210 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுகள் திறக்கப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்விச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 27 ஆரம்ப சுகாதார நிலையங்களை 9 மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்து இயங்க 1981-82 முதல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் உயர்மட்ட மருத்துவப் பணி கிராம மக்களுக்குக் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

**சிறு சுகாதார நிலையங்களில்...**

அரசு மானியத்துடன் கிராமங்களில் மருத்துவம் மற்றும் சுகாதார வசதியளிக்கும் நோக்கத்துடன் தற்போது 251 சிறு சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 100 சிறு சுகாதார நிலையங்கள் கடந்த மூன்றாண்டுக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**தாய் சேய் நலம் மற்றும் தடுப்பூசித் திட்டம்:**

தடுப்பூசித் திட்டத்தின் கீழ் முறையாக தொண்டை அடைப்பு, கக்குவான், இருமல், இசிவு நோய், காச நோய், இளம்பிள்ளைவாதம், தட்டம்மை, டைபாய்டு காய்ச்சல் முதலான நோய்களால் ஏற்படும் நலிவையும், இறப்பையும் குறைக்கும் குறிக்கோளுடன் குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடப்படுகிறது. 1982-83ல் இத்திட்ட சாதனைகள் பின்வருமாறு:

| தடுப்பு மருந்து ஊசி | சாதனை 1982—83 |
|---|---|
| முத்தடுப்பு ஊசி | 8,48,395 |
| இருநோய்த் தடுப்பு ஊசி | 5,54,845 |
| இசிவு நோய்த் தடுப்பு ஊசி (கர்ப்பிணிகளுக்கு) | 3,73,076 |
| இசிவு நோய் தடுப்பு ஊசி(10வயது) | 1,96,097 |
| இசிவு நோய்த் தடுப்பு ஊசி (16 வயது) | 77,492 |
| இரும்பு சத்து மாத்திரை(பெரியது) | 5,73,762 |
| இரும்பு சத்து மாத்திரை (சிறியது) | 5,77,062 |
| வைட்டமின்-ஏ | [illegible] |
| டைபாய்டு தடுப்பு ஊசி | 5,92,[illegible] |
| இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து | 4,18,299 |



**பள்ளி நலத் திட்டம்:**

153 ஆரம்ப நல நிலையங்களிலும், 30 நகராட்சியிலும் சிறப்புப் பள்ளிமருத்துவப் பரிசோதனை நடைமுறையில் உள்ளது. ஒவ்வொரு ஆரம்ப நல நிலையத்துக்கும் ஆண்டுக்கு 6 முதல் 11 வயதுள்ள 2,000 பள்ளிக் குழந்தைகளும், நகர்ப் பகுதிகளில் ஆண்டுக்கு 10,000 பள்ளிக் குழந்தைகளும் குறியளவாகும். கடந்த 5 ஆண்டுகளாக நம் மாநிலத்தில் இத்திட்டம் நிறைவேறி வருகிறது.

**பரிசோதனை செய்யப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை:**

1981-82-ல் 3,89,272 குழந்தைகளும் 1982-83-ல் 5,29,971 குழந்தைகளும் பரிசோதனை செய்யப்பட்டுள்ளனர்.

நோய் அறிகுறியுள்ள குழந்தைகளுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படுகின்றது. சிறப்புச் சிகிச்சை தேவைப்படுபவர்கள் மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். நல்வாழ்வுக்கும் நல்வாழ்வுப் பழக்கங்களுக்குமாக நல்வாழ்வுக் கல்வி விளக்கம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அளிக்கப்படுகின்றது. குழந்தைகளுக்கு நல்வாழ்வுப் பதிவேடும் அளிக்கப்படுகின்றது.

முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் 2 முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளை ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள மருத்துவர்கள் 3 மாதத்திற்கொரு முறை ஆய்வு செய்து, தேவைப்படும் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**கிராமப் பகுதிக் குழந்தைகளுக்கு இலவசப் பற்பொடி வழங்கும் திட்டம்:**

குழந்தைகளுக்கான முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கும் பல்வேறு மையங்களின் மூலம் கிராமப்பகுதியிலுள்ள குழந்தைகளுக்கு இலவசமாகப் பற்பொடி வழங்கும் திட்டம் 1982-ஆம் ஆண்டு நவம்பர் முதல் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் 54 லட்சம் குழந்தைகளுக்கு ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் 30 கிராம் பற்பொடி இலவசமாக வழங்கப்படுகிறது.



**கிராம மக்களுக்குப் பாம்புக்கடிச் சிகிச்சைக்கான தனி ஏற்பாடுகள்:**

கிராம மக்கள் பெரும்பாலும் பாம்புக் கடியினால் உயிரிழக்கும் நிலையிருப்பதை மாற்ற எல்லாக் கிராமப்புறமருந்தகங்களிலும். ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் எப்போதும் 10 வியால் (VIAL) பாம்புக்கடி முறிவு ஊன்நீர் இருக்கும்படி 1982-ஆம் ஆண்டு முதல் ஏற்பாடு செய்துள்ளதைவிட மருத்துவமனைகளில் எப்போதும் 100 வியால்கள் இருக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதிகமாகத் தேவைப்படும் பாம்புக்கடி ஊன் நீர் உற்பத்தியைப் பெருக்க கிங் நிலையத்தில் வேண்டிய உபகரணங்கள் வாங்கவும், கூடுதல் அலுவலர்களை நியமிக்கவும் அண்மையில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**டேனிடாத் திட்டம்**

தென்னார்க்காடு மற்றும் சேலம் மாவட்டங்களில் 1981-ம் ஆண்டு முதல் டென்மார்க் அரசு உதவியுடன் சுமார் ரூபாய் 14 கோடி மதிப்பீட்டுடன் கூடிய ஒரு நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 6 மாதம் முதல் இரண்டு வயது வரை உள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கப்படுகிறது.

**கண்புரை அறுவைச் சிகிச்சை**

கண்புரையினால் பார்வை இழந்த மக்களுக்குப் பார்வை அளிக்க அரசு மருத்துவமனைகளிலும், முகாம்களிலும் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது. கடந்த மூன்றாண்டுக் காலத்தில் செய்த புரை அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை பின்வருமாறு:



| | | |
|---|---|---|
| 1980—81 | ... | 52,350 |
| 1981—82 | ... | 78,810 |
| 1982—83 | ... | 62,535 |
| மொத்தம் | ... | 1,93,695 |

**காச நோய்க் கட்டுப்பாட்டில் சாதனைகள்**

காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த 3 ஆண்டுகளில் ஆண்டுதோறும் புதியகாசநோயாளிகளைக்கண்டுபிடிப்பதிலும் பி. ஸி. ஜி. தடுப்பூசி போடுவதிலும் முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | கண்டுபிடிக்கப்பட்ட புதிய காச நோயாளிகளின் எண்ணிக்கை | பி.ஸி.ஜி. தடுப்பூசி போடப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1980 | 49,456 | 13,15,230 |
| 1981 | 65,652 | 13,59,715 |
| 1982 | 85,000 | 14,00,210 |

**குடும்ப நலத் திட்டச் சாதனைகள்**

தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டம் மக்களின் ஒத்துழைப்போடு எவ்விதக் கட்டாயமுமின்றி வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. கடந்த 5 ஆண்டில் 1981-82-ல் கருத்தடை அறுவைச் சிகிச்சையில் குறியீட்டைத் தாண்டி 103 சதவீதம் நிறைவேற்றப்பட்டது. 1982-83ம் ஆண்டுக்கான குறியீடான 2.92 இலட்சம் கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கு 2.73 இலட்சம்அடைய முடிந்தது. 'லாப்ராஸ்கோப்' அறுவைசிகிச்சை முறை மக்களிடம் பிரபல்யமாக உள்ளது. 1982-83-ல் 38 லாப்ரோஸ்கோப் கருவிகள் மருத்துவமனைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு, மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மக்கள் நோய்வாய்ப்படாமல் நோய் வருமுன்காக்கத்தக்கநடவடிக்கைகளை எடுப்பதுடன் இவ்வரசு மருத்துவ சிகிச்சைக்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வந்துள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் இதற்காக எடுக்கப்பட்டுள்ள முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

கூடுதலாக மருத்துவ மனைகளில் 618 படுக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது அரசு மருத்துவமனைகளில் 29,020 படுக்கைகள் உள்ளன.

1980-81ல் ரூபாய் 40 இலட்சம் செலவில் சென்னை பொது மருத்துவமனைக்கு ''எட்ஸ்கானர்'' வாங்கப்பட்டுள்ளது.

சென்னை அரசு பொது மருத்துவ மனையில் நரம்பியல் பிரிவில் 1980-81ல் ''எக்கோ கார்டியோகிராம்'' வாங்கப்பட்டது.

*1981—82ல் 8 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ''அல்ட்ராசானிக்'' மருத்துவக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.*

*1982-83ல் தஞ்சாவூர் மருத்துவமனைக்கு ''எட்ஸ்கானர்'' வாங்க உத்தரவிடப்பட்டுள்ளது.*

*மதுரை இராஜாஜி மருத்துவமனையில் முழு உடம்பு ஸ்கானர் வாங்க உத்தரவிடப்பட்டுள்ளது.*

*1981-82ல் சென்னை பொது மருத்துவமனைக்குச் சிறுநீரக மாற்றுப் பிரிவு ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.*

*கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எக்கோ கார்டியோகிராம் கருவி வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.*

**மாவட்ட, வட்ட மற்றும் வட்டமல்லாத மருத்துவமனைகளில் சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்துதல்—மூன்று ஆண்டுகளில்**

| | |
|---|---|
| பல் மருத்துவப் பிரிவுகள் | 10 |
| எக்ஸ் கதிர் பிரிவுகள் | 17 |
| கண் மருத்துவப் பிரிவுகள் | 15 |
| காது, மூக்குத் தொண்டை பிரிவுகள் | 7 |
| பால் வினைநோய் பிரிவுகள் | 9 |
| மனவியல் நோய் சிகிச்சை பிரிவுகள் | 4 |
| முட நீக்கியல் பிரிவுகள் | 8 |
| குழந்தை நலப் பிரிவுகள் | 21 |

**புது மருந்தகங்கள்:**

*கடந்த மூன்று ஆண்டுகளில் புதிதாக 13 கிராமங்களில் மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளன.*

*ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட 225 சித்த மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்த மூன்றாண்டு காலத்தில் ஆணைகள் பிறக்கப்பட்டுள்ளன.*

*1980-81ல் சித்த பட்டப் படிப்பிற்கு உரிய இடங்கள் 44-லிருந்து 75 ஆக பாளையங்கோட்டை கல்லூரியில் அதிகரிக்கப்பட்டது.*

*1981-82-ல் சித்த மருந்தியல் பட்டயப் படிப்புக்கான இடங்கள் 15 லிருந்து 50 ஆக உயர்த்தப்பட்டது.*

*சித்தா பட்ட மேற்படிப்பிற்கான உதவித் தொகை அலோபதி மாணவர்கட்கு ஈடாக உயர்த்தப்பட்டது.*

*பாளையங்கோட்டை கல்லூரியில் மூலிகை ஆராய்ச்சிக்கு ஒரு 'பச்சை வீடு' அமைக்கப்பட்டது.*

*பரம்பரை சித்த வைத்தியரைப் பதிவு செய்வது திரும்பவும் துவக்கப்பட்டது.*

*பரம்பரை சித்த வைத்தியர்களின் பதிவுப் புத்தகத்தை சட்ட ரீதியான புத்தகமாக மாற்றி சட்டமியற்றப்பட்டது.*

*மூலிகைப் பண்ணை வாரியம் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.*

*சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழுவுக்குத் தனிக் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.*

*சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழு பாடப் புத்தகங்களை வெளியிட்டு வருகிறது.*

*பாளையங்கோட்டை மற்றும் சென்னை மருத்துவ மனைகளில் இந்திய முறை மருந்துகளின் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

*பொள்ளாச்சியில் ஒரு வட்டார மருந்து செய்யும் பிரிவு ஏற்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது.*

*பழநியில் இரண்டாவது சித்தா கல்லூரி திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

*சித்த மருத்துவ வாரியம் அமைக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*



# பாசனத்திட்டப் பணிகள்



*தமிழ் நாட்டில் நீர்ப்பாசனம் தொன்றுதொட்டு நடைமுறையிலுள்ளது. காலத்தால் அழியா பண்டைய கல்வெட்டுக்களும், காலத்தை வென்று இன்றளவும் பயன்தரும் பாசனக் கட்டுமானங்களும், சோழ, பாண்டிய மன்னர்கள் இத்துறையில் காட்டிய ஆர்வத்திற்கு சான்றாக விளங்குகின்றன. காவிரியின் குறுக்கே கரிகால் சோழனால் கட்டப்பட்ட ''கல்லணை'' இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.*

*உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு பல நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. மேலும், அரசு நீர்ப் பாசனத் திட்டங்களைப் பொருளாதார அடிப் படையில் மட்டும் கருத்தில் கொள்ளாமல் பின் தங்கிய பகுதி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டும் அனுமதித்து வருகிறது. இது வரை நீர்வளத்தில் 95 விழுக்காட்டைத் தமிழ் நாடு உபயோகப்படுத்தி விட்டது. இளை நதி களில் கிடைக்கும் எஞ்சிய நீரும் காட்டாறு களில் கிடைக்கும் வெள்ள நீரும் தற்போது*

*செயலாக்கப்பட்டுவரும் நடுத்தர மற்றும் சிறு பாசனத் திட்டங்களாலும் வருகிற ஆண்டுகளில் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களாலும் உபயோகப்படுத்தப்பட திட்டமிடப்பட்டு வருகின்றது.*

*ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980-85) பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்கள் வாயிலாக 66,000 ஹெக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்காகக் கூடுதல் நீர்வளம் ஏற்படுத்த ரூ. 149.79 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

| | |
|---|---|
| **தமிழகத்தில் இதுவரை பாசனத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளப்பட்ட நீர்வளம்** | **95%** |
| **கடந்த மூன்றாண்டுகளில் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கான செலவு** | **ரூ. 67.92 கோடி** |
| **கடந்த மூன்றாண்டுகளில் வெள்ளத் தடுப்புத் திட்டங்களுக்கான செலவு** | **ரூ. 1.51 கோடி** |

*1980 ஜூன் திங்கள் முதல் 1983 மே திங்கள் வரையிலான கடந்த மூன்றாண்டுகளில்*



*பாம்பாறு அணைக் கால்வாய்*

ஒரு பெரிய மற்றும் பெரியாறு அணையைப் பலப்படுத்தும் திட்ட வேலை உட்பட 14 நடுத்தர பாசனத் திட்டங்களும் ரூ. 96 கோடி மதிப்பீட்டுச் செலவில் 32,140 ஹெக்டேர் புதிய மற்றும் தரிசுநிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்கும் 3050 ஹெக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியளிப்பதற்கும் அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில், பெரிய பாசனத்திட்டமான பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் கடைசி பகுதியான கீழ்நீராறு அணையும் குடைவழியும் ஆயக்கட்டு விஸ்தரிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியும் மற்றும் ஐந்து நடுத்தர திட்டங்களும் முடிக்கப்பட்டுள்ளன. முடிக்கப்பட்ட நடுத்தர பாசனத் திட்டங்கள் பற்றிய விவரம் வருமாறு:

வட, தென்னார்க்காடு மாவட்டங்கள் பயனடையும் சாத்தனூர் வலது புறக் கால்வாய்த் திட்டம்.

தருமபுரி மாவட்டத்தில் தும்பாஹல்லி மற்றும் பாம்பாறு நீர்த்தேக்கத் திட்டங்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் குண்டாறு நீர்த்தேக்கத்திட்டம், மற்றும்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உப்பாறு நீர்த்தேக்கத் திட்டம். இவற்றின் மூலம் 30,460 ஹெக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்கான கூடுதல் நீர்வளம் இம்மூன்றாண்டுகளில் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி உடுமலைப்பேட்டை, பல்லடம் மற்றும் பெரியார் மாவட்டத்தில் தாராபுரம் ஆகிய வட்டப் பகுதிகளில் மிகவும் வறட்சியாகக் காணப்படும் பகுதிகளுக்கு பாசன வசதி அளிக்கும் பொருட்டாக முதலில் தீர்மானிக்கப்பட்ட பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட ஆயக்கட்டான 1,01,250 ஹெக்டேர் நிலப் பரப்போடு மேலும் 56,660 ஹெக்டேர் நிலப்பரப்பை இத்திட்டத்தின் கீழ் கொண்டு வர அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஆயக்கட்டை விரிவாக்கும் இத்திட்டத்தில் ஒரு பகுதி முடிக்கப் பட்டு மிகுதி வேலைகள் மும்மரமாக நடைபெற்று வருகின்றன.

இரண்டு பெரிய திட்டங்களான, உலக வங்கி உதவி பெற்ற பெரியாறு மேம்பாட்டுத் திட்டமும், தஞ்சாவூர் கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டமும் மற்றும் பத்தொன்பது நடுத்தர திட்டங்களும் தற்போது செயலிலுள்ளன. பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களுக்காக கடந்த மூனறாண்டுகளில் அதாவது 1980-81ல் ரூ. 16.36 கோடியும், 1981-82ல் ரூ. 19.54 கோடியும் 1982-83ல் ரூ.32.02 கோடியும் செலவு செய்யப்பட்டுள்ளது.

வெள்ளத் தடுப்புத் திட்டத்தின் கீழ் 1980ம் ஆண்டிற்கு முன் ஒப்புதல் வழங்கப் பட்டு மேற்கொள்ளப்பட்ட 3 வெள்ள நிவாரணப் பணிகளில்

1. செம்பரம்பாக்கம் ஏரி அபிவிருத்தி செய்தல், (2) சென்னைக்கும் அதன் புறநகர்ப் பகுதிகளுக்கும் வெள்ள நிவாரணம் அளிப்பதற்கு ஓட்டேரி நல்லாவை அபிவிருத்தி செய்தல் ஆகிய இரு



பணிகளும் 1980-81ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டன. மற்றொரு பணியான வைகைப் படுகையிலிருந்து வெள்ளக் காலங்களில் கிடைக்கும் உபரி நீரை இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கிருதமால் மற்றும் குண்டாறு படுகைகளுக்குத் திருப்பி விடும் வேலை நடைபெற்று வருகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் (1980 ஜுன் முதல் 1983 மே வரை) கீழ்க் குறிப்பிட்டுள்ள நான்கு வெள்ள நிவாரணப் பணிகளுக்கு அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது

| | மதிப்பீடு ரூ. லட்சத்தில் |
|---|---|
| 1. சென்னை மாநகரத்தில் கோட்டூர்புரத்திலிருந்து அடையாறு தெற்கு 'லாக்' வரை அடையாறுக்கு வலதுபுறக் கரை அமைத்தல். | 6.40 |
| .2 சென்னை மாநகரத்தில் பெரியார் முதலிய குடியிருப்பு பகுதிகளுக்கு வெள்ளப் பாதுகாப்பு ஏற்படுத்த 3.37 கி.மீ. முதல் 4.22 கி.மீ. வரை கூவம் நதிக்கு வலதுபுறக் கரை அமைத்தல் | 7.40 |
| 3. தென்னார்க்காடு மாவட்டத்தில் கெடிலம் ஆற்றிற்கு பண்ருட்டி நெய்வேலி படுகை பாலத்திற்கு மேற்புறம் இருபக்கமும் வெள்ளக் கரைகளை அமைத்தல் | 7.40 |
| 4. தஞ்சைமாவட்டம் சீர்காழி வட்டத்தில் ஆலக்குடி கிராமத்திற்கு அருகில் கொள்ளிட நதியின் வலது புறக் கரையை மைல் 97-1லிருந்து மைல் 97-6 வரையில் பலப்படுத்துதல் , | 60.00 |

மேற்கண்ட நான்கு வேலைகளும் செயலிலுள்ளன. வெள்ளத் தடுப்புத் திட்டங்களுக்காகக் கடந்த மூன்று ஆண்டுகளில் (1980-83) சுமார் ரூ.1.51 கோடி செலவிடப்பட்டுள்ளது.




புதிய கிரைண்ட்மாஸ்டர்

நவீனமானதோர் மாவரைக்கும் இயந்திரம்



ஒரு வருட உத்தரவாதம்

நவநாகரீக நங்கையர்களுக்கென்றே தயாரிக்கப்பட்ட, இதுவரை கண்டிராத ஓர் அற்புதமான இயந்திரம்.

உங்கள் சமையல் பாங்கு நவீனமாகிறது. ஆனாலும் உங்கள் சமையலில் எப்பொழுதும் உள்ள கை மணமும் ருசியும் அப்படியே இருக்கிறது.

விசேஷ அம்சங்கள்

- எழிலே உருவானது :- அரைக்கும் கல்லைத் தவிர இந்த இயந்திரம் முழுவதும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீலினால் செய்யப்பட்டது. வெளிப்பக்கம் பல வண்ணங்களில் கிடைக்கும். ஃபைபர் கிளாஸினால் அமைக்கப்பட்டது.
- சௌகரியம் : உள்ளுக்குள் அமைக்கப்பட்ட ஒரு சாதனம் அரவை முடிந்தவுடன் இயந்திரத்தை தானே நிறுத்தி விடுகிறது. எதுவாயிருந்தாலும் 5 நிமிடங்களுக்குள் அரவை முடிந்துவிடும். அரவையான மாவு வெளிப்பக்கமுள்ள மூக்கு வழியாய் பாத்திரத்தில் விழுவதால் கையால் ஒன்றும் செய்ய வேண்டாம்.
- சுகாதாரம் :- இயந்திரத்தில் தங்கிய மாவை சுலபமாக சுத்தம் செய்து விடலாம். இயந்திரத்தை அலம்பிய அசுத்த நீர் மூக்கு வழியாய் வெளியேறி விடுகிறது.

ARVIND INDUSTRIES

21 Second Line Beach Madras 600 001

Call:35456

APRC A10D




காலம் பொன்னனது. காலத்தில் கைகொடுக்கும் திட்டங்கள் பல கேஸியூபி அளிக்கிறது. உங்கள் சேமிப்பு விரைவாக வளர்வதுடன் உங்கள் தேவையான நேரத்திற்கு உதவுகிறது.

இப்போது கேஸியூபி உங்கள் சேமிப்பிற்கு 11 சதவீத வட்டி அளிக்கிறது.

எங்கள் திட்டம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து சேமியுங்கள். உங்களது சேமிப்பு சரியான நேரத்திற்கு கை கொடுப்பதை அறிவீர்கள்.

**கேஸியூபியில் உங்கள் நேரம்**
**சேமிப்பு நேரம்**

**கும்பகோணம் ஸிடி யூனியன் பாங்க் லிட்**
பதிவு அலுவலகம்: கும்பகோணம்–612 001.

பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும்

APRC



# இனியபயணம் என்றும் எங்கும்!

**நா**ட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் போக்குவரத்து முக்கிய பங்காற்றுவதுடன், நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாகவும் இருக்கின்றது.

இரயில், ஆகாயம், தண்ணீர் போன்ற இதரப் போக்குவரத்து வழித் தடங்களைவிட, சாலைப் போக்குவரத்துதான் எல்லா இடங்களுக்கும் சென்றடையக் கூடிய வழித்தடமாக இருக்கிறது. சாலைப் போக்குவரத்து சிக்கனமாகவும், விரைவாகவும், பயணிகளைத் தேவையான இடத்திற்குக் கொண்டு செல்வதால், மற்ற வழித்தடங்களை விட, சாலைப் போக்குவரத்தையே அதிகப்படி நாடுகிறார்கள்.

கடந்த மூன்றாண்டுகளில் நாட்டுடைமை ஆக்கப்பட்ட சாலைப் போக்குவரத்தில் அடைந்த சாதனைகள், முன்னேற்றங்கள், தொழிலாளர்களுக்கு நல்கிய நலன்கள் ஆகியவை என்னென்ன என்பதைத் தெரிந்துகொள்வோம்.

### திட்ட சாதனை

நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை தமிழகத்திலுள்ள மொத்தப் பேருந்துகளில் 1980ல் 56 சதவீதமாக இருந்தது. இன்று 62 சதவீதமாகியிருக்கிறது.

அரசு போக்குவரத்துக் கழகங்களில் 6,407 ஆக இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை இன்று 8,423 ஆக உயர்ந்திருக்கிறது. சென்ற மூன்றாண்டுகளில் இக்கழகங்கள் 4,163 புதிய பேருந்துகள் வாங்கின. அவற்றில் 2,147 பழைய பேருந்துகளுக்குப் பதிலாக விடப்பட்டன. மீதமுள்ள 2,016 புதிய பேருந்துகள் ஏற்கெனவே உள்ள வழித்தடங்களில் கூடுதலாகவும் 1,207 புதிய வழித் தடங்களிலும், விடப்பட்டன. இவை 32 இலட்சம் மக்கள் கொண்ட 1,919 கிராமங்களைப் புதிதாக இணைத்திருக்கின்றன.

அரசு போக்குவரத்துக் கழகங்களின் எண்ணிக்கை 8லிருந்து 12 ஆக உயர்ந்திருக்கிறது. நவம்பர் 82ல் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகமும், ஏப்ரல் 83ல் மருது பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகமும், ஜீவா போக்குவரத்துக்கழகமும், நேசமணி போக்குவரத்துக் கழகமும் துவங்கப்பட்டிருக்கின்றன.

கிராமப்புறங்களுக்கும், மலைப் பகுதிக்கும் செல்ல 55 சிறிய பேருந்துகளும், 252 குறுகிய பேருந்துகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதிகமான கிராமங்களை நகரத்துடன் இணைக்க நகர்ப்புறப் பேருந்து வழித்தடத்தின் நீளம் 25 கிலோ மீட்டரிலிருந்து 30 கிலோ மீட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. சாலை விபத்துக்களைக் கட்டுப்படுத்த அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் ரூ. 3½ கோடி செலவில் மின் வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைப் பொருத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்மாதிரிக் கருவியைச் சேரன் போக்குவரத்துக் கழகம் தானாகவே தயார் செய்து பொருத்தியது.

சென்னைப் பெருநகர் போக்குவரத்துக்காக உலக வங்கியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு ரூ. 12.60 கோடி கடனுதவி பெற்று, சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில் 2வது திட்டமாக 555 பேருந்துகளை வாங்க அரசு ஏற்பாடு செய்தது.

முதல் முறையாகப் பழைய பேருந்துகளைப் புதுப்பிக்க 1981-82ஆம் ஆண்டில் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து

## சம்பந்தி அம்மாள் மகிழ்ந்தாள்!

"பிள்ளை வீட்டுக்கார அம்மாள் நாம கொடுக்க இருக்கிற சீர் வரிசைகளை எல்லாம் பார்த்தாங்க. கப்பல் கப்பலா, அடுக்கடுக்காக சீர் வரிசை லிஸ்டைப் படிச்சாங்க. அவங்க முகத்தையே கவனிச்சிட்டு இருந்தேன். ஊஹும்! ஒரு மாறுதல் இல்லை...பயந்து போயிட்டேன், திருப்தியே இருக்காதா அந்த அம்மாளுக்குன்னு..."

"அப்புறம் அப்புறம்?"

"லிஸ்டிலே கடைசிப் பக்கத்துக்கு வந்துட்டாங்க...ஊஹும்! முகத்திலே மாறுதலே இல்லை. திடீர்னு அந்த அம்மா முகத்திலே சந்தோஷம் வந்தது... பேஷ், பேஷ்னு சொன்னாங்க. பக்கத்திலே இருக்கிற சம்பந்திக்காரர் கிட்டே லிஸ்டைக் காம்பிச்சு எதையோ குறிப்பா சொன்னாங்க...அவர் முகத்திலேயும் மகிழ்ச்சி ஏற்பட்டது."

"அது என்னடி அப்படி பிரமாத சீர்...? சம்பந்திக்காரங்களுக்குச் சந்தோஷத்தைத் தர விஷயம்?"

"சம்பந்தி அம்மா சொன்னாங்க... நீங்க கொஞ்சம் விபரமா அந்த ஸ்ரீராம் டிரஸ்ட் டெபாஸிட் விஷயத்தைக் கூறுங்கனு சொன்னாங்க....எங்க வீட்டுக்காரர் உடனே விவரிக்க ஆரம்பிச்சுட்டார்."

"சொல்லு விபரமா...எனக்கும் கேட்க ஆர்வமா இருக்கு. என் பெண் கல்யாணத்துக்கும் அதே சீர்வரிசையைச் செய்யலாம் பாரு..."

"எங்க வீட்டுக்காரர் ஒரு புது யோசனையை மத்த சீர் வரிசைக்குச் சிகரமா செய்தார். அது என்னனு கேளு....நம்ம ஸ்ரீராம் டிரஸ்டிலே என் மாப்பிள்ளை பேரிலே ஒரு பிக்சட் டெபாஸிட் செய்துள்ளார். ஒரு 1000 ருபாதான்."

"இந்த ஆயிரம் ரூபாய்க்காகவா அந்த சம்பந்திக்காரங்க சந்தோஷப் பட்டாங்க? எவ்வளவோ கம்பெனிகளிலே டெபாசிட்டுக்குக் கூடுதல் வட்டி தராங்க. ஸ்ரீராம் டிரஸ்ட் டெபாஸிட்டுலே அப்படி என்ன சிறப்பு ஆதாயம்?"

"அவங்க இலக்கிய ரசனையுள்ள குடும்பம். அந்த பிக்ஸட் டெபாசிட்னாலே கிடைக்கிற பலனைப் பார்த்துச் சந்தோஷப்பட்டாங்க".

''என்ன பலன்! அதைச் சொல்லு'' ''ரூ. 1000/-த்தை ஸ்ரீராம் டிரஸ்ட் பிக்சட் டெபாஸிட்லே போட்டால் 7 வருஷத்திலே ரூ. 2000/-ஆகத் திரும்பி வருகிறது. அதோட 7 வருஷத்துக்கு 84 அமுதசுரபி மாத இதழ் தபாலிலே கிடைக்கிறது.''

''அப்புறம்?''

''7 வருஷத்துக்கு அமுதசுரபி தீபாவளி மலரும் கிடைக்கிறது. அது தவிர புதுசா கல்யாணம் ஆகிக் குடும்பம் நடத்துகிறவங்களுக்குப் பூஜை அறையில் வைக்க 6 தெய்வப் படங்கள் குடுக்கிறாங்க, ஸ்ரீராம் டிரஸ்ட்காரங்க. பிரபல தெய்வச் சித்திரங்கள் 'சில்பி' வரைந்தது... போதுமா?''

"அடடே...! பிரமாத கல்யாணப் பரிசு! நிரந்தரக் கல்யாணப் பரிசு! மன மகிழ்ச்சியான கல்யாணப் பரிசு! பேஷ்! உங்க சம்பந்தி அம்மா சந்தோஷப் படறதிலே ஆச்சரியம் என்ன? நானும் அதே மாதிரி ஒரு சீரை என் பெண் கல்யாணத்துக்கும் ஏற்பாடு செய்துடறேன்...வெளி நாட்டுலே வரன் நிச்சயமாகும் போலிருக்கே?"

''வெளிநாடுன்னா இரண்டாயிரம் ரூபாய் டெபாசிட் செய்யணும். இரண்டாயிரம் ரூபா நாலாயிரமாகக் கிடைக்கும்... அயல் நாட்டுக்கே அமுதசுரபியும் தீபாவளி மலரும் அனுப்பி வைப்பாங்க.''

''நானும் அப்படியே செய்யறேன் பார்!''



மேற்கொண்டு விபரங்களுக்குத்
தொடர்பு கொள்க:

**ஸ்ரீராம் டிரஸ்ட்**

அமுதசுரபி வெளியீட்டாளர்கள்
அலுவலகம்: 123, அங்கப்ப நாயக்கன் தெரு,
சென்னை-600 001.

ADWAVE/ST AG. 2364


ரூ. 3.78 கோடி கடனாகப் பெற்றது. 1982-83ஆம் ஆண்டிற்கு ரூ. 1.79 கோடி கடன் பெற்றது. முதன் முறையாக சென்னைக்கும், ஈரோட்டிற்கும் நடுவே தூங்கும் வசதி கொண்ட 2 சீர்வளிப் பேருந்துகள் ஓடவிட்டது. புதிய வழித்தடங்கள் உருவாக்குவதற்கு மாவட்டந்தோறும் ஆலோசனைக் குழு அமைத்தது.

### நலம் பேணும் நல்லரசு

| | |
|---|---|
| போக்குவரத்துக் கழகங்களிடம் இருந்த பேருந்துகள் | 6,407 |
| கழிக்கப்பட்டவை | 2,147 |
| மூன்றாண்டுகளில் புதிதாக வாங்கப் பட்டவை | 4,163 |
| இப்பொழுது உள்ளவை | 8,423 |
| தமிழகத்தில் உள்ள நெடுஞ்சாலைகளின் நீளம் | 40,000 கி.மீ. |
| ஊரகச் சாலைகளின் நீளம் | 81,000 கி.மீ. |

#### தொழிலாளர் நல நடவடிக்கை

1.9.77 அன்று போடப்பட்ட ஊதிய ஒப்பந்தம், மூன்று ஆண்டுகளுக்கு அமலிலிருந்த ஒப்பந்தக் காலம் முடிவதற்கு முன்னமேயே அரசு அவர்களது கோரிக்கைகளைக் கேட்டு, கலந்து பேசி சுமுகமான முறையில் 1.9.80க்கு முன்பாகவே ஒரு புதிய ஒப்பந்தம் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தத்தின்படி ஊதியத்தில்

குறைந்த அளவு உயர்வு ரூ.90 ஆகும். உயரளவு ரூ. 130 ஆகும். அகவிலைப்படி, வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப்படி, சலவைப் படி எல்லாம் கூட்டப்பட்டன.

சட்டப்படி கொடுக்க வேண்டிய குறைந்தளவு போனசுடன் கருணைப் படியாக ரூ. 200 லிருந்து ரூ.300 வரை வழங்கப் பட்டிருக்கிறது. 1980ஆம் ஆண்டிற்கு வேலை நிறுத்தம் இல்லாத நிலையில் உள்ள ஊழியர்களுக்கு ரொக்கமாக ரூ. 250-200 கொடுக்கப்பட்டது. 1981ஆம் ஆண்டிற்கு இத்தொகை 260ஆக உயர்த்தப்பட்டது. 1982ஆம் ஆண்டிற்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 300 கொடுக்கப்பட்டது. சம்பளத்தில் 20 முதல் 25 விதம் வரையில்தான் செய ஊக்கத் தொகை அளிக்கப்படும் என்றிருந்த உச்ச வரம்பு நீக்கப் பட்டது.

பணியாளர் பணி செய்து கொண்டிருக்கும்பொழுது விபத்துக்குள்ளாகி மரணமடைந்தால் அவரது வாரிசுக்கு ரூ. 5,000 மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

டீசல், டயர் மற்றும் உதிரிப் பாகங்கள் விலை ஏறின போதிலும், சீரிய நிர்வாகத்தாலும், கடும் சிக்கன முறைகளாலும், ஒன்பது போக்குவரத்துக் கழகங்களில், ஆறு போக்குவரத்துக் கழகங்கள் 1982-83ஆம் ஆண்டில் ஆதாயம் ஈட்டியிருக்கின்றன. அவை அரசுக்குச் சுமார் நான்கு கோடி ரூபாய் உபரி வாகன வரியாகச் செலுத்தியிருக்கின்றன.

நம் நாட்டில் போக்குவரத்துக் கழகங்களில் கட்டப்படும் பேருந்துக் கூடுகள், மிகவும் நேர்த்தியாக இருப்பதால் அந்தமான், டெல்லி, கேரளம், கர்நாடகம் போன்ற இடங்களில் உள்ள போக்குவரத்து நிறுவனங்களுக்கு நம் போக்குவரத்துக் கழகங்கள் நிறைய பேருந்துக் கூடுகள் கட்டிக் கொடுக்கின்றன.

டீசல் எண்ணெய்யை மிகுந்த அளவு மிச்சப்படுத்தியதற்காக, சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு இவ்வாண்டு மத்தியப் போக்குவரத்துக் கழக நிறுவனம் பரிசளித்திருக்கிறது.

#### சாதனைகள்

சாலைப் போக்குவரத்திற்கு நல்ல சாலைகள்தான் அடிப்படைத் தேவை. தமிழ்நாட்டில் சுமார் 40,000 கி.மீ. நெடுஞ்சாலைகளும், 81,000 கி.மீ. ஊரகச் சாலைகளும் இருப்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டிலுள்ள ஊரகச் சாலைகளின் நீளம் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்தையும் விட அதிகமாகும். சாலைகளும், சாலைப் போக்குவரத்தும் இணைந்த துறைகளாதலால் நெடுஞ்சாலைத் துறை தலைமைச் செயலகத்தில் பொது மராமத்துத் துறையின் கீழ் இருந்ததை மாற்றி, 1978 ஏப்ரல் முதல் போக்குவரத்துத்துறையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

சாலைத்துறையில் அண்மைக் காலச் சாதனைகளும், முன்னேற்றங்களும் வருமாறு:

ரூ. 5 இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்பினைக் கொண்ட பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு மாநிலக் கட்டுமானக் கழகம், பிப்ரவரி 1980ல் நிறுவப் பட்டது. இக்கழகம் இதுவரை சுமார் ரூ.3.73 கோடி பெறுமானமுள்ள 72 வேலைகளைச் செய்து முடித்திருக்கிறது.

பேருந்து வழித்தடங்களை மேற்கொள்ளும் திட்டத்தில் ரூ. 29 கோடி செலவில் 8,103 கி.மீ. ஊரகச் சாலைகள் மேம்படுத்தப் பட்டன. இதனால் சுமார் 41 இலட்சம் மக்களடங்கிய 4,052 கிராமங்கள் பயனடைந்தன.

1980-81ல் ஆரம்பிக்கப்பட்ட தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 378 குறிப்பிட்ட ஊராட்சி ஒன்றியங்களில் சாலைகள், சிறுபாலங்கள், பள்ளி மருத்துவக் கட்டடங்கள், சிறு பாசன வசதிகள் முதலியன மேம்படுத்தப்பட்டன.

கடந்த மூன்றாண்டுகளில் தமிழ்நாட்டில் சாலைகளின் நீளம் 18,000 கி.மீ. அதிகமாயிருக்கிறது. அதாவது 1,04,000 லிருந்து 1,22,000 வரை அதே சமயம் 40 பாலங்களும் கட்டி முடிக்கப் பெற்றிருக்கின்றன. கல்ராயன் மலைச் சரிவில் 32கி.மீ. நீளத்திற்கு ரூ.65 இலட்சம் செலவில் ஒரு மலைச்சாலை அமைத்தது குறிப்பிடத்தக்கதாகும்.



# "சிக்கனமான" டிவி

கொனார்க் உடனடியாக உங்களுக்குச் சில சேமிப்புகளை வழங்குகிறது. உதாரணமாக, உள்ளேயே பொருத்தப் பட்ட வோல்டேஜ் ஸ்டாபிலைசர். பட டியூபுக்கும் இரண்டு வருட உத்தரவாதம். கொனார்க் டிவிகள் உயர்தர தொழில்நுட்ப அடிப்படையில் உன்னதமாக உழைக்கும் வகையில் தயாரிக்கப்படுகின்றன. ஆதாயகரமான இந்த டிவியை வாங்குங்கள். இலாபம் அடையுங்கள்.



# கொனார்க் டிவி

**கலர் மற்றும் கறுப்பு வெளுப்பு கொனார்க் டிவிகள்**
**இதர டிவிகளில் இருப்பதையும், இல்லாததையும் ஒருங்கே அளிக்கின்றன.**

கொனார்க் டெலிவிஷன் லிமிடெட், (ஒரிசா அரசாங்கத்தின் ஒரு வியாபார முயற்சி)

"ஆர்த்தி சேம்பர்ஸ்", 189, மவுண்ட் ரோடு, சென்னை-600 006, போன் : 441551. 'தி ஷோரூம்' கொனார்க் டிவி, லேவல் ஹைட்ஸ், 4/1, லேவல் ரோடு, பெங்களூர்-560 001, போன் : 565640. 'தி ஷோரூம்' கொனார்க் டெலிவிஷன், 16, யூனிட்டி ஹவுஸ், அபிட்ஸ், ஹைதராபாத். 'தி ஷோரூம்' கொனார்க் டிவி, ஸ்ரீநாத் காம்ப்ளெக்ஸ், தாஜ்மகால் ஹோட்டல் எதிரில், எஸ்.டி. ரோடு, செகந்தராபாத், போன் : 820047.
கொனார்க் டிவி சர்வீஸ் சென்டர், ஹவுஸ் நம்பர் 7-4-621/414, சஞ்சீவரெட்டி நகர், ஹைதராபாத்-500 038, போன் : 262624.

அங்கீகாரம் பெற்ற டீலர்கள் : மதுரை : திருபவானி, எ.ப பிளாக், ஷாப் நம்பர் 38, கார்ப்பொரேஷன் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், மதுரை-625 001, லிட்டி எலெக்ட்ரானிக்ஸ், 32-B, மேற்கு வெளி வீதி, மதுரை-625 001, ஜெய் அமர் டிரேடர்ஸ், 72, கிழக்கு வெளி வீதி, மதுரை-625 001, ESBI யூடிலிட்டீஸ் & சர்வீசஸ், H.O. 77-C, தெற்கு மாசி வீதி, மதுரை-625 001, B.O. வேளாங்கன்னி இல்லம், 25, ஜே.என். ரோடு, S.S. காலனி, மதுரை-625 016 ● திருநெல்வேலி : பாலு எலெக்ட்ரானிக்ஸ், 5 & 6, தெற்கு ரத வீதி, திருநெல்வேலி ● தூத்துக்குடி : R.J. டிரேடர்ஸ், 105, V.E. ரோடு, தூத்துக்குடி ● நாகர்கோவில் : சிவா ஸ்டோர்ஸ், கருங்கல் ரோடு, திங்கள் சந்தை, நெய்யூர் போஸ்ட்-629 802 ● கும்பகோணம் : ஆடியோ எலெக்ட்ரானிக்ஸ், 61, நாகேஸ்வரன் வடக்குத் தெரு, கும்பகோணம் ● தஞ்சாவூர் : பிரீமியர் ரேடியோ சர்வீஸ், 10, ராஜா டாக்கீஸ் ரோடு, தஞ்சாவூர் ● திருச்சிராப்பள்ளி : M.S.K. எலெக்ட்ரானிக்ஸ், 18, ஜாபர்ஷா தெரு, டயமண்ட் பஜார், திருச்சிராப்பள்ளி-620 008, சஞ்சீவ் ஏஜென்ஸீஸ், A-2-198, BHEL டவுன்ஷிப், திருச்சிராப்பள்ளி-620 014 ● சேலம் : மாடர்ன் எலெக்ட்ரானிக்ஸ், 52, 4-வது கிராஸ், நாராயண நகர், சேலம்-636 001 ● கோயமுத்தூர் : அஸ்வின் டெவி, 217, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயமுத்தூர்-641 018 ● திருச்செந்தூர் : இன்டர்நேஷனல் மார்க்கெட்டிங் சர்வீஸஸ் (இந்தியா), 28, வடக்கு ரத வீதி, திருச்செந்தூர்.


# தொழில் வளர்ச்சி

தமிழகத்தில், குறிப்பாகப் பின் தங்கிய பகுதிகளில், தொழில் வளர்ச்சியினை ஊக்குவிப்பதில் கடந்த மூன்று ஆண்டுகளில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

முறைப்படுத்தும் பணிகளுக்கே தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு




வந்துள்ள தொழில் வணிகத் துறையின் கள அமைப்புகள், வளர்ச்சி நோக்குடன் செயல்படத் துவங்கியுள்ளதுடன், மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சி நடவடிக்கைகளின் விளைவாகச் சிறு தொழில் துறையில் கடந்த மூன்றாண்டுகளில் சிறப்பான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

சான்றாக, தொழில் வணிகத் துறையிடம் நிரந்தரப் பதிவுச் சான்றிதழ்கள் பெற்றுள்ள சிறு தொழில்களின் எண்ணிக்கை 1978 மார்ச் திங்கள் இறுதியில் 18,789 ஆக இருந்தது. 1981 டிசம்பர் திங்கள் இறுதியில் 40,830 ஆகவும், 1983 பிப்ரவரி திங்கள் இறுதியில் 45,735 ஆகவும் உயர்ந்துள்ளது.

தொழில்கள் உரிமங்கள் பெறும் முறைகளை எளிதாக்குதல், நலிந்த பிரிவினருக்கு முன்னுரிமை வழங்குதல் இவையெல்லாம் இந்தியப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

சிறு தொழில்களுக்கு உரிமங்கள் வழங்கும் முறைகளை எளிதாக்கிட கடந்த மூன்றாண்டுகளில் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதனைத் தொடர்ந்து பல அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. உரிமங்கள் வழங்குதலில் பல துறைகள் சம்பந்தப்படுதலே பொதுவாக தாமதம் ஏற்படக் காரணமாகின்றது என்பதால், இத்தகைய துறைகளின் எண்ணிக்கையைக் குறைத்திட வழி வகுக்கப்பட்டுள்ளது. அரசாணைகளின் பயன் பெருவாரியான சிறு தொழில்களுக்குக் கிடைத்திடக்கூடிய வகையில் தொழில் பகுதிகள், இதரப் பகுதிகளாகப் பிரித்து நிர்ணயித்தலும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில், ஆதிதிராவிட தொழில் முனைவர்களைத் தொழில்களைத் துவக்குமாறு ஊக்குவிக்கவும் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் விளைவாக, கடந்த மூன்று ஆண்டுகளில் 75க்கு மேற்பட்டோர் சிறு தொழில்களைத் துவக்கியுள்ளனர். இத்தகைய 1,342 தொழிலதிபர்களுக்கு ரூ.46 இலட்சம் நிதி உதவியாக வங்கிகளிடமிருந்தும் இதர நிதி நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

1982-83ல் மட்டும் 4,000க்கு மேற்பட்ட நபர்கள் ஒருங்கி



லிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குச் சுமார் 12 இலட்சம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

முக்கியமாக வேலை வாய்ப்பினை, கிராமப் பகுதிகளில் பரப்பிடவும், நலிந்த பிரிவினரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகோலிடவும் ஒரு சிறந்த சாதனமாகத் தொழிற் கூட்டுறவுத் துறையை கடந்த சில ஆண்டுகளில் அரசு பயன்படுத்தி வந்துள்ளது.

1983. மார்ச் திங்கள் இறுதியில் தமிழகத்தில 898 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், 1983 மே திங்கள் இறுதியில் 929 சங்கங்களும் இருந்தன. இவற்றின் உற்பத்தியும், விற்பனையும் 1980-81ல் முறையே ரூபாய் 33.77 கோடியாகவும், ரூபாய் 37.48 கோடியாகவும் இருந்தது. 1982-83ல் முறையே ரூ.37.45 கோடியாகவும், ரூ.71.38 கோடியாகவும் உயர்ந்துள்ளன. கயிறு சவ்வரிசி, தேயிலை, தீப்பெட்டி போன்ற ஊரகத் தொழில்கள் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளதையடுத்து சிறப்பான முன்னேற்றத்திலைக் கண்டுள்ளன.

தீப்பெட்டித் தொழில் புதிய பகுதிகளுக்குப் பரவியுள்ளது. கயிறுத் தொழிலில் 46 புதிய சங்கங்கள் தோன்றி கிராமப் பகுதிகளில் சுமார் 7,500 நபர்களுக்கு வேலை வாய்ப்பினைத் தோற்றுவித்துள்ளன. சவ்வரிசித் தொழிலில் இத்துறையின் முயற்சியால் இடைத்தரகர்களது குறுக்கீடு நீங்கியதனையடுத்து, தொழிற் கூட்டுறவுச் சேவை சங்கங்களின் விற்பனை 1981-82ல் ரூ.40.63 இலட்சத்திலிருந்து 1982-83ல் ரூ.27.72 கோடியாக உயர்ந்துள்வது. இதனால் விவசாயிகளுக்குக் கூடுதலான வருவாய் கிடைக்க ஓர் வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பெற்றுள்ளது.

சிறு தொழில்களுக்கு மூலப் பொருள்கள் கிடைத்திட இத்துறை மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக தேனிரும்பு, நிலக்கரி நீங்கலாக இதர உள்நாட்டில் கிடைக்கும் மூலப் பொருள்களின் பற்றாக்குறை நீக்கப்பட்டுள்ளது. தொழில்களின் தேவையை சரியான முறையில் நிர்ணயிக்க வழி வகுக்கப்பட்டுள்ளதுடன், வழிமுறைகளை எளிதாக்கிட மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் விளைவாக கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.70 கோடிக்கு மேல் மதிப்புள்ள இறக்குமதி உரிமங்கள் தமிழகத்திலுள்ள சிறு தொழில்களுக்குக் கிடைத்துளளன. இத்துறை மேற்கொண்ட முயற்சிகளின் பயனாகக் கூடுதலான தேனிரும்பு ஒதுக்கும் மைய அரசிடமிருந்து, பெறப்பட்டுள்ளது. அதே போன்று தேவையான நிலக்கரி மாநிலமெங்கும் உள்ள சிறு தொழில்களுக்குக் கிடைத்திடவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.



# உருவாகி வரும் செய்தித்தாள் காகித நிறுவனம்




ஆண்டுக்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதமும், 40,000டன் எழுது, அச்சுக் காகிதமும் தயாரிப்பதற்காக உலக வங்கி நிதியுதவியுடன் தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு செய்தித்தாள் - காகித நிறுவனம், வெற்கரமாக நிறுவப்பட்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் பின்தங்கிய பகுதியான புகழூரில் இந்நிறுவனம் அமைக்கப்பட்டு வருகிறது. இது 1984 செப்டம்பர் திங்களுக்குள் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

சர்க்கரை ஆலைகளில் இதுநாள் வரை எரிக்கப்பட்டுவந்த கரும்புச்சக்கை, இந்நிறுவனத்தின் முக்கிய மூலப்பொருளாகும். இந்தக் கருப்பஞ்சக்கை, அண்டைப்பகுதியில் உள்ள ஐந்து சர்க்கரை ஆலைகளிலிருந்து பெறப்படுகிறது. இந்த ஆலைகளுக்குத் தேவைப்படக்கூடிய நீராவியின் தேவையை ஈடுசெய்ய தமிழ்நாடு செய்தித்தாள்-காகித நிறுவனம், நிலக்கரி கொண்டு எரிக்கப்படும் கொதிகலன்களுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிறுவனத்திற்குச் சுமார் ரூ. 195 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் 100 மில்லியன் அமெரிக்க டாலர் வரை உலக வங்கி உதவி செய்கிறது.

தொழிற்சாலைக் கட்டடங்களில் பெரும்பாலானவை கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளன. காகிதம் தயாரிக்கும் இயந்திரம் நிறுவும் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. காகித இயந்திரத்தைச் சோதனை முறையில் இயக்குவது 1984ஆம் ஆண்டு இரண்டாவது காலாண்டில் தொடங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. பல்வேறு நிலைகளிலுள்ள அலுவலர்களுக்கு வீட்டு வசதி அளிக்கும் நோக்குடன் தமிழ்நாடு செய்தித்தாள் - காகித நிறுவனம், சுமார் 500 அலுவலர் குடியிருப்புகளைக் கொண்ட வீட்டுவசதிக் குடியிருப்பு ஒன்றைக் கட்டும்.

இத்திட்டத்திற்குத் தேவைப்படும் நீர், காவிரி ஆற்றிலிருந்து பெறப்படுகிறது. இதற்குத் தேவைப்படக்கூடிய மின்சக்தியில் பெரும்பகுதி, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சொந்த மின் உற்பத்திச் சாதனங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. சிறிதளவு மின்சக்தி மின் வாரியத் திடமிருந்து வாங்கப்படுகிறது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தொடங்கப்படுவதால், முக்கிய பொருள்களில் ஒன்றான காகிதத்தை உற்பத்தி செய்வதற்கு, சர்க்கரை ஆலைகளிலிருந்து கழிவுப் பொருள்களாக வெளியேற்றப்படுகிற கருப்பஞ் சக்கையைப் பயன்படுத்துவதில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கும்.






சிப்காட் என்று புகழ்பெற்ற தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் வரையறுக்கப்பட்ட பொதுநிறுவனமாக 1971-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இது முற்றிலும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானதொரு நிறுவனமாகும். இம்மாநிலத்தில் மேம்பாடு அடைந்து கொண்டிருக்கும் மற்றும் பின்தங்கிய பகுதிகளைத் தொழில் மயமாக்கவும், பெரிய, மற்றும் நடுத்தரத் தொழில்களின் முன்னேற்றத்தையும் தீவிரப்படுத்தும் முக்கிய நோக்கத்துடன் இந்நிறுவனம் அமைக்கப்பட்டதாகும்.

இந்நிறுவனத்தின் செயல் திறன் மற்றும் சாதனைகள் பின்வருமாறு:

**தவணைக் கடன்:**

நடப்பாண்டு 1982-83ல் வழங்கப்பட்ட தவணைக்கடன் ரூ.30 கோடியையும் சேர்த்து, ரூ.70 கோடிவரை 1980 முதல் 1983 வரை தவணைக்கடனாக வழங்கிப் பெரும் சாதனை செய்துள்ளது. இவ்வகையில் 1970-ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட தவணைக்கடன் ரூ.20 கோடி தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**நிலையான மூலதனங்களின் மேல் வழங்கப்படும் மத்திய மானியம்:**

நிலையான மூலதனங்களின் மேல் வழங்கப்படும் மத்திய மானியத்தைத் திரும்பிப் பெறுவதில் மற்ற மாநிலங்களைவிட தொடர்ந்து தமிழ்நாடு முதன்மை வகிக்கிறது. இந்நிறுவனம் ஒன்றே அறிவிக்கப்பட்ட பின்தங்கிய பகுதிகளில் தொழில் துவங்க எல்லா வசதிகளையும், வாய்ப்புகளையும் உருவாக்கித் தருகிறது என்பதற்குப் போதிய சான்றாகும். இவ்வகையில் இதுவரை தமிழ்நாடு சுமார் 21.00 கோடி ரூபாய் வரை திரும்பப்பெற்றுள்ளது. இது இந்தியாவின் எல்லா மாநிலங்களுக்கும் விடுவிக்கப்பட்ட தொகையில் 13.5 விழுக்காடாகும்.

1970-ஆம் ஆண்டுகளில் 'சிப்காட்' நிறுவம் இராணிப்பேட்டை மற்றும் ஒசூர் ஆகிய இரண்டே தொழில் இணையங்களை மேம்படுத்திச் செயல்பட்டு வந்தது. 1980-ல் முதல் மூன்று ஆண்டுகளிலேயே மேலும் கும்மிடிப்பூண்டி, கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை மற்றும் தூத்துக்குடி என்று 5 தொழில் இணையங்களை எடுத்து மேம்படுத்து, தூத்துக்குடி நீங்கலாக மற்ற நான்கு இணையங்களிலும் மனைப்பகுதிகளைக் கூட ஒதுக்கத் துவங்கிவிட்டது.

பண அடிப்படையிலான வரவு செலவுக் கணக்கிற்கு மாற்றம் செய்த பிறகு கூட வரி மற்றும் மற்ற வகையிலான செலவினங்களுக்கு ஒதுக்கப்படுவதற்கு முன் 'சிப்காட்' சுமாராக ரூ.130 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இவ்வகை இலாபமானது 1980-81 ரூ.53.54 இலட்சமாகவும், 1981-82ல் 100.94 இலட்சமாகவும் இருந்தது. 1982-83ல் 130 இலட்சமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.








# வளர்ந்து வரும் கிராமத் தொழில்

**1977** தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், கிராமப் புறங்களில் நிலவி வந்த கடுமையான வேலையில்லாப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண விழைந்தது.

குறைந்த மூலதனத்தில் ஏராளமான வேலைவாய்ப்பை கிராமப் புறங்களில் அவரவர்களின் வீடுகளுக்கு அருகிலேயே கதர்கிராமத் தொழில்கள் மூலம் தான் உடனடியாக ஏற்படுத்தித் தர முடியுமெனக் கண்டறிந்தது. அதனாலேயே தனது பண்டகப் பொருட்கள் வாங்கும் கொள்கையை 1978ல் மாற்றி அமைத்தது. அதன்படி அரசுத்துறைகள், அதன் நிறுவனங்கள், சட்டப்பூர்வமான அமைப்புகள் முதலியன தங்களுக்குத் தேவையான பண்டகப் பொருட்களைத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திடமோ அல்லதுஅதன் நிதியுதவி பெற்ற நிறுவனங்களிடமிருந்தோ தான், வாங்க வேண்டுமென ஆணையிட்டது. இதனால் வாரியம் கடந்த 5 ஆண்டுகளில் 1,62,718 நபர்களுக்குக் கூடுதலான வேலை வாய்ப்பினைக் கதர் கிராமத் தொழில்கள் மூலம் ஆண்டுக்காண்டு ஏற்படுத்தித் தர முடிந்தது.

**கதர்:**

கதர் திட்டத்தின் கீழ் நூல் உற்பத்திக்கு கைராட்டை, அம்பர் ராட்டை உடன் கிராமிய நூற்புக் கூடங்கள் துவக்கப்பட்டுள்ளன. இக்கூடம் ஒவ்வொன்றிலும் 30 நபர்கள், குறிப்பாகப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. இவர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 5.25 முதல் ரூ. 5.75 வரை ஊதியம். 1982-83ஆம் ஆண்டு வரையில் 439 கிராமிய நூற்புக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. மேற்கொண்டு 200 அலகுகள் 1983-84ஆம் ஆண்டில் துவங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

கதரின் உற்பத்தி, 1979-80ல் ரூ. 409.71 இலட்சமாக இருந்தது. 1980-81ல் 513.93 இலட்சமாகவும், 1981-82ல் ரூ. 657.78 இலட்சமாகவும், 1982-83ல் ரூ. 667.78 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. கதர்ப் பட்டு உற்பத்தி 1979-80ல் ரூ. 109.78 இலட்சமாக இருந்தது. 1980-81ல் ரூ. 183.66 இலட்சமாகவும், 1981-82ல் ரூ.256.81 இலட்சமாகவும், 1982-83ல் ரூ. 272.23 இல்ட்சமாகவும் உயர்ந்துள்ளது.

கதர் விற்பனை, 1979-80ல் ரூ. 615.24 இலட்சமாக இருந்தது. 1980-81ல் ரூ. 692.22 இலட்சமாகவும், 1981-82ல் ரூ. 785.85 இலட்சமாகவும், 1982-83ல் ரூ. 903.65 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. கதரின் கீழ் ஏறத்தாழ ½ இலட்சம் மக்கள் வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றனர்.

கதர் நெசவாளர்களுக்கு, வீடு கட்டிக்கொள்ள ஏதுவாக இருக்கும் பொருட்டு ஒரு நெசவாளருக்கு மான்யமாக ரூ. 1000- வீதம் 500 நெசவாளர்களுக்கு ரூபாய் ஐந்து இலட்சம் மான்யமாக ஆண்டுதோறும் 1980-81 முதல் அரசு அனுமதித்து வருகிறது. கதர் நூலின் தரத்தை உயர்த்தவும், அதன் மூலம் நூற்போர், நெய்வோர்களின் கூலியை உயர்த்தவும், பஞ்சடைத்து பட்டைபோடும் கருவிகள் வாங்கி நிறுவிட இவ்வாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் ஐந்து இலட்சத்தை அனுமதித்து கடந்த 2 ஆண்டுகளுக்கு ரூ. 10 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

கதர் நெசவாளர்களுக்கு அதிக அகலமான துணியை உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக 200 தறிகள் அளிக்க ரூபாய் இரண்டு இலட்சம் மான்யமாக ஒதுக்கியுள்ளது.

**கிராமத் தொழில்கள்**

வாரியத்தின் கீழ் 161 அலகுகளும், 1250 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும், 36474 கைவினைஞர்களும் கிராமத் தொழிய்களை ஏற்று நடத்தி வருகின்றனர். 1979-80ல் ரூ. 3276.67 இலட்சமாக இருந்த கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி 1980-81ல் ரூ. 4123-81 இலட்சமாகவும், 1981-82ல் ரூ. 5403.41 இலட்சமாகவும், 1982-83ல் ரூ. 58759.19 இலட்சமாகவும் பெருகியுள்ளது. இம்மாதிரியே கிராமத் தொழில்-பொருட்களின் விற்பனை ரூ.3546.28 இலட்சமாகவும் 1979-80ல் இருந்தது. 1980-81ல் ரூ. 4571.16 இலட்சமாகவும், 1981-82ல் ரூ. 5844.88 இலட்சமாகவும், 1982-83ல் ரூ.6128.45 இலட்சமாகவும் பெருகியுள்ளது.

மேலும் கிராமத் தொழில்களின் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றோர், 1979-80ல் 3,58,820 பேர்களும், 1980-81ல் 3,92,152 பேர்களும், 1981-82ல் 4,15,492 பேர்களும், 1982-83ல்4, 46,741 பேர்களும் பெருகியுள்ளனர்.

பனை மரம் பல வகைகளில் பயன்படுவதால் இதனை அரசின் மரமாக இவ்வரசு அறிவித்துள்ளது.

பொதுப்பணித் துறையைச் சார்ந்த மாநில முழுவதுமுள்ள பனை மரங்களை முழு அளவில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இவ்வாரியத்தின் கீழ் செயல்படும் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குத்தகைக்கு விட அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி ஒவ்வொரு கைவினைஞருக்கும் 100 மரங்கள் விதம் குத்தகைக்கு விடப்பட்டு வருகிறது.

பனை மரம் ஏறுவோர் விபத்தில் மரணமடைந்தால் அவர்களின் குடும்பத்திற்கு ரூ. 5000 -நிதி உதவி அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

பனை மரங்களை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்திட பனை பொருட்கள் கூடங்கள்ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்திட அரசு கொள்கையளவில் முடிவு செய்து, அதன்படி மாநிலத்தில் செங்கை, வடஆர்க்காடு, தர்மபுரி தென்னார்க்காடு மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் கூடங்கள் ஏற்படுத்தியுள்ளது. எஞ்சியுள்ள மாவட்டங்களில் விரைவில் இக்கூடங்கள் அமைக்கப்பெறும்.

**சோப்புத் தொழில்**

குளியலுக்கு உகந்த ''குறிஞ்சி' சோப்பின் பல்வகை நறுமணம் கமழும் வண்ணம் சந்தனம், மல்லிகை மணங்களுடனும், ஆயுர்வேத முறையிலும் தயாரிக்கப்படுகின்றது.

சோப்பின் விற்பனையைப் பெருக்க ஏஜென்சி முறையையும் புகுத்தியுள்ளது.

**தோல் தொழில்**

காலணி தயாரிப்பாளர்களின் வேலை செய்யும் இடத்தினையும் நிலையையும் கண்டு அவர்களது இடுக்கண்களைக் களைய வாரியம் முற்றிலும் புதியதொரு திட்டம் தயாரித்துள்ளது. அதன்படி அவர்களின் நலனுக்காகக் கருவிகளுடன், ''பங்க்குகள்'' அமைத்து கொடுக்க வகை செய்யப்பட்டது. அதன்படி ஒவ்வொரு கைவினைஞருக்கு ஒரு பங்க்கு, ஒரு தையல் இயந்திரமும், கருவிகளும் ரூபாய் 7000- மதிப்பில் தரப்படுகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நிர்ணயிக்கும் இடங்களில் இந்தப் பங்க்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுகாறும் 500 பங்க்குகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 1983-84ல் மேற்கொண்டு 500 பங்க்குகள் விநியோகிக்கப்படவுள்ளன.

கொங்கம்பாளையத்தில் தோல் தொழில் விரிவாக்கம் செய்ய அரசு நிதி உதவி அளித்துள்ளது.

**கைக்காகிதம்**

அரசு கைமுறை காகிதத்தை அதிக அளவில் உபயோகப்படுத்துவதை தொடங்கியதன் பயனாகத் தற்போதுள்ள அலகுகளில் உற்





பத்தித் திறனை அதிகரிக்க மாற்றுப்பணி முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. ஜெனரேட்டரை வாங்குவதற்கும் அரசு நிதி உதவி நல்க ஒப்புதல் அளித்துள்ளது.

**தச்சுத் தொழில்**

தச்சுத் தொழிலை ஊக்குவிப்பதற்காக திருவொற்றியூரில் ஒரு மர அறுவைச் சாலை வாரியம் நிறுவிட அரசு நிதி உதவி அளித்துள்ளது.

**கைக்குத்தலரிசி**

கைக்குத்தல் அரிசித் தொழிலில் ஈடுபட்டிருந்த கைவினைஞர்களுக்கு, மாற்று வேலை அளிக்கும் முகத்தான், மருத்துவமனைகளுக்குத் தேவைப்படும் ரொட்டி வகைகளைத் தயாரித்து விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகின்றது.

**ஆராய்ச்சியும், வளர்ச்சியும்**

கதர் கிராமத் தொழில்களின் கீழ் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் மீதும், கைவினைஞர்களின் கருவிகள் மீதும், பின்வரும் ஆராய்ச்சி மேற்கொள்ள இவ்வரசு நிதி உதவி அளித்துள்ளது:

1. பருத்தி ரகக் கதர் துணிகளுக்கு வடிவமைப்பு செய்யவும், தரத்தினை உயர்த்துவதற்கும் பவானிசாகரில் ஆராய்ச்சிக்கூடம் நிறுவுதல்.
2. உண்ணா எண்ணெய்யில் தயாரிக்கப்படும் சோப்பின் தரத்தை ஆராய்ச்சி செய்ய சென்னையில் ஆராயச்சிக் கூடம் நிறுவுதல்.
3. இடர்ப்பாடின்றி இயங்கும் மின்விசைச் செக்கினைக் கண்டறிய ஆராய்ச்சி
4. நுங்கினையும், பனைவெல்லத்தையும் நீண்ட நாட்களுக்குப் பாதுகாக்க ஆராய்ச்சி.
5. பதநீரிலுள்ள சுண்ணாம்பு நெடியைக் குறைத்து, பருகிட ஏதுவாக இருக்க ஆராய்ச்சி
6. பனைமரங்களின் உயரத்தைக் குறைத்து, அதன் மீது எளிதில் இடர்பாடின்றி ஏறுவதற்கான ஆராய்ச்சி.
7. பனைமரங்களின் மேல் எளிதில் ஏறுவதற்கான கருவிகளைக் கண்டறிய ஆராய்ச்சி.
8. பனைவெல்லத்தைக் கொண்டு தரமான கற்கண்டு தயாரிக்க ஆராய்ச்சி.

இவ்வாராய்ச்சிகள் அண்ணா பல்கலைக் கழகமும், கோவை விவசாயப் பல்கலைக் கழகமும், வாரியமும் ஏற்று நடத்தி வருகின்றன.

**சிறப்புத் திட்டங்கள்**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமும், தாழ்த்தப்பட்டோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமும், மலைப்பகுதி வாழ்வோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமும், சிறப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமும், வறட்சிப் பகுதிக்கான திட்டத்தின் மூலமும், சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமும், கதர் வளர்ச்சித் திட்டத்தின் மூலமும், நலிவுற்ற மக்களுக்குக் கதர் கிராமத் தொழில்கள் மூலம், நல்ல வாழ்க்கையையும் அளித்து அவர்களை வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டு வர இவ்வாரியம் பாடுபட்டு வருகிறது.

கிராமப் பொருட்களின் விற்பனையைப் பெருக்கி, அதன் மூலம் உற்பத்தி பெருகிடவும், வேலை வாய்ப்பை அதிகரிக்கவும் ஏதுவாக சென்னை நகரில் புதியதாக வடிவமைப்பு செய்யப்பட்ட



20 பங்க்குகளை நிறுவிடும் பணி இத்தமிழ்ப் புத்தாண்டில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.



**நடப்பாண்டுக்கான திட்டங்கள்**

1983-84ல் கதர் உற்பத்தி ரூ. 700 இலட்சமாகவும், கதர்ப்பட்டு உற்பத்தி ரூ. 375 இலட்சமாகவும், கதர் விற்பனை ரூ. 1075 இலட்சமாகவும் இருக்குமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி ரூ. 6855.36 இலட்சமாகவும், விற்பனை ரூ. 7279.83 இலட்சமாகவும் இருக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கதர் கிராமத் தொழில்களின் மூலம் நடப்பாண்டில் 40,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புத் தர வகை செய்யப்பட்டுள்ளது.

# அரசு ஊழியர்கள் அடையும் சலுகைகள்



**1980** ஜூன் மாதத்திலிருந்து 1982-83 ஆம் நிதியாண்டு முடியும் வரை, மாநிலத்தின் நிதி நிலைமை செவ்வனே பராமரிக்கப்பட்டு இருக்கிறது.

1980-81ல் சுமார் ரூ.200 கோடி வரை விவசாயிகளிடமிருந்து வரவேண்டியிருந்த கூட்டுறவு மற்றும் தக்காவிக் கடன்களை ரத்து செய்திருந்தும், 1981-82ல் சுமார் ரூ. 50 கோடிக்கு வறட்சி நிவாரணப் பணிகளுக்குச் செலவிட்டிருந்தும், ஒவ்வொரு ஆண்டும் மத்தியத் திட்டக்குழு அனுமதித்த திட்டச் செலவைக்காட்டிலும், நமது திட்டச் செலவு அதிகமாக இருந்தும், 1982-83 ஆம் நிதியாண்டின் இறுதிவரை ரிசர்வ் வங்கியிடம் மேல்பற்று வாங்காமல் நிதி நிலைமையைப் பராமரித்து வருவது மாநில அரசின் திறமையே ஆகும்.

**அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள்**

1980 அக்டோபர் முதல் பண்டிகை முன்பணம் ரூ.500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

சென்னை மாநகர் உட்பட மாவட்டத் தலைமை இடங்களில் பணிபுரியும் காவல் துறைப் பணியாளர்களுக்கு, அவர்களுக்கு இலவசமாகக் குடியிருப்புகள் வழங்கப்படாமலிருந்தால், 1.8.80 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.50 என்ற உயரளவு வீட்டுவாடகைப்படி அனுமதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத் தலைமையிடங்கள் அல்லாத பிற இடங்களில் பணிபுரியும் காவல் துறைப் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.30 வீதம் என்று அனுமதிக்கப்பட்டுள்ளது. (இதே சலுகை 1.3.82 முதல் தீயணைப்புத்துறைப் பணியாளர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது)

பண்டிகை முன்பணம் பெறும் சலுகை எந்தவிதமான உச்சவரம்பும் இல்லாமல் அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. (அனைத்திந்தியப் பணி அதிகாரிகள் நீங்கலாக).

## 1981-82

அரசுக் குடியிருப்புகளில் அரசு வாடகைக் குடியிருப்புகளில் குடியிருந்து வரும் அடிப்படைப் பணியாளர்கள், ஓட்டுநர்கள் முதலியோரிடமிருந்து 1.5.81 முதல் வாடகை எதுவும் வசூலிக்க வேண்டியதில்லை என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு இடங்களில் அரசுக் குடியிருப்புகளில் அரசு வாடகைக் குடியிருப்புகளில் குடியிருந்து வரும் அரசுப் பணியாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு வரும் வாடகை வீதங்களை 1.5.81 முதல் திருத்தியமைத்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

வீட்டு வசதிக் கட்டுப்பாட்டு அதிகாரி வழங்கியுள்ள வீடுகளில் குடியிருக்கும் அரசுப் பணியாளர்களைப் பொறுத்தமட்டில் வீட்டு வாடகைப்படி 1.5.81 முதல் முறைப்படுத்தப்பட்டுள்ளது

## 1982-83

மோட்டார் கார், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர், மொபெட் ஆகியவற்றை வாங்குவதற்கான ஊர்தி முன்பணத்தின் அளவு உயர்த்தப்பட்டுள்ளது.

டெல்லி போன்ற பெருநகரங்களில் தங்குவதற்கு உட்பட, அரசுப் பணியாளர்களுக்கான, நாட்படி, ஏனைய பயணப்படி ஆகியவற்றின் வீதங்களும் உயர்த்தப்பட்டுள்ளன.

மூன்றாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1.4.79 முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி வழங்குவது தொடங்கப்பட்டது. இது வரை 19 அகவிலைப்படித் தவணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் ஆண்டொன்றுக்கு ரூ.228 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.

அகவிலைப்படியின் ஏழாவது தவணைத் தொகை, 1981-82 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டது. அகவிலைப்படியின் 12 முதல் 15 வரையிலான தவணைத் தொகைகளை 1982 ஆம் ஆண்டு மார்ச்சில் சட்ட மன்றப் பேரவையில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார். எஞ்சியுள்ள தவணைத் தொகைகள், மத்திய அரசு அகவிலைப்படி வீதங்களை உயர்த்தி அறிவிக்கும்போதெல்லாம் அனுமதிக்கப்பட்டு வந்தன.

**அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட ஓய்வூதியச் சலுகைகள்**

## 1980-81

ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்கள், ஓய்வூதியம் ஏனைய ஓய்வு கால நன்மைகளை உடனுக்குடன் பெறுவதற்கு வசதியாக இருக்கும்பொருட்டு ஓய்வூதியத்திற்கு அனுமதி வழங்கும் நடைமுறை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

## 1981-82

ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக்கி பெற்றுள்ளவர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, அப்பகுதியை அவரது ஓய்வூதியத்துடன் சேர்த்துக்கொள்வதற்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

## 1982-83

இறப்பு-ஓய்வுக் காலப் பணிக்கொடையின் அதிகபட்ச அளவு ரூ.30,000லிருந்து ரூ. 36,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



# ஆதி திராவிட நலத் துறையின் ஆக்கப் பணிகள்

தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் மக்கட்தொகை 88.81 ( 1981 மக்கட் தொகை கணக்கெடுப்பு விவரம்) இலட்சமாகும். இவர்களின் முன்னேற்றத்தினை விரைவுபடுத்தும்பொருட்டு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதி, ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வந்துள்ளது.

ஆதி திராவிடர்கள் பெரும்பாலோர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் அமையும் வாழ்க்கையினை வாழ்ந்து வருவதால் இவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களைச் செயல்படுத்தி ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 9 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேலே உயர்த்தவும், இவர்கள் குடியிருப்புகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளைச் செய்து தரவும் சிறப்பு உட்பகுதித் திட்டம் என்ற சிறப்புமிகு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டமானது இந்த அரசின் பல்வேறு வளர்ச்சித் துறைகளும் இம்மக்களின் நல்வாழ்வுக்காகத் தம்முடைய வளர்ச்சிப்பணிகளையும் செயல்படுத்தி வருகின்றன.

**பொருளாதார மேம்பாடு**

தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக நல்ல பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. வேளாண்மைக்காசப் பாசனக் கிணறு தோண்ட ரூ. 5000-வரையிலும், உழவு மாடுகள், விதைகள் வாங்க ரூ.600 ம் மானியமாக வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் கடந்த 1980-81 முதல் 1982-83 முடிய சுமார் 1,125 ஆதி திராவிடர்கள் பயன் துய்த்துள்ளனர்.

நில உச்சவரம்புநிர்ணயம்செய்ததால் பெற்ற உபரி நிலமானது பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்த உபரி நிலம் கிடைக்கப் பெற்றவர்களில் சுமார் 1300 பேர் ஆதி திராவிடர்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு ஏக்கருக்கு ரூ.400 - வீதம் மானியமாக வழங்கப்பட்டு இந்த நிலத்தினைச் சாகுபடிக்கு ஏற்றதாகச் செய்ய நிதி உதவியும் அளிக்கப்படுகின்றது. உற்பத்தியைப் பெருக்குவதன் வாயிலாக இவர்களது பொருளாதார நிலையினைப் பெருக்க நல்ல விதைகள், எண்ணெய் வித்துக்கள், உரம், மரக் கன்றுகள், பூச்சிகொல்லிகள் ஆகியவை 25% மானிய விலையில் இவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 2.42 இலட்சம் ஆதி திராவிடர் ள் பயனடைந்துள்ளனர்.

வேளாண்மைக்காக, குழாய்க்கிணறுகள் முதலியன அமைத்து விவசாயத்துறையில் முன்னேற்றம் பெறவும் வழிவகை செய்யப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்களுடைய எண்ணிக்கையில் 50 விழுக்காடு ஆதி திராவிடர்களாக இருக்க வேண்டும் என்று இந்த அரசு ஆணையிட்டுள்ளது. இதன் பயனாக 1982-83ல் பயனடைந்தோரில் 100க்கு 45 பேர் ஆதி திராவிடர்கள் ஆவர்.

சிறு விவசாயிகளும், வேளாண்மைக் கூலிகளும் பயன்பெற ஆடு, மாடு, கோழி முதலிய இனங்களை வளர்த்தல் போன்ற துணைத் தொழில்களை மேற்கொள்ள உகந்த உதவி வழங்கப்படுகின்றது. ஆதி திராவிடர்களுக்கென தனியாகப்பால்கூட்டுறவுச் சங்கங்களும் நிறுவப்படுகின்றன. ஆதி திராவிடர்கள் கறவை மாடுகள் வாங்க முன்பு 33.33 விழுக்காடு தான் மானியமாக வழங்கப்பட்டது. தற்போது இது 50 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் 7,672 ஆதி திராவிடர்கள் பயன்பெற்றுள்ளனர்.

பட்டுப்பூச்சி வளர்ப்பது மிகவும் இலாபகரமானதாக உள்ளதால், ஆதி திராவிடர்கள் இத்தொழிலை மேற்கொண்டு முன்னேறுவதற்கும் உகந்த வகையில் ஊக்கம் அளிக்கப்படுகிறது. கடந்த இரு ஆண்டுகளில் 4,500 ஆதி திராவிடர்கள் இத்திட்டத்தினால் பயன் பெற்றுள்ளனர்.

தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு கருமார், தச்சு, தையல், தோல் தைக்கும் தொழில் போன்ற 21 வகையான தொழிற் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் 4,613 ஆதி திராவிடர்கள் பயன் எய்தியுள்ளனர். ஊரக இளைஞர்கள் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழும் ஆதி திராவிடர் இளைஞர்களுக்கும் உரிய பயிற்சியானது அளிக்கப்படுகிறது. சைக்கிள் கடை, சிற்றுண்டிச் சாலை, மளிகைக் கடை, அச்சகம் போன்ற 31 சிறு தொழில்கள் நடத்துவதற்காக கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1980-81; 1981-82 மற்றும் 1982-83 முடிய 3,631 ஆதி திராவிடர்களுக்கு இந்தக் கடன் திட்டத்தின் கீழ் பயன் எய்தியுள்ளனர்.

மத்திய அரசு அளிக்கும் சிறப்பு நிதி உதவியைக் கொண்டு ஆதி திராவிடர்களின் வேலை வாய்ப்பினை அதிகரிப்பது அவர்கள் நிரந்தரமான பாங்கில் வறுமைக்கோட்டை விட்டு உயர்வதற்குத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், தொழிற்சாலைகள், நூற்பு ஆலைகள் போன்றவற்றிற்குத் தாராளமாக நிதி உதவி அளிக்கப்படுகிறது. சென்ற 2 ஆண்டுகளில் இத்திட்டங்களின் கீழ் 61,944 ஆதி திராவிடர் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

### கல்வி

கல்வியினால் ஆதி திராவிடர்கள் பெருமளவு நன்மையினையும் மேம்பாடு பெறுவதற்கும் வழியும், வாய்ப்புகளும் உள்ளன என்பதைக் கருத்திற் கொண்டு கல்விக்காகப் பெருமளவில் நிதி ஒதுக்கீடானது செய்யப்படுகிறது. ஆதி திராவிடர்களில் கல்வியறிவு பெற்றோர் 29.67 சதவீதமாகும் இவர்கள் சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு அடைந்து சம உரிமை பெற இவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இம் மாணவர்களின் நலனுக்கென, 947 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இப்பள்ளிகளில் 1.78 இலட்சம் மாணவர்கள் பயில்கின்றனர். இவர்களுக்கு இலவச உண்டுறை வசதிகள் அளித்து கல்வி பயில 675 இல்லங்கள் நடத்தப்படுகின்றன. சென்ற மூன்று ஆண்டுகளில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட விடுதிகள் 45. இவற்றில் சுமார் 43,000 மாணவர்கள் தங்கிப் பயில்கின்றனர். இம்மாணவர்களுக்கு உணவுக்காகச் செலவிடும் தொகை 1981-82ல் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் நடத்தப்படும் பள்ளி மற்றும் இல்லங்களில் தங்கிக் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் புத்தகம், குறிப்பேடுகள், சீருடைகள் ஆகியவையும் இலவசமாக வழங்கப்படுகின்றன. 10ஆம் வகுப்பு வரை பயிலும் 7.80 இலட்சம் மாணவர்களுக்கு நோட்டுப்புத்தகங்களும், பாடப் புத்தகங்களும், சிலேட்டுகளும் இலவசமாக ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

படிப்புக் கட்டணச் சலுகை பெற வருமான வரம்பு நிர்ணயமானது 1977-78ஆம் ஆண்டு முதல் நீக்கப்பட்டுவிட்டது. மாநில அரசு வழங்கும் படிப்புதவித் தொகை பெற பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ. 3000- ஆக இருந்த ரூ.6000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## வீடும் வீட்டுமனையும்

| | |
|---|---|
| கடந்த மூன்றாண்டுகளில் வீட்டு மனைகள் பெற்ற ஆதிதிராவிடர் | 79.695 |
| ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகள் | 95.675 |
| கலப்பு மணத்தை ஊக்குவிக்க மானியம் | ரூ. 4,000 |
| திருமணச் செலவுக்கு | ரூ. 300 |
| கடந்த மூன்றாண்டுகளில் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களால் பயனடைந்த ஆதிதிராவிடர்கள் | 4.46 இலட்சம் |



## உயர்வுக்கு உதவி

| | |
|---|---|
| ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் | 947 |
| பயிலும் மாணவர்கள் | 1.78 இலட்சம் |
| ஆதிதிராவிடர் மாணவ இல்லங்கள் | 675 |
| தங்கிப் பயிலும் மாணவர்கள் | 43,000 |
| பத்தாம் வகுப்புவரை இலவசப் பாடநூல்கள் நோட்டுகள் பெறும் மாணவர்கள் | 7.80 இலட்சம் |



சட்டப் படிப்பு முடித்த மாணவர்களுக்குத் தொழிலில் ஈடுபட கடனாகவும், மானியமாகவும் பண உதவி வழங்கப்படுகிறது. பட்டதாரி மாணவர்கள், அகில இந்திய அரசு பணிகளில் சேர வாய்ப்பு உருவாக்க சிறப்புப் பயிற்சி அளிக்கும்வகையில் அவர்களுக்கு முன்னோடிப் பயிற்சி நிலையம் ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகின்றது. இது வரை இந்த நிலையத்தின் மூலமாகப் பயன் பெற்றவர்களுடைய எண்ணிக்கை 42 ஆகும்.

### வேலை வாய்ப்பு

தமிழக அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு நிறுவனங்களில் உள்ள வேலை வாய்ப்புகளில் ஆதி திராவிடர்கட்கும், பழங்குடியினருக்கும் 18 சதவிகிதம் இடங்களை ஒதுக்கீடு செய்து அத்திட்டம் செயல்படுவதை ஆய்வு செய்வதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் ஒரு மேல் மட்டக் குழு அமைக்கப்பட்டு ஆய்வு செய்து வருகிறது. இத்திட்டமானது செம்மையாகச் செயல்படுவதைக் கண்காணிப்பதற்கு அரசு இரண்டாம் செயலரைத் தலைவராகக் கொண்ட உயர் மட்ட கண்காணிப்புக் குழு ஒன்றும் செயல்பட்டுவருகின்றது.

### சுகாதாரம் வீட்டுவசதி மற்றும் ஏனைய திட்டங்கள்

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும், மயானத்திற்கும்பாதை வசதி செய்து தருவது, குடிநீர் வசதி செய்து தருவது, மின்வசதி ஏற்படுத்தித் தருவது போன்ற திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்படுகின்றன. இயல்பாக நிறைவேற்றப்பட்டு வந்த திட்டங்களைத் தவிர ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கெனதனியானதொரு தன்னிறைவுத் திட்டத்தினைத் தீட்டி, சென்ற மூன்றாண்டுகளில் சுமார் ரூபாய் 292 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

சென்றமூன்றாண்டுகளில் 79,695 ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 95,675 வீடுகள் அவர்களுக்காகக் கட்டப்பட்டுள்ளன. சமுதாய மண்டபங்கள், சலவைத் துறைகள் முதலியவைகளும் கட்டித் தரப்படுகின்றன. நெடுங்காலமாக இவர்களை வதைத்து வரும் தீண்டாமையை ஒழிக்கப் பொருளாதார, கல்வி மேம்பாடு மட்டும் போதாது என்றுணர்ந்து, அரசு தீண்டாமை ஒழிப்புத் திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றி வருகிறது. கலப்பு மணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ரூ. 4,000 மானியமாகவும், ரூ. 300 திருமணச் செலவுகளுக்கும் பாராட்டுப் பத்திரமும், தங்கப் பதக்கமும் அளிக்கிறது.



மேலே விளக்கப்பட்டுள்ள திட்டங்கள் போன்று மேலும் நல்ல பல திட்டங்களை தீட்டி இந்த அரசு ஆதி திராவிடர் மக்களின் நலனுக்காகச்செயல்படுத்தி வருகிறது. 1980-81-ஆம் ஆண்டு ரூ. 36.22 கோடியும், 1981-82-ல் ரூ. 74.50 கோடியும் செலவிடப்பட்டது. 1982-83ல் ரூ. 103 கோடி ஒதுக்கீடு இதற்காகச் செய்யப்பட்டிருந்தது. நடப்பு ஆண்டில் ரூ. 126.77 கோடி செலவிட அரசு திட்டம் தீட்டியுள்ளது. சென்ற மூன்றாண்டுகளில் 4.46 இலட்சம் ஆதி திராவிடர்கள் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களினால் பயனடைந்து வந்ததே இந்த அரசின் ஆர்வத்தைக் கட்டியம் கூறி நிற்கிறது.

### பழங்குடியினர் நலம்

தமிழ்நாட்டில் பழங்குடியினரின் மக்கட்தொகை 5.20 இலட்சம் ஆகும். இவர்கள் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் சிதறிக் கிடப்பதால், இவர்கள் சேர்ந்தாற்போல் வாழும் 9 இடங்களைத் தெரிந்தெடுத்து, சமூக, கல்வி, பொருளாதாரத் திட்டங்களை இந்த அரசு சிறப்பான வகையில் நிறைவேற்றிவருகின்றது.

இவர்கள் வாழ்வு வளம்பெறவும், இடைத் தரகர்களின் பிடியிலிருந்து விடுபட்டு நல்வாழ்வு வாழவும் இந்த அரசு நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இவர்களுக்கு வேளாண்மை இடுபொருட்கள், 50 சதம் மானிய விலையில் வழங்குகின்றது. அதிகப் பயன் தரும் ஆடுகள், மாடுகள், பன்றிகள், கோழிகள் போன்றனவும் 50 சதம் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலையில் இந்தத்திட்டங்கள் தற்பொழுது 75 சதம் மானியத்தில் செயல்படுத்தப்படுகின்றன. இவற்றைத் தவிர, தச்சு, கருமார் போன்ற தொழில் செய்ய பயிற்சியும், தேனீ வளர்க்க உதவியும் அளிக்கப்படுகின்றது. நிரந்தர வருமானம் பெற சிறிய பழத் தோட்டங்கள் ஏற்படுத்த உதவியும், சிறு பாசன வசதிகள் ஏற்படுத்தியும் தரப்படுகிறது. காடுகளில் விளையும் கடுக்காய், சீயக்காய் போன்ற விளை பொருட்களை இலவசமாகச் சேகரித்துக் கொள்ள அனுமதியும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர்களை இடைத்தரகர்கள் சுரண்டுவதைத் தடுக்கும் பொருட்டு, 13 பெரிய அளவிலான கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

இவர்களிடையே கல்வி அறிவினை வளர்க்க, ஆண்டுதோறும் 12 உறைவிடப்பள்ளிகள் திறக்கப்படுகின்றன. இப்பொழுது 137 உறைவிடப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இந்தப் பள்ளிகளில் சுமார் 8,700 பழங்குடி மாணவர்கள் தங்கிக் கல்வி பயில்கின்றனர். இதனைத் தவிர 20 தங்கும் இல்லங்கள் உள்ளன. அவற்றில் சுமார் 900 மாணவர்கள் தங்கிப் பயில்கின்றனர். இந்த உறைவிடப் பள்ளிகள் மற்றும் தங்கும் இல்லங்களில் எல்லா வசதிகளும் உணவு, உடை, புத்தகங்கள் போன்றவை இலவசமாகச் செய்து தரப்படுகின்றன.

சென்றமூன்றாண்டுகளில் இதற்காக சுமார் ரூ.340.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் 1980-81-ல் ரூ. 345.25 இலட்சமாக இருந்த ஒதுக்கீடு 1983-84ல் ரூ. 600.50 இலட்சமாக உயர்ந்துள்ளதே இந்த அரசு இம்மக்களின் நல்வாழ்வில் கொண்டுள்ள அக்கறையினைத் தெளிவாகக் காட்டும்.

TIDCO

# தொழில் முனைவர்களுக்கோரு நற்செய்தி!
# தொழில் துவங்க 'டிட்கோ' அழைக்கிறது.

தமிழ் நாட்டில் பெரிய, நடுத்தர தொழில்கள் உருவாக உறுதுணையாக செயல்படுவது, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்.
ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட முதலீடு தேவைப்படும் தொழில்களை, பொதுத்துறையிலும் கூட்டுத் துறையிலும் இது உருவாக்கி வருகின்றது.

இரசாயனப் பொருள்கள் முதல் மின்அணுவியல் கருவிகள் உள்ளிட்ட பற்பல பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது. இதன் பயனாக சுமார் 13,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. மேலும் புதிய பெருந்தொழில்களைத் தோற்றுவிப்பதற்கு 'டிட்கோ' பாடுபடுகிறது.

DIPR/83/(R)

தொழில் முனைவர்கள் அணுகுவதற்கு முகவரி:

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

(தமிழக அரசு நிறுவனம்)

735, அண்ணா சாலை, சென்னை—600 002.



# சமூக நலத் துறை சாதனைகள்

தமிழ்நாடு அரசின் சமூகநலத் துறை, சமுதாயத்தின் பலவீனப் பட்ட மக்களின் பாடறிந்து செயல்படும் துறையாகும். உடுக்கை இழந்தவன் கைபோல', இன்னலுற்றவர்களின் இடுக்கண்களையும் இத்துறை, கடந்த மூன்றாண்டுக்காலத்தில் ஆற்றி வந்துள்ள பணிகள் அளவிடற்கரியனவாகும்.

மகளிர், கணவனால் கைவிடப் பட்டோர், விதவைகள், கர்ப் பிணிப்பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், ஊனமுற்றோர், மூத்துமுதிர்ந்தோர், ஓய்வூதியம் பெறுவோர் ஆகியோர்க்குச சமூக நலத்துறை உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் வருகிறது.

மகாகவி பாரதியின் லட்சிய கனவுகள் நிறைவேறிட இந்த அரசு நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் மகளிர் பொருளாதார ரீதியில் தனித்துவம் பெறுவதற்கு வாய்ப்பளிக்கிறது.

கூட்டுறவு மற்றும் உற்பத்தி நிலையங்களில் சமுதாய பொருளாதார அடிப்படையில் முழு நேரம் மற்றும் பகுதி நேரம் வேலை வாய்ப்பளித்து ஊதியம் பெற வகை செய்தல்—

தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களில் பெண்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம், அவர்களுக்கு வேலை வாய்ப்பு பெறும் திறனை அதிகப்படுத்துதல்—

தகுதியும், தேவையும் உள்ள பெரும் எண்ணிக்கையிலான பெண்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்—

பணிபுரியும் பெண்கள் தங்கும் இல்லம், சேவை இல்லம, விதவைகளுக்குத் தனி உதவி அளித்தல், விதவை மறுமணம் போன்ற பல திட்டங்கள் மூலம் பெண்களுக்குப் பல்வேறு வசதிகள் பெற்றிட வாய்ப்பளித்தல்—

மகளிர் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக எடுக்கப்படும் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் சட்ட சம்பந்தமான நடவடிக்கைகளை மகளிர் மன்றங்கள் உட்பட பல்வேறு மகளிர் அமைப்புகள்மூலம் எல்லோருக்கும் விளங்கும்படி எடுத்துச் சொல்லுதல் போன்ற பலவகையிலும் அரசு அரிய உதவிகளைச் சமூகநலத்துறை மூலம் செய்து வருகிறது.

இவற்றைத்தவிர மாதர்கட்கு நட்டச்சுப் பயிற்சி, சுருக்கெழுத்துப் பயிற்சி ஆகியவை பெற நிதியுதவியும் செய்யப்படுகிறது. ஆதரவற்ற 18 முதல் 35 வயதுக்குட்பட்ட மகளிருக்கு உற்பத்தி நியைங்களில் தையல், நெசவு, பாய் முடைதல் போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கப் படுகிறது.

## சேவை இல்லங்கள்

தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, மற்றும் சேலம் மாவட்டங்களில் ஐந்து சேவை இல்லங்கள் நடத்தப் பட்டு வருகின்றன. இவை 18 முதல் 40 வயதிற்குட்பட்ட விதவைகள், கணவனால் கைவிடப் பட்டோர் மற்றும் சமூக பொருளாதார நிலையில் பின் தங்கிய மகளிர் ஆகியோரின் நலனுக்கெனச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கூறிய தகுதியுள்ள மகளிருக்குப் பத்தாம் வகுப்பு வரை கல்விப் பயிற்சி, தையற்கலை, ஆடை தயாரித்தல், சித்திரப்பூ தையல் மற்றும் நெசவு ஆகிய தொழிற் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

சேவை இல்லங்கள் மூலமாகவும், அரசு உதவிபெறும் தனியார் நிறுவனங்கள் மூலமும் பத்தாம் வகுப்புத் தேர்வு பெற்ற வயதடைந்த மகளிர் ஆகியோருக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவைச் சேர்ந்த பணிபுரியும் மகளிருக்கு உணவு மற்றும் தங்கும் வசதிகளை அளித்திட பணிபுரியும் மகளிருக்கான விடுதிகளையும் அரசு நடத்தி வருகிறது. மாநில அளவில், பணிபுரியும் மகளிருக்கென 6 விடுதிகள் உள்ளன. மகளிர் மன்றப்

பணிகளுக்கென ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டுக்கு ரூ.4000 - வீதம் நிதி அளிக்கப்படுகிறது.



### ஆதரவற்ற விதவைகள் நலன்

ஆண்டு வருமானம் ரூ.3,000 -க்கும் குறைவாக உள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம் வழங்கப்படும் திட்டம் செயல்பட்டு வருகிறது. ஆரம்பப் பள்ளியில் பயிலும் விதவைகளின் குழந்தைகள் ஒவ்வொன்றுக்கும் ரூ.15 நடுநிலைப் பள்ளியில் பயிலுவோருக்கு ரூ.40ம் உயர்நிலைப் பள்ளியில் பயிலுவோருக்கு ரூ.60 ம் வழங்கப்படுகிறது. மேலும் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் விதவைகளின் குழந்தைகளுக்கு ரூ. 100 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 14,200 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

### விதவைகளின் பெண்மக்களுக்குத் திருமணம்

ஆண்டு வருமானம் ரூ.3000 -க்கும் குறைவாக உள்ள விதவைகள் குடும்பத்தில் அவர்களுடைய 18 முதல் 30 வயதிற்குட்பட்ட பெண்களுக்குத் திருமணம் நடக்கும் பொழுது திருமணச் செலவினங்களை ஏற்கும் பொருட்டு இத்திட்டம் 1981-82ம் ஆண்டு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் சுமார் 1000 பேர்கள் பயனடைவர். ஒவ்வொருவருக்கும் ரூ.1000 - வழங்கப்படும். ஒரு விதவையின் ஒரே ஒரு மகள் (மணமகள்) இவ்வுதவி பெறத் தகுதியுடையவர் ஆவார்.

### விதவை மறுமணத் திட்டம்

இத்திட்டத்தில் விதவை மறுமணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு கணவன் மனைவி இருவர் பெயரிலுமாக ரூபாய் ஐயாயிரத்துக்கான 7 ஆண்டுக்கால வரம்புள்ள தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்பட்டுவருகிறது. இத்திட்டம் 18 முதல் 30 வயதிற்குள்ளாக உள்ள விதவைகளை மறுமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு மட்டுமே பொருந்தும். இத்திட்டம் 1981-82 முதல் செயல்படுத்தப்படுகிறது. ஆதரவற்ற கைம்பெண்கள் வாழ்வு பெற இலவசமாகத் தையல் கருவிகள் வழங்கப்படுகின்றன.

### சமூக நலத்துறை வழிகாட்டி நிலையம்

1978 பிப்ரவரி திங்கள் முதல் சென்னை, மதுரை, கோவை புத்தூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் வழிகாட்டி நிலையங்கள் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. விதவை மாதர்கட்கு அவர்களின் இறந்து போன கணவன்மார்களுக்குச் சேர வேண்டிய அயுள் கால வைப்பு நிதி மற்றும் ஆயுள் காப்புத் தொகை ஆகியவற்றைப் பெற்றுத்தர உதவி செய்தல, கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் பற்றிய அறிவுரை அளித்தல், சமூக நல நிலையங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் விதவைப் பெண்களின் குழந்தைகளுக்கு இடம் பெற உதவுதல், ஆகியவை வழிகாட்டி நிலையத்தின் நோக்கங்களாகும். முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தினால் பல்லாயிரக்கணக்கான விதவைகள், ஆதரவற்ற விதவைகள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

### குழந்தைகள் நலம்

ஊட்டச் சத்தின்மையால், ஏழைக் குழந்தைகளிடையே காணும் உடல் நலக் குறைவைச் சரிப்படுத்தும் நோக்குடன் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குழந்தைகளின் நலன் கருதி முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 2 வயது முதல் 4 வயது வரையிலான குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் மதிய சத்துணவு இலவசமாக வழங்கப்படுகிறது. 411 கலோரியை அளிக்கும் உணவு, சாம்பார் சாதம், தயிர் சாதம், கிச்சடி போன்ற வகைகளில் வழங்கப்படுகிறது.

இந்தியாவிலேயே இத்திட்டம் சிறப்பானதொரு திட்டம் என்று மற்ற மாநில அரசுகள் ஏற்றுக் கொண்டு இத்திட்டத்தினைத் தமது மாநிலங்களிலும் செயல்படுத்த முற்பட்டுள்ளன.

குழந்தைகள் நலனுக்காக, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், உலக வங்கியின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டம், தாய் சேய் நலத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் கீழ் குழந்தைகளுக்குத் தேவையான சத்துணவும், நோய்த் தடுப்பும், மருத்துவச் சோதனை, முறை சாராக் கல்வி போன்றவை அளிக்கப்படுகிறது.

### ஆதரவற்ற குழந்தைகள் நலத்திற்கான திட்டம்

5 முதல் 18 வயது வரையிலான ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லம் ஒன்றுக்கு 250 நபர்களைக் கொண்ட 4 ஆதரவற்றவர் இல்லங்களை 4 இடங்களில் இவ்வரசு நடத்தி வருகிறது. இவ்வில்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளுக்கு உணவு, உறையுள், உடை மருத்துவம் மற்றும் கல்வி வசதிகள் செய்து தரப்படுகின்றன. தனியார் நடத்தும் இத்தகைய இல்லங்களுக்கும் அரசு தேவையான நிதி உதவி வழங்குகின்றது.

### ஊனமுற்றோர் நலம்

தமிழ்நாடு அரசு ஊனமுற்றோரின் நலனுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும், பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. அத்திடங்கள்-குறிப்பாகக் கல்வி, தொழிற்பயிற்சி, வேலை வாய்ப்பு, மற்றும் சுய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி ஊனமுற்றோரை தன்னிச்சையாகச் செயல்படவும் தன்னம்பிக்கையுடன் வாழ்விக்கவும் உதவிபுரியும் நோக்கம் உடையவை ஆகும்.

ஊனமுற்றோர் நலனுக்காக ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடு ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்திருக்கிறது. ஊனமுற்றோர் கல்வி பயில அரசால் நடத்தப்படும் பள்ளிகள் 5-ம், மானியம் பெறும் பள்ளிகள் 25-ம் உள. இவர்கள் கல்வி பயில மத்திய அரசும், மாநில அரசும் உதவித்தொகை அளிக்கின்றன. இதன் மூலம் ஆண்டு தோறும் சுமார் 9,800 உடல் ஊனமுற்றோர் பயனடைகின்றனர்.

### வேலைவாய்ப்பு

உடல் ஊனமுற்றோர்க்கு வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு தொழிற் கூடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்களுக்குக் கடைகள் வைக்கவும், தொழில் செய்யவும் உதவி வழங்கப்படுகிறது. இவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் காதுகேட்கும் கருவிகள் முதலியனவும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

முதியோர் உதவித்தொகை திட்டத்தின் மூலம் 65 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற முதியோர்களும், 45 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்களும், 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற விதவைகளும, 60 வயதுக்கு மேற்பட்டவேளாண்மைத் தொழிலாளர்களும் பயன் பெறுகிறார்கள். அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.35 உதவித் தொகையும், ஆண்டுக்கு இருமுறை சேலை வேட்டியும் இலவசமாக வழங்கப்படுகிறது. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் முதியோர் உதவித் தொகையும் பெறுவோரும் பயனடையும்வகையில் செய்யப்பட்டுள்ளது. இதனால் சுமார் 2 இலட்சம் பேர் பயனடைகிறார்கள். கண் பார்வையற்ற நபர்களுக்கு வயது வரம்பு எதுவும் இன்றி உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

### சீர்திருத்தப் பள்ளி

தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் கீழ் குற்றம்புரிந்த இளங் குற்றவாளிகள், ஆதரவற்றோர் கட்டுக்கடங்காச் சிறுவர்கள் மற்றும் 1956-ம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நெறி பிறழ்ந்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் பெண்டிர் ஆகியோரின் பொறுப்பினை ஏற்று சீர்த்திருத்தப் பயிற்சி அளித்து கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழிற் கல்வி அளித்து இவர்களுக்கு அரசு புனர்வாழ்வு அளித்து வருகிறது.




இத்துறை சீர்திருத்த நிறுவனங்களிலிருந்து விடுதலையாகும் இல்லவாசிகளுக்கும் நிறுவனங்கள் மூலமாகப் பிற்காப்பு அளிக்கிறது. இம்மாநிலத்தில் 23 சீர்திருத்தப் பள்ளிகள் (நீண்ட கால வரையரை நிலையங்கள்) உள்ளன. ஒன்பது பள்ளிகள் அரசினராலும் எஞ்சிய 14 பள்ளிகள் அரசு மானியம் பெறும் தனியார் நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன. மாநிலம் முழுவதுமாகப் பதினைந்து வரவேற்பு இல்லங்கள் (ஒன்பது அரசினராலும், ஆறு தனியார் நிறுவனங்களாலும்) நடத்தப்படும் (குறுகிய கால வரையரை நிலையங்கள்) உள்ளன. இத்துறையின் கீழ் 3 அரசினர் பிற்காப்பு இல்லங்கள் 2 சிறுவர்களுக்காகவும் 1 சிறுமியர் மற்றும் பெண்டிருக்காகவும் செயல்படுகின்றன.

### கல்வி

அனைத்துச் சீர்த்திருத்தப் பள்ளிகளும் கல்வித்துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட கல்விப் பிரிவுகளைக் கொண்டவையாகும். இவற்றில் எட்டாம் வகுப்புவரை கல்வி கற்பிக்கப்படுகிறது.

### வாழ்க்கைத் தொழிற்கல்வி

இல்லவாசிகளின் பயனுக்காகவும் இல்லத்தைவிட்டு வெளியேறியபின் அவர்களின் மறுவாழ்வு மகிழ்ச்சியுடன் அமையும் பொருட்டு வருவாய் பயக்கும் தொழிற் கல்விப் பயிற்சிகள் நிறுவனங்களில் பயிற்றுவிக்கின்றன.

### மறுவாழ்வுத் திட்டம்

இல்லவாசிகள், நிறுவனங்களில் சீர்திருத்தப் பயிற்சி பெற்ற பின்னர் தகுந்த மறுவாழ்வு கீழ்க் கண்டவாறு அளிக்கப்படுகிறது.

விருப்பமுள்ள (ஆதரவற்ற) பெண்களுக்குத் திருமண ஏற்பாடு செய்தல்.

### வேலை வாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தருதல்

வேலைத் திறமையுள்ள மாணவர்களுக்கு அவர்கள் பயின்ற தொழில் கல்விக்கேற்ற கருவிகள் வழங்குதல் முதலிய மறுவாழ்வுத் திட்டங்கள் மூலம் விடுதலை பெற்ற இல்லவாசிகள் பொருளீட்டி தாங்கள் அமைதியாக வாழ்க்கை நடத்த வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

இவைதவிர, ஆதிதிராவிடர்களின் ஏற்றம், மலைவாசிகளின் முன்னேற்றம் ஆகியவற்றுக்காகவும், சமூகநலத்துறை மூலம் ஆற்றப்படும் பணிகள் ஏராளமாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.






# ஸ்ரீரங்கம் ராஜகோபுரத் திருப்பணி

தமிழகத்தின் நடுவிடத்தில் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் விளங்கும் இத் திருத்தலம், 'தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திருவரங்கம்' என்று சிறப்பித்துப் புகழப்பெறுவது. வைணவர்களுக்குக் கோயில் என்றால் அது திருவரங்கத்தையே குறிக்கும். வைணவத் தலங்கள் 108ல், இதுவே மிக்க முதன்மையும் சிறப்பும் வாய்ந்ததாகும். இதனைப் பெரியகோயில், பூலோக வைகுண்டம், போகமண்டபம் என்றெல்லாம் பெரியோர்கள் புகழ்ந்து கூறுவர். பெரியாழ்வார், ஆண்டாள், திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் என்னும் ஆழ்வார்கள் பதின்மரும் பாடிப் போற்றிய சிறப்புடையது திருவரங்கம். இங்கிருந்தே ஆண்டாள் நாச்சியார், குலசேகர ஆழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், இராமாநுசர் முதலிய வைணவச் சான்றோர்கள் திருநாட்டுக்கு எழுந்தருளினர் என்பது வரலாறு. வைணவச் சான்றோர்களாகிய பெரியநம்பிகள், பட்டர், வடக்குத் திருவீதிப்பிள்ளை, முதலிய பலர் இங்கேயே திருவவதாரம் செய்தருளினர். மேலும் இராமாநுசர், வேதாந்த தேசிகர், மணவாள மாமுனிகள் முதலிய ஆசாரியப் பெருமக்கள், இத் தலத்திலேயே சிறப்புற்று வாழ்ந்து வந்தனர். இத்தகைய பல பெருஞ் சிறப்புக்கள் திருவரங்கத்திற்கு உண்டு.

அரங்கநாதர் பிரமலோகத்தில் முதன்முதலில் பிரமதேவரால் பூசித்து வழிபடப்பெற்று வந்தார். தாம்வழிபட்டு வந்த அரங்கநாதரின் திருவுருவத்தை, சூரிய குலத்தைச் சேர்ந்தவனும், அயோத்தி மாநகரை ஆண்டு வந்தவனும், இராமபிரானின் முன்னோனுமாகிய இட்சுவாகு அரசனின் தவத்திற்கு இரங்கி, பிரமதேவர் அவனுக்குக் கொடுத்தார். இட்சுவாகு வம்சத்தினர் அயோத்தியில் வழிவழியாக அரங்கநாதரை வழிபட்டு வந்தனர். அந்நிலையில் இராமபிரானும் அரங்கநாதரைத் தம் குல தெய்வமாக வழிபட்டுக் கொண்டு வந்து, பின்னர்த் தமது அன்பைப் பெற்ற விபீடணனுக்கு அவரைக் கொடுத்தார். விபீடணன் அரங்கநாதரை அயோத்தியிலிருந்து இலங்கைக்குக் கொண்டுசெல்லும் போது, வழியில் 'காவிரி, கொள்ளிடம்' என்னும் இரு நதிகளுக்கு இடையில் இருந்த நிலப்பரப்பில் (அரங்கத்தில்) வைத்து, அரங்கநாதரை வழிபட்டான். அப்போது அரங்கநாதர் தமக்கு இந்த இடமே மிகவும் விருப்பமாக இருக்கின்றது என்று கூறித் தங்கிவிட்டார். அதுவே திருவரங்கம் திருக்கோயில்.

இரண்டு ஆறுகளுக்கு நடுவில் அமைந்துள்ள மேட்டுப் பிரதேசம் 'அரங்கம்' எனப்படும். அம்முறையில் காவிரி-கொள்ளிடம் என்னும் இரு நதிகளுக்கு நடுவில் அமைந்துள்ள இந்தத் தலம் திருவரங்கம் எனப் பெயர் பெறுவதாயிற்று. அரங்கநாதர் தாம் விபீடணனுக்கும், அவனது நாடாகிய இலங்கைக்கும் என்றும் அருள் புரிந்து வருவதற்குரிய அடையாளமாகவே, "குடதிசை (மேற்கில்) முடியை வைத்து, குணதிசை (கிழக்கில்) பாதம் நீட்டி வடதிசை பின்பு (முதுகு) காட்டி, தென்திசை இலங்கை நோக்கி" எழுந்தருளியிருக்கின்றார் என்பது தலவரலாறு.

## பழமையும் பெருமையும்

திருவரங்கம் கோயில் மிக்க பழமையும், வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்தது. 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொற் காப்பியத்திலேயே திருவரங்கத்தில் அரங்கநாதர் பள்ளிகொண்ட கோலத்தில் எழுந்தருளி இருக்கும் சிறப்பினை, "நீலமேகம் நெடும்பொற் குன்றத்துப், பால்விரிந்து அகலாது படிந்தது போல, ஆயிரம் விரித்து எழு தலையுடை அருந்திறற், பாயற் பள்ளிப் பலர் தொழுது ஏத்த, விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித் திருவமர் மார்பன் கிடந்த வண்ணம்" என்று, ஆசிரியர் இளங்கோவடிகள் அழகுறப் புகழ்ந்து போற்றியுள்ளார். இக்கோயில் 156 ஏக்கர், அதாவது 631000 சதுர மீட்டர் பரப்பளவுள்ளது. இதன் சுற்றெல்லைப் பரப்பு 1116 கிலோமீட்டர் அல்லது 10710 சதுர அடியாகும். இந்தியாவிலேயே, இந்தத் திருவரங்கம் கோயில்தான், ஏழு பிராகாரங்களைக் கொண்டுள்ளது. இப்பிராகாரங்கள் சிலவற்றில் மக்கள் குடியிருப்புக்களும் வசதியுடன் அமைந்துள்ளன. ஒவ்வொரு பிரா

காரத்திலும், பல்வேறு சந்நிதிகள், கோபுரங்கள், மற்றும் பற்பல மண்டபங்கள், அவற்றில் அழகான அற்புதச் சிற்பங்கள் முதலியன அமைந்திருக்கின்றன.

### ஏழு திருவீதிகள்

7-ஆம் பிராகாரத்தில் 'அடைவளைந்தான்' என்னும் திருமதில் உள்ளது. அதன் தெற்குக் கோபுரத்தின் அருகில் 'திருக்குறளப்பன்' (வாமனர்) சந்நிதி உள்ளது. மற்றும் இங்கே ஆண்டாள் நாச்சியார், துலுக்கநாச்சியார் சந்நிதிகளும் உள்ளன. ஏழாம் பிராகாரத்தில் உள்ள கோபுரங்கள் முடிவு பெறவில்லை. அவை இராயகோபுரங்கள் என வழங்கப்படுகின்றன. இவ் ஏழாம் பிராகாரம் 'மாடமாளிகைகள் சூழ் திருவீதி' எனப்படும்.

6-ஆவது பிராகாரம், 'சோழன் திரிவிக்கிரமன் திருவீதி' என வழங்கும். இதனைச் 'சித்திரைத் திருவீதி' அல்லது 'கலியுகராமன் வீதி' என்றும் கூறுவர். இங்கு 4 கோபுரங்கள் உள்ளன. கிழக்குக் கோபுரமே கலியுகராமன் கோபுரம். ஏனைய கோபுரங்களைவிட, இதுவே அளவில் மிகவும் பெரியது. இங்கு 13-ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஒய்சள அரசர்களும் பாண்டிய மன்னர்களும் (13-14ஆம் நூற்றாண்டு), இவற்றைக் கட்டியிருத்தல் வேண்டும்.

5-ஆம் பிராகாரம், 'அகளங்கன் திருவீதி' என்றும் 'உத்தர வீதி' என்றும் வழங்கும். இங்கே மணவாள மாமுனிகள் சந்நிதி உள்ளது. இப் பிராகாரமே இங்கு நடைபெறும் சமயச் சடங்குகள் எல்லாவற்றிற்கும் மையமாக விளங்குகின்றது.

4-ஆம் பிராகாரம், 'ஆலிநாடன் திருவீதி' என்றும், 'அரங்கவாசல்' அல்லது 'நான்முகன் கோபுரம்' என்றும் வழங்கும். இங்கு வேணுகோபாலர் சந்நிதி உள்ளது. ஒய்சளர் காலத்தின் அழகிய சிற்பங்கள் பலவற்றை இங்கே காணலாம். திருவரங்கத்தில் உள்ள ஏனைய சந்நிதிகள் எல்லாவற்றையும்விட, வேணுகோபாலர் சந்நிதியே மிக்க கவர்ச்சியும் அழகும் வாய்ந்தது.

வெள்ளைக்கோபுரத்திற்கு அருகில் உள்ள இந்த 4-ஆம் பிராகாரத்தில்தான், புகழ்மிக்க சேஷராயர் மண்டபம் அமைந்துள்ளது. அதன் முகப்பில் உள்ள எட்டுத் தூண்களிலும் முன்னங் கால்களைத் தூக்கிக் கொண்டு பாய்ந்தெழும் நிலையில் உள்ள குதிரைகளின் மீது போர்வீரர்கள் கம்பீரமாக அமர்ந்திருப்பது போன்று விளங்குகின்ற சிறந்த பெரிய சிற்பங்கள், மிக்க அற்புத வேலைப்பாடுகள் வாய்ந்தவை. இம் மண்டபத்திற்கு எதிரில் ஆயிரக்கால் மண்டபம் இருக்கின்றது. இதன் மேற்கில் சக்கரத்தாழ்வார் சந்நிதி, நாச்சியார் சந்நிதி முதலியன உள்ளன. அழகிய வசந்த மண்டபம் ஒன்றும் இங்கு அமைக்கப்பட்டிருக்கின்றது. இங்குள்ள பலவேறு மண்டபங்களில் இராமாயணம், விஷ்ணுபுராணம் என்பவற்றின் கதைகள் அற்புதச் சிற்பங்களாக வடிக்கப்பெற்று விளங்குகின்றன. 13, 14, 15, 16 17-ஆம் நூற்றாண்டுகளில் இங்குள்ள பல மண்டபங்களும், சிற்பங்களும், பல்வேறு காலகட்டங்களில் அமைக்கப்பெற்றனவாகும்.

கார்த்திகைக் கோபுரத்தின் வழியாக, 3-ஆம் பிராகாரத்தை அடையலாம். இது 'குலசேகரன் திருவீதி' என வழங்கும். இங்கு வரிசைக்குப் பதினாறு தூண்களாக, பதினான்கு வரிசைகள் கொண்ட கருடமண்டபம் உள்ளது. இக் கோயிலிலேயே மிகவும் அழகு வாய்ந்த மண்டபம் இந்தக் கருட மண்டபமே யாகும். இம் மண்டபத்திலேயே மணவாள மாமுனிகள் திருவாய்மொழி விளக்கப் பெருவிரிவுரைகள் நிகழ்த்தியருளினர் என்பர். இவ்வாறே இக்கோயிலின்கண் உள்ள மேட்டு அழகியசிங்கர் சந்நிதியில் தான் கவிச்சக்கரவர்த்திக் கம்பர் தம்முடைய இராமாயணத்தை அரங்கேற்றினர் எனப் பெரியவர்கள் கூறுவர்.

கி.பி. 17ஆம் நூற்றாண்டில் மதுரை நாயக்க மன்னர்கள் அமைத்த அழகிய சிற்பங்களும், தேவகோஷ்டங்களும், கும்ப பஞ்சரங்களும் இங்கு அழகுடன் திகழ்கின்றன. மற்றும் திருமடைப்பள்ளிகளும், பெரிய உருளை வடிவில் அமைந்த கொட்டாரங்கள் என்னும் நெற்களஞ்சியங்கள் ஐந்தும், பரவாசுதேவர், முதலாழ்வார்கள், தன்வந்திரி ஆகியவர்களின் சந்நிதிகளும் இங்கே அமைந்திருக்கின்றன.

ராஜகோபுரக் கட்டப் பணிகள் துவங்கும் முன்பு





கட்டப் பணிகள் துவங்கிய பிறகு...

ஆரியபட்டர் கோபுர வழியாக 'இராசமகேந்திரன் வீதி' என வழங்கும் 2-ஆம் பிராகாரத்தை அடையலாம். அதன் நடுவில் பரமபத வாசல்(சொர்க்கவாசல்) கோபுரத்தைக் காணலாம். வைகுந்த ஏகாதசிப் பெருவிழா நாளில் மட்டும், 'சொர்க்கவாசல்' எனப்படும் இதன் கதவுகள் திறக்கப்படுகின்றன. அப்போது இதன் வழியாகவே, தெய்வத் திருவுருவங்கள் ஆயிரக்கால் மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப் பெறும். இப்பகுதியில் சந்திர புஷ்கரிணி, சூரிய புஷ்கரிணி என்னும் இரண்டு திருக்குளங்கள் வட்டவடிவில் அமைந்திருக்கின்றன. கிருஷ்ணர், அனந்தசயனர், தொண்டரடிப் பொடியாழ்வார் சந்நிதிகளையும் இங்கே காணலாம். இவை விசயநகர அரசர்களால் அமைக்கப்பெற்றவை.

ஆரியபட்டர் கோபுரம் அயலர் படையெடுப்பால் எரித்து அழிக்கப்பட்டது. அது பின்னர் 15 ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்துப் பாணியில் மீண்டும் புதிதாகக் கட்டப்பட்டது. இங்குள்ள





கொடிக்கம்பம் முதன்முதல் சுந்தரபாண்டிய மன்னரால் (கி.பி. 1251-1268), நிறுவப்பெற்றது. அயலவர் படையெடுத்து அதனை அழித்தனர். பின்னர் மல்லிகார்ச்சுனராயர் என்னும் விசயநகர அரசர், கி.பி. 1461ஆம் ஆண்டில், அதனைச் செம்பினால் செய்து, தங்கத் தகடுகள் வேய்ந்த கொடிக் கம்பமாக நிறுவினார்.

1-ஆம் பிராகாரம் முதன்முதல் இக்கோயிலை, எழுப்பியவன் எனக் கூறப்பெறும் அரசனின் பெயரால், 'தர்மவர்மன் திருவீதி' என வழங்கும். இங்கே 'நாழிகேட்டான்' கோபுரம், அமைந்துள்ளது. கருவறைக்குக் கீழே சிறிது தள்ளி இக்கோபுரம் அமைந்திருக்கின்றது. கருவறையின் வாயிலில், பத்திரர், சுபத்திரர் என்னும் வாயிற் காவலர்கள் இருவர் உள்ளனர். உட்புற முகப்பில் சங்கு வடிவத்திலும், தாமரை மலரின் வடிவத்திலும், சங்கநிதி, பதுமநிதி என்பவற்றின் திருவுருவங்கள் விளங்குகின்றன.

இப்பிராகாரத்தின் தெற்கிலும் மேற்கிலும் சுவரை ஒட்டி நெடுக மேடைகள் அமைத்துச் சரக்கறைகள் கட்டப்பெற்றுள்ளன. மிகப்பெரிய நிலைக்கண்ணாடிகள் ஆங்காங்கே மூலைகளில் வைக்கப் பெற்றிருக்கின்றன. மேற்குப் பக்கத்து மேடையில் கண்ணாடி அறை ஒன்றில், விசயரங்க சொக்கநாத நாயக்கர் (கி.பி. 1706-1732) உருவமும், அவருடைய மனைவி, புதல்வன், மருமகள் ஆகியவர்களின் உருவங்களும் தந்தத்தால், இயற்கையளவில் செய்து, வண்ணந்தீட்டி வைக்கப்பெற்றிருக்கின்றன. இம்முதற்பிராகாரத்தில் யாகசாலை, தொண்டைமான் மண்டபம், அர்ச்சுனன் மண்டபம், கிளி மண்டபம் என்பவை உள்ளன. அர்ச்சுனன் மண்டபம், கிளிமண்டபம் ஆகியவற்றை, கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் உத்தமநம்பி என்பவர் கட்டினார் என்று தெரிகிறது.

**இராயகோபுரத் திருப்பணி**

இவ்வளவு பெருஞ் சிறப்புமிக்க திருவரங்கம் பெரியகோயிலின் பிராகாரத்தின் தெற்கு வாயிலிலுள்ள, இராயகோபுரம் என்பது, சமீபகாலம் வரையில் முற்றுப்பெறாத மொட்டைக்கோபுரமாக இருந்து வந்தது. இதனை 226 அடி உயரமும், 13 நிலைகளும் கொண்டதாக, சுமார் 1 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிப்பதற்குரிய செயல்கள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இத் திருப்பணியை நிறைவேற்றுதல்வேண்டும் என்று முதன்முதலில் சிந்தித்து, ஸ்ரீஅகோபிலமடம் ஜீயர் சுவாமிகள் அவர்கள் பெரிதும் மனமுவந்து முன்வந்து, மிகவும் முயன்று வருகின்றார்கள். அவர்களின் அரும்பெரும் முயற்சியினாலும், அயரா ஆர்வத்தினாலும், இக் கோபுரத் திருப்பணி தொடங்கப்பெற்று, சீரும் சிறப்புமாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. இதுவரையில் 6 நிலைகள் கட்டி முடிக்கப்பெற்று விட்டன.

1-ஆம் நிலையின் உயரம் 20 அடி, 6 அங்குலம். இதற்கான செலவுத்தொகை ரூபாய்15 இலட்சம். இதனை வழங்கியருளியவர், ஸ்ரீஅகோபிலமடம் ஜீயர் சுவாமிகள்.

2-ஆம் நிலையின் உயரம் 17 அடி. 9 அங்குலம். 'இதற்கான செலவுத்தொகை ரூபாய் 12இலட்சம். இத்தொகையை அளித்து உதவியவர், ஸ்ரீமத் ஆண்டவன். சுவாமிகள்.

3-ஆம் நிலையின் உயரம் 15 அடி, 6 அங்குலம். இதன் செலவுத்தொகை ரூபாய்9 இலட்சம். இதனைக் கொடுத்தருளியவர், ஸ்ரீகாஞ்சி காமகோடிபீடம் சங்கராச்சாரிய சுவாமிகள்.

4-ஆம் நிலையின் உயரம் 14 அடி, 3 அங்குலம். இதன் செலவுத்தொகை ரூபாய் 8 இலட்சம். இதனை ஆந்திர அரசு அளித்து உதவியது.

5-ஆம் நிலையின் உயரம் 13 அடி. இதன் செலவுத்தொகை ரூபாய் 8 லட்சம். இதனைக் கர்நாடக அரசு ஏற்றுக்கொண்டு உதவியது.

6-ஆம் நிலையின் உயரம் 11 அடி, 6 அங்குலம். இதன் செலவுத்தொகை ரூபாய் 8 இலட்சம். இதனைத் திரைப்பட இசையமைப்பாளர் திரு. இளையராஜா அவர்கள், தமது கலைநிகழ்ச்சிகளின் மூலம் திரட்டி அளித்து உதவினர்.

7-ஆம் நிலையின் உயரம் 10 அடி, 6 அங்குலம், இதன் மதிப்பீடுரூபாய்6 இலட்சம். இதனைத் திருச்சி மாவட்ட அன்பர்களும், திருவரங்கம் கோயிற் பக்தர்களும் ஏற்றுக்கொள்ள இசைந்துள்ளனர். இந்த ஏழாவது நிலையில் திருப்பணி, நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இதுவரையில் இக்கோபுரத் திருப்பணிக்காக ரூ. 75 இலட்சம் செலவிடப்பட்டிருக்கின்றது.

இக்கோபுரத்தின் 13-வது நிலையை தமிழக அரசின் சார்பில் கட்டிமுடித்துத் தருவதாக, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அன்புடன் இசைந்த ஒப்புதல் அளித்துள்ளார்கள். விரைவில் இந்த இராயகோபுரத் திருப்பணி அரங்கநாதப் பெருமானின் திருவருளால், மிகவும் சிறந்தமுறையில் நடைபெற்று நிறுவேறும் என்பது திண்ணம்.







COMMISSIONER OF TAMILNADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
22 JUL
EGMORE, MADRAS-8




Licence No. TN/MS(C)/PP-23



புதிய அமைச்சர்களாக, கடந்த 1.7.83 அன்று பொறுப்பேற்ற மாண்புமிகு அமைச்சர்கள், பதவி ஏற்றவுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் அண்ணா சதுக்கம் சென்று மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.



# படமும் செய்தியும்

மாண்புமிகு முதல்வர் அவர்களை, சென்னை இராமாவரத்திலுள்ள அவரது இல்லத்தில மாண்புமிகு மத்திய சுற்றுப்புறச் சூழல் துணை அமைச்சர் திரு திக் விஜய சிங் 3.7.1983 அன்று சந்தித்தார்.



தென்னார்க்காடு மாவட்டம் பண்ணுருட்டியில் 23.6.83 அன்று நடைபெற்ற அறுபெரும் விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏழைகளுக்கு நிலப்பட்டாவும், தொழில் கருவிகளும் வழங்கினார். மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் [illegible]னுன்னார்.







காமராஜர் தமது பணிகளின் மூலம் நாட்டின் தரத்தை உயர்த்த முயன்றார்; தமிழர்களுக்கு நற்பணி ஆற்றினார்; தமிழர்கள் பெருமைப்படத்தக்க நல்ல காரியங்களைச் செய்தார்..

காமராஜர் கல்லூரியில் படிக்கவில்லையே தவிர வாழ்க்கைப் பாடத்தைப் படித்தார்.

மக்களின் புன்னகையை—பெருமூச்சை—கண்ணீரைப் படித்துப் பாடம் பெற்றார்.

முப்பது வருடம், நாற்பது வருடம் என்று மக்களிடம் தொண்டாற்றினால்தான் இந்தப் பாடத்தைப் பெற முடியும்.

வைரம் என்பது நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பு பூமியின் அழுத்தத்தால் கீழே அடங்கி ஒடுங்கிக் கிடந்த கரித்துண்டுகள்.

அதுபோல, நெடுங்காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் இருந்து தோன்றிய வைரமணிகளில் ஒருவர்தான் காமராஜர்.

—பேரறிஞர் அண்ணா

நேர்மை, அர்ப்பணம்-அயராத உழைப்பு, மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றிய கவலை இவற்றினாலேயே மக்கள் தலைவராக இருந்த காமராஜர், மிக உயர்ந்த நிலையை அடைந்தார். இவையே அவருடைய மதிப்பை உயர்த்தவும் தமிழ்நாட்டு மக்களின் அன்பிற்கும் பிறகு இந்தியா எங்கும் உள்ள மற்ற மக்கள் அவரைப் பற்றி அறிந்து கொள்ளவும் காரணங்களாக இருந்தன.

நம்முடைய மாபெரும் சுதந்தரப் போராட்டத்தின் மூத்த தலைமுறையின் கடைசி இணைப்புச் சங்கிலியாக, அனுபவமிக்க தலைவராக அவர் விளங்கினார். தன்னை அர்ப்பணித்துக் கொண்ட எளிமையான வாழ்க்கையில், ஒரு வினாடி நேரம் கூட மக்களுடைய துயரங்களையும் இன்னல்களையும் அவர் மறந்திருக்கவில்லை.

மாண்புமிகு இந்தியப் பிரதமர்
—திருமதி இந்திரா காந்தி



போராடிப் போராடி வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு தன்னை உயர்த்திக் காட்டியவர் காமராஜர். அவர் முதல்வராக இருந்த பொழுது வீணாக சட்டப்பிரச்சினையை வைத்து அவர் செய்ய வேண்டிய காரியங்களைத் தள்ளிப்போட்டதில்லை. மக்களுக்காகத்தான் சட்டமே ஒழிய, சட்டத்துக்காக மக்கள் அல்ல என்பதைச் செயலில் காட்டியவர்.

—மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர்.


தமிழரசு

மலர் : 14 இதழ் : 2
16—7—1983

திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — ஆனி 32

# நோயை விரட்டுங்கள்!

அனைத்திந்திய அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் கழகம் 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்போது விரிவாக்கம் அடையப் போகிறது என்றார்கள். எத்தனை ஆண்டுகள் என்று கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். அன்று நான் கொடுத்தது ரூ.50 ஆயிரம். இன்று ரூபாய் 5 இலட்சத்துக்கு சமம் என்று கூறினார். அன்று நான் மட்டும் கொடுக்கவில்லை. டாக்டர் ராமமூர்த்தியும் கொடுத்து இருக்கிறார். அப்போது அவர் மருத்துவர். நான் கலைஞன். சாதாரண நடிகராக இருந்த நான் கொடுத்தாலும், அதைக் கொடுக்கச் செய்வதில் பங்கு கொண்டவர் டாக்டர் நடராஜன்.

ஆண்டுகள் பல கடந்தாலும் இன்று மீண்டும் இந்தக் கட்டடக் கால்கோள் விழாவில் கலந்து கொள்ளுகிறேன். நல்லதை எண்ணினால் அது விரிவடையும்போது அதில் பங்கு கொள்ள வாய்ப்பு கிடைக்கும் என்பது தெரிகிறது.

இங்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கட்டடத்துக்காக ஒரு பிரிவை ஏற்படுத்தும்போது அந்தப் பிரிவுக்கு ஆகும் செலவான ரூ. 3 இலட்சத்தை சென்னை செரீப் திரு சிவந்தி ஆதித்தன் அவர்கள் அளிக்கிறார். அந்தப் பிரிவுக்கு அவரது தந்தை பெயரை வைக்க வேண்டும் என்று நானும், அவரும் விரும்புகிறோம்.

நான் அதிகமாகக் கவலைப்படுவது புறநகர்ப் பகுதியைப் பற்றியும், கிராமப் புறப்பகுதியைப் பற்றியும் தான். அந்த பிற்பட்ட பகுதிகள் கிராமப்புற பகுதிகள் எப்படி இருக்கிறது என்பதை அங்கு வாழும் மக்களை நன்கு கவனித்தால் தெரியும். மருத்துவர்கள் படித்து பட்டம் பெறுகிறார்கள். நிபுணர்கள், தகுதி வாய்ந்தவர்களுக்குப் பட்டம் அளிக்கிறார்கள் ஆனால், அவர்கள் யாருக்கு மருத்துவம் அளிக்க வேண்டுமோ அங்குப் போக மறுக்கிறார்கள் இது வேதனைக்குரியது, தலைக்குனிவை ஏற்படுத்துகிறது.

பக்கத்தில் இருப்பவர்களுக்கு நோய் இல்லாமல் இருந்தால்தான் நோய் பரவாமல் இருக்கும். கிராம மக்கள் வேலைக்கும், பொருளுக்கும் ஏங்கிக் கிடந்து நகரத்துக்கு வருகிறார்கள். இதைத் தடுக்க வேண்டாமா? தடுக்க என்ன செய்கிறோம்? வேலைவாய்ப்பைக் கொடுக்கிறோம். வேலைவாய்ப்பைக் கொடுத்தால் போதாது. நோயைத் தடுக்க வேண்டும். அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டும்.

என் வாழ்க்கையில் நடந்ததைச் சொல்ல வேண்டும். என் வாழ்க்கைத் துணைவிக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு காச நோய் வந்தது. அவர் இப்போது உயிரோடு இல்லை. அப்போது ''பி.ஏ.எஸ். பவுடர்'' என்பதுதான் கண்கண்ட மருந்து. வேறு நல்ல மருந்துகள் கிடையாது. ஆணி ஊசி ஏற்றிக் காற்று ஏற்றுவார்கள். தமிழகத்தில் யார் பெரிய மருத்துவராக இருந்தாரோ, அவர்தான் என் மனைவிக்குச் சிகிச்சை அளித்தார். 'கேவிட்டி' இருந்தது. சிகிச்சை அளிக்கப்பட்டது. மறுபடியும் வந்தது. இனி ஆபரேஷன் செய்ய முடியாது என்று கூறிய அந்த மருத்துவர், ''உங்கள் மனைவி இன்னும் 3 மாதம்தான் உயிரோடு இருப்பார். அதற்குள் என்ன விரும்புகிறாரோ அதை வாங்கிக் கொடுங்கள்'' என்றார். அதன் பிறகு ஒரு அறுவைச் சிகிச்சை டாக்டர் வந்தார். அவர் விசேஷ நிபுணர் அல்ல.





## மாண்புமிகு முதல்வர்

இந்தப் பெண் சாகப் போகிறது. நான் சிகிச்சை அளிக்கிறேன்' என்று அவர் கூறினார்.

நிபுணர் கொடுத்த தவணை 3 மாதம் தான். எனவே, சரி, சிகிச்சை செய்துவிட்டுப் போகட்டும் என்று நான் விட்டு விட்டேன். அந்த சர்ஜன் சிகிச்சை அளித்த பிறகு ஒரு ஆண்டு உயிரோடு இருந்த என் மனைவியை மறுபடியும் அந்த நிபுணரிடம் அழைத்துச் சென்று, இனி என்ன செய்வது? என்று கேட்டேன். 'நன்றாக இருக்கிறார். என்ன மருந்து கொடுக்கிறீர்களோ அதையே தொடர்ந்து கொடுங்கள்' என்றார்.

என் மனைவி 18 ஆண்டுக் காலம் அதன் பிறகு உயிரோடு இருந்தாள். கொஞ்சம் கொஞ்சமாக அந்த நோய் தீர்ந்தது. பின்பு வேறு நோயினால் மரணம் அடைந்தாள். நான் அந்த நிபுணரைக் குற்றம் சொல்லவில்லை. சட்டப்படி அவர் படித்த திறமைக்கேற்ப, 'இதைச் செய்தால் இந்த ஆபத்து வரும், உயிர் போய்விடும்' என்ற ஆய்வைச் சொல்லி இருக்கிறாரே தவிர, அவர் தவறு செய்தார் என்று சொல்ல உரிமை இல்லை. இதுபோல அனுபவத்தில் பலவற்றைத் தெரிந்து கொள்கிறோம்.

நான் துப்பாக்கியால் சுடப்பட்டபோது, உயிரோடு திரும்பி வருவேனா என்பதே சந்தேகமாக இருந்தது. அப்போது எனக்குச் சிகிச்சை அளித்த டாக்டர் வேணுகோபால், நான் படத்தில் திரும்ப நடிக்க வேண்டும். காயத் தழும்புகள் இருக்கக் கூடாது என்று கருதி, கழுத்தில் சுருக்கம் விழும் இடத்தில் தழும்பு தெரியாதபடி ஆபரேஷன் செய்தார். இப்படிப்பட்ட மருத்துவர்கள் வேண்டும்.

அமைச்சர் ஹண்டே மருத்துவ அனுபவம் உள்ளவராக இருப்பதால் எனக்கு மிக உதவியாக இருக்கிறார். இவ்வளவு மாநிலங்களில் இருந்து வந்து இருக்கிறீர்கள். உங்கள் எல்லோரையும் பார்க்கும்போது இந்தியாவைப் பார்க்கும் உணர்வு ஏற்படுகிறது. உங்களிடம் நான் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். குழந்தைகள் நோயைத் தீர்ப்பதற்கு, நோய் வராமல் தடுப்பதற்கு இத்தனை ஆண்டுகளில் வகை செய்வோம் என்ற திட்டத்தைத் தர வேண்டும்.

இந்தக் கட்டடத்துக்கு நானும் ஒரு கடமையைச் செய்யலாம் என்று கருதுகிறேன். என் சொந்தப் பொறுப்பில் ரூ. 1 இலட்சமும், அரசின் சார்பில் ரூ. 5 இலட்சமும் அண்ணா பெயரால் அந்தப் பிரிவை உருவாக்கத் தருகிறேன். நாட்டைக் காப்பாற்றுங்கள், நோயை விரட்டுங்கள், மனத்தைப் பண்படுத்த உதவுங்கள்!

[3-7-83ல் சென்னையில் நடைபெற்ற அனைத்திந்திய அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் கழகத்தின் புதிய கட்டடக் கால்கோள் விழாவில் [illegible] யிலிருந்து.]

# புதிய வானொலி நிலையங்கள் வண்ணத் தொலைக்காட்சி

# தமிழ்நாட்டுக்குத் தேவை

மாநில செய்தித்துறை அமைச்சர்களின் 17-வது மாநாட்டில் கலந்து கொண்டு தமிழக அரசின் கருத்துக்களை எனது மதிப்பிற்குரிய மற்ற மாநில-மற்றும் யூனியன் பிரதேச செய்தித்துறை அமைச்சர்களோடு பகிர்ந்து கொள்ள நல்லதொரு வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. பகத் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாநாட்டில், நம் நாட்டில் உள்ள செய்தி விளம்பரத் துறையின் பல்வேறு பிரிவுகளின் சாதனைகளை மதிப்பிட்டுப் பார்த்து, திட்டங்களை நிறைவேற்றுவதில் பல்வேறு மட்டங்களில் நம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆழமாகச் சிந்தித்து எதிர்காலத்தில் அவற்றைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை நாம் உருவாக்க முடியும்.

நமது அரசியல் சட்டத்தில் கண்டுள்ள கொள்கைக் கோட்பாடுகளின்படி ஒரு ஜனநாயக சமுதாயத்தை அமைப்பதில் பொதுமக்களுக்குத் தகவல் அறிவிக்கும் துறை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

சினிமா, டெலிவிஷன் போன்ற துறைகளில் எலக்ட்ரானிக் கருவிகள் வந்ததற்குப் பிறகு அறியாமையையும், வறுமையையும், செயலற்ற தன்மையையும், எழுத்தறிவின்மையையும் எதிர்த்து அவை ஆற்றும் பணி அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளதை மறுக்க முடியாது. எனவே விளம்பர நடவடிக்கைகளை விஞ்ஞான பூர்வமாகத் திட்டமிடுவதும் சிறந்த முறையில் அமலாக்குவதும் அவசியமாகின்றன. நம்முடைய நாட்டில் பல்வேறு மொழிகளும் பல்வேறு கலாச்சாரங்களும் இருக்கின்ற காரணத்தால் மத்திய அரசும் மாநில அரசுகளும் ஒருங்கிணைந்து கூட்டுறவோடும் எதிர்காலச் சிந்தனையோடும் செயல்பட வேண்டியது இன்றியமையாததாகிறது.

நமது மதிப்பிற்குரிய பிரதமர் அவர்களின் புதிய 20 அம்சத் திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு சிறப்பாகப் பணியாற்றி வருகிறது என்பதைச் சொல்ல நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். தேசிய திட்டக்குழு அண்மையில் தனது ஆய்வறிக்கையில் புதிய 20 அம்சத் திட்டத்தினை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு, இந்தி[illegible]வேயே 'மிகச் சிறந்த சாதனை செய்த [illegible]ம்' என்று குறிப்பிட்டிருப்பதை மாண்பு[illegible] தமிழக முதல்வர் அவர்கள் சார்பில் [illegible] மன்றத்தில் நான் தெரிவித்துக் கொள்[illegible] புதிய 20 அம்சத் திட்டச் செய்திகள் யாரைச் சென்று எட்ட வேண்டுமோ அவர்களுக்குச் சென்று எட்டும் வகையில் தமிழக அரசு கட்டுரைகள் வாயிலாகவும் திரைப் படங்கள், சிறு வெளியீடுகள் மூலமாகவும், விளம்பர உதவி செய்ததன் காரணமாகத் திட்ட அமல் உத்வேகப்படுத்தப்பட்டு இலக்குகள் மிஞ்சப்படுகின்றன. செம்மையான தகவல் தொடர்புத் திட்டங்கள் மூலம் நாட்டின் நிர்மாணப் பணிக்குத் தமிழக அரசு தொடர்ந்து தனது கடமைகளை ஆற்றிவரும் இந்த உறுதியை மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய, மாநில அரசுகளின் செய்தி ஒலிபரப்புத்துறையின் பல்வேறு பிரிவுகளுக்கிடையே மேலும் சிறந்த ஒத்துழைப்பும் கூட்டுறவும் நிலவ வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

அனைத்திந்திய வானொலியின் பணியினை எடுத்துக் கொள்வோம். மதுரையிலும், நாகர்கோவிலிலும் மாவட்ட அளவில் வானொலி நிலையங்களை ஏற்படுத்த மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இந்த நிலையங்கள் எப்பொழுது இயங்கத் தொடங்கும் என்று இப்பகுதி மக்கள் ஆர்வத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாகர்கோவிலில் விரைவில் செயல்படத் துவங்கும் என நம்புகிறேன். இந்த வானொலி நிலையம் வேண்டும் என்று மதுரை மாவட்ட மக்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்து வருகிறார்கள். இது 1983 இறுதிக்குள் நிறைவேறும் என்றும் நான் நம்புகிறேன்.

இந்தியாவில் அனைத்திந்திய வானொலி நிலையங்கள் ஏற்படுத்த, ஏறத்தாழ 48 ஆண்டுகள் ஆகின்றன. எனினும் தொலை தூர கிராமங்களிலும் பழங்குடி மக்கள் வாழும் இடங்களிலும் இன்னும் அதன் குரல் எட்டவில்லை. புதிய நிலையங்களை ஏற்படுத்துவதன் மூலமும் ஏற்கெனவே உள்ள நிலையங்கள் ஒலிபரப்புத் திறனை அதிகரித்துக் கொள்வது மூலமும் தொலைதூரஇடங்களிலும் வானொலியின் குரலை மக்கள் கேட்குமாறு செய்ய முடியும். சென்னை, திருச்சிராப்பள்ளி வானொலி நிலையங்களிலிருந்து ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் 50 இலட்சம் மக்கள் வாழ்கின்ற தென் ஆர்க்காடு மாவட்டம் முழுவதிலும் ஒலி மிகமிகக் குறைந்த நிலையில் தான் கேட்கிறது என்று எல்லாத் தரப்பு மக்களும் என்னிடம் முறையிட்டுள்ளார்கள். நிகழ்ச்சிகள் நன்றாகக் கேட்குமாறு செய்ய சென்னை வானொலி நிலையத்தில் 200 கே. வி. டிரான்ஸ்மிட்டர் நிறுவப்பட வேண்டியது அவசியமாகும். தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மிகப் பெரும்பான்மையான மக்கள் வானொலியின் பயனை அனுபவிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள் என்பது மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு விந்தையாக இருக்கக்கூடும். ஒலிபரப்பு நிலையம் ஒன்று வேண்டும் என்ற அவர்களது நியாயமான கோரிக்கை இதுவரை புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. சுமார் ஒரு கோடி மலைப்பகுதி மக்களின் கோரிக்கை இனிமேலும் புறக்கணிக்கப்படக்கூடாது. எனவே தமிழகத்தின் மேற்குப் பகுதியில் ஒரு புதிய வானொலி நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்ற எங்களது முந்தைய கோரிக்கையை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

---

## மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர்

## திரு. இராம. வீரப்பன்

---

இந்தியாவின் செய்தித் தொடர்பில் தொலைக்காட்சி ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. மக்களை ஈர்ப்பதிலும் பொதுஅறிவைப் பரப்புவதிலும், சமூகக் கல்வியைப் புகட்டுவதிலும், வேரூன்றிப் போயுள்ள பழைய எண்ணங்களை மாற்றுவதிலும் கலாச்சாரத்தை வளப்படுத்துவதிலும் வானொலியைக் காட்டிலும் அதிக சக்தி வாய்ந்ததாகத் தொலைக் காட்சி திகழ்கிறது. தொலைக் காட்சியில் ஒளி பரப்பப்படும் தேசிய நிகழ்ச்சிகள் ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது திருப்தி அளிக்கிறது என்று நேற்று நடந்த தகவல் தொடர்பு இயக்குநர்கள், செயலர்கள் கூட்டத்தின் குறிப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை ஏற்றுக் கொள்ள எங்களால் இயலாது. தேசிய நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதில் மிகுந்த சிந்தனையும் ஆக்கபூர்வத் திட்டமிடலும் அவசியமாகும். விவசாயிகள் உட்பட எல்லா மக்களும் பயன்பெறும் வகையில் விஞ்ஞான விளக்கங்கள், கல்வி நிகழ்ச்சியில் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் முக்கியத்துவம் பெற வேண்டும். பொழுது போக்கு அம்சத்தோடு விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் உழவர்களின் இல்லங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

தொலைக்காட்சி மூலம் தெரிவிக்கப்படும் அறிவாழமற்ற செய்திகள் நிலைத்தன்மை பெற முடியாது. அதனால்தான் எங்களது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட யோசனைகளைத் தெரிவித்திருக்கின்றார்.

(அ) காண்பதற்கும் கவர்ச்சியாக உள்ள கலாச்சாரக் கல்வி நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும்.

(ஆ) தற்போது டெல்லியிலிருந்து கலாசார நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு செய்யப்படும்பொழுது விளக்கங்கள் இந்தியிலும் சில நேரங்களில் ஆங்கிலத்திலும் சொல்லப்படுகின்றன. இனிமேல் விளக்கங்கள் ஆங்கிலத்திலும் மற்றும் தொடர்புடைய 'தேசிய மொழிகளிலும் சொல்லப்பட ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(இ) வட்டார மக்கள் நிகழ்ச்சிகளை எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் துணைத் தலைப்புகளும் மொழிமாற்ற ஏற்பாடுகளும் உடனடியாக எல்லா



அட்டையில்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவிக்கும் காட்சி.

தொலைக்காட்சி நிலையங்களி லும் செய்யப்பட வேண்டும்.

(ஈ) வளர்ச்சித் திட்டங்களை ஒளி பரப்புச் செய்யும் பொழுது அவற்றுக்கான விளக்கங்கள் உள்ளூர் மொழியில் அமைய வேண்டும்.

(உ) இப்போது இந்தி திரைப் படங்கள் மட்டுமே டில்லியி லிருந்து ஒளிபரப்பப்படுகின்றன. அப்படி இல்லாமல் இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பல்வேறு மொழி வண்ணத் திரைப்படங்கள் டெல்லி யிலிருந்து ஒளிபரப்புச் செய்யப் பட வேண்டும.

(ஊ) தேசிய நிகழ்ச்சிகளுக்கான நேரம் இரவு 9.30 மணி முதல் 10.30 மணி வரை என மாற்றப்பட்டு எஞ்சிய பகுதி வட்டார நிகழ்ச்சிகளுக்கு ஒதுக் கப்பட வேண்டும்.

(எ) தேசிய நிகழ்ச்சியில் இடம்பெறும் 15 நிமிட ஆங்கிலச் செய்தி யறிக்கையில் 5 நிமிடங்கள் வட்டார நிலையங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டு உள் ளூர் செய்திகளை ஆங்கிலத்தில் சொல்ல வகை செய்யப்பட வேண்டும்.

(ஏ) தொலைக்காட்சி ஒளிபரப்பு ஏற் பாட்டில் 2-வது சேனல் ஒளி பரப்புக்கும் வழிவகை செய்ய வேண்டும்.

தமிழக மக்களின் விருப்பத்தின்படியும், எங்களது மாண்புமிகு முதலமைச்சர் அவர் களின் வேண்டுகோளுக்கிணங்கவும் இந்தச் செய்தியினைத் திரும்பப் பெற்றுக் கொண்ட தற்காக மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர் களுக்கும் மாண்புமிகு மத்திய செய்தி ஒலி பரப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்க இந்தச் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

தொலைக்காட்சி நிலையங்கள் தங்கள் நிகழ்ச்சிகளுக்கிடையே நேரம் கிடைக்கும் பொழுது மத்திய திரைப்படப் பிரிவு தயா ரித்துள்ள துண்டுப் படங்கள் காட்டுவதாக நான் அறிகிறேன். தமிழ்நாட்டிலுள்ள திரைப் பட நூலகத்தில் மக்கள் விரும்பிப் பார்க்கக் கூடிய வண்ண-மற்றும் கறுப்பு-வெள்ளை துண்டுப் படங்கள் ஏராளமாக இருக்கின்றன. இந்தியா முழுவதிலும் தொலைக் காட்சி நிலையங்களில் காட்டுவதற்கு இந்தப் பிரதி களைத் தருவதற்கு நாங்கள் மகிழ்ச்சியுடன் தயாராக இருக்கின்றோம்.

அண்மையில் புதுடெல்லி தொலைக் காட்சி நிலையத்திலிருந்து தேசிய நிகழ்ச்சி யில் மகாத்மா காந்தியடிகள் பற்றிய கறுப்பு-வெள்ளை துண்டுப்படம் ஒரு தொட ராக ஒளி பரப்பப்பட்டது. இதன் விளக்கம் இந்தியில் இருந்ததால் எங்கள் பகுதி மக்க ளால் புரிந்து கொள்ள இயலவில்லை. இப் படிப்பட்ட திரைப்படங்கள்சொல்லும் மதிப்பு மிக்க செய்திகள் ஆங்கிலத்திலோ அல்லது ஏனைய தேசிய மொழிகளிலோ சொல்லப்படு மானால் அவை ஏராளமான மக்களைச் சென்றடைய இயலும். எங்கள் முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இதுபற்றி மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். நம் நாட்டில் உள்ள பல்வேறு தேசிய மொழி களைப் பேசும் மக்கள் பயன்பெறத்தக்க வகையில் இந்த அம்சத்தைக்கருத்தில்கொண்டு தேசிய நிகழ்ச்சிகளை வகுக்குமாறு மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சர் அவர் களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னைத் தொலைக் காட்சி நிலையத்திற்கு வண்ண ஒளிபரப்பு செய்வதற்கு உதவியாக வண்ண (ஓ. பி.) வேன் ஒன்றை ஒதுக்குமாறு மத்திய அரசை தமிழ்நாடு அரசு தொடர்ந்து கேட்டுக் கொண்டு வருகிறது. கூட்டுச் சேரா நாடுகளின் மாநாடு முடிந்த பிறகு எங்களது கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதாக முன்னாள் செய்தித்துறை அமைச்சர்கள் உறுதி அளித்தனர். ஆனால் அந்த உறுதிமொழி காப்பாற்றப்பட வில்லை. இதனால் தமிழக மக்கள் மிகவும் ஏமாற்றம் அடைந்து இருக்கிறார்கள். இந்தி யாவில், சென்னையில் மிக அதிகமான திரைப் படங்கள் உருவாக்கப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலானவை வண்ணப் படங்கள் ஆகும். இந்தக் காரணத்திற்காகவே நாங்கள் வண்ண ஓ. பி. வேன் ஒன்றை ஒதுக்குமாறு கேட்கின்றோம். இந்தியாவின் நான்கு பெரிய வட்டாரங்களில் ஒன்றாக விளங்கும் சென்னை வட்டாரம் தனக்குரிய பங்கினைப் பெறமுடியவில்லை என்று நான் கூறமுடியும். எனவே, தென்னக மக்களின் சார்பாக நான் மீண்டும் இந்த நியாயமான கோரிக்கையை வைக்கின்றேன். இப்பொழு தாவது, அதற்குரிய மதிப்பு அளிக்கப்பட்டு வண்ண ஓ.பி. வேன் ஒன்று விரைவில் இறக்கு மதி செய்யப்பட்டு வழங்கப்படும் என நான் நம்புகிறேன். கொடைக்கானலில் கட்டப்படும் தொலைக்காட்சி நிலையத்தின் பணி விரைவு படுத்தப்பட வேண்டும்.

அனுமதிக்கப்பட்ட திட்டப்படி கொடைக்கானலில் 10 கிலோவாட் டிரான்ஸ்மிட்டர் இப்போது ஒதுக்கப்பட்டுள் ளது. அது இயக்கி வைக்கப்படுவதற்கு இன் னும் சிறிதுகாலமாகலாம். தற்பொழுது நாகபுரி தொலைக் காட்சி நிலையத்தில் சேனல்—7 கொண்ட 1 கி.வா. டிரான்ஸ்மிட்டர் ஒன்று உபரியாக இருப்பதை நான் குறிப்பிட விரும்பு கிறேன். கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையமும் 7-சேனல் நிலையம்தான். எனவே நாகபுரியில் உபரியாக இருக்கும் 1 கிலோ வாட் டிரான்ஸ்மிட்டரை கொடைக்கானலுக்கு உடனடியாக மாற்றிவிடலாம். இதன் பய னாக கொடைக்கானலைச் சுற்றி 150 கிலோ மீட்டர் சுற்றளவில் வாழும் 180 இலட்சம் மக்கள் தொலைக் காட்சியின் பயனைப்

(தொடர்ச்சி [illegible]-ஆம் பக்கம்)



# சரித்திரம் தந்த தலைவர்

வழக்கறிஞர் ழ.செங்கல்வராயன்

தலைவர் காமராஜர் அவர்கள் நம் தேசிய வரலாற்றிலும் தமி ழகச் சரித்திரத்திலும் என்றும் மங்காத புகழ் பெற்றிருக்கிறார். அவ்விதப் புகழ் உச்சியில் அவர் நிற்கின்றார் என்றால், பலநூறு உயர்ந்த சிறந்த பண்புகள் அவ ரிடத்தில் குடி கொண்டிருந்தன. பிறப்பினால் எளிமைபடிப்பினால் குறைவு வசதியினால் ஏழ்மை, ஜாதியினால்பின் தங்கியது இவை யெல்லாம் இருந்தும்கூட, தேசியத் தலைவர்களில் ஒருவராக அவர் விளங்கினார் என்பது ஒரு மிக அதிசயம் என்று சொல்வதா, அல்லது சரித்திரம் தந்த தலை வர் என்று போற்றுவதா? இரண் டையும் சேர்த்துத் தான் சொல்ல வேண்டும்!

இளம் வயதில் தேசிய காங் கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து தொண்டாற்றத் தன்னை அர்ப் பணித்துக் கொண்டார். தேசிய காங்கிரஸ் தொண்டனாக, கை யில் மூவர்ணக்கொடியை ஏந்தி வாயார வந்தே மாதரம் என்று முழங்கி, 'காந்திஜிக்கு ஜே' என்று கோஷம் கொடுத்து, பட்டி தொட்டியெல்லாம் சென்று சுதந் திர வேட்கையைப் பரப்பினார்.

தன்னலம் அற்ற தொண்டு புரிந்து படிப்படியாகக் காங்கிரஸ் இயக்கத்தில் உயர்ந்தார். தொண்டின் காரணமாக, தொண் டர்களின் தோழராக, பிறகு தலைவராக வந்துள்ளார். காங்கிரஸ் தொண்டர்களின் தனிப்பெரும் தலைவராகத் திகழ்ந்தார். ஆனால் அவர் அன் றிருந்த காங்கிரஸ் தலைவர்களி டத்தில் மிக்க விசுவாசமாகப் பணியாற்றினார். குறிப்பாகத் தலைவர் சத்தியமூர்த்திக்கு அடுத்த தலைவராக நின்றார்.

காங்கிரஸ் தலைமை, படித்த வர்கள் பட்டதாரிகள் மேம்பட்ட வர்கள் இடத்தில் தங்கியிருந்தது. தேசியப் பேரியக்கம் பட்டி தொட்டியில் பரவ, பல ஜாதி மக்கள் இயக்கத்தில் சேர, காங் கிரஸ் இயக்கம் ஜனநாயக அடிப் படையில் காமராஜரைப் போன்ற காங்கிரஸ் வீரர்களிடத்தில் தலைமை போய்ச் சேர ஆரம்பித் தது. அதுதான் காங்கிரசின் வளர்ச்சி. காமராஜர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவிக்குப் போட்டியிட நேர்ந் தது. தலைவர் சத்தியமூர்த்தி காமராஜருக்காகப் பெரும் ஆத ரவு திரட்டினார். ஒரு தடவை தலைவர் சத்தியமூர்த்தி சொன் னார் ''காமராஜருக்குப் படிப்பு இல்லை என்று சொல்கிறார்கள். 'He has read life's large University' அவருக்கு நான் காரியதரிசியாகப் பணியாற்றி அவருடைய தலை மையைப் பிரகாசிக்க வைக்கி றேன்.''

காமராஜ் தமிழ்நாடு காங் கிரஸ் தலைமையேற்று, பல் லாண்டுக் காலம் பணிபுரிந்தார். காந்திஜியின் ஒவ்வொரு இயக்கத் திலும் பங்கு கொண்டு சிறைப் பட்டு கஷ்டப்பட்டதை மறக்க முடியாது. குறிப்பாக 'வெள்ளை யனே வெளியேறு' என்ற இறுதிப் போராட்டத்தில் காமராஜ் பங்கு மிகப் பெரியது. காங்கிரஸ் சுற் றறிக்கையை எடுத்து, வார்தா வில் இரயிலில் ஏறி, மூன்றாவது வகுப்பில் உட்காரும் பெஞ்சு அடியில் மறைத்துக்கொண்டு சென்னைக்கு வரும்பொழுது கூடூர் ரயிலடியில் கைது செய்யப் பட்டுக் காவலில் வைக்கப்பட் டார்.

சுதந்திரம் பெற்றவுடன் அவர் எந்தப்பதவிக்கும்ஆசைப்படாமல் காங்கிரஸ் பணியைத் தொடர்ந்து செய்து வந்தார். தமிழகத்தில் காங்கிரசின் செல்வாக்கை நிலை நிறுத்தினார். தமிழக அரசு முதல்வர் பதவிக்காகத்தான் போட்டியிடும் சந்தர்ப்பம் ஏற் பட்டுவிட்டது. முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தன் மந்திரி சபையில் அவருக்காக உழைத்த ஊழியர்களை எடுத் துக் கொள்ளாமல், யார் தன்னை எதிர்த்தார்களோ அவர்களை மந்திரியாக அமர்த்திக் கொண் டார். அதுதான் அவருடைய உயர்ந்த குணம். கட்சியின் நல னுக்காக, ஒற்றுமைக்காக அவர் நடந்து கொண்டார்.

தன்னுடைய காலத்தில் பல வித முன்னேற்றங்களைத் தமிழ கத்திற்கு அளித்தார். குறிப்பாக, கல்வியை ஏழை எளிய மக்கள் குழந்தைகளுக்குக் கொண்டு போய் நிறுத்தினார். மதிய உணவு, சீருடை, இலவசப் புத் தகங்கள் போன்ற பல வசதி களைக் கொடுக்கத் தக்க ஏற் பாடுகள் செய்தார். 'கல்விக் கண் திறந்த காமராஜ்' என்ற பட் டத்தையும் பெற்றார்.

காங்கிரஸ் தலைவர்கள் சிலர் கட்சிப் பணிக்காகத் தங்கள் மந்-

வாயிலா விலங்கு கூட
வாழ்ந்திடச் செய்த தாயே
நீயிலாத் தமிழர் நாடு
நிழலிலா மனிதர் வீடு
தாயிலாப் பிள்ளை யானோம்
தலைவனை இழந்த பின்னே
கோயிலில் கூடி யுள்ளோம்
கொற்றவா வாழ்த்து வாயே!



# கொற்றவா வாழ்த்து!

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் மறைந்த பின்னர் மலர்ந்த அவரது பிறந்த நாளன்று (15.7.1976) சென்னை கிண்டியில் உள்ள காமராஜர் நினைவகத்தில் கவியரசர் கண்ணதாசன் அவர்களின் தலைமையில் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது. அப்போது கவியரசர் கண்ணதாசன் எழுதிய கவிதை இது. இதனை உதவியவர் திருபர் மு. புரட்சிமணி.

கவியரசு கண்ணதாசன்

திரிப் பதவியை ராஜினாமா செய்தால் நன்றாக இருக்கும் என்று பண்டித ஜவஹர்லால் நேரு நினைத்தார். காமராஜர் நான் ராஜினாமா செய்கின்றேன் என்று சொல்லிப் பதவியிலிருந்து விலகினது, நம் அரசியல் சரித்திரத்தில் மிகப் போற்றத் தக்கதாக இருந்தது. பண்டித நேருவின் மதிப்பைப்பெற்று இந்திய தேசிய காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காங்கிரஸ் தலைவராகப் பதவியேற்று ஜனநாயக சோஷலிசம் என்ற புதிய கொள்கையைப் பிரகடனம் செய்தார். பண்டித நேரு மறைவிற்குப் பிறகு காமராஜரின் சரித்திரம் பிரசித்திபெற்ற தலைமையைக் காட்டினார். நேருவிற்குப் பிறகு யார் என்ற கேள்விக்கு விடை கிடைக்குமா என்ற சூழ்நிலையில் காமராஜர் புதிய பிரதமரைத் தேர்ந்தெடுத்தார்.

லால்பகதூர் சாஸ்திரி அவர்களை இந்தியப் பிரதமராக அமர்த்தினார். ஓராண்டுக் காலம் கழிந்து மீண்டும் ஓர் பேரிழப்பு ஏற்பட்டது. சாஸ்திரி அவர்கள் மறைந்தார். இந்தியப் பிரதமர் யார் என்ற கேள்வி கிளம்பிய நேரத்தில் அன்னை இந்திரா காந்தியைத் தேர்ந்தெடுப்பதற்குத் தலைமை தாங்கினார். அன்னை இந்திரா காந்தியைப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கும்படி செய்த காரியம் தான் காமராஜர் அவர்களை ஒரு 'தொலைநோக்குத் தலைவர் என்று எடுத்துக் காட்டியது.

இந்திய நாட்டை நேரு பாதையில், காந்தியடிகளின் பண்புகளில் ஒற்றுமையைக் காப்பாற்ற உலக நாடுகளில் இந்தியாவின் பெருமையும் புகழும் உயர ஒரு தகுதி மிகுதி படைத்த தலைமை அன்னை இந்திரா காந்தியைப் பிரதமராக்க முன் நின்றார் என்றால், அதுதான் அவருடைய உயர்ந்த பண்பையும், நாட்டின் மேல் கொண்டிருந்த அக்கறையையும் நாட்டு மக்களின் பால் ஏற்பட்ட கவலையையும் காண்பிக்கின்றது. அன்றைக்குக் காமராஜ் இருந்த தலைமைப் பதவியை, சுயநலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளக் கொஞ்சம் கூட முற்பட்டதில்லை. அவர் விரும்பியிருந்தால், போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார். ஆனால் அவர் அப்படிச் செய்யாமல், நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் எதிர்காலத்திற்கும் எது நல்லது, எது உகந்தது என்று எண்ணினார். அல்வாறே செய்தார்.

அவருடைய நீண்ட காலப் பொது வாழ்வில் அரசியல்வாதிகளுக்கு வழிகாட்டியாக நிற்கின்றார். அவரது தொண்டுள்ளம், ஒழுக்கமுள்ள பொதுவாழ்க்கை, மக்கள்பால் அன்பு, கட்சியில் கடமை, தேசிய ஒருமைப்பாடு, ஆதிதிராவிட மக்களின் வாழ்வில் அக்கறை, பின்தங்கிய பகுதியினர் நல்வாழ்வு போன்ற உயர்ந்த, சிறந்த குணங்கள் நமக்கெல்லாம் ஒரு பண்புப் புதையலாகக் காட்சியளிக்கின்றன.

## உலக மக்கள் தொகை



உலக மக்கள் தொகை 1982 ஆம் ஆண்டில் மட்டும் 7 கோடியே 80 இலட்சம் அதிகரித்து இருக்கிறது. அதில் இந்தியா, சீனா ஆகிய நாடுகள் உள்ள ஆசியாக் கண்டத்தில் மட்டும் 5 கோடியே 20 இலட்சம் அதிகரித்து உள்ளது.

இதையும் சேர்த்து, சென்ற ஆண்டுக் கணக்குப்படி உலக மக்கள் தொகை 458 கோடியே 60 இலட்சம் ஆகும். இதில் ஆசியா கண்டத்தில் மட்டும் 267 கோடியே 20 இலட்சம் பேர் உள்ளனர்.



# காமராஜரின் தீர்க்கதரிசனம்

மு. நமசிவாயம்

காமராஜர் அதிகம்படிக்காதவர் என்பர். ஆனால் அவரது காலத்தில் வரலாறு காணாத அளவிற்குக் கல்வியறிவு பல்கிப் பரவத் தொடங்கியது. காமராஜர் அதிகம் பேசமாட்டார் என்றும் சொல்வார்கள். அவரது ஆட்சிக்காலத்தில் எத்தனையோ நல்ல திட்டங்கள் செயல்படத் தொடங்கின.

எளிமையின் இருப்பிடம் காமராஜர். ஏழை பங்காளன் எனக் குறிப்பிடுவது மிகையே அல்ல.

பள்ளிகளைத் திறந்தால் மட்டும் போதாது; பள்ளியில் படிக்க பிள்ளைகள் பெருமளவில் -அதிலும் குறிப்பாகவும் சிறப்பாகவும் சமுதாயத்தின் அடிமட்டத்துக் குடும்பக் குழந்தைகள் வந்தாக வேண்டும் என்று விரும்பினார். இதற்கு வழி என்ன?

பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டம் பரவலாக்கப்பட்டது. ஏழைக் குழந்தைகளுக்கு மதிய சாப்பாட்டுப் பிரச்சினை தீர்ந்தது.

இது மட்டுமா? எல்லாக் குழந்தைகளுக்கும் பத்தாம் வகுப்பு வரை (எஸ்.எஸ்.எல்.சி) கல்வியைச் சம்பளம் எதுவுமேயின்றி, இலவசக் கல்வி அளித்தார், காமராஜர்.

''பெற்றோருக்குக் குழந்தைகளது வளர்ப்பும், படிப்புச் செலவும், பராமரிப்பும் மிக முக்கியமானது. நமது நாட்டில், ஏழைக் குழந்தைகளை ஏன் எனது பேராசைப்படி, எல்லா குழந்தைகளையுமே கல்லூரிப் படிப்பினை எட்டும் வரையிலாவது, அரசாங்கமே பொறுப்பு ஏற்றுச் செய்ய வேண்டும்; செய்தால் நல்லது'' என்று காமராஜர் பலமுறை பேசியிருக்கிறார்.

குழந்தைகளுக்கு அடுத்தபடி முதியவர்களது நலனில் காமராஜர் கொண்டிருந்த கருத்தும் கவலமும் மிக மிக அதிகமாகும்.

''பரபரப்பான இன்றைய சமுதாயச் சூழ்நிலையில், எதிர்காலத்தில், இந்திய நாட்டில், வயதான முதியவர்களது வாழ்க்கை வசதிப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உருவெடுத்து விடும். எனவே, இப்போது முதற்கொண்டே அதனை நல்லபடி தீர்த்துச் சமாளிக்க வழிவகை கண்டாக வேண்டும்.

''என்னுடைய ஆசையெல்லாம் வயதான முதியவர்களை பாதுகாத்து, நிம்மதியாக வாழ வைக்கும் பொறுப்பினை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதுதான்! ஆனால் உடனடியாக நடக்கக்கூடியதல்ல.

''ஆகவே, வயதுவந்து, குடும்ப 'ஆதரவு அற்ற முதியவர்களுக்கு முதியோர் பென்ஷன்' எனும் திட்டத்தின் கீழ் மாதாமாதம் இருபது ரூபாய்(ரூ.20) கொடுத்து வரும் முறை தமிழ்நாடு அரசாங்கத்தில் அமல் செய்திருக்கிறோம்.

''மாதம் இருபது ரூபாய் போதாதுதான். இது ஒரு ஆரம்பம்தான். இந்த முதியோர் பென்ஷன் திட்டத்தை, வருங்காலத்தில் மேலும் விரிவுபடுத்தி, முதியவர்களுக்குத் தாராளமாகவும், ஏராளமாகவும் அரசாங்கம் உதவி செய்ய வேண்டும்.

''தமிழ்நாட்டின் முதியோர் பென்ஷனை மற்ற மாநில அரசுகளும், தொடரவேண்டும்.

— காமராஜர்.

மேலே கண்ட வாசகங்கள், 1964ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள் ஆறாம் நாள் (6.1.1964) அன்று, ஒரிசாவில் நடைபெற்ற புவனேஸ்வர் காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசியபோது, பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் சொல்லப்பட்டவையாகும்.

முதியவர்களுக்குத் தாராளமாகவும், ஏராளமாகவும், அரசாங்கம் உதவவேண்டும். முடிந்தால் அரசாங்கமே முதியவர்களைப் பாதுகாத்துப் பராமரிக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக வேண்டும் என்னும் காமராஜரின் உள்ளக் கிடக்கையை, பெரு விருப்பமாகத் தெரிவித்த தீர்க்கதரிசனத்தை, எத்தனை மாநிலங்கள் பின்பற்றிச் செயல்படுத்துகின்றனவோ, நாம் அறியோம். ஆனால்...?

புரட்சித் தலைவர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் நடைபெற்று வரும் தமிழக அரசு காமராஜரின் உயர் எண்ணத்தை தீர்க்க தரிசனத்தை செயல்படுத்தி வருகின்றது என்பதைக்கண்டு உள்ளம் பூரிக்காத தமிழர் உண்டோ?

முதியோர் பென்ஷன் திட்டத்தைக் காமராஜர் அவர்கள் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கியபோது, முதியவர்களுக்கு மாதாமாதம் இருபது ரூபாய் வழங்கப்பட்டது.

அதனை மேலும் விரிவுபடுத்தும்படி 1964ஆம் ஆண்டு, காமராஜர் அறிவுரை கூறிச் சென்றார்.

1979ஆம் ஆண்டு முதியோர் பென்ஷன் தொகையைத் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாதாமாதம் ரூ.25 (ரூபாய் இருபத்தைந்து) ஆக உயர்த்தினார். ஆண்டுக்கு இரண்டு வேட்டி, இரண்டு சேலைகளை இலவசமாக வழங்கவும் தமிழ்நாடு அரசு முடிவு செய்து, செயல்படுத்தியது.

முதியோருக்கு வழங்கப்பட்ட இக் கூடுதல் வசதிகளைத் தொடர்ந்து, முதியோருக்கு மாதம் நாலு கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமா? மாதாமாதம் வழங்கப்பட்ட பென்ஷன்தொகை மாதம் ரூ. 35ஆக உயர்த்தப்பட்டும் உள்ளது. இப்போது மதிய சத்துணவும் இலவசமாகப் போடப்பட்டு வருகின்றது.

காமராஜரின் பிறந்தநாளினை அரசாங்க விழாவாகத் தமிழக அரசு கொண்டாடி வருகின்றது. விழாவோடு, புகழ் மாலை சொல்லோடு நிற்கவில்லை. அவரது உயர் எண்ணங்களைத் தன்னாலே செயல்படுத்திடும் செயல் அரசாகவும் நடைபெறுவது கண்டு பாரதப் பெருநாடே பெருமிதம் அடைகிறது.


தலைவர்களுடன்
பெருந்தலைவர்
காமராஜர்
தந்தை பெரியார் அவர்களுடன்
பேரறிஞர் அண்ணா அவர்களுடன்
ஆசிய ஜோதி நேரு அவர்களுடன்
டாக்டர் ராதாகிருஷ்ணன்
திரு. பக்தவத்சலம்
ஆகியோருடன்
மூதறிஞர் ராஜாஜி அவர்களுடன்
மாண்புமிகு முதல்வர் அவர்களுடன்

# அறநிலையத் துறையின் அரும் பெரும் பணிகள்



தமிழ்நாடு அரசின்கீழ் இயங்கி வரும் பல்வேறு துறைகளில், இந்து சமய அறநிலையத் துறையும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. தொன்றுதொட்டே தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையில், அறைநிலையங்களாகிய திருக்கோயில்கள், மற்றும் அவற்றோடு தொடர்புடைய பலவகைச் சமய நிறுவனங்கள், பெரிதும் தொடர்புடையனவாக விளங்கி வருகின்றன. பண்டைக் காலத்தில் திருக்கோயில்கள் கல்வி நிலையங்களாகவும், இசை நடனம் சிற்பம் ஓவியம் முதலியவற்றை வளர்க்கும் கலைநிலையங்களாகவும் பணிபுரிந்து வந்துள்ளன.

திருக்கோயில்களே நூலகங்களாகவும், ஆவணக் காப்பகங்களாகவும், நிதி நிலையங்களாகவும், நீதிமன்றங்களாகவும், அறச்சாலைகளாகவும், மருத்துவமனைகளாகவும், வேலைவாய்ப்பு நிறுவனங்களாகவும், பொதுநலப் பணிமன்றங்களாகவும், பல்வேறு வகைகளில் பொதுமக்களின் நல்வாழ்க்கைக்குத் தொண்டாற்றி வந்திருக்கின்றன. கோயில்களை உண்மையிலேயே சிறந்த சமுதாய நல நிலையங்கள் என்று கூறலாம். ஆதலின் தமிழ்நாடு அரசின் பல்வேறு பிற துறைகளைப்போல, அறநிலையத் துறையும் மிக்க முதன்மையும் சிறப்பும் வாய்ந்து திகழ்கின்றது.

இந்து சமய அறநிலையத் துறையானது 9.6.1980 முதல் 9.6.'83 முடிய மூன்று ஆண்டுகளில் பலவகைகளில் வளர்ந்து முன்னேற்றம் பெற்றுள்ளது. அறநிலையத் துறையின் பொறுப்பில் 34,112 சமய நிறுவனங்கள் உள்ளன. இவற்றுள் திருக்கோயில்கள் 32,075. திருமடங்கள் 55. திருமடங்களுடன் இணைக்கப்பட்டுள்ள கோயில்கள் 55. குறிப்பிட்ட கட்டளைகள் 1,721. அறக்கட்டளைகள் 189. சமணக் கோயில்கள் 17. இந் நிறுவனங்களில் 25,533 நிறுவனங்கள் உதவித்தொகை விதிக்கத் தக்க வருமானம் உடையனவாகும். இவற்றின் ஆண்டு வருமானம் சுமார் ரூபாய் 17.72 கோடி என மதிப்பிடப்படுகிறது. இத்தொகை சென்ற ஆண்டு ரூபாய் 16.64 கோடியாக இருந்தது. இவ்வாண்டில் 1.08 கோடி உயர்ந்துள்ளது.





**திருக்கோயில் பணியாளர்கள்**

நம் தமிழ்நாட்டில் உள்ள சிவாலயங்கள், வைணவக் கோயில்கள், பிள்ளையார்கோயில்கள், முருகன் கோயில்கள், அம்பாள் கோயில்கள், கிராம தேவதைக் கோயில்கள் ஆகியவை மொத்தம் 34,112 ஆகும். இவற்றில் 1636 கோயில்கள், 479 நிர்வாக அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவற்றின் திறமையான நல்ல நிருவாகத்திற்காக 1982ஆம் ஆண்டில் நான்கு வகையான பதவித் தரத்தில் 35 நிர்வாக அதிகாரிகள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழகக் கோயில்களில் அர்ச்சகர்கள், பூசாரிகள் உள்பட சுமார் 82,600 பணியாளர்கள் ஊழியம் புரிகின்றனர். இவ் ஊழியர்களின் சம்பளம், பஞ்சப்படி முதலியவற்றிற்காகக் கோயில்களின் வருமானத்தில் 40 சதவிதத் தொகை செலவிடப்படுகின்றது.

**கோயில் பணியாளர்களுக்குச் சலுகைகள்**

கோயில் பணியாளர்களுக்கு ஆயுள் காப்புறுதித் திட்டத்தின் கீழ், 15.7 '82ஆம் நாள்முதல், தொகுதிக் காப்புறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ரூபாய் 100-க்கு மேற்பட்டுச் சம்பளம் பெறும் கோயிற் பணியாளர்கள் இத்திட்டத்திற்காகப் பெயரளவிலான குறைந்த அளவுத் தொகையைப் பிரிமியத் தொகையாகச் செலுத்த வேண்டும். ரூ.100க்கு குறைவாகச் சம்பளம் பெறும் பணியாளர்கள் பிரிமியம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. இத்திட்டம் செயலுக்கு வந்தபின்னர் மரணமடைந்த ஆலயப் பணியாளர்கள் பதினேழு பேர்களின் குடும்பத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து, காப்பீட்டுத் தொகையைப் பெற்று வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ரூபாய் பத்தாயிரம் அல்லது அதற்குமேல் ஆண்டு வருவாய் பெறும் திருக்கோயில்களில், பத்து ஆண்டுகள் பணியாற்றிய அலுவலகப் பணியாளர், பணியிலிருந்து ஓய்வு பெற்றால், அவர் பணியாற்றிய ஒவ்வொரு முழு ஆண்டிற்கும் அரை மாதத்துக்குரிய சம்பளம் வீதம் பணிக்கொடை வழங்கப்படுகின்றது.

திருக்கோயில் பணியாளர்களுக்கு அவ்வப்போது பஞ்சப்படி அனுமதிக்கப்பட்டு வருகின்றது. நாலூறு திருக்கோயில்களில் வருங்கால வைப்புநிதித் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. 1.4.81 முதல் பணியாளர்களின் சம்பளம் பஞ்சப்படி முதலிய செலவுகள், ஆண்டு உதவித் தொகை நிர்ணய வருமானத்தில் 30 சதவீதத்திற்கு மேல் இருக்க வேண்டும் என்ற வரம்பு 40 சதவீதமாக இருக்கவேண்டும் என்று உயர்த்தப்பட்டுள்ளது.





கடந்த மூன்று ஆண்டுகளில், திருக்கோயில்அறங்காவலர்களாக ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த 4,917 பேர் நியமிக்கப் பட்டுள்ளனர். இவ்வாறே கோயில்களில் அறங்காவலர்களாக 121 பெண்கள் நியமிக்கப் பெற்றிருக்கின்றனர். இதன் மூலம் கோயில்களில் பெண்களுக்கும் முதன்மைச் சிறப்பிடம் தந்து பொறுப்புகள் அளித்துச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

### திருப்பணி வேலைகள்

9.6.80 முதல் 9.6.83 முடிய, இந்து சமய அறநிலையத் துறை பலவகைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் 208 திருக்கோயில்களில் குடமுழுக்குகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. ரூபாய் 8.46 கோடி அளவிற்குத் திருப்பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப் பெற்றுள்ளது. 1153 திருப்பணி வேலைக்கான மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 91 திருக்கோயில்களுக்கு அரசு மானியம் ரூபாய் 46 இலட்சம் அளிக்கப் பெற்றுள்ளது. பிற்பட்டோர் நல வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் ஆதிதிராவிடர் குடியிருப்புக்களில் உள்ள 29 திருக்கோயில்கள், அறநிலையத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதற்காக ரூபாய் 7இலட்சத்து 32 ஆயிரம் அரசு மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 967 திருப்பணி வேலைகள் ரூபாய்3.60கோடி செலவில் நிறைவேற்றி முடிக்கப் பட்டுள்ளன. மேலும் 29 திருக்கோயில்களில் திருப்பணி வேலைகள் பெருமளவில் நடைபெற்று வருகின்றன. பக்தர்களுக்கும், யாத்திரிகர்களுக்கும் உரிய வசதிகள் செய்தளிக்கும் முறையில், 46 ஓய்வு விடுதிகளும் ,231 குடில்களும், 936 அறைகளும் கட்டப்பட்டுள்ளன

### கோயில் நிலங்களின் வருவாய்

கோயில் நிலங்கள் பற்றி விசாரணை செய்து ஆராய்ந்து, அவற்றைக் குறித்து ஆவணங்களைத் தயாரிக்கும் பணியை மேற்கொண்டதனால், பிறர் வசம் இருந்து வந்த சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள், வீட்டு மனைகள், கட்டடங்கள் ஆகியவை பெருமளவு கண்டுபிடிக்கப்பட்டன அவைகளைப் பிறர்வசம் இருந்து மீட்டு, அந்தந்தச் சமய நிறுவனங்கள் தம் வசம் எடுத்துக் கொண்டுள்ளன. இதன்மூலம் அந்நிறுவனங்களுக்கு ரூபா 13 இலட்சம் ஆண்டு வருமானம் கூடுதலாகக் கிடைத்துள்ளது.

திருக்கோயில்களுக்குரிய நிலங்கள், கட்டடங்கள், மனைகள் ஆகியவற்றிற்கு, மிகவும் குறைந்த கட்டணமும் வாடகைகளும் கொடுக்கப்பட்டு வந்தன. அதனால் கோயில்களுக்கும் சமய நிறுவனங்களுக்கும் நியாயமான வருவாய் கிடைக்காமல், மிகமிகக் குறைந்த அளவிலேயே வருவாய் கிடைத்து வந்தது. இந்நிலையை மாற்றி காலநிலைக்கு ஏற்பவும் நியாயமான அளவிற்கும், வாடகைத் தொகையும் குத்தகைத் தொகையும் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பெற்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் 3,936 கட்டடங்களுக்கு வாடகை உயர்வு செய்ததன் மூலம் ரூபாய் 12.23 லட்சம் கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது. இவ்வாறே 1,334 மனைகளுக்கு வாடகை உயர்வு செய்ததன் மூலம்,ரூபாய் 1.38 இலட்சம் கூடுதல் வருவாய் கிடைத்து வருகின்றது. 4,512 ஏக்கர் நிலங்களுக்குக் குத்தகைத் தொகை உயர்வு செய்யப்பட்டதன் மூலம் ரூபாய் 57,000 கூடுதல் வருவாய் கிடைப்பதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

### நிலுவைத்தொகை வசூல்

துறைக்குச் சேரவேண்டிய நிலுவைத் தொகைகளில் 1980க்குரிய தணிக்கைத்தொகை 1.14 கோடியும், 1981ஆம் ஆண்டிற்குரிய உதவித் தொகை ரூ. 1.21 கோடியும், மற்றும் செயல் அலுவலர்களின் சம்பளம், பஞ்சப்படிகள் முதலியவற்றிற்காக, 1982ஆம் ஆண்டில் ரூபாய் 1.08 கோடியும் 1983ஆம் ஆண்டு மே மாதம் வரையில் ரூபாய்55 இலட்சமும் வசூலிக்கப் பெற்றுள்ளன. அறநிலையங்களின் உபரி நிதியிலிருந்து ரூபாய் 12.66 கோடி முதலீடுகள் செய்யப்பெற்றுள்ளது. 8,818 சமய நிறுவனங்கள் புதியனவாகத் துறையின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

### அரசு மானியங்கள்

1982-83ஆம் ஆண்டில் கோயில்களின் திருப்பணிகளுக்கும், திருவுருவச் சிலைகள் முதலியவற்றைப் பாதுகாப்பதற்கும், அரசு ரூபாய் 20 இலட்சம் அனுமதித்தது.

ஆதிதிராவிடர் குடியிருப்புக்களில் உள்ள 11 கோயில்களில் அரசு அளித்த ரூபாய் 1 இலட்சத்து 32 ஆயிரம் மானியத்தைக் கொண்டு, பல திருப்பணிகள் செய்யப்பட்டன. கோயில் திருப்பணிகளுக்காகவும், திருவுருவச் சிலைகள் முதலியவற்றைப் பாதுகாக்கவும், ஆணையரின் பொது நல நிதியிலிருந்து ரூபாய் 5 இலட்சத்து 2 ஆயிரத்து 145 செலவிட அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாண்டில் 70 கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள் சிறப்பாக நடத்தப் பெற்றன.





### கல்விப் பணிகள்

கல்வி வளர்ச்சிக்காகவும், அறநிலையத்துறை பெரும் தொண்டு ஆற்றி வருகின்றது. பழனி, திருக்குற்றாலம், பூம்புகார், கன்னியாகுமரி, இராமேசுவரம் ஆகிய இடங்களில் மொத்தம் 7 கல்லூரிகளும் பண்மொழி திருநெல்வேலி, திருவெண்காடு, மதுரை, இராமேசுவரம், திருமலை, கள்ளக்குறிச்சி, மருதமலை, வாழைத்தோட்டத்து ஐயன்பாளையம் ஆகிய இடங்களில் 9 உயர்நிலைப் பள்ளிகளும் நடத்தப்படுகின்றன. இவற்றுள் பெண்களுக்காகவே 7 உயர்நிலைப் பள்ளிகளும், 2 கலைக்கல்லூரிகளும், செந்தமிழ்க் கல்லூரியும் அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது.

சிறு வயதிலேயே குழந்தைகளுக்குப் பக்தியுணர்வை ஊட்டும் நோக்கத்துடன், தேவார திவ்வியப் பிரபந்தப் பாடல்கள், கோயில்களின் ஆதரவில் கற்பிக்கப்படுகின்றன. திருவெண்காடு திருப்புகலூர், திருக்கடவூர், பறவி, கோயம்புத்தூர் திருவாரூர், திருக்களர், திருமயிலை ஆகிய கோயில்களில், தேவாரப் பாடசாலைகளும், கும்பகோணம் சாரங்கபாணி கோயில், விளநகர் வரதராசப் பெருமாள் கோயில், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள்கோயில் ஆகியவற்றில் திவ்வியப் பிரபந்தப் பாடசாலைகளும் நடைபெறுகின்றன. இவ்வாறே திருமயிலை, சிக்கல், காஞ்சிபுரம், தருமபுரம், அல்லூர் ஆகிய இடங்களில் வேத சிவாகமப் பாடசாலைகள் நடந்து வருகின்றன.

தமிழிசை வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் நோக்கத்துடன் நாதசுவரத்திலும், தவிலிலும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இவர்களுக்கு ரூபாய் 500 , ரூபாய் 300 ஆகிய உதவித்தொகைகள் முறையே வழங்கப்படுகின்றன.

### சித்த மருத்துவ இல்லங்கள்

பொது மக்களுக்கும் யாத்திரிகர்களுக்கும் பயன்படும் பொருட்டும், தமிழ்நாட்டிற்கே சிறப்பான சித்த மருத்துவத்தை வளர்க்கும்பொருட்டும், வடபழனி, மணவாளநல்லூர், திருத்தணி, கள்ளக்குறிச்சி, சங்கரன் கோயில், குமாரவயலூர், திருப்புகலூர், பழனி, இராமேசுவரம், இருக்கங்குடி, வீரவநல்லூர், பண்மொழி, வைத்தீசுவரன் கோயில், பன்னாரி, திருச்செந்தூர் மருதமலை, திண்டுக்கல்,மதுரை, கரூர், கொடுமுடி ஆகிய 20 இடங்களில் சித்த மருத்துவ இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றன.

### இலவசத் திருமணங்கள்

இந்து ஆதித் திராவிடர், பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த ஏழை இந்துக்கள் ஆகியோரின் திருமணம் ஒவ்வொன்றிற்கும், அரசின் கொள்கைக்கு இணங்க, நிதிவசதி படைத்த கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.750-முதல் ரூபாய் 1000- வரை செலவிடப்படுகிறது. 15.8.'81 லிருந்து சுமார் ரூபாய் 5 இலட்சத்து 84 ஆயிரத்து 557 செலவில், இதுவரை 746 திருமணங்கள் நடத்தப்பட்டன. சமயபுரம், திருத்தணிகை, திருவேற்காடு, திருவாரூர், இரத்தினகிரி, சோளிங்கபுரம், கரூர் முதலிய இடங்களில் நடைபெற்ற திருமணங்களுக்கு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமை வகித்தார்.

### கூட்டு வழிபாடு

ஆதித் திராவிடர்களுக்கும் ஏனைய இந்து சமய மக்களுக்கும் இடையில் பேதங்களை ஒழித்து ஒற்றுமை வளர்க்கும் நோக்கத்துடன், தமிழகம் முழுவதிலும் ஐயாயிரத்திற்கும் அதிகமான கோயில்களில் சிறப்புக்கூட்டு வழிபாடும், பொதுவிருந்தும் நடத்துவதற்கான திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. 15.8.81 மற்றும் 15.8.82 அன்று திருவேற்காடு மற்றும் முறையே மாங்காட்டில் இச் சிறப்புமிக்க நிகழ்ச்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆரம்பித்து வைததார்.

இந்து சமய நிறுவனங்களில் சாதி இன உட்பிரிவு அல்லாது பாகுபாடின்றி அர்ச்சகர்களை நியமித்தற்குரிய வழிவகைகள் ஆராயப்பெற்று, அதற்கென அமைக்கப்பட்ட வல்லுநர்குழுவின் பரிந்துரைகளைப் பெற்று, அவற்றைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பெற்று வருகின்றன.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை ஆற்றிவரும் பணிகளும், ஆற்றவேண்டிய பணிகளும் பலப்பல. இந்த அரிய சிறந்த பணிகளையெல்லாம் மேலும் மிக நல்லமுறையில் ஆற்றுவதற்குப் பொதுமக்களின் அன்பும், ஆதரவும், ஒத்துழைப்பும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை!

ஏற்றமிக்கதோர் எதிர்காலத்தின் அஸ்திவாரமாக 80-கோடித் திட்டமொன்று...



நாட்டின் மேக்னசைட் தேவையில் மூன்றில் ஒருபங்கு தயாரிக்கும் நிறுவனத்தின்சீரிய சேவை.

1979ம் ஆண்டில், தமிழக அரசின் நிறுவனமாகத் துவங்கிய, தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட், இன்று நமது நாட்டின் மேக்னசைட் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது.

தரச்சிறப்பான மேக்னசைட் தயாரிப்பாளரின் மற்றோர் அரிய முயற்சியே இந்த 80 கோடித் திட்டமாகும். இதன் மூலம் உலகத் தரக்கட்டுப்பாடுகளுக்கிணையான மேக்னசைட்டை அளித்து, இறக்குமதியைக் குறைத்து, அந்நியச் செலவாணியை மிச்சப்படுத்த உதவுகிறது தமிழ்நாடு மேக்னசைட்.

அதோடு கிராமப்புற வேலை வாய்ப்புகள் பெருகவும் வழிகோலுகிறது.

எஃகு தொழிற்சாலைகளுக்கான ரிஃப்ராக்டரி செங்கல்களுக்கு முக்கியமாக உபயோகமாகும் இந்த மேக்னசைட், கால்நடைத் தீவனம், இரசாயன உரம், இரயில்வே, மற்றும் மொசைக் தரைத்தளங்களுக்கும் அத்தியவாசியமானதாகும்.

தற்போது, மாதாமாதம் 10,000 மெட்ரிக் டன்கள் மேக்னசைட்டை உற்பத்திசெய்யும் தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட், எதிர்காலத்தில் ஏற்றமிக்க பல உற்பத்தி இலட்சியங்களில் வெற்றி வாகை சூடத் தயாராகிவிட்டது.

TANMAG

தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்.

(தமிழக அரசு நிறுவனம்)
119, கிரீன்வேஸ் சாலை, ஃபேர்லேண்ட்ஸ்,
சேலம்-636 004.



# தீ தவிர்ப்போம்

தீ விபத்துக்கள், வெள்ளப் பெருக்கு, நிலச்சரிவு மற்றும் இதர இடர்ப் பாடுகளின்பொழுது தமிழ்நாடு தீயணைப்புத் துறையானது பொதுமக்களுக்கு மனிதாபிமானத்துடன் செயலாற்றி வருகின்றது. இத்துறை 1967 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் தனித்துறையாக இயங்கி வருகிறது. நம் நாட்டிலேயே மிகப் பெரியதாகவும், சீரிய திறன் வாய்ந்த துறையாகவும் தொடர்ந்து பணியாற்றி வருகின்றது.

1980-ஆம் ஆண்டில், அரசு பொறுப்பேற்றதிலிருந்து 1.1.80 தேதியில் 107 தீயணைப்பு நிலையங்கள் மட்டுமே செயல்பட்டு வந்தன. தற்சமயமுள்ள அரசினர், 25 கி.மீ. இடைவெளியில் ஒரு தீயணைப்பு நிலையம் நிறுவுதல் அவசியமென்ற கொள்கையை ஆர்வமுடன் கடைப்பிடித்ததில், தற்சமயம் எல்லா இடங்களும் தீப்பாதுகாப்பிற்கு உட்பட்டு உள்ளன.

அருகிலுள்ள தீ விபத்து இடங்கள், கடந்த ஆண்டுகளில் கிடைக்கப் பெற்ற தீ அழைப்புகள், வளர்ந்து வரும் தொழிற்சாலை முன்னேற்றம் மற்றும் மக்கள் தொகை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஒரு முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அரசினர் கடந்த மூன்று ஆண்டுகளில் 23 இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் நிறுவ ஒப்புதலளித்துள்ளனர். தற்சமயம் மாநிலத்தில் 130 தீயணைப்பு நிலையங்கள்செயல்பட்டு வருகின்றன. அரசினர், 1983-84ல் மேலும் 25 இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் நிறுவ ஒப்பளித்துள்ளனர். நடப்பு நிதியாண்டு முடிவதற்குள் மேற்கூறிய 25 இடங்களிலும் புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்க அரசு ஒப்பளிப்பதோடு, இத்துறைக்கு நவீன தீத் தடுப்புச் சாதனங்கள் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்துள்ளது. ஏற்கெனவே ரூ. 42 இலட்சம் செலவில் ஸ்நார்க்கல் என்ற நவீன வசதிகள் கொண்ட ஒரு ஊர்தி இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. 13.2.81 அன்று சென்னை ஸ்பென்சரில் ஏற்பட்ட தீ விபத்தின் போது, இவ்வூர்தி மிகுந்த உபயோகமாக இருந்தது. இதேபோல் இன்னும் இரண்டு ஊர்திகள் இறக்குமதி செய்து கோவை மற்றும் மதுரைக்கு வழங்குவதற்கான செயற்குறிப்பொன்று பரிசீலனையில் உள்ளது. அரசினர் இத்துறையில் வான் தந்தி செய்தி அறிவிப்பு முறையை அதிகரிக்கும் பொருட்டு 24 ஊர்திகளில் வயர்லெஸ் கருவிகளைப் பொறுத்த ரூ. 4.73 இலட்சம் ஒப்பளித்துள்ளனர்.

இத்துறை பயனுள்ளதாகவும், விரைவாகவும் செயல்பட வேண்டுமென்ற கருத்தில் இத்துறை அமைப்பில் சில மாற்றங்கள் செய்து புதிதாக 3 கோட்டங்களைத் தோற்றுவிக்க அரசினர் ஆணையிட்டுள்ளனர். அவை சேலம், விருதுநகர், தஞ்சாவூர் ஆகும்.

அரசினர், தீயணைப்புப் பணியாளர்களது நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர். பணியாளர்களுக்குச் சலுகை விலையில் அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் வழங்கும் திட்டம், இடர் நீக்குப் படி மற்றும் வீட்டு வாடகைப்படி அதிகரிப்பு ஆகியவை ஒப்பளித்துள்ளனர். 1982-83 ஆம் ஆண்டில் காவல்துறையிலுள்ளது போலவே தீயணைப்புத் துறைப் பணியாளர்களுக்கும் குடியிருப்பிடங்கள் கட்டித் தரும் திட்டத்தினை 1982-83 ஆம் ஆண்டில் ஒப்பளித்துள்ளனர். இது இத்துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட மிகப் பெரிய சலுகையெனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது.

செயல்முறைத் திறன் அதிகரிக்கும் பொருட்டு, அரசினர் தீயணைப்புத் துறை அலுவலர்களுக்கு வெளிநாடுகளிலும், நாகபுரி தேசிய தீயணைப்புக் கல்லூரியிலும் அயல்பணியில் செல்ல ஆணையிட்டுள்ளனர். தீத்தடுப்பிற்கென, நவீன ஊர்திகளுடன் கூடிய தனியொரு குழு அமைக்கும் திட்டமொன்றும் அரசினர் பரிசீலனையில் உள்ளது.

# தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்.
# புரட்சித்தலைவர் ஆட்சியில் வெண்மைப் புரட்சியின் வியத்தகு சாதனைகள்



பட்டியல்—1

**குளிரூட்டும் நிலையங்களை விரிவாக்கும் திட்டம்**

| மாவட்டம் | நிலையத்தின் பெயர் | தற்போதைய திறன் (நாள் ஒன்றுக்கு லிட்டர்களில்) | விரிவாக்கத் திற்குப்பின் திறன் (நாள் ஒன்றுக்கு லிட்டர்களில்) | மதிப்பீடு (இலட்சம் ரூபாய்களில்) |
|---|---|---|---|---|
| செங்கல்பட்டு | அச்சிறுப்பாக்கம் | 10,000 | 30,000 | 16·66 |
| | பாலுச்செட்டி | 10,000 | 30,000 | 16·66 |
| தென்னாற்காடு | சின்ன சேலம் | 30,000 | 50,000 | 13·17 |
| | விழுப்புரம் | 30,000 | 50,000 | 13·17 |
| வடஆற்காடு | ஆம்பூர் | 30,000 | 50,000 | 8·90 |
| | திருவண்ணாமலை | 30,000 | 50,000 | 8·90 |
| சேலம் | ஆத்தூர் | 30,000 | 50,000 | 14·66 |
| உதகமண்டலம் | கோத்தகிரி | 4,000 | 10,000 | 8·10 |
| | கூடலூர் | 4,000 | 10,000 | 8·10 |
| மதுரை | தேனி | 10,000 | 30,000 | 11·47 |
| | திண்டுக்கல் | 20,000 | 30,000 | 11·47 |

பட்டியல்—2

**பால் பதனிடும் ஆலைகளை விரிவாக்கும் திட்டம்**

| பால்பதனிடும் ஆலை | தற்போதைய திறன் | விரிவாக்கத் திற்குப்பின் திறன் | மதிப்பீடு (இலட்சம் ரூபாய்களில்) | குறிப்பு |
|---|---|---|---|---|
| | (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டர்களில்) | | | |
| அம்பத்தூர் | 2.00 | 3.00 | 578·94 | |
| மாதவரம் | 1.25 | — | 113·60 | ஆலையை நவீனப்படுத்துவதற்கு உபயோகப்படுத்தப் படும். |
| மதுரை | 1.50 | 2.50 | 297·50 | |
| ஈரோடு | 1.50 | 3.00 | 286·50 | பால் பவுடர் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 10 டன்களிலிருந்து 20 டன்களாக உயர்த்தப்படும். |
| சேலம் | 1.00 | 2.00 | 261·40 | |
| வேலூர் | 0.70 | — | 110·00 | அதிகப்படியான வசதிகளை ஏற்படுத்த உபயோகப் படுத்தப்படும். |
| தஞ்சாவூர் | 0.16 | 0.30 | 5·00 | |
| திருச்சி | 0.16 | 0.30 | 5·00 | |

பட்டியல்—3

**உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய குளிரூட்டும் நிலையங்கள்**

| மாவட்டம் | நிலையத்தின் பெயர் | குளிரூட்டும் திறன் (நாளொன்றுக்கு லிட்டர்களில்) | மதிப்பீடு (இலட்சம் ரூபாய்களில்) |
|---|---|---|---|
| வட ஆற்காடு | அனக்காவூர் | 30,000 | 35·65 |
| வட ஆற்காடு | அரக்கோணம் | 30,000 | 35·65 |
| செங்கல்பட்டு | திருவள்ளூர் | 50,000 | 62·10 |
| புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 10,000 | 18·26 |
| தென்னாற்காடு | சேத்தியாதோப்பு | 10,000 | 10·00 |
| தஞ்சாவூர் | பட்டுக்கோட்டை | 10,000 | 19·00 |
| இராமநாதபுரம் | கமுதி | 10,000 | 19·00 |
| கன்னியாகுமரி | மார்த்தாண்டம் | 10,000 | 7·00 |
| திருநெல்வேலி | வள்ளியூர் | 4,000 | 5·00 |
| கோயம்புத்தூர் | அன்னூர் | 30,000 | 34·50 |

பட்டியல்—4

**திட்டமிடப்பட்டுள்ள புதிய பால் பதனிடும் ஆலைகள்**

| நிலையத்தின் பெயர் | பால்பதனிடும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டர்களில்) | மதிப்பீடு (இலட்சம் ரூபாய்களில்) | குறிப்பு |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் | 1.00 | 352·20 | |
| உதகமண்டலம் | 0.50 | 275·00 | பாலாடைக் கட்டி தொழிற்சாலையுடன் |
| கிருஷ்ணகிரி | 1.00 | 276·00 | நாளொன்றுக்கு 10 டன்கள் பால் பவுடர் ஆலையுடன் |
| திருச்சி | 0.60 | 161·00 | |
| காரைக்குடி | 0.60 | 180·00 | |
| திருநெல்வேலி | 0.50 | 130·00 | |




"தமிழகத்தில் வெண்மைப் புரட்சி வெகு நேர்த்தியாகத் தொடங்கப்பட்டு வியக்கத்தகு சாதனைகள் செய்யப் பட்டு வருகின்றன; இப்பணியில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், உச்சகட்ட வளர்ச்சியை எட்டிடத் தேவையான நடவடிக்கைகளை தீவிரமாக மேற் கொண்டுள்ளது.

## தமிழ்நாட்டில் பால்வளத் தொழில்

பால் குளிரூட்டும் நிலையங்கள்
- 77க்கு முன் தொடங்கப்பட்டது
- 77க்குப் பின் தொடங்கப்பட்டது
- தொடங்கப்பட உள்ளது
- கொள்திறன் விரிவாக்கம்

பால் பண்ணை
- 77க்கு முன் தொடங்கப்பட்டது
- 77க்குப் பின் தொடங்கப்பட்டது
- தொடங்கப்பட உள்ளது
- கொள்திறன் விரிவாக்கம்

கால்நடைத் தீவன ஆலைகள்
- 77க்கு முன் தொடங்கப்பட்டது
- 77க்குப் பின் தொடங்கப்பட்டது
- தொடங்கப்பட உள்ளது

பட்டியல்—5

**பால் உற்பத்தியாளர்கள் பயன் பெறும் அளவு**

| வருடம் | 1977 | 1982 |
|---|---|---|
| பயன் பெறும் பால் உற்பத்தி யாளர்கள் | 2,48,000 | 11,00,000 |
| உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணம் (ரூபாய் இலட்சங்களில்) | 1,072·80 | 6,364·00 |

பட்டியல்—6

**ஆதி திராவிடர் நலம்**

| | 1977 | 1982 |
|---|---|---|
| மானியம் பெற்ற நபர்கள் | 1224 | 5676 |
| வழங்கப்பட்ட மானியத் தொகை (இலட்ச ரூபாய்களில்) | 6·12 | 54·56 |

பட்டியல் -

**பால், பால் பொருட்கள் விற்பனை**

| பால் பொருட்கள் | 1977 | 1982 |
|---|---|---|
| | (இலட்சம் லிட்டர்களில்) | |
| பால் (இலட்சம் லிட்டர்களில்) | 849·8 | 1,386 |
| வெண்ணெய் (டன்களில்) | 557 | 1493 |
| பால் பவுடர் (,,) | 442 | 882 |
| நெய் (,,) | 246·5 | 690 |
| த.பா. உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் விற்பனை (ரூபாய் இலட்சங்களில்) | 2,080 | 5,100 |

**தரமான பால்பொருட்களை, நியாய விலையில் வழங்குதன்மூலம் நுகர்வோர் நல்ம்பேண நாளும் விழைகின்றது ஆவின்**

'ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா'

என்று பாடினார் நூற்றாண்டு விழாக் கண்ட மகாகவி பாரதி.

இளமைப் பருவத்தே விளையாட்டு மிக முக்கியமானது. உடலை வளமாகவும் நலமாகவும் வைத்திருக்கக் கூடியது. இதனை நன்குணர்ந்தே தமிழக அரசு விளையாட்டுக்கெனத் தனியொரு துறையினை அமைத்துள்ளது.

அத்துறையின் நடவடிக்கைகள் நாம் அறியத்தக்கனவாகும்.

இளைஞர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் உண்டாகும்படி செய்வதும், ஆர்வமுடன் விளையாடும் இளைஞர்களை நன்கு விளையாடிப் பரிசுகள் பெறும் அளவுக்குத் தயாராக்குவதும், விளையாட்டு வீரர்களுக்கு உதவிகள் புரிவதும் இளைஞர் விளையாட்டுப் பயிற்சித்துறையின் கடமைகளாக இருந்துவருகின்றன.

1979 செப்டம்பரில் தோன்றிய இந்த இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறையானது, 1956-ல் தோன்றி இயங்கிவரும் தமிழ்நாடு மாநில விளையாட்டு மன்றத்தை முடுக்கிச் செயல்பட வைக்கும் பொறுப்பினையும் ஏற்றுள்ளது.

நான்காம் ஆண்டில் நடைபோட்டுக்கொண்டிருக்கும் இந்தத் துறையின் வளர்ச்சியும் சாதனைகளும் பொதுமக்களின் நன்மதிப்பினையும், பாராட்டினையும் பெற்றுள்ளன.



## விளையாட்டுப் பள்ளி விளையாட்டு விடுதி

தமிழ்நாடு அரசு நடத்தும் 3 விளையாட்டுப் பள்ளிகள் சென்னை, சிதம்பரம், கோவை ஆகிய இடங்களிலும், 3 விளையாட்டு விடுதிகள் நெல்லை திருச்சி, மதுரை ஆகிய இடங்களிலும் உள்ளன.

கோவையில் இந்த ஆண்டு தோன்றிய பெண்கள் விளையாட்டுப் பள்ளி அடுத்து சாதனைச் சுடரை வீசும்.




## ஆசிய விளையாட்டுப் போட்டி

ஆசிய விளையாட்டுப் போட்டிக்கென முதன் முதலாக நடத்திய பயிற்சி முகாமைத் தமிழ்நாடு அரசு நடத்தியது. சென்னை அண்ணா நீச்சல் குளத்தில் இந்தப் பயிற்சி முகாம் நடைபெற்றது. அடுத்து நீச்சல்பந்து, பாட்மின்டன், துடுப்புப் படகோட்டுதல் ஆகிய பயிற்சி முகாம்களையும் தமிழ்நாடு அரசு நடத்தியது.

ஆசிய விளையாட்டுப் போட்டிக்கென எங்கு பயிற்சி பெற்றாலும் பயிற்சி பெற்ற தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் ஒவ்வொருவருக்கும் பயிற்சிக் காலத்தில் கூடுதல் உதவித்தொகையாக மாதம் 200 ரூபாய் வீதம் வழங்கியது.

ஆசிய விளையாட்டு வெற்றி வீரர்களைப் பாராட்டி விருதுத் தொகையாக 1,40,000 ரூபாய் வழங்கியுள்ளது.

## இளமையில் தெரிந்தெடு!

சிறந்த விளையாட்டு வீரர்களை இளமையிலேயே தெரிந்தெடுத்துத் தக்க முறையில் விளையாட்டு நுட்பங்களையும், உத்திகளையும் சொல்லித் தந்து



ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய ஆக்கிக் குழுவின் தலைவர், திரு. பாஸ்கரனுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தங்கப்பதக்கம் அணிவித்துப் பாராட்டுகின்றார். மாண்புமிகு கல்வியமைச்சர் உடன் இருக்கின்றார். (2.10.80)

தேசிய, உலக அரங்குகளில் முன்னணியில் திகழ உருவாக்கும் திட்டம் 'இளமையில் தெரிந்தெடு விளையாட்டுப் போட்டி' திட்டமாகும்.

1982-83-ஆம் ஆண்டில் அடியில் காணும் ஊர்களில் இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டுச் சிறந்த விளையாட்டு வீரர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| மதுரை | — | தடகளம் |
| தர்மபுரி | — | வாலிபால் |
| புதுக்கோட்டை | — | கால்பந்து |
| வடார்க்காடு | — | கபடி |
| பெரியார் | — | கூடைப்பந்து |
| திருச்சி | — | ஹாக்கி |
| சேலம் | — | கிரிக்கெட் |
| மதுரை | — | பாட்மின்டன் |

## கோடைக் காலப் பயிற்சி

'இளமையில் தெரிந்தெடு' விளையாட்டுப் போட்டிகளிலும், குடியரசு நாள் விளையாட்டுப் போட்டிகளிலும், தேசிய விளையாட்டுப் போட்டிகளிலும் சிறந்த விளையாட்டு வீரர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் செயல் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டு மே மாதத்தில் கடலூரிலும், தஞ்சையிலும் இத்தகைய பயிற்சி முகாம்கள் நடைபெற்றன. மாண்புமிகு கல்வி (விளையாட்டு) அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் இவற்றைத் தொடங்கி வைத்தார். உண்டி, உறையுள், போக்குவரத்துச் செலவுகள் வழங்கி அளிக்கப்படும் இந்தப் பயிற்சி முகாம்களில் சுமார் [illegible] மாணவ மாணவிகள்—16 வயதுக்குட்பட்டவர்கள் பயன் பெற்றனர். இம்மாதிரி பயிற்சி முகாம்கள் இதற்கு முன்பு 3 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன.

இதுவன்றிச் சென்னையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக 16 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் காலையிலும் மாலையிலும தம் இல்லங்களிலிருந்து திடலுக்கு வந்து பயிற்சி பெறும் விளையாட்டுப் பயிற்சி முகாம்களையும் தமிழ்நாடு அரசு நடத்தி வருகிறது.

## இளைஞர் பணி

விளையாட்டு மேம்பாட்டுக்காக மட்டும் இல்லாமல், தமிழக இளைஞர்களின் திறமையை நல்வழியில் பயன்படுத்திக் கொள்ளும் திட்டங்களையும் தமிழ்நாடு அரசு நிறைவேற்றி வருகிறது.

விழைபணி மையங்கள் ஆங்காங்கே தொடங்கப்பட்டு, புகைப்படக் கலை, பொறியியல் கலை ஆகியற்றில் இளைஞர்கள் திசை திரும்பச் செய்துள்ள மையங்களில் கடலூர், திருச்சிராப்பள்ளி ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

நாட்டு நலப்பணித் திட்டம் என்ற அமைப்பின் கீழ் பல்கலைக் கழக மாணவர்களும், மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வந்துள்ளனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தொடங்கி வைத்த இத்திட்டத்தின் கீழ் ஒரே நாளில் சென்னை நகர்ப்பகுதியில் மட்டும் பல் கலைக் கழக மாணவ, மாணவியர் 10,000 தென்னம் பிள்ளைகளை நட்டுப் பேணி வளர்க்கின்றனர்.

நேரு இளைஞர் மையங்கள் பல மைய அரசு உதவியுடன் மாநில அரசு மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. இளைஞர்களை நல்லாற்றுப்படுத்தும் இந்த மையங்களின் முதலாவது மாநில மாநாடு சென்ற ஆண்டு உதகமண்டலத்தில் நடைபெற்றது.

## ஊரக விளையாட்டு மையங்கள்

நாட்டுப்புற இளைஞர்களுக்கு விளையாட்டில் சிறந்த பயிற்சி அளிக்கும் நோக்கோடு தமிழ்நாடெங்கிலும் ஊரக விளையாட்டு மையங்கள் இயங்கி வருகின்றன.

ஒன்றிய அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு முதலமைச்சர் பெயரால் சுழல் வெற்றிக் கேடயங்கள் வெற்றி வீரர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

பண்ருட்டியை அடுத்த வல்லம் கிராமத்தில் தமிழ்நாடு அரசு நிதி உதவியால் இதற்கென கட்டப்பட்ட சிக்கன விளையாட்டு அரங்கக் கட்டடத்தை மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் திறந்துவைத்தார்.

சென்னை பெரியார் சாலையில் விளையாட்டுக் கூட்டரங்கம் ஒன்று உருவாகி வருகிறது.

பத்துப் பள்ளி விளையாட்டுப் போட்டி, வெளிநாட்டுக்குப் போட்டியிடச் செல்லும் விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவி, விளையாட்டு மன்றங்களுக்கு நிதி உதவி, தீரச் செயல்கள் புரிவோருக்கு நிதி உதவி, அகத்தியர் ஆராய்ச்சியில் ஈடுபடும் இளைஞர்களுக்கு உதவி முதலான பல்வேறு திட்டங்களையும் இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறை நிறைவேற்றி வருகிறது.

இந்த வகையில் அளிக்கப்படும் அரசின் நிதி உதவி 1979-ல் [illegible] இலட்சம் ரூபாயாக இருந்தது. நான்கு ஆண்டுகளில் 160 லட்சம் ரூபாய் என்ற முறையில் 10 மடங்காகப் பெருகியுள்ளது குறிப்பிடத்தக்கது.



# போக்குவரத்துத்துறைப் பணிகள்

**1939** ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டம் 1974-ஆம் ஆண்டு தமிழ்நாட்டு மோட்டார் வாகன வரிவிதிப்புச் சட்டம் ஆகியவற்றை நிர்வகிப்பதே போக்குவரத்துத் துறையின் முக்கிய செயல்களாகும்.

இத்துறையில் வருவாய் இயக்கு ஊர்திகளின் மீது விதிக்கப்படும் வரியினாலும் கட்டணங்களினாலும் பெறப்படுகிறது. 1980 லிருந்து 1983 க்குள் 936 இலட்ச ரூபாய் அதிக வருவாய் கிட்டியுள்ளது.

### இயக்கு ஊர்திகளின் வளர்ச்சி

ஒவ்வொரு ரக இயங்கு ஊர்திகளின் எண்ணிக்கையில் கூடுதல் மற்றும் இயக்கு ஊர்தித் துறையில் ஒட்டு மொத்த வளர்ச்சி ஆகியவை மிக நல்ல முறையில் ஓங்கியுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் 1832 பேருந்துகள், 6219 ஒப்பந்த ஊர்திகள், 9557 பொதுச் சரக்கு ஊர்திகள், 195 தனியார் சரக்கு ஊர்திகள், 1695 அனுமதி வேண்டா சரக்கு ஊர்திகள், 3637 பிற போக்குவரத்து ஊர்திகள், 1,14,252 போக்குவரத்துக்கல்லா ஊர்திகள் ஆகியவை அதிகரித்துள்ளன.

### பயணிப் போக்குவரத்து

பயணம் மேற்கொள்ளும் மக்களுக்குத் தகுந்த ஊர்தி வசதிகள் கிடைக்கும் பொருட்டு, அனுமதி எண்ணிக்கைகளை அதிகரித்தோ அன்றி புதிய வழித்தடங்களை தொடக்குவதிலோ அரசு செயல்படுகிறது. பொதுத்துறையிலும் தனியார் துறையினும் பேருந்து அனுமதிகள் 7064 லிருந்து 8058-க்கும், 4243 லிருந்து 5081-க்கும் கூடியுள்ளன. 1980-ல் 6754 ஆக இருந்த பேருந்து வழித்தடங்கள் 1982-ல் 7971 ஆக உயர்ந்தது.

### சரக்குப் போக்குவரத்து

சரக்கு ஊர்திகளுக்கு நாடு முழுமைக்கும் ஓட வசதியான அனுமதிகள் தங்கு தடையின்றி வழங்கப்படுகின்றன. மாநிலங்களுக்கிடையே சரக்குப் போக்குவரத்தை மேம்படுத்த, அனுமதிகளுக்கு மேற்சாத்து வழங்குதல், தேசிய அனுமதிகளையும் மண்டல அனுமதிகளையும் சரக்கு ஊர்திகளுக்கு வழங்குதல் ஆகியவை செயற்படுத்தப்படுகின்றன. 9.6.80 முதல் இன்றுவரை, கர்நாடகாவின் பொதுச்சரக்கு ஊர்திகள் 300க்கு மாற்றுக் கைச்சாத்தும், கேரளாவின் 500 பொதுச் சரக்கு ஊர்திகளுக்கு மாற்றுக் கைச்சாத்தும், புது மண்டல அனுமதிகள் 400-ம், புது தேசிய அனுமதிகள் 800ம் வழங்கப்பட்டன.

### புதிய கொள்கைகளும், திட்டங்களும்.

அ) வாடகைச் சிருந்து மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்களின் கட்டண மீட்டர்களின் செய்யப்படும் தவறுகளைத் தடுத்து நிறுத்த வேண்டி, பதிவு பெற்ற மீட்டர் பொறியாளரால் தகுந்தபடி ஆய்வு செய்யப்பட்டு, முத்திரையிட்ட மீட்டர்ப் பொறிகளையே பொருத்த வேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது.

ஆ) சென்னை நகரில் ஆட்டோரிக்ஷா மற்றும் வாடகைச் சிருந்துகளில் உள்ள மீட்டர் பொறிகளில் தில்லுமுல்லுகள் செய்வதைத் தடுக்க போக்குவரத்துத் துறை மற்றும் காவல் துறையதிகாரிகளைக் கொண்ட ஆய்வுப் படைகள் ஏற்படுத்தி குற்றமிழைப்போரைக் கண்டு பிடிக்கும் செயல்முறைத் திட்டம் வடிவமைக்கப்பட்டது.

இ) தமிழ்நாட்டில் ஊரகப் பகுதியில் உள்ள கிராமத்தினர் சரக்குகளை விற்கவோ வாங்கவோ சந்தைக்கு எடுத்துச்செல்ல வசதியாக இருக்கும் பொருட்டு, பயணிச் சரக்கு ஊர்திகளை விட அரசினால் திட்டம் மேற்கொள்ளப்பட்டுளளது. அரசுப்போக்குவரத்து நிறுவனங்கள் மேற்கூறிய பயணிச் சரக்குப் பேருந்துகளை இயக்க ஆரம்பித்துவிட்டன.

ஈ) சிறப்பான நிர்வாக வசதிக்காக பெரிய மற்றும் அதிக அளவில் இயக்கு ஊர்திகள் உள்ள மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்க கருத்துரு உள்ளது.

உ) சாதாரணப் பேருந்துகளும், சிறு பேருந்துகளும் செல்ல முடியாத தொலை தூரப்பட்ட தொட்டிகள், ஆதி திராவிடர் குடியிருப்புகள் போன்ற பேருந்து வசதியற்ற இடங்களுக்குப்போக்குவரத்து வசதி செய்ய உழுவை இழப்புத் தொடர் பேருந்துகளை விட அரசு ஆணையிட்டிருக்கிறது.

ஊ) மொத்தம் 15.75 மீட்டர் நீளமும் 94 பயணிகளை ஏற்றிச் செல்ல வசதியாகவும் உள்ள ஒரு தனி மாதிரியான தொடர் பேருந்துகளை சென்னை நகரில் அரசு விட்டுள்ளது.

எ) குளிர் பதனமும், தூங்கு வசதியும் கொண்ட 16 படுக்கைகளைக் கொண்ட பேருந்து ஒன்றை சென்னை - ஈரோடு வழித்தடத்தில் அரசு விட்டிருக்கிறது. முதல் வகுப்பு இரயில் கட்டணத்தை விட இப்பேருந்தில் கட்டணம் குறைவு.


## கைவினைப் பொருட்கள் வாங்கச் சிறந்த இடம்—
## பூம்புகார்

ஏன்?

- சரியான விலை: பூம்புகார் ஓர் அரசு நிறுவனம். எனவே நிர்ணயிக்கப்பட்ட சரியான விலையில் மட்டுமே கைவினைப் பொருட்கள் விற்கப் படுகின்றன. அதிக விலை கிடையாது.
- வித விதமான ரகங்கள்: அலங்காரப் பொருட்களும் அன்றாட உபயோகத் திற்கான பொருட்களும் விதவிதமான ரகங்களில் விற்கப்படுகின்றன.
- இந்தியாவிலேயே அதிக விற்பனை நிலையங்கள் கொண்ட நிறுவனம்.

**பூம்புகார்**

கைநுட்பக் கலைத்திறன் பொருட்கள் களஞ்சியம்

- 818, அண்ணா சாலை, சென்னை 600 002.
- 104/105, பிரிகேட் ரோடு, பெங்களூர் 560 001.
- பம்பாய் • புதுடில்லி • மற்றும் இதர தமிழக நகரங்களில்

தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி இணையகம் (ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)



DIPR/2393/82/29

ADWAVE/THDC/2210

தமிழ்நாடு அரசு

வாய்மையே வெல்லும்

MADRAS METROPOLITAN WATER SUPPLY AND SEWERAGE BOARD

METRO WATER

# சென்னை மக்களுக்கு குடிநீர் கிடைக்க தமிழ்நாடு அரசு மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியத்தின் திறன்மிகு ஆக்கப் பணிகள்!

**கடந்த மூன்று ஆண்டுகளாக சேர்ந்தாற்போல் வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் சென்னை நகருக்கு நீர்வழங்கும் நீர்த் தேக்கங்களில் நீரின் அளவு குறைந்துள்ளது. எனவே, தமிழ்நாடு அரசும், குடிநீர் வாரியமும் சென்னை நகருக்கு குடிநீர் வழங்க கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.**

- சென்னை நகர் குடிநீர் விநியோகத்திற்காக சோழவரம் மற்றும் செங்குன்றம் ஏரிகளில் உள்ள நீரைக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- தாமரைப்பாக்கம், பஞ்சட்டி பகுதியிலுள்ள நிலத்தடி நீரை சென்னைக்குக் கொண்டுவர மேலும் பல ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.
- சென்னை நகரில் 10000க்கும் மேற்பட்ட குழாய்க் கிணறுகள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன.
- நாள்தோறும் 1200க்கும் மேற்பட்ட நீர்த்தொட்டிகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.
- குடிநீர் தேவையான அளவு கிடைப்பதற்காக மேலும் குழாய்க் கிணறுகள் நிறுவுதலும் நீர்த்தொட்டிகள் அமைத்தலும் தொடர்கின்றன.

*குழாய் நீரை குடிப்பதற்கும் சமையலுக்கும் மட்டுமே பயன்படுத்துங்கள்.*
*மற்ற தேவைகளுக்கு கிணற்று நீரை உபயோகியுங்கள்.*
*அரசு மற்றும் குடிநீர் வாரியத்திற்கு ஒத்துழைப்பு தாருங்கள்.*



பொதுமக்களின் குடிநீர் தேவைக்கான ஆழ்கிணறு கைப்பம்புகள்



சோழவரம் ஏரிநீரை பம்புசெட் மூலம் சென்னைக்கு கொண்டுவருதல்



நீர்த்தொட்டிகளுக்கு லாரிகள் மூலம் நீர் நிரப்புதல்



நிலத்தடி நீரை வெளியே கொண்டுவர ஆழ்துளைக் கிணறுகள்



# சிறப்புக்குரிய சென்னை மாநகராட்சி

கடந்த மூன்றாண்டுகளில் சென்னை மாநகராட்சி கல்வி, நல்வாழ்வு, மலேரியா ஒழிப்பு, துப்புரவுப் பணி, சாலைப் பராமரிப்பு, சாலை விளக்குப் பராமரிப்பு, வருவாய்ப் பெருக்கம், மழைநீர் வடிகால் வட்டம், நிதி நிர்வாகம் முதலிய பல்வேறு துறைகளில் திட்டமிட்ட சாதனைகள் புரிந்திருக்கிறது.

## கல்வித் துறை

ஆண்டுக்கு 8.25 கோடி கல்விக்காகச் செலவு செய்யப்படுகிறது. இம்மூன்றாண்டுக் கால எல்லையுள் 7 புதிய உயர்நிலைப்பள்ளிகள் திறக்கப்பட்டு 28 ஆக இருந்த உயர்நிலைப்பள்ளிகள் தற்பொழுது 35 ஆக வளர்ந்துள்ளன. இவற்றுள் 10 மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. 200 ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டனர். வாடகைக் கட்டடங்களில் இருந்த 15 பள்ளிகள் சொந்தக் கட்டடங்களுக்கு மாறின.

## சத்துணவுத் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டம் 336 மையங்களில், 347 பள்ளிகளைச் சேர்ந்த இலட்சத்து இருநூற்று ஐம்பத்தைந்து மாணவர்களுக்கு விரிவாக்கப்பட்டது. இதற்கு முன் 60,000 மாணவர்களே உணவு பெற்று வந்தனர். மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கெனப் பல்வகை நோய்க் கண்டுபிடிப்பு முகாம்கள் தன்னியக்கத் தொண்டு நிறுவனங்களின் துணையுடன் நடத்தப்பட்டன. கடந்த ஓராண்டில் 50,000 மாணவர்கள் இதனால் பயன்பெற்றனர்.

மாநகராட்சி 2 முதல் 4 வயது வரை உள்ள சிறார்களுக்காக மதிய சத்துணவுக் கூடங்களை சமூக நலத்துறையினருக்காக 2 மாதங்களுக்குள் மின்னல் வேகத்தில் கட்டிமுடித்தது. ஒவ்வொரு கூடமும் 100 குழந்தைகளுக்கானவை. இரண்டு முதல் நான்கு வயது வரையுள்ள குழந்தைகளுக்கு நோய்த்தடுப்பு ஊசி போடும் திட்டத்திற்கு ரூ.3.50 இலட்சம் செலவிடப்பட்டது. மருத்துவத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட முகாம்களுக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்ல மாநகராட்சி வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டத்தில் உள்ள குழந்தைகளனைவரும் இதனால் பயன்பெற்றனர்.

## நல்வாழ்வுத்துறை

1971-76 ஆண்டுகளில் சராசரி 16,000 குடும்ப நல அறுவைச் சிகிச்சைகளே செய்யப்பட்டு வந்தன. 1980-81ல் 20,000 ஆக இருந்த இத்தொகை அடுத்த ஆண்டு 26,000 ஆக உயர்ந்தது. 1982-83ல் இத்தொகை 30,000-க்கு உயர்ந்தது. மாநகராட்சியே 4 மகப்பேறு பின்பணித்திட்ட நிலையங்களை ஏற்படுத்தி உள்ளது. இங்கு ஆண், பெண் இருபாலர்களுக்காகக் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்ய வசதிகள் உள்ளன. ஏற்கெனவே வடபழனியில் உள்ள நிலையம் செயல்படத் துவங்கிவிட்டது.

சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களுக்காக மாநகராட்சி 70 மருந்தகங்களையும், 40 குழந்தை நல மையங்களையும், 32 குடும்ப நல மையங்களையும், இரண்டு உடலுருக்கி சிகிச்சை விடுதிகளையும், இரண்டு தோல் நோய் சிகிச்சை விடுதிகளையும், உலகப் புகழ் பெற்ற தொற்றுநோய் மருத்துவ மனையையும் நடத்தி வருகிறது. கடந்த ஆண்டுகளில் 20 இலட்சம் ரூபாய் பெறுமான மருந்துகளே செலவாயின. இப்போது ரூ.30 இலட்சமாக உயர்ந்துள்ளது.

வாடகைக் கட்டடங்களில் உள்ள மருந்தகங்களைச் சொந்தக் கட்டடங்களுக்கு மாற்றும் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படுகிறது. இந்த வகையில் இக்கால கட்டத்திற்குள் ரூ.25 இலட்சம் செலவில் 69 புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. தொற்று நோய் மருத்துவ மனையில் ரூ.5 இலட்சம் செலவில் குருதிக்குழாய் வழி செலுத்தும் உவர் நீர் சொட்டு மருந்து தயாரிக்கும் குளிர் பதன ஆய்வுக்கூடம் கட்டப்பட்டுள்ளது.

## மலேரியா ஒழிப்பு

1980-லிருந்து மலேரியா ஒழிப்புக்கெனத் தனிப்பிரிவு அமைக்கப்பட்டது. சென்னை மாநகர் 7 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு உதவி மருத்துவ அலுவலரின் கீழ் இயங்குகிறது. அவர் மேற்பார்வையில் மலேரியாவைக் கட்டுப்படுத்த ஒருகுழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 66 நோய் சிகிச்சை கூடங்களும் 25 தீவிரக் கண்காணிப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டு மலேரியாவை விரட்டப் பாடுபடுகின்றது மாநகராட்சி. இதற்கெனத் தமிழ்நாடு அரசு ரூ. 25 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

* ஒழுக்கம் என்பது உயர்வானதுதான். ஆனால் அந்த வார்த்தை பாமர மக்களை ஏமாற்றி வாழப் பயன்படுத்தப்படும் சூழ்ச்சி ஆயுதமாகி விடக்கூடாது!



## துப்புரவுப் பணி

இரவு நேரத் துப்புரவுப் பணி முதன்முதலாக 1979-இல் அறிமுகப்படுத்தப் பட்டது. காமராஜர், இராஜாஜி சாலைகளில் வானொலி நிலையம் முதல் ரிசர்வ் வங்கி வரையுள்ள பகுதி தூய்மைப் பகுதியாக்கப்பட்டது. இங்கு தீவிரத் துப்புரவு நடைபெறுகிறது. கோட்டூர்புரத்திலும் தேனாம்பேட்டையிலும் வாளிகள் மூலம் குப்பையை நேரடியாகக் குப்பை வண்டியில் கொட்டும் திட்டம் 1981 - இல் சோதனை அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது.



இது நாள் வரை அரசுக்கோ அல்லது தனியாருக்கோ சொந்தமான எந்த குடிசைப் பகுதிக்குள்ளும் நுழைந்து மாநகராட்சி குப்பை அள்ளியதில்லை. குடிசைப் பகுதிக்கு அண்மையில் உள்ள சாலைகளில் ஒதுக்கப்படும் குப்பைகளையே அள்ளி வந்தது. பணியாளர்களை நியமித்து 150 இடங்களில் குடிசைப் பகுதிகளுக்குள்ளும் துப்புரவுப் பணி செய்ய முற்பட்டுள்ளது. இது படிப்படியாக அனைத்துக் குடிசைப் பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும். திடக்கழிவுகளைக் கையாள்வதில் துப்புரவு மேம்பாட்டிற்கும் குப்பைகளை அழிக்கவும் ஆய்வறிஞர்களை மாநகராட்சி நாடியிருக்கிறது. இதற்காக் மாநகராட்சி ரூ.383 இலட்சம் செலவழிக்கிறது. 150 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட இயந்திரத் தொழு உரச் சாலையையும் முதன்முறையாக ரூ.90 இலட்சம் செலவில் உருவாக்கி வருகிறது.

இப்போது இருக்கும் லாரிகளோடு 40 புதிய லாரிகள் சென்னை மாநகராட்சியால் வாங்கப்பட்டு துப்புரவுப் பணி தீவிரமாக்கப்பட்டுள்ளது. உரிய காலத்தில் துப்புரவுப் பணி முழுமையும் மேலும் செம்மைப்படுத்தப்படும். முன்புற அள்ளி, புல்டோசர் போன்ற நவீன எந்திரக் கருவிகள் துப்புரவு மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. குப்பை கழிக்கும் மேடைகளிலிருந்து குப்பையடிக்கும் இடங்களுக்குக் குப்பையை அள்ளிச் செல்லத் தனியார் ஒப்பந்த முறையில் நகரின் ஒரு பகுதியில் சோதனைத் திட்டம் செயல்பட்டு வருகிறது: 200 கழிப்பறைகள் இக்கால கட்டத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன. நவீன வசதிகள் உள்ள 9 கட்டணக் கழிப்பறைகள் நகரின் மையப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ளன.

## சாலைப் பராமரிப்பு

ஐந்தாண்டுக்காலமாக அரசின் உதவியால் சாலைப் பராமரிப்புச் செலவு கூடி வருகிறது. சராசரி ரூ 2 கோடியிலிருந்து ரூ 5 கோடி வரை அரசின் உதவி பெருகியுள்ளது. 1979-81 ஆண்டுகளில் 47 பஸ் வழித் தடங்கள் ரூ.3.5 கோடி செலவில் சுடு தார்க் கலவையால் எந்திரப் பாவுக் கருவி மூலம் போடப்பட்டது. 1981இல் இம்முறையில் 2 சாலைகள் போடப்பட்டன. இம்முறையில் போடப்படும் சாலைகள் 10 ஆண்டுக் காலம் பழுதின்றி இருக்கும்.

1977லிருந்து சாலைகளின் ஓரங்களில் மரம் நடுவதை மாநகராட்சி மேற்கொண்டது. கடந்த 3 ஆண்டுகளில் 21,000 மரக்கன்றுகள் இவ்வாறு நடப்பட்டன. 1979-இல் முதன்முதலாக அரசு மாநகராட்சிக்கு ரூ.150 லட்சம் சுழல்நிதியை 400க்கும் மேற்பட்ட தனியார் தெருக்களின் வளர்ச்சிக்கென அளித்தது. இத்திட்டப்படி தனியார்த் தெருக்கள் ஆரம்ப காலத்தில் அவற்றுக்காகும் செலவில் 50 சதவிதத்தையும், பின் 25 சதவிதத்தையும் முன்பணமாகப் பெற்று தனியார் தெருக்களுக்கு வசதிகள் செய்து கொடுத்தது. மீதிப் பணத்தை 6 அரையாண்டுத் தவணைகளில் பெற்றுக் கொண்டது. கடந்த இரு ஆண்டுகளாக மாநகராட்சி 140 தனியார் தெருக்களுக்கு இத்திட்டத்தின் கீழ் வசதிகள் செய்துள்ளது.

## சாலை விளக்குகள்

1971 முதல் 1977 வரை 3800 மின் விளக்குகளே போடப்பட்டன. ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் 7,700 மின் விளக்குகள் போடப்பட்டுள்ளன. இவற்றுள் 2,500 விளக்கு

கள் குடிசைப் பகுதிகளில் மட்டும் போடப்பட்டுள்ளன. முதன் முறையாக 1,100 சக்தி சேமிக்கும் சோடியம் ஆவி விளக்குகள் நகரின் முக்கியச் சாலைகளிலும் போக்குவரத்து நெரிசல்கள் மிக்க பகுதிகளிலும் இக்கால கட்டத்தில் தான் போடப்பட்டன. இக்கால கட்டத்தில் 20 வாட் சக்தியுள்ள 2 அடி நீளமுடைய சுமார் 10,000 குழல் விளக்குகள் 40 வாட் சக்தியுள்ள 4 அடி நீளமுள்ள குழல் விளக்குகளாக மாற்றப்பட்டன. ஜார்ஜ்டவுன், திருவல்லிக்கேணி, பெரம்பூர் முதலிய பகுதிகளில் முதன் முறையாக பழைய கேபிள்கள் மாற்றப்பட்டன. இவ்வாறு சென்னை மாநகர் ஒளி நகராக்கப்பட்டது.

### வருவாய்த்துறை

முதன் முறையாக வருவாய்த்துறை நகரில் பரவலாக 200 கிளைகளைக் கொண்ட 3 தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கி மூலம் வரிசெலுத்தும் திட்டத்தைச் செயல்படுத்தியது. இதனால் உரிமையாளர்கள் தங்கள் வீடு இருக்கும் வட்டாரங்களிலேயே சுலபமாக வரி கட்ட முடிந்தது. வீட்டுவரி, தொழில்வரி முதலிய இனங்களில் வசூலாகும் தொகை ரூ 10 கோடியிலிருந்து ரூ 15 கோடியாக உயர்ந்தது.

### மழைநீர் வடிகால் வட்டம்

சென்னையில் ஏற்படும்வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்த 1979 இல் புதிதாக மழைநீர் வடிகால் வட்டம் அமைக்கப்பட்டது. இதுகாறும் ரூ.226 இலட்சம் செலவில் 29 கி.மீ. தூரத்திற்கு வடிகால்கள் கட்டப்பட்டன. புதிதாக இணைக்கப்பட்ட புறநகர்ப் பகுதிகளும் சேர்ந்த சென்னை நகர்க்கு 548 கி.மீ. நீளத்திற்கு ரூ.67.18 கோடி செலவில் மழைநீர் வடிகால் கட்ட ஒரு சிறப்புத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. 175 கி.மீட்டருக்கு ரூ.14 கோடியில் மழைநீர் வடிகால் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

### கட்டடம் கட்ட அனுமதி

பொதுமக்களுக்கு உதவும் பொருட்டு அலுவலர்கள் வசிக்கும் பகுதியிலேயே கட்டடம் கட்ட அனுமதி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 5 கோட்டங்களடங்கிய யூனிட் அலுவலகங்களில் (மொத்தம் 30 யூனிட் அலுவலகங்கள்) அனுமதி வழங்கப்படுகிறது. இத்திட்டம் செம்மையாகச் செயல்படுகிறது.



முதன் முறையாக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்ற பொது நிறுவனங்கள் சாலைத் திட்டப் பராமரிப்பை ஏற்று அலங்கார நீரூற்றுகளை அமைத்து நகரின் எழிலைக் கூட்டி வருகின்றன.

1980 இல் ஏற்படுத்தப்பட்ட போக்குவரத்துக்குழு சிறப்பான முறையில் சாலை ஓரங்கள், மையக்கற்கள், போக்குவரத்துக் குறிகள் இவற்றை ஏற்படுத்தி சாலைப்போக்குவரத்தை ஒழுங்குபடுத்துகிறது.

### பிற மாநிலப் பணிகள்

தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.10,500 நிதி வழங்க குழு இன்சூரன்ஸ் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் குடியிருப்புகளில் குடியிருக்கும் பலவகைப் பணியாளர்களுக்கும் அவற்றில் குடியிருப்போருக்கு அதன் அடக்க விலை வசூலானதும் கொடுத்துவிடுகிறது. மாநகராட்சியின் சொந்த நிலத்தில் குடியேறிய ஆதி ஆந்திர மக்களுக்கு அந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுத்துள்ளது மாநகராட்சி.

### நிதி நிர்வாகம்

சென்னை மாநகர் நாளாவட்டத்தில் பெருகி வளர்ந்துள்ளது. எனவே, இதன் நிதி நிலையைப் பெருக்க நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவும் அரசு தனிக்கவனம் செலுத்துகிறது. மாநகராட்சியின் நிர்வாகத் திறனைச் செம்மைப்படுத்த தலைமைப் பொறியாளர் அலுவலகம், நிதி மேலாண்மைக்குழு, போக்குவரத்துப் பொறியாளர் குழு, சட்டக் குழு, மக்கள் தொடர்பு அலுவலகம், மழைநீர் வடிகால் வட்டம் முதலியவற்றை ஏற்படுத்தியுள்ளது.

அரசு முதன் முதலாக நிதிநிர்வாக அறிவுரையாளர்களை ஏற்படுத்தி மாநகராட்சியின் கணக்கு வழக்குகளையும் நிதிநிர்வாகத்தையும் சீர்திருத்தியுள்ளது. இதன் மூலம் ஒரு புதிய கணக்கு வழக்குத் திட்டத்திற்கான வடிவமைப்பும் நடை முறைகளும் அனைத்து மாநகராட்சிப் பணியாளர்களுக்குப் பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளது. இப்புதிய கணக்கு வழக்குத் திட்டம் மாநகராட்சிக்கும் வரி செலுத்துவோருக்கும் மாநகராட்சியின் நிதி நிலையை முழுமையாகத் தெரிவிப்பதுடன் பல்வேறு செயல்திட்டங்களையும் கண்காணிக்க உதவும். முதன் முறையாக இத்திட்டம் மாநகராட்சியின் சொத்துக்களையும் கடன் பொறுப்புகளையும் விளக்கமாகக் காட்டும்.

1981ஆம் ஆண்டிலிருந்து மாநகராட்சியின் வருவாயை உயர்த்த அரசு விற்பனை வரியின் மேல் தீர்வை விதித்து மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிக்கு அதை வழங்கி உதவி வருகிறது. 1981-82ஆம் ஆண்டில் இதன் மூலம் மாநகராட்சி ரூ.2.90 கோடி நிதி பெற்றது. 1982-83இல் இது 4 கோடியாக உயர்த்தப்பட்டது. மேலும் மானியம் மற்றும் கடன்கள் வழங்கு திட்டங்களின் மூலம் 5 கோடி ரூபாயையும் வழங்கியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் மாநகராட்சிக்கான அரசின் நிதி உதவி கணிசமாக அதிகரித்துள்ளது.

சுருங்கச் சொன்னால், மாநகராட்சி இக்காலக் கட்டத்தில் அரசின் உதவியோடு பல்வேறு சாதனைகளைப் பாராட்டும்படி நிகழ்த்தியுள்ளது.


now

THE ORDER IS THE PROOF!
Whether Atomic Power Stations or Thermal Power Stations, you can rely on
TELETHERM

Over 500 Neon Plasma Indicators ordered by Babha Atomic Research Centre for Narora Atomic Power Station, U.P.

*A MAJOR BREAKTHROUGH FOR TELETHERM as well as ATOMIC POWER STATIONS*



The proof of the pudding is in the eating, they say. In the case of Neon Plasma Indicators, where accuracy and reliability are two vital factors, it is "Open Sesame" with TELETHERM.

TELETHERM has now come up with a bulk order from Narora Atomic Power Station. Invincible proof of their total capability to deliver the goods in this highly sophisticated field.

Need we say more...

We shall. Now about the product—

- Unaffected by vibration and seismic tremors
- Inputs directly from RTD or thermocouple and 4 to 20 ma transducers.
- 0 to 2 volts analogue output for data logging
- Opto-electronic high, low alarms with optional visual annunciation facility.
- Huge savings on spare parts inventory and panel costs.
- Two years guarantee

teletherm
INSTRUMENT CO. PVT. LTD
"Jammi Buildings" 60 R.H. Road, Madras 600 004.
Phone - Office: 73627. Works 433649. Grams: DIGITHERM




# சிறுரகத் தொழில்களுக்கு நிதி முதலீடு

மாநில அளவில் நிதி உதவி அளிக்கும் நிறுவனங்களில் முதல் நிறுவனமாகத் தமிழ் நாடு தொழில் முதலீட்டுக்கழகம் 1949-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

வளரும் தொழில்களுக்கு முதலீடு செய்வது கடினம் என எண்ணியிருந்த காலத்தில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் பல தொழில்களுக்குத் தாராளமாக உதவி செய்துள்ளது. இக்கழகம் தக்க சமயத்தில் உதவி செய்தால்தான் பல நூல் ஆலைகளும், பல பெரிய தொழிற்கூடங்களும் இம்மாநிலத்தில் இன்று ஏற்பட்டுள்ளன.

முந்திய ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் கடந்த மூன்று ஆண்டுகளில் இக்கழகத்தின் செயலாக்கம் போற்றத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.

## சிறு தொழில்களுக்கு நிதியுதவி

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் செயலாக்கங்களில் முக்கிய அம்சம், இம்மாநிலத்தில் சிறு தொழில்களுக்கு அளித்த கடனுதவியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமாகும். 1979-80ஆம் ஆண்டிற்கு முன்னர் வரை சிறு தொழில்களுக்கு அளித்த கடனுதவி இக்கழகம் அளித்த மொத்தக் கடனுதவியில் ௰0 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக இக்கடனுதவி 85 சதவீதத்திற்கும் மேலாக உயர்ந்துள்ளது. 1982-83ஆம் ஆண்டிற்கான இக்கழகத்தின் மொத்த கடனுதவியில், சிறு தொழில்களுக்காக ரூ.48.68 கோடியை இக்கழகம் கடனுதவியாக அளித்துள்ளது.

இது இவ்வாண்டிற்கான இக்கழகத்தின் மொத்தக் கடனுதவியில் 87 சதவீதமாகும்.

## பின் தங்கிய பகுதிகளுக்குக் கடனுதவி

இக்கழகம் பின்தங்கிய பகுதிகளில் தொழில் முன்னேற்றத்திற்குக் கடனுதவியளிப்பதிலும் முக்கியத்துவம் கொடுக்கிறது. இங்குள்ள தொழில் நிறுவனங்களுக்குக் கடனுதவி அளிப்பதில் முன்னுரிமையும், வட்டி வீதத்தில் சலுகைகளும் அளிக்கப்படுகின்றன. 1982-83ஆம் ஆண்டில் இக்கழகம் பின்தங்கிய பகுதிகளில் 1447 நிறுவனங்களுக்கு மாநில அரசின் ஒப்பளிக்கும் தொகையையும் சேர்த்து ( Subsidy ) ரூ. 21.42 கோடி கடனுதவி அளித்துள்ளது. இது இக்கழகத்தின் இவ்வாண்டு மொத்தக் கடனுதவியில் 38.28 சதவிதமாகும்.

இம்மாநிலத்தில் நிலவி வரும் மின் பற்றாக் குறையைக் கருதி, தக்க சமயத்தில், தொழில் நிறுவனங்களுக்கு மின் உற்பத்தி இயந்திரங்கள் வாங்குவதற்கு, இக்கழகம் மிகக் குறுகிய கால அளவில் (5 முதல் 10 தினங்களுக்குள்) கடன் உதவி அளித்துள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் கடந்த மூன்று மாதங்களில் 676 நிறுவனங்களுக்கு மின் உற்பத்தி இயந்திரங்கள் வாங்குவதற்கு ரூ.4.59 கோடி கடன் உதவி அளித்துள்ளது. ஆரம்ப காலத்திலிருந்து கடந்த ஆண்டுவரை மின் உற்பத்தி இயந்திரங்கள் வாங்குவதற்கு அளித்த கடனுதவியை (206 நிறுவனங்களுக்கு ரூ 388.00 இலட்சம்) விட அதிகமாகும்.

இக்கழகம் பெருமளவில் வேலை வாய்ப்பினை உருவாக்கும், 'போக்குவரத்து உரிமையாளருக்கு உதவி', 'தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கு உதவி' போன்ற சில புதிய திட்டங்கள் மூலம் பெருமளவு கடனுதவி அளிக்கிறது. 'போக்குவரத்து உரிமையாளருக்கு உதவி' என்ற திட்டத்தில் சொந்ததில வாகனம் ஓட்டுபவர்களுக்கு, லாரி, டிரக்கு, டாக்ஸி, டெம்போ, வேன் போன்றவைகள் வாங்குவதற்கு இக்கழகம் கடனுதவி அளிக்கிறது. 1982-83 ஆம் ஆண்டு இக்கழகம் 922 நபர்களுக்கு ரூ. 939.49 இலட்சம் கடனுதவி அளித்துள்ளது.

இது கடந்த ஆண்டு இத்திட்டத்தில் கடனுதவி அளித்த ரூ. 790.97 இலட்சத்தை விட அதிகமாகும். இதில் ரூ 498.71 இலட்சம் 242 லாரிகள் வாங்கவும், ரூ 440.78 இலட்சம் 680 சிறு வாகனங்கள் (டெம்போ, டாக்ஸி, வேன்) வாங்கவும் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. இதுபோல் தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கு உதவி, என்ற திட்டத்தில் 1982-83 ஆம் ஆண்டில் ரூ 121.07 இலட்சம் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டு அளித்த ரூ 103.13 இலட்சத்தைவிட அதிகமாகும். இத்திட்டத்தின் கீழ் உதவியளித்தலில் குறைந்த அளவு காப்புத் தொகையும் கடன்வாங்குவோர் கொண்டுவரவேண்டிய நிதியில் குறைப்பு போன்ற சலுகைகள் தரப்படுகின்றன. இக்கழகம் இத்திட்டத்தில் எளிய நிபந்தனையில் 1 சதவீத வட்டியில் கடனுதவியளிக்கிறது.

சிறிய மற்றும் சின்னஞ்சிறிய தொழில்கள் முன்னேற்றத்திற்காக இக்கழகம் எடுத்துக் கொண்ட சிறப்பு முயற்சியின் பயனாகக் கடந்த மூன்று ஆண்டுகளில் 1,24,000 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. இக்கழகத்தால் அளிக்கப்பட்ட நிதியுதவி பெருமளவில் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## அதிகாரத்தைப் பரவலாக்குதல்

சிறிய தொழில்களுக்கு உதவி நிதியுதவி மாநில அளவிலேயே அளிப்பதற்கு ஏதுவாக இக்கழகம் சென்ற ஆண்டு அந்தந்த மாநில மற்றும் மண்டல அலுவலகங்களுக்கு நிதியுதவி அளிக்கவும், பத்திரங்கள் பதிவு செய்யவும், பணம் விநியோகிக்கவும் அதிகாரம் அளித்துள்ளது.

தற்போது இக்கழகத்தின் 13 கிளை அலுவலகங்கள் மாவட்டத் தலைநகரங்களில் செயலாற்றி வருகின்றன. இவ்வலுவலகங்கள் ரூ.1 இலட்சம்வரை நிதியுதவிக்குஒப்புதலளிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கழகத்தின் மண்டல அலுவலகங்கள் சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் செயலாற்றி வருகின்றன. இவ்வலுவலகங்கள் ரூ 2.50 இலட்சம் வரை நிதியுதவிக்கு ஒப்புதல் அளிக்கிறது.

மேலும், கிளை அலுவலகங்கள் ரூ 7.50 இலட்சம் வரை நிதி விநியோகம்செய்யவும், பத்திரங்கள் பதிவு செய்யவும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஏற்பாடுகளின் மூலம் தொழில் வல்லுனர்கள் பிற மாவட்டங்களிலிருந்து சென்னையிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு வந்து கடனுதவி பெற வேண்டிய சிரமங்கள் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன.

மேலும், இக்கழகம் நிதியுதவியளித்தல் மட்டுமின்றித் தொழில் முன்னேற்றத்திற்காவும் பாடுபடுகிறது. தொழில் துவங்க முனைவோருக்கு வழிகாட்டும் பொருட்டு ஒரு அமைப்பு சென்னையில் ஏற்படுத்தப்பட்டு முதல் தர தலைமுறையினர் தொழில் நடத்த வழிகாட்டியாக விளங்கும்.

இவ்வாறு இக்கழகம் தமிழக அரசின் கொள்கைக்கு ஏற்ப பின்தங்கிய மாவட்டங்களில் அதிக அளவில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தவும், தொழில்கள் முன்னேறவும் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.



# வெற்றி பெற்ற திட்டங்கள்... திட்டமிட்டுள்ள வெற்றிகள்.

**தமிழ்நாட்டில் நடுத்தர மற்றும் பெருந் தொழில்களின் வளர்ச்சிக்காகப் பல திட்டங்களை நிறைவேற்றிவரும் சிப்காட், பல விதங்களிலும் தொழில் முனைவோரை ஊக்குவித்து, பெரும் அளவில் வெற்றி கண்டுள்ளது.**

**ஏப்ரல் 13, 1983வரை சிப்காட் தொழில் இணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 233 கோடியைத் தாண்டியுள்ளது.**

## சிப்காட்டின் சாதனைகளும், முன்னோடித் திட்டங்களும்:

● **ராணிப்பேட்டை தொழில் இணையம்:** 290 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த இணையத்தில் தற்போது உள்ள நடுத்தர மற்றும் பெருந்தொழிலகங்கள் 40; மேலும் 30 தொழிலகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இத்தொழில் இணையத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.100 கோடி. வேலை வாய்ப்பு பெற்றவர்கள் 9017 பேர்; இன்னும் 1700 பேருக்கு வேலை வாய்ப்பு உள்ளது.

● **ஓசூர் தொழில் இணையம்:** இங்கிலாந்தின் சிறு பதிப்பு என்று அழைக்கப்படும் இந்த இணையம் 490 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இப்போது இங்கே தேசியத் தொழில்களும், வெளிநாட்டுக் கூட்டுறவு கொண்ட தொழிலகங்களுமாக 50 தொழிலகங்கள் செயல் படுகின்றன; மேலும் 48 தொழிலகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வேலை வாய்ப்பு பெற்றவர்கள் 23,106; இன்னும் 1000 பேருக்கு வேலை வாய்ப்பு உள்ளது.

● **கும்மிடிப்பூண்டி தொழில் இணையம்:** சென்னைக்கு வெகு அருகில் புகைவண்டி மார்க்கத்தை ஒட்டி அமைந்துள்ள இந்த இணையம் 400 ஹெக்டேர் நிலப்பரப்பு கொண்டது. பொறியியல் தொழிலகங்களும் வாகனத் தொழிற்சாலைகளும் நிறுவ சாலச் சிறந்தது. தற்போது உள்ள தொழிலகங்கள் 18; அமைய இருப்பவை 137. இதுவரை வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் 1623பேர்; இன்னும் 10,000 பேருக்கு வேலை வாய்ப்பு உள்ளது.

● **கடலூர் தொழில் இணையம்:** ரசாயனத் தொழிற்சாலைகளுக்கும் மற்றும் தண்ணீர், மின்சாரம் ஆகியவை அதிகமாகத் தேவைப்படும் தொழிலகங்களுக்கும் உகந்தமையம். இரசாயனக் கழிவுநீரகற்றும் வசதியுடன் 200 ஹெக்டேர் நிலப்பரப்பில், கடலோரத்தில் அமைந்துள்ளது.

● **புதுக்கோட்டை தொழில் இணையம்:** பிற்பட்ட பகுதிகளின் விரைந்த முன்னேற்றத்தைக் கருதி, வளர்ச்சி மையத்தின் "கரு இணையம்" எனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. திருச்சி விமான நிலையத்திலிருந்து ஒரு மணிநேரப்பயணம். மின் அணு மற்றும் இலகுவான பொறியியல் தொழிலகங்களுக்கு மிக உகந்த இணையம்.

● **மானாமதுரை இணையம்:** 200 ஹெக்டேருக்கு மேற்பட்ட நிலப்பரப்பு கொண்டது. மதுரையிலிருந்து 45 கி.மீ. தொலைவில் உள்ளது. 18 தொழிலகங்கள் உள்ளன; இன்னும் 120 அமைய உள்ளன. முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 4 கோடி. வேலை வாய்ப்பு பெற்றோர் 2000 பேர்; மேலும் 3,000 பேருக்கு வேலை வாய்ப்பு உள்ளது.






### சலுகைகளும் மானியங்களும்

**மானியம் (15%):**
மத்திய அரசு குறிப்பிட்டுள்ள 33 தாலுக்காக்களையும், மாநில அரசு குறிப்பிட்டுள்ள 24 தாலுக்காக்களையும் தவிர, தற்போது மேலும் 7 தாலுக்காக்களுக்கு 15% மானியம் அளிப்பதாக மாநில அரசு அறிவித்துள்ளது. அவையாவன: ராசிபுரம் (சேலம்), தாராபுரம் (பெரியார்), அவினாசி (கோயம்புத்தூர்), பழனி (மதுரை), குன்னூர் (நீலகிரி), ராதாபுரம் (திருநெல்வேலி), தோவளை (கன்னியாகுமரி).

**சலுகைகள்:**
- வட்டியில்லாத விற்பனை வரிக் கடன்கள்.
- பிரிவு 80HH-ன் படி வருமான வரிச் சலுகைகள்.
- முதல் 5 ஆண்டுகளுக்கு மின் வெட்டு கிடையாது.
- இன்னும் பல.




# பதிவுத்துறையின் பயனுள்ள பணிகள்

பதிவுத் துறையில் செய்யப்படுகிற எல்லாச் சீரமைப்புகளும் பொது மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு தமிழக அரசால் செய்யப்படுகின்றன.

### பதிவுத் துறையில் பொதுமக்களுக்கு வசதிகள்

1) பதிவு அலுவலகங்களுக்குப் பணிகளுக்காகச் செல்லும் பொது மக்கள், எவ்விதக் கஷ்டமும் இல்லாமல் தங்கள் பணிகளைச் செய்து பெற, தேவையான அறிவுரைகள் பதிவு அலுவலர்களுக்கு அப்போதைக்கப்போது அரசாலும், பதிவுத் துறைத் தலைவராலும் அளிக்கப்பட்டு வருகின்றன.

2) பொதுமக்கள் வசதியாக உட்கார மர நாற்காலிகள், மர பெஞ்சுகள் போட ஆண்டொன்றுக்குக் குறைந்தது 1 இலட்சம் ரூபாயை தமிழக அரசு செலவிடுகிறது.

3) ஒவ்வொரு நிதியாண்டில் ஓரிரு சார்பதிவாளர் அலுவலகங்களுக்குப் புதியதாகக் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படு வருகின்றது.

4) சென்னை மாநகரில் உள்ள சார்பதிவகங்களின் பணிக்காக பொதுமக்கள் தொடர்புகொண்டு கலபத்தில் விவரங்கள் அறிய ஏதுவாக சென்னை மாநகரில் [illegible] ஏற் [illegible] ஆணை [illegible] நாட்டிலுள்ள எல்லா மாவட்ட பதிவகங்களில் இதுவரை தொலைபேசி வசதி இல்லாத அலுவலகங்களுக்குத் தற்போது தொலைபேசி வசதி ஏற்படுத்த தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

5) குறைவாக மதிப்பிட்டு எழுதப்பட்ட ஆணைகளைப் பதிவிற்குப் பின் கோட்டாட்சித் தலைவர்களுக்கு நடவடிக்கைக்காக அனுப்புவதை விடுத்து பொதுமக்கள் வசதியைக் கணக்கில் கொண்டு, பதிவுத் துறையில் உள்ள மாவட்டப் பதிவாளர்களுக்கு முத்திரைச் சட்டப் பிரிவு 47-ஏ யின்படி நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை வழங்கத் தமிழக அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டு, முதல் கட்டமாக சேலம், வேலூர், மதுரை, திருநெல்வேலி, ஆகிய நான்கு மாவட்டங்களில், பணியினைச் செய்யத் தனியாக நான்கு மாவட்டப் பதிவாளர்களை நியமித்துள்ளது.

6) ஆவணங்களில் கண்டுள்ள நிலங்களின் மதிப்பை நிர்ணயிக்கும் பணிகளை இதுகாறும் 'வருவாய்த்துறை' செய்து வந்தது. பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இந்த நிலங்களின் மதிப்பை நிர்ணயிக்கும் பணியினை வருவாய்த்துறையிலிருந்து பதிவுத் துறைக்கே மாற்றித் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இனிமேல் ஆவணங்களில் கண்ட நிலங்களின் மதிப்பை மாவட்டப் [illegible] செய்ய வழி வகு[illegible] பதிவுத் துறையின் [illegible]

118 ஆண்டுக் [illegible] பதிவுத் துறை இயங்கி வந்தாலும், அதனைச் சீரமைத்து சிறப்பாக இயங்க வைக்க வேண்டும். அதன் மூலம் பொதுமக்கள் பெரிதும் நன்மை அடைய ஏதுவாகும் என்று எண்ணித் தமிழக அரசு பதிவுத் துறைக்கு என்று ஒரு சீரமைப்புத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தின்படி பிர்க்காவிற்கு ஒரு சார்பதிவகம், கோட்டத்திற்கு ஒரு மாவட்டப் பதிவகம், ஒரு வருவாய் மாவட்டத்திற்கு ஓர் ஆய்வாளர் அலுவலகம் என்ற அடிப்படையில் அலுவலகங்களை ஏற்படுத்தியும் இந்த மாநிலத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு துணைப் பதிவுத் துறைத் தலைவரை நியமித்து அதிகாரங்களைப் பரவலாக ஆக்குவதன் மூலமும் பதிவுத் துறையைச் சீரமைத்துப் பொதுமக்களுக்குஇந்தத்துறை மேலும் சிறப்பாகச் சேவை செய்ய வழிவகுக்கும் முகத்தான் 1980 ஆம் ஆண்டில் தமிழக அரசு இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடிவு செய்தது. இதனால் பொதுமக்கள் பெரிது நன்மை அடைவதுடன், இந்தத் துறை அலுவலர்கள் பதவி உயர்வு பெற வாய்ப்பளிக்க உதவி செய்கிறது.

### பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள பெருநகரங்களான சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற பெருநகரங்களில் பதிவுக்கு வரும் ஆவணங்கள் அதிக மதிப்புடையதாகவும், சிக்கலானதாகவும் பெரும்பாலும் வழக்கறிஞரால் எழுதப்பட்டவையாக உள்ளதால் இந்த ஆவணங்களைப் பதிவு செய்வதற்கு அனுபவமும், திறமையும் வாய்ந்த அதிகாரிகள் தேவை என்பதைக் கணக்கில் கொண்டு மேற்கண்ட நகரங்களில் உள்ள சார்பதிவகங்களை மாவட்டப் பதிவாளர் நிலைக்கு உயர்த்தி மேம்பாடு செய்து அரசு ஆணை எண்.810, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை 17.10.81 அரசாணையில் 19 சார்பதிவகங்களையும், பின் 9 சார்பதிவகங்களையும், அதன் பிறகு 4- சார்பதிவகங்களையும் மாவட்டப் பதிவாளர் நிலைக்கு உயர்த்தி மேம்பாடு செய்து பதிவுத் துறையில்மாபெரும்சாதனை புரிந்த திட்டம்தான் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம். இந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவை விட அரசுக்கு வரும் வருமானம் குறைவு என்றாலும் மேற்கண்ட [illegible] உள்ள பொது[illegible] அடையும் நன்மை மிகப் [illegible]

**இத்திட்டத்தால் பொதுமக்கள் அடைந்து வருகிற நன்மைகள்**

1) எவ்வளவு தொகையானாலும் குறைவு முத்திரைக் கட்டணமாக இந்த மேம்படுத்தப்பட்ட சார்பதிவகங்களில் பொதுமக்கள் செலுத்தலாம். இதற்காக மாவட்டப்பதிவாளர் அலுவலகத்துக்குச் செல்லவேண்டியதில்லை.

2) எந்த வகை ஆவணமானாலும் அதற்குச் சரியான முத்திரைத் தீர்வையில் குறைவு ஏற்படுமானால் அதனைச் செலுத்தவும் பிரிவு 41ன்படி இந்தச் சார்பதிவகங்களில் முடியும்.

3) குறைவாக முத்திரைத் தீர்வையுடன் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை முடக்கம் செய்து மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பாமல் சார்பதிவாளர்களே குறைவு முத்திரைத் தீர்வையை வசூல் செய்து ஆவணத்திற்குச் சான்று அளித்து நிறைவு செய்தல்.

4) குறைவு மதிப்பு ஆவணங்கள் மீதுநடவடிக்கை எடுத்து மாவட்டப் பதிவாளருக்கு இறுதி ஆணைக்கு அனுப்பாமல் இந்த அலுவலகங்களிலேயே இறுதி ஆணை பிறப்பிக்கலாம்.

5) குறைவு முத்திரை மதிப்பில் அடிப்படையில் கட்சிக்காரர் கூட்டத் தயாராக இருந்தால் எவ்வளவு தொகையானாலும் பெற்றுக் கொண்டு ஆவணத்தில் சான்று செலுத்தி உடனுக்குடன் திரும்ப அளிக்கலாம்.

6) எந்த சிக்கலான ஆவணங்களின் தன்மையும் நிர்ணயம் செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் ஆவணங்களைப் பதிவு செய்து உடனுக்குடன் திரும்பப் பெறலாம்.

7) ஆவணங்களின் மீது விதிக்க வேண்டிய முத்திரைத் தீர்வை குறித்து அதிகாரப் பூர்வமான ஆணையை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறுவதற்குப் பதிலாக இந்த அலுவலகங்களிலேயே தன்மை நிர்ணயம் செய்து பொதுமக்களுக்கு உதவி செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம்**

ஏற்கெனவே உள்ள சங்கங்களின் பதிவுச் சட்டம் 1860ல் இயற்றப்பட்டுள்ளது. அதில் தற்கால நடைமுறைக்கு மாற்றங்களைச் செய்து தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் என்ற ஒரு சட்டத்தை ஏற்படுத்தி அதனை 22.4.1978 லிருந்து அமலுக்குக் கொண்டு வந்த சங்கங்களின் நடைமுறையைச் சீரமைப்புச் செய்துள்ளது தமிழக அரசு.



புதிய சங்கங்களின் சட்டத்தை அமலாக்குவதன் மூலம், தற்போது நடைமுறையில் உள்ள சங்கங்களானாலும் இனிமேல் பதிவு செய்யப்படுகிற சங்கங்களானாலும், சரியான முறையில் இயங்க இச்சட்டம் வழி வகுக்கும். பொதுமக்களின் நன்மை வெகுவாகக் கருத்தில் கொள்ளப்பட்டு, 22.4.1978 லிருந்து 'புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள சங்கங்களின் நிர்வாகத்தைக் கண்காணிக்க அந்தந்த மாவட்டப் பதிவாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் 44 சார்பதிவாளர்கள் மாவட்டப் பதிவாளர்களுக்குப் பணியில் துணை செய்ய அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

**'பிர்க்காவிற்கு ஒரு சார் பதிவகம்'**

கிராம முன்னேற்ற அடிப்படைத் திட்டத்தின் கீழ் எல்லாக் கிராமங்களுக்கும்சுயதேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலும் ஐந்து மைல்களுக்கு அப்பால் பொதுமக்கள் பதிவு செய்வதற்குச் செல்லக் கூடாது என்ற அடிப்படையிலும் பிர்க்காவிற்கு ஒரு சார்பதிவகத்தை ஏற்படுத்த அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டு ஆண்டுதோறும் 30 சார்பதிவகங்களைக் கடந்த 4 ஆண்டுக் காலமாகத் திறந்து வருகிறது. நிலங்களைப் பொறுத்த பதிவினையும், திருமணங்கள் பதிவு, சீட்டுக்கள் பதிவு, பிறப்பு- இறப்பு பதிவுகள், உயில் பதிவு, அதிகார ஆவணங்கள் பதிவு முதலியவைகள் நடைபெற மக்கள் இதற்காகச் செலவழித்துக் கொண்டு வட்டத் தலைநகருக்குச் செல்லவேண்டிய அவசியத்தை விட்டு ஆங்காங்கே உள்ள பிர்க்கா தலைநகரங்களில் இவைகளைச் செய்து பொதுமக்கள் வசதி பெறத் தமிழக அரசு வழிவகை செய்திருக்கிறது.

**தமிழ்நாடு சீட்டு நிதிகள் கழகம்**

தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டம் 1969ல் தொடங்கப்பட்ட பின் பல தனியார் நிறுவனங்கள் பொதுமக்களின் சீட்டுப் பணத்தை மோசடி செய்ய வேண்டும் என்றநோக்கத்துடன் நடந்து கொண்டதால், பொதுமக்கள பெரிதும் பாதிக்கப்பட்டது அவ்வப்போது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பொதுமக்கள் நன்மையைக் கருதி மாண்புமிகு முதல்வர், தமிழ்நாடு அரசு சார்பில், 'தமிழ்நாடு சீட்டு நிதிக் கழகம்' என்ற நிறுவனத்தை ஏற்படுத்த ஆணை பிறப்பித்து அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிறுவனம் பணியைத் தொடங்குமேயானால் சீட்டுப் போடுபவர்களின் பாதுகாப்பாக இருக்கும் என்பதோடு சீட்டுப் பரிசுத் தொகைகளும் உடனுக்குடன் கிடைக்க வாய்ப்பு உள்ளது. மேலும் இந்தச் சீரிய திட்டத்தால் பல்லாயிரக்கணக்கானவர்கட்குவேலை வாய்ப்புஅளித்து 'குடும்பத்தில்ஒருவருக்கு வேலை' என்ற மாண்புமிகு முதல்வரின் சீரிய திட்டத்தின் ஒரு பகுதியாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

**முத்திரைத் தாட்கள் விற்பனை**

முத்திரைத்தாள்கள் பெறுவதில் பொதுமக்கள் வெகுவாகக் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக ஆவணம் பதிவு செய்யும்போது முத்திரைத் தாட்கள் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்த அரசு, 14.3.1980ல் 75 சார்பதிவகங்களில் முத்திரைத் தாட்கள் விற்க ஆணை பிறப்பித்தது. தற்போது பொதுமக்கள் நன்மை கருதி இந்த முத்திரைத் தாட்கள் விற்பனை தமிழ்நாட்டில் உள்ள எல்லா சார்பகங்களுக்கும் விரிவாக்கப்பட்டு உள்ளது. பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான முத்திரைத் தாட்களே இனிமேல் சார்பதிவகங்களிலேயே சுலபமாகப் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டாலும் பழையபடி தனி நபர்களும் முத்திரைத்தாள் விற்பனையாளர்களாகச் செயல்பட்டு வருகிறார்கள்.

அரசாணை எண்.1487 உள்துறை நாள்.16.6.1979 படி தமிழ்நாட்டில் உள்ள எல்லா சார்பதிவகங்களிலும் நீதிமன்ற முத்திரை வில்லைகள் விற்கப்பட்டு வருகின்றன.




# டான்சி

## தரமேன்மையான பொருட்களுக்கு நம்பகமான அறிமுகமான பெயர்.

இந்தியா மற்றும் வெளிநாடுகளிலும், அலுவலகங்கள், இல்லங்கள், தொழிற்கூடங்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்குத் தேவையான பல்வேறு பொருட்களைத் தயாரித்து வழங்குவதில், நாடு முழுவதிலும் பொதுத்துறையில் டான்சி தனித் தன்மையுடன் விளங்குகிறது.

- கனரக மற்றும் இலகு எஃகு கட்டுமானங்கள்.
- முலாம் பூசப்பட்ட மின்கடத்தி மற்றும் நுண்ணலைக் கோபுரங்கள்.
- தொழிற்சாலைக்கான இயந்திரங்கள்.
- இல்லங்கள், வங்கிகள் மற்றும் அலுவலகங்களுக்கான உறுதிமிக்க பாதுகாப்புப் பெட்டிகள், எஃகு மற்றும் மர பர்னிச்சர்.
- வார்ப்படக் குழாய்கள், அழுத்தப்பட்ட வார்ப்பட உறுப்புகள்.
- தோல், தோலாலான பொருட்கள்.
- காலணிகள், நவீன தோல் பொருட்கள்.
- ஆழ்கிணறு கை குழாய்கள்.
- எனாமல் பூசப்பட்ட செப்புக் கம்பிகள்.
- பிரஞ்சு பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

**டான்சி**

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014.

தொலைபேசி: 82161

தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI



TAMIN

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்து வரும் இதர உயர்வகைக் கனிமங்கள் :

| | | |
|---|---|---|
| சுண்ணாம்புக்கல் | — | கெமிகல் கிரேடு + 90% $CaCO_3$ |
| வெங்கக்கல் (குவார்ட்ஸ்) | — | + 99.6% $SiO_2$ |
| பெல்ட்ஸ்பார் | — | + 12% $K_2O$ |
| ரோஸ் குவார்ட்ஸ் | — | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| வெர்மிகுலைட் (மைக்கா) | — | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| சிலிகா மணல் | — | + 99.0% $SiO_2$ |
| வெப்பந்தாங்கும் களிமண் | — | ரிப்ராக்டரி கிரேடு |

தேவைக்கு அணுக வேண்டிய முகவரி :

**தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,**
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD ஹவுஸ், 31, காமராசர் சாலை,
தபால் பெட்டி எண். 2961,
சேப்பாக்கம், சென்னை-600 005.

தொலைபேசி எண் : 848932 தந்தி : MINESALITE

DIPR/AAB



# ஒருமைப்பாட்டுக்கு ஒரு நிறுவனம்

இந்தியத்திருநாட்டில்ஒருமைப் பாட்டை வளர்த்துப் பேணிக் காக்கும் பல்வேறு பணிகள் நாட்டின் பல பாகங்களிலும் நடைபெற்று வருகின்றன.

அப்பணிகளின் அடித்தளமாக மொழி வழி ஒற்றுமையை உருவாக்கும், ஆக்கம் தரும் அருந்தொண்டினை, சென்னையிலுள்ள தமிழ் சமஸ்கிருதம் பிற இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனம் செய்து வருகிறது.

இதன் ஒப்பிலாப் பணிகளைக் கற்றோர் அனைவரும் பாராட்டி வருகின்றனர். தமிழ் எழுத்துச் சீர்மைக்காக இந்நிறுவனம் நடத்திய கருத்தரங்கு தமிழுணர்வு மிக்கவர்களின் போற்றுதலையும் பாராட்டையும் பெற்றது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

முன்னாள் ஆளுநர் திரு கே.கே. ஷா அவர்களின் உள்ளத்தில் பூத்த மலர்தான் இந்த ஆராய்ச்சி நிறுவனம். இதன் பிறந்த நாள் 18-7-74. அன்றைய குடியரசுத் தலைவர் டாக்டர் வி. வி. கிரி அவர்கள் இந்த நிறுவனத்தைத் தொடங்கி வைத்தார். அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த ஆளுநர்கள், இந்த நிறுவனத்தின் தலைவராக அமைந்தார்கள்.

மேதகு ஆளுநர் கே கே. ஷா, மேதகு ஆளுநர் மோகன்லால் சுகாதியா, மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி ஆகியோர் தலைவர் பதவியை அணி செய்தனர். இன்று இப்பதவியில் அமர்ந்து அரிய ஆலோசனைகளை வழங்கி வருபவர் செட்டிநாட்டரசர் டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் ஆவார். இந்த ஆராய்ச்சி நிறுவனத்திற்குத் தேவையான நிலம், கட்டடம் கட்டுவதற்கான செலவு நடத்துவதற்கான அன்றாடச் செலவு ஆகிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளவர் இவரேயாவார்.

## மாமூலன்

தமிழ், சமஸ்கிருதம் பிற இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனம் 1974-ஆம் ஆண்டு முதல் தனது அரும் பணிகளைத் தொடர்ந்து இருந்தாலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்நிறுவனம் ஆற்றியுள்ள பணிகள் பெருமைக்குரியனவாக அமைந்துள்ளன.

ஆராய்ச்சியாளரான டாக்டர் ஆறு. அழகப்பன் இந்நிறுவனத்தின் இயக்குநராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்னர், இந்நிறுவனத்தின் பணிகளில் ஒரு புதிய வேகம் உருவாகியது.

மக்களோடு நெருங்கிய தொடர்புடைய பிரச்சினைகளிலும் ஆராய்ச்சி ஈடுபாடு உருவாகியது. அப்பணிகளில் சில வருமாறு:

### தமிழ் எழுத்துச் சீர்மை

தமிழ் எழுத்துச் சீர்மை கருத்தரங்கு இரண்டு நாட்கள் நடைபெற்றது. எண்ணற்ற அறிஞர்கள் கலந்து கொள்ள மிகச் சிறப்பாக நடைபெற்ற கருத்தரங்குகளில் இது ஒன்றாகும்.

முதல் நாள் கருத்தரங்கு, தமிழ் எழுத்துக்கள் எவ்வெவ்வாறெல்லாம் சீர்மை செய்யப்படலாம் என்ற அடிப்படையில் அமைந்திருந்தது.

இரண்டாம் நாள் கருத்தரங்கு, தமிழக அரசு அறிமுகப்படுத்திய எழுத்துச் சீர்திருத்தங்களை எவ்வகையில் விரிவாகப் பின்பற்றலாம் என்பதற்குரிய கருத்தரங்காக அமைந்தது. அண்ணா

பலவேறு மொழிகளைப் பேசும-இந்திய மக்களிடையே ஒருமைப் பாட்டுணர்ச்சியைப் பெருக்கும வகையில, தமிழ், சமஸ்கிருத மொழிகளில ஒப்பாய்வு செய்வதும், எல்லா இந்திய மொழிகள குறித்து ஒப்பாய்வு செய்வதுமானப பணியை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்குகிறது சென்னையிலுள்ள தமிழ், சமஸ்கிருதம் பிற இந்திய மொழிகள் ஆராயச்சி நிறுவனம. அதன் அரும்பணிகளை விளக்குகிறது இக்கட்டுரை



பல்கலைக் கழகத் துணைவேந்தர் பத்திரிகை ஆசிரியர்களும், கல்வித்
டாக்டர் வா. செ. குழந்தை துறை வல்லுநர்களும் பங்கற்ற,
சாமி அவர்கள் தலைமையில் னர். இறுதியாக மாண்புமிகு
நடைபெற்ற இக்கருத்தரங்கில், கல்வி அமைச்சர் திரு செ. அரங்க
பல்வேறு துறை அறிஞர்களும், நாயகம் அவர்கள் எழுத்துச்

சீர்மையின் இன்றியமையாமையை வலியுறுத்தி அதன் சிறப்பை விளக்கி, கருத்தரங்கை நடத்திய நிறுவனத்தினைப் பாராட்டிப் பேசினார்.

**சொல்லாய்வு:**

ஐயப்பாட்டிற்குரிய சில சொற்களை எடுத்துக் கொண்டு பல்வேறு அறிஞர்களுக்கு மத்தியில் ஆய்வு செய்கின்ற சொல்லாய்வுச் சுற்றுக் கூட்டம் என்ற தொடர் கூட்டம் மாதந்தோறும் நடைபெற்று வருகிறது. சிறந்த தமிழ் அறிஞரும், பாண்டிச்சேரி வழக்கறிஞருமான திரு ப. அருளி அவர்கள் சொற்களை எடுத்து ஆராய்ச்சி செய்து வருகிறார். ஒவ்வொரு கூட்டத்திலும் ஒரு தமிழ் அறிஞர் தொகுப்புரை கூற அழைக்கப்பட்டு நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

**இந்திய கோலக் கண்காட்சி:**

மொழி வழி ஒற்றுமையை உண்டாக்குதல் போல கலை வழியும் காண இயலும் என்பதற்கு ஏற்ப இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களின் கோலங்கள் எவ்வகையில் ஒன்றுடன் ஒன்று ஒற்றுமையாக இருக்கின்றன என்பதற்குக் கலை வழி ஒற்

**தமிழ், சமஸ்கிருதம் பிற இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனத்தின் குறிக்கோள்கள்**

1. தமிழ், சமஸ்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளின் தோற்றம் வளர்ச்சி ஆகியவை பற்றியும், பொருத்தமான மொழிபெயர்ப்புக்கள் பற்றியும் ஆய்வு நிகழ்த்துதல்.

2. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் கொண்ட திராவிட மொழித் தொகுதி, சமஸ்கிருதம், பாலி, பல்வகைப் பிராகிருதம் என்பவை கொண்ட ஆரிய மொழித் தொகுதி ஆகிய இருபெரும் மொழிக் குடும்பங்களுக்குமிடையிலே உள்ள தொடர்புகள், ஒன்று மற்றொன்றுக்கு உதவி செய்தமை ஆகியவை குறித்து ஆய்வு செய்வதுடன் சிறப்பாகச் சொல்லாக்கம், தொடர்மொழி இயல், யாப்பு, அணி, அகராதியியல் ஆகியவை பற்றிச் சிறப்பு ஆய்வு மேற்கொள்ளுதல்.

3. பாறைகள், உலோகங்கள், ஓலைச்சுவடிகள் ஆகியவற்றின் மேற் காணப்படும் பண்டைய எழுத்துக்களின் உதவி கொண்டு, பண்டு முதல் இந்தியாவில் காணும் பல்வேறு விதமான எழுத்துப் பொருள்களின் வளர்ச்சியை அறிதல்.

4. பரவலாக இலக்கியங்களிலிருந்தும், பல மொழிகளில் உள்ள கல்வெட்டுகள், பண்டைய அரசாணைகள், சமயக் கோட்பாடுகள், தத்துவ முறைகள், கலைப்பாகுபாடுகள் ஆகிய இவற்றினின்றும் கண்டெடுக்கப் பெறக் கூடிய இந்திய நாட்டுப் பண்பாட்டையும் கலாசாரத்தையும் உருவாக்குதல்.

5. இரண்டு மொழிக் குடும்பங்களிலும் காணலாகும் பேச்சுக்கலை, எழுத்துக்கலை, இசை, நாடகம் மற்றும் பல நுண்கலைகள் ஆகியவற்றுள் காணலாகும் பொது நிலைகளை ஆய்ந்து அறிந்து கூறுபடுத்துதல்.

6. இந்திய நாட்டிலும் பிற நாடுகளிலும் உள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களும் ஆய்வு மேற்கொண்டு, சமுதாய ஒற்றுமை ஏற்படுத்துவது, பல்வேறு பகுதியில் உள்ள அறிஞர்களுக்கிடையே பரந்த மனப்பான்மையுடன் கூடிய ஒற்றுமை ஏற்படுத்துவது, பல்வேறு பகுதியில் உள்ள அறிஞர்களுக்கிடையே பரந்த மனப்பான்மையுடன் கூடிய ஒற்றுமை உண்டாக்க உதவும் வகையில் இந்திய நாட்டில் உள்ள பல்வேறு மொழிகள் இணைந்து உதவி செய்து கொண்ட வரலாற்றை அறிவது ஆகிய பணிகள்.

7. மேற்படி நோக்கங்கள் செயல்படுத்தும் பொருட்டு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, கருத்தரங்குகள், மாநாடுகள், கலை விழாக்கள் முதலியனவும், ஆய்வுக் கட்டுரைகளை வாசித்தல், வெளியிடுதல், நூல்களை வெளியிடுதல், இதழ்களை வெளியிடுதல் முதலியவற்றையும் நிகழ்த்துதல்.



றுமை கண்டறிய ஒரு கோலக் கண்காட்சி நடைபெற்றது. பிரபல கோலக் கலைஞர் திரு சாவி தம்பிராசு அவர்கள் பத்து மாணவிகளுடன் இந்தியக் கோலங்களை நிறுவனத்தின் நடு மண்டபத்தில் வரைந்திருந்தார். பொதுமக்களும் கல்லூரி பள்ளி மாணவ, மாணவியர் சுமார் 15,000 பேர்கள் இக்கண்காட்சியைக் கண்டு களித்தார்கள்.

நிறுவனத்தில் தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் அ. பரிமணம் நிகழ்த்திய 'கடிசொல் இல்லை காலத்துப் படினே' (காலந்தோறும் தமிழில் பிற மொழி வரவு) என்ற தலைப்பில் நிகழ்த்திய சிறப்புரை சீரியதாகும். இது நூல் வடிவில் வரவிருக்கிறது.

தமிழைப் போல சமஸ்கிருத மொழியிலும் கருத்தரங்கம் நடத்தப்பட்டுள்ளது. நிறுவனத்தில் சிறப்பு சமஸ்கிருதப் பேராசிரியராகவுள்ள திரு. வி.எஸ்.வி. குருசாமி சாஸ்திரிகள் 'தனக்குவமை இல்லான்' 'மாமனிதன் விதைத்ததே விளையும்' என்ற தலைப்புகளில் ஆற்றிய சிறப்புரைகள் குறிப்பிடத்தக்கன.

தமிழ் மொழியில் நாட்டுப்புற இலக்கியம், சமஸ்கிருத மொழியில் நாட்டுப்புற இலக்கியம் என்ற இரு தலைப்புகளில் இந்நிறுவனம் நடத்திய கருத்தரங்கம் புதுமையானது. சமஸ்கிருதத்தில் உள்ள ஒப்பாரிப் பாடல்கள் நாடோடிக்கதைகள், பழமொழிகள் பற்றியும் வேத காலத்திற்கு முந்தைய நாட்டுப்புற இயல் பற்றியும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் படித்தது சிறப்பான செயலாகும்.

இந்நிறுவனம் மேலும் பல்வேறு மொழிகளில் ஆய்வுகளை நடத்திட உள்ளது. தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் இந்நிறுவனத்திற்காக ரூ.25,000 அளித்து வருகிறது. மத்திய அரசும் சமஸ்கிருத மொழிப் பணிகளுக்காக ஒருமுறை நிதி உதவி அளித்துள்ளது.

'அந்தந்த மாநில அரசுகள் தங்கள் மாநில மொழியில் இந்நிறுவனம் ஆய்வுகள் நடத்திட நிதி வழங்கினால் மேலும் இந்நிறுவனத்தில் பணிகள் விரிவடையும் என்று இந்நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் ஆறு. அழகப்பன் தெரிவித்தார். இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் அவர் தெரிவித்தார்.

தேசிய மொழிகளில் பக்தி இலக்கியம் என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடைபெறவிருக்கிறது. இக்கருத்தரங்கு இந்திய மொழிகளின் ஒற்றுமையை மேலும் வளர்க்கும் என்று நம்பப்படுகிறது.



இந்தியாவின் எல்லாமாநிலக் கோலங்களையும் வரைந்த குழுவினர்

இப்படி அரிய பணிகளைச் செய்து வரும் தமிழ், சமஸ்கிருத பிற இந்திமொழிகள் ஆராய்ச்சி நிறுவனம் தென்னிந்திய மொழிகள் ஆய்வைத் தொடர்ந்து வட இந்திய மொழிகளிலும் ஆய்வு நடத்தவிருக்கிறது.

அரிய நூலகம் ஒன்று இந்நிறுவனத்தில் உள்ளது. முன்பு இந்நிறுவனத்தில் இருந்து பணியாற்றியவர்கள் செய்தஆய்வுகள் எல்லாம் நூலாக வெளிவரவிருக்கின்றன.

செட்டிநாட்டரசர் அவர்களின் அறப்பணிக்கும் தொண்டுக்கும் எத்தனையோ நிறுவனங்கள் சான்றாக விளங்கி வருகின்றன. அவற்றில் ஒன்றுதான் இந்நிறுவனம் என்றாலும் இந்திய மொழிகள் அனைத்துக்கும் உதவும் வகையில் எல்லா மொழிகளையும் எண்ணத்தில்கொண்டு அனைத்து மொழிகளையும் அரவணைத்துச் செல்லும் தமிழ் சமஸ்கிருதம் பிற இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனம்-அரிய தொண்டின் அடையாளமாகும்.

ஒருமைப்பாட்டை வளர்க்கும் இந்நிறுவனத்தின் தமிழ் வளர்ச்சிக்கு உதவும்.பணிகளை வாழ்த்துவோம்! வர்வேற்போம்!!






**பயிர்ப் பொருட்களிலிருந்து பெட்ரோல்**

பயறு வகைகள், வைக்கோல் மற்றுமுள்ள பயிர் கழிவுப் பொருட்கள், மா அறவை இயந்திரக் கழிவுகள், கரும்புச் சர்க்கரைக் கழிவுகள் ஆகியவற்றைப் பதப்படுத்தி எரிபொருள் தயாரிக்கலாம் என ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டென்னிஸ் ஏர்னஷா என்பவர் கூறியுள்ளார். 50 டன் இத்தகைய பயிர் பொருட்களிலிருந்து 9,90,000 கேலன் பெட்ரோல் தயாரிக்கலாம் என்று கண்டுபிடித்துள்ளார்.

**தட்பவெப்பநிலை மாற்றம் அண்டார்டிக் ஏரிப்பகுதியை உருகச் செய்யும்;**

ஆஸ்திரேலியாவில் முதன் முறையாக அண்டார்டிக் பகுதி சென்ற ஆண்டில் முழுவதும் உருகி விட்டது. இவ்வாறு உருகுவதற்கான காரணம் சூழ்நிலையில் கார்பன்-டை-ஆக்஁லைடு அதிகமாவதே ஆகும் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கோட்ஸ் பியர்டு என்ற செடியில் பூக்கள் கொத்துக்கொத்தாக மலரும். ஒவ்வொரு கொத்திலும் 10,000 மொட்டுக்கள் இருக்கும்.



## விளையும் பயிர்

பள்ளிப் பருவத்திலேயே பல மாணவர்கள், படிப்பில் மட்டுமல்லாது, பல கலைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள்.

அந்த வகையில் தஞ்சாவூர் மாவட்டம், அம்மாப்பேட்டை தேவர் மேல்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு பயிலும் சிங்காரவேலன் கதை, கவிதைகள் எழுதுவதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்.

இவர் பேச்சுப் போட்டிகளிலும் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றுள்ளார். "தேன் மழை" என்ற கையெழுத்துப் பத்திரிகை ஒன்றையும் இவர் நடத்தி வருகின்றார்.

மாணவர் பக்கம்

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமாறு செய்ய இயலும். இந்த வேண்டுகோளை ஆராய்ந்து உரிய ஆணை பிறப்பிக்குமாறு மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியா முழுவதிலும் 41 தொலைக்காட்சி நிலையங்கள் இருப்பதாக நான் அறிகிறேன். இப்படி இந்தியாவில் 41 தொலைக்காட்சி நிலையங்கள் இருந்த போதிலும் ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி, தமிழ்நாடு அடங்கிய இந்தியாவின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு கொண்ட இப்பகுதியில் 5 தொலைக் காட்சி நிலையங்கள் மட்டுமே இருக்கின்றன என்ற உண்மை அதிர்ச்சியுடைய வைப்பதாகும். இந்தஐந்துநிலையங்களிலும்கூட(ஐதராபாத், காக்கிநாடா, பெங்களூர், திருவனந்தபுரம், சென்னை) சென்னையில் உள்ள நிலையம் தான் முழுவளர்ச்சி பெற்றதாகும். அதிலும் கூட வண்ண ஒளிபரப்புக்கு வசதியில்லை.

நாட்டில் மக்கள் தொகை 1 இலட்சம் அதற்கு மேலும் உள்ள நகரங்களில் தொலைக் காட்சி டிரான்ஸ்மிஷன் வசதி ஏற்படுத்தித் ,தருவது என்று இந்திய அரசு தீர்மானித்திருப்பதை தமிழக அரசின் சார்பிலும், மாண்புமிகு எங்கள் முதல்வரின் சார்பிலும் நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்நாட்டில் 1 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை மக்கள் தொகை கொண்ட நகரங்கள் 18 இருக்கின்றன என்பதை மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அத்துடன் உதகமண்டலம், மதுரை, இராமேசுவரம் போன்ற சர்வதேசப் புகழ் பெற்றுள்ள பெரு நகரங்கள் மைக்ரோ அலை ஏற்பாட்டால் ஏற்கெனவே இணைக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட இடங்களில் 100 வாட் டிரான்ஸ்மிட்டர்களை நிறுவினாலே போதும்; மக்கள் தொலைக்காட்சிப் பயனைத் துய்க்க முடியும்.

இந்த எனது வேண்டுகோளுக்கு முன்னுரிமை அளித்து இந்தத் திட்டத்துக்குக் குறைந்தது பத்து 100 வாட். டிரான்ஸ்மிஷன்களைக் கொடுத்து உதவுமாறு மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டின் வளர்ச்சியில் மத்திய மாநில அரசுகளின் செய்தி - தகவல் தொடர்பு அமைப்புகள் மகத்தான பணியாற்றி வந்த போதிலும், நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்த வரையில் மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படவில்லை என்பதை நான் இங்கு குறிப்பிட்டுச் சொல்வது பொருத்தம் என்றே கருதுகிறேன்.

கல்வித்துறை, நல்வாழ்வுத்துறை போன்ற தொண்டு துறைகளுக்கு அளிக்கப்படுவது போன்ற, முன்னுரிமையினைச் செய்தி ஒலிபரப்புத்துறைக்கு தேசிய திட்டக்குழு அளிக்கவில்லை. நாட்டின் சமூகப் பொருளாதார சமத்துவ வளர்ச்சியைத் தாமதப்படுத்துகின்ற வகையில் தான் இந்தத் துறைக்கான ஒதுக்கீடு குறைவாக உள்ளது. மக்கள் கேட்கும் பல திட்டங்கள் நிதிவசதி இல்லாத காரணத்தால் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. தேசிய



**தொண்டின் பெயரால் எந்தவிதச் சுய நன்மையும் அடையாமல், உண்மையாகத் தொண்டுக்காக வாழ்பவனே தொண்டன்.**

திட்டக் குழு அதிக நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் வாயிலாக, பிரதம அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு இந்த மாநாடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமக்கெல்லாம் மிகவும் கவலையை அளிக்கும் வீடியோ முறைகேடு பற்றி மாநாடு கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எலக்ட்ரானிக் எனப்படும் மின் அணு முன்னேற்றத்தால் நமக்குக் கிடைத்த அனுகூலம் வீடியோ என்பதை நாம் அறிவோம். கல்விக்கும் செய்திகளை அறிவிப்பதற்கும், பொழுதுபோக்குக்கும் வீடியோ ஒரு சக்திவாய்ந்த சாதனமாக விளங்கி வருவதை உலக மக்கள் உணர்ந்துள்ளார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் இன்று இந்த வீடியோ துறை சில சமூகவிரோதிகளின் கரங்களில் சிக்கி இருப்பது வருத்தத்திற்குரியதாகும். வீடியோவை முறைகேடாகப் பயன்படுத்துவது ஒரு சமுதாயக் குற்றமாகும். தொத்து வியாதி போன்ற இதனைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுத்தாக வேண்டும். வீடியோ முறைகேட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்க உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைபற்றி நான் எனது யோசனைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு இருப்பதுபோல வீடியோ பெட்டிகளுக்கும் 'லைசென்ஸ்' வழங்கும் முறையைக் கொண்டு வரவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட வீடியோ டேப் வியாபாரிகள் வீடியோ டேப் உற்பத்திக்கும், விநியோகத்திற்கும் சரியான கணக்கு வைத்திருக்குமாறு கோரப்பட வேண்டும். அப்பொழுதுதான் வீடியோ டேப்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவது தடுக்கப்படும். வெளிநாடுகளில் காட்டுவதற்காக வீடியோ செய்யப்படும் இந்தியத் திரைப்படங்கள் இந்தியாவுக்கு மீண்டும் கள்ளத்தனமாகக் கடத்திவரப்பட்டு ரகசியமாக வர்த்தக ரீதியில் காட்டப்படுகின்றன. 'வீடியோ சங்கங்கள்' என்று தங்களைக் கூறிக் கொள்பவை இப்படிப்பட்ட கள்ளக்கடத்தலில் கொண்டு வரப்படும் திரைப்படங்களையும் வெளிநாட்டு ஆபாசப்படங்களையும் காட்டுகின்றன. இத்தகைய முறைகேடுகளைக் களைந்தெறிய சுங்கத்துறை விழிப்புடன் செயல்பட வேண்டியது அவசியமாகும். வீடியோ டேப்புகள் லைசென்ஸ் உள்ளனவா கள்ளக் கடத்தலா என்பதை அவர்கள் தணிக்கை செய்ய வேண்டும். இந்த வகையில் தகுந்த மத்திய சட்டம் ஒன்றை உடனடியாக இயற்ற வேண்டும்என்பது எனது கருத்தாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தொலைக் காட்சி, மற்றும் அகில இந்திய வானொலிக்கும் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதிலுள்ள நடைமுறைகளைப் பற்றி ஒரு கருத்தைச் சொல்ல விழைகிறேன். தொலைக் காட்சி நிலையங்

களும், அகில இந்திய வானொலி நிலையங்களும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதில் மாநில அரசுகளுக்கும் பங்கு இருக்க வேண்டும். மற்ற மாநிலங்களின் செய்தித் துறை அமைச்சர்களும் எனது இந்தக் கருத்தை ஆதரிப்பார்கள் என நம்புகிறேன். மத்திய அரசு திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் உட்பட பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதில் மாநில அரசுகள் ஈடுபட்டு உழைக்கின்றன. எனவே அனைத்து இந்திய வானொலிக்கும்; தொலைக்காட்சிக்கும் ஆலோசனைக் குழுக்களை அமைக்கும் பொழுது, மாநில அரசுகளின் கருத்துக்களைக் கேட்டு அறிவது அவசியமாகும.

வட்டாரத் திரைப்படத் தணிக்கைக் குழுவிற்கு அங்கத்தினர்களை நியமனம் செய்யும்பொழுது இப்போதுள்ள நடைமுறைகளைப் பற்றியும் இம்மாநாடு சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். திரைப்படத் தொழில் சட்டத்தை அமலாக்குவது உட்பட திரைப்படங்களைத் திரையிடுவது போன்றவை மாநில அரசுகளின் நேரடிக் கண்காணிப்பிலிருந்து வருகின்றன. திரையிடப்படும் திரைப்படங்களைப் பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றியும், சில திரைப்படங்களால் எப்படி அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பற்றியும் மாநில அரசுகள் கவலைப்பட வேண்டியுள்ளது. இந்த உண்மையைக் கருத்தில் கொள்ளாமலே இப்போதைய வட்டாரத் திரைப்படத் தணிக்கைக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இக்குழுக்களுக்கு அங்கத்தினர்களை நியமிக்கும் பொழுது மாநில அரசுகளின் யோசனையைக் கேட்காதது துரதிருஷ்டவசமாகும். இதன் விளைவாக சமூகப் பண்பாடுகளுக்கும், ஜனநாயகப் பண்புகளுக்கும் மதிப்பளிக்காத சிலர் இந்தக் குழுக்களில் இடம்பெற்று விடுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் தங்களுக்கெனத் தனியான விருப்பு வெறுப்புக்களைக் கொண்டிருப்பதனால் இவர்களால், இத்துறைக்கு நன்மை ஏற்படுவதைவிட தீங்கே அதிகம் ஏற்பட்டுவிடுகிறது. பொதுமக்கள், திரைப்படத்துறையினர் ஆகியோர் நன்மையை முன்னிட்டு மாநில அரசுகளின் யோசனையின் மேல் திரைப்படத் தணிக்கைக்குழுவுக்கு அங்கத்தினர்களை நியமிக்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த யோசனையைச் செயல்படுத்துவதன் மூலம் மாநிலங்களிலுள்ள மத்திய அரசு செய்தி நிறுவனங்கள் ஒர வஞ்சனையாக நடப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கும் இடமில்லாமல் போகும். 1982 ஜூலை 3-ந் தேதி நடைபெற்ற முந்தைய கூட்டத்திலும் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசைக் கேட்டுக் கொண்டேன். வட்டாரத் திரைப்பட தணிக்கைக் குழுக்களை விரைவில் திருத்தி அமைக்கும்படி நான் தற்பொழுதும் கேட்டுக் கொள்கிறேன்.

மாநில அரசுகள் தயாரித்து வெளியிடும் செய்திப் படங்களை வட்டாரத் திரைப்படத் தணிக்கைக் குழு தணிக்கை செய்வது பற்றியும் இம்மாநாடு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நடைமுறையில் உள்ள தணிக்கை விதிமுறைகளுக்கிணங்க தனது அனுமதியின் பேரில் செய்திப் படங்களை வெளியிடும் உரிமையை பம்பாயில் உள்ள திரைப்படப் பிரிவுத் தலைமைத் தயாரிப்பாளருக்கு மத்திய அரசு வழங்கியுள்ளது. இந்த ஏற்பாட்டினால் மத்திய திரைப்படப் பிரிவு மத்திய செய்திப் படங்களை உடனுக்குடன் வெளியிட முடிகிறது. தமிழ்நாடு அரசின் செய்திப் படங்கள், செய்தித்துறை இயக்குநரால் தயாரிக்கப்படுகின்றன. அவர் தமிழ்நாடு அரசின் ஒரு மூத்த ஐ. ஏ. எஸ். அலுவலராவார். இந்தத் திரைப்படங்களை மக்கள் விரும்பிப் பார்க்கிறார்கள். அதிலும் குறிப்பாக கிராமங்களில் நல்ல வரவேற்பு இருக்கிறது. எனவே மத்திய திரைப்படப் பிரிவு மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்தின் ஒரு பிரிவாக இருக்கின்ற காரணத்தாலும், நடைமுறை சாத்தியத்தாலும் திரைப்படச் சான்று வழங்குவதில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதாக மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் கூறும் வாதத்தை என்னால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. மாநில அரசுகளுக்கும் அப்படிப்பட்ட உரிமை வழங்கப்பட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். திரைப்படப் பிரிவுகளைக் கொண்ட மற்ற மாநில செய்தித்துறை அமைச்சர்களும் எனது கருத்துக்கு ஆதரவு அளிப்பார்கள் என நான் நம்புகிறேன். மாநில அரசு மக்களுக்கு இலவசமாகத் திரையிட்டுக் காட்டத் தயாரிக்கும் திரைப்படங்களுக்கு வரி விதிக்கக் கூடாது. மாநில அரசுகளின் திரைப்படப் பிரிவுகள் தயாரிக்கும் திரைப்படங்களுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்ற எனது முந்தைய வேண்டுகோளை மீண்டும் இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.



பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்குக் காரம் அதிகம் பிடிக்காது; தயிர்சாதம், கீரை இவற்றைப் பிரியமாக உண்பார்.

அவர் கைக்குத்தல் அரிசி தான் சாப்பிடுவது வழக்கம். இந்த அரிசி மதுரை பட்டிவீரன் பட்டியிலிருந்து அவருக்கு வந்தது. உணவு வகைகளில் அளவோடிருப்பார். அதனால் அவருக்கு வயிற்றுவலி, தலைவலி போன்ற தொந்தரவுகள் ஏற்பட்டதில்லை.

வெளியூர்களுககு அவர் போய் வரும்போது எந்தப் பொருளும் வாங்கி வரமாட்டார். சுமையை தேவையில்லாத எடுத்துக்கொண்டும் போக மாட்டார். அவர் கையில் எடுத்து வருவதெல்லாம் தயாராக மாற்றிக்கொள்ள வைத்திருக்கும் வேட்டி சட்டைதான்!

இரவு 12 மணிக்கே தூங்குவார். படுத்ததும் அவர் தூங்கி விடுவார். தலையணை வேண்டுமென்பதுகூட இல்லை. கையை வைத்துக்கொண்டே தூங்கிவிடுவார்.

திரைப்படங்களைத் தயாரித்து வெளியிடும் பல்வேறு பிரிவுகளில் தொழில்நுட்ப அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பணியில் நாங்கள் வித்தியாசமாக நடத்தப்படுகிறோம் என்பதை நான் வருத்தத்தோடு கூறிக் கொள்கிறேன். தமிழ்நாடு செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் கீழுள்ள தமிழ்நாடு திரைப்படத் தொலைக்காட்சி நிலையம், அயல்நாடு மற்றும் இந்திய மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது. இங்கே பயின்ற பல மாணவர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலுள்ள தொலைக்காட்சி நிலையங்களிலும், வானொலி நிலையங்களிலும் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். சிலர் விருதுகள் பெற்றிருக்கிறார்கள். திரைப்படத் துறையில் படப்பிடிப்பு, படத்தொகுப்பு, ஒலிப்பதிவு, படம் கழுவுதல், டைரக்ஷன், நடிப்பு போன்ற பல்வேறு பிரிவுகளில் பயிற்சி அளிக்கும் நிலையம் தென்னகத்தில் சென்னையிலுள்ள இந்த நிலையம் ஒன்றுதான். நவீன தொழில் நுட்பக் கருவிகளையும், கேமராக்களையும் பயன்படுத்தி இந்நிலையத்தில் அளிக்கப்படும் பயிற்சிகளை மேலும் மிக நவீனமாக்க நல்ல திட்டங்களை வைத்துள்ளோம். இதற்கு ஏராளமாகச் செலவாகும். நவீன கருவிகளை இறக்குமதி செய்ய வேண்டியதிருக்கும். இவ்வாறு நவீனப்படுத்துவதற்கு நிபுணர்கள் தயாரித்து அளித்துள்ள திட்ட அறிக்கைகள் ஏற்கெனவே மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இத்திட்டங்களுக்கு உலக வங்கி, யுனெஸ்கோ மற்றும் யூ. என். டி. பி. ஆகிய நிறுவனங்களின் உதவியினை நாடி இருக்கிறோம். பூனாவில் உள்ள இந்தியத் திரைப்பட தொலைக்காட்சி நிலையம் சர்வதேச நிறுவனங்களிடமிருந்து உதவி பெறுகிறது. ஆனால் தமிழ்நாடு திரைப்பட தொலைக்காட்சி நிலையத்திற்கு இப்படிப்பட்ட மானிய உதவி எதுவும் மத்திய அரசிடமிருந்து கிடைப்பதில்லை. ஆனால், அதற்குப் பதிலாசக் கடுமையான வரி விதிப்பிற்குள்ளாகிறது.

இந்த நிலையத்திற்குள்ள இன்னொரு நிதி நெருக்கடியினையும் மாண்புமிகு மத்திய செய்தி-ஒலிபரப்புத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏராளமாகச் சுங்கத் தீர்வை செலுத்துவதால் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது. உதாரணத்திற்கு 2 நிகழ்ச்சிகளை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். சுமார் 25.6 இலட்சம் மதிப்புள்ள வண்ணப் பதிவு, ஒளிப்பதிவு மற்றும் கேமராக்கள் போன்றவற்றை இறக்குமதி செய்ததில் ரூ. 22 இலட்சம் சுங்கத் தீர்வையாகக் கடந்த 2 ஆண்டுகளில் நாங்கள் செலுத்த வேண்டி இருந்தது. திரைப்படப் பிரிவுக்கு ஒரு சினி கேமரா இறக்குமதி செய்ததில் ரூ. 3,63,000 சுங்கத் தீர்வை செலுத்த வேண்டி இருந்தது. இந்தக் கேமராவின் விலையே ரூ. 3,03,000தான். இவை ஒரு மாநில அரசின் கல்லூரிக்குத் தேவையான கல்விப் பயிற்சிக் கருவிகளாக இருந்தபோதிலும், இவ்வாறு வரி விதிக்கப்படுகிறது. இத்தகையதொரு பயிற்சி நிலையத்திற்கு மத்திய அரசிடமிருந்து எல்லா வகைகளிலும் உதவிகள் கிடைக்க வேண்டும். இறக்குமதி செய்யப்படும் கருவிகளுக்கு சுங்கத் தீர்வையிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். எங்களது நிதியுதவிக் கோரிக்கையை மத்திய அரசு உரிய கவனத்துடன் பரிசீலிக்கும் என நான் நம்புகிறேன்.

தமிழக அரசின் கருத்துக்களை இந்த மாநாட்டில் எடுத்துச் சொல்ல வாய்ப்பு அளித்த மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் அவர்களுக்கு நான் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைவருக்கும் வணக்கம்.

(புதுடில்லியில் 6-7-83 அன்று நடைபெற்ற செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டில் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்)

# தமிழ் வளர்க்கும் தமிழரசு

பேராசிரியர் டாக்டர். ந. சஞ்சீவி

முன்னைப் பழமை பின்னைப் புதுமை
சென்னை தில்லை மதுரை சிறக்க
முப்பெரும் பல்கலைக் கழகமும் முகிழ்த்திட
தப்பரும் முப்பால் தனியே ஆய்வுற
அறிஞர் அண்ணா அமைத்தார் துறைகள்
செறிஞர் போற்றும் செந்தமிழ்த் துறைதொறும்
உலகத் தமிழாய் ஓங்கிட உயர்வுறு
பலவுத் தேனாய்ப் பல்வகை ஆய்வும்
பெருகிட பருகிட கழகம் கண்டார்
தருகிட ஒன்னார் உருகிட உற்றார்
அடையார் அடக்கும் கழகம் அஃதே!
கடையார் முவ வுடன் கலமார் காமீ
கடைக்கால் அமைத்த கழகம் அஃதே
படைக்கால் பகைவரும் பண்கால் பெறச்செய்
அண்ணா குறிக்கோள் அமைத்ததே குறள்தேர்!
அண்ணா போற்றிய இளவல் போற்றிய
பட்டினம் கண்டதே மாடம் கூடம்!

பட்டினி போக்கும் பாசத் தாயாம்
புரட்சி முதல்வர் பொன்மனம் பூத்ததே
திரட்சித் தஞ்சை திகழ்தமிழ்க் கோயில்!
பஞ்சை சத்துான் பண்டிதர் தமிழுன்
நெஞ்சை நிறைக்க நிமிர்ந்ததே தமிழினம்!
முன்னே தெபொமீ! பின்னே நம்முவ!
இன்னே வகுப! என்னே முறைமை!
அத்துடன் அமையுமோ தமிழக அரசு?!
சொத்துடன் தருமே திருவிக பரிசு!
கொத்துடன் தந்தது அறமார் கட்டளை
எத்தர் எதிரியாம் பாரதி தாசன்
பத்தர் மகிழ! பட்டுக் கோட்டை
சுத்தில் வழ்வான் சுடரொளி வீசவே!
எங்கும் தமிழே! எதிலும் தமிழே!
தங்கும் வழியெலாம் தகவுடன் செய்தே
இங்கான் தமிழக அரசு இல்லகை
பங்கான் வாழப் பரவும் புகழ்ந்தே!

# சிபாரிசுப்படி அடியுரமிட
# விஜய் 17-17-17





நெல் பயிருக்கு விவசாய இலாகா சிபாரிசுப்படி அடியுரமாக தழை, மணி, சாம்பல் மூன்று சத்துக்களும் ஒரே சீரான அளவில் தேவைப்படுகிறது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரே உரம் விஜய் 17-17-17. இதைத் தெளிவாகக் கீழே காணலாம்.

| | ஏக்கருக்கு தேவைப்படும் சத்துக்களின் அளவு (கிலோவில்) | | | ஏக்கருக்கு விஜய் உரத்தின் அளவு (கிலோவில்) |
|---|---|---|---|---|
| | தழை | மணி | சாம்பல் | |
| அடியுரம் | 15 | 15 | 15 | விஜய் 17-17-17 90 |
| மேலுரம் | 15 | — | — | விஜய் யூரியா 35 |

5 கிலோ யூரியாவுக்கு 1 கிலோ வேப்பம் புண்ணாக்கு என்ற விகிதத்தில் கலந்து இட்டால் உரத்தின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும்.

மேலும் நெல் பயிருக்கான சாகுபடி முறைகளை விவரிக்கும் புத்தகத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY

விஜய் 17-17-17 100 கிலோவில் 17 கிலோ தழைச் சத்து, 17 கிலோ மணிச் சத்து, மற்றும் 17 கிலோ சாம்பல் சத்து அடங்கியுள்ளன. இந்தப் பயிருணவுச் சத்துக்கள் சரிவிகித அளவில் இருப்பதற்காக 12.5 கிலோ குறுமணல் சேர்க்கப்பட்டுள்ளது. குறுமணலானது ரசாயன சேர்க்கை அற்றது. ஆகவே இதனை உரத்துடன் சேர்க்கும் பொழுது உரத்தின் தரம் குறைவதில்லை. மேலும் உரக்கட்டுப்பாடு சட்டத்தின்கீழ் குறுமணல் சேர்க்கை அரசின் அங்கீகாரம் பெற்றுள்ளது.

## சமச்சீர் உரமிட
## விஜய்



HTM-MFL-1182




# உணவுத் துறையில்..

**பொ**துமக்களுக்கு நியாயமான விலையில் தட்டுப்பாடு இன்றி இன்றியமையாப் பண்டங்களை வழங்க வேண்டியது அரசினுடைய முக்கியமான கடமையாகும். பருவ மழை தவறுகின்றபோது உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டு, வெளிச் சந்தையில் அரிசியின் விலை உயருகின்றபோது, பொதுமக்கள், குறிப்பாக, சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் இதனால் பாதிக்கப்படுகின்றனர். அத்தகைய நிலையில் அவர்களுக்குச் சீரான விலையில் இன்றியமையாப் பண்டங்களை வழங்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இதைத் தமிழக அரசு நன்றாக உணர்ந்த ஒரு நிலையில், சிறந்ததொரு பொது விநியோகத் திட்டத்தையும் கொள்முதல் கொள்கையையும் கடைப்பிடித்து வருகிறது.

1980-ஆம் ஆண்டின் இறுதியில் பருவ மழை தவறியதன் காரணமாக, பொது விநியோகத்திற்குத் தேவைப்படும் அரிசியைக் கொள்முதல் செய்ய வேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டது. எனவே, உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படாத வகையில் நெல், அரிசி மீது 40 விழுக்காடு வர்த்தக லெவி முறையை 1981-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அரசு கொண்டு வந்தது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ், படிப்படியாக அரிசியின் தேவையும் கணிசமாக உயர்ந்தது. போதுமான மூட்டையிருப்பைச் சேர்த்து வைத்துக் கொள்ளும் வகையில் 1981ஆம் ஆண்டு குறுவைப் பட்டத்தில் வர்த்தக லெவியை 40 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தியது. 1981-ஆம் ஆண்டு சம்பாப் பருவத்தில்1.25 இலட்சம் டன் அரிசியையும்1981-ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில் 1.58 இலட்சம் டன் அரிசியையும் கொள்முதல் செய்தது.

1982-ஆம் ஆண்டு தமிழகத்தில் பருவ மழை தவறியதன் காரணமாக பல மாவட்டங்களில் வறட்சி நிலை காணப்பட்டது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மக்களின் தேவையும் அதிகரித்தது. இந்த நிலையிலும் 1982-ஆம் ஆண்டு சம்பாப் பட்டத்தில் 4.10 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டது. அந்த ஆண்டு தென் மேற்குப் பருவக் காற்று மழை பொய்த்ததன் காரணமாக மேட்டூர் அணைக்குப் போதுமான நீர் வரத்து இல்லாத காரணத்தால் தஞ்சை, தென் ஆர்க்காடு, திருச்சி போன்ற டெல்டா மாவட்டங்களில் குறுவை விவசாயம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் சாதாரணமாக 4.25 இலட்சம் ஏக்கர்களில் குறுவை பயிரிடப்படும். ஆனால் 1982 குறுவைப் பட்டத்தில் 3.02 இலட்சம் ஏக்கர்களில்தான் பயிர்செய்யப்பட்டது. குறுவை 82 பட்டத்தில் தஞ்சை மாவட்டத்தில் 2.46 இலட்சம் டன் நெல்லும், மாநிலம் முழுவதிலும் 2.61 இலட்சம் டன் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டது.

தென் மேற்குப் பருவக்காற்று மழை பொய்த்ததைத் தொடர்ந்து வட கிழக்குப் பருவ மழையும் பொய்த்ததன் காரணமாகத் தமிழகத்தில் சம்பா விளைச்சலும் கணிசமாகப் பாதிக்கப்பட்டது. சாதாரணமாக, உபரி மாவட்டங்களான வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு போன்ற மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. மேட்டூர் அணையிலிருந்து போதிய அளவிற்கு நீர் வரத்து இல்லாத காரணத்தினால் தஞ்சை மாவட்டத்தில் ஓரளவிற்குச் சம்பாப் பயிரும், பெருமளவில் தாளடிப் பயிரும் பாதிக்கப்பட்டன. பல மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசியின் தேவை கணிசமாக உயர்ந்தது. எனவே, தஞ்சை மாவட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி, குளித்தலை, முசிறி, லால்குடி ஆகிய வட்டங்களிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார் கோயில் வட்டங்களிலும் அரசு ஏகபோகக் கொள்முதல் செய்வதென முடிவு செய்து அத்திட்டத்தைச் செயல்படுத்தியது. விவசாயிகளுக்கு ஊக்கம் தரும் முறையில் கொள்முதல் விலைக்கு மேலாக ஒரு குவிண்டால் நெல்லுக்கு 15 ரூபாய் வறட்சி உதவித் தொகையாகவும் வழங்கியது.

மத்திய அரசு ஜூன் 82 முதல் மத்திய தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டுக்கு அரிசி ஒதுக்கீடு எதுவும் செய்யவில்லை. அந்த நிலையிலும், 1982-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதற்கொண்டு 1983 பிப்ரவரி மாதம் வரை 6.68 இலட்சம் டன் அரிசியைப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளது. தமிழகத்தில் கொள்முதல் செய்தது மட்டுமின்றி பொது விநியோகத் தேவைக்காக வெளி மாநிலங்களிலும், வெளிச் சந்தையிலும் அரிசியை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்தது. இதுவரையில் ஏறக்குறைய 1,40,000 டன்கள் அரிசி வெளி மாநிலங்களிலிருந்தும், டெண்டர்கள் வாயிலாகவும் வாங்கப்பட்டுள்ளது. இரண்டு பருவ மழை தவறிய ஒரு சூழ்நிலையிலும் பொது விநியோக முறை முறிவுபடாமல் குடும்ப அட்டைகளுக்கு நியாய விலைக் கடைகளின் மூலமாக அரிசியை வழங்கியதன் மூலம், வெளிச் சந்தையில் அரிசியின் விலை உயராமல் நிதானமாகவும், கட்டுப்பாடாகவும்




வைத்தது அரசின் சிறந்ததொரு சாதனையாகும்,

**பொது விநியோகம்**

நகர்ப் புறங்களில் மட்டுமின்றி கிராமப் புறங்களிலுள்ள மக்களுக்கும் இன்றியமையாப் பண்டங்கள் அனைத்தும் கிடைக்க வேண்டுமென்பது இந்த அரசின் கொள்கையாகும். இந்த அடிப்படையில், கிராமந்தோறும் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட வேண்டுமென்ற ஒரு திட்டத்தை 1977-ஆம் ஆண்டில் அறிவித்து அதைச்செயல் படுத்தியது. அத்திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்பட்டு வருகிறது. தற்போது கிராமப் புறங்களில் 15,842 நியாய விலைக் கடைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன அவற்றின் மூலம் 84.72 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு இன்றியமையாப் பண்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சர்க்கரை, அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய் போன்ற பண்டங்களைத் தவிர, பருப்பு, மிளகாய், சமையல் எண்ணெய் போன்ற மற்ற பொருட்களும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 4 கோடி ரூபாய் அளவிற்கு அரசு மானியமாக வழங்கி வருகிறது. நகர்ப் புறங்களில் 2002 கடைகள் செயல்பட்டு வருகின்றன. ஆக மொத்தம் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதிலும் 17,844 நியாய விலைக் கடைகள் செயல் பட்டு வருகின்றன.

சில நியாய விலைக் கடைகளில் முறைகேடுகள் நடப்பதாகவும் இன்றியமையாப் பண்டங்கள் பொது மக்களுக்குச் சரியான முறையில் விநியோகிக்கப்படவில்லையென்றும் புகார்கள்வந்தன. இத்தகையமுறைகேடுகளை களைவதற்கும், நியாயவிலைக் கடைகள் சீராக இயங்குவதற்கும் மாநில அளவிலும் வட்ட அளவிலும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி ஒவ்வொரு நியாய விலைக்கடைக்கும் ஒரு விழிப்புக் குழு அமைக்கப்பட்டு அதில் அரசு அலுவலர்களும் அரசு அலுவலர்களல்லாத பொதுமக்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். நியாய விலைக் கடைக்கு விநியோகத்திற்கெனக் கொண்டு வரப்படும் உணவுப் பொருட்களை இக்குழுவிலுள்ள எவரேனும் ஒருவர்பார்வையிட்ட பின்தான் விநியோகிக்கப்பட வேண்டுமென்று விதிமுறை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நியாய விலைக் கடைகளுக்கு வழங்கப்படும் பொருட்கள்அந்தக் கடைகளுக்கு வந்து சேர்வதை உறுதிப்படுத்திக்கொள்ள முடிகிறது.

நியாய விலைக் கடைகளின் மூலமாக அரிசி வெளிச் சந்தை விலையை விட மிகவும் குறைவான விலையில் வழங்கப்படுகிறது. சாதாரண ரக அரிசி ஒரு கிலோ ரூ. 1.75; சன்ன ரக கிலோ ரூ. 2; மிகச் சன்ன ரக அரிசி ஒரு கிலோ ரூ. 2.15 என்ற விலைகளில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படுகின்றது. மத்திய அரசு கொள்முதல் விலைகளை அவ்வப்போது உயர்த்தி வந்த போதிலும் கூட தமிழக அரசு விற்பனைவிலையை பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு உயர்த்தாமல் உள்ளது. இவ்வாறு அரிசியின் விற்பனை விலையை உயர்த்தாமல் இருப்பதன் காரணமாகப் பல கோடி ரூபாய் மான்யமாக வழங்க வேண்டிய நிலைமை உள்ளது. ஆயினும், பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டுஅரசு இத்தகைய ஒரு நிலையை மேற்கொண்டு உள்ளது.

நியாய விலைக் கடைகளில் கூட்டம் அதிகம் காணப்படுவதாகவும், இதனால் பொதுமக்களுக்கு சங்கடங்கள் ஏற்படுவதாகவும் தெரிய வந்தது. இத்தகைய ஒரு நிலையைத் தவிர்க்கும் பொருட்டு சென்னை நகரில் குறிப்பிட்ட தினத்தில், குறிப்பிட்ட குடும்ப அட்டைகளுக்கு உணவுப் பண்டங்கள் வழங்கும் முறை பரீட்சார்த்தமாக ஏப்ரல் 83 முதல் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின் படி ஒவ்வொரு குடும்ப அட்டைதாரரும் அவருக்கென குறிப்பிடப்பட்ட தினத்தில் நியாய விலைக்கடைக்குச் சென்று பொருட்களை வாங்கிக்கொள்ள வேண்டியது. இந்த முறையில் அனைத்துப் பொருட்களும் ஒரே தடவையில் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதி ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு தடவையும் நியாய விலைக் கடைக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இத்திட்டத்தைப் பொதுமக்கள் வெகுவாக வரவேற்றுள்ளனர்.




தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில், நிறைவேற்றப்பட்டுள்ள பெரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் வாயிலாக மேற்பரப்பு நீரில் 95 விழுக்காடு ஏற்கெனவே உபயோகப் படுத்தப் பட்டுவிட்டது. நிலத்தடி நீர் வளமும் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு விட்டது. எனினும், நிலத்தடி நீரை மேலும் உபயோகப்படுத்துவதற்கும், தற்போது செயல்படுத்தப் [illegible] நீரின் உபயோகத்தில் கவனம் செலுத்துவதின் மூலம் கிடைக்கும் நீர் [illegible]ம், கூடுதல் பாசன வசதியளிக்க வாய்ப்புள்ளது.

6-வது ஐந்தாண்டுத் திட்ட (1980-85) காலத்தில் பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்கள் செயலாக்கத்திற்கு ரூ.149.79 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, 66,000 எக்டேர் புதிய நிலங்களுக்கு, பாசன வசதி அளிப்பதற்கான நீர் வளத்தை ஏற்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதிகமான பரப்பிற்கும் பாசன வசதி கிடைக்கச் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் (நன்செய் பயிருக்கு பதிலாக) புன்செய்ப்பயிர்களுக்கு பாசன வசதி அளிக்கும் திட்டங்களே ஊக்குவிக்கப்படுகின்றன. 1980-85 ஆம் ஆண்டு திட்ட காலத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கான 66,000 எக்டேரில் சுமார் 62,000 எக்டேர் நிலப்பரப்பில் புன்செய் பயிர் பயிரிடுவதற்கான பாசன வசதி ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், முதல் மூன்று ஆண்டுகளில் அதாவது 1980-81ஆம் ஆண்டில் 16.36 கோடி ரூபாய் 11,560 எக்டேர் நிலங்களுக்கும் 1781-82ம் ஆண்டில்19.54 கோடி ரூபாய் செலவில் 8,300 எக்டேர் நிலங்களுக்கும்1982-83ஆம் ஆண்டில் ரூபாய் 33.95கோடி செலவில் 10,600 எக்டேர் நிலங்களுக்கும் கூடுதல் பாசன நீர்வளம் உண்டாக்கப்பட்டது.

1983-84 ஆம் ஆண்டில், பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களை நிறைவேற்ற ரூ. 50.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 14,000 எக்டேர் நிலங்களுக்குக் கூடுதல் பாசன நீர்வளம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசு 1980 ஜூன் மாதத்திலிருந்து 1983 மார்ச் மாதம் வரை பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களின் [illegible] 96.09 கோடி மதிப்பீட்டுச் செலவில் ,32,140 எக்டேர் புதிய மற்றும் தரிசு நிலங்களுக்கு நீர்ப் பாசன வசதி அளிக்க 15 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676 தமிழரசு



மாண்புமிகு
மீனவத்துறை அமைச்சர்
திரு. எஸ். ஆர். இராதா

# புதிய அமைச்சர்கள் பதவி ஏற்பு 1-7-83





மாண்புமிகு
பிற்பட்டோர் நலத்துறை அமை
திரு. எம். ஆர். கோவேந்



மாண்புமிகு
கதர்த்துறை அமைச்சர்
செல்வி ப. விஜயலட்சுமி.